சித்தாந்தரத்நாகரம்

இராமசந்திர நாயக்கர்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநம:

சித்தாந்தரத்நாகரம்.

கரு - வது, சஞ்சிகை.

No.	இதிலடங்கிய விஷயம்.
1	சித்தாந்தசேகரம ....

இஃது,
சித்தாந்தத்தலைவர்க்குத்
தொண்டு பூண்டொழுகும்
ஞனீ ;

சோமசுந்தரநாயகரவர்களால்

வெளியிடப்பட்டது.

MADRAS:
PRINTED AT THE MEMORIAL PRESS.
No. 39, THUMBOO CHETTY STREET,
31st *May* 1880.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசம்பந்தநிர்த்தசரணாயநம:.

சித்தாந்தரத்நாகரம்.

முகவுரை.

சித்தாந்தம் என்பது முடிபு என்று பொருள்படும். முடிபு எனவே, தனக்குமே லொரு கொள்கையு மில்லாதது என்று பெறப்படும். இம்முடிபு எங்கே பெறப்பட்ட தெனின், சிவாகமத்திற் காண்க. இதனால் சிவாகமத்திற் பெறப்பட்ட முடிபே முடிபெனவும், அதுவே சித்தாந்த மெனவும், அதற்குமேலிட்ட தொரு சித்தாந்தமின்றெனவும் வெளிப்பட்டது. இந்தவுணர்ச்சியால், சித்தாந்தம் என்பது ஆகமமுடிபு என்று நிச்சயிக்கப்பட்டது. ஆகமாந்தமெனினும், சித்தாந்த மெனினும் ஒக்கும். ஆகமாந்தமாகிய சித்தாந்தமே சைவமெனவும் படும். எனவே, சைவத்தின் மேலிட்ட தொரு சமயமு மின்றென்று காட்டப்பட்டது. (சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளை) என்றுகூறிய தாயுமானசுவாமிகள் தெய்வத் திருவாக்கானுங் காண்க. "சமயாதீதப் பழம்பொருள்" என்றதனால், சைவசமயத்தினும் அதிகரித்த வேதாந்த ஞானமென்று சிலர் கூறுவர். அது, "யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என்று கூறிய வாக்கியத்தால் மறுக்கப்படுதலின், அங்ஙனங்கொள்வது குற்றமாம். மற்றெவ்வாறு கருதப்படு மெனின், அதீத சமயமென வெளிப்பட்டு முன்னர்க்கூறிய சைவத்தையே வலியுறுத்துமென்க. "அயர்வறச் சென்னியில் வைத்து ராஜாங்கத்தி லமர்ந்தது வைதிக சைவமழகிதந்தோ" எனவும், "சந்தான கற்பகம்போலருளைக் காட்டத்தக்க நெறியிந் நெறியேதான் சன்மார்க்கம்" எனவும் போந்த

வாக்கிய விசிட்டத்தானுங் காண்க. இதனால், "சமய... பொருள்" என்றது அதீதமாகிய அச் சைவத்தா... பட்ட வுண்மைப்பொருள் என்று நாட்டப்பட்டது. ... தம், சைவம் என்னும் பரிபாய நாமங்களையுடைய... மொன்றே சித்தாந்தமாயின், இச் சித்தாந்தத்தின் ... ந்த பூர்வபட்சங்கள் யாவை? அவற்றிற்குரிய பிரம... யாவை? எனின்; உலகாயதம், புத்தம், சமணம், ... பிரபாகரம், கிரீடாப்பிரமவாதம், சத்தப்பிரமவாதம், ... தம், பாஞ்சராத்திர முதலியன பூர்வபட்சங்களும், ... லியன பிரமாணங்களுமாம். வேதம் சப்பிரமாணமும், ... பிரமாணமுமாக, அதிற்பெறப்பட்ட மார்க்கங்கள் பூர்வ... மாதலெங்ஙன மெனின், விளக்குதும். வேதம் பொருள்... டத்தோன்றுஞ் சூத்திர ரூபமா யிருப்பதொன்று. பலபெ... கொண்டியங்கலால் ஒன்றிலொன்றுமுரணிய சித்தாந்தம்... அவ்வேதத்தினுண்மைப் பொருளாதலிழுக்காம். பல பெ... களில் ஒன்றே அவ்வேதத்தினுண்மையாதல் திண்ணம். இத... வேதம் சப்பிரமாண மாதலும், அதிற் பெறப்பட்ட மாத்தி... தானே யெல்லாமார்க்கங்களும் சித்தாந்த மாகாமையும் வெ... பட்டது. யாவும் பூர்வபட்சமேயாகி ஒரு பொருளே... வேதத்தின் சித்தாந்தமு மாதல் துணியப்பட்டது. பூர்வாங்... களாய்ப் போந்தமார்க்கங்கள் பலவும், சித்தாந்தப்பட்டரி... கமொன்றும் அவ்வேதத்திற் பெறப்படுங்கால், அச்சித்தா... இதுவே யென வொன்றைச்சுட்டுவது கஷ்டதரம். ஒவ்வொ... வரும் தங்கள் தங்கள் கொள்கையே அச்சித்தாந்தமெ... கூறுகையால்.

வேதத்திற் பெறப்பட்ட மார்க்கங்களுள் சைவமும் ஒ... றேயாக, அதற்கு மித்தோடம் வருமே யெனின், தத்தோ... தைப் பரிகரிப்பாம். வேதம் சிவபெருமானால் சொல்லப்... டது. உலகாயதன் முதலிய சமயிகள் அவ் வேதத்தைத்... கள் கன்மம் வழிவிட்டபடியே யுணர்ந்து பொருள் கூறித்திய... கினர். வேதத்தைச் சொன்னவர் பதிப்பொருளாயுள்ளவர். அவ... இயற்கையே பாசமில்லாதவர். அவர் திருவாக்கை யுணரப்... போந்தவர்கள் பாசபத்தாளாயுள்ள பசுக்கள். பசுக்களெனவே...

மாகிய சிவாகம பாஷ்ய சித்தாந்திகளாகிய மற்றைப் பாஷ்யகர்த்தர்கள் வேதபாஹ்யரேயாயினர். சைவபாஷ்யகர்த்தா வொருவரேயன்றி மற்றைப் பாஷ்யகாரர்கள் கன்மவேறுபாட்டையுடைய பசுக்கள் கூறிய நூல்களை யெல்லாம் பிரமாணமாகக் கொண்டமையால். ஸ்ரீகண்டாசாரியர் தமதுபாஷியத்தில் வேதசிவாகமங்களையன்றி வேறுநூல்களையுந் தழுவியதுண்டேயெனின், (அன்னியநூலின்விதியவிரோதமே, லுன்னேல்பழுதென்றுளத்த) என்னும் நியாயம் வெளிப்படலால் அவரங்ஙனந் தழுவியது தோடமன்றென்க. இந்த விசாரத்தால் சைவபாஷ்ய மொன்றே வியாசருண்மைக் கருத்தினதெனவும், மற்றைப்பாஷ்யங்கள் அவ்வவற்றைச்செய்தவர் கன்மவயத்தின வெனவும், முன்னையது சத்திநிபாதர்க்குரித்தெனவும், பின்னவை சாமானியர்க் குரித்தெனவும் நிச்சயிக்கப்பட்டது. சைவபாஷ்ய கர்த்தாவாகிய ஸ்ரீகண்டமூர்த்திகள் சிவபெருமானுடைய ஸ்ரீகண்டத்தின் அமிசம்பெற்று அவதரித்தவுண்மை நோக்கியே அவர்க்கு அத்திவ்ய திருநாமம் வந்தமை காண்க. இவ்வுண்மையை ஸ்ரீகண்டவிஜயத்தினும், பவிஷ்யோத்தரத்தினுங்காண்க. இவ்வாசாரியர் கூற்று சர்வசம்பிரதி மன்னமென்பதை விளக்குவான் உலகன்னையாகிய ஔவை யென்பவருளிச்செய்த உண்மைவாக்கியம் வருமாறு. (தேவர்குறளுந் திரு ன்மறைமுடிவு, மூவர்தமிழு முனிமொழியும், கோவைத், திருவாசகமுந் ருமூலர்சொல்லு, மொருவாசகமென்றுணர்) என்னுந் திருவெண்பாவில் திருக்குறள், உபநிடதங்கள், தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரமுதலிய சித்தாந்த நூல்களோடு வியாசசூத்திரமும் ஒன்றெனச் சேர்க்கப்பட்டிருத்தலின் முனிமொழியெனப் போந்தவச்சாரீரக சூத்திரம் சித்தாந்த பிரதிபாதிதமென்பது சொல்லாமே யமையும். ஆகவே, சைவபாஷ்யமொன்றேஅதற்குரித்தென்பது நாட்டப்பட்டது. இன்னும் "வேதமொடாகம மெய்யாமிறைவனூ, லோதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுன்னுக, நாதனுரையிவைநாடி லிரண்டந்தம், பேதம தென்னிற் பெரியோர்க்கபேதமே" என்று திருமூலதேவர் திருமந்திரத்திற் கட்டளையிட்டுள்ள வாக்கியமுஞ் சான்றென்க. மேல்விசாரத்தால் வேதமே சிவாகமம், சிவாகமமே வேதம் என்னு முண்மை வெளிப்படலால் சிவாகமமொன்றே யன்றி வேறு வியாக்கியானங்களை வேதத்துக்குரிமை யெனக்கோடல் அசங்கதமென்க.

வேதமுஞ் சிவாகமுமொரு சிந்தர்ந்தத்தை விளக்கவந்த மூலமும்உரையுமாக, ஆகமத்தைநோக்க வேதத்தைப் பூர்வபட்சமென்றதென்னையெனின், சநகர்முதலிய முநீந்திரர்நால்வரும் வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாள்வரையும் ஓதிஞானம் நிலைபெறாதவ ராயினரெனவும், பின்பு ஆக மாந்தமென்னும் பெயரையுடைய சித்தாந்தத்தை யோதிஞானம் நிலை பெற்றனரெனவும் சங்கரசங்கிதையிற் கூறியவாற்றால், வேதத்தினும் சிவாகமத்திற்குப் பிராமாண்யம் வெளிப்பட்டது. வேதம் தன்னை ஆச்சிரயிக்கும் எல்லாச் சித்தாந்தங்களும் தன்னிடத்தி லுள்ளனவாகவே காட்டுந்தன்மை யுண்மையால். அப்படிக்காட்டுங்கால், காணப்படு மொவ்வொன்றினும் பிரமாணபுத்தி பண்ண வருந் தோஷ மேற்கொண்டியங்கல் திண்ணம். ஆகவே, மயக்கவறிவை விளைப்பதொன்றாக நிச்சயிக்கப்பட்டது. அது சாமாநியராகிய உலகர்க்கேசிவனால்கொடுக்கப்பட்டதென்னுமுண்மையால். இந்த விசாரத்தால் அது சத்திநிபாதர்க்கு உபயுக்தமாகாதென்க. இந்த நியாயம்பற்றியே ஆகமத்தைநோக்க அது பூர்வபட்ச மாயிற்று. வேதத்தினந்தம் வேதாந்தம் ஆவதுபோல் ஆகமத்தினந்தம்ஆகமாந்தம்என்பது அமையும். அப்படிக்கூறாது சித்தாந்தம் என்று வழங்குமாற்றால், ஆகமாந்தமே சித்தாந்தமென்னும் பரியாயநாமத்தைப் பெற்றமை வெளிப்பட்டது. இதனால், ஆகமாந்தத்துக்குப்பரியாய நாமம் வந்ததுபோல் வேதாந்தத்துக்கும்பரியாயநாமம் வந்திருத்தலை நோக்கின், அதுபூர்வபட்சம் என்னும் பெயர்த்தாம். ஆகவே, வேதாந்தம் பூர்வபட்சமும், ஆகமாந்தம் சித்தாந்தமுமாதல் வெளிப்பட்டது. (ஒரும்வேதாந்த மென்றுச்சியிற் பழுத்த, வாராவின்பவருங் கனிபிழிந்து, சாரங்கொண்ட சைவசித்தாந்தத், தேனமுதருந்தினர்சிலரே) என்னும்வாக்கியத்தானும் பூர்வபட்சசித்தாந்தங்களாகிய வேதாந்த ஆகமாந்தங்களினுண்மை பெறப்பட்டது. இச்சித்தாந்தமாகிய ரத்னங்களுண்டாகும்சமுத்திரம்போல்வதொன்றாகவிப் பத்திரிகைவெளிப்படுமாற்றால், பிறமுடிபுகளைக் கீழ்ப்படுத்திச் சைமொன்றினையே நாட்டவெழுந்த விதற்குச் சித்தாந்தரத்நாகரம் என்னும் பெயர் சூட்டப்பட்டது.—இன்னும் விரிக்கிற்பெருகும்.

மெய்கண்ட தேசிகன் திருவடிவாழ்க.

—:o:—

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீவாகீசதேசிகாயநம:.

சித்தாந்தரத்நாகரம்.

சிவபாரம்யப்பிரதரிசிநி.

உலகெலாந் தனதொரு சிறுகூற்றி னுளமைய
வலகிலாற்றலா னிறைந்தவ னெவனரு ணூலோர்
குலவியேத்துவோ னெவனவ னுமையொரு கூற்றி
னலர்கறைக் களச்சிவபிரா னடியிணை போற்றி.

:0:

ஞானத்திரயவிவரணம்.

பரமபதியாகிய சிவபெருமான் அருளிச்செய்த வேதசிவாகமங்களிற் பெறப்பட்ட வுண்மைஞானம் சத்தி நிபாதர்க்கே யுரித்தாம். உலகர்க்கோ வெனின், பாசபசுஞானங்கள் சித்தியாம். ஆக மூவகைப்பட்ட ஞானங்களுள், சத்திநிபாதர்க்குரித்தாகிய வுண்மைஞானமே பதிஞான மென்னப்படும். இம்மூன்றனுள், தேகமுதலிய பாசகாரியங்களைத் தனித்தனிப் பொருள்களெனக்கொள்வது பாசஞானம். அப்பாசத்திற்பிணிப்புண்டுமயங்கும் பசுவைப்பொருளெனக்கொள்வது பசுஞானம். இயற்கையே பாசமில்லாததாகியவொருபொருள் இவ்விரண்டிற்கும் வேறாயுளதெனக்கொள்வது பதிஞானம். இவற்றுள், தேகத்தைப் பொருளெனக்கொண்டவன் உலகாயதன். புத்தியைப் பொருளெனக் கொண்டவன் புத்தன். குணத்தைப்பொரு ளெனக்கொண்டவன் சமணன். இப்படி இன்னும்பலருளர். இவர்களே பாசஞானிகள். இவர்களுக்குமுறையேதேகம், புத்தி, குணமுதலியசடப்பொருள்களையன்றி வேறு சித்துப்பொருளா யிருப்பதோரான்மா வுண்டென்பதுடன் பாடில்லை. இனி, தேகம், இந்திரியம், பிராணன் கரணம், முதலாகிய பாசகாரிய பத்தனய், சித்ரூபனய் விளங்

கும்பசுவைப் பொருளெனக் கொண்டவன் மாயாவாதி. இவனை வேதாந்தியெனவும், அத்துவிதியெனவும் அறியாதார் கூறுவர். பாசத்திற் சகனும், பசுவென்னப் பட்டவனுமுள்ள தன்னைப் பொருளென மயங்கல்போல் தன்னைப் போலவே பாசத்திற் பிணிப்புண்டு மயங்கும் பசுக்களாகிய சூரியன், சந்திரன், பிரமன், விஷ்ணுமுதலிய தேவர்க்களைப்பொருள்க ளெனக்கொள்வதும் பசுஞானமேயாம். பசுவாகிய தன்னைக்கண்டு மயங்குதல் போல் வேற்றுப்பசுக்களைக்கண்டு மயங்கலால். இவற்றுள், சூரியனைப் பொருளென மயங்குவது சௌரமெனவும், சந்திரனைப்பொருளென மயங்குவது சௌமமெனவும், பிரமனைப் பொருளென மயங்குவது ஐரணியகருப்பமெனவும், விண்டுவைப் பொருளென மயங்குவது வைணவமெனவும் பெயர்பெறும். வைணவமெனினும், பாஞ்சராத் திரமெனினும் ஒக்கும். இவற்றுள் சௌர முதலியன பாஞ்சராத் திரத்தைநோக்க அப்பிர காசத்தை யடைந்திருக்கின்றன. மாயாவாதமுதல் பாஞ்சராத் திரமீறுகிய மார்க்கங்களிற் பிரவர்த்திப்பவர் தம்மையும், தம்மையொத்த பிறபசுக்களையும் பொருள்களென மயங்கலால்,இவர்கள் யாவரும் பசுஞானிகளேயாவர். இவர்களுக்கு அவரவர்கள் கொண்டிருக்கும் பசுக்களைக்காட்டிலும் வேறு பதிப்பொருளுண்டென்பதுடன் பாடில்லை.

உலகாயதன் முதலிய பாசஞானிகள் பாச காரியங்களாகியதேகம், புத்தி, குணமுதலிய பொருள்களை யன்றி வேறு ஆன்மாவாவது, பரமான்மாவாவது உண்டென்று கொள்ளாமையாலும், மாயாவாதி முதலிய பசுஞானிகள் ஆன்மாவாகிய தன்னையும், சூரியன், சந்திரன், பிரமன், விஷ்ணுமுதலிய வேற்றுப் பசுக்களையுமன்றி வேறு பரமான்மா வுண்டென்றுகொள்ளாமையாலும் யாவரும்பதியை யிழந்தவர்களே யாவர். தேகவாதிமுதல் பாஞ்சராத்திரி வரையில் அமங்கலம் பெற்றியங்கலால் அவர்கள் யாவரும் நாஸ்திகருமாவர். தேகமே ஆன்மாவெனக்கொண்டு தேகத்துக்கு வேறாயுள்ள ஆன்மாவையும், கடவுளையுமில் பொருள்களாகத் துணிந்தமையால், தேகாத்மவாதியாகிய உலகாயதன் அவற்றை யுண்டென்பாரை நோக்கநாஸ்திகனுவன். இவனில்கொஞ்சம் பிராக்ஞாளாய் இந்திரிய முதலிய

பொருள்களைத் தேகத்தினிடமாய்க் கண்டமையால் சமணாதிகள் நாஸ்திகருள் பாசஞான துல்யராவர். ஆன்மாவையே கடவுளெனக் கொண்டும், பிற ஆன்மாக்களையே கடவுளர்களெனக் கொண்டும், அவர்களுக்கு வேறாயுள்ள பரமான்மாவாகிய பதிப் பொருளையில்பொருளாகத் துணிந்தமையால் ஆன்மவாதி முதலியவர்களும் பதிப் பொருளொன்று வேறு உண்டென்பாரை நோக்க நாஸ்திகராவர். இவர்கள் பதிஞானிகளை நோக்க நாஸ்திகரேயன்றிப் பாசஞானிகளை நோக்க ஆஸ்திகரேயாம். இவர்கட்கு ஆஸ்திகத்வம் பாசஞானிகளை நோக்க வுண்டாதலால் அவரோ டொருசேர்த்து நாஸ்திகர் என்னும் பெயர்வழங்குந் தன்மையொழிந்தது.

ஆத்மா இல்லையென்பவனும், கடவுளில்லை யென்பவனும், ஆத்மாவாகிய தானே கடவுளென்பவனும், பிறவான்மாக்களே கடவுளர்க ளென்பவருமாகவே யொவ்வொரு மதத்தவரும் ஒழிதலால் அநீச்சுரவாதிகளாகிய அன்னோர்க்கப் புறப்பட்டவனாய், பதிஞானி யென்னப்பட்டவனா யுள்ளவனொருவனுளன். எனவே, மேல் விவகரித்து வந்த பாசகாரியங்களுக்கும், பசுக்களுக்கும் வேறாகப்பதிப் பொருளொன்று வேறு கண்டவனென்பது நிச்சயிக்கப்பட்டது. அப்பதிப்பொருள் சம்பு சப்தவாச்சியனாகிய சிவபெருமானே யென்பது சமஸ்தவேத நிச்சயமாகையால், அப்பரசிவ சம்பந்தத்தால் சைவ னென்னப்படுவோனே பதிஞானியாதல் திண்ணம்.

தேகமுதலிய பாசகாரியப் பொருள்கள் அசேதனங்களாவதுகொண்டு அவற்றைப்பொருள்க ளெனக்கொள் வதிழுக்காம். ஆன்மாஅப்பாசத் தொடக்கிற்பட்டுழலுந் தன்மையுண்மையால் அதனைப் பொருளெனக் கொள்வதும் பிழையாம். சூரியனைப்பல்லையுடைத்தும், சந்திரனைக் கீழேதேய்த்தும், பிரமனைத்தலையையரிந்தும், விண்டுவைச் சூலத்திற்குத்தியும், அவரவதாரங்களில் மீனைக்கண்ணைப் பிடுங்கியும், ஆமையை யோட்டைப்பறித்தும், பன்றியைக் கொம்பைமுறித்தும், இவைமுதலிய நிக்கிரகங்கள் சிவபெருமான் செய்தவுண்மையால் அவர்களைப் பொருள்களெனக்கொள்வதும் அசங்கதம்.

இனிப்பதிஞானத்தாற் பெறப்படும் பரம்பொருளாயுள்ள வர் சிவபெருமானே யென்பதை விளக்குதும்.

சிவன் பூரணமொன்றது.

பூரணம் என்பது நிறைவு என்று பொருள்படும். நிறைவு என்னுங்கால் எதில் நிறைவு? யாருடைய நிறைவு? என்னும் வினநிகழும். உலகத்தில் நிறைவு எனவும், சிவனுடைய நிறைவு எனவும் விடைவருமாற்ருல், முதல் அவ்வுலகத்தை விசாரிக்கில் சரம், அசரம் என இருவிதப்படும். இவ்விருபகுதியும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், நிலா, பகலோன், ஆன்மா என்னும் எட்டுப்பேதமாய் விரியும். இவ்வெட்டையன்றிப் பரமாணுவுங் கிடையாதென்பது திண்ணம். இதனையே அட்டமூர்த்தமென்று வேதசிவாகமங்கள் கூறும். எனவே, சிவனுக்குத் திருமேனி யென்பது பெறப்பட்டது. இதனால், சிவனுடைய நிறைவும் வெளிப்பட்டமைகாண்க. சராசரங்களாயுள்ள அவற்றினுள்ளும் புறம்பும் அவர்கலந்து நிற்றலால் அவைகள் வியாத்தி வியாப் பியப்பொருள்களும், அவர் வியாபகப்பொருளுமாதல் சாலும். இதனல் வியாபகத்துக் கிடமாகியபொருள்களும், வியாபிக்கும் பொருளும் ஒருபொருளாகாவாம். சரம், அசரமெனப்போந்த வியாபக தானப்பொருள்கள் வியாத்தி வியாப்பியங்களாய்ச் சதசத்தும், அசத்துமாய் விளங்கலான், அவ்விரண்டுமே யொரு பொருளாதல் நிரஸ்தம். இங்ஙனமாக, கேவலம் சத்தாகிய வியாபகப்பொருள் சதசத்தும், அசத்துமாகிய வியாத்தி வியாப்பியப் பொருள்களாத லெங்ஙனங்கூடும்? மூன்றும் விஜாதிப்பொருள்களாத லுண்மையால். (வியாபகமாதி விரிக்குங்காலே, வியாபகமேலிடு நிறைவாமென்ப, வியாத்தி சமநிறைவாகும் விளம்பின், வியாப்பிய மொன்றின் மிடைந்தநிறைவே) என்னும் வியாக்கியையுஞ் சிந்தித்தலமையும்.

இவ்வுண்மையையறியாதார் பூரணமொன்ற மாத்திரத்தானே ஏகவாதஞ்சாதிக்க வெழுகின்றனர். எல்லாம் அது என்னும் விபரீத மேற்கொண்டமையால். எல்லாம் என்பது கொண்டே ஏகத்வம் நசித்தலால் மேல் விபரீதம் தலையெடுக்காதென்க.

ஒன்றே பலவாதல் செல்லுமெனின், விஜாதிப்பொருள்களாதல் இழுக்காம். அல்லதூஉம். எனையிட்டு என்னுஞ்சங்கையும் வரும். லீலாமாத்திரமெனின், (வேண்டுதல் வேண்டாமையி லானடிசேர்ந்தார்க், கியாண்டு மிடும்பையில) என்னுந் திருவாக்காற் பழிக்கப்பட்டழியும். உலகத்தில் விஜாதிப்பொருளாயிருந்து வியாபித்தல் யாண்டமையுமெனின், உலகம்பிழைக்கவென்பதுதெளிக. பூதவிருளாலாவரிக்கப்பட்ட கண்களில் கதிரொளிகலந்து அவ்விருளைத்துரத்துமாபோல். ஆகவே, ஸ்வப்பிரயோசனமன்றிப் பரப்பிரயோசனம் வெளிப்பட்டது. இதனால் எம்முடைய கூற்று இழுக்கடையாமைகாண்க. அன்றியும், அவர்பலவாயினரெனின், இப்போது ஆயிருப்பதேயன்றி இன்னும் அவரதிக மாதலுங்கூடும். ஆகவே, அட்டமூர்த்தம் கெட்டுப்பூரணம் அபூரணத்தையடையும். இந்த விசாரத்தால் வேதத்திற்போந்த அட்டமூர்த்தம் சைவமொன்றற்கே வுரிமையாகிச் சிவனே பூரணனென்பது நாட்டப்பட்டது.

சராசரங்களைச் சிவனுக்குத் திருமேனி யென்றமையால், சேதனமாகிய ஆன்மாவுக்கு அசேதனமாகிய தேகம் திருமேனியாதல் போலாமெனின், அற்றன்று. (அங்கியானது தானுமொன்றையணைந்து நின்று நிகழ்ந்திடும், பங்கியாதுயிர்தானு மிப்படி பற்றி யல்லது நின்றிடாது) என்றபடிச் சிவனுக் கிலக்கணம் கூறப்படாமையால். (சிவனுருவருவுமல்லன் சித்தினோடசித்துமல்லன்) என்பது அவருண்மையிலக்கணமாகையால். ஆன்மா மாயாகாரியமாகிய தேகத்தைத் தானியங்கும் பிரயோசனத்தை நாடிக்கலந்த தொரு பொருளும், சிவன் ஆன்மாவையும், தேகத்தையுங்கூட்டி யியக்குவிக்கும் பிரயோசனத்தை நாடிக்கலந்த தொரு பொருளுமாகையால் முன்னையது ஸ்வப்பிரயோசனமும், பின்னையது பரப்பிரயோசனமும் பெறப்பட்டமை காண்க. இதனால், உலகுயிர்களை சிவனுக்குத் திருமேனி யென்றது ஔபசாரிகமேயாம். (மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவமாகு, மாயவாணவ மகன்ற வறிவொடு தொழிலை யாக்கு, நாயகனெல்லா ஞானத்தொழின் முதனண்ணலாலே, காயமோமாயையன்று காண்பது சத்தி தன்னால்) என்னும் அருள் வாக்கியத்தால் சிவனுடைய திருமேனி யீதெனவெளிப்பட்டது. ஆகவே, அவர் தமது சிற்சத்தியிற் றிருமேனிகொண் டருள்வரென்பது உண்மை நூற்றுணிபாம்.

இனி, பூரணன் சிவனெனலடாது. விஷ்ணு வென்பதற்குப் பொருள் வியாபகப்பொருள் என்றுபெறப்படு முண்மையால் என்று சிலர் கூறுவர். (விற்பிரம்பா லுற்றவடு மேவவுல கெங்குநிறை சிற்பரனே தெய்வம் சிவசிவா, சொற்சிறந்த, அகரமுதல வெழுத்தெல்லா மாதி, பகவன்முதற்றே யுலகு) என்னுந் திருவாக்கால் சிவபெருமான் அருச்சுனனிடத்தில் வில்லடிபட்டும், பாண்டியனிடத்தில் பிரம்படிபட்டும், சமஸ்த சராசரங்களுந் தமது திருமேனியென்பதை விளக்குவான் எங்குமத்தழும்புகள் புலப்படத் திருவுள்ளமிசைந்த வுண்மைவெளிப்பட்டது. அன்றியும், (வில்லாடன் மாரனிருக்கவும் யோகம் விளைத்தவந்நாள், புல்லாதிருந்தனவெல்லாவுயிருந் தம்போகத்தையே) என்னுந்திருவாக்கால் பிராட்டியைப் பிரிந்துபெருமான் யோகிருந்த காலத்தில் மன்மதன் முதலி யவர்களுஞ் செயலற்று எல்லாவுயிர்களும் போக மொழிந்த புதுமையுங் காணப்பட்டது. இன்னும் பெருமானது திருக் கண்களைத் தேவியார் லீலாமாத்திரமாய் மூடிய காலத்தில் எல்லாச்சுடர்களு மொளிமழுங்கி யிருண்மூடி யுலகமயங்கியழிந்தது. இன்ன வியாபக விளக்கத்திற்போந்த வுண்மைகள் விஷ்ணு முதலிய தேவர்பாற் காணுமையால் அவர் வியாபகராத லிழுக்கடைதல் காண்க.

இரணியன் பொருட்டுத் தூணில்வந்தமை சாலுமெனின், இன்னகாரியங்கள் சிவனருள்பெற்றூர்க் கியல்பினவேயாம். தந் திருமேனியிற்பட்ட அடிகள் உலகமெங்கும் பட்டும், தாம்பெண்டொடக்கின்றி நிற்ப, வுலகமெங்கும் போகமொழிந்தும், தமது திருக்கண்களைத் தேவியார் மூட, வுலகமெங்கும் இருண்மூடியும் வெளிப்பட்ட சிவபூரணத்தின் முன்னர்க்கம்பத்தின் முளைத்த சிங்க பூரணம் எங்கே தலையெடுக்கும்? சிங்கம் கம்பத்தில் வந்தபோது உலகமெங்கும் நிகழ்ந்த அதிசயமென்னை? வசிட்ட வியாசாதிகளுந் தம்மை நோக்கித் தவங்கிடந்தார்க் கருளவேண்டி அவர் நினைத்த விடத்தில் வெளிப்படுதலியல்பாம். ஆகவே, கம்பத்தின் முளைத்த கதை தடுமாற்ற மெய்தினமை காண்க. கோபிகைகள் பதினாறுயிரம் பேரிடத்தில் நாரதர்க்குக் கண்ணன் காணப்பட்டமைசாலுமெனின், இதனைச் சௌபரி விருத்தாந்தம் சால நகைக்கும்.

எங்ஙன மெனின், ஓரரசன் பல பெண்களைப்பெற்று அவர்களை மணஞ்செய்விப்பது கருதி இராஜ குமாரர்களைப் பல தேசங்களி னின்றும் வரிக்கையில், அப் பெண்கள் அவ் விராஜ குமாரர்களை மணம் புணரச் சம்மதித்திலர். பின்னர், சௌபரி என்னும் பெயரையுடைய முனிவ ரொருவர் வயதின் முதிர்ச்சியால் தள்ளாடிக்கொண்டேவந்து அரசனைக் கண்டு உன்னுடைய பெண்களை நான் மணம்புணரவிரும்பிவந்தே னென்றார். அரசன் வெறுப்போடு அம்முனிவரைத் தன்னுடைய பெண்களிருக்கும் விடுதியிலனுப்பினன். உள்ளே சென்று திரும்பிய முனிச்சிரேஷ்டர் தம்மை மணம்புணரவிசைந்த இராஜ புத்திரிகளிடம் வாங்கிவந்த முத்திரை மோதிரங்களை அரசனுக்குக் காட்டினர். அரசன் வருந்தி நமது பெண்கள் கிழவனும், ஜிதேந்திரியனுமாகிய இந்தமுனியை விரும்பியது அவரூழாயின் வேறு என்செய்வது என வொன்றும் யோசியாது அந்தப் பெண்க ளனைவரையும் அம் முனிவர்க்குக் கலியாணஞ் செய்வித்து, அவர்களை அம்முனிவரோடுகூட்டி அனுப்பிவிட்டனன். சில வருடங்கள் கழிந்தபின்னர் அரசபத்தினி யொருநாள் அரசனைப்பார்த்து நமது குழந்தைகள் க்ஷேமம் இன்னது என்று நமக்குப் புலப்படாதவழி தெய்வம் செய்தது நம்வயிறுசெய்த கொடுமையென்று துக்கித்தனள். அதைச் சகிக்கமாட்டாத அரசன்உடனே தன்னுடைய பத்தினியை யுடன்கொண்டு சிலசேனைகளோடு தன்னுடைய பெண்களையும், மருமகனையுந் தேடிப் புறப்பட்டனன். மார்க்கத்தில்ஓர்பெரிய அடவியில்தவஞ்செய்துகொண்டிருந்த முனி புங்கவரொருவர் தனக்கு முன்னே தோன்றினர். அவரைப் பார்த்தபோது தன்னுடைய பெண்களை மணம்புணர்ந்த சௌபரியெனப்புலப்பட்டது. அப்போதுஅவர்இராஜனையும்இராஜபத்தினியையும்பார்த்து மாமன் மாமியென்னு மரியாதை பாராட்டியுபசரித்தனர். முனிவரைத் தங்கள் மருமகப்பிள்ளை யென்று தெளிந்த அவ்விருவரும் பயந்து நம்மபெண்கள் கதி யின்னதென்றெப்படி யறியப்போகிறோமென்று சிந்தித்துக்கொண்டிருக்கையில், முனிவர் தமது பத்னிமாராகிய இராஜகுமாரத்திகளிருக்கும் பட்டணத்தைச் சுட்டி வழிகாட்டி அவ்விருவரையு மனுப்பினர். அந்தக்குறிப்பின் வழியே சென்ற இராஜனும் இராஜபத்

ளியும் பட்டணத்தைக் கண்டுபிடித்து உள்ளே பிரவேசித்த போது, அது இரத்னமயமான கட்டடங்களும், உப்பரிகைக ளும் நிறைந்த பேரதிசயத்தை விளக்குங்காட்சியிற் காணப்பட் டது. அதைக்கண்டு பிரமித்து இது தெய்வலோகமோ ஏதோ என்று சமிசயித்துக்கொண்டிருக்கையில், தங்கள் மருமகப்பிள்ளை யாகிய சௌபரிமுனிவர் தந்துணைவரோடு அங்குவந்து அவர் களை அதிகமரியாதை பாராட்டி யெதிர்கொண் டுபசரித்தனர். ஆரணியத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர் பட்டணத் தில் தங்களுக்கு முன் வந்திருக்கும் விஷயமின்னதென்று புலப் படாமல் முழுதும் பார்ப்போமென்று அம் முனிவர் பின் அவ் விருவரும் போயினர்.

முனிவர் தம்முடைய கிருகத்துக்கு அவர்களை யழைத்துக் கொண்டுபோனபோது அங்கேயிருந்த தன்னுடைய மனைவி யொருத்தி அவ்விருவரையும் தன்னுடைய தாயுந்தந்தையுமென் றறிந்து வந்து கட்டிக்கொண்டனள். புத்திரியாகிய அவளை அவ் விருவருந் தழுவிக்கொண்டு மனமகிழ்ச்சியோடு அவளுடைய க்ஷேமங்களையும், மற்றைப் பெண்களுடைய க்ஷேமங்களையும் விசாரிக்கையில்அவர்களைவிட்டுப்பிரிந்துமுனிவர்பின்வந்துவிட்ட நாண்முதல் நடந்தவதிசயங்களையும், தங்களுக்குண்டாகிய சம்பத் தின் மகிமைகளையும் முறையே அவள்சொல்லி முடித்தனள். யாவுங்கேட்டு அடங்காத மகிழ்ச்சியோடு இரண்டொருநாள் அந்தப் பெண்ணினிடத்திலே தானே அவ்விருவரு மிருக்கையில் தங்கள் மருமகப்பிள்ளையாகிய முனிவர் தன்னுடைய மனைவியுட ன்கலந்து வாழுமொருமையும், பிரிவின்மையுங்கண்டு எப்போது மிவ்விடத்திலேதானே யிருந்தால் மற்றைப்பெண்கள் கதியெப் படியாவது என்று யோசித்து அந்தப்பெண்ணைக் கேட்கையில், அவள் அதிகவருத்தத்துடன் தன்னுடைய கணவர் தன்னை விட் டொரு கணமும் பிரிவதில்லை யெனவும், அதனால் தனது தமக் கைமார் தங்கைமார் முகத்தை அவர் பார்ப்பதில்லை யெனவும், அந்த வொருகுறையே தனது நெஞ்சில் குடியிருப்பதெனவுஞ் சொல்லினள். அந்தவார்த்தையைக்கேட்டு வருந்திய தாய்தந்தை யர்கள் அன்றுகழித்து மறுதினம் மற்றைப்பெண்களையும் பார்ப் பதுகருதி அந்த வீட்டைவிட்டு மற்றொரு பெண் வீட்டுக்குப்

13

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமந்மணிவாசகப்பிரபவேநமஃ.

சித்தாந்தரத்நாகரம்.

ஆபாசஞானநிரோதம்.

விஞ்சிய பிரணவ ... ... *
குஞ்சர முகனவிர் ... ... *
செஞ்சர ணிணைமலர் ... ... *
செஞ்சினி வினைகுவாம் ... ... *

பரமபதியாகிய சிவபெருமான் அருளிச்செய்த வேதசிவாகமங்களிற்பெறப்பட்டபதி ஞானத்தையுணர்வது பூர்வபுண்ணியமுடையார்க்கே கைவல்யமாகையால், அவ்வுண்மைஞான சித்தியாவர்க்குங்கிட்டுவது அருமை! அருமை!! "நல்லனநூல் பல கற்பினுங் காண்பரிதே, யெல்லையிலாத சிவம்" எனவும், "எண்ணிலியூழி தவஞ்செய்தங்கிசனை, யுண்ணிலைமை பெற்ற துணர்வு" எனவும் போந்த பிரமாணங்களாற்காண்க. இவ்வரிய சிவ சித்தியைப் பயப்பது சைவமார்க்கமொன்றேயாம். (தெய்வம் சிவனேசிவனருள் சமயம், சைவம் சிவத்தொடு சம்பந்தமென்றான், சைவம் வளர்க்குஞ் சம்பந்தமூர்த்தி) என்னும் வாக்கியத்தால்சைவம் ஈதெனவெளிப்பட்டது. எல்லாமார்க்கங்களுக்கும் அதீதப்பட்டதாய், ஒப்புயர் வில்லாததாய், தன்னிலைமை யெக்காலத்து மாறுததாய் விளங்குஞ் சைவமார்க்கத்திற் பிறக்கும் புண்ணியத்தைப் பெற்றும் விபூதி ருத்ராட்சங்களாகிய சிவ சாதனங்களைத் தாங்கிவாழுஞ் சாம்பவாளா

கிய நம்மவருட்பலர் தங்கள் பெருமையைத் தாங்களே யறியாத வர்களாய்க் காலங் கழிக்கின்முர்கள்.

உலகம் என்பது யாது? நாம் உலகில் ஏன்பிறந்தோம்? நாம் என்பது யார்? நமக்கும் உலகுக்கும் உள்ள சம்பந்தம் யாது? என்றின்ன விசாரத்திற் றலைப்பட்டவர்க்கே உண்மை வெளியாகுமாகையால் மானிடராய்த் திரிவாரோவ்வொருவரும் தத்தங்கடமையாகப்போந்த மேற்காரியத்திற்றலைப்படுவது அவசியகரமாம். இந்த விசாரத்தால் முறையே மேல் வினுக்களுக்குச் சமாதானம் பிறந்து, அந்தத்தில் பதிப்பொரு ளொன்றுண்டென்பதும் வெளிப்படும். அப்பதியே (சிவம்) என்னும் மங்கல பதார்த்தமாய் விளங்குவ தொன்முகலான், அப்பதிப் பொருளோடு சம்பந்தம் பெருதார் அமங்கலமுடையார் என்னப்படுவர் என்பதற்கஞ்சி யாவருஞ் சுமங்கலிகளாக வேண்டுமென்பதும் அமையும். இவ்வரிய பேறு நம்மவர்க்கு இயல்பாகவே அமைந்திருப்பதால் நாமிப்பெரும் பேற்றையுடையேம் என்று விசாரமுகத்தால் தெளிந்து மகிழ்வதே நம்மவர் செய்யத்தக்க கடமையாம்.

சிவசம்பந்திகள் என்று காட்டுவதற்குரிய விபூதி ருத்ராக்ஷங்களைத் தரிக்கும் நம்மவர் சுலபமாய் மேல்விசாரஞ் செய்வதற்கு அச்சிவசாதனங்களுமோர்துணையாம். விபூதியென்முலென்னே? அதை யேன் தரிக்கவேண்டியது? அதற்கும் நமக்கு முள்ள சம்பந்தம் யாது? என்றின்ன கேள்விகள் பிறக்கவிட முண்டாதலே யுண்மையைக்காட்டி யுபகரிக்கும். இவ்வளவுசெய்ய அவகாசமின்றித் தங்களுக்குக் கிடைத்திருக்கும் பெரும்பாக்கியத்தை யிழக்கின்றவர்களேயாயினர். இவ்வுண்மைகளைச் சிந்தித்து நம்மவர் பலரும் நமது நிலைமை இனைத்து என்றறியுங்கால் தாம் தாம் பிறந்ததனு லடையத்தக்க பெரும்பேற்றை அடைகின்றவராவர். அவரப்படி அறியத்தொடங்கின், (நலமதொன்றடைதற் குறுமிடையூறு காதனேபலவுளவன்றே) என்றபடிப் பலவிபத்துக்கள் நம்மைச் சூழ்ந்திருப்பது முண்மையே! “தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி, முனிவிலாததோர் பொருளது கருதலும், ஆறுகோடி மாயாசத்திகள், வேறு வேறு தம்மாயைக டொடங்கின, வாத்தமானுாயலவர்கூடி, நாத்திகம்பேசி நாத்தழும்பேறினர், சுற்றமென்னுந் தொல்பசுக்குழாங்கள்,

பற்றியழைத்துப் பதறினர் பெருகவும், விரதமே பரமாக வேதியருஞ்,சரத மாகவே சாத்திரங்காட்டினர், சமயவாதிகடத்தமதங்களே, யமைவதாக வரற்றி மலைந்தனர், மிண்டிய மாயாவாதமென்னுஞ், சண்டமாருதஞ் சுழித்த டித்தார்த், துலோகாயதனெனு மொண்டிறற்பாம்பின், கலாபேதத்த கடு விடமெய்தி, யதிற் பெருமாயையெனைப்பல சூழவும்" என்னும் பரமாசாரியர் திருவாக்காற் கண்டுணர்க.

இவ்விபத்துக்களில் நாம் தப்புவது (அவனருளாலே யவன்றாள் வணங்கி) என்னும் திருவாக்கின்படியே கூடுமாகையால், அவன் அருள்வடிவமாகிய வேதசிவாகமங்களில் உறுதிப்பட்ட நிலையினிற்பதே நங்கடமையாம். (அருளுடைய பரமென்றேவன்று தானே யானுளனென்றும் மெனச்கே யாணவாதி, பெருந் விணைக்கட்டென்றும் மென்றாற்கட்டிப் பேசியதன்றே யருணூல் பேசிற்றன்றே) என்று தாயுமான சுவாமிகள் கூறிய பிரமாணத்தால் வேதசிவாகமங்கள் அருணூல் என்று வெளிப்பட்டமைகாண்க. அருணூலில் விதித்தவழி நிற்பின், அல்லாத நூல்கள் புலம்பும் அசப்பியங்கள் தலைகாட்டா தொழியும். அருணூலெனினும், பதிநூலெனினு மொக்கும். இந்நூல்களில் பதிநிச்சயத்தையினிது விளக்கவேண்டிப் பாசபசுக்களி னிலக்கணங்களையும் தாரதம்ய முகத்தானே பிரவசனஞ் செய்யப்பட்டிருத்தலின், அவ்வாபாச சித்தாந்தங்களில் மயக்கமுண்டாகாதவழி அவற்றைமுறையேவிளக்கி, அவற்றிலுண்டாகிய தோஷங்களைவிலக்கி, நம்முண்மையைத் துலக்கிக் காட்டுவோமாக.

முதல், (நாத்திகம்பேசி நாத்தழும்பேறினர்) என்ற பிரமாணத்தால் அந்நாத்திகர் இவரென்பதை விசாரிப்பாம்.

காணப்பட்ட உலகமொன்றே மெய். இவ்வுலகம் மண், சலம், தீ, காற்று என்னும் பகுதியுடைத்து. இந்த நான்கும் பூதங்களென்னப்படும். இவைகளொன்றோடொன்று புணர்ந்தும், பிரிந்து மியங்கு மியக்கமே சிருட்டி திதிலயங்களாம். இவற்றிற்குவேறாய், ஆன்மாவாவது, கடவுளாவது உண்டெனக்கொள்வது பிழை. பாவபுண்ணியங்களும், நரகசொர்க்கங்களு முண்டென்பது சர்வாபத்தம் என்றுகூறித் திரிபவரே நாத்திகராவர்.

இந்தக் கொள்கையை அவலம்பித்திருக்கும் அதிகாரிகள் யாவரென விசாரிக்கின், அவர் இன்னுரொன்று புலப்படுவது

கஷ்டம். மற்றைக்கொள்கைகளை அவலம்பித்திருக்குஞ் சமயிகள் பலபிராகாரமாய்ப்பிரிந்து உலகமுழுதும் பரவியிருப்பது போல் நாத்திகர் என்னும் ஓர் பிரிவினர் உலகில் காணப்படாமையால். ஆகவே, இவர்களை யொரு சமயிகளாகவும், நியாயங் காட்டிமறுக்க வேண்டிய பரிபாகிகளாகவும்விவேகிகள் கொள்ளாரென்க. இவர்கள் அநாமத்து ராயர்களானபடியால் இவர்களைத் தெய்வந்தான் திருத்தவேண்டும். ஆன்மாவுண்டு என்று கொள்பவனுனல் தான் அடையவேண்டிய லாபத்தில் திருஷ்டியுள்ளவனுய்ப் பெறுவானுகியதானும், பெறுவதாகிய பேறுமுள் பொருள்களாகத் துணிந்த பயத்தால் தனக்கப்பேறு தருவானுகிய தயாமூர்த்தியாணையில் வசிப்பன். தன்னிருப்பே மோசமானதால் இல்லாமற்போய் விடுகிற தனக்குண்டாவனவாய்ச் சொல்லும் பாவபுண்ணியங்களிருப்பை அவன் எம்மட்டில் அங்கிகரிக்கப் போகிருன்? எது எப்படியாலுல் அவனுக்கென்னை? புலி, கரடி, சிங்கம், நாய், நரி, பூனை, ஆனை, கழுதை, குதிரை முதலிய சிவசந்துக்கள் நாமின்ன நிலையிலிருக்கின்றோமெனவாவது, நாம் சேதனம், அல்லது அசேதனமெனவாவது அறியுஞ் சத்தியினவன்றும். அறியாவிடினும், ஆகாரம், நித்திரை முதலியவற்றை அவற்றி னளவறியாமலே யநுபவிப்பதுஞ் செய்கின்றன. நாமநுபவிக்கின்றோமெனவும் பகுத்தறியாவாம். இவற்றைப் போலாது, பகுத்தறியுஞ் சந்மத்தைப்பெற்றும், அவ்வறிவின் பிரயோசனத்தைப் பாழாக்கி அவ் வறிவைப்பெறு தியங்கும் மிருக பிராயத்தையெய்தி நாத்திகப்படுகுழியில் வீழ்ந்து அந்தோ நம்மவர் அழிவது அநியாயம்! அநியாயம்!!

ஆகாரம், நித்திரை முதலியனவன்றி வேறு லாபத்தையடையாத மிருகங்களையொத்து அந்த லாபமேயன்றித் தங்கள் பகுப்பறிவின் பிரயோசனம் இதுவென விசாரித்து அதனுரிய லாபத்தையடைய முயலாத அவர் வினையிருந்தவாறு கொடிது! கொடிது!! பகுப்பறிவின் பிரயோசனத்தால் மிருகங்களுக்கில்லாத ஆரோக்யங்களைத்தேடி யநுபவிக்கின்றோமெனின், அந்தந்தச் சந்மங்களுக்கு அவ்வவற்றிற்கு நேரும் உணவாதிகளே ஆரோக்கியமா மாதலால், அவற்றில் தான் விசேஷ ஆரோக்கியத்தைப் பகுப்பறிவால் பெற்றேனென்பது விந்தையென்க.

17

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசுந்தராக்யகுருவர்யாயநம:.

சித்தாந்தரத்நாகரம்.

* தணிகாசலஸ்தவம்.

எவனுயர் மறைமுடி மிசைநட மிசைதரும்
எவனுயிர் தொறுமட வரலொடு மிவர்தரும்
எவனமரர்க ளதிபதி யென விலகுறும்
அவனருள் பெறும்வகை யடைதி நன்மனனே.

நூல்.

(உலகமாயையிலுதிக்குமென்றது.)

பொற்பிரீனய துலகமாயையிடைப்
புகன்றிடிலெனுமுயர்சைவ
சிற்பரஞானமுணர்தியென்றனனெஞ்
செல்வமாய்க்காழியில்வந்த
கற்பகமாயென்கண்மணியாகிக்
கருத்தினிற்கலந்துதித்திக்கு
மற்புதனெங்கள்வாழ்வெனுந்தணிகை
யங்கிரிமேயவங்கணனே. (க)

* இது மூலம் (௫00) பாடல் முடிந்தவுடன் இதற்கு வியாக்கியானம் பிரமாணசகிதமாய் வெளியிடப்படும்.

(உலகம்பிரமத்துதியாதென்றது.)

உலகநற்பிரமத்திடையுதித்திடுமென்
றுரைத்திடுமூடர்வாய்மூடக்
குலவுமிப்பவஞ்சமசத்துயர்பிரம
சத்தினிற்கூறுறுதென்றான்
மலைமகடுணைவன்முக்கணனீல
மணிமிடற்றவனெனவேதம்
நிலவிநின்றேத்துமொருபரன்மகனென்
னெஞ்சிவர்தணிகைநின்மலனே. (உ)

(அசத்திலசத்தேயாகுமென்றது.)

சிலம்பிவாயிடைநூலென்னவேசத்தி
லசத்துவந்திடுமுறைசெப்பிப்
புலம்புவார்சிலம்பியுடலசத்ததினா
லசத்துவந்திடுமெனப்புகன்றான்
சிலம்பெனக்கலிக்குமெசுர்மறைவேத
சிரசெனும்பிரமவல்லியினன்
னலம்பெறற்கெழுதியென்றருடணிகை
நாயகன்வள்ளிநாயகனே. (௩)

(எசுர்மறைசிவனுக்கேயுரித்தென்றது.)

இசைதருகாயத்திரியிதயத்தி
லேர்ச்சிவபார்வதியுருவத்
தேசுர்மறைவயத்தினிடபவாகனியா
யேத்துகாயத்திரிதெய்வ
நசைதவிர்மூன்றுசந்தியிலிடையே
நாட்டுசந்தியிலியங்கிடுமென்
றசைவுறுதருளிச்செய்தனன்றணிகை
யம்பதிமேயவந்தணனே. (௪)

(இதுவுமது.)

காலையிலிருக்கும்பிரமனுமாலைக்
காலமந்தணர்கொளுஞ்சாம
மாலுமென்றினிதுவிளங்கவினுண்மை
வந்தகாயத்திரிமுறையே

சாலுமெந்தாதையெசுர்மறைபோற்றுஞ்
சதுரனென்றெங்கலிதிரப்
பாலொடுபழத்தினிரதமுங்கைக்கப்
பகர்ந்தனன்றணிகையம்பரனே. (௫)

(எசுர்வேதத்துக்கேற்றமுரைத்தது.)

ஐந்தெழுத்தழிவில்சிவவெனுமிரண்டா
லலருமவ்வைந்தினாலுயர்கொண்
முந்துசீருத்ரநமகமுமதனான்
முதலெழுகாண்டத்தினடுவே
யுந்துநாலாவதொப்பில்காண்டமுமற்
றுளவதனாலெசுர்வேதம்
வந்தொளிர்தருமென்றிசைத்தனன்றணிகை
வாழ்வெனவந்தகண்மணியே. (௬)

(வேதமடங்கலும்விளம்பலீதென்றது.)

எசுரெனும்வேதத்தாலுளவெல்லா
வேதமும்வயங்குமிங்கதனா
லிசையுமெம்பெருமையன்றிமாமறைக
ளேத்துறுதென்றெனக்கிசைத்தான்
அசரமுஞ்சரமுமாகியல்லவுமா
மருட்பரன்றன்னில்வேறாகாக்
கசமுகற்கிளையசேயெனுந்தணிகைக்
கந்தவேளென்னுயிர்த்துணையே. (௭)

(குகனேகாழியர்கோனெனவுரைத்தது.)

தணிகையில்வாழுந்தமனியக்குன்றே
சங்கரனார்மகிழ்ந்திடுகண்
மணியெனவந்தமதலையேயென்று
வாழ்த்துமென்முகநனிநோக்கி
யணிகொளம்பலக்கூத்தெந்தையேவுதலா
லன்றுகாழிப்பதிமேவித்
திணிகொள்சித்தாந்தமருளினமுலகி
லென்றனன்றணிகைமாதேவே. (௮)

(சத்துமசத்துந்தாமிவையென்றது.)

சத்துநாமெம்மைச்சார்தராவசத்து
மசத்தையுஞ்சார்கிலம்யாமப்
பெத்தமாமசத்தேபாசமிவ்வுண்மை
பேசுவோர்பெரியரொன்றிசைத்தான்
வத்துநாமென்றுவாய்மதம்பேசும்
வம்பர்மாட்டிணங்கிலாவெம்மைச்
சுத்தமார்க்கத்தில்விடுக்குநற்றணிகைச்
சுந்தரானந்தசண்முகனே. (௯)

(சதசத்திதுவெனச்சாற்றப்போந்தது.)

சத்தசத்திரண்டின்றன்மைசார்தலினுற்
சதசத்தாமென்றெனவேத
மெய்த்தவாகமத்தின்விதிவழாதுரைத்து
வேற்றுரைசழக்கெனமொழிந்தான்
பத்தியிற்சிறந்துமேம்படுயோகப்
பண்பினர்க்கழிவறுமின்ப
முத்தியைநல்குந்தணிகையம்பதியின்
மூளைத்தருளாறுமாமுகனே. (௧0)

(கடவுணிமித்தகாரணரென்றது.)

காரியமொன்றுதோர்ந்திடினதற்குக்
காரணமூன்றுளவவற்றுட்
சீரியநிமித்தமெனைத்ததுநீர்மை
சேருமெம்பாலெனமொழிந்தான்
நேரியமுதனற்றுணையெனும்வேறு
நீடுகாரணமுணர்வார்தங்
கூரியமதியிற்குடிகொளுந்தணிகைக்
கோவெனுங்குறமகள்பதியே. (௧௧)

(ஆகமம்வேதத்ததிகமென்றது.)

கருமநற்பிரமபாகமோரிரண்டுங்
கரிசறவோதுநான்மறையில்
வருமுதற்பாகம்பூருவமாகி
மற்றதுமாட்சிபெற்றதுபோ

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டநாதன்றுணை.

சித்தாந்தரத்நாகரம்.

பாரததாற்பரியசங்கிரகம்.

:o:

அபியுக்தர்வசநம்.

மறையெலாம்போற்றும் பதியுமைமகிழ
மாநடங்குயிற்று நம்பரனென்
றறையுமவ்வுண்மை யறிகிலாதுழலு
மாதர்தங்கூற் றிரிந்தோடக்
குறைவில்சீர்மா * பாரத முதனூல்கள்
கூறுமெய்ப்பொருள் சிவமென்றே
திறைமதிகாட்டு மப்பயாக்கியனன்
னெறியிலின்புற விளக்கினனே.

நூல்.

ஸ்ரீ மகாபாரதத்தில் பிரதி பாதிக்கப்படும் பரதத்துவப் பொருள் ஸ்ரீ சிவபெருமானே யென்பதைப் பிரகாசப்படுத்தும் பொருட்டுச் செய்யப்பட்டிருக்கும் சிவஸ்தோத்திரத்தினுடைய முதல் மூல சுலோகம் வருமாறு.

---

* பாரதம், இராமாயணம், பாகவதமுதலிய நூல்களுக்குத் தாத்பரிய சங்கிரகங்கள் தனித்தனித் தீக்ஷிதசுவாமிகளால் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றுள், பாரததாற்பரிய சங்கிரகம் என்னுமித்த நூல்முடிந்தவுடன் மற்றவை பின்னர் முறையே வெளியிடப்படும்.

சுலோகம்.

శ్రీబాదరాయణమునిస్స్వయమేవవిష్ణుః । పార్థచ్ఛలాత్తమధికృత్యకృతేప్రబంధే
తస్యాపినిత్యమహితంశశిభూషణాత్వా । మామ్రేడయన్గురవర్యయదాదితత్వం॥ ౧

மொழி பெயர்ப்பு.

விண்டுவெனும்வாதராயணமுனிவர்பற்குனனும்வியாஜமேற்கொண்
டொண்டுவனையானையதிகாரியெனவைத்தோதுநூலிலன்றோ
னெண்டருசெய்வமுமிந்துபூடணனுமாகுமினையேத்தியன்றே
பண்டைவருமாரியராயினராதிதத்தவமாய்ப்பரவுமொன்றே. (க)

இ-ள். விஷ்ணுவேதாகிய வாதராயணமுனிவர் அருச்சுனன் என்னும் * வியாஜத்தினாலே ஸ்ரீகிருஷ்ணனை அதிகாரியாய் வைத்துச்செய்த பிரபந்தத்தில் அந்தக் கிருஷ்ணருக்கு நித்திய பூஜிதராயும், சந்திரனை ஆபரணமாகத் தரித்தவராயும் விளங்குந் தேவரீரை ஆதிதத்துவமாக அடிக்கடிச் சொல்வதினாலன்றோ அவர் உலகத்துக்கெல்லாம் குருவானார். எ-று.

ஸ்ரீவாதராணர் விஷ்ணுவேயென்பதற்குப் பிரமாணம்.

కృష్ణద్వైపాయనంవ్యాసం । విద్ధినారాయణంప్రభుం
కోహ్యన్యఃపుండరీకాక్షా । న్మహాభారతకృద్భవేత్॥

இ-ள். கிருஷ்ணத்துவைபாயனனென்னும் வியாசனைப் பிரபுவாயிருக்கிற நாராயணனென்று தெரிந்துகொள். புண்டரீகாட்சனைக்காட்டிலும் அன்னியனாயிருக்கிற யார் தான் மகா பாரதத்தைச்செய்ய வல்லவனாகப்போகிறான். எ-று.

அவ் வியாசரோ வெனில், ஸ்ரீமகாபாரதமென்கிற நாமதேயமுள்ள பிரபந்தத்தை அருச்சுனனுடைய சரித்திரவர்னனாருபமாயும், அதைத்தொடர்ந்த ஸ்ரீ கிருஷ்ணருடைய சரித்திரத்தில், உட்பட்டிருக்கும் அந்தக்கிருஷணருடைய மான்மியத்தை வர்னிக்கிற சொரூபமாயும் நிர்மாணம் செய்தார்.

వాసుదేవస్యమాహాత్మ్యం । పాండవానాంచసౌమ్యతాం
దుష్టతాంధార్తరాష్ట్రాణా । ముక్తవాన్భగవానృషిః॥

இ-ள். வாசுதேவனுடைய மான்மியத்தையும், பாண்டவர்கள் நன்மையையும், துரியோதனாதிகள் துஷ்டத்தனத்தையும் பகவானாகிய வியாசர் சொன்னார். எ-று.

---

* வியாஜம் - சாக்கு.

என்னும் வசனத்தினுல், இந்தப் பிரசித்தமான பாரதத்தில் பாண்டவர்களை நாயகர்களாக ஏர்ப்படுத்தியது வியாஜமாத்திரமென்பது புலப்பட்டது. அவர்களைக் காப்பாற்றுந் தன்மையில் அதிசாக்கிரதையாயிருக்கும் ஸ்ரீகிருஷ்ணருடைய மான்மியத்தை வர்ணிக்கும்படியான தாகவே அந்தப் பாரதம் ஏர்ப்பட்டபடியால்.

அந்தக் கிருஷ்ணருடைய மகிமையே மிகுதிப்பட்டிருத்தலாலும், பாண்டவராஜ்ய லாபமானது ஸ்ரீ கிருஷ்ணர் ஆதினமாகவேயிருப்பதாலும்பெறப்பட்டவுண்மையை அப்பாண்டவர்களுடைய ராஜ்யலாபத்தையே பிரதி பாதிக்கும் பாரதத்துக்கு முதலிலே சூதர்கூறும் வியாசவணக்கத்தாற் காண்க.

నమో భగవతే తస్మై । వ్యాసాయామితతేజసే

యస్యప్రసాదాద్వక్ష్యామి । నారాయణకథామిమాం॥

இ-ள். யாதொரு வியாசருடைய அநுக்கிரகத்தினு லிந்த நாராயணருடைய கதையைச் சொல்லுகின்றேனே, அளவிறந்த தேஜசுடைய பகவானுயிருக்கும் அந்த வியாசர் பொருட்டு நமஸ்காரம். எ-று.

ஸ்ரீ மகாபாரதம் நாராயணருடைய கதையாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், இம்மகாபாரதத்தைச்செய்தவியாசர் பிரம்ஹசொரூபத்தையறிந்த சகல பெரியோர்களுக்குங் குருவானுர். அப்படிப்பட்ட பகவானுகிய வியாசர் கிருஷ்ணருடைய மான்மியத்தை வர்ணிக்கும்படியான வழியால் சிவபெருமானே பரம்பொருளென்னு முண்மையை வைசம்பாயனஜயமுனிசுமந்து முதலியதமதுசிஷ்யர்களுக்கு நன்கு விளக்கியிருத்தல் காண்க.

அந்தவியாசருக்கும், கிருஷ்ணருக்கும் நித்தியமாய்ப்பூசிக்குந்தெய்வமாகவே சிவன் பிரசங்கிக்கப்பட்டனர். அந்தக்கிருஷ்ணரால் அவ்வவதார அவசரத்திலும், அதற்கு முன்னவதார அவசரங்களிலும், பரவாசுதேவசொரூபமான மூலரூபத்திலும்சிவாராதனஞ் செய்யப்பட்டமைபிரசித்தம். இப்படிச்சேவ்யமானராய் விளங்கும் ஸ்ரீசிவபெருமான் அடிக்கடிப் படிக்கப்படுகின்றனர்.

எங்ஙனமெனின், பரியாயமாய்ப் பாரதகிரந்தத்திலே யெங்கும் ஸ்ரீகிருஷ்ணர் சிவபூஜா நிஷ்டராந்தன்மையும், அப்பரமேசுவரனுடைய அநுக்கிரகத்தால் அவர்க்குச்சமஸ்த பிரபாவங்களுமுண்டாகுந் தன்மையும் வர்ணிக்கப்பட்டிருத்தல் காண்க.

சௌஷுப்திகபர்வத்தில், அசுவத்தாமனைக்குறித்துவெளிப்பட்ட சிவ வசனம்.

సత్యశౌచార్జవత్యాగై। స్తపసానియమేనచ
క్షాంత్యాభక్త్యాచధృత్యాచ । కర్మణామనసాగిరా
అహంయథావదారాధ్యః। కృష్ణేనాక్లిష్టకర్మణా
తస్మాదిష్టతమఃకృష్ణా। దన్యోమమనవిద్యతే॥

இ-ள். சத்தியம், சௌசம், ஆர்ஜவம், தியாகம், தபசு, நியமம், க்ஷமை, பக்தி, தைரியம், கர்மம், மனசு, வாக்குஇவைகளால் கிருஷ்ணன் மிகுதியாக என்னை ஆராதித்துக் கொண்டிருப்பவனைகையால், அப்படிப்பட்ட கிருஷ்ணனைக் காட்டிலும் மேலான இஷ்டன் மற்றொருவனுமில்லை. எ-று.

இன்னும், ஆதிபர்வத்தில், சுபத்திராதேவியினுடையகலியாணபிரஸ்தாபத்தில் சமுத்திரமத்தியில் ஒரு தீபத்தில் ஸ்ரீகிருஷ்ணருடைய பூஜார்த்தமாய்ப் பிரவர்த்திக்கப்பட்ட மஹோச்சவம் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும், உபமன்யு பகவானுடைய உபதேசத்தினால் ஸ்ரீ கிருஷ்ணர் பன்னிரண்டு வருஷ பரியந்தம்செய்து முடிக்கத்தக்க பாசுபத விரதாநுஷ்டான ரூபமாகிய சிவாராதனஞ் செய்தமை அநுசாசநீக பர்வத்தில் விஸ்தாரமாய்ப் படிக்கப்பட்டிருத்தலும் பிரசித்தம்.

அல்லதூஉம், பாரதசேஷமாகிய ஹரிவம்சத்தில் அர்ச்சுனனுடைய சரித்திரத்தைவிட்டு ஸ்ரீ கிருஷ்ணருடைய சரித்திரமாகவே நிபந்தனஞ் செய்யப்பட்டதன்றியும், பாரிஜாத சம்மிதையில் கைலாசயாத்திரா சந்தர்ப்பத்திலும், இன்னுஞ் சில விடங்களிலும் பூசை, ஸ்தோத்திரம், தபசு இவைகளால் அங்கங்கே ஸ்ரீகிருஷ்ணர் சிவப்பிரீதிகரமாகவே யொழுகினரென்று விரிவாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

துரோண பர்வத்தில், துரோண சம்மாரமான பின்னர், கோபத்தினலே அசுவத்தாமரால் பிரயோகிக்கப்பட்ட ஆக்கினேயாஸ்திரம் கிருஷ்ணார்ச்சுனர்களிடத்தில் வியர்த்தமாய்ப்போய் விட்டபடியால், அந்த ஆக்கினேயாஸ்திரத்தைப்பார்த்து வெட்கமுற்றவராகி இது கெடுதியுடையது என்று பரித்தியாகம்பண்ணி விட்டுத் தெற்கே நோக்கிப்போகும் அவ்வசுவத்தாமருக்கு மார்க்கத்தில் எதிர்ப்பட்டவராகிய வியாசபகவான் அவருடைய லஜ்ஜையைப் பரிகரிக்கும் பொருட்டுக்கூறும் வசனம் வருமாறு.

దేవదేవ స్త్వచింత్యాత్మా। అజయ్యోఽక్షరవ్యయః
సర్వరూపం భవం జ్ఞాత్వా । లింగేర్చ్యయతియః ప్రభుః
తస్మిన్నభ్యధికాం ప్రీతిం । కరోతి వృషభధ్వజః॥

இ-ள். தேவர்களுக்குத் தெய்வமாயும், எண்ணக்கூடாமலிருக்கும் ஆத்மபாவமுள்ளவராயும், செயிக்கக்கூடாதவராயும், குறைவில்லாதவராயுமிருக்கிறவிஷ்ணுவானவர் சிவபெருமானைச் சர்வரூபியாய்த் தெரிந்து அந்தமஹாப்பிரபுவாகிய அவரைச் சிவலிங்கத்தினிடமாய்ப் பூஜிக்கின்றார். எந்தப் புருஷனனவன் சர்வசொருபியாகச் சிவனையறிந்து இலிங்கத்தில் பூசை செய்கிறானே அவனிடத்தில் அதிகமான பிரீதியை ஸ்ரீபரசிவமூர்த்திசெய்கின்றார். எ-று.

என்னும் அந்தவிடத்திலேதானே கிருஷ்ணார்ச்சுனனிருவரும் முன்னர் நரநாராயணர்களென்கிற மகரிஷிகளாக விருந்து கொண்டு அறுபதினயிரம்வருஷம் சிவனையாராதிக்கையில், அவர்களுய்யும் பொருட்டு ஒப்பில்லாதபலம், வீரியம், பராக்கிரமமுதலான அநேகவரங்கள் அவர்களுக்குச் சிவபெருமானல் கொடுக்கப்பட்டன வென்று கூறிய வியாசரைப்பார்த்து அசுவத்தாமர் நான் சிவபூசை செய்யவில்லையா வென்று கேட்ட அவசரத்தில் விடையாகப்போந்த வியாசவனம் வருமாறு.

జన్మకర్మ తపోయోగా । స్తయో స్తవ పుష్కలాః
తాభ్యాం లింగేర్చితశ్శంభుః । త్వదర్చాయాం శేషితః॥

இ-ள். கிருஷ்ணார்ச்சுனர்களுக் கெப்படியானல் உற்பத்தி, கர்மம், தபசு, யோகங்கள் கிடைத்திருக்கின்றனவோ, அப்படி

யே உனக்கும் பூரணமாய்க்கிடைத்திருக்கின்றன. அந்தக் கிருஷ்ணார்ச்சுனர்கள் சிவலிங்கத்தி னிடமாய்ப் பரசிவாராதனஞ் செய்கின்றார்கள். நீர் விக்கிரக வடிவத்தில் ஆராதனஞ் செய்கின்றீர். அதனால், உம்முடையபூசையைக்காட்டிலும் அவர்கள் பூசையில்சிவபெருமான்விசேஷபிரீதிசெய்யப்பட்டவராகின்றார். எ-று.

இன்னும்வேறொருவசனத்தில், மைநாகபர்வதத்தில் ஸ்ரீகிருஷ்ணர் தவஞ்செய்ததும், வெகுவரங்கள் பெற்றதுமாகிய விரண்டுஞ் சொல்லப்பட்டன. பாரிஜாதம் கொண்டுவரவேண்டுமென்னும் இச்சையினால் சிவனைப் பூசித்து ஸ்தோத்திரம் பண்ணுகின்ற கிருஷ்ணரானவர் சிவபெருமானால் அநுக்கிரகிக்கப்பட்டார் என்றும் பிரசங்கிக்கப்பட்டது.

ఇతిసంస్తూయమానస్తు । భగవాన్ గోవృషధ్వజః
ప్రసార్యదక్షిణంహస్తం । వాసుదేవమథాబ్రవీత్
మనీషితానామర్థానాం । ప్రాప్తిస్తేస్తుసురోత్తమ
పారిజాతంచహర్తాసి । మాంభూత్తేమనసోవ్యథా
పురామైనాకమాశ్రిత్య । తపస్త్వమకరోఃకిల
తదామమవచఃకృష్ణ । సంస్మృత్యధైర్యమాప్నుహి ॥

இ-ள். இந்தப்பிரகாரம் கிருஷ்ணரால் ஸ்தோத்திரம் பண்ணப்பட்ட பகவானாகிய விருஷபத்துவஜரானவர் தமது வலக்கையை நீட்டி வாசுதேவனைக்குறித்துச் சொல்லுகிறார். உன்னாலேவிரும்பப்பட்டிருக்கிற பிரயோசனங்களுடைய பிராப்தியானது உனக்குச் சித்திக்குமாக. வாராய் தேவோத்தமனே! பாரிஜாதத்தையுங் கொண்டுவருவாய். உனக்கு மனதில் விசனம் வேண்டாம். நீமைநாக பர்வதத்தில் எப்போது தவஞ்செய்தனையோ, அப்போது சொல்லிய என்னுடைய வசனத்தை நினைத்துக்கொண்டு தைரியத்தை அடைந்திருப்பாயாக. எ-று.

అవధ్యస్త్వమజయ్యశ్చ । మత్తశ్శూరతరస్తథా
భవితాసీత్యవోచంయ । త్తత్తథానతదన్యథా ॥

இ-ள். ஒருவராலும் சம்ஹரிக்கக் கூடாதவனையும், ஒருவராலும் வெல்லக்கூடாதவனையும், என்னைக்காட்டிலும் மிகுந்த

பலசாலியாயுமாகப்போகிருயென்றுசொன்னயாதொருவரமுண்டோ, அது அப்படியேபலிக்கும். வேறேவிதமாகிறதில்லை. எ-று.

இந்தப் பிரகாரம் கிருஷ்ணருடைய சொரூபத்துக்குப் பூர்வம் எடுத்த ரூபங்களினலே செய்யப்பட்ட சிவாராதனத்தில் சிவவசனங்கள் வெளிப்பட்டிருக்கின்றன. அந்தக்கிருஷ்ணருடைய மூலரூபத்தில்செய்த சிவாராதனமும், பெற்றவரலாபமுமாகிய விரண்டும் ஆரணியபர்வத்தில் தீர்த்த யாத்திராசந்தர்ப்பத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன.

తత్రగచ్ఛేత్సువర్ణాఖ్యం । త్రిషులోకేషువిశ్రుతం
యత్రవిష్ణుః ప్రసాదార్థం।రుద్రమారాధయత్పురా
వరాంశ్చసుబహూన్ లేభే । దైవతైరపిదుర్లభాన్
ఉక్తంచత్రిపురఘ్నేన । పరితుష్టేనభారత
అపిచాన్యైః ప్రియతమో ।లోకేకృష్ణభవిష్యసి
త్వన్ముఖంచజగత్సర్వం । భవిష్యతినసంశయః॥

இ-ள். எந்த விடத்தில் விஷ்ணுவானவர் சிவப்பிரசாதத்தின் பொருட்டு ஸ்ரீ ருத்ரமூர்த்தியை ஆராதனம்பண்ணினரோ, தேவர்க்களா லடையக்கூடாத வரத்தையடைந்தாரோ, அந்தவிஷ்ணுமூர்த்திசெய்த ஆராதனையால் சந்தோஷித்தவராகிய சிவபெருமானல் அவர்க்கு அநுக்கிரகஞ் செய்யப்பட்டதோ, மூன்று லோகங்களிலும் பிரசித்தமாயிருக்கிற அந்தச் சுவர்நாபம் என்னும் க்ஷேத்திரத்தை யெப்படிப்பட்ட மகிமையுடையவனும் அடைய வேண்டியது. மேலும், திரிபுராந்தகராகிய சிவபெருமான் மகிழ்ந்துகூறியதோ வெனில், ஏபாண்டுநந்தன! சொல்லுதும். வாராய் கிருஷ்ண! மூன்று லோகத்திலுமுள்ள என்னுடைய அடியார்களில் நீயே அதிக இஷ்டனகப்போகிருய். எல்லாவுலகங்களும் உன்னையே முதன்மையாய்ப் பெற்றதாகப் போகிறது. சமிசயமில்லை. என்னுடைய வரதானத்தினலே அடையப்பட்ட சாமர்த்தியத்தினல் செய்யும்படியான தேவமனுஷ்யர்களுக்கு சத்துருக்களான அசுரர், இராக்கதர் முதலியவர்களுடைய சம்ஹாரங்களினலே பூமி, ஆகாசம், சொர்க்கமுதலிய சகல பிரதேசத்திலும் தேவர், மானவர் முதலியவர்களுடையபிரீதிக்கு விஷயமாகப்போகிருய். ஆகை

யால், சகலசகத்தும் உன்னையே முதன்மையாய்ப் படைத்ததாகப் போகின்றது என்பதாம். எ-று.

இந்தப் பிரகாரம் தேவர்முதலான பேர்களுடைய சத்ரு சங்காரத்தினாலே யுண்டாகும்படியான தோஷத்துக்குப் பிராயச்சித்தமுஞ் சிவாராதன ரூபமாகவே பகவானாகிய விஷ்ணுவால் செய்யப்பட்டதென்று தீர்த்தயாத்திராகட்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

తీర్థంకురుకులశ్రేష్ఠ । త్రిషులోకేషువిశ్రుతం
ప్రమితినామ్నావిఖ్యాతం । సర్వపాపప్రణాశనం
యత్రబ్రహ్మాదయోదేవాః । ఉపాసంతేమహేశ్వరం
తత్రస్నాత్వార్చయిత్వాచ । రుద్రందేవగణైర్వృతం
జన్మప్రభృతిపాపాని । కృతానినుదతేనరః
దేవీచాత్రనరశ్రేష్ఠ । సర్వదేవైరభిష్టుతా
తత్రస్నాత్వానరశ్రేష్ఠ । హయమేధమవాప్నుయాత్
జిత్వాయజ్ఞేమహాప్రాజ్ఞ । విష్ణునాప్రభవిష్ణునా
పురాశౌచంకృతంరాజన్ । హత్వాదైవతకంటకాన్ ॥

இ-ள். வாரய்தர்மநந்தனா! இந்தத்தீர்த்தமானது மூன்றுலோகத்திலும் பிரசித்தப்பட்டதாயும், பிரமதியென்னும் பெயராற் சொல்லப்பட்டதாயும், சகலபாவங்களையும் போக்கடிக்கத்தக்கதாயுமுள்ள தென்றறிவாயாக. எந்தத்தலத்தில் பிரமன் முதலிய தேவர்கள்சிவபெருமானையுபாசித்துக்கொண் டிருக்கிறார்களோ, அங்கேயுள்ள புண்ணியதீர்த்தத்தின்மூழ்கித் தேவகணங்களாற்சூழப்பட்ட சிவனை ஆராதிக்குமானவன்சன்மமுதற்கொண்டுசெய்த பாவங்களைப் போக்கிக்கொள்ளுகிறான். தேவர்களாலே ஸ்தோத்திரம் பண்ணப்பட்ட தேவியானவள் இந்தவிடத்தில் வசித்துக் கொண்டிருக்கிறாள். அந்தத்தேவியினுடைய சந்நிதானத்திலிருக்கிறதீர்த்தத்திற் படிந்தமானவன் அசுவமேத பலத்தையடைகிறான். விஷ்ணுவானவர் சத்துருக்களை வதைத்து அந்தச்சம்ஹாரத்தா லுண்டாகிய பாவத்திற்காகச் சிவாராதனரூப மாகப் பிராயச்சித்தஞ் செய்துகொண்டார். எ - று.

இந்தவிடத்தில்சௌசசப்தத்தினாலே சிவாராதனா ரூபமான பிராயச்சித்தம் சொல்லப்பட்டது. பிரமன்முதலிய தேவர்கள்

போயினர். இவர்களைக்கண்ட பெண் விரைந்து ஓடிவந்து தழுவி மகிழ்ந்தனள். அந்தப்பெண்ணைப் பார்த்தமாத்திரத்தில் அவளுடைய சமஸ்த சுபங்களும் அவளுடைய முகவிலாசத்திற்கண்டு அவ்விருவரும் உள்ளம் பூரித்தார்கள். சிலநேரங் கழித்தபோது தங்கள் மருமகப் பிள்ளையாகிய சௌபரி முனிவர் உள்ளேயிருந்துவந்து அவர்களை அதிகமரியாதையோடு உபசரித்தனர்.

இந்த அதிசயத்தையின்னபடித்தென்றறியமாட்டாமல் அவ்விருவரும் தங்கள் பெண்ணினுடைய க்ஷேமத்தை விசாரிக்கையில் முதல்கண்ட பெண்சொன்னபடியே அவளும் சொல்லிவருந்தினள். இப்படியே ஒவ்வொரு பெண்ணினிடத்தும் போய்ப் பார்க்கையில் அந்தந்த விடங்களிலும் சௌபரி முனிவரிருந்து தங்களை யுபசரித்து வரும் அருமைகளையும், அந்தப்பெண்கள் சொல்லி வருங்குறைகளையுஞ் சிந்தித்து ஆச்சரியத்தை யடைந்து நமது குழந்தைகள் செய்ததவமே தவமென்று மகிழ்ந்து அந்தப்பெண்களிடத்தும், மருமகப்பிள்ளையிடத்தும் விடைபெற்றுக்கொண்டு அவர்கள்செய்த சந்மானங்களையும் அங்கீகரித்துத் தங்கள் இராஜ்யத்துக்குப் போய்விட்டனர்.

இந்த விருத்தாந்தத்தின் முன்னர்க் கண்ணனுடைய வியாபகமிலைப்பது அருமை! அருமை!! ஆகவிப்படிப்பல விதத்தானும் விசாரமுகத்தில் விஷ்ணுவுக்குக் கூறும்வியாபகங்கள் அசாமஞ்சஸமேயாய் முடிதலால் (நிலநீர்நெருப்புயிர்நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனுயமைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்ற, நிலகேழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே, பலவாகி நின்றவாதோ ணோக்க மாடாமோ) என்னுந் திருவாக்கின்படிச் சிவபெருமானே சர்வ வியாபகனென்பது நாட்டப்பட்டது.

இன்னும், விஷ்ணுவுக்குப் பாஞ்சராத்திரிகள் கூறும்பூரணத்தைப்பரியாலோசிக்கில், அவர்சாகார பூரணனென்பர். என்பது, பரமபதமென்கிற வீட்டில் நீளாதேவிபூதேவி சமேதராய், திருமாமணி மண்டபத்தில் சங்கசக்கிரதாரியாய், நீலமேனியராய், நித்தியசூரிகளால் சேவ்யமானராய் எழுந்தருளி யிருப்பவனெனவும், அப்படி அவரங்கெழுந்தருளி யிருக்குங்கால், அவருடைய பிரகாச மாத்திரத்தானே சர்வவியாபகத்வம் பெறப்படுமெனவும், அது சூரியனொரிடத்தி லிருக்கவும், அவன்பிரகாசத்

தால் சர்வவியாபியாதல் போல்வதொன்றெனவுங்கூறுவதேயாம். இது பூரணவிலக்கென்பதை நிரூபிப்பாம். சூரியனுேரிடத்தி லிருந்து அவன்பிரகாசத்தால் வியாபிக்கையில், எங்கும் சமநிறைவு கூறுதல் கூடாது. அவனிருக்குமிடத்திலிருந்து பூமியைநோக்குங்கால்,சிறுகச்சிறுகப் பிரகாசவுஷ்ணங்கள்குறைந்திருப்பது பிரத்தியட்சமாதலால். இன்னதன்மையேவிஷ்ணுவுக்கும்சொல்லவருமாகையால், அவர்பூரணராதல்அமையாதென்க.வியாபகப்பொருளாயுள்ளது எங்குமொருபடித்தாதலமையும். நான்குபூதங்களும்தன்னிடம் விரவி நிற்க விடங்கொடுத்திருக்கும் ஆகாசத்தைப்போல. இன்னலட்சண விருத்தமாய்க் கேவலம் கண்டப் பொருளாயுள்ள விஷ்ணுவை அகண்டமாகிய பூரணப் பொருளென்றது பிழையாம்.

சிவன் எத்தன்மைய ரென்பது.

சிவபெருமான் ஸ்ரீமஹா கைலாசத்தி லெழுந்தருளியிருப்பதால் அவர்க்கு மித்தோடம் வருமேயெனின், தத்தோஷத்தைப் பரிகரிப்பாம். (அன்றுந்திருவுருவங்காணுதே யாட்பட்டேன், மின்றுந் திருவுருவங் காண்கிலே, மென்றுந்தா, னெவ்வுருவோனும்பிரானென்பார்கட்கென்னுரைக்கே, மெவ்வுருவோநின்னுருவமேது) என்னுந்திருவாக்கால் அவருடையவுண்மை யிலக்கணம்வெளிப்பட்டது. இன்னும், (மைப்படிந்த கண்ணுளுந் தானுங்கச்சிமயானத்தான் வார்சடையா னென்னினல்லா, னொப்புடைய னல்ல னொருவனல்ல னோரூரனல்ல னோருவமனில்லி, யப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணுகக் காணினல்லா, லிப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணுதே) என்னும் பிரமாணத்தானுங் காண்க. இதனுல், சிவபெருமானுக்கு உருவம், அருவமுதலிய வெந்த விலக்கணங் கூறுதலுமமையாமை வெளிப்பட்டது. சிலசமயிகள் கேவலம் உருவமேயெனவும், சில சமயிகள் கேவலம் அருவமே யெனவுங் கூறித்தியங்குவர். அவ்விருமையும் நம்மகொள்கையன்றும். (சிவனுருவருவுமல்லன்) என்பதனுனுந்தெளிக. இன்ன வியலுடைய சிவன் ஸ்ரீமஹாகைலாசத்தில் உருவமுடையவரா யெழுந்தருளி யிருப்பது ஆன்மாக்களிடம் வைத்திருக்குங் காருண்ணியமே காரண

மென்க. அவர் தனக்கென வொரு பிரயோசனம் வேண்டாதவ ராலின், இத்தன்மைய ரெனவும், இன்னவடிவினரெனவும், சொல் லுதற்கரியவராகிய அவர்செயல் யாவும் பிறர் பொருட்டேயாம். ஈண்டுப் பிறரென்பது மலபத்தராயுள்ள ஆன்மாக்களே யாகை யால், அவர்க்கருளவிசைந்த கருணாசாலியாகும் நம்சிவன் உயிர்க ளெப்படி, அப்படி யிசைந்து நடிப்பது அமையும். உயிர்கள் மூவிதமாய், உருவமுடையவரும், உருவமில்லாதவரு மாகுந்தன் மையால், அன்னோர்க்கவரவர் போன்றருளு முறைமை வெளிப் பட்டது. பன்றிக்குட்டிகளுக்கு பால்கொடுக்க வேண்டிப் பன்றி யுருவமும், ஒருபெண்ணுக்கு மருத்துவம் பார்க்கவேண்டி அப் பெண்ணினுடையதாயுருவமும் பெருமான் பெற்றமை கொண்டு சிவனுக்குப் பன்றி யுருவமும், தாயாகிய பெண்ணுருவமும் அவ ருடைய சொரூப விலக்கணமென்று கொள்வது யாண்டிசையும்? அவை அருள் வடிவங்களாதல்போல் மூவகைப்பட்ட வுயிர்கள் பொருட்டு அவர்கொண்ட ரூபாரூபங்களும் அருள்வடிவங்களே யாம். ஆகவே, ஸ்ரீமஹாகைலாசத்தி லெழுந்தருளி யிருப்பதும் அருட்பிரகாசமூர்த்தமென்பதுவெளிப்பட்டது. எப்படி ஸ்ரீமஹா கைலாசத்தில் உருவமா யெழுந்தருளி யிருக்கின்றனரோ, அப் படியே உலகமுழுதும் அவர் அருவமாய் வியாபித் திருத்தல் காண்க. அருவமாய் வியாபித்திருப்பதும், உருவமாய் வெளிப் பட்டிருப்பதும் உலகுயிர்களியங்குதற் பொருட்டே யாகலின் அவ்விருமையும் அவர்க்கு நிசவிலக்கண மன்றென்க. (இல்லா முலைப்பாலுங் கண்ணீரு மேந்திழைபால், நல்லாயுளவாமாலீர்கிழல்போ, லல்லா, வருவாகி நின்றானையாரறிவார்தானே, யுருவாகித்தோன்றானேலூற்று) என்னுந் திருவாக்கால் தாய்க்குண்டாகிய முலைப்பாலுங் கண் ணீரும் தன்பொருட்டன்றிக் குழந்தையின் பொருட்டென்னு முண்மை வெளிப்பட்டதுபோல், அருவம், உருவமுதலிய தன் மையைக்கடந்து நின்றசிவம் உயிர்கள்பொருட்டு அவையுடைய ராக வெளிப்பட்டமைகாண்க. இதனால், அருவமாய் அவர் வியா பித்திருப்பதும் அவரருள் வடிவங்களில் ஒன்றென வெளிப்பட் டது. ஆகவே, அவரைக்கேவலம் அரூபியென்பது குற்றமாதல் காண்க. ரூபமின்மையும், அரூபமின்மையு முடையவராதலால். இவ்வுண்மையை யறியாதார் அவர் அரூபியென்றே கூறுவர். அவர்கட்கு அரூப விலக்கணமே யீதென்று தெரியாமையால்.

அவனை நோக்கி ஏன் அரூபி யென்றலடுக்கும்? ரூபியென்ற லடாது? எனின், காணப்படு முருவங்கள்யாவும் மாயையிற் காரியப்பாடு பெறுமாற்றால், அவர்க்கத்தோடம் வராமலிருக்கக் கருதி யென்பர். நல்லழகிது! உருவங்கண் மாத்திரமேயன்றி அருவங்களும், அம்மாயையிற் காரியப்பாடு பெறுதல் அவர் விசாரியாதவர்போலும். ஆகாயம், மனசு, சத்தம், காலம் என் றின்னன பலவுள வாதலறிக. அருவமாந் தன்மை அவனொரு வனேயன்றி வேறு பொருள்கள் பெறுதொழியினன்றே அவ் வருவஞ் சிறப்படையும்? அப்படிக் கில்லாமை வெளிப்பட லால், அவனைக் கேவலம் அரூபியென்றல் பிழையுடைத்தாம். (உலகினிற் பதார்த்தமெல்லா முருவமோடருவ மாகி, நிலவிடு மொன்றொன் றாகநின்றவந்நிலையேபோல, வலகிலாவறிவன்றானு மருவமே யென்னிலாய்ந்து, குலவிய பதார்த்தத் தொன்றாய்க் கூடுவன் குறித்திடாயே) என்னுந் திருவாக்கானுங் காண்க. இந்தப் பிரமாண முகத்தால் ரூப மொன்றே மலகாரியமென்று கொண்ட தோஷம் நிவிர்த்திபெ ற்றதால், அவனை அரூபியென்று கூறியமாத்திரத்தானே அவர் நின்மலராதல் செல்லாமை காண்க. இந்த நியாயங்களால் அவருக்கிதுதானுருவமென்று ஒன்றைக் கற்பித்துரைத்தல் கூடா தென்பது பெறப்பட்டது. (பந்தமும்வீடுமாயபதபதார்த்தங்களல்லா, னந்தமு மாதியல்லா னளப்பிலனாதலாலே, யெந்தைதா னின்னனென்று மின்னதாமின்னதாகி, வந்திடானென்றுஞ் சொல்லவழக்கொடு மாற்றமின் றே) எனவும். (குறித்ததொன்றாகமாட்டாக் குறைவிலனாதலானு, நெறிப் பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமையானும், வெறுப்பொடு விருப் புத்தன்பால் மேவுதலிலாமையானு, நிறுத்திடு நினைந்தமேனி நின்மலனரு ளினாலே) எனவும் போந்த அருள்வாக்கியங்களால் எமது கர்த் தா இத்தன்மைய னென்றும், இன்ன வடிவினனென்றும் இன் னவடிவில்லாதவனென்றும் சொல்லுந்தன்மை யொழிந்துதனது காருண்யத்தால் தான் நினைந்ததொரு திருமேனியைக் கொண் டருள்வனென்று பெறப்பட்டமை காண்க. (சிவஞ்சத்திநாதம் விந்து சதாசிவன்றிகழுமீச, னுவந்தருளுருத்திரன்றான் மாலயனொன்றினொ ன்றாய்ப், பவந்தருமருவநாலிங் குருவநாலுபய மொன்றாய், நவந்தரு பேத மாக நாதனே நடிப்பனென்பர்) என்னும் பிரமாணத்தால் அருவம் நான்கும், உருவம்நான்கும், அருவுருவம் ஒன்றுமாக வொன் பது வடிவங்களையுடையவன் எமது கர்த்தாவென்று பெறப்ப டுங்கால், இவ்வொன்பதும் தனக்கெனவுடையனாகாது உயிர்கள்

பொருட்டென்றே வெளிப்படலால், இவற்றை அதீதப்பட்டவனாகிய அன்னோன்றன்மை இதுவெனக் கூறப்படாததன்மை யொன்றே யென வெளிப்பட்டவாறறிக.

இன்னும், (உருமேனி தரித்துக்கொண்ட தென்றலு முருவிறந்த, வருமேனியதுவுங்கண்டோ மருவுருவானபோது, திருமேனியுபயம்பெற்றோஞ்செப்பியமூன்றுநந்தங், கருமேனிகழிக்கவந்த கருணையின் வடிவுகாணே) என்னும் வாக்கியத்தால் உருவம், அருவம், உருவருவம் என்னும்மூவிதவடிவங்களும் அருள்வடிவங்களென்றும், அவையுயிர்கள் பொருட்டுக் கொண்டகோலங்களென்றும் பெறப்பட்டமையால், இம்மூன்றுவடிவங்களு முண்டாகு நிலைக்களமான சுபாவமொன்று இவற்றிற்குவேறாய், இவைகளையுடன் கொண்டிருப்பதொன்றாய் நிற்குநிலைமை வெளிப்பட்டமைகாண்க. ஆக மூவிதவடிவங்களிலொன்றாகிய அரூபநிகழ்ச்சியின் பேறாய் விளங்கும் பூரணத்வவிசாரம் கேவலம் ரூபசாத்தியங் கூறுமவலம்பனத்திலிழுக்கடையுமென்க. நம்சைவமார்க்கத்தில் நமது அருட்பெருந்தோன்றலாகிய சிவபெருமான் அருவமாயிருப்பதால் சிலநிகழ்ச்சியும், உருவமாயிருப்பதால் சிலநிகழ்ச்சியும், அருவுருவமாயிருப்பதால் சிலநிகழ்ச்சியும் பெற்றமையுமுண்மை பெறப்படுமுண்மையால், அவற்றுளொன்றாகிய அருவத்திற் பெறப்படு நிகழ்ச்சிகளில் அவர் பூரணராயிருத்த லொன்றென்பது வெளிப்பட்டது. இதைவிட்டு உருவமாயிருப்ப தொருபொருள் அருவமாச்சுதெனவாவது, அருவமாயிருப்ப தொருபெருள் உருவமாச்சுதெனவாவது கூறுவது செல்லாமை காண்க. உருவத்தில் உருவமேயன்றி அருவமும், அருவத்தில் அருவமேயன்றி உருவமும் பிறவாதென்பது நிச்சயமாகையால். நெல்கமுகாய் நீளாதென்றபடி. இந்நியாயத்தால் கேவலம் அரூபவாதிகள் ரூபத்தைக் கோடலும், கேவலம் ரூபவாதிகள் அரூபத்தைக் கோடலும் அசப்பியமாதல் காண்க. ரூபம், அரூபம், ரூபாரூபம், ஆகிய மூன்றும் அவசரபேதங்களெனவும், இவற்றையுடையது அவற்றைக்கடந்து இன்னபடித்தென்றறியப்படாத வொருபொருளெனவும்நிச்சயிக்கப்பட்டமையால், இப்பேரிலக்கணமுடைய பரசிவசித்தாந்திகள்கூறும் பூரண விசாரத்தின் முன்னர் பாஞ்சராத்திரிகள் கூறவரும் விஷ்ணுபூரணம் எங்கேதலைகாட்டும்? பூரணம் அம்மதரீதியாய்ச் சித்

தியாமை வெளிப்படலால், அபூரணமுடைய தொருபொருள் அம்மதத்தாற் பெறப்படும் தெய்வமென்றுவெளிப்பட்டு அது பூரணமாகாத பண்பால், தெய்வத்தன்மை கெட்டுச்சேதனங்களி லொன்றுந்தன்மைசித்தித்தல்பெற்றொழியும். உண்மையில், அம் மதத்திற் பெறப்படும் பொருள் பதிப்பொருளல்லாமையால். இந்த விசாரத்தால் பரமபத வாசியாகிய விஷ்ணுவுக்குப் பூர ணம் கூறுவது பொருந்தாமை காண்க. அவர் அகண்டரல்லாது ஏகதேசியேயாகி ஓரிடம்பற்றி வசிக்குமுண்மையால். அணுவே யாந்தன்மையைப்பெற்றுக். கண்டமாகிய தேகமேற்கொண்டிய ங்கலுண்மையால். இன்னஹேயகுணங்கள் பூரணத்தைப் பூரண ஞ்செய்யாமையின், விஷ்ணுவைச் சர்வபரிபூரண ரென்றல் சால் புடைத்தன்றும்.

வேறு சிலநவீனசமயிகள் கேவலம் அரூபங்கூறுவர். அவர் கூறும் அரூபம் விரூபமேயாம். அவைவேதபாஹ்ய மார்க்கங்களா கையால். அரூபத்தையே முதலெனக்கொண்டமையாலும், ரூபத் தை யங்கீகரியாமையாலும்போந்த குற்றமினைத்தென்பது மேல் விசாரத்தால் வெளிப்படுதல்காண்க. அன்றியும், அரூபமாயிருப்ப தொருபொருளுண்டென்று கொள்வதனுல் அச்சமயிகளடையும் பயன்யாது? அவரெப்படியிருப்பாரென்று தியானிப்பது? அவ ரொருவருளரென நினைப்பதே தியானமெனின், பசியுடைய வொருவன் சோறுளப்படியிருக்குமென்பதுந் தெரியாது அதை மனத்தினினைத்தலென்றல் எவ்வளவுபயன்படும்? அரூபமாயி ருப்பதொருபொருள்யாண்டும் அரூபமேயாதலால்,அவர்உபாசக னுக்குவெளிப்படுமாறெங்ஙனம்? அவர்வெளிப்படாதவரெனின், அவரால் அடையும் பயன்யாது? அவர் வெளியாகாமலேயாவுஞ் செய்வரெனின், அவர்மறைந்து செய்வதற்கு யாதுகாரணம்? அவரொருவருளரென்பதற்குஞ் சான்றென்னை? புகையால் வன் னியையறிதல்போல் உலகத்தால் அவரிருப்பு வெளிப்படுமெனி ன், புகையை நாடிப்போயினர் வன்னியைக்காணல்போல், உல கத்தை நோக்கி அவரைத்தேடினர் அவரைக்காணுதலமையும். அவர் வியாபகராதலால் வியாத்தியாகுமுயிர் காணுதலேசெய் கிறதெனின், அவ்வியாபகம் பெத்தமுத்திகளிரண்டினு மமைத லுண்மையால், பெத்தத்தைப்போலவே அவர் சாட்சாத்கரியாத

போது பெத்தத்தினும் அம்முத்திக்குண்டாகிய ஆதிக்கம்யாது? இன்னஆபாசங்கள் பலகிடத்தலின்,அவர்கூற்றுஇழுக்கடைந்தொழிந்தமைகாண்க. இனி,ஆன்மவாதிகூறுமரூபமோவெனின், அதுவும்பிழை யுடைத்தாம். ஆன்மா பதிப்பொரு ளல்லாமையால். அதுஒன்றைப்பற்றியல்லது தனித்து அரூபமாய்நில்லாததன்மையுண்மையால். அவன் கூறுவது பிரமமன்றோ வெனின், பிரமம் கேவலம் அரூபமில்லாததும், ஆன்மாவுக்கு வேறானதுமாகலுமுண்மையால், அவன் பிரமமே ஆன்மாவென்னுமிழுக்குடைமைகொண்டு அது செல்லாமைகாண்க. எத்தனைமதத்தர் எந்தெந்தவிதங்கள் சொல்லப்புகினும் சிவபூரணத்தை விளக்கப்போந்த சரித்திர வர்னனங்கள்போல், மற்றைமார்க்கங்களுக்குவேதத்திற் பிரமாணம்வெளிப்படாமைபெருந்தாழ்வென்க.

சிவபெருமானுடைய அருள்வடிவங்கள் மூன்றும் (நங்கருமேனிகழிக்கவந்த கருணையின் வடிவுகாணே) என்றுமேற்காட்டியபடியமைந்தபெருமிதமுடையனவாகலின், அவை மூன்றுமொன்றிலொன்றேற்ற முந்தாழ்வுமுடையனவன்றாம். இதனால், அரூபம் உயர்ந்தது, ரூபம் தாழ்ந்தது என்றுகூறும் பேயர்கூற்றும்பட்டமை காண்க. இம்மூன்றுவடிவங்களும் மாயாசபளிதங்களல்லாமையால். சிவபெருமான் தமது சிற்சத்தியிற்றிருமேனிகொள்ளுந்தன்மையுண்மையால். மாயையிற் பெறப்படின் உருவத்தைப்போலவே அருவமும்ஹேயப்படுமாதலின்,அன்னவுருவவருவங்களைப்போலாது சத்தியிற்பெறப்படலால், அதிற்பெறப்படும் அருவத்தைப் போலவே உருவமுஞ்சால்புடைத் தெனவறிக. ஆகவே, உருவமொன்றே சிறப்புவகையால் நாமுபாசித்தற் குபகாரமாதல்காண்க. நம்மதிகாரத்துக்கேற்கவே அவர்க்கு உருவங்கூறப்பட்டவுண்மையால். பொன்னேபூஷணமானகாலத்தும்,நாம் பிரயோசனமாகப்பெற்று அநுபவிப்பது பூஷணமே யன்றிப் பொன்னல்லாததுபோல், நமக்கனுபவவேத்யமாயிருப்பது உருவமேயன்றி அது வெளிப்படுதற்கான மூலமன்றாம். பொன்னை மொத்தையாய் ஒருவன் வைத்திருந்ததனான்மாத்திரமே அதன் பிரயோசனம் அவனுக்குச் சித்தித்தல் யாண்டிசையும்? அது பூஷணங்களாய் வெளிப்படாதொழிந்தால். இத்திட்டாந்தத்தைப் பரியாலோசிக்கிலுண்மைவெளிப்படு மென்க. பொன்னேபூஷண

மானகாலத்துப்பொன்னுக்கும் பூஷணத்துக்கும் ஏற்றந்தாழ்வின்மை வெளிப்படலால், சிவபெருமானுடைய சொரூபநிலைக்கும், அவருடைய அருள்வடிவங்களுக்குந் தாரதம்யங்கிடையாதென வறிக.

இதுகாறுங் கூறியநியாயத்தால் ஸ்ரீமஹா கைலாசத்திலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீபரசிவ மூர்த்திக்கு அவர் சாகாரமாதல் கொண்டு எப்படிப்பூரணஞ் சித்திக்குமென்னு மாசங்கைநிவிர்த்தி பெற்றதால், உமாசஹாயத்வாதி லட்சணங்களையுடைய அன்ன கைலாசமூர்த்தியே பூரணரென்பது நாட்டப்பட்டது. மேல்விவகாரத்திற்போந்த எல்லாவவசரங்களும் சமநிலைபெற்று விளங்குந் தன்மையுண்மையால். ஆகவே, சைவமார்க்கத்தாற் பெறப்படும் பூரணமே பூரணமெனவும், அப்பூரணப்பொருள் சிவபெருமானொருவரேயெனவும் வெளிப்பட்டமை காண்க.

பஸ்மாசுர விஜயம்.

சிவன் பூரணராகையில், அவரில்லாதவிடமொன்று மில்லையாக, அவரையன்றிப் பரமாணுவு மசையாதாக, அவர் பஸ்மாசுரன் என்னும் அசுரனுக்குப்பயந்து ஏன் ஓடியொளித்தனர் என்று பாஞ்சராத்திரிகள் வினவுவர். இந்தக்கதையோ வெனின், பஸ்மாசுரனென்பவ னொருவன் சிவனைநோக்கித் தவம்புரிந்து, அவர் வெளிப்பட்ட காலையில், யாருடையதலையில் தன் கை வைத்தபோதிலும் அவர்கள் தலை சிதறும்படியான வரத்தை வேண்டியதாகவும், அப்படியே கொடுக்கப்பெற்று உடனே வரத்தைக் கொடுத்தவர் தலையிலே தானே அவன் கைவைத்துப் பரிக்ஷிக்கத் தொடங்குகையில், அவர் பயந்து ஓடிப்போய்விட்டதாகவும், அப்போது விஷ்ணுமூர்த்தி அங்குவந்து பெண்வடிவந்தாங்கி அவனைமயக்கி நீ ஸ்நானம்பண்ணிவந்தால் உன்னைப் புணரவிசைவேனென்றுகூறி, அந்த விடத்தில் எங்குஞ்சலமில்லாமற் செய்ததாகவும், அதற்கிசைந்த வந்த வசுரன் சேறு நீருமாய்க்கிடந்த சிறு பள்ளத்திலிரங்கி அந்தச் சேற்றைத் தன் கையால் வாரித் தன் றலைமேல் வைத்த மாத்திரத்தில் அந்தவரம் அவனுக்கே பலித்து உடனே யிறந்தானெனவும் வழங்கிவருகிறது. அந்தக் காலத்தில் விஷ்ணுவால் அவன்சாகாவிடில் சிவன்றலையில் அவன் கை வைப்பானாகையால் சிவன்சாவாரென்பது அவர் துணிபாம்.

அவைகளைப்போல் பிற வுயிர்களைக் கொல்லுதலும், மாத்ருகமனம் பண்ணுதலும், இச்சைபோனவழியே தன்னிடம் பிறப்பாயினும், உடன் பிறப்பாயினும் வேற்றுமை பாராது சரித்தலும், பிறர்பொருளை வெளவலுமாகிய தோஷங்களில்லாமையே யெம்பகுப்பறிவின் பிரயோசனமெனின், அன்னகாரியங்கள் செயற்பாலனவன்றாக என் கொள்ளவேண்டும்? அவைகள் தீமையாவதெப்படி? அத்தீமையாலுண்டாகும் நஷ்டம் யாது? இராஜதண்டனைக்கஞ்சவேண்டியதொன்றேயெனின், இராஜன்தண்டியாவிட்டால் அன்னவை செய்தல் கூடுமென்பதாமன்றோ? ஆஸ்திகராஜாங்கமல்லாது நாஸ்திக ராஜாங்கமா யிருந்தால் இவ்விதிவிலக்குகளுண்டாகாவன்றோ? இதனால், நாஸ்திகனுடைய சிந்தனைமுழுதும் இராஜாங்கம் நாஸ்திகமானதில்லையே! என்ன வுபாயத்தால் இராஜாங்கத்தை நாஸ்திகமாக்கிவிடலாம்! என்றிரவும் பகலும் எண்ணியலமந்திருக்கு மென்பது தானே போதரும். பிறன் மனைவி யொருத்தி மனோரம்யமான ரூபவதியா யெதிரே வரக்கண்டகாலத்து, அவளைக் கைப்பற்றலாமென்றெழுந்த தன்னுடைய அடங்காவாசையைத் தடுப்பது அரசநீதியே யாகையால் அது தனக்கொரு பெரிய தலைநோயாய் முடிகிறதன்றோ? அந்த விதி விலக்குகளுக்குட்பட்டுப் பிரத்யட்ச சுகத்தை யிழப்பதாகவும் எண்ணவிடமுண்டாகிற தன்றோ? இந்த இராஜாங்க நிர்ப்பந்தத்தைப் பெறாத கழுதை, நாய் முதலியவைகள் யதேச்சையாய்ச் சஞ்சரிப்பதால், அவைகளே இம்மையின்பமுற்றும் அனுபவிக்கவுரியன வாகவுங் கொள்ளவிடமுண்டாகிற தன்றோ? இந்த நியாயத்தால் மானிடஜன்மம் கழுதையிலுங் கீழிட்டஜன்மமாகக் கொள்ளவருமன்றோ? வீணே பகுப்பறிவு என்று ஒருசநிதனக்குண்டாகி, எதேச்சையாய்ச் சஞ்சரித்து உலக வின்பமுற்றும் அநுபவிக்கப் போதாமையால். இனிப் பகுப்பறிவென்பது இன்பத்தைக் கெடுக்குமோர் தோஷ பதார்த்தம் என்றுமன்றோ நாட்டவேண்டிவரும்? நல்லழகிது!

இன்னும், அரசாங்கம் நாஸ்திகமாகுமானால் தெய்வத்துக்கு வந்த சம்பவம் அரசனுக்கும் வருமல்லவா? தெய்வம் வேண்டாதபடியே அரசனும் வேண்டாதவனே யாவன். தெய்வம் உண்டென்று கொள்வதனாலன்றோ அதற்குப் பயந்து பாவபுண்

ணியங்களையேற்று அரசன் குடிகளைவதைக்கின்றான்? அப்படியே அரசனிருப்பதாகக் கொள்வதனாலன்றோ அவன் விதித் தவைகளை மீறமாட்டாமல் நம்மெதேச்சை தலையெடுக்க விடமில்லை? இந்தச் சநியுந் தொலைந்தாற்றான் நம்ம எண்ணம் பலிக்கும் என்று சிந்திக்கவருந் தவமேதவம்!! இந்த மதத்தின் சொரூபவர்ணனைசால வழகுடைத்தென்பதை யின்னும் பரியாலோசிப்பாம். அரசாங்கத்தார் விதித்தவைகளைக்கடந்தா லுதை யுண்டாமென்று வெளிப்பட்ட நியாயத்தால், நம்மரசாங்கத்தார் தெய்வநிந்தை செய்வாரைத்தண்டித்தலுமோர் விதியெனக்கொள்வது அவசியமென்று புலப்படுகிறது. நாத்திகப் பதுமைகளை யாட்டுஞ்சூத்திரம்அரசர்கள்கையிலிருப்பது உண்மை!உண்மை!!

பொய்யாமை, கள்ளாமை, களவாமைமுதலிய பொதுத்தருமங்களைவிதித்த நூல்கள் ஆத்திக மார்க்கங்களை யவலம்பித்து நிற்பனவாம். பொய் முதலியன கடவுளருளைப் பெறுதற்கு விலக்கென்னுந் துணிபிற்பட்ட நம்ம ஆத்திகர் அக்கடவுளையேயில் பொருளாகப் பழிக்கு மதிபாதகரை யென்னென் றழைப்பது? பொய்முதலிய தீமைகளில் தெய்வநிந்தை தலையாகையால், தீமையிற் றலைப்பட்டார் நாத்திகரென்று வெளிப்பட்டது. ஆத்திகசமயங்களுள் விலக்கியதீமைகளில் தெய்வநிந்தையு மொன்றாதல் பற்றித் தெய்வ முண்டென்பார்க்கு விலக்காகிய கொலைகளவாதிகள் தெய்வமில்லையென்று திரியும் நாத்திகர் கொண்டுவாழும் நல்லொழுக்கங்களாகநிச்சயிக்கப்பட்டன. நாம் விலக்கிய தீமைகளி லொன்றாகிய தெய்வநிந்தையிற் றலைப்பட்டார் அந்நிந்தை நியாயமுகத்தாற் சாதிக்கப்படுமென்று எழுகின்றனர். இனியிவர்க்குச் சகோதரர்களாகிய கொலைஞர், புலைஞர், கள்வர் முதலியவர்களும்தத்தஞ்செய்கைகள் நியாயமுகத்தாற் சாதிக்கப்படுமென வெனெழமாட்டார்? இவர்கட்கெல்லாம்சமாதானஞ்சொல்லித்திருப்திசெய்வதென்றால் யார்திறம்? இவர்கட்குச் சமாதானஞ்சொல்பவன் அரசனேயாகையால், இவர்களில் மூத்தவனாகிய நாத்திகசிரோமணிக்கும் அவ்வரசனே நியாயஞ் சொல்லத் தெரிந்தவன். மேல்விசாரத்தால் தீமைகளெல்லாம் நாத்திகர் நிதிகளாக வெளிப்பட்ட தறியாது, அந்நாத்திகசிரோமணிகள் தாங்களும் தருமத்திற்கட்டுண்டவனென்பதுதோன்றப்பொய் கூறலாகாதென

வும், பிறர்பொருளைக் கவரலாகா தெனவும், பிறவுயிரை வருத்த லாகாதெனவும் பலசாலவித்தை காட்டுகின்றனர். கடவுளுக்கே நாமம் போட அவரைத்தேடுபவர்கள் பொய்யாமை முதலியன கொண்டொழுகுவாரென்பது அசங்கதம்! அசங்கதம்!! அவர்கள் கொள்கைகொல்லாமை முதலியவற்றை மறுக்கு முண்மையால்.

ஏழை யொருவனும், தனவானொருவனும் ஓரிடத்தில் சந்தித்தபோது, அது யாருமில்லாத விடமாகவும், தனவான் தேக வலிதப்பினவனாகவு மிருக்கக்கண்ட ஏழை தனவானைக் கொன்று விட்டால் அவன்மேல் தரித்துள்ள சொர்நாபரணங் களும், அவன்கையில் வைத்திருக்கும் நிதியும் தானபகரித்துக் கொள்ளலாமென்று நினைவெழுமானல் அத்தீயவெண்ணத்தை அந்தச்சமயத்தில் எது தடுக்கும்? ஆருமில்லாத விடமாகையால் அரசன் பயம்விட்டது. தனவான் தேகவலி குன்றினவனுதலால் அவனையஞ்சுவதும் ஒழிந்தது. இனியஞ்சுவது ஆருக்கு? அவ னைக்கொல்லுகையில் அவன் வருந்துவனேயென்னு மிரக்கமொ ன்றேதடுக்குமெனின், அவ்விரக்கம் வகிப்பதால் தானடையும் பயன்யாது? அந்தச்சமயம் இரக்கமேற்கொண்டு வாளா விரு ப்பின், தனவான் கைப்பொருள் தன்கைப்பொருளாவதெப்படி? அப்பெரு நஷ்டத்தால் தனதிம்மையின்பம் கெடுமன்றோ? தான் கெடமருந்துதின்பாருண்டா? நெல்லுக்குப்பக்கத்தின் முளைக்கும் புல்லை ஐயோ! இதுவும் வளர்வதாச்சுதேயென்று யார் இரக் கம் பாராட்டிப் பிடுங்காதவர்கள்? சிறுமீனைப்பெருமீன் விழு ங்குவதனு லுண்டாகிற தோஷம்யாது? புலியைச் சிங்கங்கொல் லுவதனுலுண்டாகிற நஷ்டம் யாது? தனதுபுத்திரி, சகோதரி முதலியவர்கள் அதிகரூபவதிகளாகவும், தன்னையன்றி வேறு அவர்கட்குத் தாரகமில்லாதவர்களாகவும், தன்விசாரணையிலிரு ப்பவர்களாகவும் பெற்றவொருவிடன் அவர்களைத்தானிச்சித்தால் அவனெண்ணத்தை அப்போது அவனுக்கு மாற்றுபவர் யாவர்? எந்தநீதிவந்து அவனைத்தடுக்கும்? அவன் ஆருக்கு அஞ்சுவது? பிரத்தியட்சசுகத்தை அவன் ஏன் இழப்பான்? தனதெண்ணங் கெடாவண்ணமுயன்று முடித்துக்கொள்வதே தான் பிறந்ததனு லுண்டாகிய பேறெனக்கொள்ளவருதலால் அவனஞ்சவேண்டிய தில்லை! இல்லை!! இப்படியே பிறன்மனைவியிடமுங் கொண்டு

விசாரித்தறிக. இன்னனபலவுளவாதலால், இவற்றையோசியாது தாங்களும் முதியோரென்பதுதோன்றப்பொய்யாமை முதலியனகொண்டொழுகுவாராகச் சாலங்காட்டுவது முழுமோசமென்க. இன்னவாறே பொய்முதலியனவுந் திட்டாந்தமுகத்து விசாரித்தால்வெளிப்படுமாகையால், எல்லாத்தீமைகளும் இந் நாத்திகத்தலைவர்க்கேசொந்த ஆசாரமென்பது நாட்டப்பட்டது. இதனால், கள்வரும், கொலைஞரும், பொய்யரும், குடியருமாகிய அதிகாரிகள் யாவருமே நாத்திகப்பெருஞ்செல்வரென்பதுசொல்லாமேயமையும். ஆகவே, பொய்யாமைமுதலியன ஆத்திகாசாரமாதல் சுபாவசித்தமென்க. அன்னவை கடவுள் விதித்த ஆணையாகையால். இப்படியறிவதொழிந்து, அவைநாத்திகருங்கொள்ளற்பாலனவென்று வீண்பிரமங்கூறல் அசப்பியமென்க. அப்படிக்கொண்டால் தங்க்ள் மதங்கெடுமாகையால்.

பூதங்கள் நான்கின்விகாரத்தைத்தவிரப் பிரபஞ்சமில்லையென்று துணிகின்றவர்கள் எந்தக்காரியஞ்செய்வதும் பூதவிகாரமேயாய் முடிதலால், தாய்முதலியவர்களைச் சேர்வதும், பிறரைக்கொல்லுவதும், பிறர் பொருளைப்பறிப்பதுமாகியயாவும் பூதவிகாரமென்றன்றி வேறுசொல்லாராகையால் பூதங்களொன்றோடொன்று தாக்கியியங்குவதனால் என்ன தோஷ மிருப்பதாகக் கொள்வது? எல்லாம் பூதங்களும், பூதகாரியங்களும், பூதவிகாரங்களுமாகவே கொண்டவனாகையால். இப்படிவிவகரிக்கும் பூதசித்தாந்தியாகிய நாத்திகனோடு நாம் தலையடித்துக்கொள்வது கஷ்டம்! கஷ்டம்!! இவன் பூதமேயெல்லாமாச்சுது என்று புலம்புவதுபோல், இவன் தமையனொருத்தன் பிரமமேயெல்லாமாச்சுதுஎன்று மாரடித்துக் கொள்ளுகிறவனுண்டாகையால் அவன் விருத்தாந்தத்தை யிடம்வந்துழி விரிப்பாம்.

இதுகாறும் விவகரித்துவந்த நியாயங்களால் நாத்திகரைத் திருத்தவேண்டு மென்பது எம்மகருத் தன்றும். அவர்திருந்துவரேல், அப்படித் திருந்தக்கூடா தென்பதும் எம்மமுடிபன்றும். ஆகவே, அன்னோராபாச நிலையை நம்மவரறிந்து அவர் கூறுமாயாவசனங்களாற் பிரமியாத வண்ணம் செய்வது பரம தருமமென்று கொண்டமையால் எமக்கிது செய்கை அவசியமாயிற்றென்க.

இங்நாத்திகக்கோள், பிரகிருதத்தில் ஆங்கிலேய நாட்டில் கொஞ்சம்தலை யெடுத்திருப்ப தாகத்தெரிய வருகிறது. அதனல் நமக்கொரு பாதகமின்றெனினும் நம்மதேயத்துப் பாலிசர்கள்தத்தஞ்சமயநிலையினைத்தென்றறியாத தன்மையாலும், நஞ்சமய வுண்மைகளை யறிவதற்குப்போந்ததமிழ், கீர்வாணமுதலிய பாடைகளையினிது கல்லாமையாலும், அங்ஙனங்கற்ற மேலோர்களோடு கலவாமையாலும், வயிற்று வித்தையாக வூணபாடையொன்றையே கற்றுவருவதனலும், அங்ஙனங் கற்கப்புகுங்கால் அந்தப்பாடையி லன்றித் தமதுசொந்த பாடைகளிற் பரிஞானமில்லாத கொடுமையால் அவற்றின்ரூரதம் யங்ளைக்காணுந் தன்மையொழிதலாலும், அவ்வூணபடையைக் கற்றுவருங்கால் அப்பாடையைப் பயிற்றுவிக்கு மாசிரியரொனப் போந்தவூணர் கூட்டுறவின்மிகுதியால் அவர்வாசனை தமக்கேறப் பெறுதலாலும், அப்படியேறி வருங்கால் அவர் தயையில் வைத்த நாட்டமேலீட்டால் அவர்குறிப்பின் வழியொழுகுதல் ஆவசியமெனப் புலப்படலாலும், இன்னு மிவ்வாறு சிந்திக்கத்தக்க வேறு பலவேதுவாலும் நம்ம தேசாசாரங்களும், சாதி, சமயாசாரங்களும் தாழ்வுடையன வாகமதித்து (நிலத்தியல் பானீர்திரிந்தற்றாகு மாந்தர்க் கினத்தியல் பாதாகுமறிவு) என்னும் பிரமாணப் படிக்கெடுகின்றவனுபவம் பிரத்தியட்சப் பட்டிருத்தலால், இதைக் காணும் நம் முண்மை யிந்துக்கள் எவ்வளவு அநுதாபத்தை யடைந்திருக்கக் கூடுமென்பதை விவேகிகள் சிந்திப்பாராக.

மேல் திருக்குறளின்படி நம்மவரோடு ஊணர் கலந்து வாழ்கையில், அவர்க்கு நம்மாசாரங்களிலிச்சை பிறவாததென்னையெனின், அவர் தயையை நம்மவர் விரும்பலன்றி நந்தயையை அவர் விரும்பி ஆசரியாமை யுண்மையால், அவரிச்சைக்கிடம் பெறுதொழிந்தது. அன்றியும், அசுத்தம், சுத்தம் என்னுமிரண்டில் அசுத்தம் முன்னமே முடிந்திருப்பதொன்றும், சுத்தம் இனி அடைய முயல்வ தொன்று மாதலுண்மையால் அவர்க்குப்புண்ணியம் வழிவிட்டாலன்றித் தமது ஆசாரத்தைக்கடந்து நம்மாசாரத்தை யெங்ஙனம் விரும்பக் கூடும்? மேலிருப்பவன் கீழேயிழிதல் சுலபமும், கீழிருப்பவன் மேலேயேறுதல் கஷ்டமுமாதல் காண்க.

நம்மதேசத்திற் செல்வராயுள்ளவர்கள் விபூதி, அல்லது திருமண்முதலியவற்றைத் தண்டத்திற் கிட்டாலு மிட்டார்கள். அல்லது நான்சென்சு என்றுவிட்டாலும் விட்டார்கள். அதற்கப்புறம்தெய்வம்என்றால்அதைஎழுத்துக்கூட்டவேதெரியாதவராகையால், அத்தெய்வவிலக்கண மெங்ஙனமறிந்திடவல்லார்? ஆகவே, நம்மபிரபுக்கள், தெய்வம் இக்கருங்கல்லே போலுமெனத்தெளிந்து இகழ்வதேயன்றிவேறு அவர்யாது செயற்பாலார்? இதற்குக் காரணம் தத்தமது சமயவொழுக்கங்களை யுணர்த்தும் நூல்களிற் பழசப்பெறுத பாவமேயன்றி வேறில்லை. அன்னோர்க்குப் புத்திரரத்னங்களாய்ப் பிறக்குந் தவமுடையார் பேறு எவ்வளவிலிருப்பனவாகாமெடுத்துரைக்க விசையும்? அவர்மான்மியமுரைக்கநந்தரமன்றாம். இப்படி நம்மவர்களே கெடுகின்றாரன்றி மற்றை மதத்தவர் தங்நிலையினின்றும் மாறுவது காணேம்! காணேம்!! ஊணர் மகம்மதியர் முதலியவர்களில் அவரவர் சொந்ததருமங்களிற் பிறழ்ந்து நடப்பவர் ஏகதேசத்தினும் ஏகதேசம். நம்மவர்களில் நம்மசொந்த தருமங்களைத் தழுவிநடப்பவர் ஏகதேசத்தினும் ஏகதேசம். பிறமதத்தவர் தங்கள் நிலையின்மாறாமைக்கும், நம்மவர் தங்கள் நிலையின்மாறுகைக்குங் காரணத்தை நோக்குக்கால் பிறருடைய ஆசாரங்கள் யுத்தமும், நம்மாசரங்கள் அயுக்தமுமாயிருத்தலென்பார் போலும். இவற்றைக்காட்டிலும், மிருகங்களினாசாரம் அதிகயுக்தமாய்க்காணப்படலால், இன்னுங்கொஞ்சகாலத்தில் அப்படியும் அவலம்பிக்கவரும்போலும்.

இப்படிப் பாலிசர்களும், பிரபுக்களுந் தடுமாற்றத்தையடைந்து கெடுவதெல்லாம் இயல்பினமைந்திருக்கும் நல்லவாசனையை யொழித்துக் கொண்டமையேயன்றி வேறில்லை. ஆகையால், மேல்நியாயங்களை யினிதுபரியாலோசித்து யுக்தப்படி யொழுகவேண்டுமென்பது தெளிக. எனவே, வயிற்றுவித்தையோடு ஒழுக்கவித்தையுங் கற்கவேண்டுமென்பது பெற்றாம். இப்படிப்பட்ட சிறுவர்களும், பிரபுக்களுமே யிதற்குமுன்னும் நந்தேசத்திலிருந்ததுண்டாயின், ஆகாயத்தையளாவிய நிலைகளையுடைய கோபுரங்களால் விளங்கும் நம்மாலயங்களும், அவற்றிற்கான ஏர்ப்பாடுகளுமுண்டாயிருக்குமா? தெய்வத்தின் பேர் சொன்னால் ஓர்காசும் கையினின்றும் பெயராத ஔதார்யப்

பிரபுக்கள்காலமிதுவாதலால். இக்காலத்துப்பிரபுக்களும், சிறு வருமென்னை முற்காலத்தவரைக்காட்டிலும் விவேகிகளா? முன்னில்லாத விவேகமா இப்போது நம்மதேசத்தில்வந்து குடிபுகுந்தது? அவிவேகமேவந்து குடிபுகுந்தமையால் விவேகம் ஒளிக்கவிடந்தேடிற்று. நம்மபூர்வீகர்கள் புத்திவிசாலத்தைக் காட்டுதற்கு அவர்களால் கட்டப்பட்ட ஆலயாதிகளே போதுமான நிதரிசனமாம். அவ்வாலயங்களிப்போது நம்மதேசத்திலில்லாவிட்டால், நம்ம ஆசாரங்கள் செத்தவிடம் புன்முளைத்திருப்பதில் என்னதடை? ஊணபாடையைக்கற்றுச் செல்வத்தை யார்ச்சித்த பிரபுக்களில் தங்கள் சமயாசாரங்களில் அப்பொருள்களை வினியோகித்தவர் இன்னார் என்றுசொல்லுவதற்கு யாவருளர்? ஊணர்மகம் மதீயருள்எவ்வளவு செல்வமுடையவராயிருப்பினும், தங்கள் சமய நிலைகளில் அபிமானம்விடாமல் அன்பு பாராட்டித் தங்கள் பொருள்களைத்தத்தஞ் சமசாசாரவிசேஷங்களில்வினியோகப் படுத்தாதவர் வெகு சிலர். அவர்கள் தங்கள் பாஷைகளையும், சமய நூல்களையும் நன்குபயில்வதாலும், அன்ன பயிற்சி யுடையார் மாட்டு விடாப்பழக்கம் பற்றி வருதலாலும் அவர்க்குத் தங்கள் சாதிசமயாசாரங்களில் ஊக்கம்மாறுமை வெளிப்பட்டது.

நாத்திகவிசாரத்தில், ஊணர் ஆசாரங்களை யவலம்பித்து விவகரித்த தென்னையெனின், அவராசாரங்கள் ஆத்திகம்போல் வதொன்றுகக் காணப்படினும், அவையுண்மை விசாரத்தில் நாத்திகமேயாய் முடிதலினென்க. கேவலம் நாத்திகர்கொண்டு வாழும் ஆசாரங்களும், அவர்களாசாரமும் பெரும்பாலு மொத்திருத்தல் காண்க. சிறுபான்மையே நாத்திகர்க்கு வேறுபட்டவுண்மையால், அவரும் நாத்திகராகவே நம்ம சித்தாந்தத்தை நோக்க எண்ணப்படுவர். அவர்கள் கடவுளை மாத்திரம் அநாதி நித்தமாக வொப்புக் கொண்டு ஆன்மாவையும், பாசத்தையும் இடையில் தோன்றிய ஆதியாக வொப்புக்கொண்டமையால், ஆதியுடைய பொருள்கள் அந்தத்தைப்பெறுதல் திண்ணமாதல் கொண்டு, பாசபசுக்களுக்கு அநித்தங் கூறுந்தன்மை வெளிப்பட்டது. அவரப்படியுங் கொள்ளாது நரக சொர்க்கங்களில் பசுக்கள் நித்தமாய்க் கிடப்பவொன்றுங் கூறுகையால், நித்திய நரக

சொர்க்கங்களை யநுபவிக்க நித்தியமா யிருக்கு முயிர்களை ஆதி யென்று கூறுதலடாது. அன்றியும், நித்தியமான நரகத்தை ஆன்மா நித்தியமா யிருந்தனுபவிக்க வருங்கால், கடவுளொரு வருண்டென்பதற்கு இடமேயில்லை. கடவுளையொருவ னுண் டென்று கொள்வதெல்லாம் சுகத்தின்பொருட்டே யாதலுண் மையாகச், சதாநிரயத்தி லழுத்துமொரு பொருளுண் டெனில், அதைக்கடவுளென்று கூறுவதைக் காட்டிலும் வேறொருகசுமல மென்றுகொள்வது அதிககுணமாம். இன்னஆபாசஞான விவே சனத்தால், இந்தமார்க்கம் கடைசியில் நாத்திகமேயாய் முடி தல்காண்க. பாசபசுக்களை இடையில் வந்தன வாகக்கொள்கை யில், இடையில்வந்தன முன்னில்லாமையாலும், பின்னழிதலா லும் முன்னும் பின்னுமில்லாத நாத்திகப் பொருள்களே யாயின. இல்லாதபாச பசுக்களை யுண்டாக்கினமையாலும், உண்டாக்கின பிறகு நித்தியநரகத்தில் விடுத்தலாலும், பயனற்றசெயலும், கொ டுஞ்செயலுமுடைய வொருமூடனேடுவமிக்குந்தன்மை வெளிப் படலால்அன்னபொருந்தாச் செயலுடைய தோர்பொருள் கட வுளாதல் சொல்லாமையின், அவர்கூறுங் கடவுளும் நாத்திகப் பொருளாய் முடிந்தது. ஆகவே, சொன் மாத்திரத்தால் கடவு ளுண்டென்பதும், பாசமுண்டென்பதும், பசுவுண்டென்பதுமே யன்றி, உண்மையில் அவற்றையில்பொருள்களாகக் கொண்ட வோர் துணிபினதாகவே அவர்மதம் வெளிப் பட்டமைகா ண்க. இன்ன ஆபாசங்கள் பலவுளவாகலின், முற்றுணர்ச்சியில் இதுநாத்திகமாவதில் எவ்வளவுந் தடையின்றாம். இது உண்மை யில் நாத்திகமும், விவகாரத்தில் ஆத்திகமுமாய்க் கொள்ளவருந் தன்மையால், நம்மதேசத்திலுள்ள மாயாவாதம் போல்வதொன் றாகவுங் கொள்ளபபடும். இவர்கள் ஒருவர்க்கொருவர் அண்டை அசல் வீட்டுக்காரர்களாகையால், இன்னோர் செயல்யாவும் அச ப்பியமே யாதல்காண்க.

ஊண பாடையைக் கற்றுவரு நம்மவர் அவ்வூண சாத்திரங் களில்அபிருசிமேலிட்டுஅவர்நூல்களையும்,அவ்வூணபண்டிதர்களை யும் பழக்கங்கொண்டு வருங்கால், அச்சம்பந்தமேலீட்டால் அந்த ஞானங் கைவருமென்பது திண்ணம். மேல்யாம் விளக்கிக்காட்டி யவிசாரமுகத்தால், அதுகேவலம் நாத்திகத்திற் செலுத்துமென்

பரமசிவனை யுபாசித்துக்கொண்டிருக்கிறார்களென்று நேராய்ப் படிக்கப்பட்டிருப்பதன்றியும் தீர்த்தயாத்திரைவிதியில் நாராயணன்முதலியதேவர்க்களோடுகூடியபிரமனுக்குச்சிவப்பிரீதிகரமான ஆராதனஞ் செய்யுந்தன்மை யுண்மையால், நைமித்திக நியாயமாகச் சதாசிவாராதனஞ் செய்யுந்தன்மை பகவானுயிருக்கிற நாராயணனுக்குச்சொல்லப்பட்டது.

తతోగచ్ఛేత రాజేంద్ర । తీర్థం శతసహస్రకం
సహస్రకం చ తత్రైవ । ద్వే తీర్థే లోకవిశ్రుతే
ఉభయోహి నరస్స్నాత్వా । గోసహస్రఫలం లభేత్
తత్ర బ్రహ్మోప్యయం నిత్యం । దేవైస్సహ మహీపతే
అన్వాస్యతే కురుశ్రేష్ఠ । నారాయణపురోగమైః
సాన్నిధ్యే తత్ర రాజేంద్ర । రుద్రపత్న్యాః కురూద్వహ
అర్చయిత్వాతు తాం దేవీం । న దుర్గతిమవాప్నుయాత్ ॥

இ-ள். அவ்விடத்தில் சதசஹஸ்ரகம், சஹஸ்ரகம் என்னும் இரண்டு தீர்த்தங்கள் உலகப்பிரசித்தியாயிருக்கின்றன. அவ்விரண்டு தீர்த்தங்களிலும் மானவன்படிந்தால் ஆயிர கோதான பலத்தை யடைவான். அந்தவிடத்தில் பிரம்ஹாவானவர் நித்தியமாய்த் தேவர்க்களோடே கூடினவராய், நாராயணன்முதலிய தேவகணங்களினாலே அநுசரிக்கப்பட்டவராக ஸ்ரீருத்ரபத்தினியாகிய தேவி சந்நிதானத்தில் பக்தி செய்துகொண்டு வாசமாயிருக்கிறார். வாரும் குருவம்சத்தூரசனே! அப்படிப்பட்ட சிவபத்தினியாகிய தேவியைப் பூசித்தவன் துர்க்கதியை அடைகிறதேயில்லை. எ-று.

இந்தக்ஷேத்திரத்தில் தேவிசமேதரானபரமேசுவரனுடைய அர்ச்சனையும், அதன்பலமுமாகிய இரண்டையுங் காட்டும் வசனம் பெறப்படலால், கூட்டமாய்க் கூடிக்கொண்டிருக்கிற நாராயணன்முதலிய தேவர்க்களால் அநுசரிக்கப்பட்டவராகிய பிரம்ஹதேவருடைய ஸ்தானம் தேவினுடைய ஆராதனர்த்தமென்று அபிப்பிராயம் வெளிப்பட்டது.

యస్య బ్రహ్మా చ విష్ణుశ్చ । త్వం చ శక్ర సహామరైః
అర్చయన్తి సదా లింగం । తస్మాచ్ఛ్రేష్ఠతమో హి సః ॥

இ-ள். வாராய் இந்திரனே! பிரமனும், விஷ்ணுவும் நீயும் தேவர்க்களோடே கூட யாதொரு பரமசிவனுடைய இலிங்க மூர்த்தத்தை யெப்போதும் அர்ச்சனை செய்கிறீர்களோ, அவரைக்காட்டிலும் சிரேஷ்டமான தெய்வம் யாவருளர். எ-று.

என்று அநுசாசநீகபர்வத்திற் பெறப்பட்ட உபமன்யுபகவான் வசனத்தினால் பிரம்ஹ விஷ்ணுவாதி தேவர்கட்கு நித்தியமாகவே சிவனையாராதிக்குந் தன்மையானது பிரகாசிக்கப்பட்டது. இந்தப்பிரகாரம் சௌஷுப்திகபர்வமுதலியவற்றுள் அவதார ரூபமுள்ள பரவாசு தேவருபத்தையுடைய கிருஷ்ணருக்குச் சிவபூசையினாலேயே சகலவரலாபங்களுங்கிடைத்தனவாய்ச்சொல்லுவதினாலும், பிரத்தியட்சமாகச் சொல்லப்பட்ட நிரதிசயபிரபாவத்தினாற் பிரகாசிக்கும் சிவபெருமானுக்கே சாட்சாத்பரப்பிரம்ஹத்வம் சம்பவிக்கிறதாகிய வம்மகிமா விசேஷத்தாலும், அந்தக் கிருஷ்ணரால் பூசிக்கத் தக்கவராயிருக்கிற சிவபெருமானுக்கு எந்தவுயர்வுக்கு மேலொரு வுயர்வில்லையோ, அவ்வுயர்ந்த தன்மை யானது வியஞ்சனமார்க்கத்தால் தோற்றப்படுகிறது. மகாபாரதத்துக்கு வாச்சியராயுள்ளநாராயணருடைய சரித்திரத்தின்வழியாய், அவருடைய பெருமைக்கு உயர்ந்த பெருமையையுடைய பரசிவமூர்த்தி வைபவமே அம்மகாபாரதத்தின் முதன்மைபெற்றதென வெளிப்பட்டது. ஸ்ரீமகாபாரதமானது உயர்ந்த காவியமாக என்னாலே செய்யப்பட்டதென்று பிரம்ஹாவைக் குறித்துச்சொல்லிய வியாசரைப்பார்த்து,உன்னாலேகாவியமாகச் செய்யப்பட்டதென்று சொன்னார். ஆகையால் அதுகாவியமாகப் போகிறது என்றுசொல்லி அநுக்கிரகித்தனர். பிரம்ஹ தேவர் அநுக்கிரகித்தமையால் அது நன்மையான காவியமாம். இதற்கு லட்சணமேதெனின், எந்தக்காவியத்தைக் காட்டிலும் அதிகமானகாவியமில்லையோ அதுநற்காவியம். இந்தக்காவியத்துக்கதிசயமான காவியத்தை யொருவருஞ் செய்யப் போகிறதில்லை. சகலத்தையும் அதிசயித்திருக்கிற காவியத்துக்கு நற்காவியம் என்னுந்தன்மை யுண்டாம். அப்படிப்பட்ட காவியமேகோரத் தக்கது. சகலமான கவிச்சிரேஷ்டர்களுக்கும் பிழைக்கவேதுவாயுள்ளது. சகலமான சாத்திரங்கள், புராணங்கள், வேதங்கள் இவைகளின் பொருள்களடங்கியிருப்பதால் சகல காவியத்துக்கும் அதிசயித்தைக் கொண்டிருக்குமிது உத்தம காவியமாம்.

இதற்குப் பிரமாணம்.

పర్జన్యయివభూతానాం । అక్షయ్యోభారతద్రుమః॥

இ-ள். சகலமானவுயிர்களுக்கும் வருஷிக்கும்மேகம்போலப் பாரத மென்கிற விருட்சமானது அக்ஷயமாயிருக்கிறது. எ-று. இப்படிக்குப்பிரமஹாவின் அநுக்கிரகங்கிடைத்தபின்னர் இந்தப் பாரதம் என்று சொல்லுங் கிரந்தத்தின் முன்னரோ அவரவர்கள் செய்யுங்காவியங்கள் பிழைக்கின்றனவென்று சொல்லப்படுந்தன்மையால், இம்மகாபாரதமாகிய காவியமொன்றற்கே உத்கர்ஷம் சொல்லப்பட்டது. இவ்வுத்தம காவியத்துக்கு * வாச்சியாதிசாயித்வமுண்டு. வியஞ்சனமென்கிற லட்சணத்தினாலே பிரதானமாகுந்தன்மையும் வெளிப்பட்டது. வாச்சியம் என்றுகவிகள் எதைச் சொல்லுகிறார்களோ அதைவிளக்கும் உதாரணம் வருமாறு.

ప్రతీయమానంపునరన్యదేవ। వస్త్వస్తివాణీషుమహాకవీనాం
ఆభాతితస్యాజ్ఞసమిత్యుదారం। లోకేషులావణ్యమివాంగనాసు॥

இ-ள். மகாகவிகளுடைய வாக்குகளில் பிரதான வஸ்து வைப்பார்க்கிலும் வேறாயிருக்கும் வஸ்துவானது ஸ்திரீகளுடைய முகத்தில் அழகு வேறாயிருப்பதுபோல் உயர்ந்ததாக வியஞ்சனமாய்த் தோற்றுகிறது. எ-று.

இப்பாரதத்திலோ வென்றால், வாச்சியமானதுபரப்பிரம்ஹமென்று சம்பாவனை சம்பவிக்கிறபடியால் நாராயணனுக்கு நிரதிசயமான மகிமையுண்டாம். நாராயணனுக்கும் பூச்சியனாயிருக்கையால்சகலகிரந்தத்திலுஞ்சொல்லப்பட்டிருக்குஞ்சிவபெருமானுடைய மகிமையானது விளங்கிக்கொண்டிருக்கிறது.

அப்படியே சகலத்தையும் அதிசயித்திருக்குஞ் சகுண பரப்பிரமஹ ரூபியான சிவமானது வியஞ்சனத்தால் தோற்றிக்கொண்டே யிருக்கிறது. இதுவே யுண்மையான தொனிரூபமானலட்சணம். அந்தப் பரப்பிரமஹ ரூபியானவர் இந்தக்கிரந்தத்தில் அந்தந்தவிடத்திலேயும், இதற்கு இது உயர்ந்ததென்று

* வாச்சியம், கிருஷ்ணன்.

அதிசயித்வம், சிவம்.

தோற்றும்படியான பாவங்கள், ரசங்கள், அலங்காரங்கள் தொனிகள் முதலானவைகளாலே பிரதானமாக வெளிப்படுகையால் கிரந்தகர்த்தாவாகியவியாசருடைய அபிப்பிராயம் இனிதுவெளிப்பட்டது.

—:0:—

அவதாரிகை.

அதற்குப் பின்னர் மற்ருெருகவியாலும் பாரதத்தில் சிவபெருமானுக்குப் பரப்பிரம்ஹ பாவத்தினுடைய பிரகாசத்தை வெளிப்படுத்துகிருர்.

சுலோகம்.

మోహాభిభూతమఖిలంజగదావిరించం । త్వామేకమేవభగవన్నరహితంచతేన
విఖ్యాప్యమంకణికదివ్యకథానుషక్త్యా । త్వాంబ్రహ్మతేనచమునిస్స్ఫుటయాంబభూవ ॥౨॥

மொழிபெயர்ப்பு.

பங்கயனீருமென்ன வுலக மருள்போர்த்தழியும் பண்பிற்கண்டு
மங்கணனீ யம்மாயத்தாழ்கீரு யென்பதனை யலகில்சீர்த்தி
மங்கணிகர் நற்கதையால் வகுத்தவரு காரணத்தால் வயங்குமேன்மை
தங்குபராபரமெ ன்னக் காட்டினர்மா மறைமுனிவர் தணப்பிலொன்றே. (உ)

இ-ள். சகலமாயுள்ளசகத்தும் பிரம்ஹாபரியந்தம், மோகத்திருலே ஆவரிக்கப் பட்டதாயும், அந்தமோகத்திருலே பிரிந்திருக்கிறவராக உம்மையொருவரையே மங்கணிக சித்தருடைய திவ்ய கதையின் பிரசங்கத்திருல் பிரகாசப்படுத்தி அக்காரணத்திருல்உம்மையே பரப்பிரம்ஹமாக வியாசர்வெளிப்படுத்திருர். எ-று.

ஆரண்யபர்வத்தில், தீர்த்தயாத்திரா கட்டத்தில் சப்தசாரஸ்வததீர்த்தப் பிரசங்கத்தில் சொல்லப் படுவதோவெனில், மங்கணிக சித்தரானவர் தர்ப்பையை யறுக்கும்போது தர்ப்பையினுல்அறுபட்டகாயத்திருல்அவருடையகையிலே நின்று * சாகரசமானது பெருகிற்று என்பதேயாம்.

సవైశాకరసందృష్ట్వా । హర్షావిష్టోమహాతపాః
ప్రనృత్యకిలవిప్రర్షిః । విస్మయోత్ఫుల్లలోచనః

* சாகரசம் = அமிர்தம்.

తతస్తస్మిన్ ప్రవృత్తే వై । స్థావరం జంగమం జగత్
ప్రనృత్యత్యుభయం హ్యాత । తేజసా తస్య మోహితం
బ్రహ్మాదిభిస్సురై రాజన్ । ఋషిభిశ్చ తపోధనైః
విజ్ఞప్తో వై మహాతేజాః । ఋషేరర్థే నరాధిప
యథా న నృత్యేత్ దేవ । తథా త్వం కర్తుమర్హసి
తతః ప్రనృత్తయామాస । హర్షావిష్టేన చేతసా
సురాణాం హితకామార్థం । ఋషిం దేవోభ్యభాషత
భో మహర్షే ధర్మజ్ఞ । కిమర్థం నృత్యతే భవాన్
హర్షస్థానం కిమర్థం వా । తవాద్య మునిపుంగవ ॥ ఋషిః ॥
కిం న పశ్యసి మే దేవ । కరాచ్ఛాకరసం స్రుతం
యం దృష్ట్వాహం ప్రనృత్తో వై । హర్షేణ మహతాన్వితః
తం ప్రహస్యాబ్రవీద్దేవో । మునిం రాగేణ మోహితం
అహం వై విస్మయం విప్ర । దర్శయామ్యత్ర పశ్య మాం
ఏవముక్త్వా నరశ్రేష్ఠ । మహాదేవేన వై తదా
అంగుష్ఠాగ్రేణ రాజేంద్ర । స్వాంగుళిస్తాడితోభవత్
తతో భస్మ క్షతాద్రాజన్ । నిర్గతం హిమసన్నిభం
తం దృష్ట్వా వ్రీళితో రాజన్ । స మునిః పాదయోః పతత్ ॥

இ—ள். அந்தமங்கணிகசித்தரானவர் பெருகாநின்ற சாகரசத்தைப்பார்த்து மகாசந்தோஷத்தை யடைந்தவராகி, மகாதபோநிஷ்டராகிய அம்முனிவர் நிர்த்தனம்பண்ணினார். ஆச்சரியத்தினாலே மலர்ந்திருக்கிற நேத்திரங்களுள்ளவராய்க் கூத்தாடும்போது சரம், அசரம் என்னுமிரண்டுவிதமாய் விளங்கு மிந்தவுலகமானது கூத்தாடிற்று. அவருடையதேஜசினாலேமயங்கிவிட்டது. அவ்வுலகத்தின் மயக்கந் தீரும்படியாகப் பிரம்ஹா முதலிய தேவர்கள், தபோதனர்களாகிய ரிஷிகள் யாவரும், கூத்தாடும்படியான இவ்வுலகத்தின் மயக்கமானது தீரும்படி தேஜோமூர்த்தியாகிய மகாதேவரிடத்திற்போய் விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். தேவதேவனே! எப்படி யிந்தவுலகமானது கூத்தாடாமலும், மயங்காமலும் இருக்குமோ, அந்தப்படிக்குச் செய்வதற்கு நீரே யோக்கியராயிருக்கின்றீர் என்று அநேகப்பிரகாரமாய்ப் பிரார்த்தித்தபின்பு சந்தோஷத்தோடு கூடிய மனத்தராகிய பரசிவப் பிரபுவானவர் நிர்த்தனம்பண்ணித் தேவர்களுக்கு

இதமுண்டாகிற நிமித்தம், மங்கணிகரிஷியைப் பார்த்துச் சொல்லுகிறார். ஒபிரபுவாகிய மகரிஷியே! நீயென்னகாரணத்தால் கூத்தாடுகிறாய்? இப்போது சந்தோஷத்துக்கு இடம் யாது? என்று கேட்கையில், அந்தரிஷியானவர் என்னுடையகையில் இருந்து பெருகாநின்றசாகரசத்தைத்தேவரீர்பார்க்கவில்லையா? யாதொரு சாகரசத்தை நான் பார்த்துச் சந்தோஷத்தோடு கூத்தாடினேனோ அந்தச்செய்கையைத் தேவரீர் அறியமாட்டீரா? என்று கூறினர். ஆசையினாலே மயங்கப்பட்டவராகிய அந்த ரிஷியைச் சிவபெருமான் பார்த்து நானோரதிசயத்தை இப்போது காண்பிக்கிறேன் என்னைப்பாரும் என்றுசொல்லி (ஏதர்மநந்தனோ! கேளும்) மகாதேவரானவர் தம்முடைய அங்குஷ்டவிரல் நுனியினால் மற்றொரு தம்முடைய விரலை அடித்தார். அடித்தமாத்திரத்தில் அவ்விரல் நகச்சந்தினின்றும் வெண்மையான பனிக்கட்டியைப்போன்ற விபூதியானது வெளிப்பட்டது. அந்த ரிஷியானவர் அதைப்பார்த்து அவமானத்தை யடைந்தவராகி அந்தப் பரமேசுவரனுடைய பாதங்களில் சரணாகதியானார். எ-று.

என்று அந்த விடத்தில் பிரம்ஹாதி ஸ்தாவராந்தமாயிருக்கிற சகல ஜகத்துக்கும் மங்கணிகரிஷியைத்தவிர மயக்கஞ்சொல்லப்பட்டது. மங்கணிகரிஷியைப்போலவே, கிடைத்தமோகத்தினாலே கூத்தாடிக்கொண்டிருக்கிற பிரம்ஹாமுதலியோர்களுடைய பிரார்த்தனையினாலே சிவபெருமான் மங்கணிகரிஷியினுடைய நிர்த்தனத்தை நிறுத்தினார் என்கிற சொல்லினாலே சிவனுக்குப் பிரம்ஹாதி தேவர்கள்போல் மோகமயக்கமானது இல்லையென்று வியஞ்சனத்தால் வெளிப்பட்டது. தான் மோகத்தை யடைந்தவனாயிருந்தால் ஒருவனுடைய மோகத்தைத் தீர்க்குஞ்சாமர்த்தியம் இல்லையாகையால், சிவனைக் குறித்துப் பிரார்த்திக்கும்படியான பிரம்ஹாமுதலிய தேவர்க்களுடைய மயக்கத்தைத்தீர்க்கும்படியானதற்கும், மயக்கத்தினாற்கூத்தாடும் ரிஷியினுடைய கூத்தை நிறுத்தும்படி யானதற்கும் அவரொருவரே யுளரென்பது வெளிப்படலால் சகல சீவர்க்களும் மோகத்தையே யடைந்தபேர்களெனவும், பரப்பிரம்ஹம் ஒன்றே மோக மயக்கத்தைத் தாண்டியது எனவும்உண்மை விசாரத்தால் கொள்ளப்பட்டது. மோகம் உள்ளது, மோகமில்லாதது என்னும் விசேஷவசனங்

கொண்டே பிரம்ஹா முதலான சகலமானபேர்களும் சிவர்க்க ளெனவும், சிவனொருவனே பரப்பிரம்ஹமெனவும் ஸ்ரீவேதவியாச முனிவர் பாவனையால் ஸ்திதப்பிரக்ஞை யுடையராகுந் தன்மை இதன் தாற்பரியமாக வெளிப்பட்டமை காண்க.

அவதாரிகை.

இந்தப்பாரதமாகியமஹாகிரந்தத்தில், உட்பட்டிருக்கும் வாக்கிய விசேஷங்களினால் கிடைக்கப்பட்ட அர்த்தத்தைச் சங்கிரகித்துப் பிரவசனம் பண்ணுகிறார்.

சுலோகம்.

తస్మాచ్చమోహాత్తదభావకృతాద్విశేషా। జన్మస్థితిప్రళయభాగభవంత్వదన్యత్
తత్కర్తృవస్తుపరమంత్వమితిప్రబోధం। జాతంవభావయచతస్యతదీయవాచం॥

மொழிபெயர்ப்பு.

அறைதருமக்காரணமே ததினின்றுமோகமத னபாவமென்ன
முறையில்வருமெவையினைக்கண் ணியமாகமுத்தொழிலின் முடிந்துமேவுஞ்
செறிதருமவ்வகிலேசனுயுமுயர்பொருளாயுந் தெளியவுண்டாம்
இறைவகினை ஞானார்த்தந் தனைநீயே முனிமொழிகொண்டெண்ணிடாயே. (க)

இ-ள். அக்காரணத்தி னின்றும், மோகமென்ன, அதினுடைய அபாவமென்ன, இதுகளினாலே செய்யப்பட்ட விசேஷத்திலே நின்றும் உமக்கன்னிய மானதெல்லாம் ஜென்மஸ்திதிப் பிரளயத்தை யடைந்ததோ, அந்தவுலகத்துக்குக் கர்த்தாவாயும், உத்கர்ஷமான வஸ்து வாயுமுள்ளவர் நீரென்று ஞானமானது உண்டாச்சுது. அந்தஞானார்த்தமானவியாசருடையவசனத்தைத் தேவரீரே பரியாலோசனை செய்விராக. எ-று.

மங்களிகசித்தர் சிவபெருமானுடைய பாதங்களில் நமஸ்கரித்த பிற்பாடு அவருடைய வசனமாகப் படிக்கப்பட்ட வாக்கியங்கள் வருமாறு.

నాన్యందేవమహాదేవ్యే। వ్యతిరిక్తంపరంమహాత్,
సురాసురస్యజగతో। గతిస్త్వమసిశూలధృత్
త్వయాహ్యస్తుమిదంసర్వం। త్రైలోక్యంసచరాచరం
త్వామేవభగవన్సర్వే। ప్రవిశ్యంతియుగక్షయే

జ్యైరపినశక్యంతే । పరంజ్ఞాతుంమతోమయా
త్వయిసర్వేవిద్యశక్యంతే । సురాబ్రహ్మాదయోనఘా
సర్వస్త్వమసిలోకానాం । కర్తాకారయితాచహి
త్వత్ప్రసాదాత్సురాస్సర్వే। నివసంత్యకుతోభయాః॥

இ-ள். உருத்திரமூர்த்தியைக்காட்டிலும் உத்கிருஷ்டமாயும், மஹத்தாயும் இருக்கிறதாக மற்றொரு தெய்வத்தை நான் எண்ணவில்லை. தேவர்க்கள், அசுரர்கள், முதலிய பேர்களுடைய உலகத்துக்கெல்லாம் நீரோகதியாக விருக்கின்றீர். சகலசராசரங்களோடு கூடிய இம்மூன்றுலோகமும், யாவும் தேவரீரால் சிருட்டிக்கப்பட்டன. வாருமையா பகவானே! பிரளயகாலத்தில் சகலமான பேர்களும் தேவரீரிடத்திலேதானே லயமாகின்றார்கள். தேவர்க்களாலுந் தேவரீருடைய பெருமையை அறிவதற்கு அருமையாயிருக்கிறது. எந்தக்காரணத்தினால் என்னாலறியச் சாத்தியமாகப் போகிறது? நின்மலராயுள்ளவரே! தேவரீரிடத்தில் பிரம்ஹா முதலிய தேவர்க்கள் உண்டாகிறார்கள். நீர் சர்வரூபியாயிருக்கின்றீர். இந்த லோகங்களுக்குக்கர்த்தாவாயும், படைக்கின்றவராயும் தேவரீரேயுள்ளவர். உமது அநுக்கிரகத்தினாலே சகலமானதேவர்க்களும் பயமில்லாதவர்களாய்ச் சஞ்சரிக்கின்றார்கள். எ-று.

இந்த வாக்கியத்தால் பரமசிவனுக்குச் சகல சிருட்டியும், பிரளயகால பரியந்தமான பாரம்யகர்மமும் சர்வாத்மாவாயிருக்குந் தன்மையும் சொல்லப்பட்டது. சிவனேபரப்பிரம்ஹமென்று நிச்சயித்து மங்கணிகர் பிரஸ்தாபித்த வுண்மை வெளிப்பட்டது. இந்த நிச்சயம், விபூதிவெளிப்பட்ட மகிமையாலன்று. சாகரசம் வெளிப்பட்டதுபோல், ஆச்சரிய ஹேதுவான ரிஷியின் சரித்திரத்தினுடைய தன்மையில் வேறுபட்ட தன்மையே சிவமகிமோத்கர்ஷப் பிராப்பியமுடைத்தென்க. எம்முடைய நிர்த்தனத்தைப் பார்த்துச் சகலரும், அந்தக்கதியினால் பிரம்ஹாபரியந்தம் மயங்கினவர்களாய்க் கூத்தாடும்போது சிவபெருமான் மோகமயக்கமில்லாதவராய், நிர்த்தரகிதராய், எம்மசமீபத்தில் வந்து எம்மகாட்டியத்தை நிறுத்தினார் என்று அந்தச்சித்தர் மயங்கி அப்பரமேசுவரனுடைய மகிமோத்கர்ஷத்தை யெடுத்துரைத்தமையேமுக்கியமென்க. இந்த வுண்மையால், மங்கணிக சித்தர்வசன

இதனைமுறையேமறுத்து விவகரிப்பாம். சிவன்பூரணராகை யால், அவரில்லாத விடமொன்று மில்லையென்பது திண்ணம். அவர் பூரணராகுந் தன்மைஅரூபத்தாலென்பது விளங்கும். அப் படியே அவர் ஏகதேசராகுந்தன்மை ரூபத்தாலென்பதும் அமை யும். அருவத்தாற்பூரணராயும், உருவத்தாலேகதேசராயும் விளங் கும் அவரியற்கைத்தன்மை அவ்வருவமும், உருவமுமல்லாமை யால், அவ்விருதன்மையுந் தனது அருள்விலாசமாக வுடைய வன்னோர் பால் இரண்டுதன்மையு மேககாலத்தி லெப்படிநிகழு மென்னுமாசங்கைநிரஸ்தமென்க. அருவம் உலகுயிர்களியங்குதற் பொருட்டும், உருவம்உயிர்க்கு அநுக்கிரகித்தற்பொருட்டுமென் பதுசிவாகமத் துணிபாதலறிக. ஆகவே, அருவத்தாற்பூரணராகிய சிவன் உருவத்தா லேகதேசராகிப் பஸ்மாசுரன் மாட்டுநாடகம் புரிந்தமை அமைதிபெற்றமை காண்க. இனி அவரையன்றி ஓர ணுவும் அசையாதென்பதும் உண்மை! உண்மை!! அதனால், பஸ் மாசுரன் தீயவெண்ணமும், தீயசெய்கையும் சிவனையே பற்றி நிக ழுமெனின், அவைமாத்திரமேயன்று. எல்லாத்தீமையும் சிவனை யே பற்றி நிகழ்தல் காண்க. எல்லாநன்மையும் பற்றி நிகழுமா போல். நன்மையுந் தீமையுஞ்சிவனையடியாகக்கொண்டே நிகழு மெனின், உயிர்களை அவற்றிற் கிலக்காக்குவ தென்னையெனின், அவ்வுண்மையை விரிப்பாம். சுத்தமொன்றையும், அசுத்தமொன் றையுங் காண்போந்தகண் சூரியனுதவியின்றி அவற்றைத் தா னே காணுதல் [யாண்டிசையும்? கதிரொளிகாட்டக் கண்காணு முண்மையால், அக்காட்சிக்குக் கதிரொளியே காரணமென்பது வெளிப்பட்டது. கண்ணொளியோடுகதிரொளிகலந்திருக்குமுண் மையால் கதிரொளிகலவாதகண் தானேயொன்றையுங் காணா ததன்மையால். இனி, சுத்தத்தைக்கண்ட சுகமும், அசுத்தத்தைக் கண்ட சுகமின்மையும், கண்ணுக்கோ கதிரொளிக்கோ வெனின், கண்ணுக்கேயன்றிக் கதிரொளிக்கல்லாமை வெளிப்படலால், நன் மைதீமைகளை நாடு முயிர்கள்பால் நிகழும்யாவும் உயிர்கட்கே யெனவும், அந்நிகழ்ச்சி நங்கருணாசாலியை யன்றி யியங்கப் பெறுவெனவும், அவ்வியக்கம் பற்றியே அவற்றுளுண்டாகுங் குணதோடங்க ளவர்பாற் சாராவெனவும் நிச்சயிக்கப்பட்டது. தீமையை யெண்ணினவன் அசுரன். எண்பித்தவன் சிவன். வரத்

தைக்கேட்டவன் அசுரன். கேட்பித்தவன் சிவன். .வரத்தைப் பெற்றவன் அசுரன். பெறுவித்தவன் சிவன். சிவனைத் துரத்தினவன் அசுரன். துரத்துவித்தவன் சிவன் என்னு நிசார்த்தம் வெளிப்படலால், அவரையன்றிப் பஸ்மாசுரன் எப்படி விவகரித்தல் கூடுமென்னு மாசங்கையும் பரிஷ்கரிக்கப் பட்டது. (உடுப்பானும் பாலனமுண்பானு முய்வித்தொருவர் தம்மைக், கெடுப்பானு மேதென்று கேள்விசெய்வானுங் கெதியடங்கக், கொடுப்பானுந் தேசியென் றேற்பானுமேற்கக் கொடாமனின்றே, தடுப்பானுநீயல்லையோ தில்லையாநந்தத்தாண்டவனே) என்னுந் திருவாக்கே யீண்டுச் சிந்திக்கற்பால தென்க. இன்னகல்யாணகுணகவிக்கிரஹமாகிய நம்பரசிவப் பிரபுவைப் பஸ்மாசுரனேடு சாம்யங் கூறத்தக்க வோர் பசுவாகியவிஷ்ணுமூர்த்தி பிராணபிட்சை தந்தி ரட்சித்தாரென்னும் பேடிவாசகத்தைச் சற்றே பரியாலோசிப்பாம்.

சிவனைக் காப்பாற்றவேண்டி யிரக்கம் வகித்த விஷ்ணு தன் யதார்த்தவடிவத்தால்வந்து அவனைக்கொல்லாமல் பெண்வடிவத்தால் வஞ்சித்ததென்னை? பெண்வடிவமாய் வந்தது தன்றலையில் அவன் கைவைப்பானென்று அஞ்சியேயன்றே? இதனல், சிவன் வரத்துக்கு விஷ்ணுவும் பயந்தனனென்று பெறப்படுகிற தன்றே? அவன் விஷ்ணு தலையில் கைவைத்தால் சிவன் வரம்பலியாதெனின், விஷ்ணுவுக்கே பலியாதபொழுது அவ்வரத்தைக் கொடுத்தவர்க்கு அது எப்படிப்பலிக்கும்? தீவட்டியிலே நின்றுங்கொண்ட தீபம் அத்தீவட்டியைச் சுடுவதெப்படி? விஷ்ணு தன்னுடைய பரத்துவத்தைவிளக்கிச் சிவனைக் காக்கவந்த துண்மையாயின், தன்னுடைய யதார்த்தவடிவமாய் வெளிப்பட்டு அவனுடையகை தன்றலையில்வைக்கப் பெற்றுத் தான் சாகாதவராகிப் பின்னரவனைக் கொல்லவேண்டும். அங்ஙனமின்றிப் பெண்வடிவந்தாங்கி வஞ்சித்தது ஒரு அருமையா? சுந்தோபசுந்தாளிறக்க வஞ்சவேடந்தாங்கிவந்த வோர்பெண்ணி லிந்தவிஷ்ணுவுக்குண்டாகிய ஆதிக்கம் யாது? இன்னும், சிவனைக் காக்கவந்தவிஷ்ணுவை அந்தச்சிவன்புணர்ந்து அரிகாபுத்திரனென்னு மோர்பிள்ளையைத் தந்ததென்னை? விஷ்ணு தன்னுடைய முதலாகிறபோது அவரைச் சுதந்தரமிழந்த பெண்டீராகக் கொண்டு சிவன் ஆண்டதெப்படி? இதனல் சிவன் புருஷனும், விஷ்ணு ஸ்திரீயும் என்

பது பெறப்பட்டது. ஆகவே, அன்னோர் உயர்வுதாழ்வுகள் வெளிப்பட்டமை காண்க.

விஷ்ணுவுக்கு அபகர்ஷம் வந்தால்வரட்டும். சிவன் ஓடியதென்னையெனின், அதனைப்பரிகரிப்பாம். சிவன் ஓடாது நிற்பரேல், அவன் அவருடைய தலையில் கை வைப்பதில் தடையில்லை. அப்படிவைத்தால் அவர் சாகமாட்டார். சாகாதபோது அவர் கொடுத்தவரம் பொய்ப்பட்டொழியும். ஒழியவே, அவர் கொடுக்கிறவரம் பலிக்கிற தில்லை யென்னுமோரசங்கத முலகிலுண்டாம். உண்டாகவே, அவரை ஆச்சிரயிப்பது அவலமென்று கொண்டு உலகமழியும். இன்ன அவதிகளுண்டா மென்பது கொண்டு, எல்லாம் வல்ல கடவுளாகிய சிவபெருமான் பயந்தவராகவோடினர். ஓடுவதெற்றுக்கு? வேறுவகையில் அதை நிவிர்த்திசெய்யலாகாதோவெனின், தாம்கொடுத்தருளிய வரத்தினுறுதியை விளக்கற் பொருட்டெனவறிக. அந்தவரத்துக்குச் சிவபெருமானே பயந்தனரெனின், உலகிலதற்கு அஞ்சாதவர் யாருளர்? எனத்தெளிந்து சிவன் கொடுக்கிற வரம் பொய்யா நலத்தது என்று நம்பி உலகம் தம்மை வழிப்படுய்தற் பொருட்டென்னு மூண்மை யினிதுவெளிப்பட்டது. ஆகவே, ஓடினது அருளுடைகமென்பது புலப்பட்டது.

எல்லாந் தாமேயாகிய கடவுள் ஓடவேண்டுமா? அவன் கையைத் தன்றலையில்வைக்க வருகையில் அவன்கைக்கெட்டாதபடிச் சற்றே நீண்டாலாகாதா? பிரமவிஷ்ணுக்கள் தம்மையளந்தறியாதபடி ஆடல்கண்டவரிப்பேதைப் பசுவை யாட்டிப்படைப்பது கூடாதா? வரத்தைப் பெற்றவனுக்கு உண்டாகிற வாதிக்கம் வரத்தைக்கொடுத்தவருக்கில்லாமற்போச்சுதா? அவன் இவர்தலையில் கைவைப்பதன்முன்னர்இவர்அவன்றலையில் கைவைத்தெரித்துவிடக்கூடாதா? எதிர்ப்பட்ட மன்மதன்கதியை அந்தப் பாதகன் அடையும்படிச் செய்வது அவராலாகாதா? முப்புரங்களையுமட்ட புன்னகை யென்ன அப்போது ஒளித்திருந்ததா? எல்லாவுலகங்களையும் சர்வசம்ஹாரத்தில் பஸ்மமாக்கியழிப்பான் அவர் நெற்றியினின்றுமெழும் புலிங்கமென்ன தணிந்துபோய் விட்டதா? இத்திறப்பேராற்றலுடைய பெரியோன் உண்மை

யாகவே பயந்தோடின ரென்னும் அகங்காரவாதம் நிஸ்புருஹ மென்க. இந்தவுண்மையை யறியாது விஷ்ணுகாவாவிடில் சிவன் சாவாரென்னும் பேய்க்கூச்சல் காலைவாரிக்கொண்ட தென்க. இன்னும் விரிக்கிற்பெருகும்.

சிவன் நித்தியரென்பது.

நித்தம் என்பது அழிவின்மையென்று பொருள்படும். அழிவின்மை யென்னுங்கால், யாருடைய அழிவின்மையென வினா நிகழும். சிவனுடைய அழிவின்மையென விடைவரு மாற்றால் அது எப்படியென்பதைச் சற்றே பரியாலோசிப்பாம். தேகம் உண்டாதலும், நிலைபெற்றிருத்தலும், அழிந்துபோதலுமாகிய வநுபவத்தினால் பௌதிகமாகிய வதனைநோக்கப் பூதமாகிய உலகம் உண்டாதலும், நிலைபெற்றிருத்தலும், அழிந்து போதலு மாகிய தன்மை வெளிப்படும். இத்தொழிற் பாட்டைப் பெற்றியங்கும் பொருளைநோக்கின், அதுகேவலம் சடமாதல்திண்ணம். சடமாகவே, தானேயியங்குந்தன்மையொழிந்தது. ஒழியவே, இத்தொழிற் பாட்டை அதன்பானிகழ்த்திய சித்துப்பொருளொன்றுளதாக நிச்சயிக்கப்பட்டது. அச்சித்துப்பொருள்யாது? ஆன்மாவன்றோவெனின், அன்றும். அதுசித்துப் பொருளாயின், தேகமாகிய சிறையிற்பட்டு நினைப்பு மறப்புகளாகிய சகலகேவலத் தன்மையெய்த வேண்டியதின்றாம். கேவலத்திற் கேவலஞ் சடமாகவே கிடத்தலால், அது சித்துப்பொருளாத விழுக்காம். ஆகவே, இவ்விழுக்குடைமையொழிந்த வேறுபொருள் சித்தாதலமையும். அதுவே சிவமென்னும் பெயர்த்தாம். இதனால், அசித்தாகிய உலகந் தொழிற்படுவது சித்தாகிய சிவத்தினாலன்றிச் சித்தும், அசித்துமல்லாதஆன்மாவா லன்றென்பதுவெளிப்பட்டது. இந்த வுண்மையால், சிவம் சகல கேவலங்களிற்றோயாத நின்மலப் பொருளென்பதும் நிச்சயிக்கப்பட்டது. இந்தவிசாரத்தால் சித்து ஒன்று, அசித்துஒன்று, சித்தும் அசித்துமல்லாததொன்று ஆகிய மூன்று பொருள்கள் வெளிப்படலால், இவற்றின் றன்மையை யின்னும் பரியாலோசிப்பாம்.

என்றுசிவமுண்டு, அன்றே அதன்குணமாகிய அருளுண்டு. என்றுஅருளுண்டு, அன்றே அவ்வருளைப்பெறுதற்கான ஆன்மாவுண்டு. என்றுஆன்மாவுண்டு, அன்றேஅவ்வருள் பதிந்தாலொழியத்தக்கமலமுண்டு. எங்ஙனமெனின், என்றுகதிருண்டு, அன்றே அதன்குணமாகியவொளியுண்டு. என்றுஒளியுண்டு, அன்றே அவ்வொளியைப்பெறுதற்கானகண்ணுண்டு. என்றுகண்ணுண்டு, அன்றே அவ்வொளிபதிந்தாலொழியத்தக்கவிருளுண்டுஎன்னுமுவமானத்தாற்காண்க. கதிருக்கு ஒளியின் பிரயோசனம் தன்பொருட்டோ, கண்ணின்பொருட்டோவெனின், கதிர்ஒருபொருளையுஞ்சுட்டியறியாத ஸ்வயம்பிரகாசப்பொருளாகுமுண்மையால், தன்பொருட்டென்றல்பழுதாம். பின்னர்அதன்பிரகாசம் கண்ணுக்கே பிரயோசனமாதல் வெளிப்படலால், அதுபரப்பிரயோசனமென்பது பெறப்பட்டது. கதிரினிடத்துண்டாகிய வொளி பரப்பிரயோசனமாகு முண்மையால், அக்கதிருக்குவேறாகிய கண்ணென்று அதனைநுகர்வதற் குளதென்பது வெளிப்பட்டது. கதிரைப்போல் கண்ணும்பிரகாச மானமாய் விளங்குவதொன்றாயின், கதிர்பிரகாசத்தைத் தரவும், கண் அதனைப்பெறவும் இடம்பெறாதெனவறிக. கண் இருளாலாவரிக்கப்பட்டு அதுவாயொழிதலால், அது கதிரினொளியைப் பெற்றியங்குந்தன்மை வெளிப்பட்டது. இதனால், இருளொன்று அவ்விரண்டுக்கும் வேறாயுள்ளதன்மையும் வெளிப்பட்டது. இப்படியேசிவத்திற்கு அருளின்பிரயோசனம் தன்பொருட்டோ, ஆன்மாவின் பொருட்டோவெனின், சிவம் விருப்புவெறுப்பின்றி ஸ்வயம் பிரகாசமானமாய் விளங்குமுண்மையால், அதன்பொருட்டென்றல்பழுதாம். பின்னாதன்பாணிகமூந்திருவருள் ஆன்மாவின் பிரயோசனமாதல் வெளிப்படலால், அது பரப்பிரயோசனமென்பது பெறப்பட்டது. சிவத்தினிடத்துண்டாகிய அருள் பரப்பிரயோசனமாகு முண்மையால், அச்சிவத்துக்குவேறாகிய ஆன்மா அதனை யநுபவித்தற்குரிய தென வெளிப்பட்டது. சிவனைப்போல் ஆன்மாவும் பிரகாசமானமாய் விளங்குவ தொன்றாயின், சிவன் அருளைத்தரவும், ஆன்மாஅதனைப்பெறவும்இடம்பெறாதெனவறிக. ஆன்மா மலத்தாற்பந்திக்கப்பட்டு அதுவாயொழிதலால், அதுசிவத்தினருளைப் பெற்றியங்குந்தன்மைவெளிப்பட்டது. இதனால் மலமொன்றுஅவ்விரண்

டுக்கும் வேருயுள்ள தன்மையும் வெளிப்பட்டது. இன்னநியாயத்தால், இருளோடுசேர்ந்தால் இருளாயும், ஒளியோடு சேர்ந்தால் ஒளியாயும்விளங்குங் கண்ணைப்போலச் சித்தோடு சேர்ந்தால்சித்தாயும், அசித்தோடுசேர்ந்தால் அசித்தாயுங் காணப்படுந் தன்மையால், ஆன்மாவைச் சித்தசித்து என்று சிவாகமங்கூறும். சதசத்தென்று கூறுவதுமாம். இதனையிடம்வந்துழிவிரிப்பாம். கண்ணுக்கு அடுத்ததன்வண்ணமாகுந் தன்மை யுண்மையால், அதுவே, அதற்குச் சொந்தப்பிரகாசமாம். கண்ணுக்கெனவோர் பிரகாசமின்றெனின், கண்ணொளியில்லான் மாட்டுக் கதிரொளி பயன்படாமையால் கண்ணுக்கு ஒளியுண்டெனநாட்டப்பட்டது. அவ்வொளி கதிரொளியை நோக்க அப்பிரகாசமாதல் காண்க. இது முறையே ஆன்மப்பிரகாசத்துக்கு உவமிக்கப்படுந் தன்மை யுய்த்துணர்க.

இந்தவிசாரத்தால், பதிபசுபாசம் என்னும்மூன்று பதார்த்தங்களும்நித்தப்பொருள்களாய்முடிந்தன. மேல்உலகத்தைஅசித்தெனக்கூறிப் பின்னர் அவ்வசித்து ஸ்தானத்தில் உலகம் என்று வழங்காதுமலம்என்றுவழங்கிவருமாற்ருல்உலகமென்பதுதானே மலம்எனின், மலம்மூன்ருகக் கூறப்பட்டதில் மாயையென்னும் மலத்தின்காரியமே பிரபஞ்சமாகையால் விரோதமின்மைகாண்க. இதன்விரிவு பின்பகுதிகளில் வரும்.

சிவனே நித்தியனென்று கூறத்தொடங்கிப் பாசபசுக்களும் நித்தியப் பெருள்களெனக் கூறியது பிழையாமெனின், இது ஏகான்மவாதிகள்கூற்ரும். சிவனொருவரேநித்தியனென்னுமிடத்து அவருக்கு வேருயுள்ள பொருள்கள் அநித்தமுடையன வென்று கொள்ளவரும். அநித்தமென்பது இருந்துகொண்டே யிருப்பது இல்லாமற்போய்விடுமொரு தன்மையாம். இருந்ததொருபொருளில்லாமற்சூனியமாய் விடுமேல், அதுஎன்றிருந்து? என்று இல்லாமற்சூனியமாய் விட்டது? என்றெழும் வினக்களுக்குச் சமாதானம்பிறப்பது கஷ்டமாம். ஓர்காலத்திலிருந்த பொருளெனின், முன்னில்லாதவொருபொரு ளோர்காலத்தி லுண்டாகாமையால் ஓர்காலத்திலிருந்தபொருளென்றது பிழையாம். முன்னில்லாதது பின்னுள்ளதாகா தென்னுந் தருக்கத்தால். உள்ளது உள்ளதே! இல்லதுஇல்லதே! என்றபடி ஓர்காலத்திலிருந்தபொருள் அதற்கு

முன்னும் பின்னும் உள்ளதேயாம். ஆகவே, அது ஓர்காலத்தில் கெடும் என்றுகூறுஞ் சூனியவாதம் நிரஸ்தமென்க. உள்ளது போகாது. இல்லதுவாராது. என்றதில் உள்ளபொருள் போகாத நியாயம் வெளிப்பட்டமையால், இனி இல்லாதபொருள் வாராதென்பதைப் பரியாலோசிப்பாம்.

சிவமொன்றே நித்தம். வேறுபொருள் கிடையாதெனின், சரம் அசரம் என்னும் பிரபஞ்சம் உண்டானவிதமெப்படி? சிவத்துக்குவேறாகமற்றொருபொருள் கிடையாதபோது ஏகமாகிய அச்சிவத்தோடுமுன்னில்லாத பிரபஞ்சம் எங்கேநின்றும்முளைத்தது? இல்லாதமுயற்கோடு தோன்றிற்றென்பதெப்படி? (ஏகானெனவியம்பியிப்படியறிந்து முத்தியடைமின்னெனும், மோகமானவுரைகொம்புமுன்றொடுமுடிந்திடாது மலடாகிய, காகமானதுகருங்கலின் றசைபறித்தமுங்கரியகுஞ்சியின், முகமாபசிதவிர்க்கவாயிடைகொடுத்ததென்றுரைசெய்தன்மையே) என்னுந் திருவாக்குக் கெங்கே சமாதானந் தேடுவது? இல்லது இல்லதேயாக, சகசீவர்கள் உள்ளதன்மையாது? உள்ளது சிவம் உள்ளதே! இல்லதுசகம் இல்லதே! உள்ளதாகக்கூறுதல் பிராந்தி மாத்திரமென்பர். பிராந்தியென்று லென்னே? அப்பிராந்தி யாருக்கு? ஏகமாகிய வச்சித்தன்றி வேறுபொருளில்லாமையால். பிராந்தியெங்கே நின்றும்பிறந்தது? முன்னில்லாத பிராந்திபின் பிறந்ததெப்படி? சகசீவர்கள் பிரத்யட்சமா யுள்ளது முள்ளவருமாக, அவர்கள் முன்னில்பொருள்களாத் லிழுக்காம். முன்னிருந்தமையால், இப்போதும், பின்னும், எப்போது மிருத்தல்சத்தியம்! சத்தியம்!! ஆகவே, அநாதிநித்தப்பொருள்களாயின. வேறொருசாரார், பிராந்திஞானத்திலொழியாது, சகசீவர்கள்இடையில்ஒர்காரணத்திலே நின்றுந்தோன்றினபொருள்களென்பர். சிவத்தையன்றிவேறுபொருள் இவைகாரியப்படுதற்கில்லாமையால், உலகுயிர்கள் சிவத்திற்காரியப் பட்டனவாகநிச்சயிக்கப்படும். அங்ஙனங்கொள்ளுங்கால், சிவம்காரணமும், தோன்றினவை காரியமுமாதலமையும். ஆகவே, அச்சிவம் உபாதானமாகி அவ்வுபாதானத்திற் பிரபஞ்சத்தைக் காரியப்படுத்துதற்கு நிமித்தப்பொருளொன்று விரும்பவரும். தானே நிமித்தமு மாச்சுதெனின், காரணமாகிய சிவத்திற் காரியப்படும் உலகுயிர்கள் அச்சிவத்தைப் போலவே சித்தாயிருத்தல் வேண்டும். உலகம்சடமும், உயிர்கள்சிற்றறிவுஞ்

சிறுதொழிலு முடைமையால் காரணகாரியவிரோத சம்பவமுண்டாம். இன்ன பலவிரோதங்க ளுளவாகு முண்மையால், இல்லாத சகசிவர்கள் உண்டானமை அசப்பியமாதல்காண்க. இவ்வுண்மை விசாரத்தால், உலகுயிர்கள் என்று மகித்தத்தையடையாத நித்தப்பொருள்களௌன்பது நிச்சயிக்கப்பட்டது.

மேல்விசாரத்தால் நித்தப் பொருள்கள் மூன்றுண்டென வெளிப்பட்டமையால், சிவனொருவரோ நித்தியரென்ப தெங்ஙன மிசையுமெனின், அதனை விரித்துரைப்பாம். மூன்றுபொருள்கள் நித்தியமாயினும், ஒன்று மலமில்லாததும், ஒன்று மலமுடையதும், மற்றொன்று அம்மலமுமே யாகையால், இம்மூன்றில், மலமில்லாமையால் சிவம் ஒருவிகாரத்தையும் அடையாது. மலமுடைமையால் ஆன்மா பிறப்பிறப்புகளாகிய விகாரங்களையடைந்துமெலியும். மலமேயாகையால் மலம்சடத்துவத்தால் தன்னிற் காரியங்கடோன்றுவதற்கான வுபாதனமாய் விகாரத்தையடையும். இதனல், சிவனொருவரோ யெந்தவிகாரத்தையும் அடையாது ஒரேதன்மையரா யிருக்குமுண்மையால், நித்தியரென்னப்படுவர். ஆன்மா பலயோனிகளிற்புக்குத் தன் சொரூபந் தோன்றுதவழியுழன்றுவருதலால், சங்மத்திரிவுகளைநோக்கிஅநித்தமுடையவெனக்கூறப்படும். மலம் காரியப்பாட்டால் சொரூபம் மாறிக்கொண்டே வருந் தன்மையால் அநித்த மென்னப்படும். ஆகவே, அநித்தபென்பது உருவுதிரிந்துதோன்றுத தன்மையைக் காட்டப்போந்த தொன்றுமன்றி முதலுக்கே மோசங்கூறு மூடர் கூற்றின் முடிபொருளாகா தெனவறிக.

இந்த விசாரத்தால் பதிபசுபாசமாகிய மூன்றும் அநாதிநித்தப்பொருள்களாய், என்றும் அழியாதனவாயுள்ளனவென்றும், அவற்றுள் பாசபசுக்கள் விகாரத்தையடைந்துவருவதால், அவ்விகாரத்தை யெய்தாத பதியை நோக்க அநித்தமுடையனவாகக் கூறப்படு மென்றும், பதி அவிகாரியும், நின்மலருமாகுந் தன்மை யுண்மையால், அவரொருவரே நித்தியப்பொருளாதல் சாதிக்கப்படுமென்றும் வெளிப்பட்டமை காண்க.

(எல்லாப்பிறப்பு மிறப்புமியற்பாவலர்தஞ், சொல்லாற்றெளிந்தேம்நஞ் சோணேச,ரில்லிர்,பிறந்தகதையுங்கேளேம்பேருலகில்வாழ்ந்தன்,டிறந்தகதையுங்கேட்டிலேம்) என்னுந் திருவாக்கால் சிவபெருமான் பிறந்தார்,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணந்திசிவன்றுணை.

சித்தாந்தரத்நாகரம்.

ஆசார்யப்பிரபாவம்.

புகலியர்கோ னடிவணங்கிப் பூசுரருமமணர்குழு
விகல்கடிந்த வொருவனடியேத்தி யெமையாளுடைய
மகிபனிசை ஞானிமகிழ் மைந்தனடிமலர்பரவி
அகமருவு மருள்வாதவூரடிக ளடிதொழுவாம்.

சித்தாந்த மார்க்காசரண சீலராயுள்ள அதிகாரிகள்யாவரும் அன்பு பாராட்டி வழிபடற்குரிய ஆசாரியமூர்த்திகள் யாவரென விசாரிக்கின், திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள் ஆகியநால்வருமே யாம். இந்நால்வரும் சைவசமயாசாரிய ரென்னப்படுவர். சமயகுரவரெனினுமாம். (சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனுஞ், சிற்கோலவாதவூர்த்தேசிகனும், முற்கோலி,வந்திலரேனீறெங்கேமாமறைநூலெங்கே, யெந்தைபிரானஞ்செழுத்தெங்கே) என்னும் பிரமாணத்தால் இவ்வாசாரியமூர்த்திகள் பூமியின்கண் அவதரியாவிட்டால் சைவம் என்னும் சொல்லொன்று தானுஞ் சீவித்தல் கஷ்டமென்று பெறப்படலால், அன்ன அரியபேறு உலகம் பெற்றுய்யத் திருவருள்சுரந்த தேசிகரத்னங்களாகிய அவ்வாசாரியர்வழிபாடெமக்கு அவசியமாயிற்றெனக.

இவர்களில், திருஞானசம்பந்தப்பிள்ளையார் குமாரசுவாமி அவதாரமும், அப்பர்சுவாமிகள் சிவகணத்தலைவராகிய வாகீசர்

அவதாரமும், மணிவாசகப்பிரபு திருநந்திதேவர் அவதாரமும், சுந்தரமூர்த்திகள் ஆலாலசுந்தரர் அவதாரமுமாவர். இவ்வுண்மை சிவரஹஸ்யம், சீர்காழிமான்மியம், பெரியபுராணம், உபமன்யு பக்தவிலாசம், அகஸ்தியபக்தவிலாசம், மணிவாசகதீபிகை என்னு நூல்களில் பெறப்பட்டமைகாண்க. இவ்வாசாரியர் மகிமைகளை யுணர்த்தப்போந்த நூல்கள் இன்னும் பலவுள. இவர்கள் சிவாக்ஞா பரிபாலர்களாய்ப் பூமியின்கண்வந்துபுறச்சமயங்களைக் கடிந்து சைவத்தை நாட்டினவுண்மையால், இவர்களேசித்தாந்தத் தலைவராவர். சைவத்தைநாட்டினவனெனவே, பிரகாசப்படுத்தினவனென்பது அமையும். என்பது, முன்னுள்ளதொன்றையே உள்ளதன்மை யிதுவென விளக்கினமை காண்க.

உள்ளது உள்ளதேயாக, அதைநாட்டுவது யாண்டிசையுமெனின், இல்லது இல்லதேயாக அதைநாட்டுவது கூடாமையால், உள்ளதேநாட்ட வுரிமை யுடைத்தென்க. உள்ளதொன்றையே அதுபுலப்படாதவழி இருளாவரிக்கப் புகுங்கால், அவ்விருளைத்துரத்தி முன்னுள்ளதைக் காட்டுவது அவசியமாதல் பெற்றும். இல்லதையுளதென நாட்டுவதும், உள்ளதையிலதென நாட்டுவதுஞ் செல்லாமைகாண்க. ஆகவே, நம்மாசாரியர் புறச்சமயவிருண் மூடாதவழிச் சைவத்தைப் பாதுகாத்தவரென்பது பெறப்பட்டது. அன்னோர் சமணம்புத்தமேயன்றி வேறுசமயங்களைக்கடிந்த தின்றேயெனின், அவர்கள்காலத்தில் அவைகளேயன்றி வேறுசமயங்க ளில்லாமை கொண்டென்க. பாஞ்சராத்திரமாயாவாதமுதலியன வக்காலத்திலிருந்ததில்லையோவெனின், இருப்பினும், அவைசமணத்தால் விழுங்கப்பட்டுச் சொரூபநாசமாகிக்கிடந்த வுண்மையால், அவை தலைகாட்ட விடம்பெறுதொழிந்தன. நம்மாசாரியர் அவற்றை அன்று கடிந்ததுண்டெனின், அவையின்றுங் காணப்படுவ தென்னையெனின், அன்று நம்மனோர் கடிந்தாரென்பது அவற்றையில்லாமற்செய்து விட்டாரென்பது கருத்தன்றும். அவற்றின் பிரகாசத்தைத் தாழ்த்தினரென்பதேயாம். அவற்றை அறவேயொழித்திருந்தால் இப்போது அவற்றினுபத்திரவமுண்டாகாதிருக்குமேயெனின், அங்ஙனஞ்செய்வது வேதத்தின் சம்மதமன்றும். (விரிவிலாவறிவினார்கள்வேறொருசமயஞ்செய்தே,யெரிவினாற் சொன்னாரேனு மெம்பிராற் கேற்றதாகும், பரிவினா

ற்பெரியோரேத்தும் பெருவேளூர் பற்றினானை, மருவிநான் வாழ்த்தியுய்யும் வகையதுநினைக்கின்றேனே) என்னும் பிரமாணத்தாற் காண்க.

சீவர்க்கள்பலரும், கடவுளொருவருமுளராகுமுண்மையால், அக்கடவுள் சிவனென்பது பெறப்பட்டு, அவர் வழிபாட்டின் சம்பந்தமுடையார் பலருஞ் சைவரென்னப்படுவர். அவரைவழிபடற்குரிய பரிபாககில்லாதார் புண்ணியம் வழிவிடாத போது என்செய்வார்? சிவனைவழிபடும் பெரும்புண்ணியமிலராயினும், அவரவர்க்குற்ற புண்ணியத்துக்கேற்பப்பல்வகைவழிபாடுகள் அவரவருமுளராதலுண்மை. அவ்வழிபாட்டிற்குச் சிவனையன்றி வேறுகடவுள் காணாமையால், சிவனைவழிபடும் மார்க்கத்திற்பெறப்பட்ட தத்துவபேதங்களி லொவ்வொன்றையே அம்முழுமுத லெனக்கொண்டு வழிபடாநிற்பர். பிருதிவி முதல்நாதமீறாகச் சொல்லப்பட்ட கருவிகள் முப்பத்தாறனு ளடங்குமொவ்வொரு தத்துவத்தையே யொவ்வொருவரும் பொருளெனக்கருதி வழிபடுங்கால், அவ்வவ்வழிபாட்டிற் பரிபாகமுதிர்ந்து ஒவ்வொன்றாகக் கடப்பரென்பது முண்மை யாதலால், யாவும் உபகாரத்தமைந்தசாதகசாத்தியவழிபாடுகளேயாம். ஆங்காங்கு அவரவர்போன்றிருந்து அருள்வதுநம்மையுடையவன்கடனாகுமுண்மையால். (யாதொரு தெய்வங்கண்டீரத் தெய்வமாகி யெங்கன், மாதொரு பாகனார் தாம்வருவர்) என்பதனானுங்காண்க. நஞ்சைவத்திற் பெறப்படுந்தத்துவங்களையே தெய்வமெனக்கொண்டு விவகரிக்குங்கால் அவரைமறுக்கத் தொடங்குநம்மவர் அவைதத்துவங்களேயன்றிக் கடவுளல்லவென்று மாத்திரம் நிரசித்த லமையுமன்றி, அவர்கடவுளர்களாகக் கொண்ட தத்துவங்களையில்பொருள்களாக நாட்டுவதியாண்டிசையும்? அவையில்பொருள்களாயின், அவற்றை அங்கமாகவுடைய நஞ்சைவமுமில்பொருளாய் முடியுமுண்மையால். ஆகவே, எல்லாமதங்களுஞ் சீவிக்கவேண்டு மென்பது அமையும். ஆயின், நம்மஆசாரிய மூர்த்திகள் அவைகளைக்கடிந்தாரென்பதென்னையெனின், அவ்வவற்றிற்குரிய தாழ்வுகளைக்காட்டினா ரென்பதேயாம். ஜடத்தன்மை யுடையனவும், சிற்றறிவுடையனவுமாகிய தத்துவசமூகங்களி லொவ்வொன்றையே முதற்பொருளாக மயங்கிக்கிடந்த சமயிகள்மருளைத்தூரத்தி, அவை தத்துவங்களேயன்றிக் கேவலம்சித்தாயுள்ளதத்துவாதீதப்பொருளல்லவென்று காட்டுங்கால், அவற்றைக் கடிந்தாரென்பதும்,

அங்ஙனங்கடிந்தது கொண்டு அவையொழிந்திடக் கருதினாரில்லையென்பதும் வெளிப்படலால், 'அன்னோர்புறச்சமயங்களைக்கடிந்து சைவத்தைநாட்டினரொன்னு முண்மைக்கருத்து இதுவென வெளிப்பட்டது.

யானையொன்றை அறியத்தொடங்கினார் அதன்செவியே யானையெனவும்,வாலேயானையெனவும்,காலேயானையெனவும்,பலவாறு மருண்டுரையாடல்போல் தத்துவங்களிலொவ்வொன்றையே மெய்ப்பொருளெனக் கருதுவாரைக்கடியுங்கால், செவிமுதலியன யானையன்றெனக் கடிவதுபோல் தத்துவசமூகங்கள்பொருளாகாவென்றுகடிவதுமாத்திரமேயமையும். செவிமுதலியவற்றை யில்பொருள்களாகக்கடிந்தால் அச்செவிமுதலியவுறுப்புக்களையன்றியானையென்றொரு முதல்காணப்படாததுபோல், தத்துவங்களைப்பொருளெனக் கொண்டியங்குஞ் சமயங்களை யில்பொருள்க ளெனக்கழிப்பின்,அவற்றைவிட்டுச்சைவமென்றொருமார்க்கம்தனித்துநில்லாதெனவறிக. இதனால், கடவுள் ஒருவரேயெனவும், அவர்சிவபெருமானேயெனவும், அச்சிவ சம்பந்தமார்க்கம்சைவமொன்றேயெனவும்,வேறுமார்க்கங் கிடையவே கிடையாதெனவும், உண்டென்பது சைவத்திற்போந்த தத்துவப்பகுதிமாத்திரமெனவும்நிச்சயிக்கப்பட்டது. அன்றியும், ஒருவன்தான் வசிப்பதற்குக் கட்டியவீட்டில், அவனுடைய பிரயோசனார்த்தமாக மலசலவிசர்ஜனஞ்செய்யுமிடம், ஸ்நானஞ்செய்யுமிடம், பூசைசெய்யுமிடம், போசனஞ் செய்யுமிடம், சயனவிடம், கச்சேரியிடமுதலிய பலவிடங்கள் அமையுமிடத்து, அந்தந்த விடத்தையே தனித்தனி முழுவீடு என்று ஆங்காங்குமயங்கிக்கூறும் மூடரைக்கடியுங்கால்,அவற்றை யில்பொருள்களாகக்கூறுவதெங்ஙனமிசையும்? அவ்வவற்றின்உயர்வுதாழ்வுகளைமாத்திரமே காட்டுதலமையும். அத்தனையுங்கொண்டதொரு வீடுஅவற்றிற்கு வேறாய்,அவற்றைத் தன்னிடங்கொண்டிருப்பதொன்றாய் வெளிப்படுமுண்மையே நம்மாசாரியர்கடிந்த சமயங்கட்கும், நாட்டிய சைவத்துக்கும் போந்த நிதரிசனமாம். இந்தவிசாரத்தால் உலகிலுள்ள சமயங்கள் யாவுஞ் சைவமேயெனவும், இந்தவுண்மையுணர்ந்தார் எந்தச்சமயத்தினுந்துவேஷம்வகியாரெனவும்,அவற்றைமறுப்பதாகவிவகரிப்பதுமேலிட்ட பிரயோசனத்தையடையச்செய்வது பொருட்டெனவும்,உண்மை

லருமறைநான்கும்பூருவமாகி
யருட்சிவாகமந்தழைத்திடுமென்
றொருமையினெளிவந்துரைத்தனனெளியேற்
கொப்பிலாத்தணிகையுத்தமனே. (௧௨)

(இதுவுமது.)

மறைநவில்கருமஞானமோரிரண்டின்
மறையவர்க்கேகருமத்தி
னிறையதிகாரமாகிமெய்ஞ்ஞான
நீசரும்பெறற்குரிமையினு
லறையுமெய்ஞ்ஞானந்தாழுமோகருமத்
தளவிலப்படியுணவொன்றுன்
முறைகொள்வேதாகமங்களைத்தணிகை
முழுமுதலாகுமுன்னவனே. (௧௩)

(சுயம்பெனமறையைச்சொல்வதன்றென்பது.)

மறைசுயம்பென்பவம்மறைமேலா
மானமென்பெறுமெனிலந்தோ
நிறைமதியின்றிக்குழறுபவேத
நீடொலிமயமெனிலதனை
யறைகுவர்சடமாயாதலினதுதா
னருளுமோநனிவிவத்தையிலென்
றிறைவனெந்தணிகைத்தேசிகனதுமற்
றென்னுரையெனவிசைத்தனனே. (௧௪)

(தமிழ்வேதத்தின்றன்மையுரைத்தது.)

எம்மில்வேறாகாவெந்தையார்புகழிங்
கெய்துமாகாழியில்வந்தன்
றெம்மையுமுயிர்கள்பிழைக்கநன்கோது
மெந்திருவாக்குமெந்துணைவர்
செம்மையர்மூவர்தந்திருவாக்குந்
தேர்ந்தபேர்க்கேகிவேறுண்டாம்
அம்மநீயுணர்தியென்றனைத்தணிகை
யசலமீதுறையுமாரியனே. (௧௫)

(நால்வர்வாக்கினலமிதுவென்றது.)

விடர்க்கிளம்பாவையார்மொழியினிக்கு
மேன்மையிற்களிக்குமெந்தாதை
யிடர்க்கடலழுந்துமுயிர்க்கருடரவீண்
டெழுந்தருணால்வர்தம்வாக்கிற்
சுடர்க்கொழுந்தனையவன்னதிஞ்சொல்லிற்
சுகமளப்பரியதென்றிசைத்தான்
அடர்த்தமெய்யாகமத்துடன்வேத
மன்றருட்ணிகையற்புதனே. (கசு)

(உபயவேதத்துண்மையுரைத்தது.)

மறையடைத்திட்டகதவமம்மறையே
மாற்றுதலின்றிவாகீசர்
நிறைமொழிமாற்றக்கண்டனமீண்டு
நீடருட்காழிமாமுனிவன்
அறைதிருவாக்காலடைந்ததாகலினவ்
வருமறைப்பேதமாமவர்வாக்
கிறைமைசால்பெரியோரறிவரிவ்வுண்மை
யென்றனன்றணிகையெங்கோவே. (கஎ)

(சைவநிந்தையர்சார்பொழியென்றது.)

எம்மையுமன்பர்தம்மையுநிந்தை
யிசைக்குனர்தம்மையென்றென்று
மம்மநீகாணிற்பேசிடினினைக்கி
லாம்பிழையறிதியென்றிசைத்தான்
கொம்மைமென்முலையார்கூட்டமேபற்றிக்
கொடுந்தொழிற்புலையனுய்த்திரியு
மெம்மையும்பணிகொண்டருடரவல்ல
வீசனுந்தணிகையெண்குணனே. (கஅ)

(ஈசன்பூசனைக்கிடமிவையென்றது.)

எங்குநாம்விரவியிருப்பினுமன்ப
ரிடத்தினுமிலிங்கமாமிடத்துந்
தங்கியேபூசையேற்றுயிர்க்கருளுந்
தன்மையானிடமதுதகுபா

லங்கமுற்றிடினுமடைவதுமுலெயி
லாவதுபோன்மெனமொழிந்தான்
சங்கரன்மகனம்பிகைதருசேயென்
சாமியாந்தணிகைநாவலனே. (ககூ)

(இமையவர்சாதியிதுவிதவென்றது.)

சிவன்மறையோனிந்திரைமகிழ்கேள்வன்
சிறப்புடையரையன்வைசியனே
தவமுடைப்பிரமன்ருத்திரனுருஞ்
சசியிடந்தோயுமிந்திரனே
பவமிகையார்க்கிப்பண்புகூறினுமென்
பயனுளந்தேர்தியென்றிசைத்தான்
சவமுகத்தினர்காண்பரியநற்றணிகைச்
சண்முகஞானதேசிகனே. (உ௦)

(சிவமாமறையோர்சிறப்புணர்செய்தது.)

தேவரிற்பிரமன்வசியனுகையிலத்
திசைமுகன்முகத்தில்வந்துதித்தோ
ராவரோபிரமகுலத்தவராக
வன்றருட்சிவபிரான்முகத்தி
லேவர்வந்துதித்தோரவர்பிராமணரொன்
றியம்புதறகுமெனவிசைத்தான்
சேவலங்கொடியெந்தணிகைநாயகனெஞ்
செல்வமாங்கவுணியர்மணியே. (உக)

(இதுவுமது.)

சிவமறையோர்தந்திடப்பெறலன்றித்
திண்டிடில்யாவராயினுமிங்
கெவமினின்மாலியம்பலயோனி
யெய்திமாழ்குவர்கிரயத்தி
லவகிறைமாந்தரறிவரோவறியா
ரையநீயறிதியென்றிசைத்தான்
தவமலியன்பர்போற்றுமெய்ஞ்ஞானச்
சதுரனெந்தணிகைவேதியனே. (உஉ)

(சச்சிதானந்தத்தன்மையுரைத்தது.)

* சச்சிதாநந்தமென்பதுதெரிற்
சதுரனெந்தாதையேசத்தாம்
இச்சைகூர்சித்தெந்தாயிடைதோன்று
மின்பவானந்தமென்வடிவாம்
விச்சைவேதியரொம்பிரிவுமையாரிம்
மெய்ம்மைநீயுணர்தியென்றிசைத்தான்
அச்சமாரநூர்தாதிகளொழித்தடியேற்
கருள்செயுந்தணிகையாண்டவனே. (உ௩)

(மூவிதஞானமுறைமைவகுத்தது.)

ஞானமோர்மூன்றினவில்பதிஞான
நாடினர்க்கேயெமதுண்மை
யானமெய்வாழ்வுண்டாம்பசுபாசத்
தடைவுடையார்மலபோதத்
தீனமெய்துவரிவ்வுண்மைநன்குணர்தி
யென்றனன்றணிகையில்வாழு
மோனதேசிகனென்னுளத்தவிசகலா
மூர்த்திநந்தாமுமுமுதலே. (உ௪)

(மூவகையுயிர்க்கருண்முறைமையுரைத்தது.)

ஒருமலமுடைவிஞ்ஞானகலர்க்கு
மொப்பிலாப்பிரளயாகலர்க்கும்
வருமலமூன்றில்வளர்சகலர்க்கும்
வழங்குதுமவரவர்போன்றெம்
அருள்விளையாட்டித்திறமெனவறிதற்
பாலதோவன்றெனமொழிந்தான்
குருவெனக்காழிப்பதியில்வந்தருளெங்
கொற்றவன்றணிகைவாழ்குகனே. (உ௫)

---

* சத்து, சித்து, ஆநந்தம்—சச்சிதாநந்தம்.

உள்ளது சத்து. அதன்குணம் சித்து. இடையிற்போந்த கிகழ்ச்சி ஆநந்தம். இவ்வுண்மை, சோமாஸ்கந்தமென்னும் சிவமூர்த்தத்திற் கண்டுணர்க.

பதற்கேற்ப, அவர்களில்பலர் அவர்மதநூல்களில் முன்னொடுபின் முரணவாவது உண்டென்று கூறியகடவுளை மறுத்துக்கேவலம் நாத்திகராய்த்திரிகின்றனர். அன்னோர் நூல்களையும், அவர்களையும் பழக்கங் கொள்ளுங்கால் தெய்வமொன்றுண்டென்று சொன்மாத்திரமாய்க் கூறித்திரிதலையும் விட்டு, அன்னசிரோமணிகளைப் போலவே தெய்வம் என்பது மொன்றுண்டா? தெய்வமென்றொலென்னை? என்று பரிகசிக்க ஏன்எழமாட்டார்கள்? அது சித்தித்த பின்னர், தாயேது தந்தையேது நானேது நீயேது என்றும் ஏன் பிரசங்கிக்காமற் போவார்கள்? இன்னவியல்கொண்டு விளங்கும் பிரகிருதாசாரத்தில், நம்மதோழர் பலர் கெடுகின்றாராகையால், அவர்மாட்டுள்ள நட்புரிமையால் இன்னுங் கூடியவரையில் பிரவசனஞ்செய்வாம்.

இவ்வாபாசஞானம் ஆங்கிலேயநாட்டிற்கொஞ்சம் தலையெடுத்திருக்கின்றது என்று யாம்மேலேகூறினோமாகையால், அதன் பிரயோசனத்தைச்சற்றேவிசாரிப்பாம். அவ்விடத்தில்அநேகபண்டிதர்கள் கல்விகேள்விகளில் வல்லவர்களாயிருப்பினும், ஆண்டு அவலம்பிக்கப்பட்டுள்ளமார்க்கம்கேவலம்அஞ்ஞானகிருதமாதல் திண்ணமாகையால், ஆபாசத்தி லாபாசமாகத் தற்போத சமாஜந்தலையெடுக்க நேர்ந்தது. எனவே, அங்குள்ளவரிற் சில பண்டிதர்கள் கேவலம் தேகாத்மவாதிகளாய்த் திரிகின்றாரென்பது வெளிப்படை. இத் தற்போதத் தலைவர்கள் தந்தற்போதத்தைத் திரட்டிச் சிற்சில பத்திரிகாரூபத்தாலும், நூற்பிரவசனத்தாலும் வெளியிட்டு வருகின்றார்கள். நம்மிந்து பாலிசர்களிற் சில கேள்வியில்லாத பிள்ளைகள் மேல் யாம்காட்டிய நியாயத்திற்கேற்ப அவற்றை யப்பியசித்துவரு மவதிக்குள்ளாகி, நல்லவாள், பெரியவாள் என்னும் வரன்முறைகளைக்கடந்து தம்மிச்சை போனவழி விவகரித்துக்கொண்டுதாம்கெடுவதன்றிமற்றைச்சிறுவரையுங்கெடுக்க முயன்று (தெய்வமிகமேல்) என்னும் ஆணையையுங்கடந்து திரிகின்றனர். இவர்களே (முலையுண்ணிநீருண்ணு மோட்டெருமைமூடர், சலமின் றிச்சந்துரைப்பார்தர்க்கர், பலதாரை, வட்டிவிலேபோதுமிவர் மாயோகவாசகத்தைக், கிட்டினரசங்கிமுர்) என்று நம்ம ஆசாரியர்கள் கட்டளையிட்டுள்ள வாக்கியத்திற்போந்த மெய்யதிகாரிகளாவர். இன்ன ஆபாசகுணக்ஞானை முன்னிட்டாகக் கொண்டு விவகரிப்பது கஷ்டம்!

கஷ்டம்!! ஆகவே, அன்னோர்செய்யும் இந்திரசாலத்தைக்கண்டு நம்மதோழர் பலரும்பிரமியாத வண்ணமே யாமீண்டுப்பிரவசனிக்கப் போந்ததெனவறிக.

இவ்வாபாசகர் காணப்பட்ட பிரபஞ்சமொன்றே சத்தியமெனவும், ஆன்மாவாவது, கடவுளாவது உண்டென்பது தவறெனவும் புலம்பாநிற்பர். இதனால், (உலகத்தாருண்டென்ப தில்லென்பான்வையத் - தலகையா வைக்கப்படும்) என்னுந்திருவாக்காற் பழிக்கப்பட்டலகையாவ ரென்பதுதிண்ணம். உலகம்= உயர்ந்தோர்என்று பரிமேலழகர் கூறியிருத்தலின், கடவுளில்லையென்று சாதித்துக் கூறும்நியாயமேலீட்டால் யாமேஅவ்வுயர்ந்தோராதல் ஏன்கூடாது என்பர். உலகம் = உயர்ந்தோர் என்பதைப் பரிமேலழகர் திருவாக்காற் கொண்டபடியே அவ்வுயர்ந்தோ ரிவரென்பதும் அவர் திருவாக்கானே பெறல்வேண்டும். தீயவொழுக்கங்களுக்கு நிலைக்களமாய் விளங்குமத்துன்மார்க்கமே உரையாசிரியர் பிரவசனத்தாலும், நூலாசிரியர் திருவாக்காலுங் கடியப்பட்டிருத்த லுண்மையாக, அன்னோர் திருவாக்கைத் தமக்காதரவா யெடுத்தாள்வது விளக்கில் விழுந்தவியும் விட்டிலின் கதியாமென்க. நியாயமின்றி மூடத்தன்மையால் விவகரித்தாலன்றோ யாம் அலகையாதல் சாலுமெனின், நியாயமென்றாலென்னை? ஒருவன் அறிவு விளங்கப்பெற்ற நாள் முதல் நேற்று விளங்கியது இன்றும், இன்று விளங்கியது நாளையும், மாறுபட்டுவரும் அநுபவத்தையேன் சிந்தித்திலர்? மூன்றுகாலத்து மொன்றிலொன்று விகற்பித்தெழுந்தவொருவனுக்கு எதுநியாயம்? அந்தந்தக்காலத்தில் அதுவதுவே நியாயமாய்க் கொள்ளவருமன்றோ? முன்னையது பின்னும், பின்னையது அதற்குப்பின்னும் பூர்வபட்சமாதலால்,அவனே தன்னை மறுத்தவனாகிறானன்றோ? அவன்பின்னர் கொள்ளப்போவதையே முன்னவசரங்களில் மற்றொருவர் சொன்னால் அவன் கேட்பானா? அவன் கேளாமைகொண்டே இடித்துக்கூறிய பெரியோர்சொல் அகௌரவத்தையடையுமா? இந்த நியாயத்தால்எது நியாயமென்று கொள்ளற்பாலது? இவற்றையுணராது எமக்கே நியாயந்தெரியு மென்று வாய்ப்பறையடித்தல் யாண்டிசையும்? உலகில்யார்தான் அநியாயஸ்தர்?முடிச்சவிழ்க்கிறவனும் நியாயஞ் சொல்லத் தெரியாதவ னல்லவாகையால்.

உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னுஞ் சொற்பொருள்களை நோக்கின், உயர்ந்தபொருளோடும், தாழ்ந்தபொருளோடுஞ் சம்பந்தித்தவர் என்று வெளிப்படுகின்றது. மக்களுள் உயர்ந்தோருந் தாழ்ந்தோருமாகவே யிருக்கக்காண்டலின், மக்கள் யாவரும் உயர்ந்தோரு மல்லர். மக்கள் யாவருந் தாழ்ந்தோருமல்லர். உயரவுந் தாழவும் வருந்தன்மை அவரவர் சாரும்பொருள்களி னுயர்வு தாழ்வுகளா லுண்டாவதாய் நிச்சயிக்கப்படுகின்றது. நிலத்தியல்பால் நீர்திரிந்ததுபோல், இனத்தியல்பால் மாந்தர்க்கறிவு திரியும் என்னும்பிரமாணமேசான்றெனவறிக. இதனால் மக்களுக்கில்லாத வுயர்வு தாழ்வுகளை அவர்களுக்குக் கொடுக்கு முயர்வுதாழ்வுடையபொருள்கள் மக்களுக்கு வேறாகவுண்டென வெளிப்படலால், அவ்வுயர் பொருள்கடவுளும், தாழ்பொருள் மலமுமாதல்சாலும். கடவுளிடம் வகிக்கும் பற்றின்தாரதம்யங்களால் உயர்ந்தோர் தாரதம்யமும், மலத்திற் சாரும் பற்றின்தாரதம்யங்களால் தாழ்ந்தோர் தாரதம்யமும் வெளிப்படுமாற்றால் கடவுளிடம் மிக்க பற்றேறினோர் மிகவுயர்ந்தோரெனவும், மலத்தின் மிக்க பற்றேறினோர் மிகத்தாழ்ந்தோரெனவும் பெறப்படுகின்றது. இந்தவிசாரத்தால் கடவுள் சம்பந்தம் அற்பமுமெய்தப்பெறாத மலத்திற் பெரியராகிய வவ்வாபாசகரை யுயர்ந்தோரெனல் யாண்டமையுமென்பதையூன்றி விசாரிப்பாராக. உலகம்=உயர்ந்தோரென்னும் பொருளைநாடி அங்கீகரிக்கப்பட்ட பரிமேலழகர் கூற்றின்படி உயர்ந்தோரினத்தில் அவர்க்கிடங் கிட்டாமையால், உயர்ந்தோர் என்னும் பொருளைத்தரு முலகத்தா ருண்டென்பதை யில்லையென்று கூறவந்த அவ்வாபாசகர் அலகையாதல் திண்ணம்! திண்ணம் !!

ஆயின், சிவனில்லையென்று வைணவரும், விண்டுவில்லையென்றுசைவரும், இரண்டு மில்லையென்று ஏகான்மவாதியரும் இப்படியே பலசமயிகளுஞ் சொல்லிவருவதால் ஒருவருண்டென்பதை மற்றையரில்லையென்பது கொண்டு யாவரும் அலகையாவரோ வென்பர். சிவனையாவது, விண்டுவையாவது, ஆன்மாவையாவது, மற்றைப்பொருள்களையாவது அவ்வாபாசகரைப்போலில்லையென்பா ரொருவருமிலர். யாவுமுள்பொருள்களாகவே கொண்டு ஒன்றிலொன்று தாரதம்யங்கூறுவர். இல்லையென்பதற்கும், தார

தம்யங்கூறுவதற்கும் வெகு தாரதம்யமுண்டென்பதையோசிப்பாராக. இவருளொருவரும் இல்லையென்னும் வாதிகளல்லாததுகொண்டு இல்லையென்று கூறுமவ்வாபாசகரோ அலகையாதல்சாலும்.

உலகத்தாருண்டென்பதை யில்லையென்பதுபோல், இல்லையென்பதையுண்டென்பவனுமலகையாதல் சாலுமென்னுநியாயத்தால், முன்காணாதவொன்றைநூதனமாய்க் கண்டுரைசெய்வாரும் அலகையாவரோவென்பர். அற்றன்று. புகைவண்டிமுதலியன முன் காணப்படாமை மாத்திரமேயன்றி அவைஅபாவப் பொருள்களன்றும். இருந்தனவேவெளிப்பட்டபுதுமைகாண்க. உலகத்தாரில் பொருள்களாகத் துணிந்த முயற்கோடு, கானனீர், ஆமைமயிர் முதலியன வுண்டென வொருவன் சொன்னால் அவன் ஏன் அலகையாகான்? இத்திட்டாந்தவாயிலாய் இல்லாத தொருகாலத்து முண்டாகாதெனவும், உள்ளதொருகாலத்து மில்லாததாகாதெனவும் நாட்டப்பட்டது. முயற்கோடு முதலியவற்றை யுண்டெனலமையாததுபோல் கடவுளை யில்லையென்றலடாதெனவறிக.

இனி, யாம்அலகையாதல் தவறுஎன்று அவர்கூறப்போந்தமையில், யாம் என்பதற்குப்பொருளாய்நிற்பதெது? எம்மகக்கருவி, புறக்கருவியென்றெழும் பிரயோகங்களுளவாகையால், எம்மெனவும், எமக்கு எனவும் போந்த பிரயோகங்களுக்கு நிலைக்களமான பொருள் யாது? எம்கருவி யென்றதில் எம் என்பதற்கு உடைய பொருளும், கருவியென்பதற்கு உடைமையும் பெறப்படுதலால் தேகாதிகளாகிய வுடைமைகளை யுடையவன் யாவன்? என்விடு, என்மனைவி, என்காணிஎன்றுகூறுகையில் வீடு, மனைவி, காணி யென்பவற்றிற்கு என் என்றெழுமொருவன் வேறானாற்போல, என்கை, என்கால், என்மனசுஎன்கையில், கை, கால், மனசுமுதலியவற்றிற்கும் அவன் வேறுதலுண்மை. தேகாதிகளைக் காட்டிலும், வேறு பொருளுண்டெனக் கொள்ளாத பேய்கள் எம்எனவும், எமக்குஎனவும் பிறர்கூற்றையவலம்பித்துரையாடல் என்ன பேதமை?

இக்கருத்தேபற்றித் தேகம்சடமாதலால் ஒன்றையும்விவகரியாதுஎனவும், தேகி அவர்கொள்கையின்படிப் பூதக்கலப்பாலுண்டாகிய குணமே யாதலால் அதுவும் சடமாகி விவகரிக்க

மாட்டாதெனவும், பின்விவகரித்த பொருள்யாதெனவும் நம்மவர் கேட்கும்வினாக்களுக்கு அவர்கூறும்விடையாது? குணியினின்றுங் குணத்தைப் பிரிக்கப்படாமையால் அப்படிவிவகரித்து நிற்பது தேகியாகிய குணமுமல்ல. தேகமாகிய குணியுமல்ல வென்று கூறுவரேல், இவ்விரண்டுமல்லாத வேறுபொருள்யாதோ விவகரித்துநிற்பது? இவ்விரண்டைக் காட்டிலும் வேறுபொருளைக் கொள்ளாதவவர் மதத்தில் விவகரித்த பொருளையெங்கேகண்டு பிடிப்பார்கள்? தேகத்தைக்குணி யென்பதும், தேகியைக்குண மென்பதும் எம்மசித்தாந்த மன்றாகலின், அவற்றைப் பிரிக்கப் படாதென்பதும் பிழைபட்டழியும். ஆன்மா தேகங்க டோறுந் திரிந்துவருதல் சத்தியமாகையால். தேகம்சடமாதலால் அதன் குணமுஞ்சடமாதல்திண்ணம். குணம்சடமானபோது அதுஒன்றினையுமறியாது. அறியாததாகியகுணத்தை அறிவாயுள்ளதேகியாக மயங்குவது மலவுறைப்பெனவறிக. தேகிசித்தும், தேகம் அசித்துமாயிருப்பதால் அவைகுணியுங் குணமுமாகா. தேசி, தேசம் என்கையில் தேசிகுணியும், தேசம்குணமு மாகாமையால், குணம்குணியென்பது தாதான்மிய சம்பந்தமும், தேசம்தேசியென்பது பரிக்கிரகசம்பந்தமும் பற்றியியங்கு முறைமைகாண்க. இந்தவிசாரத்தால்தேகியென்பது, தேசத்துக்கு வேறாயிருக்குந் தேசியைப் போல், தேகத்துக்கு வேறாயிருப்பதொரு பொருளென்று நாட்டப்பட்டது.

சுண்ணத்திற்கும், மஞ்சளுக்குந் தனித்தனியில்லாத செந்நிறமாகியகுணம் அவைகலந்த போதுண்டாகவில்லையா? அதுபோல் பூதங்கள் நான்கில் ஒன்றற்கேனு மில்லாதவறிவு அவைகலந்த போதுண்டாமெனின், இல்லது வாராது. உள்ளதுபோகாது என்றபடி அவ்விரண்டினிடத்து முளதாகிய செந்நிறமே யுளதாயிற்று. இல்லாததே யுளதாயிற்றெனின், கொட்டையுஞ் சுண்ணமுஞ்சேர்ந்தபோது அச்செந்நிறம் ஏன் உண்டாகாது? ஆகவே, தனித்தனியில்லாத சிவப்பு நிறமென்பது விசாரஹீனமாதலறிக. பாலினிடத்துமுன்காணாதநெய்யும், விறகினிடத்துமுன் காணாததீயும் அவற்றுளில்பொருள்களாதல் யாண்டிசையும்? உள்ளபொருள்களே யுண்டாயினமைகாண்க. அன்றியும், சுண்ணமும்சடம். மஞ்சளும்சடம். அவற்றாலுண்டாகிய சிவப்புநிறமும்

சடம். சடத்திற் சடமுண்டாதல் சுபாவம். அவர் தேகியாகக் கொண்டது சித்தாகையால் அது சடத்திற் காரியப்படுவது எப்படி? இதற்குச்சமாதானம் ஆங்கிலேயநாட்டி லாடம்பரஞ்செய்து திரியும் அன்னோ ராங்கிலேய தேசிகரைக்கேட்டு மகிழ்வாராக. சடத்திலேதானே சித்துமுதிக்குமெனின், அதற்கு அவர்காட்டும் அநுபவப் பொருள்யாது? அவர் சுண்ணத்தையும், மஞ்சளையுங் கூட்டிச் செந்நிறமுண்டாக்குவது போல் எந்தெந்தப் பொருள்களைக் கூட்டி அறிவையுண்டாக்குவார்? எம்மோடு வாதத்திற் றலை யுடைத்துக்கொள்வதை விட்டு அறிவாகிய ஆன்மாவைமாத்திரம் காட்டுச் சரக்கையெல்லாங் கூட்டித் துறையிலே தானே யுண்டாக்கிக் காட்டவல்லரேல் அன்று அவர் சமயம் நிலைக்கும்! நிலைக்கும் !! அன்னோர் பிரத்தியட்ச வாதிகளாகையால் அவர்கள் சித்தாந்தத்துண்மையைப் பிரத்தியட்சத்திற் காட்டினா லல்லது அவர் மறுபடியுந் தங்கள் தலையை வெளியே நீட்டுவது கேவலம் அசங்கதமென்க. ஓர் சிறிய எறும்பைமாத்திரம் சிருட்டித்துவிடட்டும் பார்ப்போம். அது செய்யவே வழிதேடுகின்றார்போலும்.

இதுகாறும் விவகரித்தநியாயத்தால் தேகத்துக்கு வேறாக ஆன்மா இல்லையென்னுந் துணிபு துணிக்கப் பட்டது போல், தேகத்துக்கும், ஆன்மாவுக்கும் வேறாய்க்கடவு ளில்லையென்பதும் விவகாரத்தி லிழுக்கடைந்தொழியு மென்பதுதிண்ணம். சூரியனுடையவொளியுதவி யின்றிக் கண்ணொன்றையுங் காணாதவுண்மையால், திருவருளுதவியின்றி ஆன்மாவோரியக்கத்தையும்பெறாதென்பதுசத்தியம். இவ்வுண்மைகளைச் (சிவபாரம்யப்பிரதரிசினி) யில் விளக்கியிருப்பதனாலுங்காண்க. பூதசாத்திரதிற்புஞ்சங்களாமென மஞ்சளுஞ் சுண்ணமுஞ் சேர்ந்தமாட்சிகூறி மாழ்கியதுபோல், திருட்டிசாத்திர பரிஞானவள்ளல்களாமெனச் சூரியனொளியுதவி கண்ணுக்குவேண்டா மென்பர்போலும். சூரியனுதவிவேண்டாதவன் கண்ணில்லாதவனேயாகையால், திருவருளுதவி வேண்டாதவருங்கண்ணில்லாதவரேயாவர். ஒளியுதவியின்றியே யாம் இரவில்சஞ்சரிக்கின்றோமெனின், அலகைத்தன்மையுடையாரென்பது பெறப்படும். ஆண்டும், இருள்கண்ணுக்குக்காட்டாய்நின்றதெனவறிக. தானே கண்ணொன்றையுங் காணாததன்மை யுண்மையால். கூகை முதலியன இருளைக் கண்ணுக்குக் காட்டாகப்பெற்றியங்

குந்தன்மை யுண்மையால். ஒருசகாயமின்றிக் கண்ணொன்றை யுங்காணாது என்னுமுண்மை மறுக்கப்படாதவளாயில், கடவுளு தவியின்றி ஆன்மா தலையெடுக்காது என்னுந் துணிபுதாழாது! தாழாது!!

இன்ன சமாதானங்களைப் பரிசீலிக்கும் புண்ணியமிலராய், ஆத்திகர் கேள்விக்குயாம்விடைசொல்லத்தெரியாமைகொண்டே ஆத்திகர் கொள்கை சித்தாந்தப்படமாட்டாதெனவும், ஆத்திகர் தங்கள் சித்தாந்தத்தை நியாயஞ்சொல்லி நிலைகாட்டினால் தான் நாத்திகங்கழலு மெனவும் அவ்வாபாசகர் கூறித்திரிவர். உலகமடங்கலும் நிறைந்திருக்கு மார்க்கங்கள் யாயும்ஆத்திகசம்பந்தமுடையனவே யாக, யாம் எம்மஆத்திகத்தை நூதனமாய் நாட்டுவதற்கு ஆவசிகம்யாது? நெற்பயிரைச் சூழமுளைக்கும்புல் பூண்டு முதலியவற்றைக் களைந்தெறிவதுபோல், அவராபாச நெறியாகிய நாத்திகத்தைக்களைவது எமக்குற்ற தொழிலாம். ஆகவே, அவர்மதத்தை அலைத்தழிக்கயாம் வினவிநிற்பது யுக்தமாம். யாம்வினவுங்கால் அவைகட்கு விடைசொல்லத்தெரியாமையால், அவர்சமயமாகியகளை பறிக்கப்பட்டழியும். அவர்சமயம் பாழ்படவே, (இயல்பென்றுந் திரியாமலியமாதி யெண்குணமுங் காட்டியன்பா லின்பமாகிப், பயனருளப் பொருள்கள்பரிவாரமாகிப் பண்புறவுசௌபான பட்சங்காட்டி, மயலறுமந்திரஞ்சிட்சை சோதிடாதி மற்றங்க நூல்வணங்க மௌனமோலி, யயர்வறச்சென்னியில்வைத்தி ராசாங்கத் தமர்ந்ததுவைதிக சைவமழகிதந்தோ) என்னும்பிரமாணப்படி யெக்காலத்தும் அழியாததாகிய எம்ம ஆத்திகம்நிலைபெற்றே நிற்கும். ஆகவே, அவர் நாத்திகபோதந் தலைகாட்டுந்தோறும் ஒந்தித்தலையெடுப்பாய்களைக் கப்பட்டழியும்.

நம்மாசாரியர்திருவாக்கொன்றையீண்டெப்பரியாலோசிப்பாம். (புறச்சமயநெறிநின்று மகச்சமயம்புக்கும் புகன்மிருதிவழியுழன்றும் புகலு மாச்சிரம, வறத்துறைகளவையடைந்து மருந்தவங்கள்புரிந்து மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள்படித்துஞ்; சிறப்புடையபுராணங்க ளுணர்ந்தும்வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற்சைவத், திறத்தடைவ ரிதிற் சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற்சிவனடியைச் சேர்வர்) என்னும் பிரமாணத்தால் பதிஞானங் கிட்டுவது பரிபாகிகட்

கேயன்றி, அன்யத்திரா சித்தியாதென்பது நம்மசித்தாந்தமாகலின், புறப்புறச்சமய மாறனுளொன்றாகிய உலகாயத்தை யவலம்பித்துத்திரியுமன்னோர்க்குநம்மசித்தாந்தத்துண்மையை யுணர்த்தப்படாதெனவும், அப்படியுணர்த்தினும்அதுபயன்படாதெனவும், வெளிப்பட்டமைகாண்க. எமக்கிவ்விவகாரம் அவ்வாபாசகனை நோக்கியன்றாக வெளிப்படலால், அவ்வாபாசக் குழியில் நம்மவர் விழாதபடிக்கு இதிற்போந்த நியாயங்களை யொரு தரத்துக்குப் பலதரம் ஆசக்தியோடும் சிந்தித்து உண்மை கடைப்பிடித்தொழுகுவாராக.

அவ்வாபாசகர்தெய்வச் செயலொன்றுமில்லையென்பதைவிளக்குதற்பொருட்டுவினவுங்கேள்விகளைச்சற்றுவிசாரிப்பாம். இடிவிழுகிறது கடவுள்செயலானால்,அவர்செயலொருவராலுந்தடுக்க முடியாது என்னும் ஆத்திகர் அதைக்காந்தத்தைக்கொண்டு தடுப்பதென்னையெனவும், அப்படியே பேதியுண்டாகிறபோதும், பெசலடிக்கிறபோதும் முறையே ஔடதத்தைக்கொண்டும், பராமிடர் என்னுங் கருவியைக்கொண்டும் அவற்றினின்றும் மீள்வதென்னையெனவும் பலவாறு பரிகசிப்பர். அவர் பரிகாசம் பல்லையிளித்துக்கொள்ளும்படியான சமாதானங்களைப் பரியாலோசிப்பாம். இடியைத் தங்கள் சத்தியாற்றடுக்க முயல்பவர் காந்தத்தைத் தேடுவதென்னை? அக்காந்தம் யார் விட்டுடைமை? அது இல்லாமலே அவர் என் தடுத்துக்கொள்ளக்கூடாது? இடியேவிழாமல் அவர் என் தடுக்கக்கூடாது? அதவா அவர் காந்தத்தைக்கொண்டு தடுக்கும்போதும் சிலசமயங்களில் அவர்க்குஅதுகூடிவராததென்னை? அவர் நடுவழியில் போம்போது அவர் தலையிலிடிவிழுந்தால் என் செய்வார்? அவர் சாமர்த்தியம் கொஞ்சம் வெளிப்படட்டும் பார்ப்போம். இப்படியே, அவர் பேதிகண்டகாலத்து மருந்துண்பதெற்றுக்கு? மருந்தின்றியே அதையேன் தடுத்துக்கொள்ளக் கூடாது? நோயே யுண்டாகாதிருக்க என் செய்துகொள்ளக் கூடாது? அவர்க்கு நடுவழியில் பேதிகண்டால் என்செய்வார்? மருந்துண்டும் அவர் சாவதென்னை? எங்கே அவர்திறம் வெளியாகட்டும் பார்ப்போம். இனிப் பெசலடிக்கிறபோது அவர்க்குப்பராமிடர் என்னுங் கருவியேதுக்கு? அக்கருவியின்றியே அதை என் அறிந்து கொள்ளக்கூடாது? பெசலையே அடிக்க

இறந்தார் என்னும் அமங்கலமான்மியம் எந்தநூல்களினுங் கூறப்
பட்டதில்லையென்றுபெறப்பட்டது. உயிர்கள் தனுவாதிகளைப்பெ
று உலகிற்பிறப்பதும், பிறந்தவாறேசாவதும், மீண்டும்பிறப்பது
மாகியதன்மையெய்தல் மலம்பரிபாகமாதற்பொருட்டேயாக, அங்
ஙனம் பிறந்திறந்துழலு மொவ்வொருவரும் என்பசுக்களாக
மாட்டார்கள்? எங்கேபிறப்புண்டு, அங்கேயிறப்புண்டு. எங்கே
யிவ்விரண்டுமுண் ... வங்கேமலமுண்டு. எங்கேமலமுண்டு, அங்
பசுத்வமுண்டு. ... வின்னதன்மை யெம்பரசிவ னிடத்திற்
படாத வுன் ... ல் அவரொருவரோ பதிப்பொருளாகிய
ராதல் கான் ... స్యకశ్చిత్పతిరస్తిలోకే నచేశితానైవచతస్యలిఙ్గం। న
రణాధిప ... చ జనితానచాధిపః" என்னும் சுவேதா
னத்தால், அந்த வுருத்திரமூர்த்திக்குப் பிரபுவானவ
கனும் லோகத்தி லொருவருமில்லை யெனவும், அவ
மஸ்தானமும், காரணமு மில்லையெனவும், அவர்கார
க கெல்லாம் பிரபுவானவரெனவும், அவர்க்குஉற்பத்தி
மானவர்க ளொருவருமில்லையெனவும், அவர் ஆகாசாதி
னவும் பெறப்பட்டது. இந்தவாக்கியத்தைப் பரியாலோ
னில், அவர் தமக்குமேலொருபிரபு வில்லாதவரென்பது கொ
டு தாமொருவராளுகையி லில்லாதவரெனவும், அவர் தமக்கு
லொரு ரக்ஷகரில்லாதவ ரென்பது கொண்டு தாமொருவ ரிர
க்ஷகத்தை யெதிர்பார்க்க வேண்டிய குறைவு தம்பாலொன்று
மிலாதவரெனவும், அவர் தமக்கு ஜந்மஸ்தான மில்லாதவ
ரென்பது கொண்டு பிறப்புக் கேதுவாகிய மலமொன்றுந் தம்பா
லெய் பெறுதவரெனவும், தானமில்லாதவ ரென்பதனால் ஓர்
இலு மெந்தவிடத்திலும் பிறந்தேயறியாதவ ரெனவும், கா
ரணமில்லாதவ ரென்பது கொண்டு நிமித்தம், உபாதானம், சகா
ரியெனுங் காரணத்திரயங்களில் அவர் திருமேனியுண்டா
... தானமல்லாதொழிந்தமையாலும், உபாதானம்
... துகாரியப்படுந்தானமாகிய நிமித்தமும், காரி
... காரியும் அதற்கு முன்னமே யொழிக
... ணங்களுந் தம்பா லெய்தப்பெறுதவ
... கெல்லாம் பிரபுவானவரென்பது
... ாற்றொழிற்பாடுபெறவிசைக்

தவனெனவும், அவர்க்கு உற்பத்தி காரணமானவர்களொருவரு மில்லையென்பது கொண்டு அவரின்னொரிடத்தினின்றும் பிறந்தா னென்னுந் தோடமெய்தாதவனெனவும், அவர் ஆகாசாதிபதியென் பதுகொண்டு ஆகாசத்தைப்போல் யாவும் தம்மிலடங்கப்பெற்று அவை சீவிக்க விடங் கொடுத்திருப்பவனெனவும், அல்லது ஒன் றிலுந்தாக்கற்று நிராலம்பமாத்திரமா யிருப்பவனெனவும் வெளிப் பட்டமைகாண்க.

இதற்கு முறையே பொருள் கொ[illegible] கால் தம்முன ஆளுகையில் யாவரையுமுடையவனெ[illegible] எல்லாவுயிர்க[illegible] தாமேரக்ஷிக்கின்றவனெனவும், யாவும் [illegible] தற்குத்தா[illegible] ஸ்தானமாயிருப்பவனெனவும், சமஸ்[illegible]ள சரா[illegible] தம்மிடத்திலேதானே பிறக்கக் காண்கின்றவனெனவும், [illegible] திரயங்களுந் தம்மிடத்திலேதானே சீவித்து நிற்கச் [illegible] வனெனவும், மூவிதகாரணங்களுக்குந் தாமே கர்த்தா[illegible] வனெனவும், யாவருந் தம்மையன்றிச்சஙிப்பதற்கிட[illegible] தாரகமாத்திரமா யுள்ளவனெனவும், இவையிற்றையுட[illegible] டியங்குதல் செய்து மொன்றுஞ் செய்யாதவனெனவும் [illegible] படுதல்காண்க.

இவ் வுண்மையை அறியாதபாஞ்சராத்திரிகள் நாரா[illegible] னே பரமென்று வியாசபகவான் பிரமாணித் துரைத்தமைய[illegible] அப்பரம் பொருளாகிய விஷ்ணுவே நித்தியராதல் சாலுமென்[illegible] அவர் மயக்கந்தெளியும் பொருட்டுப் பின்வரும் வாக்கியத்[illegible] சிந்திப்பாராக.

வியாசபுஜஸ்தம்பநம்.

மறைமுழுதும் வகுத்துணர்ந்த வாதராயணமுனிவ[illegible]
நிறையகிலகாதனெதிர் காரணனே பிரமமென [illegible]
மறைதருமவ்வகிலேசன் முன்புகாட்டிய சய[illegible]
முறைநிறுவியருள்கொழிக்குநந்திபிரான [illegible]

இ-ள். எல்லா வேதங்களை[illegible]
த்தன்றித் தாமே யுணர்[illegible]

பெயரையுடைய வியாதமுனிவர் அவத்தைவயத்தா னறிவுகலங்கிப் பூரணகர்த்தாவாகிய விசுவநாதர் திருமுன்னர் நாராயணனே பரமபதியென்று கூறுதலும், மேல் பூரணகர்த்தாவாகச் சொல்லப்பட்ட விசுவநாதர்சந்நிதிக்கு முன்பாக நாட்டியுள்ளதாகிய வெற்றிக்கொடித்தம்பம் அவ்வியாதனையாம்படி அவனைத்தமது ஆணையானிறுத்திப் பேரருள் புரிந்தவராகிய நந்திதேவருடைய ஸ்ரீபாத கமலங்களை யெமது முடியிற்குஞ்சிப் பூவெனக் கொள்ளாநிற்பாம். எ-று.

ப-ம்.—வேதங்கள் நான்கேயன்றி அநந்தமென்பது அவ்வேதத்திற்றானே பெறப்படுதலால் மறைமுழுதும் என்று கூறினர். “అనంతా వై వేదాః” என்பது சுருதிப்பிரமாணம்.

அநந்தமாயுள்ள வேதங்களை யுணர்வது அநந்தமாகியகாலத்தை யாச்சிரயித்துக் காலம் முடிவு பெறாத வுண்மையால் வேதமுமன்னதேயாய் முடியும். பரிமிதத்தானுணர்தற் பாலனவல்லாத வேதமடங்கலுந் தமது தெய்வத்தன்மையா லொருங்குணர்ந்தமையால் வகுத்து என்று கூறினர். தெய்வத்தன்மையென்பது விஷ்ணுவினுடைய் அவதாரமாதல் பற்றியென்க.

“సహోవాచ వ్యాసః పారాశర్యః” எனவேதத்திற் புகழப்படுந்தன்மையுண்மையால், உணர்ந்து என்பதற்குத் தாமே யுணர்ந்து என்றுபொருள் கொள்ளப்பட்டது.

சாட்சாத்விஷ்ணுவேயாயினும், மறைந்து வியாசருபங்கொண்டமையால், அவ்வுண்மைதோன்ற வியாதமுனிவ ரொன்றுது மறைசொல்லாய் வாதராயணரென்று கூறினர்.

விஷ்ணுவே வியாதமுனிவராயினும், அவத்தை வயத்தானமூங்குமோர் பசுவென்பது தோன்ற மதிமாழாந்துளென்றுகூறினர். வியாதர் பசுவானபோது அவர்க்கு மூலமாகிய விஷ்ணுவும் பசுவென்பதுதானே போதரும். “బ్రహ్మవిష్ణుసురేంద్రాద్యాః సర్వే పశవః స్మృతాః” என்னும் பிரமாணத்தால் பிரம னிந்திரன் முதலியவர்களோடு விஷ்ணுவு மோர்பசுவென்பது வெளிப்பட்டது. பசுத்துவமுள்ள விஷ்ணுவைத் தெய்வத்தன்மையுள்ளவராக மேற்கூறிய தென்னையெனின், சிவபெருமானை வழிபட்டு அவருடைய அதிகாரசத்

திகளிற் பரிபாலனசத்தி தம்மிடம் பதியப்பெற்றுக் கொண்டதனாலென்க. எனவே, அத்தெய்வத்தன்மை * ஆகந்துகமெனக் கொள்ளப்பட்டது.

"వ్యాసరూపమహంకృత్వాసంగృహ్ణామియుగేయుగే
చతుర్లక్షప్రమాణేన ద్వాపరేద్వాపరేతథా
తథాష్టాదశధాకృత్వా భూలోకేస్మిన్ప్రకాశ్యతే
అద్యాపిదేవలోకేతచ్ఛతకోటిప్రవిస్తరం"

என்னும் மச்சபுராண வாக்கியத்தால் வியாசரூபியாய்ப் பிரதி துவாபரயுகங்களினும் சதுர்லட்சப் பிரமாணங்களால்புராணங்களைச் சங்கிரகித்து அஷ்டாதசவிதமாய்ப்பூமியிற்பிரகாசிக்கச் செய்கின்றேனெனவும், இப்போதுந்தேவலோகத்தில் சதகோடி விஸ்தாரமாய்க் கிடக்கின்றனவெனவும், விஷ்ணுவால் சொல்லப்பட்டவுண்மை வெளியானதால், விஷ்ணுவே வியாசனென்பது துணியப்பட்டது. இன்னும் புராணங்கள் பதினெட்டேயன்றிச் சதகோடி விஸ்தாரமாய்க் கிடக்கின்றனவென்னு முண்மையால் புராணத்தின் முதனூலாகிய வேதம் அநந்த மென்று மேற் கூறினதுந் தெள்ளிதின் விளங்கற்பாலதாயிற்று.

விசுவத்தையாளுந் தன்மையொன்றினனே வந்தவோர் பேரென மயங்காதவழி வியாபகத்தன்மையானு மமைந்த வுண்மை தோன்ற நிறையகிலநாதனென்று கூறினர்.

விசுவநாதனென்னுந் திருப்பெயருடைமையால், அம்மூர்த்திக்குரிய காசியென்னு மிடந்தோன்ற எதிர் என்று கூறினர்.

மண்முதனதை மீருகிய தத்துவங்கள் தாமேயாகியும், கடந்துமொப்புவமையின்றி விளங்குமெய்ப்பதிக் கெதிரில் பரத்துவங் கூறப்போந்த வேற்றுப்பொருளின் சிறுமைதோன்ற நாரணனே பிரமமென நிகழ்த்தலோடு மென்றுகூறினர். நாரணன் என்பது சலார்நவத்திற் கிடக்கு மொருவனென்று பொருள்படும். சலார்நவமெனவே, பிருதிவி கழிந்த விரண்டாவது தத்துவாதிக்கம் பெறப்படும். அதற்குமேலுந் தத்துவங்களுளவாகலி ۥனவற்றை

* ஆகந்துகம்—இடையில் வந்தேறியது. எனவே, இயற்கையில்லாதது என்பது வெளிப்படை.

நோக்குழி யவ்வவற்றிற்குரிய தெய்வங்களின் முன்னர்ச் சலார் நவதேவதை தலை யெடுப்பது பரியாசமாய் முடியும். சலம் தீயிற் சுவறுகையால். சலத்துக்காதிக்கம் வந்துழி மண்ணு மதனதிட் டான தெய்வமுங் கெடுமாபோல, தீக்காதிக்கம்வந்துழிச் சலமு மதனதிட்டான தெய்வமுங்கெடும். மேல்தீயுங்காற்று மாகாயமு மாகிய பூதங்களும், அவ்வவற்றிற்குரிய தெய்வங்களு மொன்றி னொன்றேற்ற முடையனவாய் வெளிப்படுமொற்ருல், சலமாகிய தானம் அபாவத்தை யடைந்தபோது அதனொடு நாசத்தை யடைகிற தேவதையைப் பரம்பொருளாக மதித்தல் பேதமை யிற் பேதமையென்க. ஆயின், வேதத்தில் நாராயணனே பரம் பொருளென்று கூறப்பட்டமையென்னை யெனின், அந்தவேதத் திற்றுனே சந்திரன், இந்திரன் பிரமன் முதலியவர்களும் பரம் பொருள்களாகக் கூறப்படுதலின் அமைவுடைத்தன்றும். அப் படிக்கூறுவ தென்னை யெனின், அவரவர்களுக்குக் கீழிட்டவர் களை நோக்கியென்க. சந்திரனிந்திரன் முதலியவர்களை நோக்கப் பிரமனுக் காதிக்கமும், பிரமனைநோக்க விண்டுவுக்காதிக்கமு முளவாகு முண்மையால். அன்றியுமன்னோர் சிவபெருமானு டைய தனுவாகுந் தன்மையால். "అహంహిసర్వహవిషాంభోక్తాచైవఫల ప్రదః। సర్వదేవతనుర్భూత్వా సర్వాత్మాసర్వసంస్థితః" என்னுங் கூர்மபுராண வாக்கியத்தால் சர்வகதனுகியும், சர்வசொருபியாகியும், அக்னி சோமேந்திர விஷ்ணுவாதி சர்வதேவ தநுர்ப்பூதனுகியும், சர்வ முக்கிய ஹவிர்த் திரவியங்களுக்கும் போக்தாவாய் நானேபலப் பிரதாதாவாகின்றே னென்று சிவபெருமான் கூறியவுண்மை வெளிப்பட்டதால், சமஸ்ததேவர்களுஞ் சிவனுடையதனுவாதல் பெறப்பட்டது. இதனுல், சிவபெரு மானுக்கெதிரில் நார ணனைப் பிரமமெனக்கூறல் அசப்பியமாயிற்றென்க. "సత్యంసత్యంపు నస్సత్యం సదైవంకేశవాత్పరం" என்னும் வாக்கியமே யாண்டுவியாதர் கூறிப்பிரமாணித்த துண்மையாக, ஈண்டுநாரணனே பிரமமெனக் கூறல்யாண்டமையு மெனின், விஷ்ணுவுக்குரிய கேசவாதிபன் னிரண்டுநாமங்களில் நாராயணனென்பது, மூலமந்திரமும் பரி பரியாயபதமுமாதல் பற்றியென்க. கேசவன் என்பதற்குப் பிரம னையுமீசனையுந் தன்னிடத்திற் பெற்றவன் என்றுபாஞ்சராத்திரி கள்பொருள்கூறுவர். பிரமனைத்தானே பெறறதுண்டாயின், அப்

பிரமனுடைய தலை சிவபெருமானாற் கழிந்ததை மீண்டுமேன் உண்டாக்கிக்கொடுத்திலர்? சிவனைப்பெற்றதுண்டாயின், அச்சிவனிடம் கைலைக்குச்சென்று பிள்ளைவரம் வேண்டியேன்யாசித்தனர்? பிருதிவி அப்புத் தேயுக்களில் பிருதிவி அப்புவினும், அப்பு தேயுவினும் உதித்து மொடுங்கியும் வருதல் சகசம். அவற்றின திட்டான தெய்வங்களில் முறையேபிரமன் விஷ்ணுவினிடத்தும், விஷ்ணு வுருத்திரனிடத்துந்தோன்றியும், ஒடுங்கியும் வருதல் சகசம். தேயு அப்புவிற் பிறப்பினன்றோ விஷ்ணுவினிடம் சிவன் பிறத்தல்கூடும்? அப்படியே தேயு பிருதிவியிற் பிறப்பினன்றோ பிரமனிடஞ் சிவன்பிறத்தல் கூடும்? திரிமூர்த்திகளி லொருவராகிய வுருத்திர மூர்த்தியே பிரமவிஷ்ணுக்களிடம் பிறத்தல் செல்லாமையின், துரியமூர்த்தியாகிய பரமசிவம் பிரமவிஷ்ணுவாதி பசுக்களிடம் பிறந்தாரென்பது சர்வாபத்தமென்க. உண்மையில், கேசவன் என்பதற்குப்பொருளை விசாரிக்குங்கால், சவத்தைத் தலையிலுடையவனென்றுவெளிப்படும். தக்கனுடைய யாகத்தில் சிவாபராதத்தா விறந்த தெய்வப் பிணவுடல்களை விஷ்ணுவினுடைய தலையிலேற்றி அவனைநாகபாசத்தாற்பிணித்து அந்தயாககுண்டத்தைச் சூற்றிவரும்படி வீரபத்திரர் தண்டித்த மான்மியம் பைப்பலாதம், காந்தமுதலியவற்றிற் கூறப்பட்டமை காண்க.

விசுவகாத னென்னுஞ் சொல்லானே பூரணகர்த்தா வாந்தன்மை பெறப்படுமுண்மை தோன்ற அறைதருமென்றுகூறினர்.

பிரமாணஞ்செய்யும் பொருட்டணுகிய வியாதமுனிவருக்குச் * சேய்மைப் பட்டவராகு முண்மைதோன்ற அவ்வகிலேச னென்றுகூறினர், இன்னும்விசுநாத னென்பதற்கு மேலிடத்தில் அகிலநாதனென்படி அவர்க்கே விசுவேச னென்னும் பேருண்டென்பதைவிளக்கும் பொருட்டே அவ்வகிலேச னென்றுனெனினுமமையும். சேய்மைப்பட்ட வரப்படியே யாகாதபடி அவருக் † கண்மையராய்த் துசத்தம்பமாகி வியாதமுனிவர்நிற்றல்தோன்ற முன்பு என்றுகூறினர்.

* சேய்மை—தூரம்.
† அண்மை—சமீபம்.

நேர்ந்தவிவாதம் பரிஷ்காரப்பட்டு வேறு ஆசங்கைக்கிடம்
பெறுமைதோன்ற நாட்டியவென்று கூறினர். எங்ஙனம் பரிஷ்
கரிகக்ப்பட்டதெனின், விளம்புதும். வியாதமுனிவர்பால்வேதங்
களேயும், புராணங்களேயும், பிறகலேகளேயு முணர்ந்தமுனிவர்கள்,
அவற்றுற்றெளிவுபெறுராகியோர்பசல்வியாதனையடைந்து தேவ
ரீரிடங்கேட்டவுபதேசங்களாலெமக்குச்சந்தேகமே அதிகரிக்கின்
றது. ஆகையால், நான்முகமா யெங்களுக்குப தேசித்தலொழிந்து
தேவரீருடையவுள்ளத்துண்மைப் பொருளாகத்தெளிந்திருக்கும்
பரமபதி யாவான் இவன் என்று பிரமாணித்துக் கூறல்வேண்டு
மென்று கேட்டனர். அப்போது வியாதமுனிவர் அவர்களே
நோக்கி நாராயணனே பரமபதியென்று பிரமாணித்துக்கூறினர்.
அவர்கள் வியாதனைநோக்கித் தேவரீர் காசியில்விசுவநாதர் சந்நி
தியின்கண்வந்து இவ்வாறு சொல்லவேண்டு மென்றுகேட்டனர்.
அதற்கிசைந்து, அப்படியே சிவசந்நிதியில்நின்றுகொண்டு இரண்
டுகைகளேயு முயரவெடுத்து நாராயணனே பரம் என்று கூறினர்.
உடனே யிரண்டு கரங்களுந் தம்பித்துத் தம்பமாய்நின்றனர். அப்
போது நந்திபகவான் வெளிப்பட்டுத் தம்பித்துநின்ற வவருடைய
விரண்டுகரங்களேயும் வாள்கொண்டுசேதித்தனர். உடனேவிஷ்ணு
மூர்த்தியுமங்குவந்து வியாதமுனிவனைப் பார்த்து "తత్త్వంమేవచ
వదంవ్యాసా శృణుమాధ్యయదాధునావత్। అహమేవజగత్కర్తా మమకర్తా మహేశ్వరః।
తస్యదేవాదిదేవస్యకర్తా కోపినవిద్యతే" என்றுகூறினர். என்பது;—மூடனுகி
யவியாசனே! சத்தியமாய்ச் சொல்லுகிறேன் கேள். உலகத்துக்
கெல்லாம் நானேபதி யென்பதுண்மை. எனக்குப் பதியாவார்
மஹேசுவரரென்றறிவாயாக. மஹாதேவராகிய அவர்க்குமேலொ
ருபதிப்பொருள் கிடையாதுஎன்று பெறப்படுதலறிக. இவ்வுப
தேசத்தைவியாத முனிவருக்குச் செய்துவிட்டு விஷ்ணுபகவான்
யதேச்சை யாய்ச் சென்றனர். பின்னர் *முனிவர்கள் தம்மிருப்
பிடஞ்சேர்ந்தனர். வியாதமுனிவர் நந்திபகவானே வணங்கி அடி
யேன்பாலிரங்கி இரண்டுகரங்களேயுமருளல்வேண்டுமென்றுபிரார்
த்தித்தபடியே அருளப்பெற்றுக் கொண்டனர். நந்திதேவர் தாம்
செய்தருளிய சிவபரத்துவ தாபனம் யாண்டுமுலகினிலேபெற்
றிருக்கும்பொருட்டு வியாதமுனிவனையே விசுவநாதர் சந்நிதிக்
கெதிரில் வெற்றிக்கொடித்தம்பமாக நிறுத்தினர். இவ்வுண்மை
சநற்குமார சங்கிதையிற் காண்க.

சிவபாரம்ய விடயத்தி னேர்ந்தவாதத்தில் வெற்றி நந்திபகவான் பக்கல்சார்தலால் அவ்வெற்றியைக் காட்டுமறி குறியாகவவர் நிறுத்துமுறைமை தோன்றச்சயத்தூணென்றுகூறினர்.

அவரங்ஙனநாட்டிய தூண் அவராற்கரங்ளொழிந்து வாயடைந்து தம்பாகாரமாய் நின்றவியாதரென்பது தோன்றவவனேயாகவென்றுகூறினர். சிவபெருமானுக்கு வாகனமாகிய நந்திபகவான் தமக்குள்ள வன்புமபிமானமுங் கொடியாவாருக்கு முளவாதல்கருதி யமைத்தாரென்பதுதோன்றக் கொள்ளிமனுமையும். தானுமோர் வாகனமாதலாலபிமானம்பற்றி விஷ்ணுவே யாண்டடைந்து வியாதருக்கறிவுறுத்தியபடி.

சிவநிந்தைசெய்வானைத் தண்டித்தறிவுறுத்தல் விகிதமென்பதுதோன்றமுறைநிறுவி யென்றுகூறினர்.

அறிவுறுத்தவுணர்ந்து வழிபட்டார்க்கிரங்குதன் முறைமையென்பது தோன்றவருள் கொழிக்குமென்று கூறினர்.

பெருமானைத்தாங்கி வாழ்தன்மாத்திரமே யன்றிச் சைவத்துக்கு முதலாசிரியருமாந் தன்மைதோன்ற நந்திபிரானென்று கூறினர்.

முடியிற் சூட்டிக்கொள்வது பூவென்பதுதோன்றஅடிக்கமலமென்று கூறினர். இன்னும் அவரடியிற் சூடிய கமலமெனினுமொக்கும்.

மலைமுடிப்பது * குஞ்சியிலென்பதுதோன்றமுடிக்கொள்வாமென்று கூறினர். முடிவுத்தமாங்க மாதலறிக. இன்னும், அவர் திருவடியைமுடிமேற்கொள்வாமென்பது முடிமேலிருக்கக்கொள்வாமென்றுபொருள்கொண்டு அவர்திருவடிநீழலில் வசிக்கப்பெற்றுமெனினுமமையும். எம்முடையதலையிற்பிரமனெழுதியவெழுத்தை அவர்காலாற் றுடைக்கப் பெற்றுக்கொண்டேமென்பதும் பொருந்தும். அவரிடம் திருவடிதீக்ஷை யடையப்பெற்றேமென்பதுமொன்று. இன்னும், முடிக்கொள்வாமென்பது நந்திதேவர் தருமதேவதை யாதல்கண்டென்க. தருமம் என்பது யாவராலுஞ் சிரசாகவகித்தொழுகற் பாலதாகிய பதியினுடைய வாணையின்

* குஞ்சி=குடுமி.

வொட்டாதுஎன் தடுக்கக்கூடாது? அதில்தப்பிப்பிழைக்கலாமென்
றுகப்பலைக்கடத்திக்கொண்டு செல்லுகையில்நடுவழியில் கப்பலு
டைந்தாலென்செய்வார்?எங்கேஅவர்தலைநீட்டட்டும்பார்ப்போம்.
அன்றியும், அன்னகாலங்களில் அவர்க்குப்பித்தேறியிருந்தாலென்
செய்வார்? அவர்க்குக்கண்கெட்டிருந்தா லென்செய்வார்? அவர்க்
குக்காதுகேளாதிருந்தாலென்செய்வார்? அவர்க்குவாயடைத்திரு
ந்தாலென்செய்வார்?அவர்க்குக்கையுங்காலுமுடமாயிருப்பினென்
செய்வார்? அறியவும், காணவும், கேட்கவும், பேசவும், பற்றவும்,
நடக்கவுமாகிய வியக்கங்களின்றி யொருசாதனமு மவர்க்குண்
டாகாதே! அவர்க்குப்பித்தும், குருடும், செவிடும், கைகான்முட
முமாயின் மேல்விபத்துங்களில் அவர்எப்படித்தப்புவார்? யோசித்
துச் சொல்லட்டும் பார்ப்போம். பிறர் தடுத்தலா லெனின்,
அவரும் அப்படியாயின் என்செய்வார்? ஆகவே, அவரவர்கன்
மத்தளவாய்த் தனுகரணபுவனபோகங்களை மாயையிலேநின்றுங்
காரியப்படுத்தி அவராணவ பாசமறும்பொருட்டுப் பெருமான்
செய்யுமுறைமை யின்னபடித்தென் றன்னவன் பொன்னடிக்
கன்புசெலுத்தி அறிந்துபிழைப்பார்களாக. நம்பரமசிவன் செயல்
யாவும் உயிர்கள்பொருட் டேயாதலால் அவரவர் கன்மத்தளவா
யொன்றைச் செய்தலும், மீண்டும் அதனைத்தவிர்த்தலும், அவர்
கடன்மையாதலறிக. ஆகவே, அவர்செயல் நம்கன்மத்துக் கேற்ப
அவரால் தடுக்கப்படுமேயன்றி மற்றெம்மாலும், பிறராலும், யாரா
லுந்தடுக்கமுடியாது ! முடியாது !!

இப்படியே, அந்நாத்திகப்பாவிசர் வினவித்திரியும் வினாக்
களைச்சற்று விசாரிப்பாம். உலகத்தைக்கடவுளுண்டாக்கினாரென்
றால், அக்கடவுளை யுண்டாக்கினவர்யாவர்? அவரை யுண்டாக்கின
வர் யாவர் ? என்றின்னபரியாசம் பேசுவார்கள். இருட்டறையிற்கி
டக்கும்பொருள்களைக்கண்களுக்குக்காட்டுவது ஒளியேயாக, அவ்
வொளியைக் காட்டுவது வேறெந்த வொளியாக அவர் கண்டா
களோ அறியேம். தீபத்தைக்கொண்டு தீபத்தைத்தேடுவது அமை
யாமைபோல்கடவுளை மற்றொருகடவுள் உண்டாக்குதல்அமையா
தெனவறிக. கடவுள் உலகத்தை யுண்டாக்கினமை தான்நிமித்
தனாயிருந்தாகையால் தீபதிட்டாந்தம் எப்படிப்பொருந்தும் ?
மாயையிலே நின்றும் உலகத்தைக் கடவுள் காரியப் படுத்தியது

போலத் தீபம் எதிலே நின்றும் எதனைக் காரியப் படுத்திற்று? எனின், அப்பொருள்கள்புலப்படாமையினின்றும்புலப்பாட்டைக்காரியப்படுத்தினமைகாண்க. அன்றியும், அசேதனமாகியமாயையே யுலகமாகக் காரியப்பாட்டை யடையுமன்றிச் சேதனமாகிய ஆன்மாவாவது, கடவுளாவது காரியப்பாட்டை யொன்றுமடையாதெனவறிக. இவ்வுண்மை விசாரமின்றி வீணே வினவித்திரிவது பாவிசவிகார மென்க. இவர் வாயடங்கும் பொருட்டுப் பின் வினாக்களை நம்மவர் கேட்கக்கடவர். உலகம் சுபாவமா யொருவரா லுண்டாக்கப்படாது தானே யுளதெனின், அது எங்கே யுள்ளது? மண், சலம், தீ, காற்றுஎன்னும்நான்கும்ஒன்றிலொன்று பெரியதாய், ஒன்றுமற்றொன்றுக் கிடங்கொடுத்திருப்பது போல் நாலாவதுபூதமாகியகாற்றுக்கிடங்கொடுத்திருப்பது எது? என்று கேட்கில் அவர்தரும் விடையாது? ஆகாயம் அவர்க்குக் காட்சியாகாமையால் அதையுடன்பாடாகக் கொள்ளார். அதனுண்மையை யீண்டுவிரிப்பாம். (ஆகாயமுங்காலும் போலவசைற்ற, தேகாண்பரிபூரணம்) என்னும் பிரமாணத்தால் ஆன்மாவுக்குண்டாகிய பெத்த முத்திகளினிலக்கணம் வெளிப்பட்டது. ஆகாசத்திலடங்கியிராது காற்றுவீசப் பெற்றபோது பெத்தத்துக்கும், அவ்வாகாசத்தில் அடங்கி நின்றபோது முத்திக்கும் உவமிக்கப்பட்டது. இதனால் காற்றுக்குவேறாய், வியாபகமாயுள்ள தொருபொருள் ஆகாயமென்னும்பெயர்த்தா யுள்ளதென்னுமுண்மை வெளிப்பட்டது. அவ்வாகாயம் உளதென்பதை யின்னும் பரியா லோசிப்பாம். புழுக்கமான வோரறையில் விசிறிகொண்டு விசிறுகையில்காற்று வெளியாகின்றது. அந்தக்காற்று எங்கிருந்துண்டாயிற்று என்று யோசித்தால் அதுவெளிப்படுவதற்குமுன்னரடங்கியிருந்ததானம் ஏற்படவேண்டி யிருக்கிறது. அது ஒன்றிலு மடங்கி யிருந்ததில்லையெனின், விசிறுவதற்கு முன் அதற்கிருப்பிடமெங்கே? விசிறியினின்று மேதாவது முளைத்ததா? அது தானே யிருந்ததெனின், ஏன் விசாமலிருந்தது? வீசாமலிருத்தலும் அதற்குச்சுபாவமெனின், காற்றுக்குச்சலனமும், நிர்ச்சலனமும் சுபாவமென்றுசொல்லவரும். அப்போது, நெருப்புக்கும் அப்படியே வெம்மையுந் தண்மையுஞ் சுபாவமென்று சொல்லவரும். இன்ன தோஷம் சம்பவிப்பதால் பிரத்தியட்ச விரோதத்தை யபேட்

சித்த அந்தத்தூர்வாதம் நிரஸ்தமாம். உண்மை விசாரத்தில் அது வெளியாவதற்குமுன்னரடங்கியிருந்த தானமேர்ப்படவேண்டியிருத்தலால் அதுவே ஆகாயம் என்னும்பெயர்த்தாய் விளங்கும். அடங்கியிருந்தபோது சலன மின்மையும், வெளிப்பட்டபோது சலனமும் அதற்குண்டான தன்மையால், அதைச்சலிக்கவொட்டாது தன்னிலடக்கி வைத்தும், வெளிப்படுத்தியும்பிரகாசிக்கும் ஓர்பொருள் வியாப்பியமாகிய அக்காற்றுக்கு வேறாய் வியாபகமாயுள தெனவெளிப்பட்டது. ஆகவே, அந்த ஆகாயம் எங்கே தங்கியிருக்கின்றது? என்னும் வினாநிகழும். இப்படியே வினாக்கள் முடிவுபெறாது நிகழுமாகையால் அவைகட்கு அப்பெயர்கள் என்னவிடை தருவார்கள்? ஆத்திகராகிய யாமோவெனின், கடவுளிடம்முடித்து அவர்சேதனராதலைக்காட்டி அவர் தங்குவதற்குத் தானம் வேண்டாமையை நிரூபித்தல் அமைவுடைத்தாம். இந்த நியாயப்படியே எல்லாவற்றையு முண்டுபண்ணும் அவரை யுண்டுபண்ணுதற்கு வேறொருகடவுள் வேண்டியதில்லையென்னுமுண்மை வெளிப்பட்டது. எல்லாவற்றையுந் தாங்கும் அவரைத் தாங்குவதற்கும், எல்லாவற்றையும் ஆக்கும் அவரையாக்குவதற்கும், எல்லாவற்றையுங் காக்கும் அவரைக் காப்பதற்கும், எல்லாவற்றையு மழிக்கும் அவரையழிப்பதற்கும் வேறு கடவு ளில்லாமையால், அவராக்கப்படாதவ ரெனவும், காக்கப்படாதவரெனவும், அழிக்கப்படாதவ ரெனவும் நிச்சயிக்கப்பட்டது. இவ்வுண்மையறியாது பாலிசச் சேட்டையால் வெந்ததைத் தின்று வந்ததைப்பேசித் திரிதல் அசப்பியமாதல்காண்க.

இனி அவ்வாபாசகரை நாத்திகரென்று நம்மவர்கூறுவது அவர்க்குப்பரிபவமாய்க் காண்டலால், அந்தப்பெயரை யொழித்துக்கொள்ள அவர்வழிதேடுகின்றனர். எங்ஙனமெனின், நாத்தி என்பதற்குஇல்லை அல்லஎன்னும் பொருள்களுண்டெனவும், அவ்விரண்டில் அல்லஎன்னும் பொருளே தாமுரிமையாய்க்கொண்டு ஆத்திகர்கூறு மொவ்வொன்றையும் அல்ல அல்லவென்று மறுத்து வருவதெனவும், அதனால் இல்லையென்னும் பொருளையவலம்பிக்கும் வாதம் தமக்கேலாததெனவும் இந்திரசாலவித்தை காட்டுகின்றனர். அல்ல அல்லவென்று மறுப்பதுகொண்டே அப்பொருளையுடைய நாத்திகர் என்னும்பட்டம் அவர்க்குண்டான

தெப்படி? அன்னோர்கூறுவதை அல்ல அல்லவென்று மறுக்கும் ஆத்திகர்க்கு அப்பெயர்வராததென்னை? நாத்தியென்னுஞ்சொல்லுக்கு அல்லஎன்னும் பொருளுண்மையே அவர் சமயவுடன்பாடாதலுக்குப் பிரமாணமென்னை? அவர்சமயப்பிரவர்த்தகருள் பூர்வத்தில் இவ்வபிப்பிராயத்தைக் காட்டினவரொருவருமில்லாமையால் நவீன பாண்டித்யபிரகடனமாகி புல்லங்கனப்பட்டழியும். பூர்வப்பிரமாணம் எமக்கு வேண்டியதில்லை. யாம் கூறுவதே பிரமாணமெனின்; பிரமாணம்வேண்டாதபோது இல்லை அல்ல என்னும் பொருள்கள் நாத்திஎன்னுஞ்சொல்லுக்கு உண்டென்று பிரமாணத்தையே தழுவிக்கூறியதென்னை? அவரிட்டப்படி வேறு பொருளேதாவது ஏன்கூறலாகாது? (நாத்திகப்புல்லர் கோணசையிற்பட்டுழல்) என்றுகூறும் ஆன்றோர் வழக்குடைமையால்,அதைப்பரிகரித்துக்கொள்ள முயலல் கூடிவராதகாரியமாம். ஆகவே, (மதியிலாதவனே) என்று ஒருவன் மற்றொருவனைவைதால் அதனாலுண்டாகும் அவமானபரிகாரமாய், என்னைப்புத்தியிற் சூரியனென்பதாக்கும் அவர்கருத்தென்று வியக்குமொருவனையே யொத்தவராயினர். மதியிலாதவன் என்பதற்குச் சூரியனையொத்த புத்திமான் என்னும் பொருள்பாராட்டி மதியுடையார் பலரும் யாம்மதியிலாதவர்என்று வெளிப்படுவார்களா? நாத்தியென்னுஞ்சொல்லுக்கு அல்லஎன்னும் பொருள்பாராட்டி ஆத்திகர்பலரும் யாம்நாத்திகர் என்று வெளிப்படுவார்களா? மதியில்லாதவனே தனக்குண்டாகிய அவமானபரிகாரமாய் அவ்வாறுகூறிமகிழ்வன். அப்படியே இல்லையென்னும் பொருளைக் கொள்ளும் நாத்திகனே தன்னுடைய தோஷபரிகாரமாய் அவ்வாறுகூறிமகிழ்வன். நாத்திஎன்னுஞ்சொல்லுக்கு அல்லவென்னும் பொருளே சமயவழக்கிற் பட்டதுண்மையாயின், எல்லாச் சமயங்களும் நாத்திகங்களாய்முடியும். யாவரும் ஒருவரையொருவர் அல்லஅல்லஎன்று மறுத்துவருமுண்மையால். அல்லஅல்லவென்றுஒருவர் கூறுவதை மற்றொருவர் மறுத்துத்தங்கள் தங்கள் சித்தாந்தங்களை நிறுத்துவதால், சைவர், ஸ்மார்த்தர், வைணவர் என்னும்பட்டப் பெயர்களுடன் வெளிப்படல்போல், பிறமதங்களை அல்லஅல்ல என்றுமறுத்துப் பின்னர் அவர் நிறுத்துஞ் சித்தாந்தத்தால் அவர்க்கு வழங்கற்பாலதாகிய பட்டப்பெயர்

யாது? அதற்குப்பிரமாணமென்னை? எமக்கொருகொள்கையுமின்று. பிறரைஅல்லவென்று மறுப்பதே யெங்கொள்கையெனின், அப்போது கடவுளில்லை, ஆன்மாவில்லை, என்பவரை மாத்திரம் அவர்மறுக்காததென்னை? அதுவே அவர்கொள்கையாகவும் அவர் விவகரித்து வருவதென்னை? கடவுளுண்டு, ஆன்மாவுண்டு, கன்மமுண்டென்னும் ஆத்திகமார்க்கங்களை விரோதித்து அவற்றையில்லையென்றுநாட்டுவதற்குமுயல்கின்ற வக்கீல்களாய்அவர்திரியக்கண்டவின், இல்லையென்னும் பொருளைத்தரும்நாத்திகர் அவர்என் ஆகமாட்டார்? அல்ல அல்லஎன்று மறுப்பதேயன்றி வேறு ஒருகொள்கையினுஞ் சாராதுநிற்பின், இல்லையென்னும்பொருள் அவர் தலையிலேறி அவர்நாத்திகராகமாட்டார். அல்லவென்று மறுத்தல்கொண்டும் நாத்திகராகமாட்டார். அவர்அல்ல அல்லவென்று மறுத்துவருங்கால், உண்மைப்பொருள் தடத்தத்தில் அவர்மறுப்பு மறுக்கப்பட்டு அவர்குணப்பட்டுய்ய விடமுண்டாமாகையால், அவர்களையுண்மை விசாரஞ்செய்யும்பரிபாகிகளென்றுமேலோர் பலருங்கருதி மகிழ்வர். இப்படிக்கன்றி வாயில்வந்தபடிக்கெல்லாம் பேசித்திரிவது கேவலம் அறியாமையென்க.

இன்னவாபாசசூளாமணிகள் கடவுள் செயலைப் பிரத்யக்ஷமாய்க் கண்டாலொழிய அவரிருப்பை அங்கிகரிப்பதில்லையென வாய்வம்பாடக் கற்றாரேயன்றி அன்னோர் கொள்கையின் முடிபையாவது அவர்பிரத்யக்ஷமாகக் காண்பதுண்டோவென்னுமாசங்கைக்குத்திருப்திகூற வகையறியாது மயங்கியேநிற்பர். என்னெனின், கடவுளொருவருண்டென்பதை அவருடைய சிருட்டியால் அறியத்தக்கது என்னும் நம்மவரைநோக்கி அவர்சிருட்டிக்கப் பார்த்தவர்யாவர்? பார்த்துவந்துசொல்லக் கேட்டவர் யாவர்? பார்த்தவருங் கேட்டவருமில்லாமையாலும், வீடுமுதலியவற்றை யுண்டுபண்ணுவாரைப்பார்த்தலும், பார்த்தவர்சொல்லக் கேட்டலுங் கூடுமாகையாலும், வீட்டைக்கட்டின ஒருவனுண்டெனநிச்சயித்தல்போல, உலகத்தையுண்டுபண்ணினவனொருவனுண்டெக்கூறுதல் பிழையென்று பிதற்றுகிற்பர். கடவுள் சிருட்டித்ததைக்காட்டு என்றுதடுமாறுகின்றவன்னோர் தங்கொள்கையின்படிப் பூதங்களொன்றோடொன்றுசேர்ந்து ஒருபொருளுண்டாகுங் காட்சியையாவது தாம்கண்டார்களா? பிறர்க்குக்கா

ட்டுவார்களா? ஆலம்வித் தொன்றினின்றும் சாகோபசாகங்களாய்க்காரியப்படும் விருட்சமானது அங்குரத்தினின்றும் தளிர் இலை, அரும்பு, மலர், காய், கனிமுதலியவங்கங்களோடு விர்த்தியடையுங்கால் எந்தெந்தப் பூதங்களில் எவ்வளவெவ்வளவுகூறுகள் சேர்ந்து முறையே, அன்ன வேறுபாடுகளான வுருவங்களுண்டாகக்கண்டார்கள்? எந்தெந்தப்பூதங்களில் எவ்வளவெவ்வளவு கூறுகள் குறைந்ததனாலாவது, அதிகப்பட்டதனாலாவது அன்னவேறுபாடுகள் கருகிப்போதலும், உதிர்ந்து போதலும், பின்னமாய்ப்போதலுமாகியதன்மையைக்கண்டார்கள்? செம்மை, வெண்மை, கருமை, பசுமை, புகைமை முதலிய வர்ணபேதங்களும், கார்ப்பு, உவர்ப்பு, கைப்பு, இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு முதலிய ரசபேதங்களும், மனிதர், ஆடு, மாடு, குதிரை, கழுதை, நாய், பன்றி, புறவு, ஆந்தை, குயில், மயில், காகம், அன்றில், தேள், பாம்பு, அட்டை, புழு, ஈ, எறும்பு, கொசுகு, மூடுமுதலியவுயிர்ப்பேதங்களும், அவற்றுள் ஆண், பெண், அலி என்னும் இலிங்கபேதங்களும், அத்தி, பலா, மா, கமுகு, பனை, தெங்கு, புன்னை முதலிய விருட்சபேதங்களும், கதிர், மதி, உடுமுதலிய ஒளிப்பேதங்களும், இன்னுமநந்த மாயுள்ள நானாவிசித்திர தரமான சிருட்டிபேதங்களும் எந்தெந்தப் பூதங்களில் எவ்வளவெவ்வளவு கூறுகள் தாமே சேரவுதிக்கக் கண்டார்கள்? பசி, தாகம், நித்திரை பயம், லஜ்ஜை, கோபம், சாந்தம், முதலாகியபற்பலபேதங்களுமுண்டாகும் விதம் எப்படியாகப் புகுந்து பார்த்தார்கள்? மேற்கூறிய சிருட்டிவேறுபாடுகளில் ஏதாவதொன்றைக் கண்டுபிடித்துரைப்பாருளரேல்வெளிவரட்டும்பார்ப்போம். இதனால், கடவுள் உலகம் படைக்கையில் யாரும்பாராமையால் அதுகொள்ளத் தக்கதன்றெனக்கோணிக் கூறியது குதர்க்க மாயினமைகாண்க. ஆகவே, யாவும் சடமாகுந்தன்மையால், சடங்கள்தாமே தொழிற்படாதவுண்மையால், அவற்றைக்காரியப்படுத்திய சித்தாயிருப்பானொருவனுள னென்பது பசுமரத்தாணி யறைந்தாலென்ன நாட்டப்பட்டது.

பூதங்கள் நான்கும் சடமாகையால் அவைகட்கு அறிவுடைமை கூறுத தொன்றேயன்றி யியக்கங்கூறுமை யாண்டமையும்? அவைகளில்காற்று ஒன்றின்பிரேரணையின்றித்தானேசரித்

தலாலெனின், இது தோஷ கிரஹணமென்பதை விளக்குறும். அறிவில்லாதபொருள் தானேயசையு மநுபவம் உலகிலுண்டா? ஒருபொருளு மில்லையாகக் காற்றுமாத்திரமசையு மென்பதென்னே? இது உலகம் தானேயுளது என்பது போல்வ தொன்றேயாம். உலகம் கடவுள்உண்டாக்கினல் உண்டாகுந் தன்மையேபோல் காற்று அவரசைவித்தா லசையுந் தன்மைத்தேயாம். ஒருபொருளும் அவனையன்றி யசையாதென்பது சத்தியமாகையால். யாவுஞ்சடமும் அவர் சித்துமாகு முண்மைமால். (அடிக்கின்ற காற்றேநீ யாராலேதான் பேராதேசுழல்கின்று யென்பேன்) எனவும், (அவனன்றியோரணுவு மசையாது) எனவும்போந்த ஆன்றோரநுபவ வுரையானுந் தெளிந்திடுக. இதனல், உலகம் சுற்றிவருகிறது என்பதும்சுற்றிவரச் செய்வானொரு முதலையபேக்ஷித்திருத்தலாலென்பது தெளியத் தக்கதாம். உலகம், சித்தும், அசித்துமாகிய விருபகுதியுடைத் தாகையால், அவற்றுள்சித்து அறிவித்தாலறியவும், அசித்து அசைவித்தாலசையவும் விளங்குந் தன்மையினவாம். சேதனத்தை அறிவிக்கவும், அசேனத்தை யசைவிக்கவும் வல்லபெரியோன் ஞானக்கிரியாஸ்வரூபனுய் விளங்குந் தன்மையுண்மையால், அவனுடைய ஞானக்கிரியைகளையன்றி ஒருபொருளும் தானேஅறியவும், அசையவுங்கூடாத பண்பால், அறிவில்லாதசடமாகிய காற்று தானே வீசுகிறது என்பது சர்வாபத்தமெனவறிக. சேதனனுக்கு அறியுந் தன்மையாகிய ஞானமும், அசேதனத்துக்கு அசையுந்தன்மையாகிய கிரியையும் உரிய சத்திகளாயினும், ஒற்றெலிகள் உயிரொலியையன்றித் தலைகாட்டாவாறுபோல் சிவனுடைய ஞானக்கிரியைகளியக்குவித்தாலன்றித் தாமேயியங்கப்பெறு வெனவறிக.

இனி யிவ்வந்தசிரோமணிகள் கூறும் அசங்மார்க்கத்தை உயிர்கள்மயங்கிக்கெடாதவழி நம்மாசாரியர்கள் எடுத்துக்காட்டிக் கண்டித்திருக்குமுண்மையை யீண்டு வெளிப்படுத்துவாம்.

"இந்திரபுரோகிதனியம்புமொருநூலின்
நந்திரமெனு தறிவிலேட்டருளிலாமல்
சந்தனைபுயத்தமண மாலைகடயங்க
வுந்தியுலகத்து லுலகாயதனுரைப்பான்."

இ-ள். தேவராஜனாகிய இந்திரனுக்குப் புரோகிதராகிய பிரகஸ்பதிபகவான் அவனை மயக்கும் பொருட்டுக்கூறியநூலினுடைய தந்திர மென்றறியாமல், அப்படியறிவதற்கு மேலானஞானமும், திருவருளுங்கைகூடாமையால், சந்தனம்பூசிய தோளினிடத்து வாசனையுடைய மாலைகள்தூங்க வுலகத்தில் வெளிப்பட்டு உலகாயதன் அதனையே மெய்யென்று மயங்கிக் கூறுநிற்பன். எ-று.

தேவகுருவாகிய பிருகஸ்பகவான் மயக்கத்தைத்தரும் அந்நூலையேன் கூறினரெனின், நூறு அசுவமேதஞ்செய்பவர் இந்திரபட்டத்துக்குவருவர் என்பது பிரமாணமாகையால், அப்படி இந்திரபட்டத்தை யடைந்தவர்க்கு அவர்கள்செய்த அசுவமேதங்களால் அடையத்தக்க பயனெதுவோ, அதனின் மேலிட்ட பயனையடைவது மேலிட்ட புண்ணியமில்லாமையால் கூடாமையால், அன்னபுண்ணிய மில்லாத வவ்விந்திரர்க்கு அப்புண்ணியமுடையவர்க்கே யெய்தற்பாலதாகிய பதிஞானம் சித்திக்கவிடம் பெறுமைநோக்கி, அவர் பரிபாகத்துக்கேற்ப அவரடைதற்குரிய போகநுகர்ச்சியையே வற்புறுத்தியுணர்த்தினமைகாண்க. அவர் புண்ணியம் அதற்குமேலிட்ட சித்தியையடைமாறு வழிவிடாதவுண்மையால். தேகமே ஆத்மா, போகமேமோக்ஷம் என்னும் ஞானமே ஆண்டுணர்த்தற் பாலதாயிற்று. அதற்குமேல் ஆன்மாவென்றுவது, கடவுளென்றுவது வேறு பொருள்களுண்டெனக் கூறின், அவ்வான்மா எக்காலத்துள்ளது? என்ன விலக்கண முடையது? அதற்கு இத்தேகம் எப்படிவந்தது? ஏன்வந்தது? யாவர் கொடுத்தனர்? அவரிலக்கண மென்னை? அவரொன்றுள்ளவர்? அவருக்கும் ஆன்மாவுக்குமுள்ள சம்பந்தம் யாது? அவரால் ஆன்மாவடையும் பயன்யாது? ஆன்மாவுக்கு ஒருகாரியத்தை அவர் ஏன் செய்கின்றனர்? அதற்கு ஆவசிகமென்னை? அவர்செய்யாக்கால் ஆன்மாவுக்குண்டாகும் கஷ்டம் யாது? அவரப்படிச் செய்வதனால் அவருக் குண்டாகும் லாபம் யாது? என்றின்ன விசாரம்பிறக்க விடமுண்டா மாகையால், அப்படிவிசாரிக்கையில் உண்மைஞானம் கைவரப்பெறு மாகையால், அப்படி அதுசித்திக்கையில் முத்திகைவல்ய மாகுமாகையால், அப்படிப்பட்ட சத்திநிபாதத்தைப் பயப்பதாகிய பதிபுண்ணியம் அவ்விந்திரர்க்குக் கிட்டப்பெறுதபோது கேவலம் சாமானியதா

முகாந்தாருபமாகவே சிவனே பாப்பிரம்ஹமென்று முனிபுங்கவராகிய வியாசர் பாவித்தாரென்பது நிச்சயிக்கப்பட்டது. முன் சுலோகத்துக் குரித்தான ரிஷியே காரணமாய்க்கொண்டு அவருடைய கதையி னுதாரணத்தினலே பரமசிவனுக்குப் பரப்பிரம்ஹ பாவத்தினுடைய பிரத்தியட்சத் தன்மையானது பிரகாசிக்கப்பட்டது.

—:o:—

அவதாரிகை.

இவ்விடத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திரத்தினுதாரணத்தினுலேயும் அந்தப்பாரப்பிரம்ஹ பாவத்தை வெளிப்படுத்துகிறுர்.

சுலோகம்.

కైలాసశైలశిఖరే హరిపార్థదృష్టం । త్వాంబ్రహ్మనాథపరమం సముదీర్య సాక్షాత్
తల్లక్షణం త్వయి మనస్యత దిత్యుధర్మ్య । క్రాంతేక్షయ స్వభవతి స్ఫుటమాచచక్షే ॥౪॥

மொழிபெயர்ப்பு.

கண்ணனருச்சுன னிவராற்கயிலையெனு மலைச்சிரசிற்காணுமின்னை
யெண்ணுமுயர்வறுபிரம மெனவாழ்த்தி யெனையர்பா லெய்தாவச்சீர்
நண்ணுபரதருமத்தி னீயேநன்கிலகுநலத் தாலிவ்வேதப்
புண்ணியமாமுனிகின்சீ ரெவ்வளவாய்ப்புகன்றனனெம் புனிதவாழ்வே. (ச)

இ-ள். வாரீர்நாதனே! கைலாசமலையி னுச்சியில் ஸ்ரீகிருஷ்ணர்ச்சுனர்களாற் காணப்பட்டிருக்குந் தேவரீரைச் சாட்சாத் பிரம்ஹமாக ஸ்தோத்திரஞ்செய்து, அப்பிரமத்துக்குரிய தர்மத்தில் வேறொருபொருளின்றித் தேவரீரே தோன்றிய படியால் அப்படிப்பட்ட தேவரீர் விஷயத்தில் அப்பிரமத்துக்குரிய லட்சணத்தை யெவ்வளவு பிரகாசமாய் இந்தரிஷியானவர் சொல்லியிருக்கிறுர். எ-று.

கிருஷ்ணர்ச்சுனர்கள் பாசுபதாஸ்திர சந்தானப் பிரகாச விசேஷத்தைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஸ்ரீமஹாகைலாசத்தை யடைந்தபோது அப்பரமேசுவரனுடைய பெருமையின் வர்ணனையானது அடியில்வருமாறு மஹாகவிசுவான வியாசபகவானல் பிரவசனிக்கப்பட்டது.

స్తూయమానం స్తవైర్దివ్యై రుషిభిర్బ్రహ్మవాదిభిః
గోప్తారంసర్వలోకానా మిష్ట్వాసపరముత్తమం
వాసుదేవస్తుతందృష్ట్వా జగామశిరసాక్షితిం
పార్థేనసహధర్మాత్మా గృణంబ్రహ్మసనాతనం
లోకాదింవిశ్వకర్మాణ మజమీశానమవ్యయం
తమసఃపరమంజ్యోతి ఖంవాయుజ్యోతిషాంగతిం
స్రష్టారంవారిధారాణాం భువశ్చప్రకృతేఃపరమ్
దేవదానవయక్షాణాం మనుష్యాణాంచశాసకం
యోగినాంపరమంబ్రహ వ్యక్తంవేదవిదాంనిధిం
పరాపరస్యస్రష్టారం ప్రతిహర్తారమేవచ
కాలకేయంమహాత్మానం శక్రసూర్యగుణోదయం
వవందతంతదాకృష్ణో వాఙ్మనోబుద్ధికర్మభిః॥

இ-ள். தேவலோகவாசிகளென்ன, வேதாந்தசீலர்களாகிய முனிவர்களென்ன ஆகிய இவர்களால் புகழப்பட்டவராகியும், சர்வபிரபஞ்சங்களையுங் காப்பாற்றுகின்றவராயும், தனுசுகளுக்குள் உத்கிருஷ்ட மாகிய பினாகதாரியாயும், உத்தமராயும் விளங்குங் குணநிதியும், சநாதன மூர்த்தியுமாகிய அந்தப்பரமசிவனைப் பார்த்துத் தர்மாத்மாவாகிய வாசுதேவரானவர் அருச்சுனனோடே கூட ஸ்தோத்திரஞ்செய்தனர். அஷ்டாங்கமாக நமஸ்காரமுஞ் செய்தனர். நமஸ்கார யோக்கியரான சிவன் எப்படிப்பட்டவ ரென்றால் உலகத்துக்கு ஆதிகாரண மூர்த்தியாயும், இவ்வுலகத்தையே காரியமாய்ப்படைத்தவராயும், க்ஞானவிக்ரஹ தேஜோநிதியாயும், சகலத்தையுமடக்கி யாளுகின்றவராயும், அழிவில்லாதவராயும், இருட்டுக்கு அப்புறப்பட்ட ஜோதிர்மயராயும், வாயுவாகாச நட்சத்திர முதலியவற்றிற்குக் கதியாயும், திக்குகள், தீர்த்ததாரைகள் முதலியவற்றைப்படைத்தவராயும், பூமியைச்சிருட்டித்தவராயும், பிரகிருதிக்கு அப்புறப்பட்டவராயும், தேவர் அசுரர், மானிடர்முதலியவர்களைச் சிட்சிக்கின்றவராயும், யோகிகளுக்கு உத்தமமான தெய்வமாயும், வேதங்களினாலே பிரகாசிக்கப் பட்டவராயும், வேதமறிந்தபேர்கட்குநிதியாயும், உயர்வுதாழ்வுகளை யுண்டு பண்ணினவராயும், சகலமானபேர்களுக்கும் பிரதிகர்த்தாவாயும், காலத்தைநடத்து

வெளிப்படலால், பரமதநிராகரணங்களும், ஸ்வமதசித்தாந்தமும் நம்மவர்செய்துவருமபிப்பிராயம்ஈதென வெளிப்பட்டது. இன்னும் விரிக்கிற்பெருகும்.

இவ்வுண்மையால், நம்மாசாரிய மூர்த்திகளால் கண்டிக்கப்பட்டொழியினும், சமணமுதலிய சமயங்களிப்போது மிருக்கலாமென்பது நிர்விவாதநிரஸ்தமென்க. அவ்வாசாரிய மூர்த்திகள் அவைகளைக் கடிந்தவுண்மை யெந்தவாதாரவாலறிதற்பாலதெனின், அன்னோர் திருவாக்குகளாகிய தேவாரம், திருவாசக முதலிய தமிழ் வேதங்களைக் கொண்டென்க. அவர் திருவாக்குகளில் சமணம், புத்த முதலிய சமயங்களின் சிறுமைகளையும், சைவ சமயத்தின் பெருமையினையும் நன்கு விளக்கியிருத்தல் காண்க. சமணமுதலிய சமயங்களைமாத்திரமேயன்றி யெல்லா மார்க்கங்களையும் அவற்றின் சிறுமைதோன்ற மறுத்து விவகரித் திருத்தலுங் காண்க. அவர்கள் காலத்தில் அவைகளில்லாவிடினும் பின்னர் முளைக்குமென்பது அறிந்தவராதலால். ஆன்மாக்களுடைய கன்மம் பல்வேறு வகைப்பட்டவுண்மையால், அவரவர் கன்மத்துக்கேற்பப் பல்வேறு வழிபாடுகள் அவசியமாதல்பெறும். ஆகவே, எல்லாமதங்களும் எந்தக் காலத்திலும் சிவிக்குமென்பது பெறப்பட்டது. அப்படிச் சிவிக்குங்கால் ஆன்மாக்களுடைய கன்மத்தின் பலிஷ்டம் எவைகளிற் சேர வழி விடுமோ அவ்வச் சமயங்களே யொவ்வொரு காலங்களிலுந் தலையெடுத்து விளங்கும். யாவுந்தலையெடுத்து நிற்பதுகொண்டே எல்லாம் சமமரியாதையுடைய மார்க்கமெனவாவது, உண்மையைப்பயக்கும் மோட்சமார்க்கமெனவாவது கருதுவது செல்லாமை காண்க. சமமுடைய இரண்டுபொருள்கள் கிடையவே கிடையா தாகையால். ஒரே சாதியான ரத்னக்குவையில், ஒவ்வொன்றாகப் பரீட்சிக்குங்கால் தேர்ந்த மணி யொன்றே, அசமானமாய்க்காணப்படுமன்றி அதற்குச் சமானமாக மற்றொரு மணியுமுண்டாகக்காண்பது எங்ஙனங்கூடும்? இரத்ன பரீட்சை அறியாதார் குருட்டுக் கல்லொன்றையும், விலையுயர்ந்தமணியாக என்மயங்கிக்கூறமாட்டார்கள்? அப்படிக்கூறுவது கொண்டே அக்குருட்டுக்கல் உயர்வொப்பில்லாத மணியோடு எப்படிச்சாமியம் பெறும்? முன்குருட்டுமணியையுயர்வாக மதித்த அன்னபரீட்சக

னே அப்பரிட்சையிற் றேர்ந்தபோது அது குருடென்று என்கழிக் காமற்போவான்? உயர்ந்தமணியினுண்மையறியாது அதுசாமானிய மெனக்கழித்த வொருவனே அதனுண்மை அவனுக்குப் புலப் பட்டவழி, அதுவேயுயர்மணியென்று ஏன் கொள்ளாமற்போ வான்? இப்படியேபரிபாகவுயர்வுதாழ்வுகளால் உயர்ந்தசமயத்தை யுயர்ந்ததெனவும், தாழ்ந்தசமயத்தைத்தாழ்ந்ததெனவும், உயர்ந்த சமயத்தைத் தாழ்ந்ததெனவும், தாழ்ந்தசமயத்தை யுயர்ந்ததென வும் பலவாறு உலகங் கொண்டியங் குந்தன்மையால், இவ்வுண் மையையறியாது எல்லாச்சமயங்களும் ஒரேமரியாதை யுடையன வெனவாவது எல்லாச்சமயங்களு மில்லாமற்போய்விடவேண்டு மெனவாவது கூறுவதுகேவலம் அசப்பியமெனவறிக.

மேல்விசாரம் ஸ்கவரப்பெற்றவர்கள் எத்தனை சமயங்கள் உலகில் தலையெடுத்துச் சீவிக்கினும் அவற்று லொருமயக்கமு மெய்தாரென்க. ஆகவே, எவ்வளவு சுவடிகளைப் பொதி பொதி யாய்ப் படித்துக் காலங்கழித்துத் திரிந்தாலும் பதிவாக்குகளிற் பயிலும் புண்ணியங்கிட்டப் பெறாத அபண்டித சிரோமணிகளே மயங்கிக் கூறுகிற்பர். புத்தரை வாதில்வென்றருளிய ஸ்ரீமந்மணி வாசகப் பிரபுவின் மாந்மியத்தை நோக்குழி அவரால் பௌத் தாடங்களும் ஊமைகளாயினரென்று பெறப்படுமாற்றால், அவர் கள் சத்தியைக்குன்றச் செய்தாரென்பதே வெளிப்பட்டமை காண்க. இதனை யறியாது, அவர்கள் சமயம் இக்காலத்திலு மிருக்குமாற்றால் அதனை நம்மாசாரியர்கள் வென் ? ரென்பது எப்படியென மயங்குவது தவறென்க. இவ்வுண்மையை யறியா தார் தத்தமக்கிசைந்தவாறே கூறி மயங்காநிற்பர். அவ்வாபாசங் களை யீண்டு விதந்துரைப்பாம்.

(ஒன்றுக்கொன்று மாறு படுதலையுடைய சமயங்களெல்லாம் ஒன்றி ரொன்று கெடுதலை யில்லையாயின் அவற்றுள்யாது சத் திய நெறியென்றும், மற்றியாது அசத்திய நெறியென்றும் நம் மாலே கூறப்படும் என்பர்.)

மேல் யாம் காட்டிய யானை, வீடுமுதலியவுவமானங்களால் சமயங்கள் ஒன்றிரொன்று கெடாமைக்கு நியாயம் வெளிப்பட் டமையால் யாவும் கெடுதலையடையாத சத்தியநெறிகளே யென வும், அவை யொன்றுக்கொன்று மாறுபடுதலும் பிழையன்றென

கின்றவராயும், காலசாட்சியாயும், நிக்கிரஹகம், அநுக்கிரகம், என்னுமிரண்டையுஞ் செய்கின்றவராயும், சந்திரன்முதலியநட்சத்திரங்களையும், சூரியனையும் உதிப்பித்தவராயும், தான்பிறவாதவராயும் பிரகாசிக்கின்றவராமென்று அந்தப்பரமசிவனை மனோவாக்குக்காய கர்மங்களினால் வருந்திவருந்தி ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர்கள் வணங்கினார்கள். எ - று.

యం ప్రపద్యంతి విద్వాంస స్సూక్ష్మాధ్యాత్మనిదర్శనాత్
తమజం కారణాత్మానం జగ్మతుశ్శరణం భవం॥

இ - ள். ஞானவான்களானபேர்கள் வேதாந்த சாஸ்திரத்தினுடைய நிதரிசனத்தினாலே எந்தப் பரமசிவனைப் பார்க்கிறார்களோ, தச்சப்த வாச்சியனாகவும், பிறப்பில்லாவனாகவும் சகத்காரணமான பரமாத்மாவாகவும் விளங்கும் அந்தப்பரமசிவனைக் கிருஷ்ணார்ச்சுனர்கள் சரணமாக அடைந்தார்கள். எ - அ.

இந்தவிடத்தில் யோகிகளுக் கெல்லாம் சிரேஷ்டமாயுள்ள பிரம்ஹமென்று கண்டத் தொனியினாலே சிவபெருமானுக்குப் பரப்பிரம்ஹபாவமானது சொல்லப்பட்டது. அதைப் பிரசங்கிக்கு நிமித்தமாய் பிரம்ஹாநந்த ரூபத்வம் பிரம்ஹத்துக்குச் சொரூபலட்சணமாக அந்தவிடத்தில் வெளியாச்சுது. [வேதவிதாம் நிதிம்] என்ற சொல்லினாலேயே அது விளங்கும். எங்ஙனமெனில், தரித்திரனுக்கு முன்பாகத் தற்செயலாய் மிக்கநிதியானது அகப்படுமே யானால் அதனாலுண்டாகும் ஆநந்தமானது சாட்சாத்காரம் பண்ணப்பட்டிருக்கிற நிரதிசயபிரம்ஹாநந்தத்துக்கு உபமானமாகச் சொல்லவருவது அமையாததேயாக, உலத்தாருடைய பாவனையில் அதற்குபமேயத்தினால் அதிகமானதில்லாமை வெளிப்படலால், ஆகாசம்போல எங்குமிருக்கிறார் நித்தியரென்றது போலவே உபமானமாகவைப்பதுயுக்தமென்று தற்சொரூபமாகப் பிரம்ஹாநந்தத்துக்கு நிருபணமாய்(தமசஃ பரம்ஜ்யோதி) என்றசுலோகத்தினாலே நித்யமுக்தஸ்வரூபமானதன்மைகளைக் காண்பிக்கிறதை முன்னிட்டதாய் ஆத்மாவினிடத்திலேநின்றும் ஆகாசம் உண்டாச்சுது என்பது முதலிய வியவஸ்தையானது வேதங்களினாலே சித்தமாய் ஆகாசமுதலான தத்வங்களுக்குக் காரணமாயிருக்கின்ற தடஸ்தலட்சண

மாக அந்தவிடத்திற் காண்பிக்கப்பட்டது. இன்னும்சிலதன்மைகள்வேதாந்தவித்தை அறிந்தபேர்களாலே காணப்படுந்தன்மையும், அகிலஜீவர்க்களேக்காக்குந் தன்மையும், தண்டிக்குந்தன்மையுமாகியயாவும் பரப்பிரம்ஹத்தினுடைய தன்மைகளாக வர்ணிக்கப்பட்டன. பிரம்ஹசநாதனம் என்று சிவனே வேதத்தினாலே சொல்லப்பட்டவர். அந்தச்சொல்லுக்கு வேறுவிதமானபொருளும் உள. ச. அதுபிரணவமந்திரபிரதிபாத்யர் என்பதேயாம். அப்படிப்பரப் பிரம்ஹரூபத்தினுடைய தன்மையைச்சொல்லும்படியான பரத்வ வாசகமாகிய பிரணவத்தினுடைய அர்த்தமாயுள்ளவராகுந் தன்மைபற்றியே பிரம்ஹசநாதனமென்று பிரகடனஞ்செய்யப் பட்டமைகாண்க.

—:0:—

அவதாரிகை.

அதற்குப்பின்னர் மற்றொருவிதத்தால் ஸ்ரீகிருஷ்ணருடைய சரித்திரவர்ணனையில் அந்தப்பரமேசுவரனுடைய அபிவியக்கியை வெளிப்படுத்துகிறார்.

சுலோகம்.

నారాయణస్సుచిరంత్వదుపాసకస్య యస్య శ్రీహ్రీభావమవదద్భవభావనాత్తం
యత్తేస్తుతౌ తవవిధాం పరభావగర్భాం వ్యాం బ్రహ్మతేన చ మునిస్స్ఫుటయాంచకార. ॥౫॥

மொழிபெயர்ப்பு.

நின்னுபாசனைநெடுநாள்செய்துவருநாரணனேயமென்னப்
பன்னியதொருதாய்நின்றன்பிரமபாவனையாமப்பளகிறன்மை
யன்னவன்கூறுந்துதியினகப்பொருளாலும்மன்புசான்றவேதத்
தின்னலமெற்றுநுவலுமம்முனிமொழியாலும்முன்மையேற்குமன்றே. (ரு)

இ-ள். நெடுநாளாய்த் தேவரீரை யுபாசித்துக் கொண்டுவருகிற நாராயணருக்கு யாதொருபிரம்ஹ பாவத்தைச்சொன்னாரோ அதுதேவரீருடைய பாவனையினாலேயேவந்ததாம். ஏனெனில், அந்தநாராயணரால் சொல்லப் பட்டிருக்கிற தோத்திரப் பகுதிகளில் தேவரீரே பரதத்வப்பொருள் என்றுகர்ப்பத்திற்கொண்டிருத்தலால், அதனையும், தேவரீரேபரப்பிரம்ஹ மென்பதையும் மஹரிஷியாகிய வியாசரானவர் பிரகாசஞ் செய்தனர். எ-று.

துரோணபர்வத்தில், மைநாக பர்வதத்தின்கண் நாராயணர் செய்த தபோமகிமையானது வர்ணிக்கப்பட்டிருக்கின்றது.

> ఊర్ధ్వబాహుర్మహాతేజా జ్వలనాదిత్యసన్నిభః
> షష్టివర్షసహస్రాణి తావంత్యేవ శతానిచ
> శోషయత్తదాత్మానం వాయుభక్షోంబుజేక్షణః
> అథాపరంతపస్తప్త్వా ద్విస్తతోస్యత్స్వకర్మణాత్
> ద్యావాపృథివ్యోర్వివరం తేజసాసమపూరయత్
> సతేనతపసాతప్తో బ్రహ్మభూతోయదాభవత్
> జానుభ్యామవనింగత్వా కృత్వాశిరసిచాంజలిం
> పద్మాక్షస్తంవిరూపాక్షం మభితుష్టావభక్తిమాన్
> తద్భూతాత్మైభూతకృతోవరేణ్య గోప్తారోమీభువనస్యాస్యగోపాః
> ప్రవిశ్యేమాంధరణీంయేహ్యరక్షన్ పురాపురాణీంతవదేవసృష్టిః
> అర్చ్యేత్యలోకాయాంతియథాపృథక్త్వంతాభిర్హిచక్రేసమురయంతిభూయః
> ఏవంవిద్వాన్ ప్రభవంచావ్యయంచత్వత్తస్సంభూతంభవనాయుజ్యమేతి
> భూతంభవద్భావియచ్చైధర్మంత్వత్తస్సంభూతాన్సపాద్యంలోకాః
> భక్తంచమాంభజమానంగహస్వక్లిష్ట్యామాంవై లోకపితామహాయ॥

இ - ள். அந்தநாராயணரானவர் மேல்நோக்கிய கரங்களை யுடையவராயும், மகாதேஜோரூபியாய்ச் செல்லுஞ் சூரியனுக்குச்சமமானகாந்தி யுடையவராயும், அறுபத்தாறுயிரத்து அறுநூறுவருடங்கள் வாயுபட்சணம் செய்துகொண்டு தவஞ்செய்தவராயித்தன்னுடைய சரீரத்தைச்சோஷணம் பண்ணிஞர். அதுவரையில்தான்கோரின தவசித்தி பலிக்காமையால், மறுபடியும் முன்செய்ததவத்துக்கு இரட்டிப்பளவுகாலம தவத்திலவருந்திப் பகவானுகியசிவனைச் சந்தோஷிக்கச்செய்து அந்தப்பரமசிவனுடையதேஜசினுலே ஆகாசம், பூமிமுதலியவற்றினிடைவெளியைப்பூரித்தார். அன்றியும், அந்தபோமகிமையால் பிரம்ஹசுவரூபியுமானுர் என்பதாம். இந்தவிடத்தில் சிவனைத்தியானம்செய்கின்றவராகிய நாராயணரைப் பிரமஹசொரூபி யானுரென்றுரைக்கப்போந்தமை சிவோஹம் என்னும்பாவனையால் அநுபூதிப்பெருஞ் செல்வராயிருத்தல் கொண்டென்க. ததநுசாரமாய் அந்த நாராயணர் அடைய வேண்டியதாய்க் கோரிய பிரம்ஹ

பாவத்தினுடைய அபாவத்தினாலே தவமேற்கொண்டு வருந்திய அவர்பாலிரங்கிச் சிவபெருமான் வெளிப்பட்டபோது அந்த நாராயணரால் பகவானாகிய சிவபெருமான் அநேகவிதமாய்ப் பரப்பிரம்ஹ மென்பது தோன்ற ஸ்தோத்திரம் பண்ணப்பட்டார். எங்ஙனமெனின், முழங் கால்களால் பூமியில் நடந்தவராகிச் சிரசிலே யிரண்டுகைகளையுங் கூப்பிக்கொண்டு விரூபாட்சராகிய சிவபெருமானைநோக்கிப்பின்வருமாறு ஸ்தோத்திரம்பண்ணினார். சகலலோகங்களிலும் பூஜ்யரா யுள்ளவரே! இவ்வுலகத்தில் சிருட்டிகர்த்தாக்களாயும், பரிபாலனகர்த்தாக்களாயு முள்ளவர்கள் தேவரீரிடத்திலே நின்று மன்றோபிறந்தனர்? அவர்கள் இந்தலோகத்தில் பிரவேசித்துச் சகலமானபட்டணங்களையும் தேவரீர் அநுக்கிரகத்தாலன்றோ ரட்சிக்கின்றனர்? இந்தத்தேவர்க்களுடைய சிருட்டியானது உலகத்தைச்சேர்ந்துதனித்தனியாய்ப் பிரிந்திருந்து மறுபடியும் பிரளயத்தில் அவற்றிற்குரிய காரணபுருஷர்களோடு கூடத் தேவரீரிடத்தி லன்றோலயமாகின்றது? தேவரீரிடத்திலே நின்று முண்டாகிற உற்பத்திலட்சணத்தையறிந்த மஹாத்மாவானவன் தேவரீருடையசாயுஜ்யத்தை அடைகின்றான். எது உம்மிடத்திலே நின்றும் உண்டாச்சுதோ, உண்டாகப் போகிறதோ, அவற்றில்வேறுவேறாய்ப் பிரிக்கும்படியான பிரிவுகளுக்காதாரமா யிருக்கிற உம்மிடத்திலேநின் றுமன்றோ ஈரேழு லோகங்களும் உண்டாயின? அப்படிப்பட்ட லோககர்த்தாவாகிய தேவரீரை அடைந்திருக்கிற பக்தனாகிய என்னை அன்பினாலே அநுக்கிரகிக்கவேண்டும். லோகபிதாமகரா யுள்ளதேவரீருக்கு நமஸ்காரம் என்றிந்தப் பிரகாரம் சிவோஹபாவனையால் நாராயணரானவர் பரமசிவனைத் துதித்து சிவபாவத்தையடைந்தார். இதில்பெறப்பட்ட (பிரம்ஹபூதா) என்கிற சப்தமானது சிவனுடைய தன்மையை விளக்கின தன்றிச்சகலமானபிரபஞ்சத்தினுடைய சிருட்டிஸ்திதி சம்ஹாரரூபமாயிருக்கிறபரப்பிரம்ஹத்தன்மையி னிறைந்ததாய் நாராயணராலேசெய்யப்பட்ட ஸ்தோத்திரத்தின் றொடர்ச்சியாகவும் பிரகாசிக்கின்றது. இந்தவிசாரத்தால் சிவபெருமானுடைய பரப்பிரம்ஹத்தன்மையானது வியஞ்சனத்தால் முனிச்சிரேஷ்டராகியவியாசபகவானல் வர்ணிக்கப்பட்டமை வெளிப்பட்டமை காண்க.

—:o:—

அவதாரிகை.

மேல்நிரூபிக்கப்பட்ட பரம்பொருளான சிவபெருமானிடத்தில் நிரூபிக்கும் பதங்களினுடைய பிரயோகங்களினுலே செய்யப்பட்ட அந்தப்பரமேசுவர னுடைய தன்மையை யின்னும் பிரவசனம்பண்ணுகிருர்.

சுலோகம்.

మూలం కృష్ణో బ్రహ్మ చ బ్రాహ్మణాశ్చ । తస్మాదేవ బ్రహ్మశబ్దం మహేశే
పాణ్డవానాం తేన రక్షాకరస్య । వ్యాసస్తోత్రే ఖ్యాపయామాస శంభో ॥౯॥

மொழிபெயர்ப்பு.

தருமமெனும் விருக்கத்தின் வேராவார் கண்ணனெடுசாருமுண்மைப்
பிரமமுமந்தணருமெனப்பேசியதால்வேதமுனி பிரமமென்ப
தொருமைதவழ்நீயென்றே பாண்டவரைக்காக்கு நலத்தொன்றநாளும்
வருமுறைமாகேச பசுபதிநின்னேவாழ்த்து நலம்வயங்குமன்றே. (௯)

இ - ள். ஈசர்களுக்கெல்லாம் ஈசராயிருப்பவரே! பசுக்களுக்கெல்லம் பதியாயுள்ளவரே ! தருமசொரூபமாயுள்ள விருட்சத்தின் வேர்யாரெனில், கிருஷ்ணரும், பிரம்ஹமும், பிராம்ஹணர்களுமென்று வியாசபகவான் கூறியவுண்மையால் நித்தியமாய்ப் பாண்டவர்களைக் காக்குந்தன்மையில் பிரம்ஹமென்னும் பதத்தால் தேவரீருடைய மகிமைகளையே அதிகமாய் அம்முனிவர் பிரகாசப்படுத்தி யிருக்கிருர். எ - று.

பாரதத்தின் ஆரம்பத்தில் (యుధిష్ఠిరో ధర్మమయో మహాద్రుమః స్కంధోఽర్జునో భీమసేనోఽస్య శాఖాః। మాద్రీసుతౌ పుష్పఫలే సమృద్ధే। మూలం కృష్ణో బ్రహ్మ చ బ్రాహ్మణాశ్చ) என்னும்வாக்கியத்தில் தருமநந்தனரே தருமசொரூபமாகிய விருட்சமும், அடிமரம் அருச்சுனனும். மரத்தின் கிளைகள் பீமசேனனும், புஷ்பபலங்கள் நகுலசகாதேவர்களும், மரத்தின் வேர், கிருஷ்ணரும், பிரம்ஹமும், பிராம்ஹணர்களுமென்று பெறப்பட்ட வுண்மையால் தருமநந்தனர் விஷயமாக வெளிப்பட்டவிருட்சரூபகத்தில் அதன்வேராக ஏர்ப்பட்ட கிருஷ்ணர், பிராம்ஹணர் இவர்களுக்கு வேருகப் பிரம்ஹபதத்தினுல் ஒரு பொருள் நிரூபிக்கப்பட்டது. கிருஷ்ணருக்கும், பிராமணர்களுக்

கும் மூலத்தன்மை நிரூபிக்கும் அம்சத்தில் இராஜதர்மத்தினால் மறைந்து காணப்படும் தரும நந்தனருடைய க்ஷேமார்த்தமே காரணமாயினமை காண்க. கிருஷ்ணருடைய சகலவிதமான சகாயங்கள்தருமநந்தனருடையராஜ்யப்ராப்தியின்பொருட்டுளவென்பதுசர்வசாஸ்திர கடிதமாகையால் கிருஷ்ணர்மூலமாகுந்தன்மை வெளிப்பட்டவாறறிக. பிராம்ஹணர்களோ வெனில், ஜயத்தைத் தரும்படியான ஆசீர்வாதத்தைச் செய்கின்றவர்களாகையால், அன்னோர் காரணராதல் வெளிப்பட்டது. ஆரணியத்தைக் குறித்துத்தருமநந்தனர்போகையில் அவரைப்பிரியாமல்செல்லும்படியானபேர்களாயும், அக்னிஹோத்திர முதலானசிரௌத கர்மங்களோடே கூடினபேர்களாயும், பூஜிப்பிப்பதற்கு அசாத்தியமான பெருங்கூட்டமான பேர்களாயுமுள்ள பிராமணர்களுக்குக்காட்டிலுண்டாகிய காய், கிழங்கு, கனி முதலிய வற்றைத் தானே கொண்டுவந்து கொடுக்கும்போது அந்தப்பிராம்ஹணர்கள்தருமநந்தனைப்பார்த்துப்பின்வருமாறுசொல்லத் தொடங்கினர். ஓய் தருமராஜனே ! நாங்கள் உம்மை அநுசரித்து வருகின்றோம். எங்களுடைய தொடர்ச்சியா லுண்டாகிய புண்ணியத்தினாலும், நாங்கள்செய்யும் ஜபத்தினாலும் உமக்குச்சிவம் துணையாகும்படிச்செய்கின்றோமென்று கூறினர். அப்படியே அந்தப்பிராம்ஹணர்கள் பின்றொடர்ந்து வருந்தன்மையால், பின்னர்சூரியமண்டலத்திலேநின்றும் அட்சயபாத்திரமாகிய தர்மபாத்திரத்தை அடைந்து அவ்விடத்தில் அந்தப்பாத்திரத்தினால் சமர்த்தியாகக்கிடைத்த அன்னத்தைப்பெற்று அந்த்ப்பிராம்ஹணர்களைப் பூஜிப்பித்துப் பரித்த விசேஷத்தன்மையால் அந்தத்தருமநந்தனரால் ரட்சிக்கப்பட்டபேர்களாயும், அவருடையஜயத்தையே கோரும்படியான பேர்களாயும், ஸ்நானசந்தி ஜபதபாநுஷ்டான சித்தியடைந்த பேர்களாயும், பத்துவிதமான மோட்ச சொரூபத்தை அறிந்த பேர்களாயும் விளங்கும் அறுபதுனாயிரம் பிராம்ஹணர்களால் அத்தருநந்தனர் தாங்கப்பெற்றிருக்கின்றனர் என்று மேலத்தியாயத்தை யடைந்திருக்கிறசங்கியா வசனத்தினாலே பிரகாசிக்கப்பட்டிருக்குமுண்மை யானுங்காண்க.

இனிப் பிராம்ஹபதத்தினாலே பிரதிபாதிக்கப்பட்ட பொருளொன்று மூலமாகுந்தன்மையைப் பரியாலோசிக்கில், அதனால்

சொரூபம். அது அப்பதியின்காலின்கீழொதுங்கிக்கிடப்பதொன்று. அப்பதியொருவருடைய வாணையில் வசிக்கவுரியவனல்லாமையால். அவராணையில் யாவரும் வசிக்கவும், அவரொருவருடைய வாணையில் வசியாமலிருக்கவுமுள்ள வாதிக்கத்தாற பதியைச் சர்வநியந்தாவென்று வேதங்கூறும். தருமம்சிவன்காலின்கீழ்க்கிடப்பதுதோன்ற வாகனமாய்ச் சமைந்திருத்தல்சான்றாம். அத் தரும மதனையநுட்டிப்பார் முடியிற்கொள்வ தொன்றாகலானத்தரும்வடிவமாகிய நந்தி தேவர் பாதங்கள் முடியிற்சேரும் பெற்றிமைத்தாதலறிக. இதனால், வியாதனைத்தருமமே தண்டித்தது என்றுகூறுவதும் பொருந்தும்.

இங்ஙனநிற்க, வியாதமுனிவர் வேதத்திற்புகழப் பெற்றவரும், ஓதாமலுணர்ந்தவருமாதலுண்மையாக, பின்னர் மலைவுற்றுக் கூறினமையாண்டமையுமெனின், வேதத்திற் புகழப்பெற்றவரும், தெய்வத்தன்மை யுடையவருமாகிய விஷ்ணு பகவான் பொய்ச்சான்றுகூறி மலைப்பாம்பாகச் சமைந்ததென்னை? வேதத்திற் புகழப்பெற்றவரும், தெய்வத் தன்மை யுடையவருமாகிய பிரமதேவர் விஷ்ணுவினிடம் பொய்யுரைத்துப் பூசையுங்கோயிலும் போக்கிக் கொண்ட தென்னை? பசுக்களாத லுண்மையாகலின், மலைவுற்றழுங்கலியல்பாம். (உதியாமதியா வுணராமறவா, விதிமாலறியா விமலன்புதல்வ) என்பது பிரமாணம். இதனால், மறப்புமாத்திரமேயன்றிநினைப்பு என்னுந்தெளிவு முடையராதல்பெறப்பட்டமையின், வியாதமுனிவர் நாரணனே பரமென்று கூறியதை மறந்துகூறினாரென்றே தெளிந்து கூறினாரெனினுமமையும். தெளிந்துகூறுங்கால் பொய்யுரைத்தல் யாண்டமையு மெனின், அதுபொய்யன்றாம். எங்ஙனமெனின், வியாதனையடைந்த முனிவர்கள்வேதங்களையும், பிறகலைகளையும் பலகாலவரிடங் கேட்டுமையம் விலகாமையால், மீண்டுமவர்க்கு முற்படியே வுரையாராயினர். பிழைபடக்கூறின் விஷ்ணுவேயாண் டடைந்துண்மையுணர்த்துவா ரென்பதறிந்து, அவராலம்முனிவர் சந்தேகத்தையொழித்தற் பொருட்டேயவ்வாறுகூறியதாம். (பொய்மையும் வாய்மையிடத்தபுரைதீர்ந்த, நன்மைபயக்குமெனின்) என்னும் பிரமாணமே யீண்டு கூ ற்பாலதென்க. விஷ்ணுவே வியாதராதலுண்மையாக, விஷ்ணு விசழ்ந்துபுத்தி கூறல் யாண்டமையுமெ

னின், கருத்து வேறுபாடின்மையால் பிழைபடாதென்க. கருத்து வேறுபடினும் பிழை யுண்டாகாமையைப் பின்செய்யுளாற் காண்க. (அரியீனாந்தவதாரச் செயலியாவுமான்செயலாமாலதியாதகந்தை கூறற், றிரிவாகுமுடல் வாலதருணமூப்பின் செயலுயிரின்செயலாகுஞ்செய்தி போலும், விரிவாமைந்தொழிலையு மெம்பிறைவன்ருனேமிருபடர்க்கை முன்னிலைத்தன்மையிலுண்டாக்குர், தரியாதன்றிராமனுடன் பரசுராமன்சமர் பொருதகதையுலகிற் சாற்றுவிரோ) என்பதுபிரமாணம். வியாதர் கூறினது பொய்யல்லாமையாகப் பெறப்பட்டவோர் நியாயத்தால் அவருக்குக்கரங்கள் தம்பித்ததும். அவரைத்தாணுகச் சிவசந்நிதியினிறுத்தியதும் யாண்டமையு மெனின், அவ்வினையை யவரநுபவிக்கவிருந்ததனாலென்க. அன்றியும், அவருடன்பாடுமப்படியொத்திருந்தமைகாண்க. எங்ஙனமெனின், சிவபரத்துவ தாபனஞ் செய்வது சிவபுண்ணியத்திற்றலையாய வுண்மையால், அதுசெய்தலே பேறுகக் கொண்டிருந்தவராகலின், சிவநிந்தையிற் றலைப்படுவாரடையுங்கதியை விளக்கவும் அது தம்பாலிகழப்பெற்றுக்கொண்டனரென்றறிக. (அன்பிலாரெல்லாந்தமக்குரியரன்புடையா, ரென்புமுரியர் பிறர்க்கு) என்னும் பிரமாணத்தால் எலும்பையும் பிறர்க்குமேலோர் கொடுப்பரென்று வெளிப்படுமாற்றால், அவற்றைப் பெருமானுக்கென் றர்ப்பணஞ்செய்வதி லார்வங்கொண்டொழுகிய வியாதர்தன்மை யிழுக்கடைவதெப்படி? (செயற்கரிய செய்வார் பெரியர்) என்பதற்கினஞ்செய்தலால். மேதாவியரிது கொண்டேயின்னுமநந்தயுக்திகளைவரித்து மேல்விஷயங்களைப்பரியாலோசிக்கக்கடவரென்றிவ்வள வினிறுத்தினம். இந்த விசாரத்தால் அவைதிக சித்தமான ஹேயநியாயாவலம்பநங்களால் பாசிவைகநிஷ்டமான நித்தியத்வத்தில் அருகையை மேற்கொண்டு வீண்விவாதஞ் செய்தல் நிஷ்புருஹமா யொழிதல் காண்க.

இதுகாறுங்கூறியநியாயங்களால், ஓர்விகாரத்தையும் அடையாது நின்மலத்தன்மையால் விளங்கும் ஸ்ரீபரசிவப் பிரபுவே நித்தியரென்பது பெறப்பட்ட வுண்மையால், பாஞ்சராத்திரிகள் விஷ்ணுவை நித்தியராகக்கூறி மயங்குதல் அசப்யமாதல்காண்க. அவர் யோனிவாய்ப்பட்டு இராமகிருஷ்ணாதி சந்மங்களைப்பெற்று வருந்தியவுண்மையால். இராமகிருஷ்ணாதிகளாக [illegible]தரித்தவிஷ்ணுவுக்கு அவ்வவதாரங்கள் அவருடைய ஜாயமா[illegible]லமைந்த லீலாமாத்திரமென்று அன்னோர்கூறுவர். பிருகுவி[illegible]சாபத்

தால் தசவிதஜந்மங்கள்வந்தமை பிரமாணபுரஸ்ஸரமாகையால் அவர்கூற்று அவலமாதல்காண்க. மீனாகவும்,ஆமையாகவும்,பன்றியாகவும்,சிங்கமாகவும்,வாமனனாகவும், மூவிதராமர்களாகவும், கிருஷ்ணனாகவும், கற்கியாகவும்பிறவிகள்வரப்பெற்றகாலையில், அப்பிறவிதோறும் சாவைமேற்கொண்டுவருந்தியவிருத்தாந்தங்கள் பாரத பாகவதராமாயண முதலியநூல்களிலேராளமாய்க்காணப்படுமாற்றால், சநநமரணவிகாரங்களையுடைய அந்த விஷ்ணுவை நின்மலத் தன்மையால் அவிகாரியாய் விளங்கும் நித்தியப்பொருளென்று நிரூபித்தலமைவுடைத்தன்றாம். கண்ணன், கீதையில (ధర్మసంస్థాపనార్థాయ సంభవామి యుగే యుగే) என்று கூறியதால் அவர் அவதாரம் லோகாநுக்கிரஹார்த்தமாதல் சாலுமெனின், உலகத்துக்கு அநுக்கிரஹத்தைச்செய்யவந்தவர் சிவனால் நிக்கிரஹத்தையடைந்ததென்னை? மேல்சந்மங்களில்மூவிதராமர்களும்,கிருஷ்ணனுந் தவிரஏனைய சந்மங்கள் நிக்கிரகிக்கப்பட்டமையாலும், அவ்விராமகிருஷ்ணாதிகள்அசுரபாதைகளான்மெலிந்துதந்நிவிர்த்தியர்த்தம்சிவாராதனத்தால் உஜ்ஜீவனத்தைப்பெற்றமையாலும் அவை லோகரக்ஷணார்த்தமாத்திரமென்பதுநிரஸ்தம். ஆஞ்சநேயர்பிரம்ஹாவாகவும், அசுவத்தாமர் வியாசராகவும் இனிவரப்போவதாய் வெளிப்பட்டிருக்கும் பிரமாணங்களால், அவரும் லோகரக்ஷணார்த்தமாகப் பிறக்கின்றவரேயாயினர். ஸ்ரீராமன் தசரதபுத்திரனாகப் பிறந்த காலையில், அவனுடன் வானர சேனைகளாக வந்த தேவர்க்களும் லோகத்தைப் பாலித்தவரேயாயினர். மலபந்தராயுள்ள வுயிர்கள் பிறக்குந் தோறும் அவ்வப் பிறவிகளில் தம்மையொத்த அனேகவுயிர்க்கு அகிதஞ் செய்தலன்றி கிதஞ்செய்தலுமுளவாகுந் தன்மையை நோக்கின், லோக ரக்ஷணார்த்தமாகவே யாவரும் பிறக்கின்றவரென வெளிப்படுகின்றது. அக்கண்ணனா லுபதேசிக்கப் பெற்ற அருச்சுனனும் யுகந்தோறும் லோகரக்ஷணார்த்தமாய் வருபவனே யாவன். ஒவ்வொரு தாய் தந்தைகளும் தத்தங் குழந்தைகளை ரக்ஷிக்கும்பொருட்டே வருகின்றவ ராவர். ஒவ்வொரு புருஷரும் தத்தம் ஸ்திரீகளைக் காக்கவே வருகின்றவராவர். அரசர்கள் யாவரும் குடிகளைப் பாதுகாக்கவே வருகின்றவராவர். இடும்பாசுரன், பகாசுரன், மணிமாலன் முதலியவர்களை அவர்களுடைய பலங்களோடு அழித்த வீரனாகிய வீமசேனனில், கம்சன், சிசுபாலன், முதலி

யவர்களை யழித்த கிருஷ்ணனுக் குண்டாகிய ஆதிக்கம்யாது? வீமனுலிறந்த துஷ்ட ரொழிவாலும் உலகத்துக்கு நலமுண்டாயினமை பெறப்பட்டபோது, கிருஷ்ணனு லிறந்தவரொழிவான் மாத்திரமே உலகத்துக்கு நலமுண்டா மென்பதெப்படி? கிருஷ்ணன், வீமன் இவர்களேயன்றிப் புரூரவன், யயாதி, மாந்தாதா, சிபிமுதலிய சக்கிரவர்த்திகளாலும் அநேக நன்மைகளுண்டாயினமை சாஸ்திர கடிதமாகையால், யாவரும் லோக சம்ரக்ஷணார்த்தமாகவே பிறக்கின்றவராயினர். இந்த விசாரத்தால் உலகிற்பிறக்கும் உயிர்கள் யாவும் ஒன்றற்கொன்று உபகரித்துவரும் நலம் வெளிப்பட்டமை காண்க.

மலசகசத்தாற் பிறந்துழலு மேழைப்பசுக்கள் தத்தம்வினை நுகர்ச்சிக்கிடாக ஒன்றற்கொன்று இதாகிதங்கள்செய்து வருந்தன்மையுண்மையால், அவற்றையெல்லாம்பார்த்துக் கண்மூடித்தனமாய்லோகாநுக்கிரகார்த்தமான அவதாரங்களிவை போலுமென்றுமயங்குவது கூடாது. தருமசம்ஸ்தாபனார்த்தமேயுலகிற்பிறந்ததுண்மையாயின், உலகிலுள்ள அதருமவழியைத் தான்சாராது அவ்வுலகுக்குபகாரஞ் செய்தல்சாலும். அதருமரூபமாகிய உலகவழியையே தானும்பற்றி மாதாவுதரத்திற்றங்கி, யோனிவாயிற்பிறந்து, மரணவாதையிலிறந்து, வருந்துந்தன்மை லோகரக்ஷணியத்தை எங்ஙனங்காட்டும்? எல்லாவுயிர்களும் ஒன்றற்கொன்று நன்மைசெய்வதேயன்றித் தீமையுஞ் செய்துவருகையில் நன்மையைநோக்கவுபகாரமும், தீமையைநோக்க அபகாரமுஞ் செய்யுந்தன்மைவெளிப்படும். ஆகவே, தருமசம்ஸ்தாபனார்த்த மென்பதோடு, அதரும சம்ஸ்தாபனார்த்த மென்பதுமாண்டுரைக்கவரும். இப்படியேமேற்போந்த பத்துப்பிறவிகளிலும் விஷ்ணுவினிடம் நிகழ்ந்தநன்மை தீமைகள்பலவுள. இராவணன் இராமன் கையில் தப்பி அகப்பட்டுக்கொண்ட காலையில் அவனைச்சுலபமாய் அந்த அவசரத்தில் தான் கொல்லக் கூடுமாயினும், தருமத்தை நோக்கி இன்றுபோ, நாளைவா என்றிரங்கிக் கூறினமையால், தருமசம்ஸ்தாபனார்த்த மென்பது பொருந்தும். சுக்கிரீவன் என்னுங்குரங்கால் இராவண னபகரித்துக் கொண்டுபோன தன்மனைவியை யடையக்கருதி அநியாயமாய் அச்சுக்கிரீவனுடைய பிரீத்யர்த்தம் வாலியைக்கொன்றது என்ன சம்ஸ்தாபனார்த்தம்?

இராமன் வந்ததெல்லாம் ராக்ஷசாளைக் கொல்லவேயாகக் குரங்கு அவனை யென்ன பண்ணிற்று? குரங்கைக் கொல்லவா இராமன் வந்தது? அன்றியும் அவ்வாலியென்னுங் குரங்கைத் தான் கொல்லத் தொடங்குகையில் அவன் எதிர்நின்று போராடில் தன்பாதிபலம் அவனைச்சாருமென்றஞ்சி மறைந்துநின்று சரந்தொட்டது என்னசம்ஸ்தாபனார்த்தம்? ஆகவே, இராமன்சேதனரிலொருவனென்பதுவெளிப்பட்டு உயிர்க்குணமாகிய இதாகிதம்புரியுந்தன்மையுடையனாயிருந்தானென்பது பெறப்பட்டது. இன்னும், வாலிசுக்கிரீவரோரேதன்மையான வுருவமுடையவரா யிருந்தமையால், அவர்களில்வாலியின்னானென்று அறிந்துகொள்ளமாட்டாமல் சுக்கிரீவனைப் பசுந்துணரொன்று சிரசில் அடையாளமாக வைத்துக்கொள்ளச்சொல்லிப் பின்னர் அவ்வடையாளத்தால் சுக்கிரீவனையறிந்து அவனைவிட்டு வாலியைக் கொன்றதென்னை? அன்றியும், தன்னைமறைந்து நின்றுகொல்லும்படிச் சரந்தொட்ட இராமனை அவனது மறுஜன்மமாகிய கிருஷ்ணவதாரத்தில் அவ்வாலி வேடுவனாகிச் சரந்தொட்டுப் பழிக்குப்பழிவாங்கியதென்னை? இப்படியேகண்ணன், வாமனன் முதலியோரிடத்திலும் நிகழ்ந்ததன்மைகளைப் பாரதபாகவதாதிகளில் பார்த்துணர்க.

இந்தவிசாரத்தால், பசுவாகிய மூலவிஷ்ணுவுக்குப்பத்துப் பிறவிகள் சாபத்தால்வந்ததுண்மையெனவும், அப்பிறவிகடோறுஞ்சீவகுணத்துக்கிசையஇதாகிதங்கள்புரிந்ததுண்டெனவும்வெளிப்படுமாற்றால், அந்நன்மைதீமைகளை அம்மூலவிஷ்ணுவுக்கும், அவதாரவிஷ்ணுக்களுக்கும், அவ்வவ்வவசரங்களிலேறியுங்குறைந்துமிருந்த கன்மவேறுபாடுகளுக்கிசைய நுகர்வித்துச் சித்திரப்பதுமைகளென்ன ஆட்டுவிக்கும் பரசிவனுக்கு முன்னர் அஸ்வதந்திரத் தன்மையே சுவபாவசித்தமாக வுடைய அவ்விஷ்ணுவையும், அவரவதாரங்களையும் நிர்விகாரத்தன்மையெய்தும் அமலமாகிய நித்தியராகமயங்கல் தோஷகிரஸ்தமாய் நிரசிக்கப்பட்டது. இதனால், தர்மசம்ஸ்தாபனார்த்தமே விஷ்ணுபிறக்கின்றானென்பது உசிதமாகாதெனவுணர்க. மற்றென்னெனின், கண்ணன் கீதாவுபதேசஞ் செய்கையில், சோகம் பாவனைமேற்கொண்டதன்மையுண்மையால், தானேசிவம் என்னுமநுபவத்தைவிளக்கு

மவசரம் அதுவர்கையால், அந்தப் பிரம்ஹபாவ மேற்கொண்டு நான் தர்ம சம்ஸ்தாபனார்த்தம் பிறக்கின்றேனென்று கூறினதாம். என்பது, என்னைச் சிவபெருமா னதிட்டித்து வேண்டிய நன்மைகளை நான் பிறக்குந்தோறும் என்னை யிடமாகக்கொண்டு உலகில் நிகழ்த்துவனென்பது உண்மைக் கருத்தாம்.

இன்னும் இராமனுடைய தர்மசம்ஸ்தாபனத்தை நோக்குழி நகைப்புக்கேயிடந் தருகின்றது. வாலிமஹாசிவபக்தாக்ரேசனென்பது இராமனறியாதவனல்ல. அப்படிப்பட்ட சிவபக்தசிரோமணியைச் சுக்கிரீவன் றயையை யபேக்ஷித்துக் கொல்லத்துணிந்தது அதிசயம்! அதிசயம்!! ஓர் பெண்ணபிமானத்தால் சிவபக்தாபராதம் செய்யத்துணிந்தது பரமதருமம் போலும். இதனால், இராமன் சிவபக்தி பாரம்ய முடையவனாயிருப்பினும், அவனதுபக்தி போதநஷ்டமாகாத தென்பது வெளிப்பட்டது. மெய்ப் பொருணாயனார் அதிபாதகனாகிய சமணனொருவன் சிவவேடந்தாங்கி வந்தபோது தம்முயிர் கழியினும் அடியார்க்கிடுக்கண் விளைத்தல் தீது என்னுமநுபவத்தை விளங்கக் காட்டினமையாலும், ஏனாதிநாயனார் தம்முடனெதிர்த்துவாள்கொண்டு போராடுமதிபாதகனொருவன்முகத்தில் விபூதியைக்கண்ட மாத்திரத்தில் சிவனடியாராகிய விவர்க்குத் தீங்கிழைத்தல் பிழையென்றொதுங்கினமையாலும், இயற்பகை நாயனார் சிவவேடத்தார் வேட்டனவற்றை யில்லையென்னாது கொடுத்துவரு மன்புமேலீட்டால் தமதுமனைவியாரையுமோர் சிவனடியார்க்களித் தமையாலும், புகழ்ச்சோழ நாயனார் தமதுசேனைகள் யுத்தமுகத்தனுகிச்சத்துரு ஜயம்பெற்றுத் தம்மாலிறந்த வீரர்தலைகளைப்பொதிபோட்டுக் கொண்டுவந்து முன்னே நிறுத்தி யொவ்வொரு வீரர்தலையாகக்காட்டி வருகையில் ஓர்தலையில் சிறியதொருஜடையிருக்கக் கண்டமாத்திரத்தில் பதைபதைத்துள்ளம்நடுங்கி நான் புரிந்துவரும் அரசுமிகமேலானது என்றுதம்மை நொந்தவராகிச் சிவனடியார்க்கிழைத்த வித்தீமைக்குச் செயற்பாலதிதுவேயென வச்சிரசைச்சிரமேல்வகித்துக்கொண்டபடியே அக்கினியைவளர்த்தி அதிலிறங்கி னமையாலும், இன்னுமிப்படியே மிகமேலான தருமங்களையுலகம் பிழைக்கும் பொருட்டுப் பலசிவனடியார்கள் விளக்கினமையாலும், தருமசம்ஸ்தானார்த்தம் அவதரித்த சிமான்

கள்தன்மை வெளிப்பட்டது. இவ்வவதாரமூர்த்திகள் தர்ம சம்ஸ் தாபனமும், இராமனது தர்மசம்ஸ்தாபனமும் இத்திறப்பருதியன வென்று பரியாலோசனையில் வெளிப்படுகையால், தர்மசம்ஸ்தாப னார்த்தமே யுகங்கடோறும் நான்பிறக்கின்றேன் என்று கண்ணன் கூறியது அவனிடம்பொருந்தி யிருக்கக் காணக்கூடாமையால், மேல், விளக்கியசோகம்பாவனைக்கருத்தே வெளிப்பட்டவாறறிக.

இப்படியே விசாரமுகத்தி லொவ்வொன்றும் தர்மசம்ஸ் தாபனத்துக்கிடங் கொடா தொழிகையால், சேதனர்செய்கை மேற்கொண்டு, கர்மாநுசாரமாய்க் கட்டுண்டொழுகிய இராம னுதியர்தோற்ற லயங்களைப்பரியாலோசிக்கில், அவர்க்குநித்தியத் துவம்நாட்டலாமென் றுசைமேற்கொண்டெழுவார்செயல்அவல ப்பட்டழிதல்காண்க.

ஆயின், அந்த இராமனுடைய நாமத்தையே காசியிலுயிர் விடுமான்மாக்களுடைய வலக்காதில் ஸ்ரீ விசுவேசுவரர் உபதே சித்துஅவர்களுக்கு முத்தியளிக்கின்றுரென்று பாஞ்சராத்திரிகள் கூறுவதென்னையெனின், அவ்வாபாசவிருத்தாந்தத்தை யீண்டு விசாரிப்பாம்.

தாரகசித்தாந்தம்.

தானங்களெதுசொற்றுலுந்தனைமுதலெடுத்துக்கூறு
மானங்களுடையதாகிமாதேவன்வடிவுற்றூர்க்கு
ஞானங்களோடுநல்கிநல்முறவைகுமொண்பூஞ்
கானங்கள்பொலியுந்தெய்வக்காசியைவணக்கஞ்செய்வாம்.

இ - ள். எந்தத்தலமாகாமியத்தையெடுத்துச் சொல்பவர்க ளும் அவற்றிற்கு மாகாமியம் விளங்கும்பொருட்டுத் தன்னையே முதலிலெடுத்துக்கூறுஞ் சிறப்புடையதாகித் தன்பக்கல்சார்ந்து மகாதேவனைப்பிரதிட்டித்து வழிபடுவார்க்கு ஞானமோட்சங்களை யளித்து எல்லாநலங்களும் பிரகாசிக்கும் அழகியபூஞ்சோலைக ளால்விளங்குந் தெய்வத்தன்மை பொருந்திய காசியென்னும் பதியை வணங்குவாம். எ-று.

தெய்வக்காசியென்பதனுல், தாரகக்ஷேத்திரமென்பது பெற்றும். இந்தப்பதியில் தேகத்தை விடுமுயிர்கட்கு நிரியாண தசையில் ஸ்ரீவிசுவேசர் அவர்கள் வலக்காதில் தாரகமந்திரத்தை யுபதேசித்தருள்வரென்று வேதமுதலிய கலைகள் சாற்றலால். தாரகமந்திரமென்பது உடனே பாசத்தினின்றுந் தாணடச்செய்யுமாற்றலுடைய மந்திரமென்றும். அது தசரதனுடைய மூத்தசேயின் பேரெனச் சிலர்சாற்றுவர். அவனுடையபேரை எல்லாமுடையானுகிய பெருமானுபதேசித்தல் அடாது. அவனே பாசத்தின்மூழ்கி யோனிவாய்ப்பட்டழுங்கியும், பெண்டைப்பறிகொடுத்து அசுரன்வாதையிற்பட்டு நொந்தும், பின்னர்ப்பலவவதிக்குள்ளாகிச் சரயுநதியில் வீழ்ந்திறந்து மொழிதலால். அப்பெயர் இராமனென்பதேயாக, அது தசரதன்மகன்பேரென்பதுமடாது. ஜமதக்கினிக்கும், வசுவதேவனுக்குமப்பேரையுடைய பிள்ளைகளுளவாதலால். தசரதன்சேயைப்போலவேயேனையவிருவரும் விஷ்ணுவினுடைய அவதாரங்களாதலால். மூவரும் விஷ்ணுவினவதாரங்களேயாக, இருவரைக்கழித்து ஒருவனைக்கொண்டது பிழையாம். ஜமதக்கினிசேய் விஷ்ணுவினற்பாமிசமாதலும், வசுதேவன்சேய்விஷ்ணுவின்சுவேதரோமமொன்றாதலு நோக்கித் தசரதன் சேயைக்கொண்டதெனின், தசரதன் சேய்க்குப் பூர்வஞானமின்மையும், வசுதேவனிளையசேயாகிய கண்ணனுக்குப் பூர்வஞானமுடைமையும் பெறப்படுதலால் மூவரையும் விடுத்துக் கண்ணனையேன் கொள்ளக்கூடாது? கண்ணன் பூர்வஞான முடையவனு யிருப்பினும், அவன் விஷ்ணுவின் கிருஷ்ணரோம மொன்றாதலேனுக்கிக் கழித்தனர்போலும். மற்றையவதாரங்கள் சிங்கம், ஆமை, மீன். பன்றி குதிரையாதிகளாய் முடிதலா லவற்றைஅறவேயொழித்தனர்போலும். இவ்வாபாசங்களாலோரவதாரமுஞ் சால்புடைத்தன்றும். இதனுல், தசரதராமனை யிழுத்துவிடுத்தது தவறாய்முடிந்தது. அன்றியும், அவதாரபரமாகிய இராமமந்திரம் தாரகமாகிறபோது மூலமந்திரமாகிய நாராயணமந்திரம் தாரகமாகாததென்னை? மூலமந்திரத்துக்குத் தாரகத்வஞ் சித்தியாதபோது அவதார மந்திரத்துக்கவ்வாறிக்கமுண்டாமென்பதெப்படி? மோக்ஷப்பிரதாயகமாகிய மூலமந்திரத்தைநோக்க இராமமந்திரத்துக்கு மோக்ஷப்பிராதா

என்னுந்திருவாக்கால் அவன் அவள் அது என்றுசுட்டப்
படும் பிரபஞ்சமெல்லாம் உபாதானத்தினின்று மலவேதுவாற்
றோன்று முறையானே தோன்றி, நிற்கு முறையானே நின்று,
ஒடுங்குமுறையானே யொடுக்குவதுமாகிய காரியமாயிருத்தலின்
அநாதி முத்தத்துவத்தையும், சிற்ரூபத்தையும் பொருந்திநின்று
சிருட்டிப்பவனும், சங்கரிப்பவனுந் தானேயாகித் தருமவனொரு
வன்வேண்டும்என்று பெறப்பட்டது.

இதையினிது பரியாலோசிக்கில், "ஒருவன் ஒருத்தி ஒன்று
என்னும் பிரபஞ்சமானது ஒருகர்த்தாவை யுடையது. தோன்றி
நின்றழியுங் காரியமாதலின். எங்ஙனம், கடம்போல. அஃதொக்
கும், மாதாபிதாக்கள் காரணமெனின், அன்னோர்புத்திரோற்பத்தி
வேண்டியகாலத்து உண்டாகாமையினாலும், வேண்டாதகாலத்து
உண்டாதலாலும், ஆணிச்சிக்கப்பெண்ணாகுதலாலும், பெண்
ணிச்சிக்க ஆணாகுதலாலும், இருவகையிச்சையும் அன்றியில்
அலியாயும், குரூபியாயுந் தோன்றுதலாலும், உற்பத்தி ஆனதும்
ஆகாததும் உடனே உணரப்படாமையினாலும், ஒருவர் பண்ணைக்
காணாதிருக்கவும் மாதாவுதரத்தில் மாதங்கடோறும் உருவாய
வளர்ந்து கருப்பாசயமுதலிய துன்பங்களுக்கு இறவாது இங்
ஙனந்தோன்றுதலாலும், கடோற்பத்திக்குத் தண்டசக்கராதிகள்
போல்மாதாபிதாக்கள் சுதந்தரமின்மையாலும், அஃதன்றியும்,
உற்பிஜத் தோற்றங்கள் மாதா பிதாக்கள் சையோக மின்றியே
வித்துக்காரணமாக உண்டாகையினாலும், அன்னோர்காரணமென்
பதுகூடாது. அஃதொக்கும், சுக்கிலம் காரணமாய்த் தேகங்க
ளுண்டாதலின் உத்தரோத்தர சரீரங்களுக்குப் பூர்வபீசம்காரண
மெனின், பாம்பின்வாயிலே கல்லும், கல்லின்வாயிலே தேரை
யுல், காரதிதேகங்களில் புழுமுதலியவைகளும், மரங்களில்தோன்
றுங்கிருமிகிடம் புல்லுருவி முதலானவைகளும், காளான்முத
லானவைகளும், நிலத்திற் சலத்திற்றோன்றும் கிருமியாதிவடிவங்
களும் ஆகியசுவேதஜத் தோற்றங்களுக்குப் பூர்வசரீர பீஜம்கா
ரணமல்லாமையால் வித்தேகாரணமென்பது கூடாது. சுவேதஜத்
தோற்றங்களும் பூபூதாதிப் பிரபஞ்சத்தினின்றும் உற்பவிக்கிய
யால் அவையே சரீரோற்பத்திக்குக் காரணமெனின், கங்கிய
ஜோற்பத்திக்குச் சராசர வுருவமிரண்டுங்காரணமாமென்மையே

மற்றுமுள்ளமூவகை யோனிகட்கும் அப்பூபூதாதிகாரணமென்னைகாணப்படாமையினாலும் அதுகூடாது. அங்ஙனமன்று, ஒருதீபத்தில் ஒருதீபமாகப்பாரம்பரியத்தில் அனேகதீபம் உண்டாயினும் அத்தீபத்தினது தாகசத்தி அக்கினியின்கட் காணப்படுகையால் அதற்குக்காரணம் அக்கினியே யானாற்போலத் தேககுணங்கள் பூபூதாதிசரத்தில் கிருமிபுழுமுதலியவும், அசரத்தில்காளான்முதலியவுங் காணப்படுகையால் அவைகட்குப் பிருதிவியாதிசாதுர்ப்பூதமே காரணமெனின், அப்படித்தோன்றுவித்த தென்கை ஓர்காலத்தும், ஓரிடத்தும், ஒருவராலுங்கண்டோமென்கைகேட்கப்படாமையினாலும், அதுகூடாது. ஆயினும், அங்ஙனமன்று. விளக்கு உண்டாவதற்கு முன்னே அக்கினி விளக்கைத்தோன்றுவிக்கவேண்டுமேயல்லாமல் விளக்கு உண்டானதின்பின்பு அதுவும் இருக்க, வேறொருவிளக்கை அக்னிதோன்றுவிக்க வேண்டுவதில்லை. அதுபோல், தேகாதிகள் இல்லாதகாலத்திலே சாதுர்ப்பூதம் தேகத்தைத் தோன்று விக்கவேண்டுமே யல்லாமல் இப்பொழுது தோன்றுவியாதெனில், இப்பொழுதும் பிருதிவியாதிகளில்சுவேதஜவுருவம் தோன்றுகையினாலும், அஃதன்றிக்காஷ்டத்தில் அக்னியை, அக்னியில்விளக்கை ஒருவன்தோன்றுவித்துப்பின்பு ஒருவிளக்கில் ஒருவிளக்கைத் தோன்றுவிக்குதலன்றி காஷ்டத்துக்கும், அக்கினிக்கும், விளக்குக்குந்தானேயொன்றைத் தோன்றுவித்தல் கூடாமைபோல் சராசரப்பிரபஞ்சங்கள் ஜடமாதலின் அவைகளை மாயையினின்றுந் தோன்றுவித்தவன் ஒரு கர்த்தா வுண்டெனக்கொள்க" என நம்மபெரியோர் பலர்கூறியிருக்குமுண்மையாலும், சித்தாயிருப்பா னொருவனையன்றி அசித்தாயுள்ள பிரபஞ்சங்காரியப்படுமென்னுந் துர்வாதந்தொலைந்து போயிற்றென்க.—இங்ஙனநிற்க,

"நீரின்வந்தெழுகொப்புளீரது வாயெழுந்திகழ்பூதமு
மோரின்வேறணர்வா யெழாவவைபூதமாகியுதித்திடும்
தேரினுறடைகாய் செறிந்தவைசேரவேறு சிவப்பெழும்
பாரினிற்பிரியாதபுத்திபழிப்புடம்பு கிடக்கவே"

ன்னுந் திருவாக்கைப் பரியாலோசிக்கில், நீரினிடத்தே
ன் குமிழிகள் நீரேயன்றி வேறொரு பொருளாகாத

தன்மைபோல் பூதங்களில் தோன்றுங் காரியங்கள் பூதங்கண்மாத்
திரமாயமைதல் சாலுமன்றிச் சடத்துவமாகிய பூதத்துக்கு வே
றாகிய சித்தாயுதித்த லமைவுடைத்தன்றாம். அன்றியும், சுண்ண
மும், வெற்றிலையும், பாக்குமாகிய மூன்றுங்கூடியபோதுண்டா
கிய செந்நிறம், அவற்றினின்று நீங்காததுபோல் பூதசையோகத்
தாலுண்டாகிய அறிவு அவற்றை நீங்காதிருத்தலைவிட்டுத் தானி
ருந்த பூததேகத்தைப் பிணமாக்கிவிட்டுப் பறந்தோடிப் போவ
தென்னை? என்று வெளிப்படுமுண்மை நியாயங்களால், கேவ
லம் ஜடமாகிய பூதங்களுக்குப் பாரம்யகாட்டலாமென் றெழு
மோக்கி ஞானம் நசுக்குண்டதென வறிக. சாணம் ஜடப்பொரு
ளாதலுண்மையாக, அதில் சித்தாகிய புழுக்களுண்டாதல் பிரத்
யட்சமாமெனின், ஜடமாகிய சாணத்திலுண்டாகியது புழுவாகிய
ஜடதேகமேயன்றி, அத்தேகதாரியாகிய ஆன்மசித்தல்ல வென்
றாகித்தடங்குக. ஆன்மா அத்தேகத்தை யதிட்டித்திருப்பதொன்
றென வத்தேகத்துக்கு விஜாதிகமாகிய வறிவுடைமையை நோக்கி
வாய்மூடிக் கிடப்பாராக. ஜடமாயுள்ளபொருள்களுள்ளும் கடத்
திற்படமும், படத்திற்கடமும் பிறவாதெனின், கேவலம் ஜடத்
திற் கேவலம் சித்துப்பொருளுதித்தல்யாண்டிசையும்? ஆகவே,
அசித்தாயுள்ளமரம், மண்முதலியவற்றை யோருருவாக்கி அதில்
அறிவு நிகழுந் தன்மையைக் காட்டுவாராயின், அவர்புன்மதம்
நன்மதமாம். எதோசற்றே வெளிவரட்டும் பார்ப்போம். இது
நிற்க, பாக்கு வெற்றிலை சுண்ணம் இவைகளில் செந்நிறம் நீங்
காததுபோல் தேகத்தைவிட்டு அதன்குணமாகிய அறிவு நீங்கின
தேகிடையாதெனவும், அத்தேகமியங்குதற் குபகரணமாயுள்ள
நரம்பு, மூளை, இரத்தமுதலியன தத்தம் நிலையில் கதிமாறியது
கொண்டு இயக்கங்கெட்டதெனவும், அதை மறுபடியும் பழைய
படியாக்க முயலுமிடத்து மறுபடியும் முன்னியக்கம் அத்தேகத்
துக்குண்டாகுமெனவும், அப்படிச் செய்யக் கற்றிருந்தபேர்களே
முற்காலத்திற் பெரியோரெனப் பேர்பெற்று இறந்தவரை
யெழுப்பினர் எனவும் அவர் புலம்புவர். அன்றியும், அதைத்
திட்டாந்தமுகத்து விளக்கவேண்டிச் செம்பிற் களிம்பேறிய
போது அதினுடைய பிரகாசமழுங்கியும், அக்களிம்பு நீங்கிய
போது முன்போலப் பிரகாசித்துங் காணப்படுந் தன்மையே

போதுமானதென்றும் புகலாநிற்பர். இதனை முறையே பரியாலோசிக்கில், பூதக்கூட்டுறவினுண்டாகிய அறிவு சரீரத்தைவிட்டு நீங்காது அதனிடத்திலேதானே தாதான்மியப்பட்டுப் பிரிவறமழுங்கி யிருப்பதும், அப்படியதிலிருந்துபின்செய்யுமுயற்சியால் மறுபடியும் வெளிப்படுவதுஞ்சாத்தியமானகாரியமாயின்மானிடராய்ப் பிறந்தவர்க்கு இதைக்காட்டிலும் அறியவும், செய்யவுமான பெருத்தகாரியம் உலகில் வேறொன்றுங் கிடையாதென்பது சத்தியம். ஆகவே, உலகந்தோன்றிய விதுகாறும் இந்த வித்தையேன் ஒருவர்க்குங் கைவந்திலது ? அநேகவிசித்திர தரமான காரியங்களைச் செய்து வெளிக்குக்கொண்டுவந்த வெண்ணிறந்த பண்டிதர்கள் மண்ணுக்கிரையாயினரோ ! ஐயோபாவமே! அவர்களநியாயமாய் மடிந்துபோனது எவ்வளவுபெரியநஷ்டம்? தம்பேரையே சொல்லத்தெரியாத மஹாமூடர்கள் பலர்நிறைந்திருக்கு மில்வுலகில் ஷை பண்டிதர்கள் சிலரிருந்தால் போதுமே! அவரால் உலகி லெவ்வளவு உபகாரமுண்டாம் ? ஐயோ அநியாயமே! அவர்களை மண்ணுண்டுவிட்டதே ! அவர்வாயில் மண் விழுந்துவிட்டதே ! இப்போது கத்திக்கழிவார்வாயிலும் மண் விழப்போகிறதே ! மண்ணைத்தெள்ளிக் கையில்வைத்திருப்பவன் மஹாதேவனென்பதும் அறியார்களே ! சொற்பதர்களாய் வீணே அகங்கரித்து வாய்வம்பாடலொழிந்து, இனியாவதுவிரைந்துவழி தேட வகையுளதேல் வாய்திறக்கட்டும் பார்ப்போம். அன்னோர் கூறும்பெரும்பிச்சானவுரை கிளிஞ்சில் வெள்ளிகொண்டுவருவேனெனவும், கானனீர்பருகுவேனெனவும், முயற்கொம்பு முழம் போடுவேனெனவுமுரணிக்கூறு மூடர்கூற்றேயாய் முடிதலால் விவேகிகள் சங்கத்தில் அவர் நகைக்க வுடம்படுத்த ஏமலிகளே யாவர். தெய்வத்துக்கு அபாவங்கூறுவார் பாவமுதிர்ச்சியிற்பழுத்துப் பக்குவமான வதிகாரிகளாய்க் கிடைக்கவருவது துர்லபத்திலுந் துர்லபம். அவருள்ளும் ஏழைஜனங்கள் மயங்க வெடுத்தெறிந்து வைது விண்குதர்க்கம்பேசக் கற்றவர் அதிலுந் துர்லபம். இவ்வளவு துர்லபத்தில் ஜநித்த அரியஜந்மங்கள் இன்றோ நாளையோவென்று போங்காலத்தை யெதிர்பார்த் திருப்பதால் அதை யப்படியாக வொட்டாது தடுத்துக்கொண்டு நிலைத்திருக்க வழிதேடிக்கொள்வரேல், இப்போதெடுத்த தங்களுண்மை நிலை

யைநாட்டி யுலகத்துக்கு உபகரித்து வருதல் கூடுமே! உலகம் பிழைக்க வவதரித்தருளிய செந்நாப்போதர் முதலிய வான்றோ ரறிவினுந் தம்மறிவு மிக்கதென மதித்துச் செக்குஞ் சிவலிங்கமு மென வறியாது நக்குநாய்போல வம்மூதியோரைப் பழித்துத் தலைகிழிந்து சாக வழிதேடுநடைப்பிணங்க ளடலையிருந்தவா றந்தோகொடிது! கொடிது!! இந்தவிசாரத்தால், சரீரத்தினு டையகுணம் அறிவென்பது அபத்தமெனவும், அவ்வறிவுதேககு ணமாகாமையால் அது இறந்ததேகத்தின்கண்மீட்டு முண்டாகா தெனவும், அப்படியுண்டாகக் காணுமதுபவம் காலத்திரயாபாவ சித்தமாகையால் அநுபவவேத்யமாகாத வோர் சித்தாந்தத்தை நாட்டமுயலல்பிரத்யக்ஷத்தை யபேக்ஷிக்கும் நாஸ்திகத்துக்குத் தலைநோயாய் முடியுமெனவும், நம்ம ஆசாரியாளாயுள்ள ஞாந சம்பந்தாதிகள் தெய்வத்தன்மையால் இறந்த சரீரங்களில்உயிரை மீட்டும் வருவித்தனரெனவும், அப்படிவருவித்தலும், அவரவர் கன்மமிருந்தபடியாமெனவும் பெறப்பட்டது. அவ்வாசாரிய நிதிகள் தங்கள் சாமர்த்தியத்தால் மூலிகா பிரயோகங்களால் தேகத்தின்தர்மமாகிய அறிவையுண்டாக்கின ராயின், அப்படி யிறந்தவரையெல்லாம் ஏன் உண்டாக்காதொழிந்தனர்கள்? தெய் வத்தன்மையால் உயிர்ப்பித்தகாலையினும் கன்மம் காரணமாய் நிற்றலால், எல்லாவுயிரையு முயிர்ப்பித்தல் செல்லாதொழிந்தது. இவ்வுண்மையில் அருமையைமேற்கொண்டு சுட்டவெலும்பு பெண் ணாகுமாவெனவும், அதைப் பூதசாத்திரபண்டிதர்கள் பொருந் தக்கேளாரெனவும் பொங்கிவழிதல் போங்காலத்துப் புதுநலப் பெருக்காம். சுட்டவெலும்பு என்பெண்ணாகாது? தெய்வம் துணை செய்யுமானல்.அன்றியும், அறிவு அதன்குணமல்லாதவுண்மையா ல்.இது,செத்தபிணங்களைமூலிகாப்பிரயோகத்தாலுயிர்ப்பிக்கஏன் முடியாதென வாசாரம்பணங்கூறுந்தான்றோணித் தம்பிரான்கள் பித்துரைபோல்வ தன்றும். எல்லாமுடையானகிய பரமன் திரு வருள்பெற்று வாழும் எம்மபெருமக்கள் யாதுதான் செய்யவல் லவராகார்? அவரால்யாவும் முடியும்! முடியும்!! கடவுளிச் சையின்படி.

இந்தவிசாரமுடிவால், அசித்தாகியதேகத்துக்குச் சித்தா கிய அறிவுதர்மமாகாத வுண்மைவெளிப்பட்டது. இதனல்தேகத்

தின்பிரகாசமாகிய அறிவு, செம்பின்பிரகாசம் களிம்பால்மறைக்கப்பட்டதுபோல் அத்தேகத்தினியக்கவிகாரத்தா லுண்டாகிய தோஷத்தால் மக்னப்படுமென்பது தோஷ கிரஸ்தமாய் மூடிந்ததென்க. செம்போஜடம், களிம்பு நீக்கத்தில் அதிற்காணப்படும் ஒளியும்ஜடம், இப்படிக்கன்றி ஜடமாகியதேகத்தி னொளிசித்துப் பொருளாதல் யாண்டிசையும்? செம்பிற்களிம்புநீங்கத் துலக்கி அதன்பிரகாசத்தை வெளிப்படுத்துமாபோல் தேகத்தில் அதன் மாசுதீரப் பிணமானகாலத்தில்துலக்கி அதனொளியா யிருப்பது அறிவாயிருக்கக் கண்டவருளரோல்வாய்திறவாமல் மூலையிற் பதுங்குவதேன்? இவ்வரியவிஷயத்தில்வீணேதலையை நுழைத்துவிட்டு அகப்பட்டுக்கொண்டு அவதிப்படுவதெற்றுக்கு? இன்னருக்கும விசாரஞ்செய்ய மதிநுட்பம்போதாதமந்திகள் (வாழவேவல்லைவாமி வலக்கைதாவென்னுயிர்க்குத்,தோழனீயுன்னையொப்பார்சொல்லிடினில்லைகண்டாய்) என்றபடித் தம்மினத்தவரைத் தழுவி அவர்களிப்பெய்து மாறுதத்தாபித்தா வென்று வாய்க்குவந்தனவெல்லாம் வகையறியாதுகூறித் தம்நாத்திகத்தை நாட்ட முயலுங்கால் குருடனுக்கொளி பகையானாற்போல் நம்ம ஆத்திகபோதத்தில் அருவை மேற்கொண்டு மேல்விழுந்துவலிந்து வீண்பிரசங்கங்களால் தம் போதத்தைக்காட்டவெழுவர். அப்பேயர்களைமுன்னீடாக்கிவிவகரிப்பது விவேகளுக்கழகன்றாம். குடியனொருவன்குடித்து வெறிகொண்டு தள்ளாடிவிழுந்துவருகையில் அவனைஎதிர்த்து நீ குடிப்பது தவறென்று புத்திகூறத் தொடங்குமொருவனுக்குண்டாவதவமானமே யாம். மற்றையர் குடியில்கொடாத வண்ணம் உரிய தோஷங்களை யெடுத்துக் காட்டுதன்மாத்திரமே அவசியமாதல் பெறும். அதுபோல் அந்நாத்திகப்புல்லர் துர்ப்போதங்களான் மயங்கி நம்மவர் கெடாதவண்ணமே நம்மநூல்கள் பலவற்றுள்ளும் பிரவசனம் பண்ணபபட்டிருப்பதனல், அன்னவாறேயீண்டும்விவகரிப்பதாயிற்று.

இவ்வாபாசகர் (செய்வோரின்றிச் செய்வினையின்மையின்) என்னுந் திருவாக்கைச் சிந்தியாது பூதங்கள் தாமே காரியப்பா டை
யடைகின்றனவென்றுகூறு மவலசித்தாந்தமினைத்
யின்னும் விளங்கக் காட்டுவாம். மண், சலப்
னும் பூதங்கள் நான்கும் நித்தியமென்று

(௯௦)

(௯௧)

ங்கீகரிப்பவர்? இன்னபலவாபாசங்களைப்பிறப்பினாலும், தொழிலாலும்பெற்றுழன்றொழிந்த வோர் ஜந்துவாகிய கிருஷ்ணனுக்குச் சர்வலோகசரண்யராகிய சிவபெருமான் பயந்தோடினா ரென்பது அசப்யமென்பதை யின்னும்பரியாலோசிப்பாம். பாகவதம், தசமஸ்கந்தத்தில் (సహస్రస్తుత్వయాదత్తా పరంభారాయమేభవన్। త్రైలోక్యేప్రతియోద్ధారం నలభే త్వదృతేసమం। కండూత్యానిభృతైర్దోర్భిర్యుయుత్సుర్దిగ్గజానహం। అభ్యయాం చూర్ణయన్నద్రీన్ భీతాస్తేపిప్రదుద్రువుః। తచ్ఛ్రుత్వాభగవాన్ క్రుద్ధః కేతుస్తేభజ్యతేయదా। త్వద్దర్పఘ్నంభవేన్మూఢ సంయుగేమత్సమేనతే। ఇత్యుక్తః కుమతిర్హృష్టః స్వగృహంప్రావిశన్నృప) என்றற்றொடக்கத்து வசனங்களால் பாணன் சிவபெருமானைப்பார்த்து ஆயிரங்கைக ளெனக்குக்கொடுத்தது மிகவும்பாரமாகவே யிருக்கின்றது, உம்மையல்லாம லிந்தமூன்றுலோகத்திலும் என்னுடன் யுத்தஞ்செய்கிறவனை நானடையவில்லை, திக்கஜங்களுடன் முட்டினாலவைகள் ஓடிப்போகின்றன, பர்வதங்களை முட்டினா லவைகள் பொடிந்துபோகின்றன, ஆகையாலும்மிடத்திலேதானே வந்தேனென்று சொன்னபோது அதைக்கேட்டபகவான் கோபித்தவராகி, ஏ மூடனே! எனக்குச்சமானமாகியவொருவனாலுன்னுடைய *டக்கயமஅறுபடப்போகின்றது. அப்போது உன்னுடையபாகுக்களுக்குப் பங்கமுண்டாகுமென்றுசொன்னார். அதனாலவன் சந்துஷ்டனாய்த் தன்னரண்மனையைச் சேர்ந்தான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தவர்த்தங்களையூகிக்குமிடத்துச் சிவனையன்றியில் வேறொருபொருளையும் பாணன் மதிக்கவில்லையெனவும், விஷ்ணுமுதலியவர்களு மவனாற்றலுக்கஞ்சியே பதுங்கியிருந்தாரெனவும், தன்னாயிரங்கைகளையும் பயன்படுத்தத்தக்கவிடங் காணாமையா லவைகளை வெறுமனேயவன் றாங்கியிருந்தது அவனுக்குப் பாரமாகவே காணப்பட்டதெனவும் பெறப்பட்டது. அன்றியும், எனக்குச்சமானமான வொருவனாலுனது டக்கயம் அறுமடுமெனவும், அப்போது உனது புஜங்களுக்குப் பங்கம்வருமெனவும் அவனைநோக்கிப் பகவான் சொன்னானென்றதனால், இனிப்பவிஷ்யத்தில் கிருஷ்ணனாலவனது டக்கயமறுபடுதலும், அவனது புஜகர்வாபஹாரமுண்டாதலும் பெருமானதுதிருவுள்ளத்திசையெனவும், அந்தப்படிக்குக்கிருஷ்ணனைக்கொண்டு முடிக்கப்போகிற தம்மபிப்பிராயத்தைக் குறிப்பானே வெளிப்

* டக்கயம்=துவசம், அல்லது கொடி.

படுத்தினானெனவும், அவர் திருவுள்ள மிசையாதபோது அந்தக் கிருஷ்ணனாலொன்றும் பாணனை யசைக்கமுடியாதெனவும் வெளிப்பட்டது. கிருஷ்ணனைக்கொண்டே பாணனுடைய புஜகர்வபஞ்சனஞ்செய்யத்திருவுள்ளத்தெண்ணியுரைத்தவராகிய சுவாமி கிருஷ்ணனுக்குப் பயந்தோடினானென்றல் யாண்டிசையும்?

இன்னும், பாணனைப்பார்த்து என்னொடொத்த வொருவனாலுனது டக்கயம் அறுபடப்போகிறது என்று சொன்ன சுவாமி வார்த்தையின் மகிழ்ந்து அவன் தன்னரண்மனைபோய்ச் சேர்ந்தான் என்று வந்தமையால் பாரமாயிருந்த கைகளொழிந்துபோவது அவனுடைய விஷ்டாபத்தியென்றோர்ப்படுகிறது. அதுபற்றியே கிருஷ்ணனைக்கொண்டு அவைகளைத் துணிப்பித்தனரென வறிக. இதனால் பாணனுக்குபகாரஞ் செய்தலே சித்தித்தமையின், சிவபக்தனாகிய பாணனைக் கிருஷ்ணன் பரிபவப்படுத்தினானென்பது அசங்கதமென்க. இதனை யுபாத்தியாயனைக்கொண்டு தன் பிள்ளையைத் தண்டிப்பித்தும், மருத்துவனைக்கொண்டு தன் பிள்ளைக்குவந்த புண்ணை யறுப்பித்து முபகரிக்கும் பிதாவின் செய்கையோடுவமித்தறிவர்கற்றுணர்ந்தமேலோர்.* பாணனுடையதிருஷ்டியில் கண்ணன் சிவனடியானாகவே காணப்பட்டிருப்பனாதலால்சிவனடியாரால் சிட்சிக்கப்படுத லவனுக்குப் பரிபவமாய்த் தோன்றாதெனவறிக. அத்துணையாதிக்யமாவது கண்ணன்பால்சாருமேயெனின், அவன் சிவபெருமானது பரிக்கிரஹசக்திகோடிகளிலொன்றாய் முடிவானெனி னவனாற்றல் தெய்வத்துக்கே வெளிச்சமாம். புழுக்களும் பஞ்சகிருத்யஞ் செய்யுமாற்றல் சிவாக்ஞையாற் பெற்றிருக்கு முண்மையால். அந்தக்கிருஷ்ணனையே யவனிற் றாழ்ந்த பலரைக்கொண்டு பரிபவமுண்டாகச் செய்தபடி மேல் விவகரித்துக் காட்டப்பட்டிருக்கு முண்மையால். இது நிற்க, பாணன் சிவதீக்ஷாவானாய்ச் சைவசின்னந்தாங்கி நின்ற கண்ணனால் தனக்குப்பாரமாயிருந்த தோள்களறுக்கப்பட்டமைகொண்டங்ஙனமுபகரித்தபடியாலுமதிகசந்துஷ்டனாயவனை வாழ்த்துதலேசெய்வன். பூர்வமே சிவபெருமானா லெடுத்தோதப்பெற்ற பெருமிதமுங்கண் டுபசரிக்கக் கடமைப்பட்டவனாதலால்.

* இன்னும், சிவபெருமானைத்தனது ஏவலாகவிரும்பிய பாணனுக்குப் பாவமேறாதபடிச் சிட்சித்தமையும் பெறும்.

இம்முறையன்றியியம்புவர்பித்தர்வே
றம்முறைகேளாமென்றுந்தீபற
ஆபாசஞானமென்றுந்தீபற. (உங)

மாயைமுதற்பரன்மாணுகிமித்தமிங்
காயுந்துணைசத்தியுந்தீபற
ஆகுமுலகமென்றுந்தீபற. (உச)

கம்மியனேடுகருவிபொன்மூன்றுமொன்
றெம்முறைகொள்வதென்றுந்தீபற
எம்மதமேற்குமீதுந்தீபற. (உரு)

கம்மியனுகான்கருவியும்பொன்னுமற்
றிம்முறையாகாவென்றுந்தீபற
இரண்டுமொருமுதலுந்தீபற. (உசு)

கம்மியன்பாற்பொன்னையன்றியோர்பூடணம்
செம்மைகொளாமைதேர்ந்துந்தீபற
சிவன்செயல்போற்றுவாமுந்தீபற. (உஎ)

சிவனுயர்சித்திவன்றன்னிலுலகசித்
தெவனுதியாகிற்குமுந்தீபற
ஏற்குமாமாயையிலுந்தீபற. (உஅ)

சிவனுயிராகானிவன்சிவனுகான்மற்
றிவராவதெப்படியுந்தீபற
இல்லாவுலகமென்றுந்தீபற. (உகூ)

உலகமில்லாதநிலைமைவிகாரத்தா
னிலவுமதிசயமுந்தீபற
நீகண்டுணர்தியென்றுந்தீபற. (கஉ)

இல்லாவுலகமில்லாமைகொண்டேய்துமென்
றுல்லாசம்பேசுவருந்தீபற
ஊகமில்லாமைதேர்ந்துந்தீபற. (கங)

எல்லாமதங்களும்பூருவமாகையால்
சொல்லார்சித்தாந்தமென்றுந்தீபற
சொற்பொருடேர்ந்தாரென்றுந்தீபற. (கச)

காழியில்வந்தருள்கண்மணியாகுநம்
வாழ்வருள்பெற்றுமென்றுந்தியற
வரவுபோக்கற்றுமென்றுந்தீபற. (கரு)

வேதாந்தஞானவிழுப்பொருள்கற்றவர்
நாதாந்தங்கண்டாரென்றுந்தீபற
நாமவர்க்காட்பட்டோமுந்தீபற. (ககூ)

சித்தாந்தஞானஞ்சிவோகம்பாவிக்கவே
சித்தாந்தஞ்செய்யுமென்றுந்தீபற
சிவமேநாமானேமென்றுந்தீபற. (கஎ)

வேதாந்தசித்தாந்தவேற்றுமைகாண்பவர்
பேதாந்தப்பேயரென்றுந்தீபற
பெரியோர்துணிபிதென்றுந்தீபற. (கஅ)

எல்லாஞ்சிவமென்றியம்பும்வேதத்துண்மை
கல்லார்கயவரென்றுந்தீபற
கற்பர்வேறுகவேயுந்தீபற. (ககூ)

காரணம்பொன்னதிற்காரியம்பூடணம்
ஆரணங்கூறுமென்றுந்தீபற
அநுபூதியாகுமென்றுந்தீபற, (உ0)

ணமூவகைபொன்முதற்காரணம்
சால்வகையுந்தீபற
மிரண்டுவேறுந்தீபற. (உக)

மியனேடுகருவிநிமித்தமுஞ்
மைத்துணையுமென்றுந்தீபற
பரிசிதென்றுந்தீபற. (உஉ)

மாணிக்கவாசகனார்மலர்ப்பாதநம்
மாணிப்பொன்றைகுமென்றுந்தீபற
அருள்வழிகாட்டுமென்றுந்தீபற. (ரு)

அறுபத்துமூவரடிமலர்வாழ்த்திடிற்
பெறுமுத்திவேறிலையுந்தீபற
பேறதுவாகுமென்றுந்தீபற. (சு)

மெய்கண்டான்சந்ததிமேவினர்க்கேயிவ
ணுய்வுண்டாமென்றுணர்ந்துந்தீபற
வுண்மைநிலயமென்றுந்தீபற. (எ)

அருணந்தியார்பதமன்புசெய்தேத்திலகம்
இருணந்திமாயுமென்றுந்தீபற
எங்குருநாதனென்றுந்தீபற. (அ)

மறைஞானசம்பந்தர்மாணடிவாழ்த்துவார்க்
கிறைஞானமெய்துமென்றுந்தீபற
எல்லாமுணர்ந்தானென்றுந்தீபற. (கூ)

போற்றுமுமாபதிப்புங்கவர்போதமிங்
கேற்றுஞ்சிவனிடத்துந்தீபற
எல்லாவுயிரையுமுந்தீபற. (க0)

சீகண்டதேசிகன்சேவடிக்கன்புசெய்
தேகண்டவாழ்விதென்றுந்தீபற
என்றுநானில்லையென்றுந்தீபற. (கக)

நானில்லையென்னுநயக்கண்டடியார்மற்
றானில்லையேபெற்றிக்குந்தீபற
உழல்வரொக்நாளுமென்றுந்தீபற. (கஉ)

சித்தாந்தஞானந்தெளியவுணர்த்தலாற்
சித்தாந்தவுந்தியென்றுந்தீபற
செப்புமிந்நூற்பெயருந்தீபற. (கரு)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மறைஞானசம்பந்தன்றுணை.

சித்தாந்தரத்நாகரம்.

சித்தாந்தவுந்தியார்.

காப்பு.

வரைமகள்பயந்த வாரணமுகத்தோன்
மருமலர்ப்பதத்தை வணங்குதிமனனே.

நூல்.

அம்பலத்தாடுமழகனடிமலர்
கும்பிடப்பெற்றாமென்றுந்தீபற
கூற்றைக்கடந்தாமென்றுந்தீபற. (௧)

ஞானசம்பந்தனடிமலர்ப்பத்தியஞ்
ஞானமகற்றுமென்றுந்தீபற
நம்பெருவாழ்வாமென்றுந்தீபற. (௨)

நாவரசெம்மைநயந்தருளாரிய
ராவரென்றேமகிழ்ந்துந்தீபற
அவரடிக்கன்புசெய்துந்தீபற. (௩)

வன்றொண்டர்பாதம்வழுத்துமடியர்தம்
பின்றொண்டுசெய்வாமென்றுந்தீபற
பெற்றாம்பெருமையென்றுந்தீபற. (௪)

பான்? அவன் உத்தமபரிபாகியல்லாமையால். அவனுடைய தாழ்
ந்தபரிபாகம் அத்ததியில் அவனுடைய கோளுக்குமுன்னே யெத்
திறத்துசிதமுடிபுகளும் அநுசிதமெனக்காட்டித் தன்வசத்தினி
றுத்தும் வல்லபம் பூண்டியங்கு முண்மையால். அப்படியே,
பரசிவசித்தாந்தி யொருவனுக்கு அச்சித்தாந்தத்தில், அபிருசி
யுண்டாகி அவன் அதை யவலம்பிக்கையில் அதில் அவனுக்கு
ள்ள பற்றுக்கோடு அவனுடைய பரிபாகத்தளவாய் முடிதல்இன்
னமாகையில் அவன் அதற்குக்கிழிட்ட அதம சித்தாந்தங்களை
ஆபாசமெனக்கண்டு கழித்த வுண்மையால் அவற்றை அவன்ஏன்
அங்கிகரிப்பான்? அவன் உத்தமபரிபாகியாகையால். அவனுடைய
உத்தமபரிபாகம் அத்ததியில் அவனுடைய கோளுக்குமுன்னே
யெல்லாமதவாபாசங்களையுமினிதுவிளக்கிக்காட்டுந்தன்மை யுண்
மையால். இதனுல் அதமாதமமமான அதிகாரியொருவனும், உத்
தமோத்தமமான அதிகாரி யொருவனுமாக இருவர் ஏற்பட்ட
னர். இருவர்க்குங் கன்மவேறுபாடுகள் வெளியானவுண்மையால்.
இவர்க்கிடையேஅநந்தவிதமானஅதமராசிகளும், உத்தமராசிகளு
மாகிய பரிபாகிகள் பலருளராக வெளிப்படுகின்றனர். இன்னபரி
பாகங்களொருவனுக்கே யென்பதுமுண்மை. கேற்றுத்தேகான்ம
வாதியா யிருந்தவன் இன்று ஏகான்மவாதியாகக் காணு மநுபவ
வுண்மையால். கேவலம் அதமாதமனுகவும், அதமராசிகளில்சேரு
பவனுகவும், உத்தமராசிகளில் சேருபவனுகவும், கேவலம் உத்த
மோத்தமனுகவும்பல்வேறு தானவேறுபாடுகளை அடைகின்றவன்
தேவதத்த னெருவனேயன்றி யெண்ணில் கோடி யுயிர்களுள
வென்னு முண்மையால் அன்னோர்பரிபாகத்தளவாய் அவர்களுக்
குபகாரமாகவே யெல்லா வதமங்களும், எல்லா வுத்தமங்களும்
எக்காலத்திலு நிலைபெற்றிருத்தல் அத்தியாவசிகமாதல் பெறப்
படுகின்றது. இந்தவிசாரத்தால் ஓர்காலத்திலும் ஓர்மதத்தால்
மற்றொருமதம் அழிந்ததென்பது சர்வாபத்தமெனவறிக. எல்
லாமதங்களும் நசித்துச் சைவமொன்றே யோர்காலத்தில் நிலை
பெற்றிருந்தது·எனின், அக்காலத்தில் உலகமடங்கலும் சிவனை
வழிபடும் புண்ணியமேலிட்டவர்களாகவே கொள்ளவரும். ஆக
வே,கிழிட்டபரிபாகத்தையுடையவுயிர்களுக்கு அபாவஞ்சொல்ல
வரும். கிழிட்டஅதிகாரிக ளுண்டாகப் பெருமையுண்மையேல்,
இப்போது நானுவிதமான கிழிட்டபரிபாகிகளுளாரதனிமுக்காம்.

வும், அதனால் யாதொன்றையும் அசத்தியநெறியென லடா தெனவும், யாவும் சத்தியமென்பது சத்திய நெறியாகிய சைவத்தி னங்கமாதல் பற்றியெனவும், அதுகொண்டு சைவமுமொன்றாக ஏனைய சமயங்களை டுவயிக்கப்படா தெனவும், சகல சமயாதீதாத்துவித நிலையினது அச்சைவமொன்றேயெனவும்பெறப்படலால், இவ்வுண்மையறியாதொன்றினால் மற்றொன்று அழிய வேண்டுமெனவாவது, அறியாமையால் யாவும் சமநிலையினவெனவாவது, அவற்றுள், சைவம் உசித மாகாதெனவாவது கூறப் போந்தது குருட்டுஞானமாய் முடிதல் காண்க.

இனி, (இக்காலத்தில் இதனால் அது தோல்வி யடைந்த தென்றும், அக்காலத்தில் அதனால் இது தோல்வியடைந்த தென்றும் சமயங்களாறும் கால பேதங்களின் ஒன்றுக்கொன்று வெற்றி தோல்வி அடைதல் உண்டாதலின் அவற்றை நிறுவிய வொருபரனது இச்சையால் தெய்வத்தன்மை கொண்டு எக்காலத்தில் எதை உயர்த்தி எதைத்தாழ்த்தல் வேண்டுமோ அதை அங்ஙனஞ்செய்குவது ஒழிந்து மற்றோர் காலத்தினுள்ளே ஓர் மதத்தை ஒருவராலும் வாக்குவாதத்தினாலே செயிக்குதல்கூடாது எனவும், "இறைவிதன் முலைப்பாலயின்ற சீகாழிக்கிறைவனுமிறைவனைப் பரிமே, லறைமலர்ப்பொழில்சூழ் மதுரையம்பதியினடத்திய வொருபெருந்தவனும், புறநிலைச் சமணமாதியைச் செயித்தார்பொருந்து தெய்விகத்தெனிலெவரோ, மறைசொல்சட்சமயத் தொன்றுகொண்டொன்றை வாக்குவாதத்தில் வெல்பவரோ" என்னும் வாக்கியமே இதற்குப் பிரமாண மெனவுங் கூறுகிற்பர்.)

இதனை விசாரித்துழிக் கேவலம் அசங்கத முண்டாகுந் தன்மையேயன்றி யுண்மை யொன்றும் பயவாமையையீண்டு பிரவசனிப்பாம். சமயங்களாறும் ஒன்றை யொன்று அழித்தல்யாண்டமையும்? யாவும் பரிபாகத்தளவாய்ச் சீவர்க்களுக்குப் பெருமான் விதித்த வாணையாகையால். பௌதிகான்மவாதி யொருவனுக்கு அச்சித்தாந்தத்தில் அபிருசியுண்டாகி அவன் அதையவலம்பிக்கையில் அதிலவனுக்குள்ள பற்றுக்கோடு அவனுடைய பரிபாகத்தளவாய் முடிதல் திண்ணமாகையில், அவன் அதற்கு மேலிட்ட உத்தம சித்தாந்தத்தைப் யெவ்வளவு பிரத்தியட்சமாக மேலோர் விளக்கிய காலத்தும் அவன் ஏன் அங்கிகரிப்

தியுமாதலமையாதென்க. அன்னோர்சிவபாதபக்தியிற்சிறந்த சீமா ன்களாதலுண்மையாகையால். சூதசம்ஹிதையில்வியாழபகவானு க்கு முத்திகொண்டத்தையும், சைவபுராணம், மஹாபாரதமுதலிய வற்றில்கண்ணனுக்குப்பாசுபதாநுட்டான மந்திரத்தையும்உபதே சித்ததாகக்கூறப்பட் டிருக்கும் பிரமாணம் பிரத்யட்சகடிதமாகுந் தன்மையால். அன்னோர்வேறுசித்தாந்தங்களையுணர்த்தினமை அவ் வச்சித்தாந்தங்களுக்கு அநுக்கிரஹாகமெனவறிக. வேதத்திலும் அநுக்கிரஹமாகமாகப் பல்வேறு சித்தாந்தங்கள் உணர்த்தப்ப ட்டிருத்தல் நிதரிசனமாதலுண்மை யாகையாலே. அப்படியுணர் த்தினமைகொண்டுவேதத்துக்குத் தோஷமுண்டாகாவாறுபோல் அவ்வேதத்தைப்போலவே அவ்வேதார்த்தங்களை அதிகாரிகளை நோக்கி யநுக்கிரஹித்தருளியபிருஹஸ்பதி,கிருஷ்ணர் முதலியோ ர்க்குந் தோஷமுண்டாகாமையைத் தெளிந்திடற் பாலதென்[...] இப்படிவிசாரித்தறியும்புண்ணிய மெய்தப்பெற்றவர் அவ்வா[...] நற்களைமெய்யென மயங்கிக்கெடாராகையால், நம்மவர்யாவரும் இவற்றைநன்கு சீர்தூக்கிக் கெடாதவழி அதனுபாசத்தை 'யில் னும் விசாரித்துத் தெளிவுபெறக் கூறுகிற்பாம்.

அவ்வுலகாயதன் பூதங்கள் நான்கன்றி வேறுபொருளுண் டாக வங்கீகரியாதபோது அவை யொன்றோடொன்று புணர் தலே சிருட்டியென்று கொண்ட அவனேமை மதியைச் சற் றே பரியாலோசிப்பாம். முதல், அந்நான்குபூதங்களுஞ்சடமாத லுண்மையாகையால், அவை யொன்றோடொன்று புணருமென் பது பொய்யா யொழிந்தது. [...]ற்றுக்குரிய சலனமுஞ்சேட்டிப் பித்தாலன்றிப் பயன்படாத[...]ண்மையை மேல்விவரித்துமுடித் [...]ாகையால் அறிவில்[...]ாகியபொருள்கள்தாமேயொன் [...]று சேர்த்தி[...]மன்று கூறுந்தூர்வாதம் நிரசிக்கப் [...]து.

"[...]டெ[...]ருத்தியொன்றென் அனைத்துமுலகமெல்லாம்
[...]தின்று பேசுதுமாதலாலே
[...]வன்வேண்டும் தான்முதலீறுமாகி
[...]முத்த சித்தருமன்னிநின்றே"

மாகியபாசபுண்ணிய பத்தாளாயுள்ள வவர்க்கு அவரதிகாராநு
குணமாகவே, அவர் செய்துள்ள புண்ணியத்துக் கிடானபோ
கத்தை யநுபவித்துத் தொலைக்கச் செய்யவேண்டிய நிமித்
தமே அவ்வாசாரியர் பரிமித கருணையால் அவர்க்கு அவ்வுப
தேசத்தைச்செய்வதெனவறிக. அப்படிக்குபதேசியாது பதிஞான
த்தை யுணர்த்தப் புகுவரேல், அதில் அபிருசிமேலிட்டுச் சொர்க்க
போகத்தில் வெறுப்புண்டாகி அதை நுகருந்தன்மையி ழுக்
குண்டாமாகையால் அது செய்யாராயிர். இவ்வுண்மையை அருச்
சுனற்குக் கண்ணன் கீதை யுபதேசித்ததோ டொக்குமென்று
நம்மபெரியோர்கூறியிருக்கின்றனர். உலகாயதனைப்போலவேபுண
ணியபாவங்களும், சொர்க்கநரகங்களும், சீவபரங்களும், பூசை,
ஹோமம், ஜபம், தியானமுதலிய கன்மங்களும் பாரமார்த்தத்தில்
பொ[illegible]ய்ப் பொருள்களென்று அந்தக்கீதையிற் கூறப்பட்டிருக்கு
றண்மையால். (விவகாரத்தில் வேண்டுது முலகம், பரமார்த்தத்திற்ப
[illegible]ராம்) என்பது அவர் கோளாத வுண்மையாகையால். இருதிறத்
தவர்க்கும் முடிபொருளொத்திருத்தலால் அவ்விருவரும்நாத்திக
ராதலி ழுக்கென்னை? நாத்திகராதல் நோக்கியே இருவரை
யுஞ்சேர்த்து நம்மாசாரியர் ஸ்ரீவாசகத்தில் கடிந்திருத்தல்காண்க.
மாயாவாதிகளாவார்கடவுளொருவருளரென்வும், அவரேநாம் என
வுங்கூறுகையில், நம்மையன்றிக் கடவுளென்னுமொரு முதலில்லை
யென்னுஞானத்தை நாட்டலால் கடவுளுக்கபாவமும், நாம்என்
னுஞ்சீவப்பொருள் கடவுளிடத்து அத்தியாச மாத்திரமென்கை
யால்சீவனுக் கபாவமுமுண்டாதல் திண்ணமாகிக்கடவுளை நோக்
கச்சீவனும், சீவனைநோக்கக் கடவுளுமில்பொருள்களாய்நிச்சயிக்
கப்படுந் துணிவால் கடவுளையும், சீவனையுமில்பொருள்களாகத்
துணிந்தவோர் மார்க்கம் அது எ[illegible] ஏர்ப்படுகையால், அவ்விரு
பொருள்களையும் முதலேயில்லை [illegible]வா[illegible]கூறித்திரியும் உலகா[illegible]
தத்தோடு ஏன் அது ஒத்த தாக[illegible]பௌ[illegible]ண்டுமொன்றே[illegible]
திண்ணம்! திண்ணம்!! நாத்தி[illegible]? இ[illegible]டா[illegible]ன்றே [illegible]தையவல[illegible]
பிராகாரங்களா யுலகிற்பரவிப் [illegible]ர்க்கசெ[illegible]கோ[illegible]ரும் ப[illegible]னுடைய பரி
பிரகாசித்திருக்கின்றன. சமணம், [illegible]பௌத்தம், சா[illegible]வன் அதற்கு
யாவும்நாத்திகங்களேயாத வுண்மை யாகை[illegible]அ பிரத்தியட்ச
இந்த விசாரத்தால், மேல்மதங்களை வி[illegible] என் அங்கிரிப்
டேபிருகஸ்பதியும், கண்ணனும்முறையேஉலகா[illegible]

இவ்வுண்மையை யூன்றி விசாரியாத மந்தமதிகளே சிவநிந்தையிற் றலைப்பட்டழிவர்! அழிவர்!! ஆயின், கிருஷ்ணனையெடுத் தோதுங்கால் என்னோடு சமானமான வொருவனுலனதுடக்கய மறுபடுமென்று பாணனிடஞ் சிவன் சொன்னமையால் கிருஷ்ணனுக்குச் சிவனோடு சாமியமுண்டாகிறதே யெனின், அது ஔபசாரிகமென்க. சாமானியனொருத்தன் கௌரவஸ்தனொருவனைத் தன்னுடனோரிடத்துக்குவந்து தனக்காக வேண்டிய காரியங்களை முடித்துத் தருகவெனக் கேட்குங்காலவனுடன்போவது தன்து கௌரவஹானியென்பதை யுட்கொண்டு அவனுக்கிதஞ்சொல்லித் தனக்குப் பதிலாக வேறொருவனை யனுப்பி யிவனென்னில்சமானமானவன், இவன் வருவதுநான்வருவதுபோலவேகொள்,என்னிலுமிவனுனக்கு அதிககாரியசாதகங்களுண்டாமென்று போக்குக்காட்டி யநுபவமாய் நடந்துவரும் விவகாரத்தாலுங் கண்டறிந்தடங்குக. இதன்முடிவு அவன்காரியசாதகமாக வேண்டியதொன்றே யாதலால் மேல்வியவஸ்தை சர்வசம்பிரதிமாதல் தெளிந்திடுக.

இப்படிக்கொள்ளாது, கிருஷ்ணனுக்குநேருமபகர்ஷ நிவிர்த்தியர்த்தம் கிருஷ்ணனை யென்னோடு சமானமானவனென்றுசிவன் சொன்னதுபசாரமன்று, உண்மையேயெனக்கொள்வாமெனின், அப்போதும் சமானனாகிய கிருஷ்ணனுக்குச் சிவன்பயந்தோடினாரென்றல்பிழையாம். அன்றியும், இரண்டுசமானப் பொருள்களுண்டாகிப் பிரம்ஹம்சமானுதிகரஹிதமாயுள்ள தென்னுஞ்சுருதியும் பொய்ப்பட்டுப்போம். ஆயின், பாணனிடந் தன்னைக்குறைத்துச் சொல்லக்கூடாமையால் சிவன்தன்னிலு மதிகனாகிய கண்ணனைச்சமானனாகக் கூறினாரென்பாமெனின், அப்போது பாணனைச் சிவன்வெல்ல வகையற்றுச் சொன்னாரென்பது பெறும். தானேவெல்லக் கூடுமாயின் வேறொருவனைச் சுட்டவேண்டிய வாவசியகமின்மையால். இல்லை, பாணனைச் சிவன்வெல்லுவதுகூடுமெனின், தானேகௌரமாய் முடிப்பதைவிட்டுப் பின்னர்ப்பாணனுக்காகப்பரிந்துபோய்க் கண்ணனிடம் பரிபவப்பட்டுலையவழிதேடியதென்னை? பின்னேதனக்குப் பரிபவமுண்டா மென்று தெரியாமையா லப்படிச் சொன்னாரெனின், கண்ணனால் பாணனுக்குமாத்திரங் கரங்கள் சேதிக்கப்படு மென்றவர் முன்னரே

மொனல் என்னுடைய வநுக்கிரகத்தை நீ பெறவேண்டுமென்று ரைத்தாரெனவும்பெறப்பட்டது. எனவே, யொருவராலுங்கொல்லப்படாமலிருக்க வரத்தைப்பெற்றவிவனை நீகொல்வதோ சாத்யமன்றெனவும், எமது அநுக்கிரகத்தைப் பெற்றுவநு நீ கொல்லலாமோவென்றால், அவனுக்குநாம் அபயங்கொடுத்தபின்னரதற்கு விரோதமாயுனக் கநுக்கிரகத்தைச் செய்யமாட்டோ மாகையால் அதுவுங்கூடாத காரியமெனவும், ஆகையால், அவனைக்கொல்லவேண்டுமென்னு மெண்ணத்தைவிட்டு அவன்றினவடங்கவவனுடன்சண்டைபண்ணக் கடவாயென்று பகவான்கிருஷ்ணனுக்குணர்த்தினமையேபெறும். இங்கே, என தநுக்கிரகத்தைத் தேடிக்கொள்ளென்றது நாமநுக்கிரகஞ்செய்ய மாட்டோமென்று பொருள்தந்து நின்றமைகாண்க. இம்மட்டேயன்றி "అస్మత్సంశ్రయదృప్తోఽపి, నాయంవధ్యస్త్వయాస్వయం, మయాదత్తవరోదైత్యః, తతస్తంక్షమయామ్యహం" என்னும் விஷ்ணுபுராண வசனத்தால் இந்தப்பாணன்கர்வமடைந்து திரிந்தாலும் நம்மாலே யநுக்கிரகிக்கப்பட்டவனாயிருத்தலால் இவனபராதத்தை க்ஷமித்திருக்கின்றோம், இவன் உன்னாலே சுவதஹாகொல்லத்தக்கவனல்லவென்றறியக்கடவாயென்றுகிருஷ்ணனைப்பார்த்துப்பகவான் சொல்லியருளினாராக வெளிப்பட்டது. மேல்உன்னால்சுயமாய்க்கொல்ல முடியாதென்றபோது நாமநுக்கிரகித்தால் முடியுமெனவும், அவனுக்கு முன்னமேதானே நாமபயங்கொடுத் திருப்பதால் அவனுக்கு விரோதமா யிப்போதுனக்கு வரத்தைக்கொடுக்க மாட்டோமெனவும் வெளிப்பட்டமையால், எம்மநுக்கிரகத்தளவே நின்செயலனைத்து மென்று சிவபெருமானருளிச்செய்தமை பெறப்பட்டது. இதனால் பாணனது கரங்களொடிந்துவரக் கண்ணன்சேதித்த மாங்மியம் சிவாக்ஞாபுரஸ்ஸரமென்றே துணியப்பட்டது. அங்ஙனஞ்சேதிக்கப்பட்டமையால் பாணன்றனதுபகையடங்கிமகிழ்ந்தமையால் சிவபெருமானவனுக்குபகரித்தமையே பெறப்பட்டு அவனுக்குத்தாமபயங் கொடுத்திருந்தவுண்மைக்கு விரோத முண்டாகாமையும்வெளிப்பட்டது.

இவ்வுண்மையையறியாமல் பாணனுக்குச் சிவன்கொடுத்த வரம் பாழாய் விட்டதெனவும், சிவன் கண்ணனுக்குப்பயந்து தனதுமக்களோடு ஓடியொளித்தானெனவுங்கூறியமறிவார் கோள்குணமின்மையாய் முடிந்தது. பிள்ளைப்பெருமாள் என்னும் அங்

தியஜமதப்பிரஷ்டனொருவன் றனதுமாலப்பிரபந்தத்தில் (ஐங்கரன், முடுகியோட முருகனோட முக்கணீசன் மக்களைத், தேடியோடவாணனுயிரங் கரங்கள் குருதிசோர, சிந்தியோட) வென்றுடனிருந்து கண்டவனைப்போலப் பிதற்றியிருக்கின்றானாகையால், அவன் பேதமையைக்காட்டி மறுக்கு நம்மான்றோர் திருவாக்குகளை யீண்டுச் சிந்திப்போமாக. (முருகனோட முக்கணீசனோட வென்று முன்னியே, திருகுறைத்தபேதையே சினந்துவாணனூருடைந், தருகொடிந்து வீழவாயிரங்கரங்களன்றுமா, லொருமை வெற்றிகண்டதால முண்டகண்டனன்னையே.) என்று கூறி (அங்கியோட வம்புயன் மயங்கியோட வங்கஜன், மங்கியோட வாசவன் மலங்கியோட மாலவன், சங்கியோட மாதருங் கலங்கியோடவேசவம், பொங்கி நீடவேமகம் பொடித்த தார்புகன்றிடே.) என்று விஷ்ணுவும், அவனது பெண்டிரும், அவனது மக்களும் யாகத்திலோடி யழிந்தமையும் பிரவசனஞ் செய்திருத்தலால், சிவாதிக்யநலம் வெளிப்பட்டவாறறிக.

ஆயின், யுத்தாநந்தரம் கிருஷ்ணனைச் சிவபெருமான் சர்வோத்கிருஷ்டமாகத் துதிசெய்த தென்னையெனின், அதுகிருஷ்ணனைக் கௌரவப்படுத்தும் பொருட்டெனவறிக. எங்ஙனமெனின், பிரம்ஹதேவரைச் சிறையிட்டருளியமுருகக்கடவுளிடம்பிரணவோபதேசம் பெறவேண்டிச் சிவபெருமான் தாம்சிஷ்யபாவத்திலிருந்து அவரைவணங்கியுந் துதித்தும் பாராட்டியவுரிமைகளைக் கொண்டுஎந்தமூடனே முருகக்கடவுளைநோக்கச் சிவபெருமான் றாழ்ந்தவரொன்றுரையாநிற்பன்? பாணனுக்கே சிவபெருமானுட்பட்டிருப்பாரெனின், கிருஷ்ணனுக்கவர்பணிவுகோடலும், அவனுக்கு அஞ்சினவராகநாடகம் புரிதலும் சிவாபகர்ஷமாவதெப்படி? பாணன் சிவபக்தாக்ரேசரனைபடியே அவனுக்குச் சிவபெருமான் பணிவுற்றவராயினர். அப்படியே யன்றோ கண்ணனிடமுங்கொள்ளற்பாலது? கண்ணன் உபமன்னியரிடம் தீக்ஷிதனுகிச் சிவபூஜாநிஷ்டனுயிருந்தானாகையால். பூர்வோத்தரசந்திக்தங்களை நோக்காமல் யாதொரு விஷயத்தையும் முடிவுரைக்கக் கூடாதாகையால் முன்பின் சந்தியறியாது கண்ணனுக்குச் சிவபெருமான்பயந்தோடினரெனவும், அவனைத் துதிசெய்தாரெனவும் வாய்வம்பாடுதல் வசையுண்டு போயிற்றென்க.

இப்படி யறிவதொழிந்து பாணன் சண்டையில் கிருஷ்ணனுக்குச் சிவன் முதுகுகாட்டி யோடினரெனக் கூறித்திரியும்

பாலிசர் பின்வரும் வினாக்களைப் பரிகரித்துக் கொள்வாராக. விஷ்ணுவை யாகபதியாகக்கொண்டு வைஷ்ணவயாகஞ்செய்த தக்கனது தலையுருண்டகாலையில், அதுவிஷ்ணுவால் தடுக்கப்படா ததென்னை? விஷ்ணுபுத்திரர்களாகிய பிரமன் மன்மதனிருவருக் குஞ்சிவனால் கேடுவந்தபோது அக்கேட்டைத்தவிர்த்துத் தனது மைந்தரை யந்த விஷ்ணுபகவான் காத்துக்கொள்ளாததென்னை? சிவபக்தராகிய ததீசி முனிவர்மேல் விட்டபோது பொடிந்து போன சக்ராயுதம் சிவனைத்துரத்திற் றென்பதெப்படி? "[illegible]" என்றபடிச் சங்குகர்ணனென்னும் பாரிஷதனாகிய சிவகணத்தலைவனால் சிகையறுப்புண்டொழிந்த விஷ்ணுவுக்குச் சாட்சாத் சிவபெருமான் பயந்தோடினா னென்பதெப்படி? ஷெ ததீசி பகவான் றனதுகாலின் கட்டை விரலையசைத்தபோது பலபலவென் றுதிர்ந்த விஷ்ணுக்களோ டொருசேரக் கழிக்கப்படும் மூலவிஷ்ணுவுக்கு அம்முனிவர்க்குபாஸ்யமானராகிய சிவபெருமான் பயந்தோடினாரென்பதெப்படி? இப்படியனந்த மூளவற்றைப்பரிகரிக்க வகைதேடாது கிருஷ்ணனுக்குச் சிவன்றோற்றார், சிவன்றோற்றானென்று கூபமண்டுகம்போற்கத்திக் கழிவார்கோள் குணமின்மையாய் முடிந்தமைகாண்க. இன்னும் விரிக்கிற்பெருகும். இதுவரையாம் கூறிவந்ததெல்லாம் விஷ்ணுபரத்வபோதகமாகிய பாகவதத்திற் பெறப்பட்டபடிக்குஞ் சிவாபகர்ஷம் சித்தியாமையைக் காட்டவேண்டியேயாம். முக்யவிர்த்தியால் அந்தப்புராணமுழுது மப்பிரமாணமென்பதே யெம்மமுடிவுரையென்க. இதனைமேல் கங்காதாரணப் பிரக்யானத்திலினிது விளக்கி யிருக்கின்றே மாகையாலாண்டுகண்டுணர்க.

இந்தமுடிவால் மேலெடுத்துக்கொண்ட நாசிம்ஹவதம், கங்காதாரணப்பிரக்யானம், பாணாசுர விருத்தாந்தமாகிய மூன்றுக்கு முபசமனமுண்டானதா லின்னவநந்த சிவபாரம்யப்பிரவசனங்களை ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்த காசாரியரும், சிவாகமசித்தாந்த ஞானநிஷ்டருமா யெழுந்தருளியிருந்த காட்டாலூர், ஸ்ரீசுந்தரசிவாசாரிசுவாமிகள் செய்தருளிய சிவாதிக்யரத்நாவளி முதற்பாகத்தினும், எம்மால்செய்யப்பட்ட ஷெ சிவாதிக்யரத்நாவளி இரண்டாவது பாகத்தினும் பரக்கக்காணலாமென்க.

భూయస్సభగవాన్ ధ్యాత్వా చిరంశూలవరాయుధః
తస్యతస్యనికాయస్య చకారైకైకమీశ్వరం
దేవానామధిపంచక్రే దేవంశతశతేక్షణం
రుద్రాణామపిచేశానం గోప్తారంవిదధేప్రభుః
మహాదేవంమహాత్మానం విశాలాక్షంసనాతనం॥

இ-ள். சிரேஷ்டமான சூலாயுதம் படைத்த பகவானாகிய சிவபெருமானானவர் இந்த வுருத்திரகணங்களுக்குள்ளே யொவ்வொரு ருத்ரமூர்த்தியை யொவ்வோரிடங்களில் நாயகர்களாக ஏர்ப்பாடு செய்தனர். ஆயிரங்கண்படைத்தவனைத் தேவர்களுக்கு எஜமானனாக வேர்ப்படுத்தினர். மஹாதேவராகவும், மஹாத்மாவாகவும் விளங்கும் விசாலாட்சருத்ரரை உருத்திரர்களுக்கெல்லாம் இரக்ஷகராக வேர்ப்படுத்தினர். எ-று.

பரமசிவனுடைய ஏவலுக்கு யோக்யர்களாயிருக்கிற வுருத்திரகணங்களி லிந்த விசாலாட்சருத்ராருக்கு அந்தப்பரமசிவனில் வேறுகுந்தன்மை யிலக்கணமாகவேர்ப்பட்டது. இந்தப்பிரகாரம் சிருட்டிக்கிற நிமித்தமாய்ப் பிரம்ஹாவினுடைய லலாடத்திலே நின்றும் உற்பவித்திருக்கிற அந்தவிசாலாட்சருத்ரனையநுசரித்து ஸ்ரீமஹாபாரதத்திற் பெறப்பட்டவசனம் வருமாறு (బ్రహ్మాబృహస్పతి స్థాణుః మనుశ్చపరమేష్ఠినః) என்னும் ஆரம்பத்தையுடைய வாக்கியத்தில் பிரம்ஹா, பிருகஸ்பதி, ஸ்தாணுருத்ரன், மநு, பரமேஷ்டி இத்யாதி யிருபத்தொருபேர்களுண்டானர்களெனவும், அவர்கள் பிரஜாபதிகளென்று சொல்லப்பட்டவர்களெனவும் பெறப்பட்டது. இங்கே பிரஜாபதிகளிடங்களிலே பரிகணம் செய்யப்பட்டது. அந்தஸ்தாணுருத்ராருக்கே பிரம்ஹசபையில் பிரம்ஹாவின் அநுசரணத்தினாலே இருப்பானது ஆதிபர்வத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

తత్రస్థోమహాదేవ స్తత్రాగ్నిర్వాయునాసహ
ఋషయస్సర్వఏవైతే పితామహముపాసతే॥

இ-ள். அந்தப்பிரம்ஹசபையிலே விஷ்ணு, மஹாதேவர், அக்னி, வாயு, ரிஷிகள்முதலானவர்கள் பிரம்ஹாவையுபாசித்துக் கொண்டிருக்கின்றார்கள். எ-று.

இதுவும் ஸ்தாணுருத்ரர் விஷயமென்றே யறிந்திடுக.

பாரதம் ஆதிபர்வத்தில், பிரம்ஹசபையில் தேவர்க்களைப் பிரதட்சிணஞ்செய்து வருகின்ற திலோத்தமையை நான்கு பக்கங்களிலும் பார்க்கும்பொருட்டு அந்தஸ்தாணுருத்ரர் நான்கு பக்கங்களிலும் நாலுமுகங்களை யுண்டாக்கிக்கொண்டனர் என்று கூறுமர்த்தத்தை (ఏవంచతుర్ముఖస్థాణుః మహాదేవో భవత్వసౌ) என்னும் வசனத்தால் மஹாதேவராகிய ஸ்தாணுவானவர் நாலுமுகம் படைத்தவரானர் என்று விளக்கியதனற் காண்க.

இன்னும், துரோணபர்வத்தில் பிரம்ஹாவைக் குறித்துச் சிவன் சொல்லுகிற வசனம் வருமாறு.

"భవతాహినియుక్తోహం ప్రజానాంపరిపాలనే"

இ-ள். உம்மாலே பிரஜைகளினுடைய பரிபாலனத்தின்பொருட்டு நான் ஏர்ப்படுத்தப்பட்டேன் எ-று. இதிற் பெறப்பட்டதும் ஸ்தாணுருத்திர விஷயமென்பதே சர்வசம்பிரதிபன்னமாதலறிக. இனிப்பாரதம்மோக்ஷதர்மத்தில் நாராயணர் கூறியவசனத்தையோசிப்பாம். "ఏతౌద్వౌవిబుధశ్రేష్ఠౌ ప్రసాదక్రోధజౌమమ। మయాదర్శితపంథానౌ సృష్టిసంహారకారకౌ" என்னுமிந்தவாக்கியத்தைப் பரியாலோசிக்கில் தேவர்களுக்குள் சிரேஷ்டர்களாயுள்ள விவ்விருவரும் என்னுடைய அநுகிரகத்தாற் கோபத்திலேநின்றும் பிறந்தவர்களும், என்னலே காண்பிக்கப்பட்ட மார்க்கங்களிலேசிருட்டியும், சங்காரமுஞ் செய்பவர்களுமா யிருக்கின்றார்களென்று பெறப்படுகின்றது. இந்தவசனத்தில் கோபத்திலேநின்றும் பிறந்தவனென்று ரூசிப்பித்தவிசேஷணத்தால் அவருளெண்ணப்படுமுருத்திரர்விபூதியாகவே கொள்ளப்பட்டனர். இந்தப்பிரகாரமே மற்றோரிடத்திலும், அன்னியகிரந்தாந்தரங்களிலும் சிவநிகர்ஷமாகத் தோன்றுகிறசந்தர்ப்பங்கள்வருந்தோறும் சிவநாமத்தைவகித்துச் சிவமுத்திரைசிவரூபங்களைத் தாங்கிச் சிவவிபூதிகளாயுள்ள ஸ்தாணுவிசாலாட்சாதி ருத்ரகணங்க ளென்பதைக் காட்டவேண்டிப் பிரம்ஹபுத்திரன், விஷ்ணுகோபஜன் என்னும் விசேஷணங்களே பிரயோகிக்கப்பட்டன வென்றறிக. மேல் விசாரத்தால் பாரதத்திலெவ்வோரிடங்களில் சிவாபர்ஷமாகத் தோன்றும்படியுண்டாயிருக்கும் பிரயோகங்களுக்குக் கதி யேர்ப்பட்டமையால், அவற்றல் பரசிவ மகிமைக்குப் பாதகமொன்று மில்லாமைதெளிக.

எந்தவிடத்தி லன்னவைசேஷிக பதங்களில்லையோ அங்கேசாட்சாத் சிவவிஷயமென்றே கொள்ளப்படுமென்க. எங்ஙனமெனின், பஞ்சேந்ரோபாக்கியானத்தில் அந்தப் பஞ்சேந்திரங்களை அசுராவதாரரூபமான கர்னன், துரியோதனன் முதலியபேர்களுடைய சம்ஹாரார்த்தமாய் மநுஷ்ய லோகத்திற் பரவுங்கோ ளென்று ஆக்ஞாபிக்கும்படியான சிவனுடைய அம்சத்தினாலே நாராயணனுமவதரித்துப் பாண்டவர்களுக்குச் சகாயத்தைச்செய்தான் என்று பெறப்பட்டமையே சாலும். இவ்வுண்மை பின் சுலோகத்தாலும் விரிக்கப்படுதல் காண்க.

அவதாரிகை.

மேலெடுத்துக் கொண்டபடிக்குப் பின்னுங்கதி சொல்லுகின்றார்.

சுலோகம்.

యత్రేదృశంనాస్తిభూశరుద్రతా। విజ్ఞాపకంనాథవిశేషకంపదం
స్వాపిస్వకర్మగ్రహమానవైశసా।త్వత్వోశ్వరంత్వాస్మనికషణిగీస్పృశేత్ ॥౧॥

மொழிபெயர்ப்பு.

நன்மைகொளும்விபூதியுருத்தின்றன்மைஞாபகமாகவில்விசேட
மின்மையெவனுமாண்டுநிகழுமிழிபுனாயன்றேனெய்தலாகுக்
தன்மியிடம்பொருள்காணத்தக்கபிரமாணமிலாத்தன்மையாலே
யென்மணியேசர்வேசனென்னுமுனையதுதொடராதென்றுரைத்தானே. (௧)

இ - ள். வாராய்நாதனே! எந்தவிடத்தில் விபூதிருத்ரனுடைய தன்மையை ஞாபகப்படுத்தும்படியான விசேஷபதமில்லையோ, அந்தவிடத்தில் நிகிருஷ்டமாய்ச் சொல்லும் வாக்கானது அவனுக்குத் தர்மியாயுள்ள பொருளிடங் கிரகணஞ் செய்யப்பிரமாணங் கிடையாமையால் அச்சர்வேசுவரராகியதேவரீரை அது தொடுவதில்லை. எ - று.

ஸ்ரீமகாபாரதத்தில் சாம்பமூர்த்தியானவர் திரிமூர்த்திகளுக்கப்பாற்பட்டவரும், திரிமூர்த்திகளைப் படைத்தவரும், சராசரமாயுள்ள சகலபிரபஞ்சங்களையுஞ் சிருட்டிசெய்பவரும், ஸ்திதிசம்ஹாரங்களைச் செய்பவரும், யாவராலும் சேவ்யமானராயுள்ள

வருமாகப் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றனர். அன்றியும், பாரத சேஷமாகிய ஹரிவம்சத்தில் பண்டிசவாரியினுல் கொண்டாடப் படும் நந்தகோபாலனுலே தன்மகனுன கிருஷ்ணனுடைய ரக்ஷணையின் பொருட்டுச் சொல்லப்பட்ட கவசத்திலும் பரதத்வப் பொருளென நிரூபிக்கப்பட்டனர்.

విష్ణుస్త్వాంపూర్వతఃపాతు రుద్రోదక్షతుదక్షిణం
బ్రహ్మాచపశ్చిమంపాయ స్కందోరక్షత్వథోత్తరం
ఉపరిష్టాత్తథాసూర్యః పాత్వాధశ్చాపివాసుకిః
పాయాశ్చత్వామథోవత్స కృష్ణాః కాష్ఠాఃసమీరణః
స్వస్తింవరోతుభగవాన్ పినాకీవృషభధ్వజః
గావోరక్షంతుసర్వత్ర భూమింపాతుసదాశివ॥

இ - ள். உனக்குக்கிழக்குத் திக்கில் விஷ்ணுவிருந்து காக்க. உனக்குத் தென்றிசையிலுருத்திரனிருந்துகாக்க. உனக்கு மேற்றிசையிற் பிரமனிருந்துகாக்க. உனச்குவடதிசையில்ஸ்கந்தரிருந்துகாக்க. உனக்கு மேற்பிரதேசத்திற் சூரியனிருந்துகாக்க. உனக்குக்கீழ்ப்பிரதேசத்தில் வாசுகியிருந்துகாக்க. இன்னும், குழந்தாய்கிருஷ்ணு! ஏனையதிசைகளில் வாயுவிருந்துகாக்க. பிநாகபாணியும், விருஷபத்வஜருமான பகவானுவர் க்ஷேமத்தைச் செய்தருள்க. பசுக்களானவை யெங்குமுன்னைக் காத்திடுக. சதாசிவனும் பூமியுமுன்னைக் காத்திடுக. எ - று.

இந்த வாக்கியத்தொடர்பால் பிரம்ஹ விஷ்ணு ருத்ரோத்யாதிகளைக் காட்டிலும் பாரம்ய சிரேஷ்டராயும், சர்வேசுவரராயும் விளங்குந் தேவரீரை யபகர்ஷ வாக்குகள் தொடாவெனவும், இன்னும் நிகிருஷ்ட வசனங்களில் விபூதி விஷயத்தன்மையை ஞாபகப்படுத்தும்படியான ஸ்தாணுவிசாலாட்சாதி சப்தங்களிருக்கு மாற்றல், உசிதமா யந்தந்த விபூதிவிசேஷங்களையேபற்றுநிற்குமெனவும் வியந்து புகழ்ந்ததெனவறிக.

அவதாரிகை.

ஆயின், பாரதத்திற் பெறப்பட்டகீதையில் கிருஷ்ணனுல் தனக்கே பரப்பிரம்ஹபாவத்தினுடைய வடையாளமுள்ள பெருமைகள் அதிகமாகவும், வெகுவிதமாகவும்விஸ்தரிக்கப்பட்டதென்னையென்றுசங்கித்த பூர்வபக்ஷியைநோக்கிப் பரிகரிக்கின்றார்.

சுலோகம்.

గీతాసుగూఢముదితంభగవతఃపరత్వం। నైవస్ఫుటంతదతఏవహిసవ్యసాచీ
గీతార్థమేవగహనంపునరప్యపృచ్ఛ। త్తస్మైధనార్థముదితాహరిణానుగీతా॥ ౧౦॥

மொழிபெயர்ப்பு.

இறைவனினதோங்குபரத்துவமேத்துகீதையெனவியம்புநூலின்
மறைபொருளாய்க்கிளத்தமுறையாலதுவெள்ளியதன்றேமாண்டவுண்மை
முறையுணராமாட்டாதேபத்துனனப்பொருண்மீண்டுமுயன்றுகேட்ட
குறையகலக்கண்ணனநுகீதைவெளிப்படையாகக்கூறினனே. (௧௦)

இ - ள். வாராய்நாதனே! கீதாசாஸ்திரங்களில் தேவரீருக்குப் பரத்வமானது குப்தமாகச் சொல்லப்பட்டது. அதுவெளிப்படையாகத் தோன்றவில்லை. இக்காரணத்தால் அர்ச்சுனன்தானுணர்வதற்கரிதாயிருந்த கீதார்த்தத்தையேமீண்டுங் கேட்கலாயினன். அவனுக்குத் தெளிவுண்டாம்பொருட்டுக் கிருஷ்ணனாலநுகீதாசாஸ்திரம் சொல்லப்பட்டது. எ - று.

அசுவமேதபர்வத்தில் அநுகீதா சாஸ்திராரம்பத்தில் அர்ச்சுனனாலே சொல்லப்பட்ட வசனம் வருமாறு.

విదితంతేమహాబాహో సంగ్రామేసముపస్థితే
మాహాత్మ్యందేవకీపుత్ర తచ్చతేరూపమైశ్వరం
యత్తుతేభగవతాప్రోక్తం తదాకేశవసౌహృదాత్
తత్సర్వాంపురుషవ్యాఘ్ర నష్టంమేవ్యగ్రచేతసః
మమకౌతూహలంత్వస్తి తేష్వర్థేషుపునఃపునః
భవాంశ్చద్వారకాంగంతా నచిరాదేవకేశవ॥

இ - ள். வாராய் மஹா பலசாலியான கிருஷ்ண! யுத்தமானது நேரிட்டிருக்கும்போது யாதொருத்தனுடைய மாகாத்மியமானதறியப்பட்டதோ, அதுவேயுனக்குஈசுவரரூபமென்று தெரியலாச்சுது. என்னிடத்தில் சிநேகத்தினாலேயாதொரு ஈசுவரரூபமானதுஉன்னால்சொல்லப்பட்டதோ, வாராய்புருஷோத்தமனே! அஃதெல்லாம் நிலையில்லாத மனசுள்ளவனாகிய வெனக்குமறந்து போய்விட்டது. ஆகையால், அப்படிப்பட்ட வர்த்தங்களைக் கேட்கச் சந்தோஷமானவாசையானது எனக்கதிகரித்திருக்கின்

றது. ஏகேசவா! நீயோ, துவாரகையைக்குறித்து அடிக்கடிச்சீக்கிரமாய்ப் போகின்றவனாகிறாய். எ - று.

என்று அர்ச்சுனன்கேட்கும்போது பகவானாயுள்ள கிருஷ்ணனாலே அநுகீதாசாஸ்திரம் உபதேசிக்கப்பட்டது. அச்சாஸ்திரத்தினை யநுசரித்த வாதரூபத்தால் கீதாசாஸ்திரங்களிலே ஸ்ரீ கிருஷ்ணனால் சிவபரத்துவம் சொல்லப்பட்டதும் விளங்கிற்று. அதுபெரியவாரண்யம் போல்வதாக, அர்ச்சுனனாலினிதுதெள்ளி தினுணரப்படாமைநோக்கி மறுபடியும்அந்தக்கீதாசாஸ்திரத்தின் விஷயமாகவெழுந்தவினாவினபிப்பிராயத்தைச்சொல்வதும் பூர்வசுலோகத்திற் பெறப்பட்டவுண்மையானே வெளிப்படுதல்காண்க.

அவதாரிகை.

அர்சுனனுக்குக் கீதாசாஸ்திரங்கேட்குங்காலுண்டான சம்சயத்துக்குக் காரணத்தைவெளிப்படுத்தி, அவன்கேட்கும்வினாவினபிப்பிராயத்தையும் வெளிப்படுத்துகின்றார்.

சுலோகம்.

తమేవచాద్యంపురుషంప్రపద్యేయ। త్వ్యదీరితంయన్మధుకైటభద్విషా
తమేవసర్వాన్ భ్రమయంతమీశ్వరం। మహాఫలాప్త్యైశరణంప్రజేతియత్॥౧౧॥

மொழிபெயர்ப்பு.

உரைசெயுமவ்வாதிபுருடன்றனையேயடைகின்றேனுள்ளவாவென்
றரவுமிருகண்ணனுரைத்திடுபொருள்யாதுயிர்யாவுமுழலமாயை
பரமெனவேகொடுசுழற்றும்பாங்கினனுமீசனையேபற்றிநாளுஞ்
சரணடைதிமிக்கபயனெய்தவெனச்சாற்றவருத்தகைமைத்தேதோ. (௧௧)

இ - ள். அவ்வாதிபுருடனையே யடைகின்றேனென்று கிருஷ்ணனால் யாதொரு பொருள் சொல்லப் பட்டதோ, சகலமான பிராணிகளையும் மாயையாற் சுழற்றிக் கொண்டிருக்கு மந்தப்பரமேசுவரனையே பெரும் பிரயோசனத்தைக் குறித்து நீ சரணமடைவாயென்று யாதொரு பொருள்சொல்லப்பட்டதோ, எ-று.

மேல்சுலோகத்தைத் தொடுத்துப்பின்னுங் கூறுகின்றார்.

சுலோகம்.

ఏతేనకృష్ణస్యసమంముముక్షుణా । స్వారాధనీయః ప్రతిభాసతేపరః
సర్వస్యచాహంహృదిసన్నివిష్టఇ। త్యాద్యైస్తువిష్ణుస్తదుదేతిసంశయః ॥౧౨॥

மொழிபெயர்ப்பு.

என்னுமிதனுன்முத்திகாமனெனும்பற்குனனேடேயுமன்பு
தன்னுகிருட்டினன்றனக்குவேருகத்தோன்றுபரந்தொருத்தாம்பின்னு
மன்னுமுயிர்தோறுமிருந்திடுகின்றேனுனென்னுமாற்றமாதி
சொன்னதனுல்விண்டுபரஞ்சமிசயமென்றுளம்பூப்பத்தோன்றுமாலோ. (கஉ)

இ-ள். என்றுகூறப்பட்டதனுல், முமுக்ஷுவாகிய அர்ச்சுனனுடனே கிருஷ்ணனுக்குமுபாஸ்யமானனை பரம்பொருள் வேருகவுளனென்பதுஏர்ப்பட்டது.யாவருள்ளும்நானிருக்கின்றேனென்றதேத்யாதிகளால் விஷ்ணுபரம்சமிசயமுண்டுபண்ணிற்று.எ-று.

இவ்வுண்மையைக் கீதாநுசாரமாய் விசாரிப்பாம்,

తతఃపదంతత్పరిమార్గితవ్యం। యస్మిన్గతానవర్తంతిభూయః
తమేవమాద్యంపురుషంప్రపద్యే। యతఃప్రవృత్తిఃప్రసృతాపురాణీ॥

என்னும்வசனத்தால், அதன்பின்னர் எதனிடத்திற் சேர்ந்தபேர்கள் மறுபடியுந் திரும்புவதில்லையோ, அதுவேதேடத்தக்கது. யாதொருவஸ்துவினின்றும் பழமையான வாக்கானது வெளிப்பட்டதோ, அந்த ஆதிபுருஷனேயே யடைகின்றேன் என்னும் ஸ்ரீ கிருஷ்ணனுடைய வசனமானது வெளிப்படுகின்றது. இன்னும், "ఉత్తమఃపురుషస్త్వన్యఃపరమాత్మేత్యుదాహృతః। యోలోకత్రయమావిశ్యబిభర్త్యవ్యయఈశ్వరః" என்னும் வசனத்தால் அழிவில்லாத ஈசுவரனென்று யாதொருவன் மூன்று லோகத்தையும் பரித்துக்கொண்டிருக்கின்ருனே, அன்னியனும், உத்தமனுமாகிறவவனே ஆத்மாவென்று சொல்லப் பட்டான் என்று பெறப்பட்டது. இதனுல், புருஷனென்று சொல்லப்பட்டவன் யாவனே, அவனே யாச்சிரயிக்கத்தக்கவனென்றுகொண்டுஎன்னுலே சரணமடையப்பட்டிருக்குமந்த விசனேயே நீயுஞ் சரணமடையக் கடவாயென்று அர்ச்சுனனைக் குறித்துக் கண்ணன் சொல்லிய வாய்மைப்பாடு வெளிப்பட்டது.

ఈశ్వరస్సర్వభూతానాం హృద్దేశేఽర్జునతిష్ఠతి
భ్రామయన్సర్వభూతానియంత్రారూఢానిమాయయా
తమేవశరణంగచ్ఛ సర్వభావేనభారత
తత్ప్రసాదాత్పరాంశాంతిం స్థానంప్రాప్స్యసిశాశ్వతం॥

இ - ள். வாராய் அர்ச்சுனா! மாயையாகிற யந்திரமென்னுஞ் சக்கரத்தை யடைந்திருக்கிற சகல பிராணிகளையுந் தனதுமாயையால் சுழற்றிக் கொண்டிருப்பவராய்ச் சகலமான பிராணிகளுடைய ஹ்ருதயத்தில் யாவரிருக்கின்றனரோ, அவரையே சகலமான தன்மையாலும் சரணமடையக் கடவாய். அந்த விசுவரனுடையவநுக்கிரகத்தினால் சர்வோத்தமமான சாந்தியையும், சாசுவிதமானஸ்தானத்தையும் அடைவாயாக எ - று.

என்னுமிந்த வசனத்தாலுபதேசிக்கப்பட்டதொருபொருள் சிவமென்று வெளிப்பட்டது. எந்தவிடத்திற்சேர்ந்தால் திரும்புகிறதில்லையோவென்றுகூறி, மீண்டும்சாசுவிதமான ஸ்தானத்தை யடைகிறாயென்றுஏகப்பிரயோஜனத்தையே புணர்த்துந் தன்மையாலும், உத்தமனுயுள்ளவனும், அன்னியனுமென்றுசமாநாதிகரணங்களாயுள்ளவைகட்கோரிடத்தில் புருஷசப்தம் பிறந்துள்ள தன்மையாலும், ஈசுவரனென்னுஞ் சத்தங்களுக்கர்த்தமொன்றாகவேதோன்றுகையாலுமின்னசுபாவ சிலங்கண்ட பாட்டிற்கேற்பக் கண்ணனால் விளங்காநின்றபொருட்டலைமை பரசிவனிடந்தானேயெய்திற்றென்னும்படியக்கண்ணன்றானும்பிரபத்திபண்ணிவணங்கக்கடவதாகியபொருளெனவர்ணிக்கப்பட்டது.

இனி, அர்ஜுனன் கிருஷ்ணனைப் பார்த்துவாராய்கிருஷ்ணா! உனக்கு நான்சிஷ்யன், என்னையடிமைகொண்டருளென்றுசொன்னபோது, அவனைக்குறித்து மோக்ஷார்த்தமாகச்சரணமடைவாய் என்றுபதேசிக்கப்பட்ட பொருளில் இதரபுருஷ சம்பந்தமில்லாமலிருக்கிற ஈசுவரநாமத்தினாற் கொண்டாடப்பட்ட பரமசிவனே நிலைக்கிறபடியா லவரோபரப்பிரஹ்மமென்று சொல்வது கிருஷ்ணனுக்கு இஷ்டாபத்தியென்று வெளிப்பட்டது. அந்தக்கீதையிலே தானே சர்வகாரணத்வம், சர்வாந்தரியாமித்வ முதலிய பிரம்ஹலட்சணங்கள் கிருஷ்ணன் தன்னிடங் கூறியுள்ளா னாகையால் சமிசயாஸ்பத மாயிற்றெனின், அதுகூடாது. எங்ஙனமெனின்,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசம்பந்ததீர்த்தசரணுயநம:

சித்தாந்தரத்நாகரம்.

ஆதிசைவப்பிரபாவம்.

காப்பு.

எவனுயிர்கவுணியர் தவமுதலெனவரும்
எவனுமைதருமுலை யமுதணவெழுதரும
எவனெளிர்சிவமரி பெறவுளமிசைதரும்
அவனருள்பெறும்வகை யடைதிரன்மனனே.

———:o:———

நூல்.

(త్వం దేవేషు బ్రాహ్మణోఽహ్యహం మనుష్యేషు బ్రాహ్మణః। విశ్వాధికో రుద్రో మహర్షిః) என்னுஞ் சுருதிநிஷ்டராய் விளங்குஞ் சிவபெருமானை யடைந்து மலமாயாமோசனம் பெறவேண்டியசேதனர்களில் சிவசம்பந்த விசேஷத்தால் சிவபெருமானுடைய முகத்திற் பிறந்த பிராம்ஹணர் ஆதிசைவரெனவும், பிரம்ஹதேவன் முகத்திற் பிறந்த பிராம்ஹணர் மஹாசைவரெனவும், அவனிடம்பிறந்த க்ஷத்திரியர் வைசியர் அநுசைவரெனவும், சூத்திரர் அவாந்தரசைவரெனவும், அநுலோமர் பிரவரசைவரெனவும், பிரதிலோமர் அந்ய சைவரெனவு முன்மைநூல்களிற் படிக்கப்பட்டனர். இங்கே பெறப்பட்ட சைவத்வம் சிவதீக்ஷாநந்தரம் சிவாகம மங்கீகரிக்குமன்றியந்யதா அசைவசித்தியே பிராப்தமாம். இதனுல் சமஸ்தமான பேரும் சிவதீக்ஷாவான்க ளாத லவசியமென்பது பெறும். இவர்களுள், ஆதிசைவர் சிவமுகோத்பவரான வப்போதேசதாசிவமூர்த்தியால் தீக்ஷிகப்பெற்று ஏனையபிராம்ஹணுதியர்க்கு ஆசாரியர்களாக நியோகிக்கப்பட்டனர். இவர்கள் ஸ்வயம் ஆசாரியபுருஷர்களாதல் பற்றியே யன்றோ பிரமாணமூலத்தாலும், உலகவழக்

கத்தாலுங் குருக்களென வழங்கப்பட்டுவருகின்றனர்? சேதனர்களிற்றமக்கு மேலொருகுருவைப் பெறுமலும், தாமே பிராம்ஹணதி சாதுர்வர்நத்தார்க்குங் குருக்களாகியும் விளங்கு முண்மையே யன்றோ வவரையாவருங் குருக்கள் குருக்களெனத் துதிக்கின்றனர்? குருவுக்குள்ள தர்மம் சிவனைக்காட்டுவதாகவே யன்றோ வேதாகமத்துணிபு? சிவனின்னதன்மையனென் றறிவரியானகையா லவனையடையு மேதுவாக விதிக்கப்பட்ட சிவாலய சேவையாதிகளில் மேலே குருக்களெனத்துதிக்கப்பெற்ற சைவாசாரியரையன்றி யெவனோ ஸ்வதஹாவவற்றைப் பெறவல்லவன்?சுத்தபுவனவாசிகளாகிய வவரிடம் தீக்ஷைவகித்து மஹாசைவத்வாதிசித்திகளைப்பெற்று அவர்காட்டியவாறுசிவத்தைக்கண்டு சிவப்பிரசாதத்தைப் பெறவல்லுநராகிய பிறர் அவ்வாசாரியமூர்த்திகளைக் குருக்களன்றெனவாவது, அவரிற் றமுயர்ந்தவரெனவாவதகங்கரித்துரைப்பரோ லவராற் பூசிக்கப்படுஞ் சிவாலயங்கட்குப் போதலும், அவர் சிவதரிசனஞ் செய்விக்கத் தரிசித்தலும், அவரிடம் விபூதி பிரசாதமுதலியவற்றைப் பெறுதலுங் கூடாவன்றோ? இன்ன பலமகிமைகளையுடைய ஆதிசைவரிடம் பிராம்ஹணன் சிவதீக்ஷைபெற்ற வநந்தரமே அவன்மஹாசைவனுவான். இப்படியே பிறசாதியாரிடமுங்கொள்க. சிவதீக்ஷாவான்களாய் விடுவரோ லவரும் ஸ்வஜாதியிலும், தத்தமக்குக் கீழிட்டசாதியிலு மாசாரியத்வம்வகிக்கவுரியவராவர். இவ்வுண்மைநியாயம் பற்றியேசூத்திரர்களிலாசாரியர் மடங்கள் பெருகின. ஆதிசைவர்களுக்கோ வவ்வாசாரியத்வம் சொந்தநிதி. மஹாசைவராகிய பிராம்ஹணருள் கண்ணுவ கௌதமாதிகளால் சிவநிந்தகளாய்ப் பவித்தழிந்து போகச்சபிக்கப்பட்டமையால் ஏகாத்மவாதம், பாஞ்சராத்ரவாதம், துவைதவாத மித்தியாதி துர்மதப் பிரவிஷ்டரா யொழிந்தவர் போகப் புண்ணிபரிபாக மேலிட்ட சிறுபான்மையர் சிவஸம்ஸ்காரிகளாய், சைவபாஷ்யகாரரை யநுவர்த்தித்துக்கொண்டு சைவாசாரதுல்யராகி மஹாசைவராகவே பிரகாசிக்கின்றனர். அநுசைவராகிய க்ஷத்திரியரும், வைசியருங் காலபலத்தா லாசாரங்கண்மாறி யதோசிதமாய்ச் சைவசித்தியைப் பெற்றுவருகின்றனர். இவ்வுண்மை விசாரத்தால் யாவரோனும் சிவதீக்ஷாநந்தரம் பிராப்தமாவதாகிய சைவசித்தியின்றி ஆசாரியத்வம் வகிப்பது அநாதரணியமென்றே நிச்சயிக்கப்பட்டது.

இங்ஙனநிற்க, சாபகிரஸ்தராய்க் கிடந்துழலும் பிராம்ஹணருள் பாஞ்சராத்திரம், மாத்துவமுதலிய மதப்பிரவிஷ்டாளாய்ப் பவித்தவர் தத்தமக்குரிய முத்திரைகளாக நெற்றிமீது வெள்ளைமண்ணும், மஞ்சட்பொடியும், கரிக்கோடும் பூசித்திரிவதாலவர் சைவ விருத்தாசார முடையாரென்பது யாவருமறிவர். அவருளொருசாராராகிய பிரச்சின்ன பௌத்தரென்றும், மாயாவாதியரென்றுமெண்ணப் படுவாராகிய ஏகாத்மவாதிகள் ஸ்மிருதியாசாரங்களைத் தழுவினராகவும், சிவோபாசனை செய்கின்றவராகவும், பஸ்மருத்ராக்ஷதாரணம்வகித்தவராகவும் போக்குக்காட்டி வாஸ்தவத்திலவையாவும் வெறும்பொய்யெனப் புலம்பித்திரியும் வஞ்சகத்தையறியுங் கூரியமதியில்லாத சாமானியர் அவர்களையே சைவபிராம்ஹணராகவும், சைவாசாரியராகவு மயங்கியழிகின்றனர். அச்சைவவேடங்களை யவர்தாங்கியதெல்லாம் வயிறுவளர்க்கவேயன்றிவேறில்லை. மங்கல பதார்த்தங்களாகிய பஸ்மருத்ராக்ஷங்களை யொழிந்தால் அமங்கலத்வமேலிட்டு முண்டைகளாவராகையாலப்போது ஒருதிரணமுந் தமக்கு யாவராலுங் கிட்டாதென்பதறிந்தே வேஷமாத்திரம் சரியாய்ப்போட்டுக் கொண்டனர். இப்படிப்போட்டுக் கொண்டும், சாம்பவாக்ரேசாளிட்டசாபத்தினுறுதியா லவருட்பலபிராகாரத்திலாசாரம் பிராபல்யப்பட்டிருக்கின்றது. சிலர்படிவிபூதியும், பொதிருத்ராக்ஷமுந் தாங்கினவராகியிரவும்பகலும் ராமகிருஷ்ண வாசுதேவேத்யாதி பசுநாமஜஜனைசெய்துதிரிவர். சிலர்பஸ்மருத்ராக்ஷ தாரணத்துடன்வாமாசாரத்தைவகித்துக் கள்ளருந்தல், புலாலுண்ணலித்யாதி துராசாரத்வம்பூண்டழிவர். சிலர்பஸ்மருத்ராக்ஷ தாரணத்துடன்சைவப்பழமெனரூபத்திற்காணப்பட்டு நெருங்கிப்பார்த்தால் எல்லாம் நானே, என்னைவிட்டா லொன்றுமில்லை, அஹம்பிரம்ஹம், சீவேசுவரஜகத்தியாவும் மிச்சை, இவ்விபூதிருத்ராக்ஷ சிவபூசையாவும் விவகாரமாத்திரமே யன்றியுண்மையில் பொய்யாமென்று பொங்கிப்புலம்புவர். இத்திறத்த சைவப்பெரியோரே யுலகமுழுதுங் கலியின்சக்தியால் பிராபல்யப்பட் டிருப்பரெனின், எப்படியோ வொருவனவராபாசங்களையறிந்து அவரையொதுக்கி வைக்கக் கூடும்? இவ்வசம்பிரதாய சிலர் விர்த்திபெற்றமையே யன்றோ மஹாசைவர் நீங்கலானபிறசைவருந் துர்ப்போதத்துக் குள்ளாகி யாம் வேதாந்திகளென வெளிப்பட்டுத்தாயேது, தந்தையேது,

நானேது, நீயேது எனக்குலைத்து உலகிலழிகின்றனர்? இப்பொய் வேடப்பேய்கள் கையிலகப்பட்ட பின்னரொருவன்றப்பிப்பிழைப்பதுகஷ்டம்! கஷ்டம்!! இச்சைவவேடம் பூண்டுதிரியும் வஞ்சப் பேய்களை யொருவன் முதலிலாச்சிரயிக்கையிலவர்மதமுழுதுந் தெரிந்துகொண்டு, அதன்மாங்மிய முணர்ந்தாவிரும்ப லாகிறான்? அவனுக்குச்சுபாவமாயுண்டாயிருந்த சிவபக்திக்கேற்ப வவன் வழிபடவேண்டிய முறைப்பாட்டிற் பெரியோரைப்பேண லென்னுந்தருமத்தைக் கடைப்பிடித்து விபூதியணிந்தவரெல்லாம் பெரியோரென்னும் பொதுவியல்பற்றி அவ்வஞ்ச வேடத்தாரையும் அடைவதாகிறான். இதனால், மேற்பாகுபாடுகளறிந்தபே ரப்படி மயங்காரென்பது வெளிப்படுகின்றது. இவ்வுண்மைகளெல்லாம் (சிவத்விஜோத்கர்ஷதீபிகை) என்னும் பேரால் யாமினி வெளியிடப்போகிற சத்கிரந்தவாயிலா யுணரலாமென்க.

இதுநிற்க, சிவசம்ஸ்கார ஹீனராயுள்ள ஸ்மார்த்தர் என்னும் விப்பிரவர்க்கத்துட் சிலபேர் சூத்திருட் சிலரை மயக்கித் தாங்கள் ஆகமோக்ததீக்ஷை பிறர்க்குச்செய்யு மதிகாரமுடையாரென வஞ்சித்துத் தங்களுக்கநுஷ்டான மாகிய வச்செய்கையைப்புரிந்து வருகின்றனர். இவர் பெருவஞ்சகரென்பதை நிருபிப்பாம். சிவசம்ஸ்காரம் வகித்தவராயின் மஹாசைவத்வசித்தியுண்டாமாகையா லப்போது ஸ்வஜாதியிலும், மற்றைக்கீழ்ஜாதியிலு மாசாரியத்வம் பூண்டு பிறர்க்குச் சிவதீக்ஷாதி காரியங்களைச் செய்யவுரியவராவர். அங்ஙனமல்லாதபோது தமக்குச் சித்தியாத சைவத்வம் பிறர்க்கவ ருண்டுபண்ணுவது குருடன் குருடனுக்குக்கோல்கொடுப்பதுபோலாம். அவரோ ஸ்மிருதி ஆசாரம்வகித்தவர். ஆகமாசாரமறவே யொழிந்தவர். தமக்கு நெடுந்தூரமாகிய ஆகமாசாரத்தைப் பிறர்க்கவ ரநுக்கிரஹஞ்செய்வது குருட்டரிப்பாளன் குபேரசம்பத்தை யருளுவதுபோலாம். ஸ்மிருதியாசாரம் வகித்தவர்க்கு ஆகமாசார மடக்கமாகையால் தமக்குக் கீழிட்டவாசாரங்களை யதிகார பேதத்தாற் பிறர்க்கவரநுக்கிரகித்தல் சாலுமெனின், அப்போது பாஞ்சராத்திராசார முதலியவற்றையுந் தாங்களாசரித் துபகரிக்குந் தன்மை விரும்பவரும். பாஞ்சராத்திரம் சுரௌதஸ்மார்த்த விருத்தமாகையா லாசரிக்கப்படாதெனின், சிவாகமாசாரம் வைதிகமும், ஸ்மார்த்தமுமாகவன்றோ

கொள்ளவரும்? அங்ஙனமேல், சுரௌதஸ்மார்த்தாவிருத்தமாகிய சைவாசாரம் தங்களுக்குக் கிஞ்சித்து மநுட்டானத்துக்கு வராததென்னை? சைவாசார துல்யராயுள்ள சிவவேதியரிடம் அசூயை பாராட்டிவருவதென்னை? சுரௌதத்தி லடக்கமாகிய ஸ்மார்த்தம் சுரௌதவிரோத மாகாமையா லாசாரத்துக்கு வந்தபடியன்றோ ஸ்மார்த்தத்தி லடக்கமாகிய சைவமும் ஸ்மார்த்தவிரோதமாகாமையா லாசாரத்துக்கு வரவேண்டும்? சுருதிகளுக்கும் ஸ்மிருதிகளுக்கும் விரோதமுண்டாகில் ஸ்மிருதியைவிட்டுச் சுருதியே பற்றத்தக்கது என்றபடி ஸ்மிருதிகளுக்கும் சிவாகமங்களுக்கும் விரோதமுண்டாயிருக்கிறபாகமுண்மையால் விரோதபாகங்களேயசாமஞ்சசமாயிற்றெனின், வேதாவிரோதபாக ஸ்மிருதிசம்பந்தத்தால் யாம் ஸ்மார்த்தர் என்றுவெளிவருவதுபோல் ஸ்மிருத்யவிரோதபாக சிவாகம சம்பந்தத்தால் யாம் ஆகமிகளென்று வெளிவராததென்னை? ஸ்மிருதிகளில் கொஞ்சம் விரோதமும், சிவாகமங்களி லதிகவிரோதமு முண்மையால் சிவாகம மசாமஞ்சஸமாயிற்றெனின், சிவாகம மதிகபாகம் விரோதப்பட்ட படியேயன்றோ பாஞ்சராத்திரமுங் கொள்ளத்தக்கது? பாஞ்சராத்திரத்தில் எல்லாம் வேதவிருத்தமென்று தள்ளக்கூடும்? பாஞ்சராத்திரமும் சுரௌதஸ்மார்த்தங்களுக்கு வெகுவாயவிரோதமாவ தறியாது அதைமுழுது மப்பிரமாணமென்பதெப்படி? ஆனபோதுசர்வாதிகார சிலத்வம்வகித்ததாங்கள் வைதிகபாகமாகிய பாஞ்சராத்திர சம்ஸ்காரம் பிறர்க்குச் செய்யத் துணியாததென்னை? அன்றியும், ஸ்மார்த்தாசாரத்துக்கு ஆகமாசாரங்கள் தணிந்தனவென்று யாவரங்கீகரித்தவர்? ஆகமிகளாகிய சைவவைஷ்ணவர்கள் தங்களாசாரங்களை ஸ்மார்த்தத்திற் றணிந்தனவாக வங்கீகரித்தனரா? சுரௌதத்தில் ஸ்மார்த்தமடக்கமென்றது சர்வசம்பிரதி பன்னமானபடியே யன்றோ ஸ்மார்த்தத்தில் தந்திரமடக்க மென்பதும் சர்வசம்பிரதி பன்னமாதல்வேண்டும்? எந்தச்சைவனும், எந்த வைஷ்ணவனு மப்படி நினைக்கவுஞ் செய்யானாக வெப்படியோ ஸ்மிருதியாசாரம் ஆதிக்யத்தைப் பெறும்? கேவலம் ஆகமிகளாகிய வவர்கொள்ளாமையா லெமக்குப் பாதகமுண்டாகாதெனின், கேவலம் ஆகமிகளென்றா லென்னை? சுருதிக்கு விரோதபாகத்தையுமாகமத்தி லங்கீகரிப்பவனோ வன்றோ கொள்ளவரும்? அவர்க்குந் தங்களுக்குஞ் சம்பந்தமில்லாதபோது மற்றியார்க்கோ

வினித்தாங்கள் குருக்கள் தனஞ்செய்ய முயல்வது? அவிரோத பாகத்தை யநுசரித்தவர்க்கு மாத்திரமே யெனின், அவர்யாவர்? விப்பிரகோடிகளாகிய தங்களுக்கு ஸ்மிருதிகளிருப்பதா லாகமம் தமக்குக்கீழிட்டவர்களுக்கே யாசாரமாயின. கீழிட்டவரைப் பார்க்குங்கா லல்வாகமாசாரமுடையவர் ஆதிசைவராய்க் காண்டலா லவர்க்கே தாங்கள் குருக்களாதல்வேண்டும். ஆதிசைவர் ஸ்மார்த்தரை யற்பமு மதியாதவராகையா லங்கே தங்கள் குருக்கள்பட்டஞ்செல்லாது. மற்றை ஆராத்யர், ஸ்ரீவைஷ்ணவர், மாத்துவரித்திறத்தவருமதிக்காதவரேயாயினர். அவராசாரங்கள்கேவலம்ஒன்றிலொன்று வேறுபட்டனவாகையால். இனி க்ஷத்திரியாதி கீழிட்டவர்பால் செல்லுமெனின், அப்படிக்கெங்கு மநுபவமின்மையாலது கூடாது. அவருள், வைசியர்பாலாகுமெனின், வைசியர் பிரகிருதத்தி லிரண்டுமடங்கள் பெற்றிருக்கின்றனர். ஒன்று சட்டநாதஸ்வாமி மடமும், மற்றொன்று தர்மசிவாசாரி மடமுமாம். இவற்றுள் முன்னையது ஆதிசைவாசாரிய மூர்த்திகளைக் கொண்டதொன்றும். பின்னையது மப்படியே சுத்தசைவமடமா யிருந்துள்ளதென்பது (தர்மசிவாசாரி) என்பதில் வந்த பட்டப்பெயரே காட்டும். சிவாசாரியர் என்பது ஆதிசைவர்க்கே யுரியபட்டமாதலால். இந்தமடம்பிற்காலத்தில் மஹாசைவராலநுவர்த்திக்கப்பட்டிருந்து பிரகிருதத்தில் கேவலம் ஸ்மார்த்தமடமா யொழிந்தது. இப்போதுள்ளவர்க்குப் பூர்வபத்ததிகளொன்றுந் தெரியாமையாலும், கும்பகோணமடாதிபதியாகியசங்கராசாரியரால்நூதனமாக வேர்ப்படுத்தப் பட்டமையாலும், கேவலம் ஸ்மார்த்தமே வகித்திருக்கின்றனர். இங்கேயாகமமென்னும் பிரஸ்தாபத்துக்கே யிடமின்று. அன்றியும் சிஷ்யர்களாகிய வைசியர்களுக்குச் சாட்சாத்தாகப் பட்டாபிஷேகராயுள்ள மடபதியுபதேசியாமையாலும், புரோகிதரைக்கொண்டுபகயனுதிகள் செய்வித்தலாலும் கேவலம் அசங்கதாசாரமாயிற்று. அப்படிச் செய்விக்குஞ் சடங்குகளும் வைதிகமும், ஸ்மார்த்தமும், சைவமுமல்லாமல் கேவலம் பௌராணிகமாத்திரமாகவே யேனையசாமானியசூத்திரர்க்குச் செய்விக்கு மம்மாத்திரமாக வொழிதலாலுமது பிரகிருத விசாரத்திற்கணுத்துணையுந் தங்களுக்குச் சாதகமாகாது.

பிரத்தியக்ஷத்திற்சிஷ்யர்கட்கு ஸ்மார்த்தாசாரம்பலக்கவின் றேனும்மடபதிக்கும், அவர்கூட்டத்தார்க்கும் கேவலம் ஸ்மார்த்

தம்பிரகாசித்தலாலதற்கு ஆகமாசாரமோர் காலத்திலிருந் திருக்கலாமென்பது கூடாதெனின், அப்போது சிவாசாரி யென்னும் பட்ட மெடுபட்டுப்போம். அன்றியும், அதற்காகமாசாரம்பலிஷ்டமாயிருந்ததை வேறொருமடம் பிரத்யட்சத்திலிருந்து சாட்சிகூறுவதற்கும் விரோதப்பட்டுப்போம். அதுசைவாசார சம்பிரதிபன்னமாகாதபோது வைதிகமடமெனவே கொள்வாமெனி னப்போதுண்டாகிய பாதகத்தைச்சற்றேகாட்டுவாம். இமசேதுபரியந்தம் வைதிகரெனத்திரியும் ஸ்மார்த்தரனைவரும் சங்கராசாரியர்க்குச்சிஷ்யரெனத்தங்களை யங்கிகரித் திருக்கின்றனர். அதனால், ஸ்மார்த்தாசாரம்வகித்த ஷை வைசியமடபதியும்சங்கராசாரியர் சிஷ்யரோயாவர். அப்படிக்கூறுவதிலவர்க்கும், அவர் சிஷ்யர்களுக்குமொப்பில்லை யாவதோடு சங்கராசாரியரை யம்மடபதியொராரொரு காலத்திலுஞ் சந்திக்க வுடன்படாராகையா லவரைவழிபடல் முதலியசத்காரங்களைக் கனவினுநினையாதவ ரென்பதுவெளிப்படுகின்றது. ஆகவே, அவர்க்கு அடக்கமானமடமென்பதொழிந்தது. இதனாலதுஸ்மார்த்த மடமாகாமை வெளிப்பட்டது. பூர்வமரியாதைநோக்கத்தாலேயே யிப்போது சங்கரமடத்தார்க்கிவ்வைசியர் மடமடங்காமை வெளிப்பட்டதனால் பிரகிருதத்தினிகழும் ஸ்மார்த்தாசாரங்களசப்யமாக வந்தேறினவென்றே நிச்சயிக்கப் பட்டன. மேல்விசாரத்தால் சைவமடம் ஸ்மார்த்தரா லபகரிக்கப் பட்டதென்பது மாத்திரமுணரப் பட்டதேனுமவருந் தாமநுட்டிக்கற்பாலதல்லாத ஆகமாசாரத்தைத் தமதுசிஷ்யர்கட் குணர்த்திற்றிலர். தம்மாசாரத்தையே புராணரீதியால் தம்மதச்சார்பினராகியபுரோகிதரைக்கொண்டு நிகழ்த்திவருதலால் வினைசைகொண்டுதமக்கில்லாத ஆகமாசாரத்தைப் பிறர்க்குச்செய்விக்கமுயலுமந்தபரம்பரையார்க் கதனாலுமொரு சாதகமு முண்டாகவில்லை. இனித்தாமேவைசியரென வேறுவகையால் வெளிப்பட்டிருக்கும் கோமுட்டிச்செட்டிகட்கு ஆகமாசாரம் அறவே கிடையாமையாலவரிடத்துந் தமக்குயாதொரு அநுகூலமுமில்லை. இனிச்சூத்திரரோவெனின், பலமுகப்பட்டவருள் வேளாளரோசற்சூத்திரத்வம் வகித்துப் பிராபல்யராயிருத்தலாலவரடங்கலும் ஆதிசைவரையே ஆசாரியர்களாக வகித்திருக்கின்றனர். அன்றியும், ஸ்வஜாதியிலாசாரியமடங்கள் பிரபலப்பட்டிருப்பதால் அவர்க்குத்தீக்ஷாதிகாரியங்களம்மடச் சார்புகளாலும் ஆசாரத்திலவந்திருக்கின்றன.

இப்படியாதியந்தமாக விசாரிக்கையில் தமக்கொரு ஆசாரமும், பிறர்க்கொரு ஆசாரமும்பாராட்டி வரும்மடபதிகள் கிடையாமைமாலும், அப்படிச்செய்யப் பிரமாண மில்லாமையாலும் இவற்றிற்கு விரோதமாக வீண்பிரகடனத்தால் சிவனார்த்தத்தை யபேக்ஷிப்பார்கோள் கேவலம் அசாமஞ்சசமாயிற்றென்க.

இதுகாறும் செய்தவிசாரத்தால் அவிரோதபாகத்தை யநுசரித்தவர்க்கேயாம் குருக்களாதல் செல்லுமென்ற பிரஸ்தாபம் சொப்பனவத்தா யொழிந்ததா லவர்செய்யப்போவதாகிய வவ்வவிரோதபாகத்தையுஞ் சற்றே பரியாலோசிப்பாம். சிவாகமத்திற் பெறப்பட்ட ஔத்திரியேத்யாதிகளென்னுஞ் சமயாதிதீக்ஷைகளே தாம்பிறர்க்குச் செய்யத்துணிவதால் அவைகளே யன்றோ தம்மவைதிகத்திலவிரோதமாதல்சாலும்? அது அவிரோதமாகையில் விரோதபாகங்கள் யாவை? சரியைகிரியை யோகஞானங்களவற்றிற்பிரதிபாதிக்கப் படுவனவன்றோவிரோதமாகும்? அவையுமவிரோதமெனின் முற்றுமவிரோதமாகிய சிவாகமம் தமக்காசாரமாகாமற்போன தென்னை? அநியாயத்தில் விரோதாவிரோதங்களவற்றி லுண்டென்று நிந்தைக்குமிடஞ் செய்ததென்னை? மேல்நியாயத்தால் சிவாகமம் விரோதபாகத்தைக் கொள்ளாதசப்பிரமாண மென வேர்ப்பட்டதால் அதைத்தமக்காசாரமாகக் கொள்ளாதது பெருந்தாழ்வென்க. சிவாகமங்கள் சிவபெருமான் சொல்லியருளினவும், ஸ்மிருதிகள் மஹாிஷிகள் சொல்லியருளினவுமாகையால் மஹாிஷிகள்கூறிய பசுவாக்கியங்களிலும்பதிவாக்கியமேயன்றோ பவிஷ்டத்தையடையும்? நல்லழகிது! ஆசாரியர்களாகியதங்களுக்குப் பசுவாக்கியப்பிரமாணமும், சிஷ்யர்களாகிய பிறர்க்குப்பதிவாக்யப் பிரமாணமும் ஆசாரமாகுதல் ஆச்சரியம்! ஆச்சரியம்!! மேல் தங்கள் விவகாரதடஸ்தமுகத்தானே சிவாகமம் சுருதிவிரோதமெய்தாமையும், ஸ்மிருதிகள் சுருதிவிரோதமெய்துதலும் பெறப்பட்ட சிர்ப்பாட்டாலும் அவ்வாசாரியர்கோள்கேவலம் அசங்கமாயிற்று. ஆசாரியர்களாகிய தாங்களேவேதவிருத்தரும், சிஷ்யர்களாகிய பிறரே வேதாவிருத்தருமாக வேர்ப்படுகையால் வேத விரோதிகளாகிய ஸ்மார்த்தராகிய்தாம் வேதாவிரோதமாகிய சைவாசாரத்தைப் பிறர்க்கு எப்படி யநுட்டிக்கச் செய்தல்கூடும்? இப்படிப்பெருங் குழப்பத்துக்கிடமான பிரகட

னத்திலந்நூதனுசாரியர்கள் தலையிட்டுக்கொண்ட தன்மை அவிவேகம்! அவிவேகம்!!

மேல், அவரிப்படிப் பிரவேசித்த சந்நிதானியாதென விசாரிக்கில், ஜீவனமாத்திரமேயன்றி வேறுநியாயம் புலம்படற்பாலதன்று. இது அவர் செய்தலுபயப்பிரஷ்டத்தையே பயக்குமென்க. எங்ஙனமெனின், ஸ்மார்த்தாசாரதுல்யராகியவன்னோர் தாம் பரமபாவனமாகக் கொள்ளாததும், அதனுல் அநுஷ்டானத்தைப் பெருததுமாகிய சைவதீக்ஷையைப் பிறர்க்குச்செய்யுங்காலதன் பிரயோசனம் அதைப்பெறுவார்க்குச் சித்திப்பதெங்ஙனங்கூடும்? கீழிட்ட அதிகாரிமேலிட்ட சம்ஸ்காரத்தைச்செய்வதும், அதைப் பிறரங்கீகரிப்பதும் (முட்டித்திரட்காடியாரெழுசக்கோன்குதித்தக், கட்டிப்புதைத்தகதையாகும்) என்றபடியன்றோ கொள்ளவரும்? தனக்குக் கைவாராத பெரியவித்தை யொன்றை யொருசாமானியன்மற்றொருவனுக்குணர்த்துதலேயன்றோ வீண்டுவபித்துரைக்கற்பாலது? இப்படி விசாரித்தறிவார் சிவதீக்ஷாஹீனராகிய வவரையாசிரியராகவடுத்தல் செய்யார்! செய்யார்!!

இதுநிற்க, குருக்கள் பட்டங்கட்டிக் கொள்ளவிரும்பி வெளிப்பட்ட வவ்வாசாரியரது ஸ்வமதாசாரப்படிக்கேயுண்மையை விசாரிப்பாம். அவரோ ஸ்மார்த்தர். வைதிகரெனவுஞ் சொல்லப்படுவர். அவர்சொந்தமதத்தில் சிவாகமம்பிரமாணமாகாது. அவர்க்குமூலகுருவாகிய சங்கராசாரியர் தமது ஏகாத்மவாத பாஷ்யத்தில் சிவாகமத்தை யநாதரணியமென்று கொண்டிருப்ப துண்மையாகையால். ஆகவே, அவரையநுசரித்த பேர்க்கு அவ்வாசாரம் சாமஞ்சசமாவதெப்படி? தாம்கொள்ளாமல் பிறர்க்கேயதுசெய்தலால் குற்றமென்னையெனின், தம்மாசாரத்தையொழித்துப் பிறராசாரத்தை யுலகில்விர்த்திசெய்வது யுக்தமாவதெப்படி ? இதனுல் ஸ்வமதஹானியைத் தாமே தேடிக்கொள்வதாக வன்றோ முடியும்? இதுவரையாம்விவகரித்து வந்ததெல்லாம் பிரச்சின்னபௌத்தாளாகியஏகாத்மவாதிகளிலேகதேசிகளைப்பற்றியேயாகையாலவருள் பெரும்பாலாரைப் பற்றியோசிப்பாம். சூதசம்ஹிதை முதலியநூல்களில் வைதிகரும், சைவருந்தத்தமாசாரங்களில் பிறழாமலிருக்க வேண்டுமெனவும், ஒருவர் மற்றொருவராசாரத்தையாசரிக்கப் படாதெனவும், ஒருவரையொருவர் தொடவுஞ்

செய்தல்கூடா தெனவுங் கண்டோக்தியாய்க்கூறியிருக்கு நிர்ப்பந் தங்களிற்கட்டுண்ட தன்மையால் ஸ்வாசாரத்தையன்றிவேறு ஆசாரங்களைத்தாங்க ளநுட்டிக்கவாவது, பிறரையநுட்டிக்கச்செய்யவாவது ஒருபோதுஞ்செய்யார். தம்மசமயத்தையே விர்த்திக்குக் கொண்டுவருமுயற்சியன்றி வேறொன்றினையுஞ் செய்யார். தம்ம போலிவேதாந்தத்தையுபதேசஞ்செய்வதோடு அவரவர்ஜாதிவர்ணாசிரமத்துக்கிசைய ஸ்மிருதிபுராணங்களை யாதரித்துத்தக்கபடியான ஆசாரங்களிற் செலுத்தி நடத்திவருவர். இப்படிச்செய்வதில் யாதோராட்சேபமுமொருவராலுஞ் செய்யவிடமின்று. இப்படிக்கன்றி ஸ்மார்த்தாசாரியானவன் தனக்கில்லாத சைவாசாரத்தைமற்றொருவனுக்குபதேசிப்பதற்குப் பிரமாணம்யாதென்பதையன்றோ முன்னர்ப் பரியாலோசிக்க வேண்டும்? ஒருபிரமாணமுமில்லையென்பதை யிண்டுவெளிப்படுத்துவாம்.

கிரணாகமத்தில், "దీక్షాహీనాస్తుయేవిప్రాః నత్యాచార్యాభవంతి తే। చతుర్ణామపివర్ణానాం శివసంస్కారకర్మణి" என்னும்வசனத்தால் தீக்ஷாஹீனராயுள்ள பிராம்ஹணர்கள் நாலுவர்நத்திலும் சிவதீக்ஷை செய்யுமாசாரிய ராகமாட்டார்களென்று பெறப்பட்டது. அன்றியும், "అదీక్షితేనవిప్రేణ దీక్షితోయదిమానవః। మంత్రసిద్ధిర్నతస్యాస్తి సాదీక్షానిష్ఫలాభవేత్" என்னும் வசனத்தால் தீக்ஷையில்லாத பிராம்ஹணனிடத்தில் எவன் தீக்ஷிக்கப்படுகிறானோ வவனுக்கு மந்திரசித்தியுண்டாகாது, அவன் பெறுந்தீக்ஷை வியர்த்தமாம் என்று பெறப்பட்டது. இந்தவாக்கியங்களால் சைவதீக்ஷாஹீனனாகிய ஸ்மார்த்தன் தனக்கில்லாத சிவதீக்ஷையைப்பிறர்க்குச்செய்தல் கூடுமா? கூடாதா? என்னுஞ் சங்கை பரிஷ்கரிக்கப்பட்டதோடு அவனிடம் சிவதீக்ஷைபெறுவானது தாழ்வும் வெளிப்பட்டது. இன்னபல பிரமாணங்கள் சிவாகமத்திலுள வென்பதை யாராயு மதிகாரமின்மையாலன்றோ விப்படி விழிக்கவிடமுண்டாயிற்று? இனிச் சிவதீக்ஷாதிகளை யநுக்கிரகிக்கு மதிகாரிகள் யாவரென விசாரிக்கில், "ఆదిశైవకులేజాతాః శ్రేష్ఠాస్స్యుఃస్థాపనాదిషు। దీక్షాయాంసర్వవర్ణానాం ప్రతిష్ఠాయామథోత్సవే। స్నపనేప్రోక్షణేచైవ ప్రాయశ్చిత్తాదికేషుచ। వ్యాఖ్యానాదౌచశస్తాస్స్యుః స్వాధ్యాయాద్యపరాఙ్ముఖే" என்னுங் காமிகவசன பரியாலோசனையால் ஆதிசைவகுலத்திலுதித்த பிராம்ஹணர்கள் ஸ்தாபனாதிகாரி

யங்களில் சிரேஷ்டராகின்றன ரெனவும், சர்வவர்ணத்தாருக்கும் சிவதீக்ஷயா லநுக்கிரகிப்பதிலும், பிரதிஷ்டை, உச்சவம், ஸ்நபனம், ஸம்புரோக்ஷணம், பிராயச்சித்தம், அபிஷேக மித்தியாதிகளை நடத்துவதிலும், வியாக்கியானரூபமாகச் சைவதர்மங்களைப் பிரவசனஞ்செய்வதிலும் ஸ்வார்த்த பரார்த்தங்களி லதிகாரிகளாய்ப்பவிப்பரெனவும் வெளிப்படுமுண்மையே போதுமான நிதரிசனமாம். இந்தவசனத்தால், சர்வாதிகாரம்வகித்த ஆதிசைவவேதியரே பிராம்ஹணாதி சாதுர்வர்ணத்தாருக்கும் அக்கிரகண்யரான பரமாசாரிய மூர்த்திகளாயின ரென்பது வெளிப்பட்டது. இப்படிக் கண்டோக்தியாய்க்கூறும் பிரமாணதரிசனாநந்தரமும் அதிக்ஷிதராயுள்ள ஸ்மார்த்தர் தாமுஞ்சிவதீக்ஷைசெய்யவதிகாரமுண்டெனவுரைக்க நாவெழுமா? (ஆதிமறையோதியதன் பயனென்னும்மதியா, வேதியர்சொன்மெய்யென்ற மேவாதே) என்னும்பிரமாணம் பொய்யாது நிலைபெறுந்தன்மை யுண்மையால், துரபிமான மேலிட்டால் சிலவாக்கியங்களுக்கு அபார்த்தஞ் செய்துகொண்டு அவர் தலையெடுக்கப்பார்க்கின்றனர். அதைமுன் விளக்கிப்பின்னரவ்வாபாசத்தையுங்களைந்தெறிவாம்.

காரணாகமத்தில், "శివేనదీక్షితశ్చైవ శివబ్రాహ్మణ ఉచ్యతే। అధికారద్వయం ప్రతిష్ఠాద్యర్చనాదికం। అన్యథా కారయేద్యస్తు అగ్నిదాహాదయశ్చైవహి" என்னும் வசனபரியாலோசனையில் சிவபெருமானால் தீக்ஷைசெய்யப்பட்டவர்கள் சிவப்பிராம்ஹணராகச் சொல்லப்படுகின்றனர். (சிவேநதீக்ஷிதஃ) என்பதற்குச் சிவபூசை அர்த்தம். சிவபூசையாவது பிரதிஷ்டாதி அர்ச்சனாந்தம். (அந்யதா) என்றதற்கு இதுதவிர அன்னியர்களுக்கு உபதேசமாவது, இன்னும் வேறே சிவவிஷயமான காரியங்களாவது பண்ணினால், அது பண்ணுகிறவனையும், பண்ணிக்கொள்ளுகிற ஜமானனையுங் கொன்றுவிடும் என்று பொருள் விரித்து ஆருமில்லாதவூரில் அசுவமேதஞ் செய்யப்பார்க்கின்றனர். அசுவமேதம் சாமானிய மல்லவே! இடிக்கும் புடைக்கும், உதைக்குங்குத்துக்கும் எல்லாந் தப்பியன்றோ ஜயம்பெற்று நிறைவேற்றத்தக்கது? அதைப் பேடிகளெல்லாஞ் செய்யமுடியுமா? சுத்தவீரனுக்கல்லவோ அது அழகுபெறும்? இங்ஙனமாக, மேலபார்த்தத்தால் வெளிப்பட்ட பண்டிதசிரோமணிகளிவ்வசட்டுப்பொருளையெந்தச்சதஸில் நிலைபெறுத்தவல்லார்? (சிவேநதீக்ஷிதஃ)என்

றால் சிவபூசை அர்த்தம் என்றபோதிலும்பயமில்லை. (சிவேந)என்பது சிவனாலென்று பெறப்பட்டதனால் சிவனா லநுக்கிரகிக்கப்பட்ட சிவபூசையென்றே பொருளுண்டாகிச் சிவதீக்ஷையில் விரோதம்பயவாது. இவ்வுண்மையைத் தமது அறியாமையால் மறைக்கத்தொடங்கினது அக்கினியை வைக்கோலான் மூடிவைத்தது போலவேயாம். வைக்கோலைத்தகித்துவிட்டு அக்கினிமேலெழும்பிப்பிரகாசிக்குமாபோலன்றோ வவரறியாமை ஹதமாகி யுண்மை வெளியாயிட்டு? இனி, அங்யதாவென்றதனால் அங்கியர்களுக்கு உபதேசமாவது, வேறு எந்தக்காரியமாவது செய்யக்கூடாமையையுணர்த்திற்றென் றெழுந்த வாங்யாசத்தையுநிரோதிப்பாம். அவர் மார்ஜால ஞானமுடையாராகையா லதற்கேற்பவே மீண்டும்பொருள் விரித்தனர். மார்ஜாலம் தான் கண்ணைமூடிக்கொண்டதனால் பிரபஞ்சமேயில்லை யென்று கொள்வதுபோலவேயன்றோ பிரபஞ்சமேயில்லை, எனதஞ்ஞானமேமெய்யென்று அவர் அஹம்பிரம்ஹஞானம்பேசித்திரிகின்றனர்? அப்பாழ்மதத்தையேயவலம்பித்தவராகையாலீண்டுமதற்குநிர்விரோதமாய்த்தமது அஞ்ஞானவுரையையே நாட்டவெழுந்தனர். பண்டிதராயுள்ள பேரிங்கே யிருக்கமாட்டார்களென்பதுகருதிப்போலும். மேலிடங்களில்யாம்காட்டியகிரணம், காமிகமுதலிய சிவாகமவசனங்களால் ஆதிசைவருற்பத்தியும், அவர்க்குண்டாகிய வேற்றமும், அவர்பிறர்க்குச் செய்தற்பாலனவாகிய சம்ஸ்காராதிகளும், அவர்பாலநுக்கிரகத்தையடைதற்பாலாராகிய வதிகாரிகள் தன்மையுஞ் செவ்வனே பெறப்பட்டமையாலிங்கே (அங்யதா) என்ற சொல்லுக்குப் பிறர்க்குச் சிவதீக்ஷைசெய்யும் யோக்யதையைப் பெறாரென்று கூறுமபார்த்தம் எப்படித்தலையெடுக்கும்? (அங்யதா) என்னுஞ்சொல்உண்மையிற் பயக்கும்பொருள்தான்யாதெனில், ஆதிசைவர்களுக்குக்கர்த்தவ்யமாகியபிரதிஷ்டை யர்ச்சனை முதலியவற்றை அவர் நீங்கலாக அங்கியர் செய்யப்புகின், கேட்டையுண்டுபண்ணுமென்பதே மேலோர்கருத்தாம். என்றதனால், சிவத்விஜரல்லாதமஹாசைவர்முதலாயினோர் பரார்த்தபூஜைக்கு அதிகாரிகளல்லரென்பது வெளிப்பட்டது. சிவதீக்ஷையுடைய மஹாசைவரோ யோக்யரல்லாதபோது தீக்ஷாவர்ஜிதாளாயுள்ளசாமானிய விப்பிரர்க்கு என்னயோக்யதையுண்டாம்? ஆதிசைவருள்ளும் சிவபெருமானா லுண்டாகிய தீக்ஷாகந்தர மேயன்றோ பூஜார்ஹத்வம்வெளிப்பட்டது? இங்ஙன

மறியாத பேதையர் சிலகோயில்களில் சைவதீக்ஷாஹீனராகவே யிருந்துகொண்டு பூஜிக்கின்றனராகையால் அவரையேமேல்காட்டியவசனம்பாதிக்குமென்க. இவ்வுண்மை "பேர்கொண்டபார்ப்பான் பிரான்றனையர்ச்சித்தாற், போர்கொண்டவேந்தர்க்குப்பொல்லாவியாதியாம், பார்கொண்டநாட்டிக்குப்பஞ்சமுமாமென்றே, யோர்கொண்டநந்தி யெனக்குரைத்தானே" என்னுந் திருமந்திரத்தானும் வெளிப்படுமென்க. தம்மோடொத்தவதீக்ஷிதர்களையே நிந்தைகூறு மிவ்வாகம வசனத்தையப்பண்டித சிரோமணியாராதரித்தது அவரையே தெருவில் விட்டதென்க.

இதுநிற்க, "ఆచినోతి చ శాస్త్రాణి అన్యానాచారయత్యసౌ। స్వయమాచరతేయస్మా త్తస్మాదాచార్యఉచ్యతే" என்னும் வாக்கியத்துக்குச் சாஸ்திரங்களையாராய்ந்து தாமுமாசரித்து, அந்நியர்களையு மாசரிக்கச் செய்யுமவர்கள் ஆசாரியர்களென்று சொல்லப்படுவரென்றுபொருள்கூறி, இதற்குமேல் சாஸ்திரமென்றால் வேதமெனவும், அதனால் சாஸ்திராசரணஞ் செய்தலென்பது பிராம்ஹண ஜாதியிற்பிறந்து காலத்தி லுபநயநம், வேதாத்யயனம், வேதாந்தவிசாரணைகளையடைந்து அவற்றுட்பெறப்படுங்கன்மங்களைச்செய்து பரமேசுவரார்ப்பணஞ் செய்தன்முதலியனவே யெனவும் வியாக்கியானஞ்செய்து கொண்டனர். இப்படிப்பொருள்விரித்ததால் வேதாதிகாரமில்லாதவர்க்கு ஆசாரியத்வம் சித்திக்காமையால், வேதத்திலநதிகாரிகளாகிய சூத்திராதியர்க்கு ஆசாரியத்வமில்லை யென்பதுமாத்திரம் பெறப்படுமேயன்றி சிவப்பிராம்ஹணரை மறுப்பதற்குண்டாகிய சாதகம்யாது? சிவாசாகமத்தில், "జ్ఞానపాదపరిజ్ఞానీ షడఙ్గవేదపారగః। క్రియాపాదేషు కుశలః విద్యాపాదార్థబోధకః। యోగపాదకృతాభ్యాసః చర్యాపాదానువర్తకః। శివశాస్త్రపరోనిత్యం శివపూజాగ్నితత్పరః" என்னும்வசனத்தால் நாலுவேதம், ஆறு அங்கங்களை யறிந்தவராயும், ஞானபாதங்களை நன்கு போதிப்பவராயும், கிரியாபாதத்தில் சமர்த்தராயும், யோகபாதத்திலப்பியாசமுள்ளவராயும், சரியாபாதப்பிரகாரம் நடத்தையுள்ளவராயும், சிவசாஸ்திரமாகியசிவாகமத்தில் விசேஷபரிசயமுள்ளவராயும், சிவபூஜைசிவாக்னியிவைகளைத்தப்பாமல் நடத்துகின்றவராயு முள்ளவரோ ஆசாரியராவரென்று பெறப்பட்டது.

இன்னலட்சணங்கள் ஆதிசைவரிடத்தன்றியன்யத்ராகிரகிப்பதுகூடாது. தீக்ஷையில்லாத சாமானியவிப்பிரர் முதலிநோரிடு

லாசைவைப்பது சேரிக்காதாகையாலிவ்வுண்மையறியால் அதீக்ஷிதர்க்கும் ஆசாரியத்வமுண்டென்றுசொப்பனங்காண்பதும், மேல் சாஸ்திரம் என்பதற்கு ஹேயப்பொருள்கூறித் தமக்கு ஆசாரியத்வம்சமர்த்தித்துக் கொள்வதும்செல்லாது. தீக்ஷையில்லாதசாமானிய விப்பிரனுக்கும், தீக்ஷையில்லாத சூத்திரனுக்கும் சைவசித்தியில்லாமையா லிருவருஞ்சமானரோ யாயினர். மண்பாண்டத்தோடொத்தவேதத்தில்சூத்திரருக்குஅதிகாரமில்லாவிடினும் பொன்பாண்ட மனையசிவாகமத்தில் சர்வத்திராவதிகாரமுண்டானதன்மையால் ஆதிசைவர்முதல் எல்லாச்சாதியாருந் தத்தஞ்சாதியினுந் தமக்குக்கீழிட்ட சாதியிலும் ஆசாரியத்வம் வகிக்கவுரியராவரென்பது நிச்சயம். இதனால், சாஸ்திரமென்றால்வேதம் என்று விபரீதப்பொருள்கொண்டது பிழையாகிச்சிவாகமநூல் என்றே மேதாவியர்பொருள்கூறுவர். அன்றியும், சாஸ்திரமென்பது வேதம், சிவாகமம், புராணமுதலிய எல்லாநூலுக்கும் பொதுவானேயமையும்பெயராகவும் பண்டிதர் கூறுநிற்பர். இன்னும், சிவாகமம் வேதமென்னும் பெயர் தாங்க லுண்மையால் சிவாகமாப்யாசஞ்செய்பவரெல்லாரும் வேதாப்யாசிகளென்றுஞ்சொல்லப்படுவர். இவ்வுண்மையை யறியாமல் சாஸ்திரம் சாமானியவிப்பிரனுக்கேயுண்டென்று கூறவந்தது சண்டமாருதத்திற்பட்ட பஞ்சாயிற்றெனவறிக. சூத்திரர்க்கும் ஆசாரியத்வமுண்டென்றுகூறும் வாக்கியங்களைப் பின்னரொழுதுவாம்.

மேல்விசாரித்துத் தெளிவுபெறக்காட்டிய நியாயங்களால் சாமானியவிப்பிரரிடம் ஆசாரியத்வம் சித்திக்காமைவெளிப்பட்டதால் சதாசாரியர்களாயுள்ளபேரிவரென்பதைப் பிரமாணபூர்வகமாயிண்டு விவகரிப்பாம். காரணாகமத்தில், "శైవేన స్థాపితో శైవః శైవే న స్థాపితః। శివ శైవ ... ప్రాహ్మణో గురుః" என்னும் வசனத்தால் சிவாகமம் சிவபெருமானால் தாபிக்கப்பட்டது. சிவபெருமான்சிவாகமத்தால்தாபிக்கப்பட்டனர். சிவபெருமானாலுஞ்சிவாகமத்தாலுஞ்சுத்தாத்மாக்களாயுள்ள சிவப்பிராம்ஹணரென்னுஞ் சைவாசாரியர் தாபிக்கப்பட்டனர் என்றுபெறப்பட்டது. இந்தவாக்கியத்தால் ஆசாரியரின்னாரா தல் வேண்டுமென்பது வெளிப்பட்டது. இவ்வுண்மையுணர்ந்தபேர்க்கே "బ్రాహ్మణాస్సర్వజాతీనాం సదానుగ్రహకాః స్మృతాః" என்னும்சிவாகமவசனத்தி னுண்மைப்பொருள்விளங்கு

மென்க. இந்தவாக்கியத்தில் சாமானியவிப்பிரனைக்கிரகித்து அவன் றனதுவைதிகபத்ததியின்படியே வுபகயனுநந்தரம்சப்தகோடி மஹாமந்திராப்யாசியாகிப் பின்னேஅக்நிஷ்டோமாதி யாகங்களிலத்வர்யுவாயிருந்துஎஜமானனை மந்திர தீக்ஷை பண்ணுவதற்கு யோக்யனுகிருனென்றுகொண்டதனுல் சிவாகமத்திற்பெறப்படுஞ் சமயாதிதீக்ஷைகளைச் செய்யுமதிகாரம் பெறுதலுக் குண்டாகிய சாதகம்யாது ? வைதிகாசாரியாயுள்ளவன்றன்னுசாரத்தைப் பிறனுக்குச்செய்வதில் சிவாகமம்விரோதியாதென்க.அன்றியும்,சிவப்பிராம்ஹணர் எப்படித்தமக்குக் கீழிட்டவிப்பிரன் முதலியசாதிகளில்தீக்ஷாநுக்கிரகஞ் செய்யவதிகாரம்பெற்றிருக்கின்றனரோவப்படியே விப்பிரருஞ் சிவதீக்ஷாநந்தரம் தம்மிற்றாழ்ந்தஜாதியார்க்கும், தமதுஜாதியார்க்குமாசாரியராவதிற்றாழ்வில்லையாகையாலவரிடமும் மேல்வாக்கியம் பிரயோஜனப்படுமென்க. சந்தானசம்ஹிதையில், "𑌅𑌨𑌾𑌦𑌿𑌶𑌿𑌵𑍇𑌨𑍈𑌵 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌃 𑌶𑍈𑌵𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑌾𑌃। 𑌆𑌦𑌿𑌶𑍈𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌾𑌹𑌕𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃" என்னும்வசனத்தால் ஆதிகாலத்தில்சதாசிவமூர்த்தியால் தீக்ஷை செய்யப்பட்டவர்கள் ஆதிசைவரெனவும், அவர்கள்சகலவர்ணத்தாருக்கும் தீக்ஷாநுக்கிரகஞ்செய்ய வதிகாரம்பெற்றவராவரெனவும் பெறப்பட்டது. இதில் சாமானியவிப்பிரனு மடங்கலா லிதற்குமுன் கூறிய சிவாகம வசனமுமிக்கருத்திலே தானே பரிவசானம் பெறுமென்க. (சர்வாநுக்ராஹகா:) என்பது விப்பிரர் நீங்கலான மற்றைச் சாதியாரையேபற்றுமெனக்கூறுவரோ லவர்க்குச் சமாதானங்கூறுவாம். "𑌶𑌿𑌵𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑍋𑌦𑍍𑌭𑌵𑌾 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌃 𑌆𑌦𑌿𑌶𑍈𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃। 𑌤𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍂𑌜𑍍𑌯𑌾𑌸𑍍𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌧𑌰𑍍𑌮𑌿𑌣𑌃" என்னும்சுவாயம்புவவசனத்தால் சிவபெருமானுடையவூர்த்துவமுகத்திற்பிறந்தவர் ஆதிசைவர்கள், அவர்களுக்குப் பக்தாளாயுள்ளவிப்பிரர்பூஜிக்கப்படுவர், அல்லாதபோபூஜ்யராய்ப் பவிப்பர் என்றுபெறப்பட்டது. இதில்விப்பிரனைத்தனியேகூறிசிவப்பிராம்ஹணனிடத்தில் அநுக்ரஹத்தையடையும்பக்தனுக விதந்திருத்தலால் ஆதிசைவரிடத்தில் விப்பிரனுக்குச் சிஷ்யத்வமுண்டாகாதென்னும் குத்ஸிதவாதம் நசித்ததெனவறிக.

இவ்வுண்மைகளையறியும் புண்ணியமின்றித் தமக்குபயுக்தமல்லாதபிரமாணங்களி லெல்லாந்தலைவிட்டுக் கொண்டு அவர்விழிப்பதென்னையோ வறியேம். "𑌶𑍈𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 𑌶𑌿𑌵𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌃

థ। అనాదిశైవః ప్రథమః ఆదిశైవోద్వితీయకః। తృతీయస్తుమహాశైవః చతుర్థశ్చానుశైవకః। పంచమోవాంతరశ్శైవః షష్ఠః ప్రవరఉచ్యతే। సప్తమశ్చాన్యశైవశ్చ శైవానాంభేదయోరితః। అనాదిశైవస్సశివః ఆదిశైవశ్శివద్విజః। విప్రాశ్చైవమహాశైవాః క్షత్రియో వైశ్యఏవచ। అనుశైవస్సమాఖ్యాతః శూద్రాశ్చావాంతరాస్స్మృతాః। సవర్ణాంబష్ఠమత్స్యస్తుః కులాలః ప్రవరస్స్మృతాః। పారదశ్చైవసంప్రోక్తః అన్యశైవమథోచ్యతే। ఇతోన్యజాతయోయాస్తు అన్యశైవా స్తుతాస్స్మృతాః" என்னும்வீரதந்திரவசனத்தால்சைவர்எழுபிரிவினராவரெனவும், அவருள், முதலநாதிசைவரெனவும், இரண்டாவதுஆதிசைவரெனவும், மூன்றாவதுமஹாசைவரெனவும்,நாலாவதுஅநுசைவரெனவும்,ஐந்தாவதுஅவாந்தரசைவரெனவும்,ஆறாவதுபிரவரசைவரெனவும்,ஏழாவதுஅந்யசைவரெனவும்சொல்லப்படுவரெனவும், அவர்களில், அநாதிசைவர் சிவபெருமானும், ஆதிசைவர் சிவத்விஜரும்,மஹாசைவர் பிராம்ஹணரும், அநுசைவர்க்ஷத்திரியர்வைசியரும், அவாந்தரசைவர்சூத்திரரும், சவர்ணம்பஷ்ட மத்யஸ்தகுலாலர்கள் பிரவரசைவரும், அந்யஜாதியார் அந்யசைவரு மாவரெனவும் பெறப்பட்டது. இந்தவாக்கியத்தில் முதலிரண்டாவது மூன்றாவதென்னு மிலக்கங்களிட்டுவரிசைக்கிரமத்தைச்சொல்லுகையா லிதிற்சொல்லப்பட்டவர்முறையேயொருவரி லொருவர் தாழ்ந்தவரென்பது சொல்லாமேயமையும். அநாதிசைவருக்குஆதிசைவர் தாழ்ந்தபடியே ஆதிசைவருக்குமஹாசைவர் தாழ்ந்தவராதல் வெளிப்பட்ட தறியாதுதீக்ஷாஹீனத்தினால் அந்யசைவரினுங் கடையாய சாமானியவிப்பிரர் ஆதிசைவ ரிற்றூமுயர்ந்தவராகச் சொப்பனங் கண்டிந்தவாக்கியத்தைத்தமக் குபகாரமாக வெடுத்தாள்வதிலுண்டாகிய பயன்யாது? "లక్షాధ్యాయీగురుశ్శ్రేష్ఠః భుక్తిముక్తిఫలప్రదః। మధ్యమస్తుతదర్ధజ్ఞః తత్పాదజ్ఞోధమోభవేత్। జ్ఞానయోగక్రియాచర్యా సమ్యగాచరతేతుయః। సవైఆచార్యయిత్యుక్తః సర్వభూతహితాయవై" என்னும்வசனத்தால் சிவாகமத்திலிலட்சங்கிரந்தம்அத்யயனஞ் செய்தவன் குருச்சிரேஷ்டனாவனெனவும், அவன் புக்தி முக்திபலன்களைக் கொடுப்பானெனவும், அதிற்பாதி அத்யயனம் பண்ணினவன் மத்திம குருவெனவும், அதிற்பாதியத்யயனம் பண்ணினவன் அதமகுருவெனவும், ஆகையால் ஞானயோகக்கிரியையாதிகளை யுடையவனே ஆசாரியனாவ னெனவும், அவனே சகலபிராணிகோடிகளுக்கும் ஹிதத்தைச் செய்கின்றவனெனவும் பெறப்பட்டது. இந்தவசனத்தாற் பெறப்பட்ட சாத

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநமஃ.

சித்தாந்தரத்நாகரம்.

ஆதிசைவப்பிரபாவம்.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

குலா,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE MEMORIAL PRESS.

No. 39, THUMBOO CHETTY STREET.

1st April 188[illegible]

—:0:—

கம் சைவாசாரியர்க்கேசர்வசம் பிரதிபன்னமாகவிதனையும்அதீக்ஷிதவிப்பிரர் தமக்குபகாரமாக யோசித்தல் சர்வாசங்கதமாம். இவ்வுண்மைக்கருத்தே (ஞானயோகக் கிரியை சரியைதானு நாதன்றன்பணி ஞானிகாலினுக்குமுரியன்) என்று சிவஞான சித்தியாரிலும் வெளிப்பட்டவாறறிக. இப்படியங்யசாதகமான பிரமாணங்களி லெல்லாம் வந்து வீழ்ந்து விளக்கில்விழுந்து மாயும் விட்டிற்பூச்சியென்னத்தாழ்வு தேடிக்கொள்வதென்னே? கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசையா? சைவத்துககும் ஆசை அசைவத்துக்கும்ஆசையென்றுலெப்படிக்கூடும்? சைவராகவேண்டின், சிவதீக்ஷையாலன்றி அது சித்தியாமையாலச்சிவதீக்ஷாநுக்ரஹாதிகாரிகளாகிய சிவாசாரியர் மகிமைகளை யின்னும் பிரவசனிப்பாம்.

காமிகத்தில், "సృష్ట్యనంతరకాలేచ దీక్షితాః కౌశికాదయః। శివేనతత్కులోద్భూతాస్యుః శైవాస్సంతానికాద్విజాః" என்னும்வசனத்தால் சிவபெருமானுல் கௌசிகர்முதலிய மஹரிஷிகள் சிருட்டிக்கப்பட்ட வநந்தரம் அவரால்தீக்ஷை செய்யப்பட்டார்கள். அவர்கள்குலத்திலுண்டானவர்கள் சந்தானகிரமத்தில்வந்த ஆதிசைவரென்னப்படுவர் என்று பெறப்பட்டது. இந்தவசனத்தால் ஆதிசைவருற்பத்தியும், அவர்யாரால் தீக்ஷிக்கப்பட்டாரென்பதும் வெளிப்பட்டது. மேல் கௌசிகாதிகளென்று சொன்னவிவரணத்தைப் பின்வசனத்தால் விளக்குவாம். "కౌశికః కాశ్యపశ్చైవ భరద్వాజోఽత్రిరేవచ। గౌతమశ్చైతపంచైతే పంచవక్త్రైస్తుదీక్షితాః। తేషాంకులేసముద్భూతాః ఆదిశైవాః ప్రకీర్తితాః" என்னும் வசனத்தால் கௌசிகர், காசிபர், பரத்வாஜர், அத்திரி, கௌதமர் என்னும் பஞ்சரிஷிகள் சதாசிவமூர்த்தியினது பஞ்சமுகங்களால் தீக்ஷிக்கப்பட்டார்களெனவும், அவர்கள் குலத்தில் வந்தவர்களே ஆதிசைவரெனவும் பெறப்பட்டது. இவ்விரண்டு வசனங்களாலும் சிவசம்ஸ்கார முடையராந் தன்மை ஆதிசைவரிடத்தில் ஜந்மத்திலேதானே யோசிக்கப்படுகையால் சம்ஸ்காரவர்ஜிதாளாயுள்ள சாமானியபிராம்ஹணர் அப்பரமைகநிஷ்டாளாயுள்ள சிவத்விஜருக்குமுன்முமுயர்ந்தவரென் றெப்படித் தலைநீட்டக்கூடும்? இவ்வாசாரியமூர்த்திகள் சர்வாநுக்ரஹத்வம் பெற்றவரென்பது தோன்ற மடபதிகளாக வர்த்தித்தாரென்பதை யீண்டுப்பிரவசனிப்பாம். "తద్భూమండలకాలేశ మఠితశ్చచతుర్దశాః। అమర్దకే గోళకేచ తథావృష్పగిరేతథా। రణభద్రంచచత్వారః మఠానామధినాయకాః" என்னும்

வசனத்தால் மந்தானகாளீசம் என்னும் க்ஷேத்திரத்தில் நான்கு
திக்குகளிலும் ஆமர்த்தகி, கோளகி, புஷ்பகிரி, ரணபத்திரம் என்
னும் பெயர்களால் பிரகாசிக்கும் நாலுமடங்களுக்கும் நாயகர்க
ளாக ஆதிசைவர்க ளெழுந்தருளி யிருக்கின்றன ரென்று பெறப்
பட்டது. இப்படி ஜகதாசாரிய மூர்த்திகளாய் விளங்கும் ஸத்பி
ராம்ஹண சிலராகிய ஆதிசைவர் மகிமையை ஸ்காந்தம், சங்கர
ஸம்ஹிதை, உபதேசகாண்டத்திற்கூறியபடியுமீண்டுப்பிரகடனஞ்
செய்வாம். ஓரரசனது குமாரர் நால்வர் விவாகஞ்செய்துகொண்
டு தங்களூருக்குச் சமீபத்தில் வரும்போது, மார்க்கத்தில்விசுவா
மித்திரர் சாபத்தால் கண்ணிழந்தவராகி வருந்தினின்றனர். அப்
போது அகஸ்தியபகவானவர்களுக்குமுன்றோன்றுதலு மவர்பா
தங்களில் வணங்கித் தங்களுக்கு நேரிட்டகுறையை யவ்வரச
புத்திரர் விண்ணப்பஞ்செய்து கொண்டனர். அதற்கு அகஸ்திய
பகவான் அவர்களைப்பார்த்து எதிரில்வந்து கொண்டிருக்கிறவொ
ருபிராம்ஹணரைச்சுட்டி இதோவருகின்றவர் அமிர்தேசுவரரை
ப்பூசிக்கும் ஆதிசைவர், இவராலுங்களுக்குண்டாகிய குறைநிவி
ர்த்திபெறுமென்று சொல்லிவிட்டு அந்த ஆதிசைவ பிராம்ஹண
ரைப்பார்த்து விண்ணப்பஞ்செய்கின்றார். “త్వంహిలోకగురుఃపుష్పగిరిసం
తానజోమహాన్। శిష్యానంగీకురుక్షిప్రం యేతానపిసుదుఃఖితాన్। భవతారాధితంశంభు
మమృతేశమఘాపహం। సేవయిత్వాస్యసన్నిధే పరిచర్యాంచకల్పయ। యథాభవేయురేతే
వై సుఖినోదుఃఖసాగరాత్। తథాత్వంకృపయావిద్వన్ కురులోకగురుర్యతః” என்
னும் வசனத்தால் தேவரீர் லோககுருவாயுள்ளவர், புஷ்பகிரி சந்
தானத்தி லெழுந்தருளியவர், மஹானுயுள்ளவர், துக்கத்தையடை
ந்திருக்கின்ற விவர்களைச் சிஷ்யர்களாக வங்கிகரித்தருளல்வேண்
டும், சகலபாபங்களையு நிவிர்த்திசெய்கின்றதேவரீரா லாராதிக்கப்
படுகின்ற அமிர்தேசுவரரைச் சேவிக்கச்செய்து பரிசாரகம் புரி
யும்படி யங்கிகரித்தருள்வீராக, எப்போது இவர்கள் துக்கசாகர
த்தினின்றும் விடுபடுவார்களோ அதுபரியந்தம் அவர்களிடங்கரு
ணைபுரிந்தருள்வீராக,தேவரீர் லோககுருவாகையா லிதுசெய்தரு
ளலும்முடையகடமையாம் என்று கூறினதாகப்பெறப்பட்டது.

இப்படி யின்னு மநந்த பிரமாணங்களால் தாபிக்கப்படற்பா
லதாகும் யோக்யதா விசிஷ்டம்வகிக்கும் ஆதிசைவரைச் சாமா
னியபிராம்ஹணர் பழிகூறுவது குருவுக்கு நாமம் போடமுயலுங்

குண்டகராதலேயே காட்டுமென்க. இவ்வுண்மையி லகூழையமேவிட்டபேர் சிவத்விஜரையே குண்டகர்கோளகர்களாகக் கூறித் திரிவர். எங்ஙனமெனின், பிராம்ஹணனுக்கும், கன்னிகழியாத பிராம்ஹணப்பெண்ணுக்கும்பிறந்தவரோசிவத்விஜரெனவும், கன்னிகை வயிற்றிற் பிறந்த காரணம்பற்றியே அவரை நூல்கள்கானீனர், அல்லது கன்னிஜாதரென்னும் பேரால் கிஷித்தங்கூறுமெனவும் புலம்புவதேயாம். இப்படிப்பழித்துத்திரியும் பார்ப்பனக் கூட்டத்தாரை யோசிக்கில் சக்கிலியர், வண்ணார், பறையர் முதலினோர் குலத்திலும், கழுதை, நாய், நரி, மான், குருவி முதலிய பசுபட்சிகள் வயிற்றிலு முதித்தவராகவே சிலநூல்கள் கூறுவதா லிதைப்பரிகரித்துக் கொண்டாலன்றோ வவரோற்றுஞ் சைவாசாரிய தூஷணம் யோசிக்கற்பாலதாம்? இன்னுஞ் சிவத்விஜர்வீட்டில் யாம் ஜலமும் பரிசியோமாகையா லவரெம்மி லுயர்வ தெப்படியெனச் சில மூர்க்கப்பிணங்கள் விஸ்தாரம் பேசும். இது கம்மாளருங் கன்னிடையரும் விப்பிரர் மனையிற் சலபானஞ் செய்யாமை கொண்டு தம்மை யவரினு மிக்காரென விறுமாந்துரைத்தல் போல்வதேயாம். வைசியராகிய செட்டிகண்மனையிலும், விசுவகுலதிலகராகிய கம்மாளர் மனையிலுந் தாழ்மக்களாகிய வண்ணார், அம்பஷ்டர் முதலினோ ரன்னபானாதிகளை யங்கீகரிப்பதில்லையென்னும் வழக்குப்பேசி வண்ணார் முதலினோரையே யுயர்குலத்தவராகக் கொள்வதுமன்றோ விதற்கு கிதரிசனமாம்? இப்படிப்பலவுளவற்றை விரிவஞ்சிவிடுத்தாம்.

தீக்ஷவகித்தவராகிய சூத்திரர்களே சாமானிய பிராம்ஹணர் வீட்டில் ஜலபானஞ்செய்யாராயின், ஜக்மத்திறலேயே சம்ஸ்காரபராளாய் விளங்கும் ஆதிசைவர் ஷெ சாமானிய விப்பிரர்களை யெவ்வளவின் மதிப்பர்? இதையறியாது சாமானிய பிராம்ஹணர் சிவத்விஜருட னன்னபானாதிகளைக் கிரகியாரென்ப தென்னமடமை? சஜாதியும், சகோத்திரமும் வகித்தவராகிய ஸ்மார்த்தரும், வைஷ்ணவபிராம்ஹணரு மொருவர்வீட்டி லொருவருண்ணுதலும், பருகுதலுஞ் செய்யாம லொருவரை யொருவர் தாழ்வுகூறுவதென்னை? இன்னருக்கும விசாரஞ் செய்தபோர்க்கன்றி யுண்மைவிளங்காதென்க.

இனிச்சூத்திரர்க்கு ஆசாரியத்வமுண்டென வொருபிரமாணமுங் காணவில்லையென்று பித்தந்தலைக்கேறிப் பேசும் பி

டைச்சொல்லையும்பெயர்த்தெறிவாம். சுப்பிரபேதத்தில் "బ్రాహ్మణాః క్షత్రియావైశ్యాః శూద్రాఃసత్కులసంభవాః। ఆచార్యాస్తేషువిజ్ఞేయా నాన్యేషాంతుక దాచన" என்னும் வசனத்தால் பிராம்ஹணரும், க்ஷத்திரியரும், வைசியரும், சுத்தகுலத்திற்பிறந்த சூத்திரருமாகிய நால்வருமே ஆசாரியராவர், மற்றையோர்க்கு ஒருக்காலும் ஆசாரியத்வமில்லையாமென்று பெறப்பட்டது. இந்தவாக்கியத்தால் கண்டோக்தியாய்ச் சூத்திரனை வெறுமனே ஆசாரியனென்று கூறாமல் சுத்தகுலத்திற்பிறந்தவனென்றும் புகழ்ந்திருக்குநுட்பத்தை யோசியாமல் சூத்திரனுக்கு ஆசாரியத்வமில்லையென்று கூறுவதென்ன பேதமை? இப்படியொருவாக்கியமே யன்றி யநந்தவாக்கியங்களுண்டாயிருக்குமுண்மையை யொருபோதுங் கண்டுங் கேட்டுமிராத கொடுமையே யன்றோ சூத்திரர்க்கு ஆசாரியத்வ முண்டெனக் கதாசித்தாயுரைத்தவிடத்தி லதை யுபசாரமாத்திரமாகவேகொள்ளவேண்டுமெனக் கூசாதுரைத்தனர்? இப்படியே மஹாசைவரிடமுங் கொண்டாலென்னை? பிறரைத்தூஷித்தலால் தம்மாதிக்யமும் வியபிசரிக்குமென்ப தறியாது சமாதானங் கூறவந்தது தடுமாறிப்போயிற்றென்க. மஹாசைவர்க்கே தோஷமுண்டா மெனின், அசைவசித்தியே பிராப்தமாகப் பெற்றுள்ள சாமானிய விப்பிரரை யெம்மட்டில் நாமங்கீகரித்துறவாடவல்லேம்? இதனால், தாம் சாதிக்கப் புகுந்த விஷயத்தைப் பிரமாணவாயிலாக நாட்டுவதே யுக்தமாம். என்பது, சூத்திரர்க்கு ஆசாரியத்வ மில்லையென்னும் வாக்கியங்களை யுதகரித்துக் காட்டவேண்டிய தென்பதேயாம். இதைவிட்டுச் சாஸ்திரமென்றால் வேதமெனவும், வேதம் சூத்திரனுக்கு யோக்யமல்லாமையால் பிராம்ஹணனே வேதமாகிய சாத்திரத்தையாசரிக்கும்ஆசாரியனெனவுங் கூறித்தாமாசரிப்பது போற்பிறரையு மாசரிக்கச் செய்யவருங்கால் வேதத்துக்கதிகாரிகளாகாத சூத்திரர்க்கவ்வேதத்தை யுபகரிக்கக்கூடாதபோது அச்சூத்திரரிடத்தில் தமக்கு ஆசாரியத்வம் எப்படிச் சித்திக்குமென்பதையோசியாது வீண்குழப்புவார்த்தையாடுவதெல்லாம்விருதாகோஷமென்க.

இதுநிற்க, மேல்காட்டிய வசனமேயன்றி யின்னுஞ் சிலவசனங்களையும் யாமீண்டுதகரித்துக்காட்டுவாம். சைவபுராணத்தில், "శివశాస్త్రసమాయుక్తాః పశుశాస్త్రపరాఙ్ముఖాః। బ్రాహ్మణాదిచతుర్వర్ణే ఆచార్య

సుప్రతిష్ఠితాః" என்னும் வசனத்தால் பசுசாத்திரம் பற்றுதுவிட்டுச் சிவசாத்திரம் பற்றிப் பயிலும் பிராம்ஹணர் முதலிய நான்குவருணத்தாருமே ஆசாரியராவரென்று புகழப்படுவர் என்று பெறப்பட்டது. இந்தவாகியத்தால்பிராம்ஹணனேயாயினும் பசுசாத்திரம்பற்றி வாழ்பவனுயின் அவனுசாரிய னுகானென்று கூறிய விசேஷத்தால், பசுவாகிய ஆத்மாவையேபதியாகியபிரம்ஹமெனக்கொண்டு அஹம்பிரம்ஹம் எனக்குழறித்திரியு மப்பேதையர்க்குச்சைவாசாரியத்வ மெப்படியுண்டாமென்பது யோசிக்கவேண்டியதல்லவா? ஒருவிதத்தானுந் தாமே சைவாசாரியத்வமெய்தும் யோக்யரல்லாததை மறைத்துச் சிவஞானச்செல்வராய் விளங்கும் பிறரிடமேற்ற முயலுந்தூஷணமேருது! எருது!! இன்னும், கந்தகாலோத்தரத்தில், "పాషాణాఃశివసంస్కారాత్ భుక్తిముక్తిప్రదాభవేత్। పాషాణాఃశివతాంయాంతి శూద్రస్తునకథంభవేత్" என்னும் வசனத்தால் கல்லானது சிவசம்ஸ்காரத்தினுலன்றே போகமோக்ஷங்களைத் தருவதாம். கல்லானது சிவத்தன்மையடையுமாகில் சூத்திரன் அங்ஙனமாகானென்பது எங்ஙனம் என்று பெறப்பட்டது. இந்தவசனத்தால் சூத்திரன் ஆசாரியனுகானென்னும் அஹங்காரவாதம் நசித்ததெனவறிக. பிராம்ஹணனேயாயினும் பதிசாத்திரமாகிய சிவாகமங்களைத் தொடுவதற்கேனும் சிவதீக்ஷையன்றியமையாதென்னு முண்மையறியாது தீக்ஷாஹீனரா யிருந்துகொண்டே சிவாகமத்திலெமக்கு மதிகாரமுண்டென்றுகுழறிவழியுஞ் சாமானிய விப்பிரர் தாம்சைவாசாரியராகவேண்டிமுயலும் யோக்கியமே! யோக்கியம்!! சுப்பிரபேதத்தில், "శుద్ధశైవమిదం తంత్రం నదేయంనప్రకాశయేత్। దీక్షితస్యతుధీరస్య శివభక్తిపరస్యచ। శ్రావణీయంనచాన్యస్య శ్రవణంహిప్రశస్యతే" என்னும் வசனத்தால் இந்தச் சுத்தசைவாகமம் எல்லார்க்குங் கொடுக்கத்தக்கது மன்று, விளக்கத்தக்கதுமன்று; தீக்ஷைபெற்றவனுய், நிலையுடையோனுய், சிவபக்திமானுயிருப்பவனுக்கே விளக்கத்தக்கது. ஏனையோர்க்கு விளக்கல் குற்றமாம் என்று பெறப்பட்டது. இந்தவாக்கியத்தால்சிவாகம சித்தாந்தத்தின்பெருமையும், அதைப் பெறுவான் றன்மையும் வெளிப்பட்டதனு லின்ன தன்மைகளிலொருசற்று மெய்தப்பெருமல்அந்தோ சாமானியவிப்பிரருஞ் சிவாகமத்தில் தலையிட்டுக்கொண்டு அதைக் கெடுக்கப் பார்க்கின்றனரோ! இனிப்பாஞ்சராத்திரியும் சைவாசாரியத்வம் வகிக்

கவருமே! விகிவியநூலையவலம்பித்துக்கேடுண்ட ஜாதிப்பிரஷ்டனுகிய பிராம்ஹணனும் ஏன்றனக்குஞ் சைவாசாரியத்வ முண்டெனவெளி வராமற் போவான்? இப்படி யாபாசங்களையேநவநவமா யுண்டுபண்ணுதற்கிடமாகச் சாமானியவிப்பிரர் சிவாசாரியத்வம் தாமும் வகிக்கமுயலுதல் தலையெடுக்காமல்நசுக்கப்பட்டதெனவறிக.

மேல்செய்துமுடித்ததீர்க்க பிரவசனத்தால் "ஸ்வதர்மே நிதநம் ச்ரேய:" என்கிறகீதாவசனப்படித்தத்தம்சுவதர்மங்களிலவரவரும் நிற்பதே சால்புடைத்தாம். என்றதனுல் சாமானிய பிராம்ஹணர் தமக்குள்ள ஸ்மிருதியாசாரங்களைத் தழுவிக்கொண்டு அவற்றையே பிறர்க்குபதேசித்து, அதனுல் ஆசாரியத்வம் வகிப்பதில் யாதோராடங்கமு மசங்கதமுமின்றெனவறிக. ஒவ்வொருஆசாரமும் அந்தந்தவளவில்அதுவதுவேசிரேஷ்டமென்று சொல்லுவதற்கிசைய ஸ்மார்த்தாசாரம்சைவமுதலியவாசாரங்களினுமிகவுயர்ந்ததெனவும், சைவாசாரத்தையுடையாராகிய ஆதிசைவர் தம்மிற்ருழ்ந்தவரெனவும் வாய் கூசாதுரைப்பதில் எமக்குயாதொருசங்கடமுமின்றென்க. இப்படியொவ்வோராசாரகனுங்கூறிவருந் தன்மையுண்மையால். இப்படியொவ்வொருவருங் கூறுங்கால்அவரவரும் அவற்றை விசாரிக்கவரும்பிரமேயத்தி லுண்மையுண்மையாகவே முடியுமாகையா லப்படி நிகழ்ந்தபிரஸ்தாபமொன்றையீண்டுவிவகரித்துக் காட்டுவாம்.ஓர்கால் சைவரொருவரும், போலிஸ்மார்த்த ரொருவருமோரிடத்தில் சந்தித்தனர். அப்போது அவ்விருவருக்குஞ் சிலசம்பாஷணை நடந்தது. அதுவருமாறு:

ஸ்மார்த்தர்:—எங்களுக்குள்ளபடியே சிவத்விஜருக்கும் அத்திரி, பாரத்வாஜகாசிபகோத்திரங்களுண்டா யிருக்கையால், அவரையு மெம்மோடு சமானராகக் கூருமல் அவர் சிவமுகோத்பவராயுள்ளவரென விசேடம்பாராட்டுவதென்னை?

சைவர்:—நும்மோடு அவரைச்சஜாதிகோத்திரங்களுடையாரென நீவிர்கொண்டக்கால் அவரை நும்மிற் ருழ்ந்தவராக நீவிர் கூறிவருவதென்னை?

ஸ்மார்த்தர்:—இதற்கு விடை யாம் பின்னே கூறுவாம், யாம் கேட்டகேள்விக்குப் பதிலென்னை?

சைவர்:—நும்ம விடையிலேதானே யெம்மவுத்தரந்தொக்கிநிற்கையாலதனை நீவிர் கூறுவிடினுநுஞ்சமய வழக்கின்படியாமே விரித்துப்பின்னர்ச் சமாதானங்கூறுவாம். அத்திரி, பாரத்வாஜர் முதலிய மஹரிஷிகள்கோத்திரோத்பவராகிய நுமைப்போல் சுத்தராகாது, சிவத்விஜர்கானீனராயின வென்பது கருதியேயன்றோ அவர்க்குநும்மைப்போற்சஜாதிகோத்திரங்களங்கீகரித்தபின்னரும் அவரைத் தாழ்வுகூறுகின்றீர்? இந்தக்கருத்தால்சிவத்விஜ தூஷணங்கொண்டாடு நீவிர் அதைமறைத்துவிட்டுச்சஜாதிகோத்திரங்களா லொத்தவராகிய சிவத்விஜரொம்மி லுயர்ந்தவராகக் கூறிக்கொள்வ தெப்படியென வீண்ஜாலம் பகர்ந்ததென்னே? இப்படி நீவிர் கூறிக்கொள்வதேயன்றிச் சிவத்விஜோத்தமரோடு நீவிரொப்பாருமிக்காருமாகமாட்டீர்! ஆகமாட்டீர்!!

ஸ்மார்த்தர்:— நும்மாதிசைவ ரோடியாம் எப்படிச்சமானாதிகத்வம்பெறமாட்டோம்? சற்றேசொல்லும்பார்ப்போம்.

சைவர்:—நும்மகோத்திர மூலகராகிய மஹரிஷிகளில்கௌசிகர்காதிமகாராஜ னிடத்திலும், மாண்டவ்யர் தவளைவயிற்றிலும், கார்க்கேயர் கழுதைவயிற்றிலும், கௌதமர் பசுவினிடத்திலும், பாரத்வாஜர் பாரத்வாஜம் அல்லதுகருங்குருமான் என்னும்பட்சிவயிற்றிலும், வசிஷ்டர்வேசிவயிற்றிலும்பிறந்தவரானபோதுநீவிர் ஆதிசைவரோடு சமானராவதெப்படி?

ஸ்மார்த்தர்:—எம்மகோத்திர மூலகர்களாகிய கௌதமர், கௌசிகர், காசிபர், பாரத்வாஜர் முதலினோரே ஆதிசைவர்க்கும் மூலபுருஷரானபோது எமக்குவந்த தோஷமவர்க்கு மாத்திரம் வாராததென்னே?

சைவர்:—ஆதிசைவர்க்கு மூலகராகியகௌசிகாதி மஹரிஷிகள் சதாசிவ மூர்த்தியினுடைய பஞ்சவக்திரங்களினின்றும் பிறந்தவராகையால் குருவிவயிற்றிலும், பசுவின்வயிற்றிலும்பிறந்தவராகிய நும்மகோத்திர முனிவர்களில் அவர்வேறா யுள்ளவரென வறிவீராக.

ஸ்மார்த்தர்:— எமக்குங்கௌசிக கோத்திரம், அவர்க்குங் கௌசிகோத்திரம். எமக்கும் பாரத்வாஜகோத்திரம், அவர்க்கும் பாரத்வாஜகோத்திர மித்தியாதிகளாகப் பிரசித்தம்பெற்றிருப்ப

தற்குமாறாய், ஒரோபேரையுடைய விரண்டிரண்டு ரிஷிகளுக்கிடஞ் செய்தது எமக்கங்கீகாரமில்லை.

சைவர்:— மநு, விருத்தமனுவென்றும், பராசர், விருத்த பராசர் என்றும் நீவிரோவழங்குவதோடுஇந்திரனுக்குப் பௌரோகிதஞ்செய்ததுவஷ்டாவென்னும் பிராம்ஹணனொருவனும், மநுமயத்வஷ்டாசில்பிவிசுவகர்மா வென்பவர்களிற் பெறப்பட்ட கம்மாளதுவஷ்டா வொருவனுமாக விரண்டு துவஷ்டாக்களுண்டானதற்கு மென்செய்வீர்?

ஸ்மார்த்தர்:— இரொட்டைரொட்டையாய்க் கூறுவது அசங்கதம். ஒவ்வொருவரையே யாமங்கீகரியா நிற்பாம்.

சைவர்:— அப்பேருடையவர்களை யொவ்வொருவராகவே கொண்டக்கால் கம்மாளதுவஷ்டாவே தேவகுருவாயிருந்தானென வேர்ப்படும். அப்போது கம்மாளரைப் பிராம்ஹணரல்ல வென்னும்வாதம் துர்வாதமாய்முடியும். நீவிருங்கம்மாளரோயாகவரும். இரண்டிரண்டுமஹரிஷிகளாகக் கொண்டக்கால், நீவிர் ஆதிசைவரில்வேறாகி அவரைநோக்கத் தாழ்வுபெற்றுத் துவஷ்டாவென்னுங்கம்மாளன் வம்சத்திற் சேராமல்தப்பிப் பிழைப்பீர். ஆதிசைவரிற்றாழ்ந்து அவரருளைப் பெற்றுவாழ விச்சையா? அல்லது ஆதிசைவரை நிந்தித்து, அதனாலுண்டாகுங் கம்மாளனென்னும் பட்டாபிஷேகத்தைப் பெற்றுவாழ விச்சையா? இரண்டிலெது சௌகரியம்? தேர்ந்துரைப்பீராக.

என்றுவினவியபோது அந்தஸ்மார்த்தர் குபிதராய்ப் பதில் சொல்லத்தெரியாமல் வெள்கினர். இப்படிப்பிரஸ்தாபங்கள்வருந்தோறும்விவேகிகள் சமுகத்திலவமானமேசன்மானமாகவவரடையவுண்டாமாகையா லின்னவிஷயத்தை யாமிங்கே விஸ்தரிப்பது அவசியமன்றாக விவ்வளவில் விடுத்தாம்.

இதுகாறுங் கூறிவந்தநியாயங்களால் அதீக்ஷிதராகிய ஸ்மார்த்தர் சிவாகமதீக்ஷையைப் பிறர்க்குச்செய்வதற்கு யோக்யரல்லரெனவும், சிவப்பிராம்ஹணரால் சிவதீக்ஷையடைந்து மஹாசைவசித்திபெற்றவநந்தரமேஸ்வஜாதியிலும், மற்றைக்கீழ் ஜாதியிலும் ஆசாரியத்வம் வகிக்கவுரியாரெனவும், சைவதீக்ஷையைப்பெறாமலே யாசாரியத்வம் வகிக்கவாசை யுண்டெனின், ஸ்மார்

த்தாசாரத்தைத் தாமநுட்டிக்கிறபடியே ஸ்வஜாதியிலுங் கீழ்ச்சாதியிலும்வினியோகப் படுத்திக்கொள்ளலாமெனவும், அப்படிப்பிரவர்த்திக்குங்காலந்தஸ்மிருதி யாசாரம் சைவாசாரத்தின் மிக்கதெனவீண்வம்பாடுத லசப்யமாய்முடியுமெனவும், அந்தப்பிராம்ஹணைப்போலவேமற்றைமூன்றுவர்ணத்தாரும் ஸ்வஜாதிகீழ்ச்சாதிகளிலாசாரியத்வம் வகிக்கவுரியாரெனவும், சூத்திரர்க்கு ஆசாரியத்வமில்லையெனக் கூறுவார்கோள் குற்றமாய் முடியுமெனவுநாட்டப்பட்டது. இதனால், ஆதிசைவரே பிரதானரும், பிரதமருமாகிய ஆசாரியர்களாயினரெனவும், அவராஜ்ஞாபுரஸ்ஸரமாகவேமஹாசைவராதிமற்றைச்சாதியார் ஆசாரியத்வம் வகித்தனரெனவும், வெளிப்பட்டது. மஹாசைவரினும் ஆதிசைவரேபிராம்ஹணதுல்யராவரென்பதை அவ்விருவரும்முறையேபிரமன்முகத்திலும், சிவபெருமான்முகத்திலுமுதித்தமையேவிளக்கும். தேவர்க்களில் சிவபெருமான் பிராம்ஹணரும், விஷ்ணுமூர்த்தி க்ஷத்திரியரும், பிரம்ஹதேவர் வைசியருமாவரென வெளிப்படும் வேதமூலங்களே சான்றாம். இந்நாலாரம்பத்தில் சிவபெருமான்பிராம்ஹணரென்று தகரித்தவாக்கியத்தாலும், "[illegible]" என்னுஞ் சுருதியாலும், "[illegible]" என்னும் புராண வசனத்தாலுமே யவைவிளங்கும். இதனையே "தேவரிற்பிரமன் வசியனுகையிலத் திசைமுகன் முகத்தில்வந்துதித்தோர், ராவரோபிரமகுலத்தவராக வன்றருட்சிவபிரான்முகத்தி, லேவர்வந்துதித்தோரவர்பிராமணரென்றியம்புதற்குமெனவிசைத்தான், சேவலங்கொடியெந் தணிகைநாயகனெஞ் செல்வமாங்ாவுணியர்மணியே" என்று தணிகாசலஸ்தவம் என்னுநூலில் யாம்விதந்திருப்பதுங்காண்க. க்ஷத்திரியராதி பிறரைநோக்க விப்பிரர்பிராம்ஹணராவரன்றி ஆதிசைவரைநோக்க அவர்க்குப் பிராம்ஹணத்வம் சித்திக்காதெனவறிக. மலமாயாதி ஜடங்களைநோக்க ஆன்மாசித்தாயிருப்பினும் பரசிவனைநோக்கக் கேவலம் ஜடத்தன்மையெய்துதலே மேலுண்மையைக்காட்டு நிதரிசனமாம். இங்ஙனமாக, சாமானியவிப்பிரர் சைவவேதியரோடு சமானதிகத்வம் பாராட்டிவருஞ் சாத்ருசமே! சாத்ருசம்!!

அன்றியும், வேறு முக்கியமான வம்சமொன்றை யினிவிதந்துரைப்பாம். சாம்பவாக்ரோசாளிட்ட சாபத்தை யடைந்தவருளொருசாரராகிய ஏகாத்மவாதம் பற்றி வாழும் ஸ்மார்த்த

ளையே யிதுவளை பிரஸ்தாபித்து வந்தோமாகையால் அவர்க்கு ஸ்மார்த்தம், ஏகாத்மவாதம் என்னுந் துவந்தங்களுண்டான பரியாலோசனையில் ஸ்மார்த்தம் அங்கீகாரமும், ஏகாத்மவாதம்அநாங்கீகாரமுமாய்முடியும். ஸ்மார்த்தம் ஸ்மிருதியநுட்டானமென்றுபெறுகையால் வேதோபப்பிரம்ஹணமாக மஹரிஷிகளால் செய்யப்பட்ட தன்மையமையும். இது சிவாகமத்தில் விரோதம்பயவாது. அதவாஏகதேசமுண்டாயிருப்பினும்பாதகமில்லை. "𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑍇𑌤𑍁 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑍇𑌵𑌬𑌲𑍀𑌯𑌸𑍀" என்னும் படியே யிண்டுமமைத்துக் கோடல்பெறுமாகையால். பதிவாக்கிய மாதனைக்கியேயன்றோ பசுவாக்கியமாகிய ஸ்மிருதிகளினும் சுருதி ஆதிக்யம்பெற்றது? அப்படியேயன்றோ பதிவாக்காகிய சிவாகமத்தினுங் கருதற்பாலது? மேல்வாக்கியத்திற் போந்த சுருதியென்பது வேதசிவாகமமென்னும் பதிவாக்காகிய பிரமாணசமஷ்டியையேமேலோர்கருதாநிற்பர். ஏகாத்மவாதம் = பதார்த்தத்திரயநிருபணத்தையதிக்ரமித்து வேதசிவாகமத்தில் அபார்த்தம்பெற்றுச் சிவாபாரதத்தையே விளைக்குமுண்மையால் அசாமஞ்சஸமாதல்பெற்றொழியும். ஸ்மார்த்தம், ஏகாத்மவாதம் என்பவற்றுண் முன்னையதும்பின்னையது மொன்றிலொன்று முரணுந்தன்மை யுண்மையா லிரண்டும் பிரமாணமாத லெங்ஙனம்? ஸ்மார்த்தமும்சைவமும் அபேதமாதலாலிரண்டும்பிரமாணமாதல் சாலும். ஸ்மார்த்தமும் வைதிகமு மொத்தபடி. இரண்டாசாரங்களும் சிவோபாசன மார்க்கமாதலால் அவைசாமானியவிசேஷதர்மங்களாகக் கொள்ளப்படும். இவற்றுள் சைவத்தைத்தழுவாது ஸ்மார்த்தாவலம்பனமாத்திரத்தால் சிவாராதனஞ் செய்பவரோ சுத்தஸ்மார்த்தராவர். ஸ்மார்த்தாவலம்பனத்தைவிவகாரமெனக்கொண்டு சைவத்தையறவேகைவிட்டுஏகாத்மவாதம்பற்றிவாழ்குனர்தாமும்ஸ்மார்த்தரெனத்திரிகின்றனரேனும்அவர்க்கதின்மிச்சாபுத்தியுண்மையாலவர்ஸ்மார்த்தராதலிழுக்காம். இந்தவிசாரத்தால் ஸ்மார்த்தத்துக்கேயநதிகாரம்வகித்துஅப்பிராம்ஹணராய்த்திரியுமேகாத்மவாதிகள் சைவாசாரியராக முயலும்புதுமையே! புதுமை!! சைவதீக்ஷாவான்களாயுள்ள ஆதிசைவரும், மஹாசைவரும் ஸ்மிருதிகளைப்பிரகிருதோப யுக்தமாகக்கிரகித்தலால் (அன்னியநூலின் விதியவிரோதமே, அன்னேல் பழுதென் றுளத்து) என்றபடியமையும்! அமையும்!! ஆகமிகளாயுள்ளபேர் ஸ்மார்த்தத்தை யவ்வளவாக வவலம்பிக்கவேண்டுமென்பது ஆவசிகமன்றாம். வேதம்

தமக்கு ஸ்வதஸ்ஸித்தப்பிரமாணமாகமுன்னரோ யவர்பெற்றிருக்
குமுண்மையால். இவ்வுண்மையால், சைவம், வைதிகம், ஸ்மார்த்
தம், பௌராணிக மித்தியாதிகளைககண்டமான சதாசாரங்களா
யொன்றிலொன்று சாமான்யவிதிகளாக மேலோர் கொள்ளாநிற்
பர்.ஸ்மார்த்த முதலியவற்றைப்போல் சைவம் வைதிகத்தினுபப்
பிரம்ஹண மாகாமல் ஸ்வதப்பிரமாண மாயினமையாலும், ஸத்
யோஜாதாதி கீழ்முகங்களிற் பிறந்தவேதங்களைப் போலாது ஈசா
னமென்னு மூர்த்துவமுகோத்பவம் பெற்றமையாலும் வேதத்தி
னும் விசேஷதர்மமாதல் பெற்றமையு முண்மைசித்தித்தது. சிவா
கமத்தில் ஸ்மிருதிவிரோத முண்டாகாமையை (உஜ்வலம்) என்
னும் ஆபஸ்தம்பசூத்திரபாஷ்யம், ஹரதத்தாசாரிய சுவாமிகள்
செய்திருப்பத னுனுங்கண்டுணர்க. இந்தவிசாரத்தால் பிரமாண
தாரதம்யஸ்வரூபங்களும், அவற்றை மெய்யாகவும், பொய்யாகவு
மநுட்டிக்கு மதிகாரிகள் தன்மையும்; அவரிவரிவரொன்பதும் வெ
ளிப்பட்டமையால், சர்வாதிகாரத்வம் வகித்தஆதிசைவர் மாஹா
த்மியமினிதுபிரகாசத்தை யடைந்ததெனவறிக. இவ்வுண்மையை
விசாரியாதமூடராயுள்ளபேர்சிவாகமம்வேதபாஹ்யமெனக்கூறு
வர். உபநிஷத்துக்களின்மத்தியில் அவ்வாகமத்தைப்பாசுபதோப
நிஷத்தென்னுமோருபநிஷத்தெழுந்துவெகுவாய்ப்பிரஸ்தாபித்த
அதிற்பெறப்படும்பரசிவதத்துவங்களைகவகவமாய்விளக்கியிருக்கு
முண்மை வெளிப்பட்டது. இதனுண்மை (சிவாதிக்யரத்நாவளி
உ-வது பாகம்) யாம்செய்நூள்ளவற்றுலினிதுவிளங்கும். ஆகவே,
பாஞ்சராத்திரம் என்னுமாகமமே வேதபாஹ்யமாதல் திண்ணம்.
இவ்வாகமம் சோமுகனென்னுமசுரன் வேதங்களைக்களவுகொண்
டொளித்தபோது அவனை வஞ்சித்தற்பொருட்டே விஷ்ணுவாலே
ந்துராத்திரியில் செய்யப்பட்டது. பஞ்சராத்திரத்தில் செய்தமை
யானே பாஞ்ராத்திரமென்பதுபெறும். அவ்வசுரன் வேதத்தைக்
கிரகித்தோடியபோது அதற்குப் பிரதியாகவேதத்துக்குமுழுவிரு
த்தமானதர்மாரோபணங்களாற் பாஞ்சராத்திரமென்னு நூலியற்
றி யுலகில்பரவச்செய்து வேதம்இதுவேயாகச் சோமுகன் அறி
யாமையால் வேதமல்லாத துப்பற்றநூலொன்றைக் களவாடிச்
சென்று னென்று விஷ்ணுபகவான் பிரகடனஞ் செய்கையிலச்சூ
ழ்ச்சியி லகப்பட்டபாபாத்மாக்க ளெல்லாம்தத்தம் வினைக்கேற்ப
வேதத்தையிகழ்ந்து பாஞ்சராத்திரம் என்னும் அவைதிகை நூலே

யே வேதமெனக்கொண்டு மருண்டு ததாசாரபிரவர்த்தகத்தால ழிந்தனர். அவர்சந்ததியாரே ஷை அவைதிகநூலையவலம்பித்திக் காலத்திலும்வேதநிந்தை, சிவநிந்தை முதலியவற்றால் ஜீவனஞ் செய்கின்றனர். இதனால், பரிபாகிகளாவார் அவர்மோசத்தின் மூழ்காது ஜாக்கிரதையோடு ஜீவிக்கவேண்டுமென்பது பெற்றாம். இங்கேபாஞ்ராத்திரத்தை விசாரித்தது யாதுக்கெனில், மேல் சாபக்கிரஸ்தராய்ப்பவித்தொழிந்த பிராம்ஹணரைப்பற்றி விசாரிக்கையில் அவர்ஸ்மார்த்தம், மாத்துவம், பாஞ்சராத்திரம் என்னுமாசாரங்களிற் பயில்கின்றனரென்று கூறிமுடித்து அவ்வாசாரங்களில் ஸ்மார்த்தத்தையுத்தமாசாரமாகப் பிரஸ்தாபித்தோமாகையா லப்படியே பாஞ்சராத்திரத்தையும்யோசித்து நம்மவர்கெடாது நலப்பாடெய்தல்கருதியேயாம். முன்னரோரிடத்தில்பாஞ்சராத்திரம் வேத்தில் வெகுவாயவிரோதத்தைப் பெறுமென்ற தென்னையெனின், பாஞ்சராத்திரமேயன்றி யூணமகம்மது மதங்களும் வேதத்தில் வெகுவாயவிரோதமெய்த லுண்மைகாண்பார்க்கே அதுவிளங்கும். இவ்வாபாசமதங்களேதெய்வங்கொள்கை, பாவபுண்ணியங்கோடன் முதலியசம்பந்தங்களால்வேதத்திலவிரோதமாமெனின், பாஞ்சராத்திரத்தையாமங்கீகரித்துரைத்தது எங்ஙனம்பழுதாம்? இவ்வுண்மையால்பாஞ்சராத்திரமயக் கொழிந்தது. மார்த்துவம்என்பதும்கேவலம் அவைதிகமேயாகிச்சூடுண்டு திரிதன்முதலியதுராசாரங்கண்மேலிட்டுக்காட்டராயணம் மாட்டராயணம் என்னும்பெயர்களால்சிலவுபநிஷத்துக்களுண்டென வீண்ஜாலம்பகர்ந்து வெறிகொண்டுரைசெய்யு மாதிக்யமே பெறுதலாலதனங்கீகார மெம்மட்டில்வைதிகராயுள்ளபேர்க் குண்டாயிருக்கலா மென்பதை யோசித்தால் விளங்கும். இப்படியொவ்வொன்று மொழிதலால் யாவுமொழிந்தகாலேயி லுடலுமுயிரு மெனத்தெளிந்தோர் தேர்ந்துரைக்கும் பெற்றிமையால்விளங்கும்வேதசிவாகமங்களே சப்பிரமாணமும், சதாசாரியகிரஹணமும் பெற்று விளங்குமுண்மையாலவ்வாசாரிய நிதிகளாகிய சிவவேதியரோசர்வாநுகிரஹத்வாதிபரமதர்மங்களையுடையராய் விளங்குவரென்பதுசித்தம்! சித்தம்!! இந்தவுண்மை யுணர்ந்தபேர்ஜகத்கு மூர்த்திகளாய் விளங்கு மவ்வாதி சைவவேதியரையே சிவபெருமானது ஜங்கமவடிவமாகக்கண்டுவழிபட்டுய்யக்கடவர். சுபம்! சுபம்!!

ஸ்ரீசம்பந்ததீர்த்த சரணாரவிந்தார்ப்பணமஸ்து.

சிவமயம்.

ஸ்ரீசம்பந்ததீர்த்தசரணுயநமஃ.

சிவநாமாவளி.

சிவ சிவ சிவ சிவ கணநாதா, சிவகணவந்தித குணநீதா.
சிவ சிவ சிவ சிவ குருநாதா, சிவசுந்தர ஷண்முகநாதா.
தணிகாசலபதியேதெய்வம், சார்ந்தினியவன்பணியேசெய்வம்.
கந்தாகுமராகருணாலயசம், பந்தாமுருகாபரமாஅபயம்.
மரகதமயின்மிசைவருகந்தா, ஹரஹரசிவசிவசம்பந்தா.
சிந்தாமணியேசிவனார்மகனே, நந்தாவொளியேநவைதீர்குகனே.
சிவ சிவ சிவ சிவ சிந்மயதேஜா, சிவசுந்தர குஞ்சித நடராஜா.
அம்பலத்தரசேயருமருந்தே, ஆநந்தத்தேனேயருள்விருந்தே.
தில்லையைக்கண்டார்தேவர்களே, செய்வாரவர்பணிமூவர்களே.
தில்லையிலுண்டொருதீங்கனியே, தின்றவர்க்கேதொருதீங்கினியே.
தில்லையிற்கண்டோம்தெரிசனமே, இல்லைநமன்றமரொரிசினமே.
ஆடியபாதா, அம்பிகைநாதா.
அருணடராஜா, ஆநந்ததேஜா.
குஞ்சிதபாதா, கோமளைநாதா.
மலைதருமகளேமடமானே, மாற்றருசிவமணந்தருதேனே.
ஞானசம்பந்தனைநாடுதுமே, நாடுமவரடிகள்சூடுதுமே.
மலைமகள்பாலுண்டருள்சிந்தா, மணியெனவந்தருள்சம்பந்தா.
உயர்சண்பையில்வருசம்பந்தா, உமைதருபாலுண்டருண்மைந்தா.
முத்துச்சிவிகையில்வருமணியே, முத்திக்கொருவித்தெனுமணியே.
காழியில்வந்தருள்கண்மணியே, வீழியில்கண்டருள்விண்மணியே.
சண்பையர்நாதாசம்பந்தா, சதுர்மறைபோதாவின்பந்தா.
காழியிலுண்டொருகண்மணியே, கண்டவர்க்கேதினிமண்பணியே.
ஞானசம்பந்தநறுங்கனியே, நம்பலமாகுமொருங்கினியே.
சம்பந்தசம்பந்தஞானசம்பந்தா, எம்பந்தமின்பந்தமேறவின்பந்தா.
சம்பந்தசம்பந்தவென்போமே, சாருங்கவலைகள்பின்போமே.
ஞானசம்பந்தா, மோனவின்பந்தா.

சைவநன்மணியே, சம்பந்தமணியே.
தெய்வநன்மணியே, சீர்காழிமணியே.
காழியர்மணியே, காதலென்மணியே.
கவுணியர்மணியே, கண்ணினுண்மணியே.
காழியர்தவமே, கவுணியர்தனமே.
அருமற்றைநெறியே, ஆகமநிலையே.
வேதாந்தமணியே, வேதியர்மணியே.
சித்தாந்தமணியே, சிவனார்கண்மணியே.
குருமணியே-எங்-குலமணியே, அருமணியே-வந்-தருள்மணியே.
பரசமயங்களைப்பழிப்பாம்பழிப்பாம்,
பரனருள்வழியேசெழிப்பாம்செழிப்பாம்.
சைவம்பரமெனத்தழைப்பாம்தழைப்பாம்,
சம்பந்தநாமனை அழைப்பாம்அழைப்பாம்.
சம்பந்தன்சீர்களைப்படிப்பாம்படிப்பாம்,
ஜயபேரிகைநிதம்அடிப்பாம் அடிப்பாம்.
சம்பந்தநாதா, சாரும்ப்ரபோதா, நின்பந்தமேதா, நிகமவிநோதா.
நாவரசெனுந்திருவாளனையே, நம்புதுநமக்கிலை தீவினையே.
வாகீசகுணாலயதேஜா, யோகீசவரோதயபோஜா.
வன்றொண்டநாதனைவாழ்த்திடுவாம்,
வாழ்த்துமவர்க்குமுடிதாழ்த்திடுவாம்.
சுந்தரமணியேசுபமணியே, மந்திரமணியேமனமணியே.
கோளறுமணியேகுருமணியே, குருபரசுந்தரசிவமணியே.
பரவைதன்மணவாளாசரணம், பரன்மகிழ்தோழாசரணம்சரணம்.
மாணிக்கவாசகமாமணியே, மன்றுளொளித்தருள்தூமணியே.
மணிவாசகசின்மயதீபா, பணியேதருள்சற்குணபூபா.
வாதபுரீசா வாகீசா, சம்பந்தேசாசுந்தரேசா.
அறுபத்துமூவர்நம்மாரியரோ, அன்புசெய்வார்மிகுசீரியரோ.
அறுபத்துமூவர்நம்மாண்டவரோ, அம்பலத்தானருள்பூண்டவரோ.
அறுபத்துமூவர்நம்மாதிபரோ, அருடருவார்சிவவேதியரோ.
சம்போசங்கரகௌரீசா, சாம்பசதாசிவகைலாசா.
சம்போசதாசிவா, சாம்பசங்கரஜகதீசா.
பார்வதிரமணா, பங்கஜசரணா, பவஹரணா, சிவ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசம்பந்தநீர்த்தசரணயநமஃ.

சித்தாந்தரத்நாகரம்.

சித்தாந்தசேகரம்.

காப்பு.

முக்கணனெண்டோள்வளையினிவர்க்துமுரிதிரைக்கங்கை
முதுநீராடித்
தக்கதிருவெண்பொடியிற்புழுதிவிளையாட்டயர்ந்து
தண்பசுந்தே
னுக்கமலர்க்கடுக்கையங்காடுழக்கியிமமலையீன்ற
வொண்கரும்பு
நெக்குசுவைப்பாலமுதநெடிதுநுகரொருகளிற்றை
நெஞ்சுள்வைப்பாம்.

நூல்.

"அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு"

என்று திருவள்ளுவதேவர் கூறியவுண்மையை யுய்த்துணரு மிடத்து, எழுத்துக்கள் அகரத்தை முதலாக வுடையனபோல் உலகம் கடவுளை முதலாகவுடையது என்று துணியப்படும்.

எழுத்தெல்லாமென்றபோது அகரமு மடங்கி நிற்கவும், அதனை வேறுபோல அகரமுதலவென்று கூறுவ தென்னையெனின், தமிழேயன்றி வடபாஷையினும் முதலாதல் பற்றியாம்.

இஃது உரையாசிரியர்கள் கருத்து. இதனுண்மையை மறைஞானதேசிகர் கூறியவாறு இடம்வந்துழிவிரிப்பாம்.

அகரமானது எழுத்துக்களுக்கு முதலாதல்போல், கடவுள் உலகத்துக்கு முதல்வனென்பதை விரிக்குங்கால் "காட்டவனல் போலுடல்கலந்துயிரை யெல்லா,மாட்டுமொருநட்டுவனெம் மண்ணலென வெண்ணாய்" என்ற பிரமாணப்படி யெல்லாவுயிர்களையும் ஆட்டிவைக்கின்றவனென்று முடியும். சர்வ சராசராத்மகராய்விளங்கும் பெருமானை யறிவிப்பது அகரமாகி விளங்கலால், அகரமாதியெழுத்துக்களை யுறுப்பாகவுடைய கல்வியின் முயல்வதனா லடையத்தக்கபயன் "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ, னற்றாடொழா அரெனின்" என்னுந் திருவாக்கின்படி அவனை வணங்குதலென்றே தெள்ளிதினுணரப்படும்.

கற்றதனாலாய பெரும்பயன் கடவுளை வழிபடுதலென்று துணியுமிடத்து அவனை யறிவதெங்ஙன மெனின், "ஞாலமேகரியாக நானே நச்சிநச்சிடவந்திடுங் - காலமே" என்றுள்ள வாக்கியம்பற்றிப் புகையைக்கண்டு நெருப்புண்டென்னு மனுமிதிஞானத்தால் உலகத்தையே சாட்சிகோடலா லமையும்.

புகையைக்கண்டமாத்திரத்தில் அனல் ஞானம் வருமென்பது புகையைக்காணுவதன்முன்னரோ அனலைக்கண்டிருந்தாலல்லது அமையுமாறெங்ஙனமெனின், புகைஞானம் ஒருவனுக்கு வருதலும் ஆப்தவாக்கியத்துணிவாலன்றி அமையாவாறுபோல் காணப்படும் இப்புகை வெளியாதற்கிடம் இன்னது என்றுவரும் அனல் ஞானமும் ஆப்தவாக்கியத் துணிவா லென்றே அறியத்தக்கதாம். நெடுந்தூரத்தி லிருக்குமோர் மலையினின்று மெழும்புகையைக்கண்டு அம்மலையில் அனலுண்டென்று கருதி அம்மலைதோன்றுங் குறிபற்றியே அதனை நாடிச்சென்று அனல் ஞானம் சித்திக்கப் பெறுதல்போல வுலக முடையவனிடத்தது என்று கூறும் மேலோர்வாக்கியங்களைத் துணிந்து, அவர் கூறும்சாதனாந்தரங்களி லொழுகி யுண்மைவிளங்கப் பெறுவனென்பதே சத்தியம். இங்கே மேலோர் வாக்கியமென்றது பாரம்பரியத்தானே புராதனநோக்குமிடத்துக் கடவுள்வாக்கியமாகிய வேதாகமங்களென்றே தெள்ளிதிற்றுணியப்படும்.

"பெண்ணாணலியாய்ப் பிறந்துவளர்ந்தேயழியு, மெண்ணாதபேதமியல் பின்றிப் - பண்ணுங்கால், காரணகர்த்தாவொருவனுண்டவனைக் காட்டுநூல், ஆரணமுமாகமுமாம்" என்றபிரமாணத்தானுந்துணியக்கடவர். புகையைக்கண்டு நெருப்பையும், வெள்ளத்தைக்கண்டு மழையையும், மணியோசையைக்கண்டியானைவருதலையும், கடகலசாதிகளைக்கண்டு குலாலனையும் அறியுமாபோல் காரியமாகிய பிரபஞ்சத்தைக் கண்டு காரணகர்த்தாவை அறியத்தக்கதாம்.

மேற்கூறிப்போந்த அனுபவங்களால் பிரபஞ்சக் காரியப்படுவது பெருமானாகிய காரணனிடத்திலென்று துணியுமிடத்துப் பொன்னாகிய காரணத்தினின்றும் பூஷணமாகிய காரியம் வெளிவருவதுபோல் பிரமமே பிரபஞ்சமாகக் காரியப்படுவது போலுமெனின், அங்ஙனங்கூறுவது மாயாவாதக்கூற்றாகிப் பொன்னாகிய காரணத்தைப் பூஷணமாகக் காரியப்படுத்தும் வினையாளனை நாடுமாபோல் காரணமாகிய பிரமம் பிரபஞ்சகாரியமாதற்கு வேறொருபிரமத்தை நாடவேண்டி வருமாகலின், அங்ஙனந்துணிவது பழுதாகும். உண்மைபயக்கும் வழி மற்றியாதெனின், "காரியகாரணங்கண்முதறுணை நிமித்தங்கண்டாம், பாரின்மண்டிரிகைபண்ணுமவன்முதறுணைநிமித்தம், தேரின்மண்மாயையாகத்திரிகைதன்சத்தியாக, வாரியன்குலாலனாய் நின்றாக்குவனகிலமெல்லாம்" என்றுள்ள பரமோபதேசத்தைச் சிந்தித்து, முதற்காரணமாகிய மண்ணைக்கொண்டு துணைக்காரணமாகிய தண்டசக்கரங்களால் நிமித்த காரணனாகிய குலாலன் பாண்டங்களை வனையுமாபோல் மாயையாகியமண்ணைக்கொண்டு தன் சத்திகளாகியதண்டசக்கரங்களால் கடகலசாதிகள்போலுந் தனுகரண புவனபோகங்களைக் குலாலனையொத்த கடவுள் ஆன்மகோடிகளுக்குக் கொடுத்துப் பேரருளுடையவராய், அவருள்ளும் புறம்புங் கலந்து நிற்பாராமென்றறியக்கடவர்.

மாயையினின்றும் உலகம் காரியப்பட்டதென்பது எங்ஙனம்? பிரமத்தினின்றும் உலகம்வந்தது என்றுசுருதி விளக்குகையாலெனின், இதுவிபரீத வுணர்ச்சியாம். எங்ஙனமெனின், பிரமம் சித்தும், உலகம் அசித்துமாகலின், கடத்திற்படமும்படத்திற்கடமும் பிறவாதனபோல் சத்தாகியபிரமத்தினின்றும் அசத்தாகிய உலகந் தோன்றாதென்பதே துணிபு.

சத்தாகிய சிலம்பியினின்றும் அசத்தாகிய நூல் வருவது போலாமேயெனின், அசத்தாயுள்ள தேகத்தினின்றும்மலத்தடிப்பே நூலாய்வருவதன்றிச் சிலந்திரூபத்தைத்தாங்கியிருந்த ஆன்மசத்தினின்றும் நூலாகியஅசத்துத்தோன்றுவதில்லையாகலின்,அசதாகிய உலகம்சத்தாகிய பிரமத்தினின்றுந் தோன்றியதென்னும் மூடஞாகம் அங்கீகரிக்கப்பட்டதன்றாம். அன்றியும், கடவுள் உலகத்தைச் சிருட்டித்தது ஆன்மாக்களிடத்து வைத்தகருணையால் உத்தேசங்கொண்டே யாகவும், சிலந்திநூலைவிட்டது எது பயன்கருதி? சிலம்பியினின்றும் நூல்வருவதுசுபாவம். வெளிவருமதனைத்திரவியங்களி லொன்றுமென்பது மில்லையாகிச் சிலந்தியின் மலமன்றே முற்றுணர்ச்சியிற் றுணிந்து கூறப்படுமாகையால், சிலம்பி திருட்டாந்தத்தால் நின்மலனாகிய பெருமானிடத்து உலகமாகிய மலம் உளதென்றுகூற அவர்பாவம் வழிவிட்டவாறு அந்தோகொடிது! கொடிது!! மேல்நியாயங்களால் சத்தில் அசத்துதியாதென்றும், அசத்தில் அசத்துதிக்குமென்றும், அசத்தில் அசத்துந் தானே யுதியாதென்றுந் தெளிந்து, உதிப்பிக்குமொரு சத்துளதாக விளங்கப்பெற்று மாயையினின்றும் பிரபஞ்சபேதங்களைப் பெருமான் காரியப்படுத்தின ரென்று துணியக்கடவர்.

சிருட்டிதிதி லயங்களைப் பெறுதலால் உலகம் உடையவனிடத்ததென்று துணியுமிடத்து, உலகத்தை அநாதியாகக் கூறும் வாக்கியங்களுக்குப் போக்கேதெனின், உலகத்தை அநாதியென்றது காரணமாகிய மாயையை நோக்கியென்று துணியப்படும். மாயையை அநாதியென்ப தொக்குமேயன்றி மாயையினால் காரியப்பட்ட வுலகத்தையும் அநாதியென்பதெங்ஙனமெனின், சிருட்டிக்கப்பட்டகாலம் இன்னது என்று வரையறுக்கப் படாமையால் கால நீடிப்பை நோக்கிக்கூறியதாம். இதனைக் கால நீட்சியின் மரிக்குந் தேவர்க்களை அமரரென்பதுபோல் கொள்ளத்தக்கதாம்.

அநாதிமுத்தசித்தாய பெருமான் இவ்வுலகமாதிகளைப் பஞ்சகிருத்தியத்தின்வழி யெதுபயன்கருதி நடத்துகின்றன ரெனின், அநாதியே பாசத்தளை யுண்டிருந்த ஆன்மாக்களை வெளியே விடுத்துத் தனுகரண புவனபோகங்களை அவர்க்குக் கொடுத்துக் காத்

தனிமித்தமே காருண்ணியமிகுதியினால் பஞ்சகிருத்தியஞ் செய்தருளப் பெருமான் திருவுள்ள முவந்ததாமென்று துணியக்கடவர்.

ஆன்மாக்களை அநாதியென்பதெப்படி? கடவுள்சிருட்டித்தாரென்பதில்லையோவெனின், இதுவிவிலியர்முதலினோர் கூற்றாகிப் பாவத்தை விளைத்துஉண்மைபயக்காதாகலின், அங்கீகரிக்கத் தக்கதன்றாம். எங்ஙனமெனின், சிருட்டிக்கப்பட்டன வெல்லாம்நாசத்தையடையுமென்பது அநுபவசித்தமாகையாலும், சிருட்டியாதிகாரியங்களுண்டாவதற்குக்காரணம் ஒன்றுஇருத்தல்வேண்டுமாகலாலும், சிருட்டிக்கப்பட்ட ஆன்மா சித்தாயிருத்தலால் இதன் காரணமும் சித்தாகக்கொள்ளுமிடத்துச் சிருட்டித்த கடவுளையன்றி வேறொருசித்து ஆன்மா தோன்றுவதன்முன் னில்லையாகலின், கடவுளாகிய சித் தொன்றினின்றே ஆன்மசித்துக்கள் காரியப்பட்டனவென்றுகொண்டு, அங்ஙனங்கடவுளைக் காரியப்படுத்திய வேறொருகடவுளை நாட்டவேண்டு மாகலினாலும், இவ்வுணர்ச்சி மாயாவாதமாகவே முற்றுணர்ச்சியிற் றுணிந்து கூறப்படுமாகையால், மேல் மாயவாத நிரசனத்தில் கூறியவற்றை அன்வயித்துத் திரஸ்கரிக்கக்கடவர்.

இங்ஙனநிற்க, கடவுள் ஆன்மாக்களைச் சிருட்டித்தது எதுபயன்கருதி? தம்மை வணங்கவெனின், வணக்கம்விரும்பிய தெற்றுக்கு? அவருடையசித்தமெனின், அவிகாரியென்பதுகூடாது. ஆகவே, பதியிலக்கணங்குன்றும். பதியிலக்கணமிருந்தவாறென்னையெனின், "தன்னையறியாதுவேறுண்டாய்த்தானறியா, தன்னிலொழிவாமுதிப்பீறொன்றுமிலை, சன்னிதிக்கே, அஞ்சுதொழிலாமதனை யானந்தவாக்காலே, கிஞ்சளவுகேட்டலுமாகும்" என்னும் பிரமாணமுகத்தா லறியக்கடவர். வணக்கத்தைவிரும்பியே ஆன்மர்க்களைப் படைத்தவராகத் துணியுமிடத்துச் சமஸ்தான்மாக்களையும் ஒருங்கேஞானிகளாகப்படைத்தல்வேண்டும். அஞ்ஞானிகளையும் படைத்ததனால் அவரைச் சிற்றறிவுஞ் சிறுதொழிலு முடையவரென்று கூற விடந்தருகின்றது. "வேண்டுதல்வேண்டாமையிலானடிசேர்ந்தார்க், கியாண்டுமிடும்பையில" என்னும் உண்மை ஞானோபதேசத்தைச் சிந்தித்துய்யக்கடவர். இப்படிப்பட்ட நியாயங்களால் பசுக்களைப் பதிஓர்காலத்திலுண்டாக்கினரென்னும் மூடஞானத்தை நிரோதஞ்செய்து

கன்மபரிபாகத்தில் வினைக்கீடாக அநுதினித்தியர்களாகும் அப்பசுக்களுக்குத் தனுகரணாதிகளைக்கொடுத்துப் பஞ்சகிருத்தியஞ்செய்து வருகின்றனராமென்று துணியக்கடவர். "ஆதியலச்செம்பினுக்குக் களிம்புதானுமாராயிலதற்கதுவு மனாதியாகும், ஆதியலமூலமலமணுக்கட்கெல்லாமாணவமுமாருயிர்கட்கனாதியாகும், ஆதியலப்பசுபாசமரிக்கவல்ல வமலனுமாருயிர்களுமேயனாதியாகும், ஆதியலவுலகத்தையடக்கித் தன்பாலாக்குவதாம் வினையுமுயிர்க்கனாதியாமே" என்னுஞ் சிவதருமோத்திரத் திருவிருத்தத் தானுங் காண்க.

மலவாசிகளாயுள்ள ஆன்மாக்களை வெளியே விடுத்தமையெவ்வாறெனின், "பசியுவமை-குழந்தைக்குப் பாலிலுண்டாகிய விருப்பம் தாய்கொடுத்த விருப்பமோ குழந்தைக் குள்ள விருப்பமோ வெனின், தாய்கொடுத்த விருப்பமாயின் அவள் கொடுத்த நேரமெல்லாங் கொள்ளவேண்டும். கொள்ளாதபடியால் அவள் கொடுத்தவிருப்பமன்று. குழந்தைக்குள்ள விருப்பமாயின் எங்கேரமுங் குடிக்கவேண்டும். அவ்வாறு குடியாதபடியால் குழந்தைக்குள்ள விருப்பமுமன்று. இனிச்சித்தாந்த மெப்படியெனின், பசியே குழந்தைக்குப் பாலில் விருப்பத்தைக் கொடுத்தது.ஆயின் விருப்பத்தைக் கொடுத்த பசியும் குழைந்தைக்குப் பாலையறிந்தெடுத்துக் கொடுக்க மாட்டாது. விரும்பின குழந்தையும் பாலை யறிந்தெடுத்துக் குடிக்கமாட்டாது. விரும்பப்பட்டபாலும் குழந்தைக்கு வாயில்வந்து புகுதமாட்டாது. ஆகையால் இந்தச் செய்தியைத் தாயானவளறிந்து இரக்கத்தினாலே பாலடையிலே பாலை விட்டுக் கொடுப்பள். இங்ஙனங் குழந்தையைப்போலும் ஆன்மாவுக்குப் பசியைப்போலும் ஆணவம் பாலைப்போலுங் கன்மத்தி லாசையை யெழுப்பத் தாயைப்போலும் பரமசிவம் பாலடையைப்போலுஞ் சரீரத்தைக்கொடுத் தனுபவிக்கச்செய்வரோன வுணர்க"

"வியாதியுவமை – பிணியாளனுக்கு மருந்தில் உண்டாகியவிருப்பம் வைத்தியன் கொடுத்த விருப்பமோ பிணியாளனுக்குள்ள விருப்பமோவெனின், வைத்தியன் கொடுத்த விருப்பமாயின் மருந்துகொடுத்த நேரமெல்லாங்கொள்ளவேண்டும். கொள்ளாதபடியால் அவன் கொடுத்தவிருப்பமன்று. பிணியாளனுக்குள்ள விருப்பமாயின் எங்நேரமுங் கொள்ள வேண்டும். கொள்ளாதப

டியால் பிணியாளனுக்குள்ள விருப்பமுமன்று. இனி யுண்மை யெவ்வாறெனின், பிணியே பிணியாளனுக்கு மருந்தில் விருப்பத்தைக் கொடுத்தது. ஆயின், விருப்பத்தைக் கொடுத்த பிணியும் அவனுக்கு மருந்தை யறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும்பப்பட்ட மருந்தும் அவன் வாயில் வந்துபுகமாட்டாது. விரும்பின பிணியாளனும் மருந்தை யறிந்தெடுத்துப் புசியான். ஆகையால், இதனை வைத்தியனறிந்து இரக்கத்தினாலே மருந்தை யொருபாத்திரத்திட்டுக் கொடுத்துக் கொள்ளச் செய்வன். இவ்வாறே பிணியாளனை யொத்த ஆன்மாவுக்குப் பிணியைப்போலும் ஆணவம் மருந்தைப் போன்ற கன்மத்தில் விருப்பத்தை யுண்டாக்க வைத்தியனை யொத்த கருணாநிதியாகிய சிவபெருமான் தமது காருண்யத்தால் பாத்திரத்தைப் போலுஞ் சரீரத்தைககொடுத் தனுபவிக்கச் செய்வனென அறிக"

இவ்வாறு கூறியிருக்கும் ஆன்றோரது அநுபவநீயமான அருள்வாக்கியங்களை யாராய்ந்துய்யப் பெறுவதேநமது கடமையாகும். ஆன்மாக்களை யெடுத்து வெளியே விடுத்தகாலமே சிருட்டியாகத் துணியுமிடத்துச் சிருட்டிக்குப் பூர்வமிருந்த அனுபவமெவ்வாறெனின், ஆணவகேவலத்திலே ஆன்மாக்கள் கிடந்தன வாகலின், சுழுத்தியனுபவமாய்க்கொள்ளப்படும். சிருட்டி யாரம்பகால மெப்போதெனின், சீவர்களுக்குக் கன்மத்திலாசை யெழுந்ததாகிய சிருட்டிகாலமெதுவென்று விசாரிப்பதற்கு முன்னமேதானே சீவர்கடோன்றிய காலமெது? பாசந்தோன்றிய காலமெது பதியுண்டாகிய காலமெது? என்றும் விசாரிக்கவேண்டிவருமாகையால் அது பொருந்தாதென்க.

மாயையை முன்னர் ஏகமாகக்கூறி ஆணவமலம் கன்மத்திலாசையை யெழுப்பியதென்று அம்மாயையை மீண்டும் பலவாகக் கூறுவதென்னையெனின், மாயை-மலம் - பந்தம் - பாசமாதிகளாக வழங்குஞ் சொல் வேறுபாடொழியப் பொருள் வேறுபாடின்றியொன்றேயாய் அநாதியிலேயே ஆன்மாவைப் பற்றியுள்ள வப்பாசத்தை ஆணவம்-கன்மம்-மாயை யென்னும் வேறு வேறான மூன்று மலங்களாகப் பிரிந்திருக்குமென்று தம்பிரானாகமங்கள் கூறும். இவற்றை யுபதேசமுகத்தாற் றெளிந்திடுக.

ஆணவமலம் கன்மத்திலாசையை யெழுப்பிய தென்றுகொள்ளுமிடத்து ஆணவமலஞ் சடமாகையால் எப்படித்தானே யியங்கிற்றெனின், மலஞ் சடமென்பது திண்ணமாகித் தானே யியங்கப்பெறாதாயினும் அனாதியே சித்தாகிய ஆன்மாவைப்பற்றியுள்ளதாகையால் ஜடவத்தாயுள்ள நஞ்சுமுதலியவைகள் அறிவோடுகூடியவுயிரைக்கலந்து வெதுப்புதல் போல மேலியக்கம் அம்மலத்திற்குங்கூறப்பட்டது.

ஆன்மாக்களை வெளியே விடுத்தமை பெருமானுடைய கருணையிருந்த வாறென்றுகொள்ளுமிடத்து, மீண்டு மவ்வான்மாக்கள் சுகதுக்கச் சோர்விலலைவ தென்னையெனின், புண்ணிய பாவங்க ளிருந்தவாறும். புண்ணி பாவங்கள் வந்தவா றெங்ஙனமெனின், இதாகிதங்கள் புரிந்தவாறும். சுதந்தர அறிவுடையாரல்லராக ஆன்மாக்களைச் சிவாகமங்கள் கூறுமிடத்து அவர்பால் குற்றஞ் சுமத்துவ தென்னையெனின், பசு பட்சி மிருகங்களைச் சித்தாகக்கொள்ளு மவதரம் புல் பூண்டு முதலியவைகளைச் சடமாகவும், மானிடர்களைச் சித்தாகக்கொள்ளு மவதரம் பசு பட்சி மிருகங்களைச் சடமாகவுங்கொள்ள விடமுண்டாதல்போல் கடவுளைச்சித்தாக விவகரிக்கு மவதரம் ஆன்மாக்களைச் சடரூபிகளாகக் கூற விடமுண்டாமேயன்றிப் பதி அனாதிமல முத்த சித்தும், பசு அனாதிமலபெத்தசித்தும், பதி பசுவுக்குப் பரமுத்திவியத்திக்குறி அனுக்கிரகம் பண்ணுஞ் சித்தும், பசு அவ்வனுக்கிரகத்தைப் பதியினிடத்தினின்றும் பெறுஞ்சித்தும்,பதி சிருட்டி திதி சங்கார திரோபவ பதமுத்தி யனுக்கிரகங்களைப் பண்ணுஞ்சித்தும், பசு அந்தப் பஞ்சகிருத்திய பாதந்திரத்தி லகப்பட்டுக் கட்டுண்ணுஞ் சித்தும், பதி ஒருவராலறிவிக்கப்படாது தானேயறியுஞ்சித்தும், பசு சிற்றறிவு பேரறிவுகளா லுணர்த்துவிக்க யோக்கியமாகுஞ் சித்துமென்றேதெளியக்கடவர். "சிவன்சிவனென்றிரண்டுஞ் சித்தொன்றுமென்னிற் சிவனருட்சித்திவனருளைச் சேருஞ்சித்திவனானன், பவங்கெடுபுத்தி முத்திபண்ணுஞ்சித்தவற்றிற் படியுஞ்சித்தறிவிக்கப்படுஞ் சித்தமிவன்று, னவன்றானேயறியுஞ்சித்தாதலி னிரண்டுமணைந்தாலு மொன்றாகாதனியமாயிருக்கு, மிவன்றானும்புத்தியுஞ்சித்திவனோமோபுத்தியிது வசித்தென்றிடிலவனுக்கிவனுமசித்தாமே" என்னும் பிரமாணமுகத்தானுமறிக. அரசனுடைய நீதிகளையுணர்த்துஞ் சட்டங்களை அறிவுடையோராகியநாமே அர

சனால் கொடுக்கப்பெற்று அவற்றிற் கூறியிருக்கும் விதிவிலக்
குகளைப் பற்றி யொழுகு கின்றேமன்றி அறிவில்லாதன வாகிய
மிருகங்களுக் கமையாவாறுபோல் கடவுளால் தரப்பெற்றசட்ட
ங்கள் ஆன்மாக்களைச் சுதந்தர வினராகக்கொள்ளு மிடத்துப் பய
னற்றனவாகும். அங்ஙனமேல், சட்டங்களைக்கொடுத்த பதியும்
அறிவினனாகவேண்டும். அங்ஙனந்துணிவார்க்கு நரகப்பிராப்தம்
சித்தமாகலின், சத்தாயுள்ளசிவத்தையும், அசத்தாயுள்ளமலத்தை
யும் அறியுந்தன்மையால் சதசத்தென்று சொல்லப்படும்பசுவுக்கு
வேதசிவாகமங்களை யுணர்த்தினரென்பது கண்டுகொள்க. "அறிந்த
விடத்தின்பதன்பமாசாததவு, மறந்தவிடத்தின்பமயச்சும்-அறிந்த, அவியறிவு
நீயென்றனத்தவிதானந்த, மூலையமூசமுண்டமூன்" என்றுகூறியகண்ணு
டையவள்ளலார் திருவாக்கானுமுணர்க. பதியறிவு-ஆணறிவென்
றும், பாசவறிவு—பெண்ணறிவென்றும், இவ்விருவகையும் போ
லன்றிப் பதியறிவோடு கூடிப் பதியறிவாயும், பாசவறிவோடுகூ
டிப் பாசவறிவாயும், ஆண்வடிவும் பெண்வடிவுந் தழுவிநிற்றலிற்
பசுவறிவை அலியறிவென்றுங் கூறியுள்ள விசிட்டத்தினால் ஆன்
மவிலக்கணத்தைப் பகுத்துணர்வாராக.

*

*

மேல்நியாயங்களால் ஆன்மாக்கள் சித்தேயாகி யிருந்தும்,
சிவாக்ஞையை மீறிநடந்தமையால் புண்ணிய பாவத் தொடக்கில
லைந்து மொத்துண்பா ரென்பது போதரும். பாவபுண்ணியத்
தொடக்கில் ஆன்மாக்கள் மொத்துண்பாராயின் அவனுடைய க
ருணையிரு(வி)த் தென்செயவெனின், அங்ஙனம் மொத்துண்ணுதலாகி
யவினைப் பாகத்தை யுடனிருந்தூட்டி வைத்தற்கேயாம். புண்ணி
யபாவங்களைச் செய்யுமிடத்தும், சொர்க்க நரகங்களை யனுபவிக்
குமிடத்தும், ஆன்மாக்களை விட்டு நீங்காதவனாகவே பெருமான்
இசைவிப்ப னென்பது உண்மைநூற்கருத்தாம். எமதுபெருங்கரு
ணைத் தோன்றலாராகிய ஸ்ரீமந்மாணிக்கவாசகசுவாமிகள் திருவா
ய்மலர்ந்தருளிய "இன்பமுந்துன்பமு மில்லானேயுள்ளானே" "சோதிய
னேதுன்னிருளே" என்றற்றொடக்கத்து அற்புதவாக்கியங்களினானுந்
துணிக. உள்ளானேயென்றது பிள்ளைக்குவந்தநோய் தாய்க்கு
வந்ததுபோலாம். துன்னிருளேயென்றது தன்வியாபகத்துள்விர
விய வியாத்தியாகிய உயிரை வியாப்பியங்கொண்டு வர்த்திக்குமது
பற்றியாம். ஈண்டுப்போந்த நியாயங்களால் "அவனன்றியோரணுவும

சையாது" என்றற்றொடக்கத்துச் சிவானுபூதிமான்கள் திருவாக்குண்மையைத்தெளிந்து, பாவபுண்ணியங்களைச்செய்வார் சிவர்க்களேயென்றும், பதிதுணைக்காரணமொன்றும் அறிந்திடுக.

பாவச்செயல்களை யுடனிருந்தூட்டுவது எங்ஙனமெனின், பாவங்களையனுபவித் தொழிக்கச்செய்வது காருண்யமேயானபடியால் பாவச்செய்கையைப் பெருமானிடத் தேற்றிக் கூறுதல்பெரும்பிழையாம். "இந்நிலவுமமானுடருக்கேயன்றியெண்ணிலா-மன்னுயிர்க்குமித்தவழக்கேயாய்-முன்னுடைய-நாளுள்வரையிலுடல்பிரித்துநல்வினைக்கண்-வாளுளின்மாலாயயனுகி-நீணகர்-வானுடர்கோமுதலாய் வந்தபெரும்பதத்துதானுவித்தானலம்பெறுநாட்-டான்மாள-வெற்றிக்கடுந்தூதர்வேகத்துடன்வந்து-பற்றித்தம் வெங்குருவின்பாற் காட்ட-விற்றைக்கு-மில்லையோபாவிபிறவாமையென்றெடுத்து-நல்லதோரின்சொனடுவாகச்-சொல்லியிவர்-செய்திக்குத்தக்கசெயலுறுத்துவீரொன்று-வெய்தற்றுரைக்க விடைகொண்டு-மையறருஞ்-செக்கிலிடைத்திரித்துந் தீவாயிலிட்டெரித்துந்-தக்கநெருப்புத்தூண்டமூழ்வித்து-மிக்கோங்கு-நாராசங்காச்சிச்செவிமடுத்துநாவரிந்து-மீராவுன்னூனைத்தின்னென்றடித்தும்-பேராம-லங்காழ்நரகத் தழுத்துவித்தும்பின்னுந்தும் - வெங்கோபமாருதவேட்கையராய்-இங்கொருநா - ளெண்ணிமுதல்காணுதவின்னற்கடுநரகம்-பன்னெடுநாட்செல்லும்பணிகொண்டு-முன்னுடிக்-கண்டுகடன்கழித்தல்காரியமாமென்றெண்ணிக்-கொண்டுவருகோயின்குதிப்பதிவார்-மண்டெரியிற்-காச்சிச்சுவடறுக்கக்கண்ணூரிக்கநன்விதிய- மீத்துத்தாய்தந்தை தமரின்புறுதல்-வாய்த்தநெறி-யோடியதேரின்சீழுயிர்போனகலறுமேல - நீடுபெரும்பாவமின்றேகீன்குமென-வாடித்தன்-மைந்தனையுமூர்ந்தோன் வழக்கேழக்காக - நஞ்சனையசிந்தைநமன்றூதர்-வெஞ்சினத்தா-லல்லலுறுத்த மருநரகங்கண்டுநீர்க்க-வல்லகருணைமறம்போற்றி" என்று கூறியுள்ள வுண்மையானுமறிக.

தம்முடைய ஆணையை மீறுவார்கள் ஆன்மாக்களென்றியற்கை ஞானத்தையுணரும் பெருமான் வேதசிவாகமங்களை யேன் விதித்தல்வேண்டும்? அப்படி விதித்தமையைமீறிய ஆன்மாக்களைத்தண்டனைக்குட்படுத்துவது எப்படி? எனின், பசுக்களுக்குக்கன்மத்தினளவேசிவனுடைய பஞ்சகிருத்தியமென்பது மேலிடங்களில் விவரித்துள்ளேமாகையால், எல்லாம் அறுதிகன்மமிருந்தவாறுமென்றறிக. "அநாதியேலமைவின்றெனின்மலமாயைகன்ம மணுச்சிவ,னநாதிகன்மமணுக்கள்செய்யவதிந்துகன்மமுடற்செயா, வநாதிகாரியமாமுடற்களசேதனம் மனையாவதின், தநாதியாதியமைக்கவேண்டு மமைப்பிறேடு மாதியே" என்னுந்திருவாக்கானுந் தெளிந்திடுவாராக.

எல்லாம் அநாதிசித்தமாகவே வருமென்று துணியுமிடத்து எல்லாங்கற்பிதமாத்திரமாக வுள்ளனவென்றும், பரமார்த்தத்தி லொன்றுமில்லையென்றும், விவகாரத்திலுண்டென்றும், வஸ்து வேயெல்லாமென்றும், வஸ்துவொன்றேசத்தியமென்றும், சிலநூல்கள் கூறுவதென்னையெனின், மேல்வாக்கியங்களே யொன்றை யொன்றுமறுத்து உதைத்துக்கொள்ளுகிறதாகையால், "மிண்டிய மாயாவாதமென்னுஞ், சண்டமாருதஞ்சுழித்தடித்தார்த்து" என்றுவாதவூரடிகள்அருளியவுண்மையை யுணர்ந்தவர்கள் மயங்காரென்பதே துணிபு. இதனால், எல்லாம்சத்தியமாயுள்ளன வென்றுகாட்டப்பட்டது. இங்கேயெல்லாமென்றது பதிபசுபாசங்களிலடங்குமாகையால் பதிபசுபாசங்களை அநாதிசித்தமென்று வேதாகமங்கள்கூறுமென்பதுசர்வசம்மதம். மூன்றுபொருள் சித்தமாயிருக்குமாயின் சமானப்பொருளாமேயெனின், ஒன்றையொன்றுபற்றியனவாய்க் குணிகுணங்களாய் வேறுபாடின்மை கொண்டு விளங்குமதனால் சமானப்பொருள்களாகாவாம்.

கடலைப்போலும்சிவம், நீரைப்போலும் ஆன்மா, உவரைப் போலும்மலம் என்றுபிரமாணங்கள் கூறுநுட்பமறியாமல் ஒன்றென்று கூறுமுன்மத்த வுரைகுழறுபடையேயாம். "கடல்சிவநீரான்மாவுப்புமலங்கன்மம்" என்னும்ஒழிவிலொடுக்கத் துரையானுந்தெளிக. கடலென்னுமவசரத்தில் நீரடக்கமத னுட்கூறவிருக்கவும் வேறென்பதெங்ஙனமெனின், கடல்வற்றியது, குளம்வற்றியது, குளம்வெட்டினேன், கிணறுஎடுத்தேன், என்றற்றொடக்கத்துவாக்கியங்களால் நீரைவேறுபிரித் துரைக்கவிட முண்டாயிருத்தலை யறிந்து வாய்மூடக்கடவர். இதனால் சிவம்வியாபகமாயும், சிவன் வியாத்தியாயும், பாசம் வியாப்பியமாயுநிற்குமென்பது பெற்றாம். "வியாபகமாதிவிரிக்குங்காலை, வியாபகமேலிடுநிறைவாமென்ப, வியாத்திசமநிறைவாகும்விளம்பின், வியாப்பியமொன்றின் மிடைந்தநிறைவே, வியாபகங்கடலேவியாத்தியந்நீரே, வியாப்பியமுவரெனவிளக்கியநூலே, வியாபகமீசன்வியாத்தியாருயிர், வியாப்பியமலமெனவிக்கியநூலே" என்னும் பிரமாணமுகத்தானுந் தெளிந்திடுக.

இங்ஙனநிற்க, ஒன்றெனவும் இரண்டெனவும் பிரியாவாறு ஆன்மாவும் பரமான்மாவும் அமைதல்நோக்கி அத்துவித மென்றுவேதங்கள் கூறுமுண்மையை, இரண்டாவதில்லாமை யுடைய

து என்றுபொருள்கொண்டு மயங்கிக்கிடப்பார் வினையிருந்தவாறு அந்தோகொடிது!கொடிது!!அத்துவிதமென்றது ஒன்றுமிரண்டுமல்லாமையாம். உயிருமெய்யுங் கலந்திருப்பதுபோல் ஆன்மாவும்பரமான்மாவும் விரவிநிற்கு முண்மையையறியாமல் விசாரஹீனத்தினால் உயிருமெய்யுமொன்றே யென்றும், இரண்டாயின் சமானப்பொருளாமே யென்றுஞ் சொல்லித்திரிவாரை நம்மில்வேறு பேரிட்டழைப்பதே யுத்தமம். நித்தத்தினால் சமானமன்றோ வெனின், சலத்திலேகிடக்குந்தவளையை அரியென்னும்பெயராலழைக்குமதுகொண்டு க்ஷீராப்திசயனராகிய விட்டுணுவையும் அரியென்னும் பெயருடையராகக் கருதிச்சமாதானங் கூறும்விநோதவழக்காம்.

ஆயின்,வேதங்களிற் பிரமமொன்றே சத்தியமென்று கூறுவதென்னை யெனின், பிரமத்தைப்போல் வேறொரு பிரமம் இல்லையென்பதே அதனது துணிவன்றி அப்பிரமத்துக்கு வேறாக ஆன்மாக்களில்லை யென்பது கருத்தன்றாம். "ஒன்றெனமறைக ளெல்லாமுரைத்திடவுயிர்களொன்றி, நின்றனனென்றுபன்மைநிகழ்த்துவதென்னை யென்னி,னன்றவைபதிதானொன்றென்றறையுமக்கரங்கடோறுஞ்,சென்றிடுமகரம் போலநின்றனன்சிவனுஞ்சேர்ந்தே" என்னுஞ் சித்தியாருள்ளுங் கண்டுணர்க.இதனால் எழுத்துக்கடோறும் அகரஞ் சென்றிருப்பது போல் ஆன்மாக்கடோறும் சிவம் வியாபித்துடையதுஎன்றுநிச்சயிக்கப்பட்டது. எழுத்துக்களை அகரம்இயக்குவதெங்ஙனமெனின்,அகரமுதல் ஔகாரமீறான பேதங்களாய் மெய்களின்மேலேறிவர்த்திப்பதனாலென்க. அகரமியக்குவது எல்லாவெழுத்துக்களையுமென்று பொதுப்படக்கூறியிருக்கவும், உயர்களை யொழித்து மெய்களைமாத்திரமீண்டுக்கூறியதென்னையெனின், எழுத்துக்களை யியக்குவது அகரமொன்றேயாகக்கூறியிருக்கவும், மற்றையுயிர்களும் அகரத்தைப்போலவே மெய்களை வர்த்திப்பிக்குந் தன்மையைக்காண்கின்றோமாகையால், அவ்வுயிர்ப்பேதங்கள் அகரமாத்திர மாகவே கொள்ளப்படும். "அகரமுதலவெழுத்தெல்லாம்" என்றதும் இவ்வுண்மை கருதியென்க. மெய்கள் அகரத்தில் வந்தனவாகக்கொள்ளக் கூடாதோவெனின், கூடாது. எங்ஙனமெனின், உயர்கள் ஏறிநடத்துகிறசாதியும், மெய்கள் தாங்கிச்சுமக்கிற சாதியுமாகி விளங்கலால் சுமக்கிறசாதி எப்படி ஏறுகிற சாதியாகும்? பாகனுங் கு

திரையும் ஒருசாதியாகக்கண்ட அனுபவிகளுக்கு உயிருமெய்யுமொன்றாகுமேயல்லது பாகன்வேறு குதிரைவேறு என்று தெளிவார்க்கு உயிர்வேறும் மெய்வேறும் ஆக இரண்டு தனித்த சாதிகளுடென்றேகொள்ளப்படும். மெய்கள் அகரவுயிரினின்றும் வந்தனவாகக்கொள்ளுமிடத்துப் பொன்னினின்றும் வந்த பூஷணங்கள் மாற்றுரைகளில் தாழாதுநிற்றல்போல அகரத்தைப்போலவேஎழுத்துக்களிலேறியியங்கப்பண்ணும் ஆற்றலுடையனவாயிருத்தல் வேண்டும். அகரமும், அதன்வருக்கமான ஔகாரமீறானவுயிர்களும் இயப்பிக்க. வியங்குவனவாகிய மெய்களை அவ்வகரமேயென்றுநாம் எந்தமதியால் சொல்லத்துணிவோம்? இவ்வுண்மை நன்கு விளங்குமாறு தொல்காப்பியம் பிறப்பியற் சூத்திரம்வருமாறு.

"(க) அ ஆ ஆயிரண்டங்காந்தியிலும்.

இவை அங்காத்தலையுடையனவாய்ப்பிறக்குமென்பதாம்.

(உ) இ ஈ எ ஏ ஐயென இசைக்கும்
அப்பாலைந்தும் அவற்றோரன்ன-அவைதாம்
அண்பன்முதலுவிளிம்புறலுடைய.

இவை வாய் திறந்தலுடனே அண்பல்லை நாக்கடியினது ஓரமானதுபொருந்தப் பிறக்குமென்பதாம்.

(௩) உ ஊ ஒ ஓ ஔ வெனவிசைக்கும்
அப்பாலைந்துமிதழ்குவிந்தியலும்.

இவை வாய்திறத்தலுடனே உதடுகளின் குவிதலாற்பிறக்குமென்பதாம்.

(௪) ககாரஙகார முதலுவண்ணம்.

இவை நாக்கினடி மேல்வாயடியைப் பொருந்தப்பிறக்குமென்பதாம்.

(௫) சகாரஞகாரமிடை நாவண்ணம்.

இவை நாக்கினடுமேல்வாய் நடுவைப்பொருந்தப்பிறக்குமென்பதாம்.

(௬) டகாரணகார நுனிநாவண்ணம்.

இவை நாக்கின்கடை மேல் வாய்க்கடையைப் பொருந்தப்பிறக்குமென்பதாம்.

(௭) அண்ணநண்ணிய பன்முதன்மருங்கின்
நாநுனிபரந்துமெய்யுறவொற்றத்
தாமினிதுபிறக்குந்தகாரநகாரம்.

இவை அண்பல்லினது அடியை நாக்கு நுனிபொருந்தப்பிறக்குமென்பதாம்.

(அ) அண்ணநுனிநா வண்ணமொற்ற
றஃகானஃகானுயிரண்டும்பிறக்கும்.

இவை மேல் வாயை நாக்குநுனி மிகப்பொருந்தப் பிறக்குமென்பதாம்.

(கூ) நுனிநாவணரியண்ணம்வருட
ரகாரழகாரமா யிரண்டும்பிறக்கும்.

இவை மேல் வாய்க்கடையை நாக்குநுனி தடவப் பிறக்குமென்பதாம்.

(ய) நாவிளிம்புவீங்கி யண்பன்முதலுற
ஆவயினண்ணம் ஒற்றவும்வருடவும்
லகாரளகாரமாயிரண்டும்பிறக்கும்.

இவை அண்பல்லடியை நாவோரமானது தடித்து நெருங்கவும், மேல் வாயை நாவோரமானது தடவவும் முறையே பிறக்குமென்பதாம்.

(யக) இதழியைந்துபிறக்கும் பகாரமகாரம்.

இவை மேலுதடுங் கீழுதடும் பொருந்தப் பிறக்கு மென்பதாம்.

(யஉ) பல்லிதழியையவகாரம்பிறக்கும்.

இஃது மேற் பல்லைக்கீழுதடானது பொருந்தப் பிறக்குமென்பதாம்.

(யங) அண்ணஞ்சேர்ந்தமிடற்றெழுவளியிசை
கண்ணுற்றடையயகாரம்பிறக்கும்.

இஃது நாக்கினடி மேல் வாயடியைப் பொருந்தப் பிறக்குமென்பததாம்,,

ஈண்டுக்கூறியவற்றுள் எத்துணையும் மெய்களுக்கு உயிர்வருக்கத்துப் பிறப்பில்லையென்பது நாட்டப்பட்ட தாகலின், அகரமேயெல்லா வெழுத்துக்களு மாயினவென்னும் அஞ்ஞான விருளினின்று நீங்கி உயிர்கள் மெய்களை யியக்குவதுபோல் சிவன் ஆன்மாக்களை யியக்குமென்று தெளிவது விவேகிகள் மரபாம். உயிர்களைப் பன்மையாகவும், சிவனை யொருமையாகவும் உவமித்துக்கூறுவ தெங்ஙனமெனின், அகரவுயிரொன்றே பலபடவிரிந்ததல்லது அவைகள் வேறல்லாமையால், சிவனேடுவமை கூறப்பட்டது. பலபடவிரிந்த அகரத்தோடு ஏகத்துவ நிருமலத்துவமுள்ள சிவத்தை யெப்படிப்பொருந்தக் கூறுவதெனின், பலபடவிரிந்த எ

ழுத்துக்கள் பலவிகாரகுணங்களை யடையாது அகரமாத்திரமாக
வே நிற்றலான் மேலுவமானம் பிழைத்தன்றாம்.

அகரம் விரிந்ததுபோல் சிவமும் விரிந்திருக்க வேண்டுமே
யெனின், "சிவஞ்சத்தி நாதம்விந்து சதாசிவன்றிகழுமீச, னுவந்தருளுருத்
திரன்றான் மாலயனொன்றி னொன்றாய்ப், பவந்தருமருவநாலிங் குருவநாலு
பயமொன்றாய், நவந்தருபேதமாக நாதனேநடிப்பனென்பர்,, என்றற்றொட
க்கத்துச் சந்தான குரவர் திருவாக்குண்மையை மெய்யன்போடு
ஞ் சித்திக்கக்கடவர். இப்படிப்பெருமான் றிருவுள்ளமுவந்தது
ஆன்மாக்களுடைய பரிபாக நெகிழ்ச்சியளவே யன்றி உண்மையி
ல் அணுத்துணையும் பேதமின் றென்பதாம். இதுகாறுங்காட்டிவந்
தநியாயங்களால் அகரமும் மற்றையுயிர்களுமொன்றென்றும், உ
யிர்களும் மெய்களும் வேறென்றும், சிவமும் மற்றைமூர்த்தங்க
ளும் ஒன்றென்றும், சிவமூர்த்தங்களும், ஆன்மாக்களும்வேறெ
ன்றும் நன்குவிளங்குகிறதாகையால், ஆன்மாக்கள் சிவத்தினி
ன்றும் வந்தனவென்னும் விரோதனுனம்விலகிப்போயிற்றென்க.

வாயைமூடிகொண்டுச்சரிக்கு மோரெழுத்து மில்லை யாகலி
னானும், மெய்களும் உயிரைப்போலவே அங்காத்தலைப்பெற்று வ
ருதலினானும், எல்லாவெழுத்துக்களும்அகரத்தில்வந்தனவாகவே
கொள்ளுவாமெனின், மெய்கள் தாமேயியங்கும் ஆற்றலைப்பெறா
து உயிர்களைத்துணைகொண்டு அங்காத்தலைப்பெற்று வரு முண்
மையையறியாமல், மெய்கள்தாமே அங்காந்து வருமென்பது அறி
யாமையேயாம். (இக்) என்றபோதினும் (க) என்றபோதினும் உ
யிர்த்துணையை முன்னும்பின்னுமாகக்கொண்டு தன்னொலியைக்கா
ட்டிநின்றமெய்யை, அதனை ஒலிப்பித்த வுயிர்ப்பேதமேயென்ப
துகாலத்திரயத்தும் மேலோரங்கீகரியாரென்க. இதனால் மெய்க
ளும்உயிர்களும் தனித்தனிவேறாகவேயொலிகளையுடையனவென்
றும், மெய்கள் ஒலிப்பித்தாலொலிக்குஞ் சாதியென்றும், உயிர்க
ள்தாமேயொலிக்குஞ்சாதியென்றும், உயிர்கள் மெய்களாகா வெ
ன்றும், மெய்கள் உயிர்களாகாவென்றும் காட்டப்பட்டது. இதனை
த்திருட்டாந்த பூர்வகமாய்க்கூறுமிடத்துஒற்றொலியைக்கண்ணொ
ளியென்றும், உயிரொலியைக் கதிரொளியென்றுங் கொண்டுண
ர்க. கண்ணுக்கொளியிருந்துங் கதிரொளியைப் பெறாமல்முன்னே
தோன்று மவற்றைக்காணக்கூடாவாறுபோல மெய்யெழுத்துகள்

தாமே யொலிக்குஞ் சத்தியை யடையாது உயிர்களொலிப்பிக்க வொலிக்கு மியலையுடையனவென்க. கண்ணுக்கொளியைத் தருவதுங் கதிரொளிதானே யெனின், கண்ணில்லாதவன் மாட்டுப்பயன் படாமையால்அதுபொருந்தாதென்க. இவற்றைச் சிவசீவர்களிடத்தும் அன்வயித்துக்கொள்ளக்கடவர். இதனால் சிவன் ஆன்மாக்களையிசைவிக்கு மென்பதுகாட்டப்பட்டது. "விற்பிரம்பாலுற்றறவடுமேவ வுலகெங்குநிறை-சிற்பரனே யெய்வஞ்சிவசிவா-சொற்சிறந்த-அகரமுதலவெழுத்தெல்லாமாதி-பகவன்முதற்றேயுலகு" என்னுமான்றோர்திருவாக்காலுமுணர்க. இவ்வுண்மையையறியாமல் அகரமாகிய முதலினின்றும் எல்லாவெழுத்துக்களும் பிறந்தனவென்று நாயனார் திருவாக்கைத் திரிபுணர்ச்சி கொண்டுமயங்குவது பரிபாகத்தாழ்ச்சியேயாம். "தேவர்குறளுந் திருநான்மறைமுடிவும்-மூவர்தமிழுமுனிமொழியுங்-கோவைத்-திருவாசகமுந்திருமூலர்சொல்லும் - ஒருவாசகமென்றுணர்" என்று நிச்சயித்துக்கூறிய ஔவையார் திருவாக்கால் இத்திருவெண்பாவிற் கண்ட நூன் முடிபுகளெல்லாம் ஓரே சித்தாந்தத்தை யுடையன வென்று காட்டப்படுதலின், ஆன்மாவேறு சிவம் வேறு என்றுண்மையை யுணர்த்துந்தேவார திருவாசகங்களுக்கு மாறாக ஆன்மாவேசிவம் என்று திருக்குறளுணர்த்து மென்பது முரண்பட்டழியுமென்க.

இப்படியே வேதங்களிலுள்ள வொவ்வொரு வாக்கியங்களையும் அபார்த்தங்கொண்டு வேதாந்திகளெனப் பெயர்பூண்டு திரிவார் உண்மைக்கு விரோதிகளானபடியால் அவர்கூற்றைமறுத்துக்கூறும் உண்மைவாக்கியங்கள் வருமாறு.

"ஊடலிருவர்க்கொழியவுண்டுகொலொருத்தர்க்
கேடிலையுமேவலெழுவாயுமியனூலு
மூடருணரார்மலைவுமன்றெடுபின்னென்றே
தேடுவர்சிவன்றனையுமாதரவுசெய்தே"

"பொற்றைசயுடனாலுமறவேயருள்புரிந்த
தத்துவமசிப்பொருடருங்குரவனொன்
றத்துவதயத்தலமாகினையறுத்தே
சித்திபெறுமோபிரமமென்கொலிதசெப்பாய்"

"அத்துவிதமென்றசொலுமுன்மறையினுய்க
அத்துவயமென்றசொலுமம்முறையினுய்க
முத்தனினையற்றொருவனென்றுமொழிவேதத்
தத்துமறியாரமலனுவிமலமென்பார்"

வேறு.

"ஏகமன்றிறைவனுவியிரண்டுமன்றபேதமென்றே
யாகமவேதமெல்லாமயிக்கியபதத்திருலே
யூகமுள்ளவர்தமுள்ளத்துணர்த்திடும்பிரத்தியாயத்
தாகமுமற்றென்றென்பரயிக்கியபதார்த்தமுணர்"

என்று சைவநூல்களெல்லாம் கூறுமாகையால் இவற்றை யுள்ளபடி ஞானசாரியரிடஞ் சென்றுதேர்ந்தவர்கள் அவலமார்க் கங்களை யணுத்துணையும் மதியாரென்க. இதனால் பதிபசுபாசங் கள் மூன்றும் சத்தியப்பொருளாமென்று காட்டப்பட்டது.

பதிபசுபாசங்கள் அநாதி நித்தமாயின் பஞ்சகிருத்தியம் காருண்ணியத்தை யதிட்டித்துடையதென்று மேலிடங்களில் விவரித்துள்ளநியாயங்களால் எல்லாவுயிர்களும் அநாதியேமுத்தியடைந்திருக்கவேண்டுமேயெனின், பெருமானுடையகருணையிருந்தவாறுபஞ்சகிருத்தியமென்பது ஆன்மாக்களநாதி கன்மமிருந்தவாறன்றிக்கன்மமொழிந்து காருண்ணியமில்லையாம். கன்மத்தைக்காட்டாதுகாருண்ணியத்தைப் பிரதானமாகக்காட்டுவது அப்பெருமானிடம்வைத்திருக்கும் அன்புபாராட்டி யென்க.

ஆன்மாக்கள் நித்தியமாகலானும், முத்தியடைந்தோர்கள்பிறப்பின்கண் திரும்பாமையானும் அநாதியேபஞ்சகிருத்தியம் ஒழியவேண்டுமேயெனின், "பிறந்தநாண்மேலும் பிறக்குநாள்போலுந்-துறந்தோர்துறப்போர்தொகை" என்னும் பிரமாண முகத்தால் மேலாட்சேபம் நிரஸ்தமாமென்க.

சிருட்டிக்கொருவர் முத்தியடையினும் எண்ணிறந்த சிருட்டியில் எண்ணிறந்தவான்மாக்களும் முத்தியடைவார்கள். முன்னிறந்தகாலத்திற் களவின்மையால் அநாதியேபஞ்சகிருத்தியமொழிந்திருக்கவேண்டும். அங்ஙனமொழியாது பஞ்சகிருத்தியம்வர்த்திப்பதெங்ஙனமெனின், இது வேதாகமத்தில்லாத விநோதவிசித்திரமாம். ஆன்மாக்களோடுகாலவொழிவையும்விசாரித்தால் மேலாட்சேபத்திற்குச்சமாதானம் பிறக்குமாகையால் எண்ணிறந்தசிருட்டியில் எண்ணிறந்தவான்மாக்க ளொழிந்திருக்கவேண்டுமேயென்பது பரிபாகத்தாழ்ச்சியாம். காலவொழிவே ஆன்மாக்களொழிவென்றுதெளியத்தக்கதாம். காலம் ஒழியுமோவெனின், குருமுக

த்தாலுணர்க. இங்கேகூறப்பட்டுள்ள சமாதானமே மேல்விஷயத்தைப்பற்றிய மற்றைச்சாமானியகேள்விகட்கும் உத்தரமாமென்பதை விவேகித்துணர்வாராக.

பாசம் அநாதிநித்தமாயின் அது உயிரைவிட்டகலுமாறெங்ஙனம்? பாலில்வெண்மைபோற் சகசமாமெனின், பாலிலேவெண்மையையொத்த சகசமுமல்மால், வெள்ளைப் புடைவையில் வந்தேறிய அழுக்குப்போல் ஆகந்துகமுமல்லாமல், தண்டுலத்தைப்பற்றிய முளைதவிடுமிபோலொத்த சகசமென்றுதெளிந்து, ஆன்மாவுக்கு மலநாசத்தை மதித்திடுவாராக.

மூன்னுள்ள சிவத்துவாபிவியக்தியை விளக்குவதே பரமாக ஆகமங்கள் கூறுவதால் மலத்தை வந்தேறியென்றே வேதாந்தவாதிகள்போற் கொள்ளவாமேயெனின், முளைதவிடுமி நீக்கத்திற்காணப்படும் வெண்மையாதி குணங்கள் தண்டுலத்தின்முள்ளனவேயன்றி ஒன்றுகெட்டொன்று புதிதாகவந்தவல்லவாகலின் மேலுண்மையைத்தரும் ஆகமவாக்கியம் சத்தியமென்றேதுணியத்தக்கதாம். வேதத்தினுண்மையும் இதுவேயாமென்க. மாயாவாதிகள் போல் இதனைச் சிவத்திற்கென்று கொள்ளாது, சிவனைப்போல் ஆன்மாவும் ஞானக்கிரியைகளை யுடையவனுகையால் ஆன்மாவுக்கென்றே அறியத்தக்கதாம். சிவத்துவம் என்பதைச்சிவ சீவர்களுக்கு முத்தியைத்தருதல் பெறுதலால் கூறியதாம்.

மலத்தை யொழிக்குமிடத்து மாயாகாரியங்களேதுக்கு? தமதுஞானசத்தியால்தானேயொழித்தலமையாதோ?மாயையைத்துணையாகக்கோடலினுனும்,இப்போதேமலமோசனஞ் செய்யாமையானும், சிவத்துக்கு அசத்தனகுதல் வராநிற்குமேயெனின், சிவனைப்போல்சீவர்களும் ஞானக்கிரியைகளை யுடையவர்களென்பது சத்தியமாய்ச் சிவன்மலமுத்தனும், சீவர்கள்மலபெத்தருமாகி விளங்கிநிற்குமுண்மையால்சிவனுடையஞானக்கிரியைகள்பிரகாசித்தும், சீவர்களுடைய ஞானக்கிரியைகள் அப்பிரகாசம் பூண்டும் விளங்கும். இங்ஙனமாகவும், மலமில்லாதவராகிய கடவுள் ஆன்மாக்களிடத்துவைத்த கருணையால் அவர்கள்மலத்தினின்றுநீங்குதற் குபகரணமாகத் தனுவாதிகளைக் கொடுத்தலும், அப்பெருந்துணையால் மலமறைப்பாற் கிடந்தவான்மாக்கள் தமது ஞானக்

கிரியைகள்சிறிது விளங்கப்பெற்றுத் தாமேமலத்தையொழித்துக் கொள்வரென்பதே பிரமாணசித்தம். மலத்தையொழித்துக்கொள் வார்தம்முடையமுயற்சியால் ஆன்மாக்களேயாத லறியாது சிவத் துக்கு அசத்தனாகுதல் வராநிற்குமேயென்பது பெரும்பிழையா மென்க.

தனுவாதிகளைக்கொடுத்த கடவுள் ஆன்மபந்தமாயுள்ள ஆணவத்தைத் தாமேயொழிக்கக்கூடாதோ வெனின், ஆன்மாக்கள் அசத்தராயிருந்தாலொழியச்சிவமேமலத்தையொழித்தற்கிடமில்லை. ஆன்மாக்கள் சத்தியுடையவராதலால் தனுவாதிகளைக்கொடுத் துத்துணைசெய்ததாம். ஆன்மாக்களே நீக்கிக் கொள்ளுவதாயின் அன்றே நீக்கிக்கொள்ளாமை யென்னையெனின், சிற்றறிவுஞ் சிறு தொழிலு முடையவராகலானும், கன்மங்களைப்பொசித்துத் தொலைக்க வேண்டியவராகலானும் அன்றே முத்தியடையாராயினர். தனுவாதிகளைப் பெற்றமாத்திரத்தானே மலமொழிவ தெங்ஙனமெனின், தனுவாதிகளைக்கொடுத்த சிவம், வேதசிவாகம மாகிய சட்டங்களையுங் கொடுத்தனராகலின் அவற்றிற்கூறியுள்ள சிவத்தியானவிசிட்டத்தினால்முத்தியடையுமென்க, சிவசிந்தனையால் மலமொழிதலால் மலத்தையொழிப்பவர்சிவமென்று வேதசிவாகமங்கள்கூறும். இங்ஙனந்துணிவதொழிந்துமாயாகாரியங்களால்முதற் பிரதி பந்தஞ்செய்து பின்னர்தனதுஞானசத்தியால் பிரதிபந்தஞ் செய்யாநிற்கும் சிவமென்பதுஅப்பிரமாணமாம்.

மாயாகாரியப் பிரதிபந்தம்முன்னும், ஞானசத்திப் பிரதிபந்தம்பின்னும்சிவம்செய்யா நிற்குமென்பதொழியவே, வேறுவிதத் தாற்கூறமேண்டு மென்பதாயிற்று. எங்ஙனமெனின், சேடியானவள் ஒருபெண்ணைவளர்த்துப் பருவம்வந்தகாலத்து நாயகனிடஞ் சேர்த்துவிடுதல்போலும், சிவசத்தியானது உயிரைப் பரிபாகப் படுத்தி உடையவனிடஞ் சேர்க்குமென்பதாம். பெண்ணைவளர்க்குங்கால்சேடிக்குஊணுடையாதிகள் சாதனங்களாயிருந்ததுபோல் உயிரைப் பரிபாகப்படுத்துங்கால் சிவசத்திக்குத்தனுவாதிகள் சாதனங்களாமென்க. சேடியானவள் பெண்ணைநாயகனிடஞ்சேர்த்துத்தான்புறம்பிலேதானே நின்றுவிடவும், நாயகனிடஞ் சேர்ந்த பெண் அவனைக் கூடிச் சுகிக்குமின்பத்தில் சேடியை மறந்து விடுமாறுபோலும், சிவனைச்சேர்ந்த ஆன்மாவும் சிவசத்தியைச் சிந்தியாது சிவானந்தத்தில் அமிழ்ந்துகிடக்கு மென்பதாம். "தாயு

டன்சென்றுபின்றாதையைக்கூடிப்பின்றாயைமறந், தேயுமதே நிட்டையென்று ணெறிற்கச்சியேகம்பனே., என்று பட்டினத்தடிகள் கூறியுள்ளபிரமாணத்தானுந்தெளியக்கடவர். சேடியைப்போலும் சிவசத்தி பின்னப் பொருளல்லவே யெனின், சத்திசிவத்தில் அபின்ன மெனினும், பின்னமாகக் கூறும்விவகாரங்களுமுளவாகலின் மேல்நிச்சயம் பழுதுடைத்தன்றாம். இங்கே விரிக்கிற்பெருகும்.

மேலிடங்களில் ஆன்மாக்களே பந்தத்தை நீக்கிக்கொள்ளுமென்றுகூறி ஈண்டுச்சிவசத்தி ஆன்மாவைச்சிவத்தோடுசேர்க்குமென்பதெங்ஙனமெனின், தனுகரணாதிகளைப்பெறுவதன்முன்னர் ஆன்மாசித்தாயிருந்தும் ஜடப்பொருளாகவே கேவலத்திற்கிடந்ததாகலின், தனுகரணங்களைக் கொடுத்ததுமுதல் முத்தியனந்தரம் உடனிருந்துபசரிக்கு முறையால்சிவசத்திக்கியக்கங் கூறப்பட்டது. சேடியானவள் பெண்ணைவளர்க்குங்கால் பெண்ணுக்கியக்கமில்லாமற்போய்ச்சேடியேயியங்கச்செய்தனளென்பதமையாவாறுபோல் ஆன்மசிவசத்திகளிடம் அன்வயித்துக்கொள்க. "தீர்ந்தவன்பாயவன்பர்க்கவரினுமன்பபோற்றி,, என்றுகூறியுள்ள பரமோபதேசத்தானுந்தெளிந்திடுக. ஆன்மாசிவத்தை நாடிப்பத்தடிதூரம் போமிடத்துச் சிவம் கருணையாலிரங்கிப் பதினைந்தடிதூரம் வந்தருளுமென்பதாம். இவ்வித நியாயங்களால் மல மோசனஞ் செய்துகொள்வார் ஆன்மாக்களேயென்றும், சிவம் உடனிருந் துபசரிக்குமென்றும் நிச்சயிக்கப்பட்டது.

ஆணவமலம்கண்ணுக்கு இருளும், செம்பிற்களிம்பும்போல் ஆத்மஞானசத்தியைப் பிரிவறக்கலந்து நிற்குமாயின் பிரகாசத்தோடுகூடியகண்ணுக்கு இருளும், ரசகுளிகையுடன் கூடிய செம்பிற்குக் களிம்புமின்மைபோல் நித்தியபரிபூரணசுத்தமாயிருந்துள்ள சிவத்தோடுகூடிநின்றுள்ள ஆத்மாவை அஞ்ஞானமாவரித்தல் கூடாதெனின், இதுசத்தியம். நாயகனும்நாயகியும் ஓரறையில்ஏக சயனத்தில் வீற்றிருக்கவும், வெளியேநிற்பவர்கள் அறையினுள்ளாரிருவரும் ஒன்றாய்க்கூடியின்பம் அநுபவிக்கின்றனரென்று மயங்குவதாய்முடியுமன்றிஉண்மையில்அதுமயக்கவுணர்ச்சியேயாம். இங்ஙனநிற்க, "பரமசிவன்பராசத்தி பல்லுயிர்க்கும்பயின்றிருக்க, விரவுவதெனவிருளொளிற்கேள் வெய்யவழல் பசுமரத்தின், விரவியதே பசுமரமும் வெந்தவலவென்றவிழும், பருவமுறக்கரணமுறப்பதியுமுறப்பழுதறவே" என்

னும் உண்மைஞானவுணர்ச்சியால் மேலாட்சேபம் அறவேநிரஸ்தமென்க.

பசுவும், பசுவைப்பந்தித்தபாசமும், பாசத்தை அரிக்கும்பதியும் அநாதிநித்தமென்பது ஸ்திரமாகவின், பெருமானைவழிபட்டுமலபோசனஞ்செய்துகொள்ளக்கடவர். பாசம்நித்தமாயின் அநித்தத்தையடையாதே யெனின், தேற்றுங்கோட்டையினால் தெளிவுற்றநீரை அழுக்கானது பற்றுமலும், தானுங்கெடாமலும், அடியிலேநின்று விடுமாபோல் பாசமானது ஆத்மாவைப்பற்றுமலும், தானுங்கெடாமலும் தன்சத்திகுன்றி விரவிநிற்குமென்க. எங்ஙனமெனின், மாயைவியாபகமுடையதெனவும், மாயையின்மேவிட்ட வியாபகமுடையது ஆன்மசிற்சத்தியெனவும், ஆன்மசிற்சத்தியின் மேவிட்ட வியாபகமுடையது ஆன்மாவெனவும், ஆன்மாவின் மேவிட்ட வியாபகமுடையது சிவசத்தி யெனவும், சிவசத்தியின்மேவிட்ட வியாபகமுடையது சிவம்எனவும், உண்மைநூல்களுணர்த்து மாகலின், சிவபூரணத்துள் ஆன்மபூரணத்தை விசாரித்துத்தெளியக்கடவர்.

முத்தியின்மலமொழியாது விரவிநிற்குமதனால் மயக்கத்தைச்செய்யாதோ வெனின், உருகிய பதத்திலுள்ள நெய்யானது கனங்கெட்டுத் தான்கெடாது நின்றதுபோலும், உயிர்களை யெல்லாங் கொல்லவெழுந்த ஆலகாலவிஷம்பரமசிவத்தின் திருமிடற்றிலடங்கி வலிகெட்டு முதல் குன்றாது நின்றதுபோலும், ஆணவமலம் தனது வலிகெட்டு ஆன்மசத்திக்கு வியாப்பியமாய் முதல்கெடாது நித்தியமாகவே நிற்குமென்பதுபெற்றும். "முத்தியினின்மூன்றுமுதலுமொழியக்கேள், சுத்தவனுபோகத்தைத்துய்த்தலணு, மெத்தவே, வினையங்கொடுத்தலிறை யித்தைவிளைவித்தன்மல, மன்புடனேகண்டுகொளப்பா" என்னும் உண்மைவிளக்கத் திருவெண்பாவினானுந்தெளிந்துய்க. "பாசங்கெடாமல்பதியிற்கலவாமல், நேசச்சமத்அமுர்த்திசேருசசனெக்ரானோ" என்றுகூறிய தாயுமானசுவாமிகள் திருவாக்குஞ் சான்றுமென்க.

ஆயின்முத்தியில் வியாபகத்துவம் எல்லாவுயிர்களும்அடைவதெவ்வாறெனின், ஆகாசத்தில் உலாவும் சந்திரனை யேககாலத்திற்காணும் பலருடைய கண்ணொளிகள்ஒன்றோடொன்றுதாக்காது விரவிச்சென்று பற்றுதல் போலுமென்க. முத்தித்தசையில் ஆன்மாவும் சிவமும் ஒன்றா யிருக்குமோ இரண்டாயிருக்குமோ

வெனின், ஒன்றும் இரண்டுமல்லாமல் அத்துவிதமாய்நிற்குமென்பது மேலோர் துணிபென்க. "பண்ணையுமோசையும்போலப்பழமது, மெண்ணுஞ்சுவையும்போலெங்குமாம், அண்ணருள், அத்துவிதமாதலருமறைகளொன்றென்னா, தத்துவிதமென்றறையுமாங்கு" என்று சாதித்தருளிய மெய்கண்ட சிவாசாரிய சுவாமிகள்திருவாக்கானும், "ஒன்றாகாமலிரண்டாகாம, லொன்று மிரண்டுமின்றாகாமல்" என்றருளியதிருச்சிற்றம்பலநாடிகள் திருவாக்கானுமுணர்ந்திடுக.

இவருண்முதலாசிரியரை அத்துவிதமென்னுஞ் சொல்லினுண்மைகண்டசிவானுபூதிப்பெருஞ்செல்வரென்பதுதோன்ற "மெய்கண்ட சிவாசாரிய சுவாமிகள்" என்னும் அற்புதத்திருநாமம் பாராட்டி உண்மை ஞானிகளெல்லாம் வழிபடுமதனானுங்காண்க. "பொய்கண்டார் காணாப்புனிதமாமத்துவித, மெய்கண்டநாதனருண்மேவுநாளெந்நாளோ" என்றற்றொடக்கத்து வாக்கியங்களே சான்றாமென்க. இந்நியாயங்களால் முத்தியில் ஆன்மாவும் சிவமும்நிற்கும் அனுபூதிநிலை வெளிப்பட்டதாகலின், இவ்வுண்மையை வற்புறுத்திக் கூறும் பின் வாக்கியங்களையுஞ் சிந்திக்கக்கடவர்.

உமாபதி சிவாசாரிய சுவாமிகள்.

"தத்துவங்களெல்லாஞ் சகசமாயான்மாவிற்
பெத்தத்தினிற்கின்ற பெற்றிபோன்-முத்திதனிற்
சித்தமலமற்றார் செறிந்திடுவரொன்றமறை
சத்தியமாயோதியிடுந்தான்"

"ஆதவன்றன்சந்நிதியி லம்புலியினேர்சோதி
பேதமறநிற்கின்ற பெற்றிபோல்-நாதாந்தத்
தண்ணறிருவடியி லான்மாவணைந்தின்பக்
கண்ணிலழுந்தியிடுங்காண்"

"சென்றிவன்றானென்றிற் சிவபூரணஞ்சிதையும்
அன்றவன்றானென்றுமெனிலன்னியமா-மின்றிரண்டு
மற்றநிலையேதென்னி லாதித்தனந்தன்விழிக்
குற்றமறநின்றதுபோற்கொள்"

தாயுமான சுவாமிகள்.

"செங்கதிரின்முன்மதியந் தேசடங்கிநின்றிடல்போல்
அங்கணனார்தாளி லடங்குநாளெந்நாளோ"

"வானூடடங்கும் வளிபோலவின்புருவாங்
கோனூடடங்குங் குறிப்பறிவதென்றாளோ"

"எட்டத்தொலையாத வெந்தைபிரான்சக்தியிற்
பட்டப்பகல்விளக்காய்ப் பண்புறுவதென்றாளோ"

"ஆணவத்தோடத்துவித மானபடிமெய்ஞ்ஞானத்
தாணுவினோடத்துவிதஞ் சாருநாளென்றாளோ"

என்னுமிவ்வுறுதிப் பிரமாணங்களால் அத்துவிதமென்னுஞ் சொற்பொருளும், முத்திமுடிவும், மற்றைமுத்திகளின்றாழ்வும் வெளிப்பட்டதாகையால்,இதனைத் துல்லியமுத்தியென்றுமேலோர்கொள்வரென்க.

இவ்வுண்மைமுத்திகிடைப்பதெங்ஙனமெனின், "ஆகமமாகிநின்றண்ணிப்பான்றாள்வாழ்க" என்று வாதவூர்ப் பெருந்திருவாளர்கூறியவாக்கியவிசிட்டத்தினால் சிவாகமவழித்தாய் ஒழுகுவார்க்கேயுரித்தென்பது பெற்றாம். "கொள்கசிவாகமத்திற்கூறுநெறிபூசாதி, கொள்ளல்புறநூல்விதியெல்லாம்" என்னுஞ்சைவசமயநெறித் திருக்குறளானுங்காண்க. ஆயின் வேதத்தின்வழிப்பரஞானங்கைகூடாதோவெனின்,"மெய்யாவிமலாவிடைப்பாகாவேதங்கள், ஐயாவெனவோங்கியாழ்ந்தகன்றநுண்ணியனே" என்னுந் திருவாசகப்பிரமாணத்தால் வெளிப்படுமென்க.

(அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்.)

"மறையினாலயனான்மாலான்மனத்தினான்வாக்கான்மற்றுங்
குறைவிலாவளவினாலுங்கூறொணாதாகிநின்ற
விறைவனார்கமலபாதமின்றியானியம்புமாசை
நிறையினார்குணத்தோர்க்கெல்லாநகையினைநிறுத்தமன்றே"

"அருளினாலாகமத்தேயறியலாமளவினாலுந்
தெருளலாஞ்சிவனைஞானச்செய்தியாற்சிந்தையுள்ளே
மருளெலாநீங்கக்கண்டுவாழலாம்பிறவிமாயா
விருளெலாமிரிக்கலாகுமடியரோடிருக்கலாமே"

என்னுஞ் சித்தியாருள்ளுங்கண்டுணர்க.

ஆயின் வேதம் அப்பிரமாணமோவெனின், "அன்னியநூலின்விதியவிரோதமே, துன்னேல்பழுதென்றுளத்து." என்னுஞ்சைவகுறள்வெ

ண்பாவால் வேதம் அப்பிரமாணமென்று பிறர் சொல்லக்கேட்பி னும் அதிபாதகமென்க. "வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள் வேறுரைக்குநூலிவற்றின்விரிந்தநூல்கள், ஆதிநூலநாதியமலன்றருநூலிரண்டு மாரணநூல் பொதுசைவமருஞ் சிறப்புநூலாம், நீதியினாலுலகர்க்குஞ் சத்தினி பாதர்க்குநிகழ்த்தியது நீண்மறையினொழிபொருள்வேதாந்தத், தீதில்பொருள் கொண்டுரைக்கு நூல்சைவம்பிறநூ றிகழ்பூர்வஞ்சிவாகமங்கள் சித்தாந்தமாகும்." என்னும் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் திருவாக்கால் வேதசிவாகமம் இரண்டும் பதிவாக்கெனவும், இவை ஆதிநூலாக உலகிலுள்ள சமானியருக்கும், சிறந்த சத்திநிபாதர்க்கும், முறையே பொதுநூலாகவும், சிறப்புநூலாகவுங் கொடுக்கப்பட்டன வெனவும், வேதத்திற் கூறுதொழிந்தனவும், வேதாந்தத்தில் தீதில்லாதபொருளையுடையனவு மானவற்றை எடுத்துச்சொல்லுநூல் சைவநூலெனவும், இஃதொழிந்தனவெல்லாம் பூர்வபக்ஷமென வும், சிவாகமங்கள் சித்தாந்தமெனவும் நாட்டப்பட்டதாகையால், வேதசிவாகமங்க ளிரண்டும் பிரமாணசித்தமென்பதே சைவ நூற்றுணிபென்க.

ஆந்மாக்கள் பரிபாகம் பலவேறுபாடுடைய தாவின் அவரவர் பரிபாகத்துக்குத்தக்க வுணர்ச்சியைத்தரும் பரிசினை யுடையதுபற்றி வேதத்தப்பொதுவென்றும், பரிபாகமுதிர்ச்சியில் வரத்தக்க சிவஞானத்தை பவிப்பிப்பது ஆகமமாதலால் அதனைச்சிறப்பென்றுமேலோர்கொள்வர். அறம்-பொருள்-இன்பம்-வீடு-என்னும் நாலையுங் கூறுவது வேதமும், "வீட்டைமாத்திரம் தனித்துக்கூறுவது ஆகமமுமாக விளங்கலான் வேதம் உலகிலுள்ள சாமானியருக்கென்றும், ஆகமம் சிறந்த சத்திநிபாதர்க்கென்றுந் துணியப்படுமென்க. இதனால் ஒன்றிலொன்று முரணுமை வெளியாகப் பெற்றுச் சுருங்கச்சொல்லும் வேதத்தையும், விளங்கச்சொல்லும் ஆகமத்தையும் பரிபாக நெகிழ்ச்சியளவாய்க் கொண்டுய்வாராக.

பல்வேறுவகைப்பட்ட திரிபுணர்ச்சியைக் கன்மத்தினளவாய்விளைக்கும் வேதத்துண்மையை ஆகமத்துணையாலன்றி அறியப்புகுவது வெறுங்கதையாமென்க. வேதம் பொருள் பலபடத் தோன்றுஞ் சூத்திரமும், சிவாகமம் அதனை அங்ஙனமாக வொட்டாது தெளித்துரைக்கும் பாடியமும்போலச் சிவபெருமானால்

அருளிச்செய்யப் பட்டனவாகலின் அற்ப பரிபாகிகளல்லாத சைவர்கள்கொள்ளத்தக்கது ஆகமமேயாமென்க. வேதமும் சிவாகமமும் அபேதமாதலால் ஆகமத்தைமறுது வேதவழித்தாய் ஒழுகலாகாதோவெனின், வேதம் ஆகமத்தில் அபேதமாயினும், அதுசாமானியருக்கே கொடுக்கப்பட்டது என்பதனுல் சத்தினிபாதர்க்குப் பொருந்தாதென்க. ஜனகர்முதலிய முனீந்திரர் நால்வரும் வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாள்வரையும் ஓதியும் ஞானம் நிலைபெருதவராயினர் என்றும், பின்பு ஆகமாந்தமென்னும் பெயரையுடைய சித்தாந்தத்தை ஓதி ஞானம் பெற்றனர் என்றும், ஸ்காந்தத்திலே சங்காசங்கிதையிற் கூறியவாற்றுனும் இவ்வுண்மைதெளிக.

ஊர்த்துவமுகமாகிய ஈசானத்தினின்றும் காமிகமுதலிய சிவாகமம் இருபத்தெட்டும், அதோமுகங்கள் நான்கினுள்ளும் தற்புருடத்தினின்றும் இருக்குவேதமும், அகோரத்தினின்றும் யசுர்வேதமும், வாமதேவத்தினின்றும் சாமவேதமும், சத்தியோசாதத்தினின்றும் அதர்வணவேதமுந் தோன்றினவென்பது பிரமாணசித்தமாகலினுனும், வேதாரணியத்திற் பெருமானை யெழுந்தருளப்பண்ணி ஆகமவழித்தாய் வேதங்கள் பூசித்தன வென்பதனுனும், வேதத்தினும் ஆகமத்திற்கு விசிட்டம் காட்டப்படுமென்க.

ஆகமம் விசிட்டமுடையதாயின் மனுவாதி ஸ்மிருதிகளில் தந்திராநுஷ்டானத்திற்கு நிஷேதஞ்சொல்லுவ தென்னையெனின், இதுவிபரீதவுணர்ச்சியாம். எங்ஙனமெனின், சங்கரஸம்ஹிதைமுதலியவற்றில் விசிட்டங்கூறி ஸ்மிருதியாதிகளில் கனிஷ்டங்கூறுவது பொருந்தாதாகலின்என்க. வேதபாஹ்யராயிருக்கிறவர்களுக்கு அதிகாராநுகுணமாகவும், அசுராதிவியாமோஹார்த்தமாகவும், வாமகாளாமுகபௌத்தாகமங்களேயும்உண்டுபண்ணிஅவை வேதபாஹ்யமாகலின் வேதோக்தாநுஷ்டானுதி காரிகளுக்குச் சேவியமல்லவென்று காமிகாதி சைவாகமங்களினும் நிஷேதித்திருக்கு முண்மையை விசாரியாமல் ஸ்மிருதிகளில் நிந்தைகூறியது மூலாகமங்களையேயென்று வாய்க்குவந்தபடிப் பிதற்றும் பேதமையையினியொழிவாராக. மனுஷ்யாதி சிவபரியந்தம் ஆப்ததார தம்யங்களினுல் சிவன் பரமாப்தனுகலின் சிவவாக்கியம் ஒருவராலும் பாதிக்கப்படுவ தல்லவென்க.

வாயுசங்கிதை- "சைவநூலிற்கூறப்பட்டதும், பாசமூன்றையுந்தவிர்ப்பதும், மேலானதுமாகிய தீக்ஷையைத்தவிரயாதொருஆச்சிரமமும்இவ்வுலகத்திலே மனிதருக்குமேன்மையன்று. ஆதலால் தீக்ஷையினாலேதான் மோக்ஷம். ஆச்சிரமங்களினாலும், மற்றைக் கருமங்களினாலும் மோக்ஷமில்லை. அத்துவசுத்தியின்றி முத்தியை விரும்பும்மனிதர்கோலின்றி நடக்கத்தொடங்கிய குருடர்போல்வர். தோணியின்றிக்கடலைக்கடக்கவிரும்பினவர்போல்வர்" என்றும் ஸ்காந்தம் - பிருகுசாபப் பிரகரணம் - "இங்கே முப்பாசத்தை அகற்றுவதும், மேலானதும், சிவசம்பந்த முடையதுமாகியதீக்ஷையாலன்றி ஆத்மாக்களுக்கு ஆச்சிரமத்தாற் செய்யப்பட்ட உயர்ச்சியொன்றுமில்லை. ஆகலான் தீக்ஷையாலேதான்முத்தி ஆச்சிரமங்களாலும் பிறகருமங்களாலும் முத்தியில்லை" என்றும், வைதிக நூல்களெல்லாம் ஆகம விசிட்டத்தைப் பலவிடங்களில் வியந்துகூறு நுட்பமறியாமல் தமக்கு முனிவர்களால் கிடைத்த சாபத்தின்வழிச் சிவாகமத்தைப்புறங்கூறிவரும் பாதகர் எக்கதியடைவாரோ அறிகிலம்.

மேல் வாக்கியங்களில் ஆச்சிரமங்களினாலும், கருமங்களினாலும் பயனில்லை யென்னும் வாய்மையைப் பாராட்டுமிடத்துத் தீக்ஷாவிசிட்டங்களைக்கூறும் ஆகமத்திற் றணிவுடையனவேயாக வைதிகநூல்கள் விளங்கலான், சிவாகமங்களை ஸ்மிதியாதிகள் நிந்தை கூறுமென்பது விந்தையாமென்க. வேதாகமங்களல்லாத மற்றைப்புராண ஸ்மிருதியாதிகளியாவும் பசுவாக்கே யல்லது பதிவாக்கல்லாமையான் அவற்றில் முன்னொடுபின்முரணிய ஹேய வாக்கியங்க ளிருப்பினும் நிஸ்புருஹமென்க. இவற்றின் விரிவைச் சிவாக்கிரயோகிகள்செய்தருளிய சிவஞானசித்தியார் உரையானும், சித்தாந்ததீபிகைஎன்னும் பிரபந்தத்தானுந் தெளியக்கடவர். இந்த மூர்த்திகள் சிவதீக்ஷையினால் சம்ஸ்காரப்பட்ட வைதிகரத்னமாகவும், எதிபுங்கவராகவும்விளங்கியிருந்தமஹாசைவரென்க.

ஆகமம்என்பது ஆ-ஞானமென்றும், க-மோக்ஷமென்றும், ம-மலநாசமென்றும், பொருளைவிளக்கி ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம்பண்ணி ஞானத்தை யுதிப்பித்து மோக்ஷத்தை அளிக்கும் உண்மையானும் உணர்க. ஆகமத்தினுடையமுடிபை யோக

ரூடியாய் அடையின்றிச் சித்தாந்தமென்றே எல்லாச் சமயங்களும் அங்கீகரித்த விஷயமாகவும், ஆகமத்தின் மேலிட்டதொரு சித்தாந்தமுண்டென்பது எங்ஙனம்? பௌத்தசித்தாந்தம், மாயாவாதசித்தாந்தம், வைஷ்ணவசித்தாந்தம் என்பனவாகக்கூறிச் சைவத்தைக்கூறுங்கால் சித்தாந்தம்என்றுதனித்துக்கூறும்நூல்வழக்கினானுந்தெளிக. "அருளாலேதம்மை யறிந்தருளாயந்தப், பரிபூரணமேபரையாய்ப் - பரையொழிவில், ஆனந்தாதீதமா மத்துவிதசித்தாந்த, மோனம் வேதாந்த முடிவு" என்னுந் திருவெண்பாவில் அத்துவிதமான ஆகமமுடிவாகியமௌனம் வேதமுடிவுக்கு முடிவாகும் என்றும், "தன்மையுமுன்னிலையுந் தானாய்ப்படர்க்கையுமா, யென்னொழிவின்பமாயின் புமிது - வென்னாத, வேதாந்தசித்தாந்தமே பிறவாவீடென்றான், ஓதாமல்வேதமுணர்ந்தோன்" என்னுந் திருவெண்பாவில் வேதத்தின் முடிவாகிய சித்தாந்தமேமீண்டுவாராமுத்தியென்று ஓதியறியாமல்திருவருண்ஞானத்தால் நான்கு வேதங்களையு முழுதுணர்ந்த திருஞான சம்பந்தப்பிள்ளையார்" அருளிச்செய்தார் என்று கண்ணுடைய வள்ளலார் விளக்கிய வுண்மையினானும், அத்திருவெண்பாக்களுக்கு உரையெழுதிய திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகள் உரையிற்கோடலென்னு முத்தியால் வியாசர் முதலினோர் ஓதாமலுணரினும் அவர்க்கு விட்டுணுபரம் என்றும், அகம்பிரமமென்றும், பின்னர் மலைவுபிறந்ததாகையால் பிள்ளையாரைப்போலும் அவர் சுதந்தர அறிவிலரென்களென்று தெளித்துக்காட்டிய நியாயத்தினானும், சித்தாந்த மென்னும் ரூடிநாமத்தையுடைய சுத்தசைவத்தினது துல்லியம்வெளிப்பட்டதென்க. "ஒரும்வேதாந்தமென் றுச்சியிற்பழுத்த, வாராவின்பவருங்கனிபிழிந்த, சாரங்கொண்டசைவசித்தாந்தத், தேனமுதருந்தினர் சிலரே" என்றருளிய குமரகுருபரசுவாமிகள் திருவாக்கால் வேதமென்னும் விருட்சத்துச்சியில் உபநிடதமாகியபழம்பழுத்துள்ளதென்றும், பழத்தைமுழுசாய்விழுங்குவார் சுவையைப்பருகாமல் கக்கல் விக்கல்களாகிய துன்பம் அடைவதுபோல் பழம்போலும் அவ்வாக்கியத்தை ஜடார்த்தங்கொண்டுணர்வார் பிறவிநீங்காமுத்தியினரென்றும், அவர்கள் வேதாந்திகளென்றும், பழத்தைப்பிசைந்து சாரங்கொள்வதுபோல் ஆகமவாக்கியங்களால் அன்வயங்கொண்டு உண்மையை யுணர்வார் சுவையைப்பருகியவராகிப்பிறவாமுத்தி யடைவரென்றும், இவர்கள் சித்தாந்திகளென்றும், இச்சைவசித்தாந்திகள் சத்திநிபாதர்களாகலின் வெகு சிலரென்றும்

உண்மைவிளங்கு மாகையால், இதனை விவேகிகள் பகுத்துணர்வாராக. ஆகவே பழம் வேதாந்தமென்றும், சாரம்சித்தாந்தமென்றும், நாட்டப்பட்டது. "புறச்சமயத்தவர்க் கிருளாயகச்சமயத்தொளியாய்ப் புகலளவைக்களவாகிப்பொற்பணிபோலபேதப், பிறப்பிலதாயிருள் வெளிபோற்பேதமுஞ் சொற்பொருள்போற் பேதாபேதமுமின்றிப் பெருநூல் சொன்ன, வறத்திறனால்விளைவதாயுடலுயிர்கண்ணருக்க னறிவொளிபோற்பிரிவறுமத்துவிதமாகுஞ், சிறப்பினதாய்வேதாந்தத்தெளிவாஞ்சைவசித்தாந்தத்திறனிங்குத்தெரிக்கலுற்றாம்" என்னும் உமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருவாக்கானுந்தெளிக. வேதாந்தத்தின்றெளிவு சைவசித்தாந்தமென்றதனால் ஆகமாந்தமல்லாத மாயாவாத முதலியவற்றைப் பொருளென மதிப்பது பெரும்பாவ மென்க. "சித்தாந்தத்தே சிவன்றன் திருக்கடைக்கண்சேர்த்திச் செனனமொன்றிலே சீவன் முத்தராக, வைத்தாண்டு மலங்கழுவி ஞானவாரி மடுத்தானந்தம் பொழிந்துவரும் பிறப்பையறுத்து, முத்தாந்தப் பாதமலர்க்கீழ்வைப்பனென்று மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்கராகிப், பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப்பாவப் பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தே" என்னுந் திருவாக்கால் சிவன் ஆன்மாக்களிடத்துக் காருண்யத்தால் திருநோக்கமாகிய தீக்ஷாசம்ஸ்காரஞ்செய்து, ஒரு பிறப்பிற்றானே அவரைச் சீவன் முத்தராக்கி, அந்தப்பக்குவம் வந்தவிடத்து மலங்களைப்போக்கி, ஞானதீர்த்தத்தின் முழுகச்செய்து சிவானந்தானுபவத்தை விளைத்து, ஜநநத்தை யொழித்து, முத்திவடிவாகிய தனது திருவடித்தாமரையில் வைப்பனென்று சித்தாந்தமாகிய திவ்யாகமங்களில் திருவுளம்பற்றி யிருக்கவும், இவ்வுலகத்தில் ஆத்மாக்களெல்லாம் மூர்க்கத்தன்மை யுள்ளவராய்ப் பைத்தியங்கொண்டவர் பிதற்றுவதுபோலப் பிதற்றிப் பாவமாகிய பெருங்குழியில் வீழ்ந்தலையும் பிராந்தி யென்னையோ வென்று உண்மையை யுணர்த்திய சகலாகமபண்டிதரென்னும் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் பரமோபதேசத்தையுஞ் சிந்திக்கக்கடவர். மேல் நியாயங்களால் வேதசிவாகமங்களிரண்டும் அபேதமாயினும் ஆகமத்தின் வழிநடப்போரே உண்மை முத்தியினரென்று நாட்டப்பட்டதென்க.

இனி வேதசிவாகமங்கள் அபேதமென்னு முண்மை வருமாறு. மூலப்பிரகிருதியின்சத்துவகுணம் மாயையென்றும், ரஜோகுணம் அவித்தையென்றும், தமோகுணம் ஆவரணமென்றும்,

ஆவரணத்தின் காரியம் விக்ஷேபமென்றும், இவற்றுள் அவித்தை நாநாபேத மென்றும், அந்த அவித்தையின் சத்துவகுணத்திலுள்ள கூடஸ்தன் ஞானியென்றும், ரஜோகுணத்திலுள்ள கூடஸ்தன் கர்மாநுஷ்டான பரனென்றும், தமோகுணத்திலுள்ள கூடஸ்தன் அஞ்ஞானியென்றும் வேதங்கூறும்.

சுத்தவித்தைக்குக்கீழ் அசுத்தமாயைக்கு மேலுள்ள ஸ்தானத்தில் ஆத்மாக்கள் எண்ணிறந்திருப்பர்களென்றும், அவர்களில் சுத்தமாயா தனுகரணாதிகளைப்பெற்றவர் விஞ்ஞானகலரென்றும், அசுத்தமாயா தனுகரணாதிகளைப்பெற்றவர் பிரளயாகலரென்றும், பிரகிருதி தனுகரணாதிகளைப்பெற்றவர்சகலரென்றும் சிவாகமங்கூறும். தனுவாதிகளைப் பெறுவதன் முன்னர் விஞ்ஞான கேவலிகள், பிரளயகேவலிகள், சகல கேவலிகள் என்று முறையே சொல்லப்படுவரென்க.

சிவதத்துவத்துக்கும்சுத்தமாயைக்கும்அபேதமாதல்போல மூலப்பிரகிருதிக்கும் சுத்தமாயைக்கும் அன்யோன்ய மாதலால் ஆகமங்கள் மூலப்பிரகிருதியையும் மஹாமாயையையும் வேறு பிரித்தோதாது சுத்தமாயையென்றே கூறுமென்க.

கூடஸ்தனை ஆத்மாவென்றும், அவித்தையைப் பலபேதமுள்ள ஆணவமென்றும், ஆவரணத்தை அசுத்த மாயையென்றும், விக்ஷேபத்தைப் பிரகிருதியென்றும், ஆகமங்கள் பரிபாஷையாற் கூறும். அன்றியும், சிவன் சுத்தவித்தைமுதலியபஞ்சதத்துவ ரூபமா யிருப்பதுபோல் ஆத்மாவும் புருஷதத்துவரூபமா யிருப்பனென்றும், இப்புருஷதத்துவம் பிரகிருதிக்குமேலும், ஆத்மா அசுத்தமாயைக்குமேலும் இருக்குமென்றும் ஆகமம் கூறும். பிரமஞ் சுத்தமாயையிற் பொருந்தி விராட்டு, இரணியகர்ப்பன், அந்தரியாமியென்று சொல்லப்படுமென்றும், கூடஸ்தன் அந்தக்கரணத்தைப்பொருந்திச் சீவன் என்று சொல்லப்படுவன் என்றும், வேதங்கூறும். இங்ஙனமாகவும், பிரமமே கூடஸ்தன் என்றுபிதற்றும்பித்துணா பேதமையிற் பேதமையென்க. "வேதமொடாகமமெய்யாமிறைவனூல், ஓதும்பொதுவுஞ்சிறப்புமென்றுன்னுக, நாதனுரையிவைநாடிலிரண்டந்தம், பேதமதென்னிற்பெரியோர்க்கபேதமே." என்னுந் திருமந்திரவுரையானும் அபேதத்தைத் தெளிவாராக. இவ்வுண்மையை

விசாரியாமல் வேதம்வேறு ஆகமம் வேறுஎன்று தம்முடைய அற்ப வுணர்ச்சியளவாய்ப் பிதற்றி ஆகமத்திற்கு மாறுக ஒழுகும் பதிதர்களைச் சைவர்களாவார் கனவினுஞ்சிந்தியாதொழிவாராக

இங்ஙனநிற்க, வேதத்தின் றிரிபுணர்ச்சியை விளக்கும் மற்றைச் சித்தாந்தங்கள் வருமாறு. மீமாஞ்சைநூல் - சைமினிபகவானாலும், நியாயநூல் கணாதராலும், வைசேஷிகநூல் அக்கபாதராலும், சாங்கியநூல் கபிலமுனிவராலும், பாதஞ்சலநூல் பதஞ்சலிபகவானாலும், பாஸ்கரியம், மாயாவாதம், சத்தப்பிரம வாதம், கிரீடோப் பிரமவாதமாகிய விஞ்ஞான்கும் வியாசபகவானாலும், ஒன்றிலொன்று முரணியசித்தாந்தங்களாய் வேதத்தையாதாரமாகக்கொண்டு செய்த நூல்களாகலின் சத்தினிபாதர்க்குரித் தன்றுமென்க.

இனி வேதாகமங்களுக்குப் புறம்பான நாஸ்திக சித்தாந்தங்கள் பௌத்தம்-ஆருகதம்-உலோகாயதம் முதலியனவாம். இவற்றுள் உலோகாயதம் பிருஹஸ்பதிபகவானாலும், ஆருகதம் அருகனாலும், பௌத்தம் ஆதிபுத்தனாலும், செய்யப்பட்டன வென்க. இவர்கள் முத்தியைக் கூறுங்கால் உலகாயதனுக்குப் பிருதிவி, அப்பு, தேயு, வாயு வென்னும் நான்குபூதங்களின் கீழ்ப்பட்ட புவனங்களில் பிறவியொழியுமென்றும், ஆருகதருக்குக் குணதத்துவத்தின்கீழ்ப் பிறவி யொழியுமென்றும், புத்தருக்குப் புத்தி தத்துவத்தின்கீழ்ப் பிறவி யொழியுமென்றும், சாங்கியருக்குப் பிரகிருதிவரையும் பிறவி யொழியுமென்றும், பாஞ்சராத்திரிகளுக்குப்பிரகிருதிக்குக் கீழ்ப்பிறவி யொழியு மென்றும், வேதாந்திகள் புருடதத்துவத்தை யடைவரென்றும்,பௌராணிகர்அராகதத்துவத்தையடைவரென்றும், காபாலிகர் காலதத்துவத்தை யடைவரென்றும், பாசுபதர்மாயாதத்துவத்தையடைவரென்றும், மகாவிரதியர்வித்தியாதத்துவத்தை யடைவரென்றும், காருடம், தக்ஷிணம்,வாமம்,பூதம் என்னுந்தந்திரங்களில் தீக்ஷைபெற்றவர் சத்திதத்துவத்திலுள்ள நிவிர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி என்னும் புவனங்களைமுறையே அடைவரென்றும், சுத்தமாகிய சாத்தனுலார்சத்திதத்துவத்தை யடைவரென்றும், கௌளயாமளாதியர் பிசாசபதத்தை அடைவரென்றுஞ்சைவநூற்றுணிபென்க. இங்ஙனமாகவும்,புருடதத்துவப்பேறுடையாராகியஏகான்மவாதிகள்சிவ

ஞானச்செல்வர்களைப் புறங்கூறித்திரிவது எக்கதிக்காளாகவோ அறிகிலம்.

இங்ஙனநிற்க, சைவருள்பலர் மாயாவாதத்துக்குரிய ஆசாரியரைவேடவொற்றுமையால் தம்மாசாரியரெனக்கொண்டு வழிபட்டொழுகியும், அம்மாயாவாத நூல்களைத் தஞ்சமயநூல்களெனக்கொண்டு பாராட்டியும், அம்மாயாவாதத்தை யவலம்பித்து அவர்களால் தூற்றப்படும் சிவாகமதூஷணம், சிவசாத்திரதூஷணம், சிவாசாரியதூஷணமுதலியவற்றைக்கேட்டு எரிவாய்நிரயத்துக்காளாகின்றனர். கன்மத்தால் ஒருவேளை அவரோடு கூடிப்பழகப்பெறினும், பரிபாகிகளாவார்பாவத்துக்கஞ்சியுடனே அவர்கள்கூட்டத்தினின்று நீங்கவேண்டுமென்பதுசைவநூற்றுணிபென்க. "தம்மைத்தெளிந்தாராய்த்தாமேபொருளாகி, யெம்மைப்புறங்கூறி யின்புற்றுச், செம்மை, அவிசாரம்பேசு மகம்பிரமக்காரர், வெளியாமிருளில் விடாதே" என்றும், "தாம்பிரமங்கண்டவர்போற்றம்மைக்கண்டாங்கதவே, நான்பிரமமென்பவர்பானண்ணாதே" என்றும், "ஆதிமறையோதியதன்பயனென்றும்மறியா, வேதியர்சொன் மெய்யென்றுமேவாதே" என்றும்வரும் சந்தானகுரவர் வாக்கியங்களே சான்றுமென்க. இதனால் பசுஞானிகளைவிட்டுச் சிவஞானிகளைப் பற்றவேண்டுமென்பது பெற்றும். "கண்ணுவாரேனுமுன்னைக் கைகுவியாராயினந்த,மண்ணுவார்மட்பைமதியேன்பராபரமே" என்னும் அருள்வாக்கியமுஞ் சான்றுமென்க.

ஞானமானது மூன்றுவிதமாகிப் பாசஞானம், பசுஞானம், பதிஞானமென்று விளங்கி முறையே பாசமைந்தினோடுளைந்தும், ஆணவமொன்றினோடுளைந்தும், சிவமொன்றினோடுறழ்ந்தும் பாசஞானி-பசுஞானி - பதிஞானியென்று பரிபாகத்தளவாய் ஆன்மாக்கள் நிற்குமுறைமைகண்டுணர்க. அவ்வாணவமுமொழிந்து தனிப்பது கூடாதோவெனின், ஆணவமொழிவது சிவன்றிருவடியைப் புணர்ந்தார்க்கல்லது அமையாதாகலின் அதுபொருந்தாதென்க. "தாணுவின் றன்கழலணையத் தவிருமலந் தவிர்ந்தாற், றன்சுத்தனுயிருக்கை முத்தியரன்றானைப், பூணவேண்டுவ தொன்றுமில்லை யெனிலருக்கன், புகுதவிருள்போமடியிற்பொருந்தமலம்போமே" என்பதனாற்காண்க. சிவன்றிருவடியைப்புணர்ந்தார்க்கல்லது ஆணவம் அகலாமையானும், ஆத்மா எதைச்சார்ந்தால் அதுவாய்நிற்குமியல்பினதாகலானும், கருவிகளைக்கடந்து சிவனைக்கூடாமல் தனித்துள்ளேமென்பாரை ஆண

வத்தோடுளைந்த பசுஞானிகளென்றே சிவஞானிகள் ஆணையிட்டுக் கூறுவரென்க.

திருச்செந்தூரகவல்.

“பாசஞானம் பசர்பசுஞானம்
ஈசஞானமென்னமூன்றுளவாம்.

பாசஞானம்.

அதுகேள்பாசமாவதாணவ
மதிமயற்கன்ம மாயையிரண்டுக்
தெருமரல்காட்டுங் கருமமுந்திரோதையு
மருவிடும்பஞ்ச மலங்காணிதனை
ஆசெனவுணராதகமெனவிருக்கை
பாசஞானப் பண்பதுவாகும்.

பசுஞானம்.

தரும்பசுஞானஞ் சாற்றதுங்கேண்மின்
வரும்பவமூட்டு மலமைந்தவற்றி
ணுணவமொன்று மகலாமையினுற்
காணுறுவிகடக் கருவிகடீர்ந்து
தன்னையுணர்ந்து தானேபிரம
மென்னக்கருதி யிருப்பதாகும்.

பதிஞானம்.

பதிஞானத்தைப பகருதுமசங்கூர்
மதிஞானத்தால்வரும் பவமொழியா
தாகையாலருள்புக் காணவமொழிந்திட்
டேகமாயின்பத் தெய்துவதாகும்”

என்றருளிய சிற்றம்பல நாடிகள் பிரபந்தத்தானுங் கண்டுணர்க. “ஆணவமூழ்க்கடையு மாவிமையிளக்கியனுபூதி யடைவித்ததொருபார்வைக்காரனும்” என்றருளிய அருணகிரிநாதர் திருவாக்குண்மையானும் பதிஞானம் வெளிப்பட்டதாகலின், பசுஞானத்தைக் கனவிலும்பற்றாது சிவஞானத்தையே மேலோர் சிந்திப்பரென்க. “மறுத்தானோர் வல்லரக்கனீரைந்து முடியினொடுதோளுந்தாளு, மிறுத்தானையெழின்முளரித்தவிசின்மிசை யிருந்தான்றன் றலையிலொன்றை, யறுத்தானையாரூரிலம்மானை யாலாலமுண்டுகண்டங், கறுத்தானைக்கருத்தாதே கரும்பிருக்க விரும்புகடித்தெய்த்தவாறே” என்றருளிய ஆளுடைய வரசுகள் திருவாக்கானுந்தெளிக.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநம:,

சித்தாந்தரத்நாகரம்.

சித்தாந்தசேகரம்.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

குளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE MEMORIAL PRESS.

No. 39, THUMBOO CHETTY STREET,

31*st July* 1880.

—:o:—

ஆயின் அப்பசுஞானிகள் கூட்டுறவால் வருங்குற்ற மென்னையெனின், மேல் சிவஞானத்தை யடையவொட்டாது இதுவே யுண்மையென்று அவர் சாதித்துக்கூறும் மலபந்தவாசகத்தால் உண்மைஞானம் இழக்கப்பெறுவதே யென்க.

பசுஞானமாவது சித்திக்குமே யெனின், பிறவாமுத்தியைப் பயக்கு ஞானமன்றுகளின் மேலோர் பழிப்பரென்க.

(கண்ணுடையவள்ளலாரருளிச்செய்தது.)

"அறிந்ததெல்லாம்பொய்யென்ற வத்துவிதியார்க்கும்
வெறும்பாழிலூன்றல்விடாது - பிறந்திறப்பை
யாறுலுனதொழிவு மானந்தமாமுதிப்பும்
போனற்காணுன் பிறப்பும்போம்."

என்னும் ஒழிவிலொடுக்கத் திருவெண்பாவினாலுணர்க. இத னுண்மையைப் பின்வெண்பாக்களானும் உணர்த்துவாம்.

ஒன்றும்பிரமமுடைந்தேபலவாகிச்
சென்றுற்பல்யோனிசிரிப்பாமே - நன்றும்
பிரமம்விமலமுடைத்தாகநீர்பேசுந்
திரமென்போயிற்றே திரிந்து. (௧)

அவிகாரமாம்பிரமத்தாரோபிதங்கள்
புவிமீதுகூறிப் புலம்பில் - இவிகாரம்
வந்தவாறென்னே வருத்துளாயீர்முன்னொபின்
சிந்தமாறே செப்புவீர். (௨)

அசத்தாமுலகுஇத்தல் சத்தினிடத்தென்றே
யிசைத்துழலு மூமர்கா ளென்னே - நிசத்தெரிவி
தாமோகடத்திற் படமுதித்த லாவதெவன்
சாமாறேபோந்து சரிப்பீர். (௩)

பாலேதயிராய்ப் பரிணமித்தாலென்னவுல
கேலாகிற்கும்பிரமத் தென்றுநீர் - மாலா
யுரைப்பீர்தயிர்மீண்டு முற்றிடுமோபாலாய்
குரைப்பீர்காய்போற் கூறுவீர். (௪)

இல்லாததேததுவேமாயையெனினில்லாத
தில்லாததேயாகு மெம்மதமே - யில்லா
வொருபொருளுண்டென்ன வுரைக்குமோவேதம்
வருபொருள்வேறாக மதிப்பீர். (௫)

இருட்கேவலசகல மெய்தமோ மாயா
மருட்கோலம்போர்த்தழியுமோதான் - தெருட்காட்சி
யற்றுப்பலயோனி யார்ப்புண்டழிதருமோ
பித்துடையீர்நும்பிரமமே. (௬)

நீரோபிரமமிலைநின்றோர்நித்தியராம்
பேரோவுமக்குப் பெருவாழ்வீ - தாரோ
கொடுத்தார்காமம்வெகுளிகொண்டுமயக்குற்றே
விடுத்தார்போன்றேபேசுவீர். (௭)

பதிபசுபாசத்துண்மை பார்த்துணரமாட்டா
மதியிலிகாளும்மை மதித்தென் - விதிவசமே
யாயினுமக்கந்தகனுக் காளாகுமாறெமது
தாயுமானார் சாற்றலால். (௮)

தசமன்கதையுவமை கொண்டொளிசாற்றி
நசைதருநும்போதவொளிநன்றே - யிசையுமிடத்
தேதமுறுமூடர்பதின்மர்கதையென்று
லோதுமவர் நீர்தாமன்றோ. (௯)

சச்சிதானந்தத் தனிமுதலாமுண்மைதனை
நிச்சயிக்கமாட்டாத நீர்மூட - ரச்சமிலா
தாயுமதுதாமா யகங்கரித்தேயாடஐப்பே
ரேயுமாபோற்கூறலென். (௧௦)

குட்டித்திரட்காடி யாறெழுகக்கோன்குதிரதுக்
கட்டிப்புதைத்தகதை மேலோர் - வெட்டவெளி
யாயுரைத்து மாசிரியரல்லாரபக்குவரோ
டாயுமதென்ஞானவொளியற்று. (௧௧)

அகம்பிரமவாதத் தழுந்தியேஞாலம்
புகும்பிரமத்தொன்றுப் புகன்றே - யகங்கொண்
டழியுமறிவிலிகாள்தோதும்போத
வொழிவென்றே காண்பதொடுங்குற்று. (௧௨)

ஏகான்மவாதத் திசைந்தேயலமருவீர்
மோகாந்தகாரத்தின் மூழ்கியே - யேகாந்த
வாழ்வடைந்தார் போன்றாத்தை வாயாற்பிதற்றுவதால்
தாழ்விலையோ பேசீர் தணிந்து. (௧௩)

மாயாவாதம்பற்றிமாழ்குவீர் நுந்தகளம்
றேயாதரனடிக்கீ ழென்றுமே - பேயாய்க்
குரங்காய்க் கழுதையாய்க் குட்டிச்சுவராய்
வருந்தலிற்றே பிரமவாழ்வு. (௧௪)

மாயாமலத்தழுந்தி மாயுமதியிலிகாள்
வீயாமுன்காழி விரகன்று - ளேயாமல்
நாம்பிரமமென்று நவின்றிங் குழல்வானேன்
சாம்பிணங்களன்றோ நீர்தாம். (௧௫)

காழிப்பதிவருநங் கண்மணியாஞ்சம்பந்தன்
வாழித்திருநாமம் வாழ்த்திலா - வேழைப்
பசுக்களே நம்மைமிகப் பற்றியேநாலைக்
கிழுப்பர்நமன் றூதரே. (௧௬)

சோம்பேறிஞானர் துரிசற்றார் போற்பேசித்
தேம்பித்திரிந்துழலுந் தீதரே - நிம்பாலும்
வேம்புஞ்சமதலையில் வேண்டாதநீரன்றோ
நாம்பிரமமென்றுநவிற்றல். (௧௭)

வாயாற்பிரம வழிநின்றார் போன்றுநீ
ரோயாதுகூவி யுரைப்பதனுன் - மாயா
மயக்கங்கழிந்ததோ வன்புலாலுண்டே
தியக்கங்கொண்டே திரிகுவீர். (௧௮)

எல்லாமெமக்குவரு மெம்மோடெதிர்ப்பவரார்
வல்லார்வருகவென வாய்க்கொழுப்பால் - கல்லா
மடக்தேடியேசொற்று வந்தநீரென்றோ
இடக்தேடுவீர் மூலையில். (௧௯)

உபதேசமென்றுநீ ரோதனனி நன்றும்
விபசாரிபோலருந்தம் வேண்டி - அபசாரம்
பாராததமர்தமக் கெல்லாம்பகர்ந்திடவே
யாரோவுமக்கு விதித்தார். (௨0)

விடாமோகந்தாங்கியே வீணர்காணீர்தா
மடாஞனம்பேசியே யாவி - விடாமுன்னம்;
வைதிகமாஞ்சைவ வழிநின்றுணர்வுபெறி
னெய்துவீர்நன் முத்தியே. (௨௧)

என்னுமிவற்றூற்போந்த வுண்மை நியாயங்களால் பதிஞான மென்னும் சிவஞானமே பிறவாமுத்தியைப் பலிப்பிக்குமென்பது நாட்டப்பட்டதாகலின், அச்சிவஞானம் எளிதில் தோன்றமுயல்வது பரிபாகிகள் கடனென்க.

ஆயின், அச்சிவஞானங் கைகூடுவதெங்ஙனமெனின், "ஆறுதத்துவமுமாணவமும்வல்வினேயு,நீறுகமுத்திநிலேநிற்போர்க்குப்,பேறுகப்,பார்விரித்தநூலெல்லாம் பார்த்தறியச்சித்தியிலே, யோர்விருத்தப்பாதிபோதும்." என்னும் பிரமாணமுகத்தால் "சிவஞானசித்தியார்" என்னும் நூலின் பெருமை தோன்றக்கூறியிருத்தலால் அந்நூலின் வழியொழுகுவார்க்குச் சிவஞானம்சித்திக்குமென்க. "பாதிவிருத்தத்தால் பார்விருத்தமாகவுண்மை, சாதித்தார் பொன்னடியைச்சாருநாளெந்நாளோ." என்னுந்திருவாக்குஞ் சான்றுமென்க.

இந்நூல்எக்காலத்தது? யாருடையது? எப்படிவந்தது?எனின், சிருட்டி காலத்திலே பரமசிவன் சதாசிவமூர்த்தியை அதிஷ்டித்துக்கௌகப்பிரகார மென்றும், பிரதிஸம்ஹிதாப் பிரகாரமென்றும், இருவகைத்தாயருளின காமிகாதிவாதுளாந்தமான ஆகமம் இருபத்தெட்டையும், பிரணவாதி சிவன்கள் பதின்மரும், அநாதிருத்திரர் பதினெண்மரு மாகிய இருபத்தெண்மருக்கும், பிரதி ஸம்ஹிதாப்பிரகார மாகவும், அனந்தேசுர தேவருக்குக் கௌகப்பிரகாரமாகவும்அருளினல் அநுக்கிரகம்பண்ணினுரொன்றும், அவ்விருபத்தெட்டினுள் ரௌரவாகமத்திலே பாசவிமோசனபடலத்தில் அனுஷ்டுப்புச் சந்தசாகதுவாதசசூத்திரம் சர்வாகமசாரமாயிருக்குமென்றும், அதனை ஸ்ரீநந்திகேசுவரருக்குப்பகவான் பிரசாதித்தருளினரென்றும், அவர் சனற்குமாரபகவானுக்கும், அவர் சத்திய ஞானதரிசனிகளுக்கும், அவர் பரஞ்சோதிமஹாமுனிகளுக்கும் முறையே அனுக்கிரகித்தன ரென்றும், அப்பரஞ்சோதி மஹாமுனிகள் தென்றிசையுய்யக் கிருபாவசத்தாலெழுந்தருளியபோது திருவெண்ணெ நல்லூரென்னுந் திருப்படை

வீட்டிலே திருவவதாரஞ்செய்து சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத்திருநாமஞ் சாத்திச் சாம்சித்தராய் விளங்கியிருந்த மெய்கண்ட தேவ சிவாசாரியருக் கநுக்கிரகம்பண்ணி, இதனைப் பக்குவாத்மாக்களுக் குணர்த்தக் கடவாயென்றருளலும், அங்ஙனமருளப்பெற்ற அவ்வடநூற் சிவஞானபோதத்தைத் தென்மொழியாக்கி முதனூற் பெயராகவே யுரைத்துத் தமதருட் சத்தி பதியப்பெற்ற அருணந்திதேவசிவாசாரியருக் கனுக்கிரகித்து, இதனை விஸ்தரித்து ஒரு சாத்திரம் பண்ணுமென்றுக்ஞாபிக்க, அவரும் சகலவேதாகம புராணவிதிகாசங்களை யதாவத்தாகவுணர்ந்து லோகானுக்கிரகமாகச் சிவஞானஞ் சித்திக்கும் பொருட்டு அருளினதாகையால் "சிவஞானசித்தி" என்னும் நாமமாகப் பூர்வபட்ச சித்தாந்தத்துடனே பிரமாணத்திரயங்களி னுடைய லட்சணங்களையும், பிரமேயத்திரயமாகிய பதி பசு பாசத்தினுடைய உத்தேசலட்சண பரிக்ஷைகளையும், சரியை கிரியை யோக ஞானமென்னும் சாதன சதுட்டயங்களையும், சாலோக சாமீப சாருப சாயுஜ்யமென்னுஞ் சதுர்வித கிரமமுத்திகளையும், ஜீவன்முத்திபரமுத்தி லக்ஷணங்களையும், முறையே விளங்கவுரைத்தனரென்றும், சைவநூற் பிரமாணங்களுளவாகலின் பரிபாகிகள் கண்டுணர்வாராக.

இந்நூலுக்கதிகாரிகளாவார்யாவரெனின், பூர்வஜன்மங்களில்சிவதருமங்களை அனுஷ்டித்து ஞானசித்தியின்பொருட்டு இப்பூமியிற் பிறந்து குருவினால் தீக்ஷிதராகி முறையே சற்சாம்பிரதாயகதமான விதிநூல்-துதிநூல்-இழப்புநூல் என்பனவாகிய சைவநூல்களிற் பயின்று முத்தியை யடையவேண்டு மென்கிற விச்சையுடைய வைகயிகரோ யென்றறிக. வைகயிகரெனவே, சாம்சித்தர்க்குரித்தன்றுமென்க. "பண்டைநற்றவத்தாற்றோன்றிப்பரமனைப்பத்தி பண்ணுந், தொண்டரைத்தானேதூயகதியினிற்செருகுப்பன்" என்னும்வாக்கிய விசிட்டத்தினால் அவர் சுகவாமதேவ ஜடபாரதாதிகளென்று கண்டுகொள்க.

இங்ஙனமிற்க, விதிநூல் நித்தியகன்மநெறி, சைவசமயநெறி, முதலியனவென்றும், துதிநூல் தேவார திருவாசகமுதலியனவெ

ன்றும், இழப்புநூல் பட்டினத்தார் பிரபந்தாதிகளென்றும், பதி நூல் சிவஞானபோதம்,சிவஞானசித்தியார், சிவப்பிரகாச முதலியனவென்றுங் கொள்க. அவ்வவ்விஷயப் பிரதிபாதக சாமானிய விசேஷங்கருதி மேன்முறை வகுத்ததன்றி உண்மையில் எல்லாம் பதிநூல்களென்றே துணியப்படுமென்க.

இவைகளுள்ளே, தேவாரம் அறுபத்துமூன்று நாயன்மார்களில்திருஞானசம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள்,ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் என்னுஞ்சமயாசாரியர்கள் மூவராலும் அருளிச்செய்யப்பட்டது.சிவபெருமான்உமாதேவியாருக்குச்சதுர்யுகதருமங்களுங் கூறியபின்னர், இனிக்கலியுகத்திலேஅறுபத்துமூன்று தொண்டர்கள் பிறந்து தம்பால்மெய்யானபக்திசெய்வார்கள்எனவும்,அவர்கள்சரித்திரத்தைஉபமன்னியுபகவான் பக்தர்கூட்டத்துக்குச் சொல்லுவர் எனவுங்கூறி, அச்சரித்திரத்தை முன்னுரைத்தருளினர் என்று பரமேதிகாசமாகிய சிவரகசியத்தில் நவமாமிசத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. அவர் திருவாய் மலர்ந்தருளிய பிரகாரமே, அறுபத்துமூன்று நாயன்மார்களுந் திருவவதாரஞ் செய்து முத்திபெற்றபின்பு, உபமன்னியு மகாமுனிவர் அவர்கள் சரித்திரத்தை இருடிகளுக்கு அருளிச்செய்தார். அதற்கு உபமன்னியு பக்தவிலாசம் என்பது பெயர். உபமன்னியுமகாமுனிவர் சிவபெருமானால் வருவித்தருளப்பட்ட திருப்பாற்கடலை யுண்டவரும், கிருஷ்ணருக்குச் சிவ தீக்ஷைசெய்து சிவபூசையெழுந்தருளப்பண்ணிக்கொடுத்தவருமாயுள்ளவர் என்று, சைவபுராணம், கூர்மபுராணம், மகாபாரதம் முதலிய நூல்களாலே நிச்சயிக்கப்பட்டவர். உபமன்னியு பக்த விலாசமானது சிவரகசியத்திலே சொல்லப்பட்ட அறுபத்துமூவர் சரித்திரத்துக்கு ஒத்திருக்கின்றது. இன்னும் அகத்தியமகாமுனிவரும் இவ்வறுபத்துமூவர் சரித்திரத்தைத் தம்மாணாக்கர்களுக்கு அருளிச்செய்தனர். அதற்குஅகஸ்தியபக்தவிலாசம்என்பதுபெயர்.விஷ்ணுமூர்த்தி சிவசாருப்பியம் பெறும்பொருட்டுக் காஞ்சீபுரத்திலே தவஞ்செய்தபொழுது சிவபெருமான் வெளிப்பட்டுக் கலியுகத்திலே சீர்காழியிற் கௌணியர் கோத்திரத்தில் அவதரிக்கும் ஞானசம்பந்தனுடைய தமிழ்ப்பதிகத்தினாலே நமது சாருப்பியம் பெறக்கடவாயென்று திருவாய்மலர்ந்தருளினர் என்றும், அப்படியேநிகழ்ந்

கயவரைப்பசுநூல்கற்கும்,பிச்சரைக்காணுகண்வாய்பேசாதப்பேய்களோடே”
என்னுந் திருவிசைப்பாவினுங் கண்டுணர்க. இதனால், சத்தப்பிர
கரணம்,பஞ்சதசப்பிரகரணம், கைவல்யம்,வாசிட்டம், வாசுதேவ
மநநம், பிரபோதசந்திரோதயம், வேதாந்தசூளாமணி,ஆத்மபோ
தம்,வார்த்தீகமுதலியவைகள்பசுஞானத்தைப் பலிப்பிக்குநூல்க
ளாகலின்சைவர்க்குரித்தல்லவென்க. ஆகவே, சிவஞானபோதம்,
சிவஞானசித்தியார் முதலிய திராவிடசித்தாக்தம் பதினான்கும்,
தத்துவப்பிரகாசிகை-தத்துவசங்கிரகம்–தத்துவத்திரயநிர்ணயம்,
போககாரிகை-மோக்ஷகாரிகை-நாதகாரிகை - பரமோக்ஷநிராச
காரிகை - ரத்னத்திரயம் முதலிய அஷ்டப் பிரகரணங்களும், சித்
தாந்ததீபிகை-சித்தாந்தப் பிரகாசிகை, சித்தாந்த சிகாமணி
பிரமாணதீபிகை – பிரசாததீபிகை-சிவயோகசாரம் - சிவபோக
சாரம்-சித்தாந்தசாராவலி - தசகாரியமுதலிய ஞானநூல்களுமே
சைவர்க்குரித்தென்பது பெற்றும்.

“திருவைக்கோவைக்குங்கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவா
ற்சிவனேயென்பதுதிண்ணம். அன்றியும் அழகிய திருச்சிற்றம்ப
லமுடையார் அவர்வாக்கிற்கலந்திரந்து அருமைத்திருக்கையாலெ
ழுதினார். அப்பெருமையைநோக்காது, சிந்தாமணி - சிலப்பதிகா
ரம் - மணிமேகலை – சங்கப்பாட்டு - கொங்குவெண்மாக்கதைமுத
லியவற்றோடுசேர்த்துச் செய்யுட்களோ டொன்றாக்குவர். அங்ங
னமுமமையாது இலக்கணமாவது தொல்காப்பிய மொன்றுமே!
செய்யுளாவது திருவள்ளுவரொன்றுமே! இவ்விரண்டுநீங்கலான
இலக்கணவிலக்கியமெல்லாம்ஒன்றற்கொன்றுபெருமைசிறுமைஇ
ல்லையென்றுகொள்வாரென்பதுதோன்ற இம்முறைவைத்துஅடை
யைப்பொதுவாக்கினும். அவர் அதுமட்டோ இறையனாகப்பொ
ருள்முதலிய இலக்கணங்களையும், தேவாரம் - திருவாசகம்-திருவி
சைப்பா–திருப்பல்லாண்டு - பெரியபுராணம்- சிவஞானசித்தியார்
சிவப்பிரகாசம் - பட்டிடனத்துப்பிள்ளையார்பாடல் முதலியஇலக்
கியங்களையும் ஓர்பொருளாயெண்ணாது நல்னூல்-சின்னூல்- அகப்
பொருள்–காரிகை - அலங்காரமுதலிய இலக்கணங்களையும், பத்
துப்பாட்டு - எட்டுத்தொகை-பதினெண்கீழ்க்கணக்கு – இராமன்
கதை – நளன்கதை – அரிச்சந்திரன்கதை முதலிய விலக்கியங்க
ளையும் ஓர்பொருளாகவெண்ணி வாணாள்வீணாள்கழிப்பர். அவரி

வைகளிருக்கவே அவைகளைவிரும்புவ தென்னெனின், பாற்கடலுட்பிறந்த அதனுள்வாழுமீன்கள் அப்பாலைவிரும்பாது வேறுபலவற்றைவிரும்புதல்போல அவரதியற்கை யென்க,, என்றுசுவாமிநாததேசிகர் இலக்கணக்கொத்தென்னு நூலிற்காட்டியவுண்மையினானுங் கண்டுணர்க. இவ்வுண்மையுணர்ந்த வுத்தம பரிபாகிகள் அவலமார்க்கங்களி னில்லாது உண்மைவழியிற் சேர்ந்தொழுகுதல் கடனென்க. "புறச்சமயநெறிநின்று மகச்சமயம்புக்கும் புகன்மிருதிவழியுழன்றும்புகலுமாச்சிரம,வறத்துறைகளவையடைந்து மருந்தவங்கள்புரிந்து மருங்கலைகள்பலதெரிந்து மாரணங்கள்படித்துஞ், சிறப்புடையபுராணங்களுணர்ந்தும்வேதச் சிரப்பொருளைமிகத்தெளிந்துஞ்சென்றாற்சைவத், திறத்தடைவரிதிற்சரியைகிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" என்னும் பிரமாணத்தால் சகலசமயாதீதாத்வைத சுத்தசைவசித்தாந்தமே மீண்டுவாராமுத்திநெறியெனவும், அம்மார்க்கத்திற் சேரும் பெற்றியுடையாரே கடந்த பரிபாகிக ளெனவும் பெறப்பட்டமையே போதும். இன்ன பெருநலத்தைப் பிரசாதிக்கும் பேருளாளர் வாக்கியங்களிவையெனக் காட்டுதும்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருக்கோயிலில்லாததிருவிலூருந்திருவெண்ணீறணியாததிருவிலூரும்
பருக்கோடிப்பத்திமையாற்பாடாவூரும்பாங்கினொடுபலதளிகளில்லாவூரும்
விருப்போடுவெண்சங்கமூதாவூரும்விதானமும்வெண்கொடியுமில்லாவூரும்
அருப்போடுமலர்பறித்திட்டுண்ணாவூருமவையெல்லாமூரல்லவடவிகாடே.
திருநாமமஞ்செழுத்துஞ்செப்பாராகிற்றீவண்ணர்திறமொருகாற்பேசாராகில்
ஒருகாலுந்திருக்கோயில்சூழாராகிலுண்பதன்முன்மலர்பறித்திட்டுண்ணாராகி
லருநோய்கள்கெடவெண்ணீறணியாராகி லளியற்றார்பிறந்தவாறேதோவென்
னிற்,பெருநோய்கண்மிகநலியப்பெயர்த்துஞ்செத்துப்பிறப்பதற்கேதொழிலாகி
[யிறக்கின்றாரே.

உமாபதிசிவாசாரியசுவாமிகள்.

"தொண்டரடிதொழல்பூசைத்தொழின்மகிழ்தலழகார்
அலங்கியவர்ச்சனைபுரிதலுருகுதிநியமங்கள்
கொண்டபணிதிருவடிக்கேகொடுத்தலீசன்
குணமருவுமருக்கதையைக்குலவிக்கேட்டு
மண்டிவிழிதுளும்பன்மயிர்சிலும்பலுன்னன்
மருவுதிருப்பணிகாட்டிவருவவாங்கி
யுண்டிகொளாதொழிதலெனவிவையோரெட்டு
முடையரவர்பத்தரெனவுரைத்தனாரே"

என்பனவவை.

இவற்று றுணரப்போந்த வுண்மையெய்தும்படிப் பரமகரு ணாசாலியாகிய ஸ்ரீ சிவபெருமானையும், அவரிளைய குமாரராகிய ஸ்ரீசண்முகக்கடவுளையும் வாழ்த்துதல் செய்வாம்.

ஸ்ரீலட்சுமீநாராயணபுரம்.

சீர்தவழுமிலக்குமிநாரணபுரத்தேவயங்குஞ்
செம்மனினதடியவர்தஞ்செம்மையுளந்தேரேன்
கார்தவழுமுளத்தினனென்கசடகற்றியருளுங்
கருணைவடிவத்தியங்குங்கரதலநற்கனியே
நார்தவழுமணந்தழைக்கு நறுமலர்கள்சூடி
நாயடியேனிசைக்குமதொன்றுளதடைந்துன்னடியே
பார்தவழுங்காசிவிசு வேச துரையெனவே
பற்றியுளமுற்றும்விடாப்பெற்றிவரும்பரிசே. (க)

மாலயனிந்திரனமரர்மன்னுகணநாதர்
வாழ்த்திவழிபடவருளும்வளர்தருகற்பகமே
யோலமிடுமடியர்குழாமுட்கசிந்தேயுருகி
யுன்னருமிலக்குமிநாரணபுரத்தேயோங்கு
மாலயமேநின்னருள்கொண்டடையுமவருடனே
அரஹரசங்கரகிரிசம்புவெனநவின்றடைந்தேன்
சிலமருள்பரசிவசின்மயபரமாகாச
தேஜவிசுவேசவருள்செய்திடனின்கடனே. (உ)

தேவியுமைமாதுவிசாலட்சியிடமமருந்
தேவமஹாதேவநினதேவலகமுவந்தே
யாவலுடனுனுற்றுமடியார்புகழகிலவு
மழிவிலிலக்குமிநாராயணபுரியின்றடைந்தேன்
பாவியெனும்பழமையதுபாராட்டலொழிந்தே
பரிவுடனின்பழவடியார்பக்கலவர்தங்குற்
றேவல்புரிந்துயும்வணநன்கருள்புரிதிகொல்லோ
வெழிலுலவுங்காசிவிசுவேசவிநைந்தருளே. (ங)

மணிமன்றுணடம்புரியுமரகதப்பைங்கொடியாண்
மருவுமொருபுறமறுவின்மாணிக்கமலையே
பணிபுரியுமிலக்குமிநாரணபுரிப்பைந்தருவே
பச்சைமயிலேறுமொருபாலனிபமுகனும்

அணிதரவேயேறிவிளையாடுறுமெண்டோளம்
பாதரசிற்சுகபரமாநந்தசிதம்பரனே
இணிவருளந்தணிவறுநெஞ்சொடுதவழுஞ்சிறியேன்
செய்பிழைதீர்த்தாடிவிசுவேசசிவகுருவே. (௪)

திருநாவுக்கரையர்புகலியர்பெருமான்றிகழுந்
தேசிகசுந்தரர்வாதவூரர்மிகுதிறல்சேர்
தருகாதைசெவியாரப்பருகியவர்தங்க
டகுதிகொடேவாரதிருவாசகமுட்டணிவேய்ந்
தொருபோதுமறவாமலோதுமொருவரமே
யுளங்களிகூர்ந்தருளுதியோவொழிவினடத்தரசே
மருவாருமிலக்குமிநாரணபுரிநன்மருந்தே
மன்னும்விசுவேசஜகதீசமகிழ்ந்தருளே. (௫)

உலகவியலொழிந்தமைதியுற்றுளமெப்போது
முள்குமறிவாளருறவாடியுளமாறிக்
கலகநிலைமீறிநிஜகாரணமுட்டேறிக்
கருதருமுப்பாழதுவுங்கடந்துநினைக்காணும்
எலையறுநல்வாழ்வருளிச்செயனின்கடனேயன்
பில்லர்தானென்றகற்றூயெனுந்துணிவாலடைந்தேன்
பலர்புகழுமிலக்குமிநாரணபுரமாபதிசேர்
பரமபதியாகும்விசுவேசபசுபதியே. (௬)

மருமலர்சூழ்வனமிகுமாண்பமருமெழிஞரு
மன்னுமிலக்குமிநாராயணபுரமாநிதியே
திருவுடையார்தவநெறியேசிந்தையிசைந்தவர்தஞ்
சேவடிமாமலர்பரவுஞ்செம்மையொன்றேதருவாய்
கருவடையாவகனிலமாமோகமிஞர்வடிவங்
கலந்தமனப்பதகனெனுங்கணக்கிலுழல்கின்றேன்
அருவுருவாயிருமைகலப்பாதவுமல்லவுமா
யமரும்விசுவேசநிஜாநந்தவருட்பரனே. (௭)

என்னுளப்பாங்கெழிற்புகலிக்கிறைவனெனதுளத்தே
யினிமைகலந்திலகுமவனிணையடிமாமலரோ
யுன்னியுரைத்தன்புகெடாதுடனிலத்தேபடிந்தங்
குச்சிகரஞ்சேர்த்துமலருகுத்துமகிழ்ந்திடவே

பன்னுவனின்பாலருட்கண்பார்த்திடனின்கடனே
  பரம்பரனேயிலக்குமிநாரணபுரிப்பண்ணவனே
என்னதுநானெனுமகந்தையகந்திடுமாமுனிவ
  ரோத்தும்விசுவேசபரமேசநயந்தருளே. (௮)

ஏகமிரண்டெனுமயலெய்தேலெனக்கண்ணுடையார்க்
  கிசைத்தனர்சம்பந்ததுரையெனுமவர்வாய்மையினு
மாகமொழிப்போதவுளவறியுமதியிழந்தே
  மதங்களெனும்படுகுழிவீழ்ந்தமிழ்ந்துமயங்கினனல்
நாகமுலைத்தடமட்டவார்நடநவிற்றும்பழமை
  நண்ணுமிலக்குமிநாராயணபுரமேநணுகி
யாகமுதலாமவித்தையானபலகடந்தே
  யடையவிசுவேசநினையடைவினருள்புரியே. [illegible])

நீறுபுனைந்தொளிர்தருகண்டிகைபூண்டுநிதமு
  நித்தநிமலாத்துவிதசத்தியநன்னெறியே
வீறுபுனைந்துளமகிழ்பூத்தன்புநனிமேவி
  விளம்பருபஞ்சாக்கரநல்விருப்பமுறச்செபித்துத்
தேறிமயலொழிந்தனஞ்சூழ்தருவயல்சேரழிவில்
  செம்மையிலக்குமிநாராயணபுரஞ்சென்றடைவார்க்
கிறில்பரிபூரணனெங்கோன்விசுவநாத
  னின்னருள்செய்வானெனுமாகமநிகமாதிகளே.

ஸ்ரீசண்முகஞானபுரம்.

பொன்பூத்தபூங்கொன்றைவேணியானிடம்பூத்தபூங்கொடிக்கட்
பின்பூத்தசேயெனவேபேர்பூத்தவாய்மைதிகழ்பெரியோய்வென்றிக்
கொன்பூத்தவயிற்படையெங்கோமானேயின்பநலஞ்சுரந்துநின்பால்
மன்பூத்தவளந்தருசண்முகஞானபுரத்தடைந்தேன்மௌனவாழ்வே. (௧)

வாழ்த்துமடியார்வாழவரமருளுமணிக்குன்றேவயங்குமெய்ம்மை
சூழ்த்தமொருதனிமுதலேசுருதிமுடிமேனின்றதுணையோநாளும்
பாழ்த்தமனப்பதகனடியேனருள்பெற்றுய்யுநெறிபகராயன்பர்
தாழ்த்திமுடிவணங்குறுசண்முகஞானபுரத்தில்வளர்சகசப்பேறே. (௨)

பேறனைத்துமுதவுமருட்பெருமானின்பொன்னடிகள்பேணிவாழு
மாறறியாதந்தோவெம்பவத்தொடக்காலகம்பிரமமென்றுவாளா
கூறியலக்கண்பட்டிங்கழிவார்தங்கூற்றிகந்துகுலவும்வாய்மை
வீறுமெழிற்பதியாஞ்சண்முகஞானபுரம்பணிந்தேன்விறல்வேலோனே. (௩)

பதியாமுன்றனைப்போற்றும்பருவமுடையேனல்லேன்பாசஜால
முதிர்ஞானமிகவல்லேன்முத்திநலங்கமழுமருண்மொய்த்தநின்சீர்த்
துதிமேவுவார்க்கருளுந்துரையேநற்றணிகைமலைச்சோதியேயெங்
கதியேஇங்கருளாய்சண்முகஞானபுரத்தில்வளர்கருணைத்தேவே. (௪)

தேவேசூர்ப்பகைதடிந்தசிவக்கன்றேயெமைச்சழக்கிற்செலுத்தாதாளெங்
கோவேயன்றறுவர்முலைப்பாலுண்டுவிளையாடுங்குழந்தாய்மோனப்
பூவேபூங்கமலமிசையானெடுமால்போற்றுமருட்பொருப்பேசைவக்
காவேசண்முகஞானபுரத்தமர்ந்தபராஞானங்கமழுங்குன்றே. (௫)

குன்றமிசையேறியடியாருள்ளமேறியெழில்குலவுபச்சை
வென்றிமயிலேறியருட்பான்மடியிலேறியிடமேவுமம்மை
நன்றுவந்துகண்களிக்கடந்தேறிமுன்வந்துநடிக்குமெந்தாய்
[illegible]றனுளமேறுதிசண்முகஞானபுரத்தமினிதேறுவானே. (௬)

வானேவான்வந்துலவுமாருதமேமண்கடையாய்வந்தவின்பத்
தேனேதேன்கைக்குமருட்டீஞ்சொல்பயிலஞ்சுகங்கள்சேர்ந்துவாழுந்
தானேநானாய்த்தழைத்ததருவேசத்தியஞானந்தருவோயுன்னைத்
தானேசண்முகஞானபுரத்தினில்வந்தடிநாயேன்றரிசித்தேனே. (௭)

ஏனோவிங்கலமரவைத்தாயென்னையேன்றுகொளாதிறையேயுன்னை
நானேவந்தடிவணங்குநலமுளதோநயந்தருணிநல்காயாயின்
தேனூருஞ்செங்கழுநீர்த்தொடைபுனைந்தசெங்கரும்பேதித்தித்தென்னுட்
கோனாய்நின்றெழிறருசண்முகஞானபுரத்தில்வருகுமரவேளே. (௮)

மருவாருந்தண்கடப்பந்தாராயெஞ்சித்த[illegible]த்திவாய்ப்பகின்சீர்த்
திருவாரும்பாதமலர்தாராயிந்திரைமகிழுஞ்செங்கண்மாலோன்
றருவானைச்சிறைவிடுத்ததமனியக்குன்றேயெஞ்சம்பந்தஞான
குருவேசண்முகஞானபுரத்துமடியாரிடத்துங்குடிகொண்டானே. (௯)

கொண்டலிவர்ந்தானுள்ளம்பூப்பவருமருமானின்கோலங்காணும்
பண்டைவினைவந்துறுமோபாவியேற்கருளாயின்பவளவான்கற்
கண்டனையாய்சிவமணங்கந்திக்குமொருபன்னிரண்டுகண்ணாய்வாய்மைத்
தொண்டர்புகழ்மலிதருசண்முகஞானபுரத்தமர்ந்துதுலங்கும்பொற்பே. (௰)

வாழ்த்து.

வாழிமாமறை யாகமமாபதிக் - காழிமாதவனுதியர் கட்டுரை
வாழிமாதுமை யாகமுமாபதிக் - காழிமாதரப்பூங் கழற்கானமே.

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

அந்தக்கீதைமுழுதுங் கேட்டபின்னர்ச் சந்தேகமில்லாதவனாகவி ருக்கிறேன், உன்னுடைய வசனப்பிரகாரஞ் செய்கிறே னென்று கண்ணனிடம் அர்ஜுனன் சொன்னமையால் அவனிடம் சம்சய த்தை யூகிப்பது அசங்கதமாயிட்டு. அவனுக்குத் தங்களினத்தா ரோடு சண்டைசெய்வது யோக்யமா, அயோக்யமா வென்னுஞ் சங்கைநிவிர்த்தியொன்றே யாண்டமைந்து நான்யுத்தஞ் செய் கிறேனென்றவன் கடைப் பிடித்தமையேசாலும். அங்யதாகிரகிப் போமெனின், "సర్వధర్మాన్పరిత్యజ్య మామేకంశరణంవ్రజ" என்னும் வச னத்தால் சர்வ தர்மங்களையும் பரித்தியாகம் பண்ணிப் போட்டு என்னையே சரணமடையென்றுபதேசித்த கண்ணனுபதேசத்திற் கட்டுண்டவனாகிச் சந்தேகமில்லாதவனாய்விட்டேனென்ற வசன த்தின்பிரவர்த்தியினாலே யுன்னையே சரணமடையலாமா, மற்றொ ருவனை யடையலாமா வென்னுஞ் சந்தேகமானது நிவிர்த்திக்கப் பட்டது. ஆகையால், சர்வதர்மங்களையும் பரித்யாகம் பண்ணும் படி விதித்த வுன்வாக்கியப்படியே செய்கிறேனென்னும் அர்ஜு னனுடைய விஷ்டாபத்தியை யூகிக்கின் என்னுடைய சம்மதமில் லையென்பதுபெறப்பட்டமையேசேரும். உன்வாக்கியப்படியேசெ ய்கிறேனென்றதற்கு மாறாய் அவனுக்கு யாவஜ்ஜீவகாலமும் சிவ பூஜாநிஷ்டத்தன்மையே சாஸ்திரசித்தமாதலுங் காண்கையால். இனி அநுகீதாரம்பத்திலே வந்திருக்கிற அர்ஜுனனுடைய பிரசி னையினுபக்கிரமத்தாலும் மேலுண்மைவெளிப்படும்.

> విదితం మే మహాబాహో సంగ్రామే సముపస్థితే
> మాహాత్మ్యం దేవకీపుత్ర తచ్చ తే రూపమైశ్వరం॥

இ-ள். வாருமையா மஹாபாஹுவான கிருஷ்ணரே! யுத்த மானது நேரிட்டகாலத்தில் தேவகிபுத்திராகிய வும்முடைய மா ஹாத்மியமானது தெரிந்துகொள்ளப்பட்டதெதுவோ, அது ஈசு வரனுடைய ரூபமென்று அறிந்தேன். எ-று.

இதனால், அந்தயுத்தகாலத்தில் நானிப்படியறியாமற் போ னேனென்றும், இப்போது அவ்வுண்மையை யறிய விரும்புகிறே னென்றும், முன்னுபதேசித்ததுமறதியாய்விட்டதென்றும்பாவம். மேல் அர்ஜுனனுக்கு முன்னுபதேசிக்கப்பட்டிருக்கிற அர்த்தத்தி

னுடைய நிச்சயமானது உண்டாகவில்லையென்று வெளிப்பட்ட தன்மேல் ஸ்ரீ கிருஷ்ணர் பதிலுரைத்தவாக்கியத்தையும்பரியாலோசிப்பாம்.

ఇత్థమస్యయదిసంశయోఽభవేదన్యథాగ్రహణమేవవాపునః
నాగ్రహీన్మదుపదిష్టమేషఇత్యాగ్రహంహరిరవోచదుత్తరే॥

(இ-ள்.) இந்த அர்ஜுனனுக்கு இந்தப்பிரகாரம் சமிசயமாவது, வேறுவிதமாய்க் கிரகிக்குங்குணமாவது உண்டாயிருக்குமானல் மறுபடியும் என்னுலுபதேசிக்கப்பட்ட அர்த்தத்தையிவன் கிரகிக்கப்போகிற தில்லையென்று ஆக்கிரஹமாக ஸ்ரீ கிருஷ்ணரானவர் உத்தராரம்பத்திற் சொன்னர். எ-று.

శ్రావితస్త్వంమయాగుహ్యం జ్ఞాపితశ్చసనాతనం
ధర్మస్వరూపిణంపార్థ సర్వలోకాంశ్చశాశ్వతాన్
అబుద్ధ్యాయన్నగృహ్ణీథాః శాస్త్రంమేసుమహాప్రియం
నూనమశ్రద్దధానోఽసి దుర్మేధాశ్చాసిపాండవ
సహిధర్మస్సుపర్యాప్తో బ్రహ్మణఃపదవేదనే.॥

(இ-ள்.) இந்தப்பிரகாரம் அந்த அநுகீதாசாஸ்திரத்தில்பிரதியுத்தராரம்பத்தில்கேட்ட பழமையாயும், தர்மசொரூபியாயுமிருக்கிற பிரம்ஹத்தையும், சாசுவிதங்களாயிருக்கிற லோகங்களையுங் குறித்து என்னலே யோக்கியமாக ஞாபகப் படுத்தப்பட்டாய். எனக்கு வெகுபிரியமாயிருக்கிற சாஸ்திரங்களைத் துர்ப்புத்தியாலும், அஞ்ஞானத்தாலுங் கிரகியாமற்போனய். நிச்சயமாகச்சிரத்தை யில்லாதவனுகவும், துர்ப்புத்தியுள்ளவனுகவு மாய்விட்டாய். வாராய் அர்ஜுன! என்னல் சொல்லப்பட்ட அந்தத்தர்மமானது பிரம்ஹத்தை யறிவதற்குப் போதுமானதாயிருக்கின்றது. எ-று.

என்னும்ஸ்ரீகிருஷ்ணர்வாக்கியத்தில்அறியப்பட்டதென்றும், நஷ்டமாய்ப்போய்விட்டதென்றும், அஞ்ஞானத்தா லிவன்கிரகிக்கவில்லையென்றும் வெளிப்பட்டிருக்கின்றது. கீதையாலுபதேசிக்கப்பட்ட ரஹஸ்யார்த்தத்தைக்கிரகிப்பதற்கு சக்தியில்லாதவனை தன்னிடத்தில் உபதேசத்துக்கு யோக்யனயிருக்கிற தன்மையைக் காட்டும்படியானபுத்திவிகாச முண்டாகவேண்டுமென்றுசொல்லி

தமென்றும், காஞ்சிமான்மியத்து இருபத்துநான்காம் அத்தியாய த்திற் சொல்லப்பட்டது. சிவபாதஹ்ருதயர் சமணசமயத்தையு ம், பௌத்தசமயத்தையும் மறுத்துச் சைவத்தை நிறுத்தும்பொ ருட்டு முருகக்கடவுளைத் தமக்குப் புத்திரராகத் தரும்படித்தவஞ் செய்தமையால், சிவபெருமான் முருகக்கடவுளைப் புத்திரராகக் கொடுத்தருளினர் என்பதும், அவர்சரித்திரமும், சீர்காழிமான்மி யத்து இருபத்துமூன்றும் அத்தியாயத்திற் சொல்லப்பட்டன. இ வர் சரித்திரத்தின் ஓர்பாகம் ஆலாசியமான்மியத்துஞ் சொல்லப் பட்டது. திருஞானசம்பந்த சுவாமிகள் குழந்தைப் பருவத்தில் உமாதேவியாருடைய ஞானப்பாலுண்டு தமிழ்ப்பதிகஞ் செய் தருளினமை வடமொழிச் சௌந்தரியலகரியிலே சிறப்பித்துரை க்கப்பட்டது. அச்சௌந்தரியலகரி, ஆதியிலே திருக்கைலாசம லையில் எழுதப்பட்டிருந்து, பின்பு புஷ்பதந்தமுனிவராலே மகா மேருமலையில் எழுதப்பட்டு, பின்பு கௌடபாதமுனிவராலே சங் கராசாரியருக்கு உபதேசிக்கப்பட்டு, பின்பு அவராலே இப்பர தகண்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாதிசங்கரர் கண்ண ப்ப சுவாமிகளைச் சிவாநந்த லஹரியினும், இயற்பகைநாயனர், சிறுத்தொண்டநாயனர், சண்டேசுரநாயனர் முதலியவர்களைச் சி வபுஜங்கத்திலுந் துதித்துச் சிவாநந்த வாழ்வடைந்தவரென்க.

திருவாசகம் ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிக ளென்னுஞ் சமயாசாரியரால் அருளிச்செய்யப்பட்டு ஸ்ரீ நடராஜமூர்த்தியா லெழுதியருளப்பட்டது. அவர் சரித்திரம் ஆலாசியமான்மியம், திருப்பெருந்துறை மான்மியம், மணிவாசகதீபிகை முதலியவைக ளிலே சொல்லப்பட்டது. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முத லியன திருமாளிகைத் தேவர்முதலிய ஒன்பது நாயன்மார்களால் செய்யப்பட்டன. இந்நாயன்மார்கள் சரித்திரமும், இவர்கள் செ ய்தருளிய அற்புதங்களும், திருவாவடுதுறைமான்மியமுதலியவை களிலே சொல்லப்பட்டன. பெரியபுராணம் சேக்கிழார் சுவாமிக ளால் செய்யப்பட்டது. அவர்சரித்திரமாகிய சேக்கிழார் புராண ஞ் செய்தளினவர் தில்லைவாழந்தணருள் ஒருவரும், சந்தான சமயகுரவர் நால்வருள் ஒருவருமாகிய உமாபதி சிவாசாரியசுவா மிகள். இவர் சபாநாயகர் விடுத்தருளிய "அடியார்க்கெளியன் சிற்றம்ப லவன்கொற்றங், குடியார்க்கெழுதியகைச்சீட்டுப், படியின் மிசைப், பெற்றான்

சாம்பனுக்குப் பேதமறத்திக்கைசெய்து, முத்திகொடுக்கமுறை" என்னுந்திருமுகத்தைப் பெற்றுக்கொண்டு பெற்றான் சாம்பனுக்கு முத்திகொடுத்தருளி, அப்பெற்றான்சாம்பனுடைய மனைவி அரசன் முதலாயினோர்கொண்ட சந்தேகத்தை யொழித்தற்பொருட்டு முள்ளிச் செடிக்கும் முத்திகொடுத்தருளினவர். இவ்வுண்மைகளால் வேதத்தினும்பார்க்க இவைகளிற்றானே தமக்குப்பிரீதி யென்று சிவபிரான் உமாதேவியாருக்குக் கூறினரென்று சிவரகசியத்திற் கூறிய கிரந்தங்களினாற் றுணியப்படும்.

இங்ஙனநிற்க, சிவஞானபோதம் முதனூலாக மெய்கண்டதேவசிவாசாரியராலும், சிவஞானசித்தியார் வழிநூலாக அருணந்திதேவ சிவாசாரியராலும், சிவப்பிரகாசம் சார்புநூலாக உமாபதிசிவாசாரியராலும் செய்யப்பட்டனவென்க. இவர் அருணந்திதேவசிவாசாரியரா லனுக்கிரகிக்கப்பெற்ற மறைஞானசம்பந்த சிவாசாரியர் மாணாக்கரென்க. இவைகளன்றியும், திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், நம்பிகாடவநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதர், புருடோத்தம நம்பி,சேதிராயர்முதலிய சிவானுபூதிமான்கள் செய்தருளிய திருமுறைகளும், ஸ்ரீநீலகண்ட சிவாசாரியசுவாமிகள், அகோரசிவாசாரிய சுவாமிகள், சர்வாத்மசம்புசிவாசாரியசுவாமிகள், சிவாக்கிரயோகிகள், போஜராஜேந்திரர், ஞானப்பிரகாசசுவாமிகள்,சிவப்பிரகாசசுவாமிகள், நமச்சிவாயமூர்த்திகள், சிவஞானசுவாமிகள், சுவாமிநாத தேசிகர் முதலிய சிவாநுபூதிமான்களால் செய்யப்பட்ட பிரபந்தங்களும் எண்ணிறந்தனவாகப் பதிஞானத்தைப் பலிப்பிக்கும் உண்மைநூல்களாய் விளங்கியிருக்கவும், அவற்றையாராயும் புண்ணியமில்லாமல் மாங்கலியத்தைத் தரித்துக் கொண்டு தங்கள் தங்கள் நாயகருக்குத் துரோகஞ்செய்து இல்லொழுக்கிறந்தபெண்டிர்கள்போல விபூதிருத்ராக்ஷங்களைத்தரித்துக்கொண்டு சிவபெருமானோடு விஷ்ணுவாதி பசுக்களைச் சமமெனக் கூறியும், பசுக்களாகிய தாமே அச்சிவமென்று பிதற்றியும், சிவவாக்காகிய சிவாகமங்களையும், சிவாசாரியர்களையு நிந்தித்தொழுகும் அதிபாதகர்களால் செய்யப்பட்ட பசுநூல்களைப் பாராட்டித்திரிவது பாவம்!பாவம்!! "எச்சிலைத்தலையைக்கொண்டு செண்டடித்திடபமேறி, யச்சங்கொண்டமரரோட நின்றவம்பலவத்கல்லாக், கச்சாக்கல்லாப்பொல்லாக்

மறுபடியும் வினவிய ஸாரமான அர்த்தமானது நஷ்டமாச்சுதென்று பிரஸ்தாபித்தபடியும், அவனுக்குச் சமிசயமிருக்குமேயானல் மோஹமாவதிருந்தாலும் பரப்பிரம்ஹம் உபதேசிக்கப்படும் என்றுரைத்தபடியும் விளங்கலா லவ்வர்ஜுனனுடைய புத்தியானது இரண்டுவிதத்தினுலேயும் என்னுலுபதேசிக்கப்பட்ட அர்த்தக்கிரஹணத்துக்கு யோக்யப்படவில்லையென்று ஸ்ரீ கிருஷ்ணரபிப்பிராயம் வெளிப்படுகின்றது. யுத்தத்தினுடைய ஆரம்பத்தில் நிலையில்லாத் தன்மையைச்செய்துகொண்டிருக்கிற புத்தியினுடைய ஏகாக்கிரபாவமே காரணமாகையால் அஃதில்லாதபோது சகலபாரத்தையும் வகிக்கும்படியான கிருஷ்ணனிருப்பதால் எனக்கு யாதொருநிமித்தமுமில்லை யென்று அர்ஜுனன் சொன்னனென்றும், புத்திசாபலியத்துக்கு விரோதியாயிருக்கிற ஸ்ரீகிருஷ்ணர் விஷயமான விசுவாச ரூபமாயிருக்கிற சிரத்தையினுடைய பாவமானது தானே சகலபாரத்தையும் வகிக்கும்படியானதாயிருக்கிறதென்றும், துரகங்காரத்தினுற் செய்யப்பட்ட துர்ப்புத்தியான மூலமே தெரிந்துகொள்ளாமைக்குக் காரணமென்றும் வெளியாயினமையே யன்றி மறுபடியும் உபதேசிக்கும்படியான அர்த்தத்திலே அவ்வர்ஜுனனுக்குக் கிரகியாமையானது உண்டாகவேண்டாம் என்று கோபத்தை யபிநயப்படுத்தி அவன் சுகமாகத்தெரிந்துகொள்ளுநிமித்தம் சாதுரியத்தினுலேவிளங்குஞ்சொற்களால் கீதையா லுபதேசிக்கப்பட்ட சகலார்த்தங்களையும் பரப்பிரம்ஹ பாவமாகவே கொள்ளென்றும், என்னுடைய சம்பந்தமாகக்கொள்ளற்கவென்றும், அவையென்பரமாகாவென்றும் ஸ்ரீகிருஷ்ணர் சொல்லிய வுண்மையும் வெளிப்பட்டது.

அவதாரிகை.

மற்றுரைக்கப்பட்டது யாதெனின், யாதொரு பரமசிவன் என்னல் சரணமாக அடையப் பட்டாரோ, என்னுலுபாசிக்கத் தகுந்தவராக விருக்கின்முரோ, அவருடைய மகிமையேயென்று ஸ்ரீகிருஷ்ணரால் எஞ்சனுவிர்த்தியால் காண்பிக்கப்பட்டதென்பதைப்பிரவசனித்தபடியாம்.

(சுலோகம்.)

ఉక్త్వా చ సంశయవిపర్యయయోర్నిదానం
చ శ్రీహరి[illegible]

శక్యంతదన్యనమయాభణితంతదోక్తుం
యోగాధిరూఢమనసానబహిర్దృశేతి. ॥౧౩॥

(மொழிபெயர்ப்பு.)

சாதுரியமாமிந்தமொழிகிரையாற்பற்குனனுர்சமிசடங்க
ளேதுமிலாவகையருளினனன்றேகண்ணனவையிசைக்கின்யோக
சாதகமேலீடொன்றுமனமுடையென்னலன்றுசாற்றமுண்மைப்
போதசிவருபகவின்றிடவின்றுபோதாதுபுறத்தாறின்றே. (௧௩)

(இ-ள்.) கிருஷ்ணரானவர் இந்தச்சாதுரிய மாயிருக்கிற சொல்லினுடைய வரிசையால் அர்ஜுனனுடைய சம்சயவிபரீத ஞானங்களுடைய நிவர்த்தியைத்தேடினுர். எங்ஙனமெனின், யோகத்தையடைந்திருக்கிற மனசையுடைய என்னுலே அப்படிச்சொல்லப்பட்ட சிவசொரூபமானது இப்போது சொல்வது சாத்தியமன்று. வெளிப்பார்வையினுலே சொல்லத்தக்கதல்லவென்றபடியாம். எ-று.

பிரம்ஹசொரூபத்தை யறியும்படியான வகையில் அந்தத். தருமமானது போதுமானது என்று சொன்னதற்கு மேல் கிருஷ்ணர் வசனம்வருமாறு.

నశక్యతన్మయాభూయస్తథావక్తుమశేషతః
పరంవాధర్మమధికంయోగయుక్తేనతన్మయా॥

(இ-ள்.) ஓய்அர்ஜுனு! அந்தப்பிரம்ஹசொரூபமானது பூர்னமாகக்குறைவின்றி யென்னுலேசொல்லப்படுவது சாத்தியமன்று. யோகமாகிய ஞானத்தோடே கூடியவென்னுலே அந்தச்சொரூபமானது அதிகதர்மமாகச் சொல்லப்பட்டது. எ-று.

இந்தவிடத்தில யோகாரூடமாயிருக்கிறமனசாலேயே சொல்லப்பட்டது என்றது கொண்டு பாஹிர்மனசால் சொல்லப்படவில்லையென்றும், அடங்கியமனசில்லாமல் வெளிப்பட்டமனசால் சொல்வது அசாத்யமென்றும் பெறப்பட்டவாறறிக.

இங்ஙனம்பெறப்படுதலுக்கு வேறுகக்கற்பிக்கப்பட்டசொல்லுகளின்வரிசையால் உபதேசிக்கப்பட்ட சகலமானமகிமையும் எனதுசம்பந்த முடையனவன்றும். எல்லாமெனக்கன்னியனுகிய

தாபிதனேபோற்றுந் தலைமைபெறுசம்பந்தா
சோபிதனேதேர்ந்தேனுன் சொல். (௪௨)

சொல்லாருஞானத்தெளிஞரோ யென்றுசொலும்
வல்லாளர்பாதமருவியே—நில்லா
வெனக்கும்வருமோவுன்ற னின்னருள்சம்பந்தா
மனக்கவலைமேற்கொள்ளாமல். (௪௩)

ஆமல்லவென்றேயறையுமவரவர்க்குப்
பூமாணியாகிற் புனிதனே—தாமாக
வொன்றுமறியாராவ ருன்விளையாட்டேயாகு
மென்றறிவேன் சம்பந்தனே. (௪௪)

தன்னியராமெங்கடலைவனார்சம்பந்தர்
பொன்னினடித்தாமரையைப் போற்றுவார்—மன்னியெழு
மானந்தவெள்ளத்தழுந்துவார் வெம்பிறவி
யூனம்புகாமனுயிருய்ந்து (௪௫)

காமனுடல்பொடியாக் கண்டவகண்டிதன்பால்
வாமத்தொருத்தியருள் வாய்க்குமே—சேமநிதிப்
பேறெனவேசம்பந்தப் பேரானையுட்டெளியின்
கூறுவதாலுண்டோ குறை. (௪௬)

குறையுண்டோகாழிக் குரவனடிப்பூ
விறையுமதிகொண்டு நினையின்—இறையளவே
போதும்புகழ்க்கருணைப் புண்ணியனார்சீர்ப்பதிக
மோதுந்தகுதியுளோர்க்கு. (௪௭)

ஓரார்மறைக்காட்டி லுற்றகதவடைத்த
தேராருந்தென்புகலி யெம்பெருமான்—பாரார்
பழவினையேதோய்வுற் றுழியாப்பவமா
மிழிவினைவந்தெய்து மிதனால். (௪௮)

நான்மறையின்மிக்க நலமுடைத்தாமாகமமெய்க்
நூன்முறைசொற்றான்பாதநோற்றுளோர்-கான்மலையிற்
பட்டபெரும்புகழைப் பாடுகிற்பார்சம்பந்தன்
மட்டவிழ்தாள்பெற்றார் மணந்து. (௪௯)

பெற்றலைநீர்வைப்பிற் பிறந்தங்கலமருவீர்
கொற்றவன்சீகாழிவருங் கோமானார்—பொற்றேர்
வடம்பிடிக்கவாருங்கோண் மாலயனுக்கெட்டா
விடம்பிடிக்கவேண்டுமெனிலின்று. (௫௰)

இன்றேபசுமார்க்க மெம்பிரான்சம்பந்த
னன்றேயழியத்தருளு மாற்றினால்—நன்றே
புகழ்மினவனருளைப் புன்சமயமற்றின்
திகழ்வினிருந்தும் மில்லையால். (௫௧)

இல்வாழ்க்கைநன்றேயா மெய்தினியவெல்லா
மல்வாழ்க்கைகொண்டிங் கலைவதேன்—புல்வாழ்க்கை
நீத்தார்நெடும்பிறவி நேர்கிலர்மற்றெய்துவார்
பூத்தார்ச்சம்பந்தன் புகல். (௫௨)

பந்தர்சிவிகை பாணர்கொடுத்திடவன்
றந்தமுடன்பெற்றவழகனே—சுந்தரஞ்சேர்
பால்வடியுநின்முகநான் பார்த்திருக்கச்சம்பந்தா
கால்படியவந்தருளிக்கா. (௫௩)

இக்குமொழிப்பேதையர்பாலெய்தியவரின்பம்
பக்குவமென்றுன்னிப் பருகுவேன்—அக்கரவஞ்
சூடும்பிரானருளிற் றோய்வனோசம்பந்தா
கூடவேயெற்குனருள் கூர் (௫௪)

கூர்வேன்மறைத்துக் குருவடிவங்கொண்டுதித்த
சீர்சால்புடையசிவக்கன்றே—யார்பாற்றான்
சென்றென்குறைபகர்வான் சேர்ந்திடுவேன்சம்பந்தா
நன்றருளுன்பொன்னருளிந் நாள். (௫௫)

நாளவலமேபோக்கி னாருன்னலனறியாக்
கோளர்மிகுந்திவினைகைக்கொண்டே—காளிநகர்ச்
சம்பந்தநாமத் தனியே தனிமுதலே
வெம்பந்தந்தீர்ப்பா ரெவர். (௫௬)

ஆயுநிகமா கமங்களருள்விரவும்
வாய்மைவளநீறு மாமணியுக்—தூயவெழுத்

தரங்களைச்சொல்லாமல் பிரசித்தப்படுத்தி, அந்தப்பிரம்ஹசொரு பத்தின்விவரத்தை ஸ்ரீ கிருஷ்ணர்செய்தனர். எ-று.

முன்சொன்ன இதிகாச கற்பனையினாலே கிடைத்திருக்கும் படியான அர்த்தங்களுடைய கூட்டத்தை நன்றாக மனசினாலேயா லோசித்து இது இந்தப்பிரகாரமேதானென்று அவ்வர்ஜுனனு டையபுத்தியிலேயும், முன்தன்னாலே செய்யப்பட்டவுறுதிப்பாட் டையொராறொரு கற்பனையினுடைய ரீதியினாலே காண்பித்தார். அந்தக்கற்பனைபங்கியானது தனதுபுத்தி மனசுகளைப் பிராம்ஹண தம்பதிகளாகச்செய்து கூறியதேயாம்.

బ్రాహ్మణీబ్రాహ్మణంకంచిత్ జ్ఞానవిజ్ఞానపారగం
దృష్ట్వావివిక్తఆసీనం భార్యాభర్తారమబ్రవీత్.॥

(இ-ள்.) ஒருபிராம்ஹணஸ்திரீயானவள் ஞானவிஞ்ஞானங்க ளுடைய கரையைக்கண்டவராயிருக்கிற வோர்பிராம்ஹணரைப் பார்த்துச் சித்தானுசாரமாயிருந்துகொண்டிருக்கும்போது பாரி யாளாகிய வந்தப்பிராம்ஹண ஸ்திரீயானவள் பர்த்தாவைக்குறித் துச் சொல்லுகின்றாள். எ-று.

இத்யாதிகளால் பிராம்ஹண ஸ்திரீயினுடைய பிரசினத்தை யவதரிப்பித்து அதற்குப் பிராம்ஹணனாலே சொல்லப்பட்டிருக் கிறவுத்தரத்தினாலே பழமையாயிருக்கிற சகலமானவிதிகாசார்த் தத்தையுந்தெரிவித்த படியாம்.

యదిదంబ్రహ్మణోలింగం క్షేత్రజ్ఞ ఇతిసంజ్ఞితం
గ్రహీతుంయేనతచ్ఛక్యంలక్షణంతస్యతత్క్వను॥

(இ-ள்.) க்ஷேத்திரக்ஞனென்றுசொல்லப்படும் யாதொருபிர ம்ஹத்துக்கு லட்சணங்களுண்டோ, அந்தலட்சணத்தைக்கிரகிப்ப தற்குச் சாத்யமானவுபாயம் யாதோ, அதைச்சொல்லு மென்று பிராம்ஹணஸ்திரீயானவள் பிரசினைபண்ணினள். எ-று.

என்ற சுலோகத்தினாலே பந்தமுக்திகளின் பிரயோசனத் தை யடைந்தவராயும், சரீரத்தைக் காட்டிலும் வேறாயிருக்கிற க்ஷேத்திரக்ஞனுடைய கிரகண வுபாயத்தைச்சொல்லும்படியான வராயும் விளங்கும் பிராம்ஹணரைப்பார்த்துப் பிராம்ஹணஸ்திரீ

யானவள் மறுபடியும் வினவையுண்டுபண்ணுகையில் பிராம்ஹண னலேயதற்குத்தரஞ் சொல்லப்பட்டவுபாயமும் அநந்தரம்சொல் லப்பட்டது.

(அர்ஜுனன்சொல்லுகிற வசனம்.)

క్వసా బ్రాహ్మణీ కృష్ణ క్వచాసౌ బ్రాహ్మణస్స్మృతః
యాభ్యాం సిద్ధిరియం ప్రాప్తా తావుభౌ వద మేచ్యుత ॥

(இ-ள்.) வாராய் கிருஷ்ணா! அந்தப்பிராம்ஹணஸ்திரீ யார்? அந்தப்பிராம்ஹணன்யாவன்? எந்தப்பிராம்ஹண தம்பதிகளாலே யிந்தப்பிரம்ஹஸித்தி யடையப்பட்டதோ, அவர்களை யெனக்குச் சொல்லும். எ-று.

என்று அர்ஜுனனலே கேட்கப்பட்ட ஸ்ரீகிருஷ்ணருடைய வுத்தரவானது சமீபிக்கபபட்டது.

మనో మే బ్రాహ్మణం విద్ధి బుద్ధిం మే విద్ధి బ్రాహ్మణీం
క్షేత్రజ్ఞ ఇతి యశ్చోక్తః సోహమేవ ధనంజయ ॥

(இ-ள்.) என்னுடைய மனசைப் பிராம்ஹணனாகத் தெரிந்து கொள்ளு. என்னுடைய புத்தியைப் பிராம்ஹணஸ்திரீயாகத்தெரி ந்துகொள்ளு. க்ஷேத்திரக்ஞனென்று யாது சொல்லப்பட்டதோ அது நான் என்று அறியக்கடவாய். எ-று.

இந்தப்பிரகாரம் பகவானயிருக்கிற கிருஷ்ணனலே தனக் குக் கீதையிலே யுபதேசிக்கப்பட்ட பிரம்ஹவிஷயமான சிரவண மநநங்களை யுடையதான வுபாக்யானங்க ளிரண்டும் கல்பனையி னலே விவரிக்கப்பட்டன. அனந்தரம் அந்தச்சாஸ்திரமுகத்தால் தனக்குத் தன்னலே கேட்கப்பட்ட சித்தாந்த பரிவசானத்தால் பரப்பிரம்ஹத்தில் மனசை யடக்குவதும், அதற்குபயுக்தமா யுள் ள பக்தியை நிலைப்படுத்துகிற நிமித்தம் மனசினலே பரப்பிரம்ஹ பாவங்களுக்கு லிங்கபூதமாயிருக்கிற சமஸ்தமாயுள்ள வந்தப்பிர ம்ஹத்தின் மகிமையைத்தெரிந்து கொள்வதும், அந்தப்பிரம்ஹத் துக்கு வேதத்தினலே ஸித்தமாயிருக்கிற பிரம்ஹலட்சண சொரு பமான ஜகத்காரணத்தன்மையையுணர்வதும், தனக்கும் அந்தப் பிரம்ஹத்தினலே சிருஷ்டிப்பாடு அறிவதும், கர்மாநுஷ்டானத் தோடே கூடிய வந்த வுபாசனையினலே தனக்கும் ஹ்ருதயமாகிய

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஸம்பந்தநிர்த்தசரணுயகமஃ.

சித்தாந்தரத்நாகரம்.

ஆளுடையபிள்ளையார் வெண்பாவந்தாதி.

காப்பு.

பொன்பூத்த செங்கமலப் பொய்கைப் புகலியில்வாழ்
மின்பூத்த வேணி விமலனிடம் - மன்பூத்த
அம்பிகைபாலுண்டோ னந்தாதி யான்புகலத்
தும்பி முகன் பொற்ரு டுணை.

நூல்.

சீகாழிச் சம்பந்தன் சேவடியை யெஞ்ஞான்று
மோகாடவியொழிந்து முன்னுவார் - நாகா
பரணனடி ஞானம் பற்றுகிற்பா ரொன்றிங்
குறைசெய்வார்வேத முணர்ந் தோர். (க)

உணர்வரியா னம்மை யுமைமுலைப்பா லுண்ட
துணைவனருட் காழிவரு தோன்றல் - எனுமடியர்
பாலுடையா னென்றன் பவமகலத் தந்தருளுங்
காலுடையானெங் காவலன். (உ)

வலமாழியான்பங்க யாதனனும் வாழ்த்தி
வலமாகவந்து வணங்க - வலமா
வரங்களருள்காழிவரு வள்ளலடி யென்றன்
சிரங்களமாய்த்தே சேருமே. (ஙு)

சேர்வார் சிவகதியிற் சீகாழிச் சம்பந்தன்
ஞார்மாமலர்ப்பூஞ் சதங்கைசெறி - சீர்பாதம்
போற்றுவார் புல்லறிவிற் போந்து தடுமாறுமென்னை
யேற்றுவார்தம் மடியிலே. (ச)

இலதென்னுமாயையாமிவ்வுலகைமெய்யென்
றலையாகினைந்து மறந்தாழும் — புலையேன்றன்
நீங்ககலச் சம்பந்தன் சேவடிக்காளானவர்தம்
பாங்கடைதலன்பெனக்காம் பார். (௫)

அன்பில்லார்முத்தி யடைவரோ வித்தொழிந்த
தென்புகல வுண்டிங் கிசையுமேல் — அன்பொழிய
முத்தியடையு முறையுண்டாங் காழியில்வாழ்
அத்தனருணூடுவமியாம். (௬)

யாமாருடலாரிருமையுமிங் கொத்துறவே
தாமாச்சமையுக் தரமிலதே — கோமானே
யென்றடியரோத்து மெழிற்காழிச் சம்பந்தா
வின்றடியேனுக்கிங் கிசை. (௭)

இசைவாதுவென்ற விறையோடிரண்டற்
றிசையவருள விரங்காய் — இசைமலியு
நல்லசிகாழிவரு ஞானசம்பந்தாநீ
புல்லெலனை யண்டாதவித்தைப் போய். (௮)

பொய்வேடக்காரர் புகலுமவநெறியே
மெய்யாகநம்பிவிதிர்விதிர்த்திங் — கையமடைந்
தாடியுழன்றேடி யலையுமெனைச் சம்பந்தா
வாடியருணடி மகிழ்வால். (௯)

ஆயமறையாக மாதிகலையனைத்துந்
தூயபரசிவனைச் சொல்லுமுயர் — வாய்மைநெறி
சொன்ன கழுமலத்துத் தூமணியே சம்பந்தா
நின்னருளே நற்றுணையா நின்று. (௧௦)

துணையொன்று மின்றுன் றுணையன்றியெந்தா
யணையவுனைநாளு மருளாய் — உணையுமெனை
வாவென் றழைத்தாலுன் வாய்முத்தஞ் சிந்திடுமோ
தேவருண் ஞானக்கன்றே தேர்ந்து. (௧௧)

அருள்பொழியுமேக மனையாய்நின்னுமந்
தெருளுட ளிங்கோதுந் திறமே — மருளுடையேன்

கொண்டுயிர்வாழ்ந்துய்யக் கூறியெழிற்சம்பந்தா
பண்டைவினைமாயக் கண்பார். (௧௨)

பாராதியெட்டும் பரனார்திருவுருவென்
றோராதலையுமென்ற னுள்ளத்தே—நீரா
யுருக்கியமர்ந்தோங்கு முவகையுடனாளுந்
திருக்கிளருநற்புகலித் தே. (௧௩)

தேவர்தொழுமுன்னடிகடேடிமகிழ்ந்தேதிரிவும்
றாவிதரியேன்போலிங் காயினேன்—பாவிநான்
ஐயாபுகலிவளராரமுதேசம்பந்தா
மெய்யேமற்றேதுவெலாம்வீண். (௧௪)

வீணவலர்போல்வேன் விளம்புமாறுண்டோவுண்
ணாணமிலாதுன்னருளை நாடியே—கோனுமனத்
தீயனடல்வினையேன் சிந்தைமடவார்க்குடையே
னாயினேன்றென்புகலி யாய். (௧௫)

ஆராவமுதேயளவிலாப் பேறுதவுஞ்
சீரார்சிவநேசச் செல்வமே—வாராயோ
என்பானீவந்திங் கியம்பாயோநன்மொழியொன்
றன்பாற்சம்பந்தா வமர்ந்து. (௧௬)

சம்பந்தமுன்றன் சரணமேயல்லாமல்
சம்பந்தம்வேறுண்டோசம்பந்தா—நம்பும்
புகலியிடமேபுகலிடமென்பாருள்
ளகலிடமன்பாக வுவந்தாய். (௧௭)

தாயுந்தனையீன்ற தந்தையுமற்றைப்பெண்டி
ராயுமுடற்சார்பின் கத்தனையு—நீயெனவே
நாடியுளம்பூப்பவருண் ஞானமருள்செய்யுமே
பாடிமகிழ்தேவாரப் பா. (௧௮)

தேவாரஞானச் செழும்பாடடும் வாசகமும்
நாவாரப்பாடு நலத்தவர்பா—லோவாமல்
நெஞ்சங்கசிந்துருகி நின்றிடவேசம்பந்தா
கஞ்சமலர்த்தாளருள்வாய் காண். (௧௯)

அருளேதிருமேனி கொண்டவரசே
பொருளேதுமின்றியுளம்பொங்கி—மருளேய்ந்
தழியுமெனையாளாயோ வையாசம்பந்தா
விழிவிதெனவுள்ள மெணாதே. (௨0)

என்னுடையமூவிராக்கதர் தீயிற்பிழைத்த
தண்ணலாரின்னருளாலாகுமால்—கண்ணுதலெங்
காரணனாருள்ளங்கனியவருசம்பந்தா
பூரணனேபோற்றியுன்றன் பொற்பு. (௨௧)

போற்றியருட்குருவே போற்றிசிவசமயப்
பேற்றையுடையார் பெருவாழ்வே—சாற்றுசீர்
முத்திவடிவாகு மூர்த்தியேசம்பந்தா
வைத்தெனையாளுன்றாண் மலர். (௨௨)

மலமாயைகன்மமறு மாண்பருளுஞான
நலமேயருட்காழி நட்பே—சலமிலா
வின்பப்பெருமாட்சி யேயென்வினைதபுநற்
கன்றேயருள்சதங்கைக் கால். (௨௩)

காலனனீரோடா காயம்பிருதிவியா
வேனுமொரைம்பூதங்க ளென்றேமுன்—மாலயனுங்
காணான்கலந்தவருட் காட்சியருள்சம்பந்தா
பேணாநின்றேனிங் கன்பே. (௨௪)

கன்மவினைதொடரார் காலன்வழியடரார்
ஜன்மவிருள்படரார் சார்வரால்—தன்மயமே
சீகாழிச்சம்பந்த தெய்வமேயென்பார்மற்
றுகார்துயர்க்கட லுளாழ்ந்து. (௨௫)

துயரக்கடல்கடத்துந் தோணியேதோணி
யியலுந்திருநெறிகோ லென்றும்—அயனன்
றடையுமருட்காழியநீ யஃதூர்வானாயின்
கடையனேற்கென்குறையாங் காண். (௨௬)

ஆகமதங்க ளழித்தேயருள்விரவச்
சீகாழிவந்தருளுஞ் செல்வமே—போகாத்

துயரமொழிதருமே தூயமணியே
யுயர்தருநின்போதமுணர்ந்தால். (உஎ)

போதசிகாமணியாம்புத்தமுதேயென்னுடைய
நாதனேசெம்மைநலத்தொன்றே - மேதகுசீ
காழியில்வாழ்மெய்ஞ்ஞானக்கற்பகமேசற்பனைசேர்
பாழில்விழுவேனைக்கண்பார். (உஅ)

பாரார்பதிநிலையும் பாசப்பசுநிலையுந்
தேரார்சிவஞானஞ்சிந்தியார் - தீரா
விடும்பைகூர்வாழ்விதமென்பாரோசம்பந்த
கொடும்பீழையாளர்குறித்து. (உகூ

குறிக்கும்பரசமயக்கோளரியார்பாசம்
பறிக்கும்பழமையருட்பாவார் - பொறிக்கும்பொற்
செம்மைமலர்ப்பதத்தார் சிற்றறிவினேனகத்தார்
அம்மைதரும்பாலமுதுண்டார். (௩0)

ஆராவார்நீயல்லாலையாவடியேற்குன்
பேராயிரமுமருட்பெற்றியோய் - நேராக
நெஞ்சங்கசிந்துனைசெய் வேறேநெடும்பொழில்வான்
மஞ்செய்துகாழியனேவாழ்ந்து. (௩க)

எய்தும்பரசமயமெல்லாந்தணந்துன்மை
யெய்துஞ்சிவசமயமெய்தவே - செய்தனையே
புத்தமுதேகாழிப்பொலனகரிற்போந்துடைய
வுத்தமதேவேயென்பாலுற்று. (௩உ)

எந்தையேசீகாழி யேந்தலேபற்றெறிவார்
தந்தையேயென்பாற்றயைபுரியாய் - முந்தையோ
ருன்னையருச்சித்தேயுய்ந்தார்பெருந்தோணி
மன்னினைவாழ்த்தற்கெளிதாமா. (௩௩)

மால்சிவசாரூபமன்னினான்சம்பந்த
னலெனவிங்கேயாய்ந்தறியாதார் - மால்கொண்
டணைவர்கறுந்துளவத்தானைப்பிறவிப்
பிணிதவிரப்பார்க்கிலாப்பேர். (௩ச)

பேர்சிவசம்பந்தப்பெருமானமர்ந்திலகு
மூர்திகழ்சீகாழியெனவுடையான் - நீர்நிலனா
டெல்லாமவனாயிலகுமெழிற்கோலமே
யல்லாமல்வேறில்லையால். (௩௫)

இல்லையெனுநாத்திகர்பாலெய்தியவர்கூறுஞ்
சொல்லைநனிநம்பியிவண்சோர்ந்தலையும் - பொல்லாப்
புழுத்தலையேனும்போற்று வேனோசம்பந்தா
வழுத்தவருள்செய்திடநீவா. (௩௬)

நீவாததீபமே நேயவடியாரிதயத்
தேவேயானந்தச்செழுந்தேனே - மூவா
முதலாமுதல்வர்தருமுத்துச்சிவிகை
அதிபாசம்பந்தாவருள். (௩௭)

பந்தமொழியார்பரிபவமாயார்தமது
சிந்தைமெலியத்தியங்குவார் - எந்தையெனும்
சம்பந்தனாருளைச்சாரார்மலவிருளில்
வெம்புந்திறலுடையார்மேல். (௩௮)

மேல்கீழயன்மால்வெதும்பியுளந்தேடறவப்
பாலெனவேநீண்டபரனார்தங் - கால்பரவாக்
கள்வனேனுய்யுங்கதியுண்டோசம்பந்தா
புள்வருசீகாழிபுரத்தோய். (௩௯)

தோயச்சடைமுடியான்றோகையொருபாலுடையான்
வியச்சலந்தரனைவிட்டினான் - பேயுடனே
யாடுவான்மாமயிலையம்பதியிலென்பணங்காப்
பாடுவானீசம்பந்தா. (௪0)

வாதச்சமண்புத்தமால்பாஞ்சராத்திரமும்
பேதப்பயனுதவப்பின்னுளவுஞ் - சாதப்
பிணிப்பெனவேகண்டும்பிரியார்வினையாற்
கணிப்பார்தம்முட்காழியாய். (௪௧)

உட்சமயமாறுமுவந்தனையே நின்விளையாட்
டுட்சமையாராரிங்குனைபகராய்- சட்சமய

வொருவனுடையசம்பந்தமுடையனவாமென்று ஸ்ரீகிருஷ்ணரால் பரிஷ்கரித் துரைக்கப்பட்டது. தானேநித்தியனென்றும், சர்வஞ்ஞனென்றும், பரப்பிரம்ஹமென்றும் ஸ்ரீ கிருஷ்ணர்சொல்லியதை யோகத்தின்றன்மையையபேக்ஷியாமல்சொல்லக்கூடாது. யோகத்தோடேகூடிய சொல்லானது இருப்பதனுல் யோகத்தினுலே சிவோகமென்னுந் தன்மையையடைந்து அந்தச்சிவனுடைய சகலமானமகிமையுந் தனதாகவே சொல்லப்பட்டதென்று எஞ்சனுவிர்த்தியினுலே காண்பிக்கப்பட்டது. இந்தப்பிரகாரம்யோகத்தையன்றிச்சொல்லுகிறதற்குச்சாத்யமல்லவென்றுசொன்னபிற்பாடு அர்ஜுனனுக்குந் தனக்குமிருக்கிற சிநேகத்தினுடைய ஸ்மரணையினுலே மறுபடியு மெப்படி யாகிலும் உபதேசத்தினுலே இவனுடைய சம்சய விபரீதங்களை யறவேயொழிக்கத்தக்கதென்றுலோசித்து ஸித்தபுருஷரொருவருடன் காசிபமுனிவர்ஸம்வாதம்பண்ணினதாயுள்ள அர்த்தத்தை யுன்பொருட்டுநான்சொல்லுகிறேன் எனவும், காசிபஸித்தபுருஷ ஸம்வாதத்தி னர்த்தத்தை நான்முன்னே கேட்டிருக்கின்றே னுகையால் அதனையேயிப்போ துனக்குச் சொல்வது யுக்தமெனவு மிதவுரைபேசிப் பிரதிக்ஞா ரூபத்தால் வைராக்யத்தைச் சேர்ந்தபொருளையும், பூர்வதேகபரித்யாகத்தையும், தேகாந்தரப் பிரவேசப்பிரகாரத்தையும், இஹலோகபரலோகங்களில் ஸம்ஸாரிக்கு வரும்படியான துக்கபாஹுள்யத்தையும், வைராக்யத்துக்காதாரமாயுள்ளவர்த்தங்களின் பாவன விசேஷத்தையும், விரக்தனுயுள்ளவனடையத்தக்க மோக்ஷோபாயத்தையுமுபதேசித்து, வாராய் அர்ஜுனு! இந்த அர்த்தமானது ஏகாக்கிரமாகியமனசோடு உன்னுற் கேட்கப்பட்டதா? இல்லையா? என்றுவிசாரித்து, முன்றடவைமி விதேயார்த்தத்தையேயன்ருே நீயிரதத்தின்மேலிருந்து கேட்டாயென்று பகவானுகிய ஸ்ரீகிருஷ்ணர்தமது பிரசங்கத்தையுபசம்ஹாரம்பண்ணினுர்.

அவதாரிகை.

மேலர்த்தத்தையே சுருக்கமாய்ச் சொல்லுகிருர்.

சுலோகம்.

అధునాతదుపాస్యస్సంశయాద్వ్యపగచ్ఛద్విదితాహ్యాదంస్మరన్
ఇత్యుక్త్వామహాకృశేయయయౌతస్యపదజ్ఞోయదాహంతద్రథః॥ ॥౧౮॥

(மொழிபெயர்ப்பு.)

ஐயமெலாமொழிதியறிந்திடுதியருளென்மொழியையன்பவீறு
மெய்யுடையார்சொற்றதிறத்ததுயானுமேற்றதுநின்மேலன்புற்ற
செய்யபரிவாலின்றுசெப்பவருள்கூர்ந்தனனிச்செய்திகேளொன்
றய்யுமுறையாற்கண்ணனருச்சுன்கேட்டுவப்பநனியுரைத்தானன்றே. (சச)

(இ-ள்.) இப்போது அந்தச்சந்தேக முதலியவற்றைத் தள்ளி யான்சொல்வதை அறிவாயென்று சிநேகத்தை ஸ்மரித்தவராகி இது இதரமானவர்களாலே சொல்லப்பட்டது, அது என்னாலே கேட்கப்பட்டது என்று அதையுபதேசத்துக்கு யோக்யனான அர்ஜுனனிடத்தில் ஸ்ரீ கிருஷ்ணர்பிரசாதம் பண்ணினர். எ-று.

இதனால், அப்போது எவ்வளவு அர்த்தஞ்சொன்னா ரென்பதும், ஏகதேசமாகியவழியாய்க்கீதாசாஸ்திரத்தினுடைய அர்த்தமடங்கலும் ஸ்ரீ கிருஷ்ணரானவர் அன்னியரிடத்தில்தாம்சிரவணஞ்செய்தபடிக்கே அர்ஜுனனுக் குபதேசித்தா ரென்பதும் பெறப்படலால் அந்தச்சாஸ்திரப் பிரதிபாத்யமான பாவமானது காண்பிக்கப்பட்டது.

அவதாரிகை.

கேட்குந்தன்மையும், சொல்லுந் தன்மையும் மேல்பிரவசனஞ்செய்கிறார்.

சுலோகம்.

తస్యస్థిరీకరణమాత్మనిపూర్వవృత్తం స్వాస్త్యేవబుద్ధివశసిద్ధిద్విజదంపతీచ
కృత్వానుయోజనతదుత్తరయోరనుజ్ఞాం విఖ్యాప్యతద్వివరణంచచకారశౌరిః. ॥౧౫॥

(மொழிபெயர்ப்பு)

அந்தவருச்சுனன்முன்னாலடைந்தமனவுறுதிநிலைபதிந்துதன்பா
லந்தமுயர்புத்திமனமென்னுமிவைகளைநிடுமுண்மைசான்ற
பந்தமுறுபார்ப்பனதம்பதியாக்கியேவல்விடைபகராதின்ப
முந்துசிவரூபத்தையன்புடனேகண்ணனனிமொழிந்தான்மன்னோ. (சரு)

(இ-ள்.) அந்த அர்ஜுனனுடைய மனசினாலே முன்னாலே செய்யப்பட்டதாயுள்ள வுறுதிப்பாட்டைக் குறித்துத்தன்னுடைய புத்திமனசுகளைப் பிராம்ஹண தம்பதிகளாகச்செய்து ஏவலுத்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநமஃ

சித்தாந்தரத்நாகரம்.

சமரசஞானதீபம்.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

குளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS,

PRINTED AT THE VITHYAVIRTHI PRESS.

31st January 1881.

உ

சிவமயம்.

ஸ்ரீசிவோரக்ஷது.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தரத்நாகரம்.

சமரசஞானதீபம்.

"சைவசமயமேசமயஞ் சமயாதீதப்பழம்பொருளைக் ... ... *
கைவந்திடவேமன்றுள்வெளி காட்டுமிந்தக்கருத்தைவிட்டுப் ... *
பொய்வந்துழலுஞ்சமயநெறி புகுதவேண்டாமுத்திதருந் ... *
தெய்வசபையைக்காண்பதற்குச் சேரவாருஞ்செகத்தீரே." ... *

என்றருளிச்செய்த ஸ்ரீதாயுமான சவாமிகள் திருவாக்கால் சைவசமயமே சிறந்த சமயமெனவும், அதிதமாகியவச்சைவசமயத்தாற்பெறப்படு மகாதிப்பழம்பொருள் சிதாகாசமத்தியி லாவரததாண்டவம்புரியாநிற்கும் ஸ்ரீ நடராஜவள்ளலே யெனவும், இன்னவுண்மையைப் பயவாத பொய்ந்நிரம்பியொழுகும் புன்சமயங்களிற் புக்கு வீணே கெடவேண்டாமெனவும், பரமவீட்டைத்தருந் தெய்வ சபையாகிய வச்சிதாகாயத்தைத் தரிசித்தற்பொருட்டு இங்கேவந்து சேருங்கோளெனவு முலகத்தவரை யிதம்பேசியழைத்தபடி வெளிப்பட்டது. இதை விரித்துரைக்குங்கால் (சைவசமயமேசமயம்) என்றேகாரத் தேற்றம்படக் கூறினமையால் சைவேதரமானவுயர்ந்தமார்க்கங் கிடையாதென்பது போதரும். சைவம் என்பது சிவசம்பந்தமுடையது எனப்பொருடரலால் சிவத்தின் மேலிட்டதொரு பொருளுண்டாயினன்றோ சைவத்தின்மேலிட்டதொரு சமயமு முள்ளதாகும்? சிவத்துக்குச் சமானப்பொருளும், அதிகப்பொருளுங் கிடையாவென வேதங்கள் முறையிடல் கண்டு தெளிக. சிவம் என்னுஞ்சொல் மங்கலம், சுபம், முத்தியென்பனவாதி பொருள்களைப்பயத்தலால் அதன்ஸம்பந்தமான மார்க்கம் சுபமார்க்கம், மங்கலமார்க்கம், முத்திமார்க்கம் என்றேவிளங்கும். என்னை- குறுணியென்று மதற்குப்பொருளுண்மையாற் குறுணிமார்க்க மென்றாலோவெனின், அங்ஙனமுரைத்த கூரன்கண்ணிழந்தானமையாலதுகூடாதென்க. சைவத்தை மங்கலமார்க்கமெனவே யேனையமார்க்கங்களமங்கலமார்க்கங்க ளெனப்போதரும். புறமார்க்கங்களமங்கலமெனினவை கொண்டொருபயனு மின்றோவெனின், அவ்வவற்றினேற்றங்களின் படிப்பலனுண்டென்க. தேகமொன்றிலுண்டான வவயவங்களில்யாவு முபகாரத்தனவுமாவசிகமானவுமெனும் யாவுஞ் சமமரியாதையினவாகா. எல்லாஞ்சேர்ந்தே தேகமாகும். ஒன்றருறையினுமூனமேயாம். இவைகளாதுபகரிக்கப்பெற்ற வொருவனவ்வுபகாரமினைத்தெனவறியாமல்கண்ணேபிரதானம், வாயேபிரதானம், மூக்கேபிரதானம், செவியேபிரதானம், நாவேபிரதானம்,பாயுருபத்தாதிகளே பிரதானமென்றிசைத்த வமைவுடைத்தன்றும். அங்ஙனமேயன்றோ தேகமேபிரதானம், கரணமேபிரதானம், சிவனே பிரதானம், இந்திரசந்திரனேபிரதானம், பிரமவிஷ்ணுக்களே பிரதானமெனத் தாபிக்கவெழுமதங்களு மவலத்தைப்பெறும்? இத்தனையுஞ் சேர்ந்தொன்

ருகியதே சைவமாகையால் மங்கலமென்
பது ஸ்திரப்பட்டது. தேகத்தி லொவ்
வொரு சருவியையேகொண் டேனையவ
ற்றைவிடுவது அமங்கலஞ்செய்தல் போ
லவே சைவத்தைவிட்டேனையமதங்களைப்
பற்றலமங்கலத்தைக் காட்டிற்று. இதனு
லெல்லாமதங்களுஞ் சைவத்திலுள்ளன
வென்பதைக் காட்டினமையாலொருமத
த்தையுஞ் சைவசமயம் விரோதியாமை
வெள்ளிப்பட்டது. பிறசமயங்கள் தத்தங்கூ
றுகளைத் தனித்தனிக்கொண்டமையால
வையே சைவத்தை விரோதித்தனவென்
றறிக. எல்லாவவயவங்களுஞ் சேர்ந்து
தேகமாகக்கண்ட வொருவனவ்வவயவங்
களை விரோதியாதபடியும், அவ்வவயவங்
களி லொன்றையே பற்றினவ னேனைய
வவயவங்களையு மவ்வவயவங்களாலாகிய
தேகத்தையும் வெறுக்கின்றபடியுமாகிய
வுவமைவெளிப்பட்டமையால். இந்தவு
வமையால் சைவமொன்றே யவிரோத
மார்க்கமெனவும், ஏனையமார்க்கங்கள்வி
ரோதமார்க்கங்களெனவும் வெளிப்பட்ட
து. ஒவ்வோரவயவங்களைப்பற்றி யாதி
க்கங் கூறுவாருள்ளுஞ் சிரம்,உரம்,கரம்,
பதமுதலான வங்கங்களிலேற்றத்தாழ்வு
களுக்கீடாகவிவேகம் வெளிப்படல்போல்
தனித்தனி மதாந்தரங்களிற் பிரவர்த்திப்ப
வர்தம்முள்ளுஞ் சிலாக்கிய*முண்டெனவ
றிக. தலையுங்காலுமொன்றுகாமையால்.
வாயுங்குதமுமொன்றுகாமையால். இப்
படியே மதங்களிலும் பார்த்துக்கொள்க.
(எல்லாமாயல்லவுமாய்) என்று பதிக்கு
க்கூறிய விலக்கணமேயன்றே பதிமார்
க்கமாகிய சைவத்துக்கும் ஸித்தித்தது!
தேகம் எல்லாவவயவங்களுமாகியல்லாம
லின்றபடியே சைவம் எல்லாச்சமயங்க
ளுமாகி யல்லாமலப்புறப்பட்டு நிற்குமெ
னவறிக.

இது அதீதசமயமாகையால் இது ஸி
த்திப்பதும் அதிதீவிரபக்குவனுக்கே யெனத்
தெளிக. இப்படிப்பட்ட அதீதமார்க்கத்

திற் பிறக்கும்புண்ணியத்தை யடைந்துஞ்
சைவசமயிகள் தங்களுண்மையையும், த
ங்கள் சமயவுண்மையையும், தங்கள்கட
வுளுண்மையையுங் கண்டறியாது எழை
ப்பசுக்கள்போலத்திரிவதென்னையோ ஆ
ச்சரியம் ! ஆச்சரியம்!! ஓட்டன், சாத்தா
ணி, உப்பரவனெல்லாங் களித்திறுமாந்து
லாவிவர வனையன்மகனேங்கித் தெருவி
னிற்படேயன்றேவிதற்குநிதரிசனமாம்?சி
வஞானச்செல்வர்களாயுள்ள நம்பெருமக்
கள் கூறியிருக்குங் கம்பீரமொழிகளைத் த
ரிசித்தாலன்றே வவ்வுண்மை விளங்கும்!
“நாமார்க்குங் குடியல்லோம் நமனைய
ஞ்சோம் நரகத்திலிடர்ப்படோம் நட
லையில்லோம், ஏமாப்போம் பிணியறி
யோம் பணிவோமல்லோ மின்பமே
யெந்நாளுந்துன்பமில்லை, தாமார்க்கு
ங்குடியல்லாத் தன்மையான சங்கரனை
ற்சங்கவெண் குழையோர்காதிற், கோ
மாற்கோமென்று மீளாவாளாய்க்கொ
ய்ம்மலர்ச்சேவடியிணையே குறுகினே
மே” என்றருளியபடியும், “யாமார்க்குங்
குடியல்லோம் யாதுமஞ்சோம்” என்ற
ருளியபடியும், “பொசிப்போஞ்சிவபோ
கம் பூரணமாயெங்கும், வசிப்போமுல
கில் வசியோம், மூசிப்பின்றி, வாழ்
வோஞ் சிவனையுணர் மாதவர்தம் பொ
ன்னடிக்கீழ்த், தாழ்வோமெமக்கார்ச
ரி” என்றருளியபடியும், “கன்மமேதுக
டுநரகேதுமேற், சென்மமேதெனைத்தீ
ண்டக்கடவதோ” என்றருளியபடியும்,
“அந்தகாநீயொரு பகட்டாற்பகட்டுவ
தடாதடாகாசுகட்பாற், ‘[illegible]ல்லாதடா
வென்று பேசவாயதுதந்த[illegible]ல்வமே”
என்றருளியபடியுமே பிரமாணங்களாம்.
(மெலியார்வலிய விரவலனையஞ்சார்,
வலியார்தமைத்தாமருவில்) என்றபடி
யறிந்தால் நாமார்க்குமஞ்சவேண்டுவதின்
றும். என்கருடா சுகமாவென்ற விதிகா

யதைநிறுத்தும். படைக்கின்றவனு
ரமன்றலையோடு நங்கடவுளுக்குப்
ரமாயினமையி னவன்படைப்
யென்செயும்? அழிக்கின்றவனு
லன சாலைவாரிக்கொள்ள நங்கட
க்காலுதையுண்டானுயி னவனழிப்
மையென்செயும்? இடையினின்ற
ண் மனநோக்காடெய்த வனங்க
ய்யு மவனாற்றருணம்மையென்செ
வனே யுருவிலியாக நங்கடவுளு
ன்முற்பட்டுப் பட்டுப்போயினமையா
அத்திதிகர்த்தாவென்னு மரிக்கே த
க்கன்யாகத்திலவிசுநேராது பட்டினிநே
ர்ந்து அவ்விடத்திற்றானு மேனைய பல
விடங்களிலுந் தன்னையே காத்துக்கொள்
ளுமாற்றல் போதாது பரிபவமுண்டாயின
மையி னவனளிப்புத்தானமக்கெது செய்
யு? சிவனே சங்காரகர்த்தாவாக, காலனை
யழிப்புக்குந் தேடியதேனெனின், சிவனு
ரழிப்புத் தொழிற்கே முதிகாரம்பெற்று அ
டியாரல்லாதாரிட மாறிக்கஞ்செலுத்து ம
ந்தகன் றன்மையே யாண்டுக்கூறிய தெ
ன்க. சிவனடியாராகிய மார்க்கண்டமுனி
வர்பாலவனுண்மை யவலமாயினமையே
போதும். இவ்வுண்மையறிந்து சிவனைவ
ழிபடுவார்க்கு யாதுகுறையுளது? இன்ன
பெருஞ்சித்தியெய்தற்குரிய சைவசமயிக
ளாய்ப் பிறந்துமர்தோ வாளுளை வீணாய்க்
கழிப்பது என்னபாவம்?

இங்ஙனமிற்க, "தெய்வமென்பதோ
ரசித்தமுண்டாகி, முனிவிலாததோர்
பொருளதுகருதலும், ஆறுகோடிமா
யாசத்திகள்,வேறுவேறு தம்மாயைக
டொடங்கின, ஆத்தமானுரயலவர்கூ
டி, நாத்திகம்பேசிநாத்தழும்பேறினர்,
சுற்றமென்னுந் தொல்பசுக்குழாங்கள்,
பற்றியழைத்துப் பதறினர்பெருகவு
ம்,விரதமேபரமாகவேதியருஞ், சரத
மாகவே சாத்திரங்காட்டினார், சமய
வாதிகடத்தமதங்களே, யமைவதாகவ
ரற்றிமலைந்தனர், மிண்டியமாயாவாத
மென்னுஞ், சண்டமாருதஞ்சுழித்தடி
த்தாஅர்த்து,உலோகாயதனெனுமொ
ண்டிறற்பாம்பின், கலாபேதத்தகடுவி
டமெய்தி, யதிற்பலமாயையெனைப்பல
குழவும்" என்றபிரமாணப்படியே கோ
டியிடுக்கண் குறுக்கேவர்து தடுக்கும்! "ந
லமதொன்றடைதற்குறுமிடையூறுகா
தனேபலவுளவன்றே" என்றதனுலுங்கா
ண்க. ஈண்டவ்விடரொன்ப தேதெனின்,
மேலவ்வாக்கியத்தில் (சைவசமயமேச
மயம்) என்றதன்பிற்போந்த (சமயாதீத
ப்பழம்பொருளை) என்பது அச்சைவச
மயத்தினு மதிகரித்த வேறுபொருளையெ
ன்றுபொருள் விரிக்கும் புன்மதமுகன்மத
ம்போலப் பகல் வேடங்காட்டி ஆபாசப்
படு குழியாய்ப் பக்கத்திலேதானே தவறி
விழுந்தால் விழுங்க வங்காந் திருத்தலே
யாம். அவ்வதீத சமயமென்றது எச்சமயி
களுந் தத்தம் பரமாகச்சொன்னக் கிடை
ப்பினு முக்கிய மதுவர்த்திப்பவரோகான்ம
வாதிகளேயாம். (பன்முகச்சமயநெறிப
டைத்தவரும் யாங்களே கடவுளென்
றிடும்பாதகத்தவரும்) என்று பலசமயி
களையும், அவருளதிகபாத்யதைகாட்டி வெ
ளிப்படகிற்கு மேகான்மவாதியையு மறுத்
திருப்பதோடு (சுத்தசித்தவருளியல்பதா
கவுளசோமசேகரகிருபாலுவே) எனச்
சிவனது அடையாளத்தையுங்கூறினமை
யால், அப்பாடலில் (சைவசமயமேசமய
ம்)என்றமேற்பாகத்தை யொட்டியவ்வதீ
தமாகிய சைவத்தால் ஸித்திக்கற்பாலதா
கிய பாசிவப்பொருளென்று மேல்யாங்கூ
றியபொருளே ஸித்தித்தது. சந்திரகுடத்
வ மப்பதிப்பொருளுக்குரிய லிங்கமாகக்
கூறினமையால் ஸாவயவமாயுள்ளதே ய
ப்பதியென்பதும் போதரும். (ஒருநாம
மோருருவமொன்றுமில்லாற்கு) என்
னும்பரமாசாரியர்வாக்கும் பிரமாணமாத

த்திழுக்குமே யெனின், இழுக்காதென்க.
பரமாசாரிய மூர்த்திகளேயன்றி, (குலமி
லான்குணங் குறியிலான் குறைவிலான்
கொடிதாம், புலமிலான் றனக்கென்ன
வோர்பற்றிலான்பொருந்து, மிலமிலா
ன்மைந்தர் மனைவியில்லானெவனவன்
சஞ், சலமிலான்முத்திதரும்பர சிவ
னெனத்தகுமே.) என நந்தாயுமானுர் கூ
றியபடியுங்காண்க. இங்ஙனங்கூறியுள்ள
னவேயன்றி "குவளைக்கண்ணி கூறன்
காண்க, அவளுந்தானுமுடனேகாண்
க" எனப்பரமாசாரியமூர்த்திகளும், "கொ
ழுந்துதிகழ் வெண்பிறைச்சடிலக்கோ
வேமன்றிற்கூத்தாடற், கெழுந்தசுடரோ
யிமயவனையென்றாய்கண்ணுக் கினியா
னே" எனத்தாயுமானுரும் பாடியருளின
ராகலினவற்றினுண்மையைவிசாரிப்பாம்

சத்தாமாத்திரமாயுள்ளபொருளே சிவ
மும், அதன்றுதான் மியகுணமாகிய சித்
தே சத்தியுமாக வேதசிவாகமங்கள்கூறலி
னவ்விருவருமூலகுக்குப் பிதாமாதாக்களா
யினர். அவ்விருபொருளொற்றுமையினு
ண்டாமாநந்த ஸ்புரணமே சிவசத்திகள்
பெற்ற மக்களாவர். இம்மூன்றுபொருளு
மொரோபொருளன்றிவேறில்லை. ஸச்சிதா
நந்தசுரூபமாகிய வப்பரம்பொருள்விகாச
த்தைப் பகுத்துணருங்கால் ஸத்தின் கன
மேசிவனும், சித்தின் கனமேயுமையும், ஆந
ந்தத்தின் கனமே ஸ்கந்தகணேசர்களுமா
ம். பொன்னே பூஷணமாகத் திரிந்தவுபமா
னவாயிலாக மேலுண்மையைக்கவர்ந்திடு
க. முன்னும்பின்னு நிலைகெடாதுநின்ற
பொன்னைப்போல் விளங்கு நம்பதிநிலை யி
னைத்தென வெளிப்பட்டமையாலவற்கொ
ருநாமமுமில்லை.யென்றதும், ஆயிரநாமங்
களுளவென்பதுமாகிய பரமாசாரியர்கரு
த்தும் வெளிப்பட்டது. அன்றியும், மாயி
கமாகிய பிரபஞ்சதர்மத்தைக்கடந்தொளி
ர்வதுஎன்னு முண்மையும்போதரும். எங்
ஙனமெனின், கணவன், மனைவி, மக்க
ளென்னு மூலக தர்மத்தை நோக்கு[illegible]
கணவனேரான்மாவும், மனைவியே[illegible]
மாவும், மக்கள்வேறுவேறு ஆன்[illegible]
மாகவினைக்கீடாக வொருவரை[illegible]
சம்பந்தங்கொள்ளத் தநுவாதிகண[illegible]
யிற் கொண்டு போக்துழலாநிற்பர். [illegible]
னம்போல்வதன்றென்னு முன்ன[illegible]
யே யப்பரமவாக்குகள்காட்டின. [illegible]
ருகடவுளும், உமைபொருகடவுளு[illegible]
கந்தகணேசர்கள் வேறுவேறு சட[illegible]
ளுமாகக் கொள்ளாமைக்கே யவை [illegible]
செய்யுமென்க. பிரமனுதிகடவுளரை[illegible]
னித்தனிப் பசுக்களாக வேதஞ் சொல்லு
கையா லன்னோர்மனைவிமக்களு மவரவ
ர்வினைக்கீடாகச் சிவனுற் கூட்டுவிக்கப்
பெற்ற வேறுவேறு பசுக்களேயாவர். இ
வ்வுண்மைகளால், "பசுபதிப்பெயரியத
னிமுதற்கடவு, ளும்பர்களெவர்க்கு
முயர்ந்தோ, னென்பதுதெளிகவியல்
புணர்ந்தோரே" என்றபிரமாணப்படி ஸ
மஸ்த சேதனுசேதனேஜ்ஜீவிதமாயுள்ள
வப்பிராகிருதமாகிய திருமேனிகளை யுடை
யானெனபதே நிர்மானம். இவற்றின் வி
ரிவை யாஞ்செய்துள்ள (சிவபாரம்யப்பி
ரதரிசினி) என்னும் பிரபந்தத்தில் "சிவ
ன்எத்தன்மையர்" என்னும் பகுதியிற்ப
ரக்கக்காணலாமென்க. இன்னபரமச
யானருணைகவிக்கிரகமாய் விளங்கு நங்க
டவுள் திரிமூர்த்தியுத்தீர்னராயுள்ளவரா
கையால் அவராணையின்வழியொழுகும்
மாயாகுணவிசிட்டாளாகிய திரிமூர்த்திக
ளில் ஸத்வப்பிரதானராகிய வுருத்திரரே
ஞ்சைவசமயத்தாற்பெறப்படும் பரமபதி
யென்று துணியற்க. (செழும்பொழில்க
ள்பயந்துகாத்தழிக்குமற்றை, மூவர்
கோனுய்நின்றமுதல்வன்) என்னும்பிர
மாணத்தானுந் தெளிந்தெடுக. (ஓதருணை
வித்தகனை மூவரிலொருத்தனெனவோ
தியிடுமற்பமதியீர்) என்றதனுலுங்காண்
க. இன்னுமப்பாடலில் அப்பதிப்பொருள்

ஸ்ரீ சிதம்பரமென்னுமோர்க்ஷேத்திரத்தை
யிடங்கொண்டிருப்ப தொன்றுமென்பது
(சோமசேகரகிருபானுவாய்) எனவா
சிரியர்கூறியவுண்மையை நிறுத்தும். ஸ்ரீ
சிதம்பரமென்கையி லதுசமயமொன்றை
யுஞ்சாராத பொதுவாய் விளங்கலானு
ம் மூர்த்திவிடய முக்கியமன்றெனின்,
"தானேயகண்டாகாரமயந் தன்னிலெ
ழுந்துபொதுநடஞ்செய்,வானே" என
க்கூறியுள்ள வாக்கியத்தால் அது தள்ளு
ண்டதென்க. மேலிடத்தில் ஸச்சிதாநந்த
கபூதமான சிவலட்சணத்தைவர்ணித்தி
ருப்பதையே மீண்டும்பயன்படுத்திக்கொ
ள்க. அந்த க்ஷேத்திரத்தி லெல்லாச் சம
யிகளு மபிமானம்வைத்தலா லன்னோர்
கூறும் மூர்த்திகளே பிரதானமெனி னை
காதோவெனின், அவர் தன்மையை வி
சாரிக்கி லவருட்சிலர் கேவலரூபவாதிக
ளும், சிலர் கேவலம்அரூபவாதிகளுமாய்க்
காண்டலா லவர்சொந்தம்பாராட்டுதற்கச்
சிதாகாயமிடந்தராதென்க. அவரெல்லாமு
ஞ் சைவரைப்போன் மூர்த்தாமூர்த்தங்க
ளை யங்கீகரிப்பினன்றோவவர்க்குமங்கேயி
டஞ்செய்யலாம்! அவர்களுக்கங்கே யிடமி
ல்லாதபோது அவரபிமானஞ் சேர்தலுக்கு
வழியேதெனின், மேலிடத்தில் தேகத்
தையும், அத்தேகத்தி லவயவங்களையுஞ் ச
மட்டி வியட்டிகளாக வபிமானிக்கு முவ
மானத்தாற் சமயங்களின் றன்மையைக்
கூறினோமாகையால் அதையிங்கே வினி
யோகஞ் செய்துகொள்க. மூர்த்தா மூர்
த்தங்களையெல்லாஞ் சமட்டியிற்கொண்ட
வருக்கு எல்லாவவயவங்களுங்கூடிய தே
கத்தைக் கொண்டவரும், மூர்த்தம், அல்
லது அமூர்த்தங்களைத் தனித்தனி வியட்
டியாகக் கொண்டவருக்குக் கரசரணாதிய
வயவங்களைத் தனித்தனி வியட்டியாகக்
கொண்டவரு முவமிக்கப்படுதலால் விய
ட்டியாளர் சமட்டியில் அபிமானம் பூண
பதற்குண்டான ஹேதுவெளிப்பட்ட தெ
ன்க. "தில்லைமன்றுட் பார்த்தபோத

ங், கென்மார்க்கமிருக்குதெல்லாம்வெ
ளியேயென்ன வெச்சமயத்தவர்களும்
வந்திறைஞ்சாநிற்பர்" என்றபடியாலுங்
கண்டுணர்க. வேதசிவாகமங்களுக்குப் பா
ஹ்யமதவாதிகளு ளரூபவாதிகளே யதிக
மாகையாலவரும் வியட்டித் தன்மையால
டங்கிவிட்டனர். தேகத்திலடங்கிய வுறுப்
புக்களைத் தனித்தனி யபிமானித்தவர் தே
கத்துக்குப் பாஹ்யவாதிகளல்லாததுபோ
ல் மூர்த்தாமூர்த்தங்களைக்கொண்ட சமட்
டி சிவதர்மத்தைத் தனித்தனி வியட்டி
யாகக் கிரகித்துக்கொண்டவரெப்படி வே
தசிவாகமபாஹ்யராகக்கூடுமெனின், அ
வர் பதியினது மூர்த்தாமூர்த்தங்களைக்
கொள்ளாமல் பசுபாசங்களிற்போந்த மூ
ர்த்தாமூர்த்தங்களைக்கொள்ளலால் பாஹ்ய
வாதிகளென்பதிற்றட்டில்லை. புருடனொ
ருவனையடைந்து தான் கோரியகாரியங்க
ளை நிறைவேற்றிக்கொள்ள வெண்ணிய
வொருவன் தானப் புருடனையடைந்து த
மோறியதே யிதற்கு நிதரிசனமாம். அப்ப
டியானகாலத்துங் கட்டையமாத்திரமே வி
ரோதப்பட்டு அதிற்புருடாங்குஷி விரோதி
யாவன்ன மவர் பசுபாசமூர்த்தங்களைக்
கொள்ளும்போது மவையே பதிமூர்த்தங்
களென மயங்கினதேயன்றிவேறில்லையா
கையா லெச்சமத்தவர்களும்வந்திறைஞ்
சாநிற்பரென்றதனுண்மை விளங்கும். சை
வத்தில் வேறானபுறச்சமயங்களிலும் அ
ரூபவாதமங்கீகாரமேனு மவைகூறுமரூ
பவியலும், பதியியலுங் கேவலம் மூரணு
தலாலவை சைவர்க்கு ஸாமஞ்சஸமாகா
வெனவறிக. இக்கருத்தையே "பொ
ய்வந்துழலுஞ் சமயநெறிபுகுதவேண்
டாம்" என மேல் வலிந்தறிவுறுத்தியபடி
யாம். இது சைவரையே நோக்கிக்கூறிய
தென்க. புறச்சமயிகள் கூறுந் தர்ப்போ
தங்களான் மயங்கி முன்னுள்ள சித்வா
பிவியக்தியை யிழந்தலையுமூர்க்கப்பிணங்க
ளை நோக்கிக் கூறினமை கொண்டே (இ
க்கருத்தைவிட்டு) எனவும், (புகுதவே

ண்கூடாம்) எனவும் விதந்தமைதெரியும். இக்கருத்தையே (உவலேச்சமயங்களொவ்வாதசாத்திரமாம்) எனப்பரமாசாரியமூர்த்திகளுங்கூறினர். மேலிவை யுண்மை முத்தியைப்பயவாவென்பது விளங்கும் பொருட்டே (முத்திதருந்தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ்செகத்தீரே.) என்றுகூறியபடியுங்காண்க. புறப் புறச்சயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், அகச்சயமென்னு மிருபத்துநான்கு வகைப்பட்ட பேதம், அபேதம், பேதாபேதங்களாகிய பலசமயங்களானு முத்திகைகூடா வென்பதன் விரிவைச் சிவஞானஸித்தியார், தத்துவப்பிரகாச முதலிய நூல்களாற்கண்டுணர்க. ஈண்டுத் தெய்வசபையைக் காண்டன் மாத்திரத்தானே முத்தியுண்டாமென்பது போதரும். தெய்வசபையென்றது தில்லைமன்றே யாகையாற் றில்லையைக் கண்டான் முத்தியென்றவேதப்பிரமாணமேசாலும். தேவன் என்பதற்குப் பிரகாசமானன் என்று மேலோர் பொருள்விரித்தலால் அந்தச்சந்திசொண்டே மாயாகாரியங்களாகிய சித்திரங்களைச் செய்யுமத்தேவனிடத்திற் கூலிக்குவேலைசெய்யும் பலவேலைக்காரருக்குந் தேவரென்ப் பெயர்வந்தமைகாண்க. அந்த வேலையினின்று மவர்கள் தள்ளப்பட்டால் மானிடர், நாய்கள், பேய்களாகப் பவிக்கவருதலி னுண்மை விசாரத்தாற் போதருந்தெய்வ மொன்றென்பதே தீர்மானம். தேவென்னும் ரூடிப்பெயரையுடையவுமைக்குராதரோயன்றோ தேவராதல்சாலும். அந்தத்தெய்வமே தில்லைமன்று ளிருப்பதாலன்றோ அது தேவசபையாயிற்று! அதுவே யுண்மைத்தெய்வமென்பதற்கும், தில்லையைக் கண்டான்முத்தி யென்பதற்கும் போர்தவிதிகாசமொன்றுகூறுவாம்.

வியாசருடைய மாணாக்கராகிய ஜைமினி யென்பவர் வேதங்களையெல்லாஞ்சரியாகவோதியுணர்ந்துந் திருவருள்போதாமையா லவ்வேதத்தாற்றுணியப்பபடுமுண்மைதெளியாதவராயினர். வேதமானது பூர்வம், உத்தரம் எனவிருபகுதியவாகி முன்னையதுகருமத்தையும், பின்னையது ஞானமத்தையும் பொருள்களெனக் காட்டும். இரண்டையுமிலக்கணையாற் கருமத்தைப் பிரமத்தையே வியாதர்பொருளாகத் துணிந்து வேதாந்தஸூத்திரம் என்னும் பிரம்ஹ ஸூத்திரத்தைச் செய்தருளினர். இதற்கே வியாஸஸூத்திரம், பிரமமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சையெனப்பெயர்கள் வழங்கும். இந்நூலுக்கும், இதையியற்றிய வியாதருக்கும் விரோதமாய்க் கருமத்தைவிட்டுப் பிரமமென்பதொருபொருளுண்டாவதில்லையென வவ்வேதத்தின்வழியே சாதிப்பான்றொடங்கிப் பூர்வமீமாஞ்சையென்னுங்கன்மஸூத்திரங்களையச்சைமினிபகவான்வெளியிட்டனர். வியாதர் கருமத்தைத் தமது ஸித்தாந்தத்துக்குஸாதனமாகக் கொண்டவராகையாலதைத்தாம்விரோதியாவிட்டாலுமச்சைமினிக்குண்மைவெளியாமாறு அவரைச்சூரியனிடமனுப்பினர். அவரிடஞ்சென்றுபடித்து மம்முனிவர்தெளியாதவராயினர். "நல்லனநூல்பலகற்பினுங்காணபரிதே,யெல்லையில்லாதசிவம்" என ஔவையாரருளிச்செய்தவாக்கியத்துக்கேயன்றோ வவரிலக்காயினர்! எவ்வளவுகற்றாலும், எவ்வளவுகேட்டாலும், எவ்வளவுபார்த்தாலுமென்னபயன்! திருவருளில்லாதபோது. அருளிருந்தன்றியமையாதென்பதை "அருளினுலாகமத்தேயறியலாம்" என்னும் ஸித்தாந்தபோதகர்திருவாக்குங்காட்டும். இன்னும், "உன்றிருவடிக்கீழுறுதியாமன்பு முன்றிருவருளினற்கிடைப்ப, தன்றிநாற்பலவுமாய்ந்ததாலுரைசெயளப்பருந்திறமையான்மதியான்,மன்றவேகிடைப்பதன்று" என ஸ்ரீமத் அப்பதீக்ஷிதேந்திரர்கருத்தைச் சிவஞானயோகிகள் வெளிப்படுத்தினபடியாலுங் கண்டுகொள்க.

மேல் சூரியபகவானாலுந் தெளிவடையாதவராகிய வச்சைமினிபகவான் சிலகா

லங்கடந்துபூப்பிரதட்சிணஞ்செய்யத்தொடங்கினர். அப்படிச்செய்து வருகையில் பூர்ந்தப்பாத்தையடைந்து ஸ்ரீநடராஜமணியைக்கண்களின் பிரயோஜனமெனக்கண்டனர். கண்டமாத்திரத்தில் அழலிடைப்பட்டமெழுகெனவுருகி நெஞ்சங்கசிந்து நெக்குவிட்டுநைந்து பரவசமாயினர். ஐயோ தெய்வமில்லையென்று காலங்கழித்தோமே! நந்திவினையிருந்தவாறென்னே! என்னே !! இதோவிருக்கின்றதேதெய்வம்! என்று ஓடிச்சென்று எப்பெருவாழ்வே! என்னன்பே! எனக்கட்டிக்கொண்டு கண்களினீர்ததும்ப முன்னேநின்று வேதபாதஸ்வங்களால் துதித்தனர். (வேதபாதஸ்தவம்) என்பது அவரால் துதிக்கப்பட்ட நூலின்பெயராம். ஒருசுலோகத்தில் நான்குபாதமாகையால் முன்மூன்றுபாதங்கள் தமது சொந்ததிருவாக்கும், நாலாவதுபாதம் வேதமுமாகச்சேர்த்துப்பாடியதென்றறிக. எத்தனைவேதம் படித்து மென்னபயனுச்சுது? திருவருளில்லாதபோது. "தில்லைச்சிதம்பரதேவாவுன்சித்தந் திரும்பிவிட்டால்" என்னும்படியன்றோவுண்மைபிரகாசிக்கின்றது! "அவனருளாலேயவன்றாள்வணங்கி" என்றபடியாலுந்தெளிக. இவ்வுண்மைகளால் தில்லையைக்கண்டான் முத்தியென்னுஞ்சாத்ருசமும், தில்லையிலுள்ளதே தெய்வமென்னுஞ் சிர்ப்பாடும் வெளிப்பட்டன. இவை ஸ்ரீருத்ரம், கைவல்யம், சாந்தோக்யம், மஹாநாராயணமித்யாதி யுபநிடதங்களாற்பெறப்படுதல்காண்க.

இனிச் செகத்திரேயென்று பொதுவகையாற் கூறியிருக்க மேலிடத்திற் சைவரையே முன்னிட்டுரைத்தாலொன்ற தென்னையெனின், செகத்தவர் பல்வேறுவகைப்பட்ட பரிபாகத்தால் சைவபுத்தியின்றித்தேம்பித்திரிந்துழல்வாராக, வவர்போதங்களான்மலைந்தும், அவர் கோள்களின்முனைந்தும், அவரநுபவங்களிலினைந்தும் அவசவராகி யலையாநிற்குமர்தபருவத்தினையுடையசைவரைநோக்கியேயிஃதுக்கூறத்தொடங்கினமையினவரையேசெகத்திரேயென்று கூறினபடியமைத்துக்கொள்க. அல்லதூஉம், பொதுவாற்செகத்தவரைப்பார்த்துக் கூறினுமெனினு மிழுக்குறுதென்க. செகத்தவரெல்லாம்வியட்டியாலத்தில்லையெல்லையினின்றாடவல்லேயே "தந்தெய்வமெந்தெய்வமென், றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதேது" என்றபடிப்பற்றி வழக்குப்பேசலாலவரையேயவ்வழக்கறுத்தருளும்பொருட்டுச் சேரவாருமென்றழைத்தபடியுங் கண்டுதெளிக. இவ்வாசிரியர்சைவமார்க்கமேசன்மார்க்கமெனவற்புறுத்திக்கூறியுள்ளவாக்கியங்களையீண்டுவரைந்து காட்டுதும். "விண்ணவரிந்திரன்பிரமனாதி விளங்குசத்தரிஷிகள்கவிவினைவல்லோர், ஒண்ணரியசித்தர்மதுவாதிவேத்த ரிருக்காதிமறைமுனிவரெல்லாமிந்தக், கண்ணகன்ஞாலம் மதிக்கத்தானேயுள்ளங்கையினெல்லிக்கனிபோலக் காட்சியாகத், திண்ணியநல்லறிவாளிச்சமயத்தன்றோ செப்பரியசித்திமுத்தி சேர்ந்தாரொன்றும்" எனவும், "செப்பரியசமயநெறியெல்லாந்தந்தந் தெய்வமேதெய்வமெனுஞ் செயற்கையான, வப்பரிசாளருமஃதேபிடித்தாலிப்பாலடுத்தநூல்களும் விரித்தேயதுமாறுகி, யொப்ப விரித்துரைப்பரிங்கன்பொய்ம்மெயென்னவொன்றிலையொன்றெனப்பார்ப்பதொவ்வாதார்க்கு, மிப்பரிசாஞ்சமயமுமாயல்லவாகி யாதுசமயமும் வணங்குமியல்பதாகி" எனவும், "இயல்பென்றுந் திரியாமலியமமாதி யெண்குணமுங் காட்டியன்பாலின்பமாகிப், பயனருளப்பொருள்கள்பரிவாரமாகிப்பண்புறவுசௌபானபட்சங்காட்டி, மயலறுமந்திரஞ்சிட்சை சோதிடாதி

மற்றங்கநூல் வணங்கமௌனமோலி, யயர்வறச்சென்னியில் வைத்துராஜாங்கத்தி லமர்ந்தது வைதிகசைவமழகிதந்தோ" எனவும், "அந்தோவீததிசயமிச்சமயம்போலின் றறிஞரெலாநடுவறியவணிமாவாதி, வந்தாடித் திரிபவர்க்கும் பேசாமோனம் வைத்திருந்தமாதவர்க்குமற்றுமற்று, மிந்திராதிபோகநலம்பெற்றபேர்க்கு மிதுவன்றித்தாயகம்வேறில்லையில்லை, சந்தானகற்பகம் போலருளைக்காட்டத் தக்கநெறியிந்நெறியேதான் சன்மார்க்கம்" எனவும் போந்தவாக்கியங்களேசாலும்.

மேல் விசாரத்தால் எல்லாமார்க்கங்களினுஞ் சிறந்தமார்க்கஞ் சைவமொன்றேயெனவும், அச்சைவத்தாற் பெறப்பட்ட மெய்ப்பொருள் சிவமொன்றேயெனவும், அச்சிவம் தில்லைமன் றுளனவரததாண்டவம் புரியாநிற்பதொன்றெனவும், அதுவே தந்தெய்வமெந்தெய்வமென்று சமயங்களெல்லாவற்றினும்வழக்குப்பேசநிற்பதொன்றெனவும், அதனாலெல்லாச் சமயங்களுமங்காங்கி பாவத்தால் சைவமேயாகுமெனவும், சிவத்தைக்காட்டினும் வேறுதெய்வந்தேடினுங் கிடையாமையாலெல்லாச் சமயங்களாலும்போந்ததெய்வங்களியாவும் நம்பரசிவமொன்றேயெனவும், தெய்வ வொற்றுமையாலும், சமயாங்க வொற்றுமையாலுஞ் சைவத்திற்குவேறானதொருமார்க்கங் கிடையாமையால் சைவராயுள்ளபேர் வேறாகவெண்ணுவதற்கு ஒருசமயமு மில்லையெனவும், யாவருஞ் சைவரேயாவரெனவுந் துணிவதுமேலோர் மரபாம்.

இன்னுமிதை விரிக்கில் வேறுசமயிகளிடத்துச் சைவருக்குத்துவேஷமுண்டாகக்கூடாத நியாயங்கள்பலபடக்கிடக்கும். எங்ஙனமெனின், பொய்யாமை, கொல்லாமை, களவாமை, கள்ளாமை, பிறர்மனைநயவாமை முதலியதற்குணங்களுயிர்களுக்குரிய பூஷணமாக வேதசிவாகமங்கள்விதந்துரைக்கும். "அழுக்காறவாவெகுளியின்னாச் சொனான்கு, மிழுக்காவியன்றதறம்" என்றதேத்யாதி பிரமாணங்களுஞ்சான்றாம். இன்ன மங்கலகுணங்களுத்தமோத்தமமார்க்கமாகிய சைவத்துக்கேயமையும். இவை யச்சைவசமயிகள்கொண்டொழுகற்பாலனவாகிய வறங்களாம். இங்ஙனமாக, சைவரென்னும்பேர்மாத்திரம்வகித்துப் படிவிபூதியைமேற்பூச்சாகக்கொண்டு பொதிபொதியாக ருத்ராக்ஷங்களைச்சுமந்து பகல்வேட்தாரிகளாய்த்திரிந்து சொப்புங்கிளையுமேவிமிதித்து வில்வமரத்தினிலைகளை ஸமூலமாய்ப்பறித்துச் சிவபூசையென்னும் வீண்வியாஜத்தாற் போதுபோக்கிக் காலங்கழித்துக்கொண்டு சிவதிரவியாபஹாரங்களும், மேற்கூறிய தர்மவிஹீனங்களுங்கொண்டிலையும்போலிச் சைவரையுமன்றோ வவர்வேடமாத்திரத்தாலஞ்சி நாம்வழிபடுகின்றோம்! மேல் யாம்காட்டிய பகுதிகள் சைவசமயிகளநுட்டிக்கற்பாலனவாகிய பாஹ்யாந்தரமானவிரண்டு தர்மங்களாக வேற்படுகையாலிரண்டிலெதுகுறையினு மவரைவிவேகிகள்தள்ளவேண்டியது. இங்ஙனமாக, அந்தரதர்மங்க ணிறைந்திருப்பினும் பாஹ்யதர்மங்களில்லையாயி னவரைமாத்திரமேநாம் வர்ஜிக்கின்றோம். இப்படியேபாஹ்யதர்மங்கணிறைந்திருப்பினு மந்தரதர்மங்களில்லையாயி னவரையும் நாம்வர்ஜிக்கவேண்டுமன்றோ! அப்படிக்கனுபவமின்றே! இதுஎன்னபெருந்தாழ்வு! சைவருளநேகர்பாஹ்யதர்மிகளாகவே திரிவதன்றி அந்தரதர்மிகளாசக்கிடைப்பது அதிதுர்லபமாய்விட்டது. அந்தரத்திலவலம்பிப்பன வெல்லா மூலகாயதர்க்குரிய வஞ்சம், பொறாமை முதலான வஸங்கதங்களேயாகையால் அவரேன்புறச்சமயிகளாகமாட்டார்கள்! அப்படியே கடவுளில்லையெனவுலகாயத ஸித்தாந்தத்தைப் பாஹ்யத்தி லவலம்பிப்பவருள் பொய்யாமைமுதலியவ

ந்தர்மங்கள்ஸித்திக்கப்பெற்றவர்கிடைப்பினவரேன் சைவராகமாட்டார்கள்? சைவத்துக்கே யவை யுரிய தருமங்களாகையால். இவை யெல்லாச்சமயங்கட்கும் பொதுக்குணங்களெனக்கூறுவாருமுளர். சைவத்தைவிட்டு ஒருசமயமு முண்டாதற்கே யிடமில்லாதபோது அங்கே யவர்கூற்றுப் பயன்படுவதெங்ஙனம்? சைவத்தினடியாகவே யச்சமயங்கள் சிவித்தலாலவற்றுளித்தருமங்களுபசாரமென்க. பாஹ்யத்தில் சைவசிந்நங்கண்டு சைவனென மருவும்படியே அந்தரத்திற்சைவதருமங்களைக்கண்டு சைவனென மருவிக்களிகூர்தல் சாலுமென்க. இதனாலெந்தச்சமயிகளுஞ் சைவதருமங்களைப் பாஹ்யாந்தரங்களாகியவிரண்டுவகையாலுங் கொள்வதரிதாயினு மவற்றுளொருவகையாலாவ தவசியங்கொண்டேயிருப்பராகையால் யாவருஞ் சைவரால் விரும்பத்தக்கவரேயாவர். இப்படிக் கூறியதால் பாஹ்யாந்தரங்களாற் சைவஸித்தியுண்டாவது பரமகஷ்டமென்பதும், அப்படியுண்டாகப்பெற்றவரருமையிற்கிடைப்பாரென்பதும், அவருக்கு ஸமரசஞானமுண்டாமென்பதும் ஏற்பட்டது. இவ்வாறன்றி மாயாவாதத்தையே வேதாந்தமெனவும், அந்தப்போலி வேதாந்தமுஞ் சைவஸித்தாந்தமுஞ்சமரஸமாகியவொரேஞானமெனவும்பேசிப் பொங்கியழிவார் கோளையும், ஆணவத்தான்மொத்துண்டு பிறந்திறக்கும் விண்டுமுதலியபோலித்தெய்வங்களையும், நம்பரசிவமூர்த்தியையுமொரே தெய்வமென்று சமரஸஞானம்பேசிச் சழக்கிட்டுழல்வார் கோளையுஞ் சமரஸமெனல்பொருந்தாது! பொருந்தாது!!

ஈண்டு மாயாவாதம், போலிவேதாந்தமென்றுகூறி நம்மால் பஹிஷ்காரஞ் செய்யப்பட்ட சமயமே யுத்தமோத்தமமான வைதிகமார்க்கமெனவும், அதற்கிப்பெயர்களுரிமையல்லவெனவும், மாயாவாத மெனவதைக் கூறுவதற்கு நியாயங்கிடையாதெனவும், மாயையென்பதொரு பொருளையே கொள்ளாத வம்மதமெப்படிமாயாவாதமாகுமெனவும், அதுவே மாயாவாதமாகுமெனின் நம்மதத்துப்பூர்வீகர் தங்கள் சாத்திரங்களில் மாயாவாதமென்றுமோர் மதத்தை நிரசிப்பதென்னையெனவும், அதனால், "மிண்டியமாயாவாதமென்னுஞ், சண்டமாருதஞ் சுழித்தடித்தாஅர்த்து" என ஸ்ரீமந்மாணிக்கவாசகசுவாமிகள் கடிந்தருளிய மார்க்கமினைத்தென வெளிப்பட்டதெனவும், இந்தமாயாவாதப்பேரதைவிட்டொழிதலாலதற்குப் போலிவேதாந்தமென்னுபேரு மப்படியேயாகுமெனவும், அப்படியாகுங்கால், வேதாந்தமென்னுமார்க்கம்அதைக்காட்டிலும் வேறாகவுண்டாவது கூடாதெனவும், சித்தாந்தமென்னுஞ் சைவத்துக்கு அது பொருண்முடிவில் விரோதியாமையால் ஸித்தாந்தமும் அதுவேயாகுமெனவும், இரண்டுமொன்றெனவுண்மையறிந்தே "வேதாந்த சித்தாந்தசமரச நன்னிலைபெற்ற வித்தகச் சித்தாகணமே" என்று தாயுமானவருங் கூறினரெனவுஞ் சமாதானங்கூறித் திருப்தியடைந்துகொள்ளு மன்னோர் அறியாமை தொலைய வுரைசெய்வாம்.

போலிவேதாந்தமென் யாம் நிரசிக்கு மார்க்கத்தை யுத்தமோத்தமமான வைதிகமார்க்கமென்று அவர் கூறலாலுண்டாகிய வுசிதம்யாது? கடவுளில்லை, ஆன்மா இல்லை, பூதங்களே யுள்ளனவெனக்கூறு முலகாயதனுந் தன்னை வைதிகமார்க்கத்தானாகக் கூறலால். "பூதத்தேயன்னமாகி யன்னத்தாலுடம்புபுந்தி, பேதித்தே மனமுமாகிப் பிரிந்தமை திருந்தவின்று, வேதத்தேவிடக்கவொண்ணா மேதினியோர்களெல்லாங், கேதத்தேவீழ்ந்துவேறு கெதிபலகேட்குமாறே" எனவவனுதாரப்படுத்தும் பிரமாணவாக்கியமேசாலும். இவன் [illegible]

திகத்வங்கூறிப் பூதங்களைமாத்திரமே யர்த்திகமாகக்கொண்டவன். இவனை யேனையசமயிகளெல்லாம் நாத்திகன், நாத்திகனென வோயாது கூறுகின்றனர். மாயாவாதியுமப்படியே கூறுகின்றனன். அது அவன்பாலிழுக்கெனவறிக. அவனே ஆத்திகனாகாதபோது அவன் பிறனை ஆத்திகனென்றல் யாண்டிசையும்? உலகாயதன் பூதங்களுக்குமாத்திரம் ஆத்திகத்வங்கூறிச் சிவசீவர்களுக்கு நாத்திகத்வமங்கீகரித்தபடியே மாயாவாதியாவான் சிவத்துக்குமாத்திரம் ஆத்திசத்வங் கூறிச் சிற்சடபூதங்களிரண்டுக்கும் நாத்திகத்வமங்கீகரித்திருக்கின்றனன். சத்தாயுள்ள சிவத்தை யங்கீகரித்த மாயாவாதிக்கும், அசத்தாயுள்ள பூதத்தையங்கீகரித்த வுலகாயதனுக்கு மொருதாரதம்யமும் யாம்கண்டிலம். இரண்டுபேரும் நாத்திகரென்னுந் துணிவுடைமையால். சத்தாகிய சிவத்தை மாத்திரங்கொண்ட மாயாவாதிக்கு அசத்தாகிய வுலகமும், சதசத்தாகிய வான்மாவுமில்பொருள்களாய்முடிதலி னவனை முழுஆத்திகனெனல்கூடாது. அசத்தாகிய வுலகத்தைமாத்திரங்கொண்ட வுலகாயதனுக்குச் சத்தாகியசிவமும், சதசத்தாகிய வுயிருமில்பொருள்களாய்முடிதலி னவனுமப்படியே முழு ஆத்திகனாகமாட்டான். மாயாவாதிக்குள்ள வாத்திசத்வமுலகாயதனுக்கு முண்டாயினமையின் மாயாவாதியாவானினி யுலகாயதனை நாத்திகனெனக்கூறித் திரிதனலஞ்செய்யாதென்க. உலகாயதன் அசத்தாகிய பூதங்களே சிற்சடங்களாய்த் திகழுமெனவும், மாயாவாதி சத்தாகிய சிவமே சிற்சடங்களாய்த் திகழுமெனவுங்கூறலா லிருவர் கோள்களுமொரோ தன்மையவாகியழியும். "சத்திலசத்துணைசெய்வாரகம்பிர, மத்தருன்மத்தரொன்றுந்திபற, வஞ்சகப்பித்தரொன்றுந்திபற" என மாயாவாதியையும், "ஓதுமசத்தி லுயர்சத்துதிக்குமென், றோதுவர்நாத்திகருந்திபற, வூகமிழந்தாரொன்றுந்திபற" என வுலகாயதனையுஞ்(சித்தாந்தவுந்தியில்) யாம்கண்டித்திருத்தல்காண்க. சத்துஅசத்தாகவும், அசத்துச்சத்தாகவுந் திரியமாட்டாவாகையாக். நெல் கமுகாயும், கமுகுநெல்லாயு மீளாவென்னுந்தருக்கமே யதைநிறுத்தும். நாத்திகராகிய வவ்விருவருள் மாயாவாதியைஆத்திகனென்கையிலப்படியே யுலகாயதனையும் ஆத்திகனென்றலிற் பழுதில்லையெனவும், உலகாயதனை நாத்திகனென்கையி லப்படியே மாயாவாதியையும் நாத்திகனென்றலிற்பழுதில்லையெனவுங் கற்றுணர்ந்த மேலோர்சருதாகிற்பர். இப்படி யிவர்களொழியவே, சத்து, அசத்து என்னு மிருபொருள்களையுந்தான்விவகரித்தலாலவற்றின்வேறானமூன்றாவதுசதசத்தாகியவான்மாவென்னுந்தன்னையுங்கண்டு பதார்த்தத்திரயபோதகமாகிய வேதாந்தரஹஸ்யங்களைக்கண்டுணர்ந்தவனேயன்றோ ஆத்திகனாவான்? கண்டவுலகமும், காணும் ஆன்மாவும், காட்டுஞ்சிவமுமாகிய மூன்றனுளொன்றுகெடினு மாண்டு ஆத்திகம் பூர்த்திசட்டாதென்க. சிதசிதீசுவரபதார்த்தத்திரயபோதகர்களாகியபாஞ்சராத்திரிகட்குஆத்திகத்வம்ஸித்திக்குமேயெனின், அன்னோர்சானுந்தன்மையினவாகியதம்மோடொத்தபசுக்களுளோர்பசுவையேகாட்டும்பதிப்பொருளெனமயங்கலாலவருக்கும்பதிநிச்சயத்தன்மையில் நாத்திகமேநிலைக்கும். மேல், பதிபசுபாசபதார்த்தத்திரய போதகராகிய சைவஸித்தாந்திகளே முழுஆத்திகராதல்கண்டுதெளிக. சைவமொன்றுக்கே ஆத்திகத்வம் நிலைத்தலாலதுவே வேதவேதாந்தபாரங்கதர்களால் கொள்ளத்தக்க வைதிகமார்க்கமாயினமை ஸித்தித்தது. இந்த வுண்மைநியாயங்களால் மாயாவாதமே வைதிகமார்க்கமென்று சாதிக்கப்புகுவது தவறாய்விட்டது. நாத்திகமுமவைதிகமுமாகத்துணியப்படு மம்மதத்துக்கு மாயாவாதம், போலிவேதாந்தமென்னும் பெயர்களுரிமையல்ல வென்னுந்தர்வாதமு மினிச்சிவியாதென்க. மேல்விய

வஸ்தையா லப்பெயர்களம்மதத்திற்குரிய
வென்னு நியாயம் போதராலாலதையி
ங்கொஞ்சம் விளங்கவுரைப்பாம்.

மாயையை யில்பொருளாகக் கொள்
ளலாலவர்மதம் மாயாவாதமாவதெப்படி
யெனின், அவர்ஜகஜீவபரங்களை மிச்சை
யெனக் கூறுந்தன்மையான் மிச்சாவாதி
களென வவரையுண்மைநூல்கள் கூறும்.
(யாமாஸாமாயா)என்பதற்குஎதுஇல்லா
ததோஅதுமாயையெனவவர்மதப்படியே
பொருளுண்டாவதாலதுவே மிச்சாவாத
ம், மாயாவாதமென்றின்னனவாக வழங்
கப்பெறும். மிச்சாவாதம் என்பதற்கும்,
மாயாவாதமென்பதற்குமோரேபொருள்
கண்டுதெளிக. சிவனை யுள்பொருளாக வா
திக்குஞ்சமயம் சைவவாதமெனவும், வி
ஷ்டுவை யுள்பொருளாக வாதிக்குஞ் சம
யம் வைணவவாதமெனவும்பெற்றப்படுதல்
போன் மாயையையுள்பொருளாகவாதிக்
குஞ்சமயமாயினன்றோ அது மாயாவாத
மாகுமெனின், ஒருசொல்லுக்குப்பலபொ
ருளுண்மையா லப்பலபொருளும் ஸந்தர்
ப்பங்களின்வழி வினியோகம்பெறும். மா
யையென்ப தொருபொருளையில்லாதது எ
னவவர்கூறுவது சொன்மாத்திரமே யன்
றி யவர்க்குள்ளபோதனங்களெல்லா மம்
மாயாவிலாசமேயாம். அநுபவத்திலதை
யுடையவராகி வார்த்தைமாத்திரத்தாலது
கிடையவேகிடையாதெனக் கூறுவதாலவ
ர் வீண்சொல்லென்னை, கௌரவம் பெறு
மா? மாயையுளதென்பது சொன்மாத்திர
மெனவும், அதுபொருளாகவுளதாயின்ஞா
னிகளநுபவத்திற்பிரபஞ்சந்தோன்றுதலெ
ன்னையெனவுஞ் சங்கித் துழலுமன்னோ
ரறியாமையைத் தொலைப்பாம். அஞ்ஞானி
களுக்குச் சிவம் விஷயமாகாததுகொண்டு
அச்சிவமுஞ் சொன்மாத்திரத்தது எனவு
ம், அதுபொருளாக வுளதாயினஞ்ஞானி
களநுபவத்திலேன் றோன்றக்கூடாதென
வுமுண்டாகுமாசங்கைக்குச் சமாதானம
வர்சொல்லட்டும் பார்ப்போம். ஞானிகளு
க்கு உலகமும், அஞ்ஞானிகளுக்குச் சிவ
மும்புலப்படாவென்க. அஞ்ஞானிகளுக்
குச் சிவம் விஷயமாகாமையா லதையில்
பொருளெனவமையாததுபோன் ஞானி
களுக்கு விஷயமாகாதது கொண்டே பி
ரபஞ்சத்தை யில்பொருளாகத்துணிவது
சர்வாஸங்கதமென்க. ஞானிகளுக்குச் சி
வமொன்றே தோன்றிக்கொண்டிருக்கு
ம். அப்படியே அஞ்ஞானிகளுக்குப் பிரப
ஞ்சமொன்றே தோன்றிக்கொண்டிருக்
கும். இவ்வுண்மைகளான் மாயையென்
பதொருபொருளை யாமங்கீகரித்த தில்லை
யென வவர்கூறுங்கூற்றுச் சிதைவுண்ட
தென்க. "இல்லாததேததுவேமாயை
யெனினில்லாத, தில்லாததேயாகுமெ
ம்மதமே, யில்லா, வொருபொருளு
ண்டென்னவுணர்க்குமோவேதம், வரு
பொருள் வேறாகமதிப்பீர்" என யாம்
(சித்தாந்தசேகரத்திற்) கூறியபடியாலு
ங்காண்க. (வருபொருள்வேறாகமதிப்
பீர) என்பதனை ஞானிகளுக்குச் சிவ
மொன்றே தோன்றிக்கொண்டிருக்குமெ
ன மேற்சாதித்த நியாயமேநிறுத்தும். உ
ள்ளதையில்லதாகக் கூறுந்தன்மையால்அ
ஸத்தியவாதிகளென்பதுதோன்ற மிச்சா
வாதி,மாயாவாதியென வவரையாம் கூறு
தல்பிழைபடாதெனவறிக. தம்மநூல்களி
லவர்மாயாவாதமெனவேறொன்றைநிரஸி
க்கத்தொடங்குவதெல்லாந் தம்பாலேறிய
குற்றத்தைத்தவிர்த்துக்கொள்ளும்பொரு
ட்டேயாம். ஒருவன்றலைமேன் மலமிருக்க
க்கண்டிரங்கியமற்றொருவனுன்றலைமேலு
ள்ள மலத்தைமாற்றுதி யென்றவளவில்ல
ன்றலைமேன் மலங்கிடையாது,அவன்றலை
மேன்மலமிருக்கிறதென வேறொருவனை
ச்சுட்டிக்காட்டியும்,உன்றலைமேற்றான் ம
லமிருக்கிறதெனச் சொல்லவந்தவனையே
திருப்பிக்கூறியுந் தன்றலையிலுள்ள மலத்
தைமாற்ற வழிதேடாதமதிகேடன் விருத்
தாந்தத்திலீதடங்கலால்விவேகிகள் கழகத்
து மணம்பெறுதென்க.மாயாவாதியாகிய

தசமயி

தனக்கு நேரிட்டிருக்கும் நாத்திகத்வத்தைப் பரிகரித்துக்கொள்ள மாட்டாமல் உலகாயதனை நாத்திகனென வவன்பழித்துத் திரியும் பண்பிற்றானே முற்றுமிழிந்தழியுமென்க. (மாயாவாதி பேயாகித், தானேயுரைக்குமந்நூலி னுண்மைதன்னைச்சாற்றுவாம்) என அருணந்தி சிவாசாரிய சுவாமிகளும், (மாயாவாதப்பேயா வுனக்குத், தேவரிலொருவனுண்டாக, மேவருநரகம் விடுத்தலோவரிதே.) என உமாபதிசிவாசாரிய சுவாமிகளும் முறையே சிவஞானசித்தியிலும், சங்கற்ப நிராகரணத்திலுங் கூறினாராகலினவற்றினுண்மைகளை யறிந்தோர்பாற் கேட்டடங்குக. இப்படி யுண்மைவெளிப்பட்டமையால், ஸ்ரீமந் மணிவாசகமூர்த்திகள் கடிந்தருளிய மாயாவாதம் தம்மதல்லவெனத் தப்பித்துக்கொள்ள வழிபார்த்ததுந் தடுமாறிப்போயிற்றென்க.

இந்த விசாரத்தால், மாயாவாதப்பேரவா விட்டொழியாமைவெளிப்பட்டதனாற் போலி வேதாந்தப்பேருமவாவிட்டதில்லையென்பதை நிரூபிப்பாம். மேலிடத்தில் வியவஸ்தைபண்ணி மாயாவாதமென்பது நாத்திகம், அவைதிகம் என்னும் பெயர்கட்குரிய சிறுடைத்தெனத் தீர்மானித்திருக்கின்றேமாகையா லதுவே போலிவேதாந்தமென்பதை நிலைக்கப்பண்ணும். இவ்வளவ்யாபாசத்தினதாகியவதை வேதாந்தமாகிய சைவதுல்யமெனவாவது, சைவாதீதமெனவாவது எந்த விவேகத்தால் நாமொப்புக்கொள்ளலாம்! வேதாந்தம் என்பது வேதமுடிவு என்று பொருள்படும். வேதத்தின்முடிவு சிவமென்றே தீர்மானம். அச்சிவம் ஸச்சிதாநந்தகநீபூதமாயுள்ளது. அதற்கு அநர்ஹஜடதுக்காதிகள் கூறுவது வேதாந்தமாகாது. இங்ஙனமாக, ஜநநமரணப்பட்டுழலு முயிர்வர்க்கங்களும், தநுவாதிகளாகக் காரியப்பட்டழியு மாயாப்பிரபஞ்சங்களு மதேப் பரமசிவத்தின் விபூதியெனக்கூறிப் பிரலாபிக்குஞ் சித்தாந்தத்தை நாமெப்படி வேதாந்தமென்னலாம்? தத்வமஸியாதி வேதாந்தங்களால் ஸித்திக்கு முடைத்து யெதைப்பயக்குமெனின், (ஆரணங்குதத்துவம்மஸி யெனும்பதப்பொருளறிந்திடாய், காரணம்மதுவுநீயுமென்றிருமை கண்டுவேறின்மைகருதலால்) என்னும் வசனத்தாற் கண்டுணர்க. இத்தியாதி மஹாவாக்கியங்களை வேதாந்தமென்பதிற் றட்டில்லை. இவற்றினுண்மையு முரிமையுமானபொருள்களையன்றி மதாந்தரஸ்தர் அந்யதாகூறும் ரோதனார்த்தங்களெல்லாம் எப்படிவேதாந்தமாகும்! அபார்த்தங்களாற் பிரலாபித்துக்கொண்டிருப்பவரெல்லாமுந் தங்களை வேதாந்திகளெனக்கூறித் திரிவதால் அவருளக்ரகண்யனாகிய மாயாவாதியுமப்படியே சொப்பனங் கண்டுகொண்டிருக்கின்றனன். அவற்றினுண்மைப்பொருளைக்கவர்ந்து அநுஸந்தானஞ்செய்யு மாற்றலுடையவனெவனோ வவனேயன்றோ வேதாந்தியென வெளிப்படக்கூடும்? அவனெவனாயிருக்கக்கூடுமெனின், வேதாந்தத்திற்கூறிய ஸச்சிதாநந்தலட்சணத்தைக் காலத்திரயத்துஞ் சிதையாமற் பாதுகாத்துக்கொள்ளத்தக்கவனாய்ச் சிவத்தியான விசிட்டமேற் கொண்டொழுகு முத்தமாதிகாரியாதல் வேண்டும். அந்தலட்சணங்குன்றாதுஉபசேவிப்பது சிவாகம ஸேவைசெய்தாலன்றி விளங்காது. அச்சிவாகமநிஷ்டை பெற்றவரோ சைவராகையால் அவரோ வேதாந்திகளாதல் சாலும். வேதத்தினந்தத்தையறிந்தவரேவேதாந்திகளாவதுண்மையாக, சிவாகமங்களையறிந்தபேர் வேதாந்திகளாவதெங்ஙனமெனின், வேதத்தினந்தத்தையறியுந்தன்மையி லுண்மையறிவும், பொய்யறிவுமாகவெளிப்படலால் உண்மையறிவின்படி வேதாந்தமும், பொய்யறிவின்படிப் போலிவேதாந்தமுஞ்சித்திக்கும். ஒவ்வொருவருந் தாந்தாங்கூறும்பொருளேயுண்மையெனக்கோடலினதனையிதுதானெனக்காட்டுதல் வேறு சான்றிருந்தாலன்றி

யமையாது. அச்சான்றே சிவாகமமாகையா லதனையுணர்ந்தவரே வேதாந்திகளென்றல்பொருந்தும். வேதத்தையும், வேதாந்தங்களாகியவுபநிடதங்களையுஞ்சொன்ன சிவனே சிவாகமங்களையுஞ் சொன்னாராகையால். வேதத்தை ஸூத்திரமும், சிவாகமத்தைப் பாடியமுமாகக் கொள்ளுஞ் சைவமார்க்கமே வேதாந்தமெனவுஞ் சித்தாந்தமெனவும் பெறும். மூலத்தால் வேதாந்தமும், பொருள்விளக்கத்தால் ஸித்தாந்தமுமாகிவிளங்குஞ் சைவமார்க்கத்தோடு எப்படியோ மாயாவாதம் ஸாம்யம்பெறும்! அம்மாயாவாதத்துக்குமுன் சிவாகமம் இருளுக்குமுன் கதிரொளியாகுமாகையால். இருளுங்கதிரொளியு மொன்றாகு மெனினன்றே, மாயாவாதமுஞ் சைவமுமொன்றாகும்! அப்போதல்லவோ வம்மாயாவாதம் வேதாந்தமுமாகும்! அப்படியே சித்தாந்தமுமாகும்! பின்னர் வேதாந்தசித்தாந்தசமரசமுமதுவே யென்னுமாகும்!

பதிபசுபாசங்கள் மூன்றுக்குமாத்திகங்கூறும் வைதிகசைவத்தின் முன்னர்ப் பாசபசுக்களுக்கு நாத்திகங்கூறிப் பதிக்கு மாத்திரம்ஆத்திகமங்கீகரித்து அப்பதியைக்காட்டினும் பசுபாசங்கள் வேறில்லையெனப் பதித்தைகூறுகிற்கு மம்மாயாவாதம் ஸாம்யம் பெறுவதெங்ஙனம்! கதிரொளியும், கண்ணொளியும், இருளுமாகிய மூன்றுங்கதிரொளியேயென்னப் பொருந்துமா? தனித்தனி யொவ்வொன்றும் வேறுவேறு லட்சணங்களைக்கொண்டுவிளங்கலால். கதிரொளிசிவமும், கண்ணொளி யுயிரும், இருள் மலமுமான போது இம்மூன்றையுங்கதிரொளியேயென்று சொல்லுவதெங்ஙனம்! மூன்றும் வேறுவேறாகி வியாபக, வியாப்தி, வியாப்பியங்களாக விரவிகிற்குமென்னுஞ் சைவசித்தாந்தமும், இவைமூன்றல்ல வொரே பொருளென்னும் மாயாவாதமு மெப்படியோ சமரசமாகும்! பசுபாசங்களையில்பொருள்களாகமதித்துப் பதியொன்றுளதெனக்கொண்டதேயன்றி அப்பதிதருமங்களையவதுவே பசுபாசங்களாய்த் திரிந்ததென்னு மாபாசத்தா லப்பதிக்கு நாத்திகத்வமே ஸித்திக்கச்செய்தவராயினர். அப்படிப் பரிணாமத்தைப் பெறுவது பதியாகக் கூடாமையால். அல்லது பசுவே பதியாயினதென்றாலும், பாசமே பதியாயினதென்றாலுஞ் சர்வாஸங்கதமெனத் தள்ளுண்டுபோமெனவறிக. வேதாந்தத்தின் பொருளாயுள்ளது ஆகமாந்தமாகையா லவ்வாகமாந்தமே ஸித்தாந்தமெனலமையும். இவ்விரண்டுமே ஸமரசமாகுமன்றி யேனைய நான்முடிவுகளைச் சமரசமெனல் பொருந்தாது! பொருந்தாது!! "ஓரும் வேதாந்தமென்றுச்சியிற்பழுத்த, வாராவின்பவருங்கனிபிழிந்து, சாரங்கொண்டசைவசித்தாந்தத், தேனமுதருந்தினர்சிலரே" எனப்போதரும் பிரமாணத்தானு மதுநிலையுதல்பெறும். வேதாந்தமுடம்பும், சித்தாந்தமுயிருமென விளங்கலா லவை யத்துவிதப்பட்டுநிற்கு முறைமைநோக்கி அதுவேயிதுவெனவும், இதுவேயதுவெனவுங் கூறுதல் பொருந்தும். இன்னும், "வேதாந்தத்தெளிவாஞ்சைவ சித்தாந்தத்திறனிங்குத்தெரிக்கலுற்றாம்" எனவும், "வேதாந்தசித்தாந்தமே பிறவாவீடென்றான், ஓதாமல்வேதமுணர்ந்தோன்" எனவும் போந்த வருள்வாக்கியங்களு மவ்வுண்மையைக்காட்டும். இன்னவுண்மையை விளக்கவேயன்றோ "வேதாந்தசித்தாந்தசமரசநன்னிலைபெற்ற வித்தகச்சித்தர்கணமே" என தாயுமானாருங்கூறினர்! இங்ஙனந்தோராது மாயாவாதத்தையே அவர் வேதாந்தமெனக் கொண்டாரெனவும், அதையே சித்தாந்தமாகிய சைவத்தோடு சமரசங்கூறினாரெனவும் வீணுரைகொண்டு உரிமைபாராட்டவருமவரவாய்மைப்பாடு வளம் பெறுதென்க.

அவர்கோளே மாயாவாதம், போலிவேதாந்தம், போலியத்துவிதம், அகம்பி

ரமவாதம், ஏகான்மவாதம், பிரச்சின்னபௌத்தவாதம், சூனியவாதம், நாத்திகவாதம் என்றற்றொட்டக்கத்துப் பலபெயர்களால் வழங்குவதே யுரிமையென்க. என்னை, அகம்பிரமவாதம் என்பது எமக்கு மொப்பேனும்அத்துடன் பிரமவாதமென்று மதைவழக்குவே மெனின், அதுகூடாது. பிரமவிலக்கணஞ் சிதைந்துபோக விவகரிக்கும் அவலத்தைப்பெற்று விளங்குகையால். உலகாயதனுக்கு அவன்கூறும் பூதசமட்டியே ஜகத்காரணமாகின்றமையா லவனுமன்றோ பிரமவாதியென வெளிவரக்கூடும்! அவன் பூதத்தையேபொருளெனக்கொண்டபடி யிவன் பசுவையேபொருளேனக்கொண்டமையாலிருவரும் போலிப்பிரமவாதிகளேயாயினர். இரண்டிக்கும்வேறாகப்பிரமமொன்று விலட்சணமாகவுண்டாகையால். அந்தப்பிரமம் சிவவாசகத்தால் சைவசித்தாந்தமொன்றுனே பெறப்படுகையால்அதற்கே பிரம்ஹவாதம் என்னும்பெயர் சிறக்குமென்க.

இப்படிப்பட்டவுண்மைகளை யறியாது தம்ம விபரீதப்படியே தாயுமானவரையுங் கொண்டு அவர் சுத்தவேதாந்தியென்பவரும், வேதாந்தசித்தாந்தசமரசி யென்பவருமாகப் பொங்கிவழியும் பூரியருள்ளம் வெள்குற வின்னுஞ் சிலவசனங்களைக்காட்டி அவர் ஸைவசிரோரத்மாயுள்ளவரென்பதை நிலைக்கப்பண்ணுவாம். "கல்வுமலமாகின்ற நாகபாசத்தினாற் கட்டுண்டவுயிர்கண்மூர்ச்சை, கடிதகலவலியவருஞானசஞ்சீவியே" எனவும், "காரிட்டவாணவக்கருவறையிலறிவற்றகண்ணிலாக்குழவியைப்போற், கட்டுண்டிருந்தவெமைவெளியில்விட்டு" எனவும், "அருமருவுகுகையனையகாயத்திலடுவுட் களிம்புதோய் செம்பனையயான், காண்டவிருக்கநீ ஞானவனல் மூட்டியே கனிவுபெறவுள்ளுருக்கிப், பருவமதறிந்துநின்னருளானகுளிகைகொடு பரிசித்துவேதிசெய்து, பத்துமாற்றுத்தங்கமாக்கியே பணிகொண்ட பட்சத்தையென்சொல்லுவேன், அருமைபெறுபுகழ்பெற்ற வேதாந்தசித்தாந்தமாதியாமந்தமீது, மத்துவிதநிலையராயென்னையாண்டுன்னடிமை யானவர்களறிவினூடுந், திருமருவுகல்லாலடிக்கீழும் வளர்நின்ற சித்தாந்தமுத்திமுதலே, சிரகிரிவிளங்கவருதட்சிணாமூர்த்தியேசின்மயானந்தகுருவே" எனவும்போந்திடும்வாக்கியங்களைத்தரிசித்தாலன்றி வேதாந்த சித்தாந்த சமரசவுண்மை விளங்காதென்க. இந்தவசனங்களால் பதார்த்தத்திரயபோதகமாகிய சைவரஹஸ்மே பிரதிபாதிக்கப்பட்டன. அன்றியும், வேதாந்த சித்தாந்தங்களை யாதியுமந்தமுமெனக்கூறப்பட்டது. (வேதாந்தசித்தாந்தமேபிறவாவீடென்றான்) என்னும் வாக்கியம் கண்ணுடைய வள்ளலாரருளிச்செய்ததில் வேதத்தினுடையவந்தத்திலுள்ளசித்தாந்தம்என்று பெறப்பட்ட வர்த்தத்தையே யன்றோவிந்தவசனமுங்காட்டிற்று! இன்னும், அத்துவிதநிலையினராயுள்ளபேர் சிவனுக்கடிமைகளெனவும், அவருக்குத் தாமடிமையெனவுங் கூறினதாக வெளிப்பட்டது. இதனால் வேதாந்தத்தைக்களவாடியதுபோல் அத்துவிதந்தம்மதெனக் களவாடியதுஞ் செரிக்காமற்போயிற்றென்க. அத்துவித மென்பதற்கு ஏகமென்றுபொருள்கொண்டறிய மன்னோரை யடிமைகொள்ள வேறொருபொருள் அவருக்கன்னியமாகத் தேடக்கிடையாமையி னவரை யவ்வத்துவிதமுந் தெருவில்விட்டதென்க. ஆயின், "சைவமுதலாவளவில் சமயமும்வகுத்துமேற் சமயங்கடந்தமோன, சமரசம்வகுத்து" எனச் சைவாதீதமான சமரசமொன்று கூறியதென்னையெனின், இதனுண்மையைச் (சங்கற்பநிராகரணத்தில்) சைவவாதிசங்கற்பமறுப்பிற் கண்டுதெளிக. இன்னும், "வேதமுடனாகம புராணவிதிகாசமுதல் வேறுமுளகலைகளெல்லா, மிக்காகவத்துவித துவிதமார்க்கத்தையே வி

சிவாயெடுத்துரைக்கு, மோதரிய துவிதமே யுத்துவிதஞானத்தை யுண்டுபணுஞானமாகு, மூகமநுபவவசன மூன்றுக்குமொவ்வுமீ துபயவாதிகள்சம்மதம், ஆதலினெனக்கினிச் சரியையாதிகள்போதும்" என்னும் வசனத்தையுஞ் சற்றேபரியாலோசிப்பாம். இதனுள், (ஓதரியதுவிதமே யத்துவிதஞானத்தை யுண்டுபணுஞானமாகும்) என்றதை மாயாவாதமாகிய அத்துவிதஞானத்தைச் சைவமாகிய துவிதஞான முண்டுபண்ணுமென்று பொருள்கொண்டு மயங்குவர். மேல், (யூகமநுபவசன மூன்றுக்குமொவ்வுமீ துபயவாதிகள் சம்மதம்) என்றவிடத்தில் உபயவாதிக ளென்பது துவைதியாகிய சைவனும், அத்துவைதியாகிய மாயாவாதியுமெனவன்றோ பொருள்கொள்ளவேண்டும்? அங்ஙனங் கொண்டால் பொருந்தாது. மாயாவாதி தனதுமார்க்கத்தை மேலாகக்கருதினவனாகையால் சைவத்தைத் தனது மதத்துக்குஸாதனமாகக்கொள்ளுவன். இது ஒருவாதிக்கு ஸம்மதமாயிற்று. இவன் கருத்திற்கேற்பச் சைவசித்தாந்தி தன்னைத்துவிதியாகவும், தனக்குமேலிட்ட வத்துவிதியாகிய மாயாவாதியொருவனுளனெனவும், அவன்மதத்திற் கூட்டிமுடிக்கும் ஸாதனமாத்திரத்தது தான் பற்றியுள்ள சைவமெனவுமொப்பி யிருந்தாலன்றோ மற்றொருவாதிக்கும் ஸம்மதமென்பதுபோதரும்? அப்போதன்றோ உபயவாதிகள் ஸம்மதம் என்னுஞ்சொல் பிரயோசனத்தையடையும்? சைவசித்தாந்தியின் ஸந்நிதியில் மாயாவாதிக்குப் போலியத்துவிதியென்னுமிகழ்ச்சிப் பெயருண்டாகிப் புறப்புறச்சமயியா யொதுங்குந் தன்மையேருமாயி னவன் சாய்வுகாலிந்தவிடத்திலெம்மட்டிற்பயன்படும்?

இங்ஙனமிற்க, சிவாகமங்கள் கூறுஞ் சரியைகிரியையோகஞானங்களை யடைந்தவர்யாவருஞ் சைவரேயாவர். அவருள், ஞானி மற்றைய மூன்றுந் தானெய்தியுள்ள ஞானத்துக்கு ஸாதனங்களெனக்கொள்வன். யோகி தனக்குக்கீழிட்ட விரண்டுந்தானெய்தியுள்ள யோகத்துக்கு ஸாதனமெனக்கொள்வன். கிரியாவான் தனக்குக் கீழிட்டவொன்றுந் தானெய்தியுள்ள கிரியைக்கு ஸாதனமெனக் கொள்வன். சரியாவான் தனக்குக்கீழொன்று மில்லாமையால் தனக்குமேலிட்ட கிரியையை யடைவதற்குத் தான்ஸாதகனென வெண்ணுவன். கிரியாவான் றனக்கு மேலிட்டயோகத்தை யடைவதற்குத்தான்ஸாதகனெனவெண்ணுவன். யோகி தனக்குமேலிட்ட ஞானத்தை யடைவதற்குத் தான் ஸாதகனென வெண்ணுவன். இப்படியன்றோ மாயாவாதி சைவசித்தாந்தியையும், சைவசித்தாந்தி மாயாவாதியையுமொப்பவேண்டும்? மாயாவாதியைச் சைவதீக்ஷாஹீனத்தினுற் சித்தாந்தி பரிசிக்கவுஞ்செய்யாதாகையால் துவிதம்=சைவம், அத்துவிதம்=மாயாவாதம் எனமனப்பால்குடிப்பது மனம்பெறாதென்க. அதனுண்மையை யோசிக்கில் துவிதம்=அபரஞானம், அத்துவிதம்=பரஞானம் என்றே வெளிப்படும். பெத்தத்திலாணவக்கலப்பாற் சிவனோடத்துவிதமுண்டாகாமையாற் றுவிதியாயும், முத்தியிலாணவநீக்கத்தாற் சிவனோடத்துவித முண்டாகின்றமையால்அத்துவிதியாயுஞ் சைவஸித்தாந்தியொருவனே விளங்குவன். அத்துவிதமென்பதற்கு ஏகமென்று பொருள்விரித்தாலன்றோ வது மாயாவாதமாகும்? (பண்ணையுமோசையும் போலப் பழமதுவு, மெண்ணுஞ்சுவையும்போ லெங்குமா, மண்ணரூள், அத்துவிதமாத லருமறைகளொன்றென்ன, தத்துவித மென்றறையுமாங்கு.) என்னும் பிரமாணத்தால் அத்துவிதத்தினுண்மை வெளிப்படும். இவ்வுண்மையறிந்தேயன்றோ (பொய்கண்டார்காணாப்புனிதமாமத்துவித, மெய்கண்டான்பொ

ன்னருளைமேவுநாளெந்நாளோ) எனநந்தாயுமானார் துதித்தனர்? இந்தவுண்மையையேயன்றோ (ஆணவத்தோடத்துவிதமானபடிமெய்ஞ்ஞானத், தாணுவினோடத்துவிதஞ் சாருநாளெந்நாளோ) என்னுந் திருவாக்கால் வெளியிட்டனர்? இந்த விசாரத்தால் துவிதமாகிய வபரஞானத்துக்கும், அத்துவிதமாகிய பரஞானத்துக்குமுள்ள சம்பந்தம் வெளிப்பட்டமையாலிரண்டும் ஸாதகஸாத்யங்களென்பது சித்தித்தது. இந்தக்கருத்தை நிலைக்கப்பண்ணவேயன்றோ (ஆதலினனக்கினிச் சரியையாதிகள்போதும்) எனமேல் விளங்கவுரைத்தனர்? சரியையாதிகளைகவர்தால் ஞானம்முடிந்தபொருளாகையால்பூர்வோத்தர விரோதமுண்டாகாமை வெளிப்பட்டது. "விரும்புஞ்சரியைமுதன் மெய்ஞ்ஞானநான்கு, மரும்புமலர்காய்கனிபோ லன்றோபராபரமே" எனப்போந்த பிரமாணமுமதைநிறுத்தும். இன்னும் அத்துவிதமென்பது (ஒன்றாகாமலிரண்டாகாம, லொன்றுமிரண்டுமின்றாகாமல்) என்றபடியமைந்தது. கண்ணொளிகதிரொளிகளின்கலப்பே யதுவாகையா லிந்தவுபமானவாயிலாக வுபமேயத்தையறிந்திடுக. இரண்டொளிகளுங்கலந்தகாலத்திற் காணுந்தன்மையுங் காட்டுந்தன்மையுமங்கே யுண்டாதலா லொன்றாகாமலெனவும், அவ்விரண்டுதன்மைகளையுந் தனித்தனிக்காணக்கூடாமையா லிரண்டாகாமலெனவும், அவற்றையிரண்டாகப் பிரிக்கப்படாமையாலும், அவற்றுட்டனித்தனிக் குணங்களைக் காண்பதனாலுமொன்றுமிரண்டு மின்றாகாமலெனவுங்கொள்வதுமரபாம். இவ்வுவமையேயான்மபரமான்மவயிக்கத்தை நன்குவிளக்கும். கண்ணொன்றைக்காணுங்கையிலதற் கெனக்காணுந் தன்மையிருந்தன்றிக்கதிரொளிகாட்டாது. கண்ணில்லாதவன்மாட்டுக் கதிரொளியயன்செய்யாது. கதிரொளியில்லாவிடத்துக் கண்ணொன்றையுங் காணாது. இவற்றுட்பிரயோசனங்கண்ணொளிக்கேயன்றிக் கதிரொளிக்கன்று. இப்படிக் காணுகையிற் காணுந்தன்மை பாதியும், காட்டுந்தன்மைபாதியுஞ் சேர்ந்துமுழுத்தன்மையாலொருபொருள் விஷயமாவதாற் கண்ணுக்கு அனைக்காட்சியே யுரிமையாயிற்று. இப்படியே யான்மபரமான்மாக்களிடங்கொண்டதுணிபை விளக்கவேயன்றோ (நான்கும்பிடும்போதனைக்கும்பிடாதலால் நான்பூசைசெய்யன்முறையோ) என வுண்மையைச்சாதித்தனர்? கண்ணுக்குக்காணுஞ் செயலிருந்துங் கதிரையன்றியது பிரயோசனத்தைச்செய்யாமையாலன்றோ சிவனையன்றியுயிர்க்குச் சேட்டிப்பின்றெனவுபமானவாயிலாகச் சிவாகமங்களுண்மையை நிறுத்தும்? சேதனமாகியவுயிர்க்கே சேட்டையொழிந்தபோது அசேதனமாகியபிரபஞ்சத்துக்குச் சேட்டையுண்டாமென்பது கூடாதாகையாற் சேதனத்துக்குஅறியுஞ்சேட்டையும், அசேதனத்துக்கு அசையுஞ்சேட்டையுமச்சிவத்தினது ஞானக்கிரியைகளாலுண்டாமென்பதையேயன்றோ "எல்லாமுன்னடிமையே யெல்லாமுன்னுடைமையே யெல்லாமுன்னுடைய செயலே" என்னுந் திருவாக்கால்விளக்கினர்? அடிமை சேதனங்களும், உடைமையசேதனங்களுமாம். இரண்டின்சேட்டைகளையுஞ் சேர்த்தே "அவனன்றியோரணுவுமசையாது" எனவுங்கூறினர். இப்படியோராளமான பிரமாணங்களுண்டாயிருத்தலால் அத்துவிதவிலக்கணமிணைத்தெனவெளிப்பட்டது. இப்படியுணராமல் அத்துவிதம்என்பது இரண்டில்லாதது என்க்கொண்டு ஏகமென்னுந்தேர்ச்சியால் எல்லாஞ்சிவம், நானுஞ்சிவம்எனமயங்கியழிவது வினையின் கொடுமையென்க. இப்பெருந்தீமைகொண்டேயன்றோ கௌதமசாபமுடையாராகிய விப்பிரருட்பலர் பிற

ந்திரந்தழலும் விண்டுமுதலிய தெய்வப்பிணங்களையும் பதிகளெனமயங்கி யவரைப் பரமபதியாகியசிவபெருமானோடு சமானங்கூறுகின்றனர். அவ்விப்பிரருக்குக்கேடுவந்தபோதுந் தாய், தங்கை, மகளென்னும் வியவஸ்தை கெட்டதில்லையாக வந்த வியவஸ்தையேனோ தெய்வவிஷயத்தின் மாத்திரங்கெட்டொழிந்தது? அப்படியே பிராமணன், பஞ்சமனென்னும் வியவஸ்தையுண்டானபோதுசிவன், விஷ்ணுவென்னும் வியவஸ்தை யுண்டாகாததென்னே! பஞ்சமனுக்குந் தனக்கும் பேதம்பாராட்டிக்கொண்டுவிஷ்ணுவுக்குஞ் சிவனுக்கும்பேதம்பாராட்டாததென்னே! அன்னத்துக்குமமேத்யத்துக்கும்வியவஸ்தை கண்டபோது சிவனுக்கும் விஷ்ணுவுக்குமேன் வியவஸ்தைகாணக்கூடாது? அமேத்யமன்னமாகாதபோது விஷ்ணு சிவனாவதெப்படி? இன்ன பலஹேதுக்களால் சமரசமிதுவல்லவெனத்துணியப்பட்டது. அறிவினதுவரம்பிகந்த விவகாரங்கள்! செய்வது பித்தர் செய்கையும், பாவிகள்செய்கையுமாக முடிதலின் ஸமரசமென்பது அவ்வப்பொருள்களி னிலக்கணப்படி யங்கீகரித்து ஒன்றிலும் விரோதம்பாராட்டாமை யென்பதே நிர்மானமாயிற்று.

இதுகாறுஞ்செய்துவந்தவிசாரத்தால் உலகாயதனிழிவும், மாயாவாதியிழிவும்,வைனமதத்தவரிழிவும்பெறப்பட்டமைக்குயாதுகதியெனின்,ஞானத்தைப்போதிக்குமாசாரியன் யோகத்துக்குங்கிரியைக்குஞ் சரியைக்குமிழிவுகூறுவதனாலுண்டாகியதாழ்வுயாது? அப்படிக்கூறுவது கீழுள்ளவன் மேலுக்குமுறையேவரவேண்டுமெனக்கருதியேயாகையால் யாவுமங்கீகாரமேயாம். சரியைமுதல்நான்குஞ்சேர்ந்தேசைவலட்சணம் பூர்த்திகட்டுவதா லவற்றுளொன்றுகெடினுஞ் சைவங்கெடுமென்க. "உபதேசப்பித்தோவுபயோகப்பித்தோ, விபரீதமோபழக்கமோவேறோ, தமஸ்கீ, கண்மூடாவிண்மூடத் தெறிக்கவுசலேபோ, லெண்மூடாயோகமிது" என்பது யோகிநிலையைக்காட்டிற்று. யோகிக்கே நிந்தையுண்டானபோது ஏனையோர்க்கு நிந்தையைவிசாரிக்க வேண்டியதில்லை. இப்படி நிந்திக்கு ஞானியின் நன்மையை நோக்கின் "சன்மார்க்கமேமுதலாத்தாத மார்க்கத்தளவுந், தன்மார்க்கமான வெங்கள்சம்பந்தன்" எனவும், "சரியாதிநான்கினுக்குஞ்சாலோகமாதி, வருமாறெமக்களித்தவள்ளல்"எனவும்போந்தபிரமாணங்கள்காட்டும். நால்வுபாதத்தவருஞ் சிவனடியாரேயாதலா லொருவரையொருவர்காணநேரிடுங்கால் நமஸ்டாரதம்ய நோக்காதுவழிபடுஞ் சமரசத்தன்மையேமேலுண்மையைநிறுத்தும். சைவசித்தாந்தத்திற் பெறப்படுந் தத்வபேதங்களிற் பூதங்களைவிசுவசிக்குமுலகாயதனும், புத்திதத்வத்தையபிமானிக்கும் புத்தனும், குணதத்வத்தைக்கொண்டாடுஞ் சமணனும், வாசுதேவப்பிரகிருதியை வாஞ்சிக்கும் பாஞ்சராத்திரியும், ஆன்மாவையதசந்திக்குமாயாவாதியுஞ் சைவவிரோதிகளாவதெப்படி? ஓராரண்மனையிலரசருக்கு வீட்டிருக்கும் விடுதிகளிலபிமானம்வைத்துத் தனித்தனித்தத்தமாளுகைகளை முக்கியமெனக்கொண்டாடி மகிழ்வார்பார் அரண்மனைச் சொந்தக்காரனுக்கு விரோதமுண்டாகும்? தனது அரண்மனை பாதுகாவலுக்கே பலமுண்டாயினமையலன்னோர்பலருந் தனக்கவிரோதிகளேயினர். இப்படிக்கொள்ளுஞ் சமரசபாடுடையசன்மார்க்கஞ் சைவமார்க்கமொன்றே யெனத்துணிந்து [illegible] ரசவொதபுதியையடைந்து உலகம் [illegible] த்துய்க.

வாழ்த்து.

"காலமொடுதேசவர்த்தமானமாதி கலந்துநின்றநிலை[illegible]வாழி
மாலறவுஞ்சைவமுதன்மதங்களாகி மதாதீதமானவ[illegible]
சாலமிகுமெளியேனெவ் வழக்குப்பேசத் தயவுடை
யாலடியிற்பரமகுருவாழிவாழி யகண்டிதாகா"

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநமஃ.

சித்தாந்தரத்நாகரம்.

ஆளுடையபிள்ளையார்

வெண்பாவந்தாதி.

இஃது.

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

சூளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE MEMORIAL PRESS,

No. 39, THUMBOO CHETTY STREET,

28th February 1881.

தைந்தும்புகலியிலேயன்புடனீதோன்றுக்கா
லெந்தாயென்னுமோ விசை. (ருஎ)

தாமதமார்க்கத்தார்சமயச்சழக்கொழியார்
தாமதமாவாருன்னைச்சார்கிலார் - சேமப்
புறவத்திருநகர்வாழ்புண்ணியனேயென்னு
ளுறவுற்றருள்வாயுகந்து. (ருஅ)

உகமெண்ணிறந்துமுலவாத்தென்காழி
யகமன்னுஞானவரசே - தகவுன்னு
மோத்தூரிலாணிற்பொலியுமுயர்பனைபெண்
ணாத்தமிழ்சொற்றுயுளத்தேயண்ணு. (ருகூ)

உளவறிவாருன்னை யுகப்பரோயன்றி
யுளவறியாருன்னை யுகவார் - உளவீதங்
கன்றுன்றிருமணத்தி லார்ந்தபேர்சம்பந்தா
துன்றினர்காண்சோதியிடந் தோய்ந்து. (கூ0)

இடபமூர்நம்ப ரிடமகலாளம்பொற்
குடமுலைப்பாலுண்ட குழந்தாய் - செடிசேர்
மறமலியும்வன்னெஞ்சக் கள்வனேனுய்யுந்
திறமுண்டோநின்றுள்செறிந்து. (கூக)

தாளானடியர்படுந் தாபந்தகவருடந்
தாளானவலர்தமையாளுமலர்த் - தாளாளன்
சம்பந்தாவென்று தணவாப்பெருங்கேண்மை
யின்பந்தாவென்பார்க் கிசைந்து. (கூஉ)

இன்பங்கடந்தவிடத்தே யிருந்துமோ
வன்பிற்பழுத்தமனத்தேனைச் - சண்பைக்
கொருமூன்றுலகு முணர்த்துங்கருணைக்
குருராயனும்புகலிக் கோ. (கூந)

புகலிநகர்போந்தென் புன்மைதவிர்த்தாளும்
பகவன்பகவதிபால் வந்த - சுகசொருப
ஞானவிளக்கே நமச்சிவாயப்பொருளே
மோனநிலைசற்றே மொழி. (எகூ)

சற்றேபதைக்கத்தரினுஞ் சகம்படைக்கக்
கற்றானுங்காலனுமா மென்றே - சொற்றார்க்
கெழுமன்பிலேனிங்கிடராற்சம்பந்தா
கழிவனோநாளுங் கதித்து. (௬௫)

கதிநின்கமலக்கழலல்லால்வேறு
கதியறியேன்காழிக் கடலே - துதிமேவு
மாமறைகள்போற்று மறைஞானசம்பந்தச்
சேமநிதியேயுன் சீர்தேர்ந்து. (௬௬)

தேருங்கலைஞானமெல்லாந் தெளிந்தபெரி
யோர்தம்பெருமை நலத்தொன்றே - வாரார்
முலைமடவாரின்பமே முத்தியென்பார்பாழ்வாய்க்
கிலையோசம்பந்தா விடர். (௬௭)

பந்தார்விரலுமையோர் பங்குளார்மெய்யன்பிற்
சிந்தாநெறியுலகிற் செப்பினன் - செந்தா
மரைமேலவனுள்ள மாசுபறித்தாளும்
பரைகான்முளைசம்பந்தன். (௬௮)

காழிப்பதியின்கௌணியனார் பொன்னடிகள்
வாழிகண்டாயென்றுவழுத்துகேன் - ஆழியூர்
தோணிபுரங்கொண்டெந் துரிசறுத்துவண்கயிலை
காணியெனக்காட்டுதல் கண்டு. (௬௯)

கண்டேகரும்பின்சுவையே கனிரசமே
தண்டாமரைசூழ்தடஞ்சூழ் சண்பையில்வா - ழெண்டோளன்
கந்தமலர்ப்பாதங் கண்டணையுஞ்சம்பந்தா
அந்தமிலாவன்பெற் கருள். (௭௦)

அந்தணர்கள்போற்று மரசேசிகாழிவரு
சுந்தரனேயெங்கடுணைவனே - மந்திரமாம்
[illegible]சாக்கரப்பதிகம் பாடினையே யெம்போல்வார்
[illegible]ற்றியானிக்க நேர்ந்து. (௭௧)

[illegible]ாதநெஞ்சுடையா ரென்றுபொரு
[illegible]கோணையவருட் - சீரார்

புதல்வனெனவருநின் பொன்னருளாம்வெள்ள
மதுதோய்கிலேனருள்வாய் மற்று. (எஉ)

மறுவைவளம்பதியை மன்னியெழினிற்றுத்
துதிபதிகமோதுந் துணையே - விதுகதிர்திக்
கண்ணுனுளங்கதித்த காளையேயென்றுன்னை
நண்ணுகிற்பேனென்று நான். (எங)

நாடவயலுண்டோ நன்னெஞ்சேநான்மறைகள்
பாடுமெழிற்சம்பந்தன் பாதமலர் - கூடுகிற்பார்
எம்மடிகளாமவர்பா லேவலிசைகிற்பார்
பொய்ம்மைநிரலேமாய்ந்து போம், (எச)

போமேபுலன்வழியிற் போகுமவாவைந்து
மாமேதிருவருளுமன்பரிவர் - தாமேயா
மென்னுமபிதான மெய்துமேசம்பந்தன்
பொன்னடிசிந்திப்போர்களுக்கு. (எரு)

போருருமேரகமும் போற்றுதிருவேங்கடமுந்
தேருருஞ்செந்திறிருத்தணிகைச் - சீருரும்
வீற்றிருந்தஞான விளக்கேவியன்காழித்
தேற்றமேநன்றருளிச் செய். (எசு)

செய்வானுஞ்செய்பொருளுஞ் செய்யப்படுவானும்
பெய்வானுமாரியெனப் பேரருளைக் - கொய்வானும்
மாயாமலவிருளை வந்தென்னகம்புகுவான்
றுயாம்புகலிநிதி தான். (எஎ)

நிதியென்றெவருநெருங்கியுறவாடும்
பதியாம்புகலிப்பரமன் – மதியுடையார்
கண்ணிற்கருமணிபோல் வான்மற்றென்கண்ணனையான்
றண்ணருளென்பாலுண்டோ தான். (எஅ)

உண்டோசிவஞான முண்டதிருச்சம்பந்தன்
பண்டாமலரடிமெய்ப்பத்தியார்க் - கொண்டா
மனையோன்வகுத்த விதிமற்றவனே
யருணடிகிற்பதனு லாங்கு. (எகூ)

நாலுமுகனுர்க்கிளைய ஞானவருட்செல்வமே
நாலுமுகனுக்கருளு நம்பனே - நாலுமுக
நாடுங்கழுமலத்து நாயகமே நின்னருளை
நாடுங்கிழமையரு ணன்று. (அ0)

அருளாலேயுன்னை யணைவார்பிறவி
மருளான்மதிமயங்கு வாரோ - அருளாளா
நாயிற்கடைப்படுமென் மாட்டுநேயந்தின்ற
தாயிற்பேராதருணீ தான். (அக)

நீதாசிகாழிநிமலா சிவங்கமழும்
போதாபுராண புனிதனே - நாதா
பரம்பூத்தஞான பரமகுருவேயென்
னுரம்பூத்தலென்றுள் ளுவந்து. (அஉ)

வந்தார்மலரோனும் வாசவனுமாலவனுங்
கொந்தார்மலர்சொரிந்து கூப்பியே - தந்தங்
கரங்கள்சிரங்கொள்வர் காழிச்சம்பந்தா
வரங்கணீதந்தருளு வான். (அங)

வானோகமகிழ்ந்து வாழ்த்தத்திருமருகல்
மேனுள்விடந்தீர்த்த வித்தகநீ - நானுந்
துவிதப்பிழையொழிக்குஞ் சோதிவடிவே
எவிதத்தானீடேறு வேன். (அச)

ஏற்றுக்கொடியுயர்த்த வெம்மானைக்காட்டுதியோ
கூற்றிடத்திலென்னைக் கொடுத்தியோ - சாற்றரிய
தென்கழுமலப்பதியிற் சேர்த்தியோசம்பந்தா
என்செய்வாயுள்ள மியம்பு. (அரு)

என்றுமொழியா விருத்தியேதென்காழிக்
கன்றேநின்சீரைக் கருதாதார் - பொன்றுங்கால்
அந்தோபரிதிமகனுர்க்கென் செயற்பாலா
ரெந்தாய்சம்பந்தா வினி. (அசு)

தாரமர்பூங்கொன்றைச் சடையானிடம்பூத்த
வேரம[illegible]ங்கொடியா ரீந்தருளுஞ் - சீரமைந்த

பாலமுதமுண்டபாம்பொருளே யேழையேன்
சீலமிகவருணிற் சேர்வு. (அள)

சீலம்பெரிதுடைய தேவேசாண்மேவித்
தாலம்புகழ்காழிச்சம்பந்தா - கோலஞ்சேர்
வேள்பணியும்பேரழகா வேதியாகின்மலர்ப்பூந்
தாள்பணிவேனே சிறியேன்முன். (அஅ)

பணியகிலாருன்னைப் பதிதராவாரொன்
றெணியறிஞர்போற்று மியறேர்க் - கணிதருசீ
காழியனேபோதிற்பொலியுங் கழலிணையே
வாழியுனைத்தேனுண் மகிழ்ந்து. (அகூ)

மகிழ்பூத்தஞான மடவாள்புணர்ந்த
விகழ்பூத்தவென்னுள்ள மெய்தும் - புகழ்பூத்த
கற்பகமேகாழிக் கவுணியர்தங்கண்மணியா
மற்புதனேயெந்துணை யென்னில். (கூ0)

துணையேயென்றுன்னைத் துதித்தார்சீரல்லா
லுணையேன்பெருங்காழி யுற்றாய் - பிணைசேரும்
பாற்படுநெய்போலும் பரிசொருவனுண்மையையென்
பாற்படவிங்காள்கண் பாராய். (கூக)

நாளாகிமாதமாய் நல்வருடமாயிணைய
கோளாகியல்லவாய்க் கூறுநசைக் - காளாகி
மாயும்வினைவலியேன் மாகாழிச்சம்பந்தா
வேயுநினைப்பெறுவே னென்று. (கூஉ)

வேனுக்குடையார்தம் மேலேவிருப்பமுடன்
ஞானகாரத்தினிலே நாடிடா - தானடிப்
போய்வருவதேதொழிலாய்ப் போந்திழிந்தேன்சம்பந்தா
தோய்வினையான்மேனுளந்தோ. (கூரு)

அந்தோதென்சீகாழி யார்பழிச்சும்போரேறு
கொந்தார்விரைமலர்த்தாள் கூடியே - சிந்தா
குலந்தவிராய்பாழ்நெஞ்சே கூட்டுங்கருணை
நலந்தவமே யென்பதினி நாடு. (கூச)

நாடுகலமெவையு ஞானசம்பந்தன்முனம்
பாடுந்திருப்பதிகம் பாடுவார் - கூடும்
பரிசிற்பிழைபடுமோ பாடியேமாலன்
ருெருசிவமுற்ருேரு மின் (கூ௫)

மின்ஞர்கலவியிலே வீழ்ந்துதடுமாறுமெனக்
கன்னேசிவஞான வாரமுதைக் – கொன்னே
யளித்தனேயேசம்பந்தா வன்பனேனுள்ளங்
களித்தனனேநின்னருளைக் கண்டு. (கூசு)

கண்டங்கரியபிரான் கான்மலரைவாழ்த்தகிலாக்
கணடகரையன்று கழுவிட்ட – கண்டமய
சின்மயஞானகாரச் சீராளனுய்வருவான்
றன்மயன்காழிச் சம்பந்தன். (கூஎ)

மயலில்லாரஞ்ஞை மறமில்லார்வேறு
செயலில்லாருண்மையே சேர்வார் - பயமில்லார்
சம்பந்தன்போற்றுஞ் சமயம்புகுந்தடைவார்
சம்பந்தனத்தனிணைத் தாள். (கூஅ)

அத்தத்தொளிரத்தத்தா லமைத்ததாளிலே
வைத்தருளுஞ்சீகாழி வள்ளலே – முத்துச்
சிவிகையாத்துறையிற்பெற்ற சிவக்கன்றே
செவிகையெலாநின்பணி செய்யும். (கூகூ)

செய்வதறியாச்சிறியேனிடருழந்து
நைவதறிந்திலையே நாயகனே - சைவநெறி
பாடியுயர்நெறியென் றுண்மைபகர்சம்பந்தா
தேடித்தேர்ந்துய்குவனுன் சீர். (க௦௦)

வாழ்த்து.

வாழிமறையாகமஞ்செந்தமிழ்வேதம்
வாழிசிவசமயம்வாழியே - காழிநகர்
வந்தகுருமணிதாள் வாழியருளுமையோ
டெந்தைபிரான்ருனு மிசைந்து.

ஆளுடையபிள்ளையார்
திருவடிவாழ்க.

முடியவிழ்க்கப்படுதலுமாகிய சமஸ்ததர்மங்களையும் அர்ஜுனனுக்குக் குருசிஷ்யஸம்வாதரூபமாக ஸ்ரீகிருஷ்ணராலே சொல்லப்பட்டது.

அவதாரிகை.

அந்தக்குருசிஷ்யர்கள் நானும் என்னுடைய மனசுமென்று கூறியதின்பின்னர் யாதொரு விவரமானது செய்யப்பட்டதோ அதனுடைய வர்த்தத்தைச் சுருக்கிச் சொல்லுகின்றார்.

(சுலோகம்.)

ఆగ్రేత్వంపరంకిం త్వమహమపికుతస్సర్వభూతానిచేతి
ప్రశ్నేశిష్యస్యతస్మైగురుకృతమఖిలంబ్రహ్మతత్త్వోపదేశం|
మోక్షంశిష్యస్యచోక్త్వా పునరపిజగదేనానుయుక్తోగురుఃక
శ్చిష్యోవేతిస్వమీశ్వరగురుమవదత్స్వస్యచిత్తంస్వశిష్యం. ॥౧౧॥

மொழிபெயர்ப்பு.

ஐயரியுரைப்பதன் முன்னருளுதிமெய்ப்பரம்யாதுயாருள்நீயார்
பையவேயெதினின்றுந்தோன்றினபூதங்களெலாம்பகரயென்ன
மையறவிர்மாணவகனுய்யவாரியன்கூறுமாட்சித்தாரு
மெய்யவிரும்பிரமோபதேசத்தாற்பெறுமோக்கமேன்மைகூறி.

இதுவுமது.

அருளலுமீண்டக்குருவாரன்புமிகுமாணவகனார்மற்றென்ற
பொருள்வினவும்பற்குனற்குப்புகலுவான்கண்ணனருள்பொங்குமீசன்
றெருள்பதிந்தவென்னிடமேகுருத்தன்மைசேருமுளந்தெளிதியென்றன
மருள்பொதிந்தசித்தமெதுமாணவகனுமென்றேமதிப்பாயென்றான்.

(இ-ள்.) நீர்சொல்லுவதற்குமுன் பாதத்வமெது? நானார்? நீயார்? எதிலேநின்றுஞ்சர்வபூதங்களுமுண்டாயின? என்னுஞ்சிஷ்யனுடையவினாவிலே அவனுய்யும்பொருட்டுக் குருவினாலே செய்யப்பட்ட பிரம்ஹதத்வோபதேசத்தையுடைய மோக்ஷத்தைச் சிஷ்யனுக்குச்சொல்லலும், மறுபடியும்அந்த அர்ஜுனனாலே குருவார்? சிஷ்யனார்? என்றுகேட்கப்பட்டவராய்ப் பரமேசுவரனைக் குருவாகப்படைத்த தன்னையேகுருவாகவும், தன்னுடைய சித்தத்தையே சிஷ்யனாகவும் ஸ்ரீ கிருஷ்ணரானவர் கூறினர். எ-று. (கக)

மேலிரண்டுபாடலுங் குளகம்.

இந்தப்பிரகாரம் கிருஷ்ணராற் கற்பிக்கப்பட்ட வியாக்யானத்துவயத்தினுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்துகொண்டவனாகிய அர்ச்சுனன் சொல்லுகிறான்.

బ్రహ్మయత్పరమంవేద్యం తన్మేవ్యాఖ్యాతుమర్హసి
భవతోऽపిప్రసాదేన సుసూక్ష్మేరమతేమతిః॥

(இ-ள்.) அறியத்தக்கதான பரப்பிரம்ஹமெதுவோ அதையடியேனுக்கு வியாக்கியானமாகச் சொல்லுகிறதற்குத் தேவரீரே யோக்யராயிருக்கின்றீர். தேவருடைய அநுக்கிரகத்தால் நுட்பமாயிருக்கிற பாவத்திலென்னுடையபுத்தியானது ரமித்துக்கொண்டிருக்கின்றது. எ-று.

என்று வெளிப்பட்ட விந்தப்பிரசினையின்பிற்பாடு பரப்பிரம்ஹ சொருபத்தை யுபதேசிக்கும்படி விரும்பப்பட்டவராகிய கிருஷ்ணராலே சிஷ்யாசாரியஸம்வாதரூபமாகக் கற்பிக்கப்பட்ட வோரிதிகாசமானது பிரவர்த்திக்சப்பட்டது.

కంచిద్బ్రాహ్మణమాసీన మాచార్యంసంశితవ్రతం
శిష్యఃపప్రచ్ఛమేధావీ కింస్విత్పరతరంభవేత్॥

(இ-ள்.) புத்திசாலியாயுள்ள வோர்மாணாக்கன் குருமூர்த்தமாகவெழுந்தருளி யிருப்பவராயும், சகலவிதாநுஷ்டானங்களுஞ் செய்தவராயும் விளங்குமாசாரியாராகியவோரந்தணரைப்பார்த்து எது பரதத்துவப் பொருளாயுள்ளது என்றுகேட்டான். எ-று.

కుతశ్చాహంకుతశ్చత్వం తత్సత్యంబ్రూహియత్పరం
కుతోజాతానిభూతాని స్థావరాణిచరాణిచ
కేనజీవంతిభూతాని తేషాంస్యాత్కుత్రవాలయః॥

(இ-ள்.) நான் என்பதற்குக்காரணமெது? நீயென்பதற்குக்காரணமெது? இரண்டுக்கு நடுநிலையாயுள்ள பொருளெது? அதைச் சொல்லியருளும். எதினின்றுஞ்சராசரங்களாயுள்ளபூதங்களுண்டாயின? அப்பூதங்களெதனால் பிழைத்துக் கொண்டிருக்கின்றன? அந்தப்பூதங்களுக்கு ஒடுக்கமெதனிடத்தில்? எ-று.

என்னும் பிரசினைகள் சிஷ்யனால் பிரசங்கம்பண்ணியபோது அவைகட்குப் பிரத்தியுத்தரத்தைச்சொல்ல வுத்தேசித்தவராகிய ஆசாரியர்வசனம் வருமாறு.

బ్రహ్మప్రోక్తమిదం ధర్మ్యం ఋషిప్రవరసేవితం
వేదవిద్యాసమావాప్తం తత్త్వభూతార్థభావనం
భూతభవ్యభవిష్యాది ధర్మకామార్థనిశ్చయం
సిద్ధసంఘపరిజ్ఞాతం పురాకల్పేసనాతనం
ప్రవక్ష్యామిమహాప్రాజ్ఞ పదముత్తమమద్యతే
బుద్ధాయదిహసంసిద్ధా భవిష్యంతిమనీషిణః॥

(இ-ள்.) நீகேட்டபொருள் பிரம்ஹதேவரால் சொல்லப்பட்டது. உத்தமர்களான விருடிகளால் ஸேவிக்கப்பட்டது. வேதவித்தையினு லடையப்பட்டது. தத்வசொரூபங்களுடைய அர்த்தபாவனையுள்ளது. உண்டானதும், உண்டாயிருக்கிறதும், உண்டாகப்போவதுமாகிய சகலதர்மகர்மங்களுடைய அர்த்தநிச்சயமுள்ளதா யிருக்கின்றது. ஸித்தபுருஷ ஸமூஹத்தா லறியப்பட்டதாயுள்ளது. கற்பங்கடோறும் பழமையாயுள்ளது. வாராய் சிஷ்யனே! உத்தமமாயிருக்கிற அந்தஸ்வரூபத்தைச் சொல்லுகிறேன். எந்தப்புத்திசாலிகளானபேர்க ளிந்தச்சாஸ்திரத்தில் சொல்லுகிற ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்வார்களோ அவர்கள் ஸித்தராய் விடுவார்கள். எ-று.

என்னும் ஸத்தியார்த்தத்தைப் பிரதிஜ்ஞையால் சொல்லி அவ்விஷயத்தில் கேட்கிறவனுக்கு ஆதரவு சித்திக்கும்பொருட்டு முனிவர் கூட்டத்துக்கும், பிரம்ஹதேவருக்கும் நடந்த ஸம்வாதரூபமாயுள்ள பெரிய வுபாக்கியான மொன்றை யுபதேசித்து, அதன் முகாந்திரமாகச் சிஷ்யனுடைய பிரசினைவிஷயமான சகலார்த்தங்களுமுணர்த்தப்பட்டன. அதன் மத்தியிலே பிரம்ஹதேவர் தனக்கும் விஷ்ணுவுக்கும் மகிமையை வர்ணிக்கும் விஷயமாகத் தேவரிஷிகளைக் குறித்துச் சொல்லிய வசனம் வருமாறு.

సర్వేషామపిభూతానాం మహాంబ్రహ్మమయోమహాన్
భూతంపరతరంమత్తో విష్ణోర్వాపినవిద్యతే
రాజాధిరాజస్సర్వేషాం విష్ణుబ్రహ్మమయోమహాన్
ఈశ్వరంతంవిజానీమ స్సవిభుస్సప్రజాపతిః
దేవదానవభూతానాం పిశాచోరగరక్షసాం
నరకిన్నరయక్షాణాం సర్వేషామీశ్వరఃప్రభుః
ఆదిర్విశ్వస్యజగతో విష్ణుబ్రహ్మమయోమహాన్॥

(இ - ள்.) நான் சகலமான பூதங்களுக்கும் பிரம்ஹமய மான பெரியவன். என்னிடத்திலே நின்றும் பரதத்வமான துண்டாயிற்று. விஷ்ணுவிடத்திலே நின்றும் பரதத்வ முதயமாயிருக்கின்றது. அந்த விஷ்ணுவானவர் பிரம்ஹமயமாயுள்ள பெரியவர். சகலருக்கும்ராஜாதிராஜராகவிருப்பவர். பிரபுவாயிருப்பவர். பிரஜாபதியாயிருப்பவர். தேவர்கள், அசுரர்கள், பூதங்கள், பிசாசங்கள், சர்ப்பங்கள், ராக்ஷஸாள், மனுஷ்யாள், கின்னராள் முதலாகயாவருக்கும் ஈசராயுள்ளவர். இன்னு மிவ்வுலகத்துக்காதியாயிருக்கின்றவர். பிரம்ஹமயமான வந்த விஷ்ணுவானவர் மஹானுயுள்ளவர்-எ-று.

என்ற வர்த்தத்தை யினிது வெளியிடலால் நானெவ்விடம் என்று கேட்டபிரசினைக்கு ஸமாதானமுண்டாயிற்று. மேல் பிரம்ஹமயனென்னும் பிரயோகத்தால் மயட்பிரத்தியேயம் வந்ததால் பிரம்ஹத்தின் காரியத்வம் விஷணுவுக்குச் சொல்லப்பட்டது. அந்தப்பகவானுயிருக்கிற விஷ்ணுவே கிருஷ்ணனுகையாலவருக்கு மயட் சொரூபத்வம் வேறேசொல்லாமை யுக்தமாச்சுது. இவரைக்காட்டிலும் அதிகமான தொன்றுமில்லை யென்பாராயின்,மயட்என்பது வியர்த்தப் பிரசங்கமாய்விடும். சதுர்முகராற்சொல்லப்பட்டிருக்கிறபிரம்ஹமயசப்தத்துக்குப் பிரம்ஹகாரியத்வார்த்தமிருக்கையாலெங்குமொரோவிதமாய்ப்பாடவிரோதமில்லாமையைக்கண்டு மேலர்த்தத்தையே கிரகித்திடுக. இந்தப்பிரகாரம் பிரம்ஹதேவரிஷி ஸம்வாதரூபமான வுபாக்கியானத்தைப் பிரசங்கஞ் செய்தபிற்பாடு சிஷ்யனைக்குறித்துக் குருவினுடைய வசனம் பிரவர்த்திக்கப்பட்டது வருமாறு.

త్వమప్యేవంమహాభాగ యథోక్తం బ్రహ్మణో వచః
సమ్యగాచరధర్మజ్ఞ తతస్సిద్ధిమవాప్స్యసి
ఇత్యుక్తస్సతదాశిష్యో గురుణాధర్మముత్తమం
చచార సర్వభావేన తతో మోక్షమవాప్తవాన్
కృతకృత్యస్తదాపార్థ శిష్యఃకురుకులోద్వహ
తత్పదంసమనుప్రాప్తో యత్రగత్వానశోచతి॥

(இ-ள்.) பாக்கியசாலியா யிருக்கிறசிஷ்யனே! பிரம்ஹதேவராலெப்படிச் சொல்லப்பட்டதோ வந்தப்படியே நீயுமாசரித்து

வரக்கடவாய். வாராய் சுத்தாத்மாவே! அதனாலே நீ ஸித்தியை யடைகிறாயென்று சொல்லப்பட்டவனாகிய வந்தச்சிஷ்யனானவன் குருவினாலே யுத்தமமான ஸகலதர்மத்தையு மறிந்தான். வாராய் அர்ஜுனா! அதற்குப்பிற்பாடு க்ஷேமத்தை யடைந்தான். அந்தச் சிஷ்யனானவன் செய்கையற்றவனாகி எந்தவிடத்திற் சேர்ந்தால் துக்கமில்லையோ அந்தச்சொருபத்தை யடைந்தான். எ-று.

என்று ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனைப்பார்த்துச்சொல்லியதின் பின்னர் அர்ஜுனன் பிரசினைபண்ணுகிறான்.

కో౽స్యస్తో బ్రాహ్మణః కృష్ణ కశ్చ శిష్యో జనార్దన
శ్రోతవ్యం యన్మయా తద్వై తన్మమాచక్ష్వ మేః భో॥

(இ-ள்.) வாராய்கிருஷ்ணா! இந்தப்பிராம்ஹணன்யார்? சிஷ்யன்யார்? என்னாலே கேட்டுக்கொள்ளவேண்டிய தெதுவோ அதை யெனக்குச்சொல்லும் என்பிரபுவே. எ-று.

என்று அர்ஜுனன்கேட்டதற்கு ஸ்ரீகிருஷ்ணர் கூறுகின்றார்.

అహంగురుర్మహాబాహో మనశ్శిష్యంహిః ద్ధిమే
త్వత్ప్రీత్యాగుహ్యమేతచ్చ కథితం తే ధనంజయ
మయిచేదస్తి తే ప్రీతిః నిత్యం కురుకులోద్వహ
అధ్యాత్మమేతచ్ఛ్రుత్వా త్వం సమ్యగాచర సువ్రత
తత స్త్వం సమ్యగాచీర్ణే ధర్మేస్మిన్ కురునందన
సర్వపాపవిశుద్ధాత్మా మోక్షం ప్రాప్స్యసి కేవలం॥

(இ-ள்.) வாராய் அர்ஜுனா! குருவானவன் யான். என்னுடைய மனசே சிஷ்யனென்றறிந்துகொள். உன்னிடம்வைத்த பிரீதியினாலே யிந்தச்சாஸ்திரம் ரஹஸ்யமாயிருந்தாலு முனக்குச்சொன்னேன். வாராய் அர்ஜுனா! என்னிடத்திலுனக்குப் பிரீதியிருக்குமாயினிந்த வேதாந்தசாஸ்திரத்தைக்கேட்டு நீயிதை நித்தியமாசரித்துக்கொண்டிரு. அப்படி நீயிந்தமோக்ஷ தர்மத்தை நன்றாயறிந்து ஆசரிக்கவருங்கால் ஸகலபுண்ணியசித்தியால் சுத்தாத்மாவாகக் கைவல்ய மென்னும் மோக்ஷத்தை யடைகிறாய். எ-று.

என்று ஆசிர்வதித்து முடிவு கூறியபடியாம்.

அவதாரிகை.

சகலார்த்தங்களையும் ஸங்கிரகித்துச் சொல்லியபின்னர் அர்ஜுனனவன் முன்னர்க்கிரகித்த வர்த்தத்தை யிப்போது செய்யும் விவரணநுஸாரத்தால் நன்றாகிரகிக்கட்டுமென்றாலோசித்து, ஸ்ரீ கிருஷ்ணராலநுகீதாசாஸ்திரங்களில் கீதாசாஸ்திரத்தினுடையவிவரணமானது செய்யப்பட்டதென்று இந்தச்சாஸ்திரத்தில் மேலெடுத்துக் காட்டுகின்றார்.

(சுலோகம்.)

బ్రహ్మణ్యేవం స్వచేతో నియమనబలతః స్థాయితద్గ్రంథిమోక్షం
స్వేనైవోక్తం విమృశ్య ప్రపదనవచనం తత్ర ప్రతీతార్థనిష్ఠం
యత్తత్సర్వస్య చాహం హృది ముఖవచనం తత్పునశ్శాస్త్రదృష్ట్యే
త్యేవం పార్థో న గచ్ఛేదితి ఖలు వివృతౌ యత్ర గీతాశయస్య. ॥౧౭॥

மொழிபெயர்ப்பு.

பரனிடத்திலுள்ளமடக்கியதாலுண்டாமுடியின்பாழைநோக்கி
யுரமுறத்தான்சரணடைந்தவுரையையருச்சுனனறிவானெனவுமோங்கும்
பரமெனயானெவருள்ளுமுளனென்னுமுகவசனப்பண்புமன்றேன்
றெரிந்திடுவனெனவுமுரைத்தனன்கீதைப்பொருளநுகீதையிற்சீர்மாலே. (கஎ)

(இ-ள்.) பரமசிவனிடத்தில் சித்தநிரோதத்தாலுண்டாயிருக்கிற தனது ஹ்ருதயகிரந்திமோக்ஷத்தை யாலோசித்துக் கிருஷ்ணர் தான்சரணமடைந்த வசனமெதுவோ, அதை அர்ஜுனனறிவானெனவும், சர்வஹ்ருதயத்திலும் நானேயிருக்கிறே னென்னு நம்முடைய முகவசனத்தையுஞ் சாஸ்திர திருஷ்டியால் அவனறிந்திடவே செய்வானெனவும் அநுகீதையில் கீதையினர்த்தத்தை விவரணஞ்செய்தனர். எ-று.

என்றிப்படி அர்ஜுனனறியுந் தன்மையைக்காட்டலால் கீதையநுகீதைகளின்றாற்பரியங்க ளிவையென்றுபுலப்பட்டன.

పూర్వముక్తేశ దేవోక్తం యుద్ధకాలవుపస్థితే
మయూతన మహాబాహో తస్మాదత్ర మనః కురు॥

(இ-ள்.) இந்தவர்த்தமே யுத்தகாலநேரிட்டபோதும் உனக்கு என்னாலே சொல்லப்பட்டது. ஆகையால், இந்த அர்த்தத்தில் மனசை வையென்று உபசங்காரஞ் செய்தனர். எ-று.

என்னுமிதனால், அவ்விடத்திற் குருசிஷ்யோபாக்யான மென்ற வியாஜத்தினாலே பிரம்ஹத்தைச் சரணமாக வடைந்ததனால் ஸ்ரீ கிருஷ்ணருக்கு ஹ்ருதயகிரந்தி மோக்ஷத்தை முன்னிட்டதான சித்தியுண்டாச்சு தென்று தெளிவாய்ப் பெறப்பட்டது. அதைத் தொடர்ந்து அந்த ஆதிபுருஷனையே அடைகின்றேனென்றுகூறிய நிலையிலிருந்தபடியே அஹம்பாவனையினாலேயாதொருபிரம்ஹோபதேசத்தை ஸ்ரீகிருஷ்ணர்செய்தனரோ வவையெல்லாம் சாஸ்திர திருஷ்டியினான் முடிந்தவையறிக. எஜுர்வேதத்தில், சித்வல்லி என்னுமுபநிஷத்தில் பிராணனாகவிருக்கிறேன். அறிவுமயமான வாத்மாவாயிருக்கிறேன். ஆயுளை யமுதமாகவுபாசியுங்களென்று இந்திரனாற் சொல்லப்பட்டதாகப்பெறப்பட்டிருக்கின்றது.* அவ்விந்திரனாற் சொல்லப்பட்ட பிரம்ஹபாவத்தி னுடைய வுபதேசப்படியே கிருஷ்ணர் தம்மிடங்கூறிய பிரம்ஹபாவத்தையு மறியவேண்டியது. கிருஷ்ணர் ஒருக்காலும் பிரம்ஹமாசமாட்டார். தான் பிரம்ஹமென்று கிருஷ்ணர் சொன்னதெல்லாம் பிரம்ஹபாவனையாலன்றி வேறாகாது.(தமேவசாத்யம் புருஷம்பிரபத்யே)என்னும் வசனத்தைத் தொடர்ந்து பார்க்கையில் கிருஷ்ணரைக்கூறும்பிரம்ஹபாவனாவசனங்களுக்கு வேறுவிதமாக அர்த்தத்தைவரவழைத்தால்அநியாயமாய்முடியும்.அப்படியானாலும்,கிருஷ்ணரால் அநுகீதாசாஸ்திரங்களிலே விரிவாகச்சொல்லப்பட்டிருக்கிற கீதையினுடையவபிப்பிராய விவரணத்தையநுசரித்து அஹம்பாவனாசித்தியை யடைந்தவனென்றுசொல்லுவதே நியாயமென்றறிக.

அவதாரிகை.

இந்தப்பிரகாரம் கீதாசாஸ்திரத்தினாலே விவரிக்கப்பட்ட பெருமகிமைசாலியாயுள்ள ஸ்ரீ கிருஷ்ணராலு மாசரிக்கத்தக்கதாக அநுகீதாசாஸ்திரத்தில் யாதொரு பரம்பொருள் பிரதிபாதிக்கப்படுகிறதோ, அது பரமசிவனேதவிர வேறில்லையென்று

---

* "அஹம்மநுரபவம்ஸூர்யச்ச" என்றஸூத்திரப்படி நானேமனுஸூருதயாதிகளிலிருக்கிறேனென்ற வாமதேவரிஷியின்வசனத்தாலுங்காண்க.

பிரசங்கத்தைச்சுருக்கி முடித்து அந்தவிஷயத்தில் சமிசயத்துக்கு ஹேதுமான விரோதத்தைப் பரிகாரம்பண்ணுகின்றார்.

(சுலோகம்.)

తశ్చ్బ్రహ్మప్రపత్త్యాస్యసమసురరిపోరీశ్వరత్వంనచాన్యో
నాహంకంచిత్ప్రపద్యేవిబుధమితివచశ్శ్రోతురుత్కృష్టబుద్ధ్యై
నైవంతేనీలకంఠంపరిమితఫలదంనప్రబుద్ధాఇతీదం
బ్రహ్మైక్యధ్యాతృవిద్వద్విషయమితరథానాస్తిభూయోనురోధః. ||౧౮||

மொழிபெயர்ப்பு.

பிரபத்தியாஞ்சரணம் பிரமமுடைத்தசுராரிபு பேசுமீசத்
தரமுளனன்றெவரையுநானடையேனென்றதுவிண்டொருமங்கேட்குந்
தருமனுக்காதிக்கம்வரத்தன்பானஞ்சணிகண்டற்சாரார்சான்றோர்
பரிமிதலாபஞ்சருகியென்றதயிக்கியர்க்கன்றேல்பாதையாமால். (கஅ)

(இ - ள்.) பிரபத்தியென்னுஞ் சரணமானது பிரமமாகிய சிவனிடத்திலேதானே செய்யத்தக்கது. அசுரசத்துருவாகிய கிருஷ்ணனுக்கு ஈசுவரத்துமில்லை. யாரையும் நான் ஆச்சிரயிக்கிறதில்லையென்று கண்ணன்சொன்னதுவைஷ்ணவ தருமங்களைக் கேட்குந் தருமநந்தனருக்குத் தன்னிடத்தி லுத்கிருஷ்டபுத்தியுண்டாகும்பொருட்டாம். நீலகண்டரைப் பரிமிதபலதாயகராக வித்துவான்கள் சேவிக்கமாட்டார்களென்றது ஐக்கியத்தியானவிஷயமாம். இப்படிக்கொள்ளாவிடின், இதரமானவநேகபிரமாணங்களுக்குவிரோதமுண்டாகும். எ-று.

இவ்வுண்மைப்பொருளேயன்றி வேறுவிதமாகப் பொருளுண்டாகமாட்டாது. வெகுவாயுள்ள பிரமாணங்கள் விஷ்ணுபாரம்யத்தைத் தடுத்தலே போதும். (தமோவசாத்யம் புருஷம்பிரபத்யே) என்றவிடத்தில் பிரபத்திவிஷயமாய்ப் பிரம்ஹபரமாயிருக்கிற புருஷசப்தத்தை அழிவில்லாதவனாகிய வீசுவரன் வகித்துக்கொண்டிருக்கிறானென்று பெறப்பட்டதனாலும், பூதங்களுக்கு மீச்சுவரன் என்று கூறினமையாலும் ஈச்சுவரநாமத்தினாலே வரப்பட்ட அர்த்தத்தைச் சிவனிடத்திற் கிரகிப்பதே யோக்கியம். இந்தச் சித்தாந்தமானது முன்னமேதானே விவரிக்கப்பட்டிருக்கின்றது. தேவதாந்தரத்தின் முடிப்பது கூடாதென்கையி லுண்டாகிற சங்கையைப் பரியாலோசிப்பாம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநம:

சித்தாந்த ரத்நாகரம்.

சிவபாரம்யப்பிரதரிசிநி.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

கூழை,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS.

PRINTED AT THE MEMORIAL PRESS,

No. 39, THUMBOO CHETTY STREET,

31st March 1881.

பிரமாணத்திரட்டு.

இங்ஙனமிற்க, மேற்கூறிப்போந்த சிவபாரம்ய ஸித்தியாற் பெறப்படும்பதிஞானங்கைவரப்பெற்றவர்க்கே பரசிவஸித்தியுண்டாமென்பது திண்ணமாகையாலன்னமாஹாத்மியங்களையுணர்த்துஞ் சிலசுருதிகளை யிண்டெழுதிக்காட்டுவாம்.

"𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮"என்றபடியே "𑌏𑌕𑌏𑌵𑌰𑍁𑌦𑍍𑌰𑍋𑌨𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌯𑌤𑌸𑍍𑌥𑍇" என்றுகூறினமையால் பிரம்ஹபத ருத்ரபதங்கள் பரியாயபதங்களாக வெளிப்பட்டன. இப்படியே "𑌸𑌰𑍍𑌵𑌂𑌖𑌲𑍍𑌵𑌿𑌦𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮" என்று பெறப்பட்டதற்கேற்ப "𑌸𑌰𑍍𑌵𑍋𑌵𑍈𑌰𑍁𑌦𑍍𑌰𑌃" என்று வெளிப்பட்டது. ஈண்டும் பிரம்ஹருத்ரசப்தங்கள் பரியாயமாயின. இவ்வுண்மையால் பிரம்ஹமே ருத்ரனெனவும், ருத்ரனே பிரம்ஹமெனவு மறியலாச்சது. இந்தவியவஸ்தையால் உருத்திரனைக்காட்டிலும் வேறொருபிரம்ஹங்கிடையாதென்பது தீர்மானம். "𑌏𑌕𑍋𑌹𑌵𑍈𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌆𑌸𑍀𑌤𑍍" என்றதும் பிரம்ஹபரியாயமாகாதோவெனின், இதில்(அத்விதியம்)என்னும் விசேஷணமில்லாமையால் ஏகார்த்தம்பயவாது. அதனுலிது பிரம்ஹப்பிரதிபாதகசுருதிக்குப் பரியாயமென லமையாது. ஆகவே, இந்திர சந்திரர்களைப் பிரதிப்பாதிக்கு மன்னவற்றோடுசேருந்தகைமைத்து.

"𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑌂𑌨𑌾𑌪𑌰𑌮𑌸𑍍𑌤𑌿𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍" எனவும், "𑌨𑌤𑌤𑍍𑌸𑌮𑌶𑍍𑌚𑌾𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌶𑍍𑌚𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇" எனவும் போந்த வாக்கியங்களால் யாதொருவனைக் காட்டிலும் உத்கிருஷ்டனுஞ் சமானனுமில்லையோ அவன் சிவனென்று வெளிப்பட்டது. இந்தவுண்மையால் சிவனுக்கு உத்கிருஷ்ட ஸமத்வமுடைய தேவதையைப் பிரதிஷேதித்துச் சிவனுக்கே ஸர்வோத்கர்ஷத்வம் சாதிக்கப்பட்டது. இதனையே "𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌰𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌤𑍍𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑍋𑌹𑌰𑌿𑌃। 𑌤𑌤𑍍𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑍋𑌽𑌧𑍀𑌶𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑍋𑌽𑌧𑌿𑌕𑍋𑌨𑌹𑌿" என்னும் வாக்கியமும் திறுத்தும். இங்கே பெறப்பட்ட ஈசபதம் பிரம்ஹ விஷ்ணுக்களுக்கு வேறானதொருபொருளைக் காட்டலா லவ்விருவரும் ஈசர்களாகாரென்பது போதரும். ஈண்டு ஈசசப்தம் ருத்ரஸ்தானத்தில் விநியோகம் பெற்றமையா லவ்வுருத்திரன் ஈசுவரனுக்கு விபூதியென்பது ஸித்தம். ஈசுவரன், உருத்திரனென்ற தேத்யாதிநாமங்களிருவர்க்குங் காரணகாரியத்வத்தால் ஸித்திக்கும். இதனுல், திரிமூர்த்திகளி லொருவராகிய வுருத்திரரே சிவாகமஸித்தாந்தத்தாற் போந்த பரமபதியென்று துணியற்க. சைவசித்தாந்தத்

தில் திரிமூர்த்தியுத்தீர்னரான துரியமூர்த்தியை யங்கீகரித்திருப்பதுபோல் பாஞ்சராத்திரத்தில் துரியவிஷ்ணுவை யங்கீகரித்த தில்லே. இந்தவுண்மையால், சைவநூல்களில் விஷ்ணுவுக்குக் கூறும் அபகர்ஷங்களெல்லாம் அந்த வொருவிஷ்ணுவையே சாரும். வைஷ்ணவநூல்களில் உருத்திரருக்குக் கூறும் அபகர்ஷங்களெல்லாங் குணருத்ரரையேயன்றித் துரியருத்ரரைச் சாரா. இன்னும், ஏகாதசருத்ரர், சதருத்ரர், சஹஸ்ரருத்ரரிருப்பும் வேதத்திற்கூறப்படுதலால் துரியசிவனிடம் அபகர்ஷமேறவே யிடமில்லே. அபகர்ஷோத்கர்ஷங்களை யொரேபொருளிடங்கூறுதல் அமையாமையால், வைஷ்ணவநூல்களிற் பெறப்படு முத்கர்ஷங்களு மந்தர்யாமிபாவத்தால் சிவைகநிஷ்டமேயாம். இப்படிப் பராசரபுராணத்தில் வியவஸ்தைபண்ணி யிருத்தல் காண்க.

துரியமூர்த்தியைத் திரிமூர்த்திகளுக் குற்பத்திஸ்தானமானவரும், வேருனவருமாகச் சொல்லியிருக்கும் வாக்கியத்தையும், அகாரவுகார மகார வியஷ்டிப்பிரணவ வாச்சியர்கள் திரிமூர்த்திகளெனவும், ஓங்காரமாகிய ஸமஷ்டிப்பிரணவ வாச்சியர் துரியருத்ரரெனவு முணர்த்தும் வாக்கியத்தையும், மேல் (௫௭) (௫௮) வது பக்கங்களிற் காட்டியிருக்கின்ரும். இன்னும், "[illegible]" என்னும்வசனத்தாலும் அவர் மூன்றுமூர்த்திகளுக்குமப்பாற்பட்ட நாலாவது மூர்த்தியென்பது ஸித்தித்தது. இந்தநாலாவது மூர்த்தியே "[illegible]" என்னும் வாக்கியத்தால் ஜாக்கிரமுதலான மூன்றுஸ்தானங்களிலும் எது புஜிக்கத்தக்கதோ, எவன் புஜிக்கிறவனே, எதுபோகமோ அவைகளுக்கு விலட்சணமும், ஸாட்சியும், சிந்மாத்திரமுமான நான் சதாசிவன் என்று கூறினர். "[illegible]" என்னும் வசனத்தால் அன்னியமாயுள்ள சகலமானவற்றையுந் தள்ளிவிட்டு சிவமென்னுந் தன்மையான் மங்களத்தைச் செய்கின்ற சிவபெருமாளுருவரே தியானஞ்செய்யத்தக்கவரென்று பெறப்பட்டமையால், துரியப்பொருளாகிய வச்சிவமூர்த்தியையே முமுக்ஷுக்களடைகின்றனர். சகலமானவற்றையுந் தள்ளவேண்டிய தென்றதில் "[illegible]" என்று விஷ்ணுவரையில் குறிப்பித்தமை தெளிக. மேற்போந்த "[illegible]" என்னும் வாக்

...[illegible]" என்னும் வாக்கியத்தையும்
... ஸ்ரீ சிவபெருமானே விஷ்ணுமுத
...மாவா யுள்ளவனென்பது தெற்
...விக்காமல் துக்காந்தரூபமாகிய
...ன்பதை "[illegible]
...[illegible]" என்னும் வாக்கி
...ற கூறியிருக்கும்படியே யெவனொ
...மாகச்சுருட்டி மேலே போர்த்துக்கொள்ளு
வானோ வ...னன்றோ சிவனைச் சேவிக்காமல் மோக்ஷத்தை
யடையக்கூடும்?

மேல்விவகரித்த வாக்கியங்களால் சிவஸேவையாற்றானே முத்தியுண்டாமென்று வெளிப்பட்டதை வற்புறுத்திக்காட்டுமேனைய வாக்கியங்களையும் பரியாலோசிப்பாம். "[illegible]" என்னும் வசனத்தால் சிவபெருமானையே ஜகஜ்ஜந்மாதிகாரணமென்றும், முமுக்ஷுஜநப்பிராப்யபதமென்றுந் தெரிந்துகொண்டவர்கள் முக்தராகின்றார்களென்று பெறப்பட்டது. இந்த ஈசசப்தமானது அந்யதாபொருளைப் பயவாதபடி "[illegible]" என்னும் வசனத்தில் சிவசப்தத்தா லவ்விசனே சிவனென்பது தோன்றச் சிவனை யறிந்தவர்கள் ஜநநமரணப் பிரவாகதுஸ்தரமாகிய ஸம்ஸாரதுக்கத்தி னின்று மத்யந்த சாந்தியடைகின்றார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது. சிவனைக்காட்டிலும் ஈசுவரனென்றுவெளிவருதற்கு வேதமொருவருக்குமிடங்கொடாமையால் அப்பரமசிவப்பிரதிபாதகமாகிய ஈசுவரசப்தத்தைக்கோஷிக்கும் வேறுசுருதியொன்றையீண்டுவெளிப்படுத்துவாம். "[illegible]" எனப் போந்த வாக்கியத்துக்கு லட்சியப்பொருளினைத்தென்பது வெளியாக "[illegible]" என்று பரிஷ்காரப்படுத்தி யிருத்தலேபோதும்.

மேல்வாக்கியங்களில் வித்தையெல்லாவற்றிற்கு மீசனெனவும், பூதங்களெல்லாவற்றிற்கும் பதியெனவும், பிரம்ஹாவுக்கதிபதியெனவும், பிராம்ஹணருக் கதிபதியெனவும் விதந்துரைத்த

லால் அதிபதியாகிய சிவனை நோக் வாத்மாக்களும் ஈசுவரர்களாதல் ளுக்கும், பிரம்ஹாவுக்குமதிபதி யால் அவரோவிஷ்ணுவுக்கு மதி போதரும். பிரம்ஹவிஷ்ணுரு னென்னும் வசனமுண்மையா யென்பது இழுக்காதெனக.

அன்றியும், "తాసంతో వై పశవో ద్విపాదశ్చ చతుష్పా ணத்தில் பசுக்களையும், "తస్మాద్రుద్రః పశూనామధిపతిః" என்னும்வசனத்தில் அப்பசுக்களுக்குப்பதியையுங்கூறலால், சர்வபசுக்களுக்கும்பதியாகியவுருத்திரர் விஷ்ணுவாகிய பசுவுக்குமாத்திரம் பதியாகாரென்று நாம்சொல்வதுகூடாது. "సర్వేదేవాః పశుతామవాపుః। స్వయంతేస్త్రాత్ పశుపతిస్సంబభూవ" எனவும், "స్వతశ్శివః పశుపతిస్సాక్షీ సర్వస్య సర్వదా। సర్వేషాంతుమనసైన ప్రేరితం నియమేనతు" எனவும் போந்தவசனங்களால் சமஸ்தமான தேவர்களும் பசுக்களாவாரெனவும், அப்பசுக்களுக்குப்பதியும், ஸர்வத்துக்கும்ஸாட்சியும், ஸகலருடைய மனசுகளையும் நியமமாகவெங்குமேவச்செய்கின்றவரும் ஸ்ரீசிவபெருமானுவாரெனவும்வெளிப்பட்டமையால், அத்தேவஸமூகங்களிலெண்ணப்பட்டவராகியவிஷ்ணுப்பிரம்ஹாக்களுக்குப்பசுபதியாகியவச்சிவபிரான் அதிபராதலிலென்னபாதகமுண்டாம்? விஷ்ணுவை யாகப்பசுவாக்கித் தேவர்கள் சிவப்பிரீதிகரமானயாகஞ்செய்தார்களென்பதற்கு "యజ్ఞేనయజ్ఞమయజంతదేవాః" என்னும் வாக்கியமும், அப்படிப்பட்ட யாகப்பசுக்களுக்குக் கர்த்தா வுருத்திரரென்பதற்கு "రుద్రః పశుకర్తా రుద్రోయాగదేవః" என்னும்வாக்கியமுஞ் சான்றாதல் தெளிந்திடுக. அந்தவிஷ்ணுவானவர் சிவனைத்தனக்கதிபதியாகக்கொண்டு சிவாராதனஞ்செய்தாரென்பதற்கு "అవస్థాత్రయాతీతం తురీయం బ్రహ్మసంజ్ఞితం। బ్రహ్మవిష్ణ్వాదిభిస్సేవ్యం సర్వేషాంజనకంపరం। ఈశానంపరమంవిద్యాత్ ప్రేరకంబుద్ధిసాక్షిణం" எனவும், "యక్షిణాయాందిశివిష్ణుః శ్రద్ధయైవమూర్ధాంజలిముపాస్తే" எனவும், "తవశ్రియేమరుతోమర్జయంత రుద్ర యత్తేజనిమచారుచిత్రం। పదంయద్విష్ణోరుపమన్నిధాయి తేనపాసిగుహ్యం నామగోనాం" எனவும்போந்தவசனங்கள் ஏராளமாயுள்ளன. இவற்றின் பொருள்களை நோக்கின், துரியாகிய வச்சிவபிரான் பிரம்ஹவிஷ்ணுக்களால்ஸேவ்யமானராய்விளங்குகின்றாரெனவும், காசியின் கண்ணே தென்றிசையிலிருந்துகொண்டுவிஷ்ணுவானவர்

சிரசில்கூப்பியவஞ்சலியுடன் சிவபெருமானை யுபாசிக்கின்றாரெனவும், விஷ்ணுவானவர் சிலாமயமான சிவலிங்கபூசைசெய்து பரமபதமென்னும்வைகுண்டலோகத்துக்கதிபதியானாரெனவும் வெளியாகின்றன. இன்னும், அந்தப் பரமேசுவரனை யோசிக்கையில் "విశ్వాధికో రుద్రో మహర్షిః" எனவும், "మాయాంతుప్రకృతింవిద్యా న్మాయినంతు మహేశ్వరం। తస్యావయవభూతైస్తు వ్యాప్తంసర్వమిదంజగత్" எனவும்போந்தவாக்கியார்த்த விசேஷத்தால் "వాసుదేవఃపరాప్రకృతిః" என்னும் வாக்கியத்தால் ஸித்திக்கும் அர்த்தஸ்வரூபராகிய வாசுதேவருக்கு அதிபதியாயிருக்கின்றாரென்பதி லென்னவாக்ஷேபமுண்டு? இதனையே, "యోవేదాదౌస్వరఃప్రోక్తో వేదాంతేచప్రతిష్ఠితః। తస్యప్రకృతిలీనస్య యఃపరస్సమహేశ్వరః" என்னும் வசனமும் நிறுத்தும். இப்படிப்பட்ட பரமேசுவராராதனத்தைக்காட்டிலும் மோக்ஷோபாயமான வழி வேறேகிடையாமையால் ஸ்ரீசிவபெருமானையே யாவரும் வணங்கி யுய்யக்கடவர். அவருடைய் வதிகாரசக்திகளை வகித்து அவரிட முத்தியோகஞ் செய்யும் விஷ்ணுவாதிகளுக்குச்செய்யு நமஸ்காராதி ஸ்தோத்திரங்களு மப்பரமேசுவரனையே யடைதலால் ஸர்வவந்திதராகிய வந்தத்தயாஸிந்துவே நாமாச்சிரயிக்கத்தக்கவரா யிருக்கின்றனர். "స్తోమంవాఅద్యరుద్రాయ సర్వేనిక్షయద్వీరాయ నమసాదిదిష్టన" என்னும் வாக்கியத்தால் மேலுண்மை வெளிப்பட்டவாறறிக. இப்படிப்பட்ட பரமசிவனை "సద్యోజాతంప్రపద్యామి" வசனங்களால் ஆச்சிரயிக்குந்தன்மையும் வேதபடிதமாயிருத்தலா லப்பஞ்சப்பிரம்ஹஸ்வரூபராகிய ஸதாசிவமூர்த்தியையே சிவலிங்கமுகமாக வாத்மார்த்த பரார்த்தங்களாகப் பூஜாப்பிரணமங்களால் ஸேவித்துய்வோமாக. "యదాతమస్తన్నదివానరాత్రిర్నసన్నచాసచ్ఛివఏవకేవలః" எனவும் "ప్రత్యఙ్జనాస్తిష్ఠతిసంచుకోచాంతకాలే। ఏకఏవరుద్రోనద్వితీయాయతస్థే। నబ్రహ్మానవిష్ణు నసూర్యోనాగ్నిచంద్రతారకాః" எனவும்போந்த வின்னவநேகவசனங்கள் சிவபாரம்யத்தைக்காட்டிவிளங்கலால், அவற்றையீண்டெடுதாமலிவ்வளவிலுபாதியடைந்தோம். இந்நூலில் ஸங்கிரஹமாகவிடுத்த ஸதஸத்விவேகவிஷயங்களைக்(குதர்க்கவாதவிபஞ்சிநி) "ஆபாசஞானநிரோதம்" இத்யாதி பிரபந்தங்களிற் பரக்கக் கண்டுகொள்க.

மேல்விசாரத்தால் ஸ்ரீ ருத்ரமூர்த்தியே பரப்பிரம்ஹமெனவும், அவரேயாவுமெனவும், அவரையன்றி யற்பமுஞ்சிவிக்கவிட

மின்றெனவும், அவருக்கு வேறாகப் பிரம்ஹத்வநிரூபணம் எந்தப் பொருளிடத்து மற்பமுஞ்செய்ய யோக்யமின்றெனவும், அவர் பிரம்ஹவிஷ்ணுவாதிமூர்த்தித்திரயாதீதராயுள்ளவரெனவும், அவரேயீசசப்தவாச்சியராயிருத்தலாலவரைநோக்கவேனையோரநீசுவராகின்றாரெனவும், அத்வைதரும், சாந்தருமாகியவவரைநாலாவது பொருளாக வறியவேண்டுமெனவும், அவர் ஸர்வத்துக்கும் ஸாட்சியாயும், சிந்மாத்திரமாயுமுள்ள ஸதாசிவமூர்த்தி யென்று சொல்லப்படுவரெனவும், அப்படிப்பட்ட பரமசிவத்தையேயந்நியமாயுள்ள ஸமஸ்தத்தையும் விட்டுத் தியானிக்கவேண்டுமெனவும், அவ்வந்நியங்கள் விஷ்ணுவிறுதியாகக் கொள்ளப்படுமெனவும் வெளிப்பட்டது. விஷ்ணுவை வேதங்களிற் பரம்பொருளென்று சொல்லுகையால் அவரைவர்ஜித்தல் கூடுமோவெனின், அந்தவேதந்தானே வர்ஜனத்தைக் கூறினமையால் குற்றமில்லையென்க. பரமாகவும், அபரமாகவும் அவரை வேதங்கூறியதென்னையெனின், பிரமனாதி கீழிட்டவரை நோக்கப்பரமும், உருத்திராதி மேலிட்டவரைநோக்க வபரமுமாகக் கூறியதாம். உருத்திராதி மேலிட்டவர் துரியசிவனது விபூதிகளும், பிரமனாதி கீழிட்டவர் தன்னைப்போல் சிவாநுக்கிரகம்பெற்ற சேதனர்களு மாகையால் சுருதிவிரோதமில்லை. பாசத்தாற் கட்டுண்டு கிடக்கும் பசுக்கள்தங்கள்கட்டுகளைத் தாமேயவிழ்த்துக்கொள்ளக்கூடாமையாலும், ஒரு பசுவுக்கு மற்றொருபசுவுங் கட்டையவிழ்த்துவிடக் கூடாமையாலும், விஷ்ணுவாதிஸமஸ்ததேவர்க்களையும் வேதம் பசுக்களென்று கூறுகின்றமையாலும், விஷ்ணுவரையில் சிஷ்டராயுள்ளபேர் வர்ஜிக்கத்தக்கது என்றவுரை ஸாமஞ்ஸமேபெற்றது. பசுக்களைப்போலவே பதியும்பிறந்துழல விடமில்லையாகையால், பிறந்து பிறந்து சாகும்பசுவாகிய விஷ்ணுவுக்குப் பதித்தன்மை செரிக்காதென்க. விஷ்ணுபிறந்துசாதலைத் தர்மஸம்ஸ்தாபனார்த்தமென்றுகண்ணன் கீதையிற்கூறினமையால் அது சிவத்தன்மை யாகாதெனின், நாராயணனைப்போலவே நரனும்பிறந்து செத்தகதைகள்தர்மஸம்ஸ்தாபனத்தின் பொருட்டென்றுகேட்கப்படுகையால்முன்னையது உசிதம்பெறாதென்க.

விஷ்ணுவைப்பசுவாகக் கொண்டால் அந்தப்பசுவுக்குப்பத்து என்னும்வரையறுக்கப்பட்ட ஜந்மமுண்டாகுமா? பசுக்களெண்

ணிறந்தபிறவிகளையுடையவர்களல்லவா? அப்படியேயன்றே விஷ்ணுவும்பிறந்துழலவேண்டும்? அப்படிக்கின்மையால் காரணக்கருதியே பதியாகிய நாராயணர் கிணற்றில்விழுந்த சிசுவை யெடுக்கத்தானுங்குதிக்குந்தாயைப்போல் தசாவதாரங்கள் செய்தாரெனவும், இந்திரன் முதலினோர் ஸாமான்யசீவராகையால்எண்ணிறந்த பிறவிகளையுடையவன்னோர்ஜந்மங்களையவசியமெனக்கொண்டுவேதங்கூறுதபடி அவருளொருவராகவெண்ணப்படும் உருத்திருடையஜந்மங்களையும் வேதஞ்சொல்லாதெனவும், அப்படிச்சொல்லாததுகொண்டே சிவனுக்குப் பரமபதித்வம் ஸித்திப்பது கூடாதெனவுமுண்டாகுங் கடாக்களுக் கிறைதருவாம்.

விஷ்ணுவுக்குப் பத்துப்பிறவிகளென்னும் வரையறையுண்டாயினமையே அவர்பதியாதலைக் காட்டுமானால், ஜயவிஜயர்களுக்கு மூன்றேபிறவிகளென்னும் வரையறை யுண்டாயினமையால் அவரென்னவாதலை அதுகாட்டும்? பத்துக்குஞ்சுருக்கமாக மூன்றுஜன்மம்பெற்றராகையால் அன்னோர் விஷ்ணுவுக்கும் மேலிட்டபதிகளாயினர்போலும். ஜயவிஜயர்களுக்கு அம்மூன்றுஜந்மங்களுஞ் சாபத்தாற்கிடைத்தமையால், அப்படியேயன்றே பத்துஜந்மங்களைச்சாபத்தால் விஷ்ணுவும்பெற்றனர்? பிருகுசாபத்தால் விஷ்ணுவுக்குப் பிறவிகளுண்டாயினமை பிரமாணஸித்தமாகையால் வேறுஜாலம் பகர்வது விருதாவென்க. எண்ணிறந்த பிறவிகளைக் கொண்டுழலும் பசுக்களாகிய ஜயவிஜயர்களுக்கு விஷ்ணுத்துவாரபாலகர்களாய்ப் பவித்தமையுந் தனித்தனி யோர்ஜந்மமாகையால் அந்த ஜந்மமுடிவதற்குமுன் அபராதத்தாலிடையில்வந்த ஜந்மங்கள்மூன்றும். இப்படியேயன்றே விஷ்ணுவிடமுங்கொள்ளத்தக்கது? பிறந்துபிறந்துழலு மோர்பசுவுக்குச் சிவாராதனபலத்தால் விஷ்ணுவென்னும் பட்டமும், பரமபதமென்னும் வைகுந்த நாட்டரசுங் கிடைத்தபோது, அதுசெல்வனோடந்து வருகையி லிடையினேர்ந்தவபராதத்தாற் பத்துப்பிறவிகளுண்டாயின. பத்துஜந்மங்களுமுடிந்தவுடன்பழையபடியே விஷ்ணுவாகியரசுபுரிந்து, காலம்வந்தபோது செத்து, மேல்கூட்டிமுடிக்கும் வினையின்படிச் சந்மங்களையெடுத்துழலுமாட்சி யுண்டாயினமையாலின்னஹேயலட்சணஹிதமாகியவோர் ஜீவனையெப்படிப் பரமபதியென்று நாம்சொல்வோம்? அவதாரங்களெடுக்கையில்

பரமபதத்தில் விஷ்ணுவிருந்ததில்லையா? அதுபாழாய்ப் போச்சுதா? எனின், அவ்விஷ்ணுவெடுத்த வவதாரங்கள் பூர்ணவதாரமும், அம்சாவதாரமுமெனவிரண்டுவிதமாகச் சொல்லப்படுதலால், பூர்ணவதாரகாலத்தில் வைகுண்டம்பாழாயிருந்ததென்பதிலென்னவாக்ஷேபமுண்டு? வாமனனாக விஷ்ணுபிறந்தகாலையில் அதிதியினிடத்தில் அவ்விஷ்ணு பத்துமாசந்தங்கி யிருந்தாரெனவும், அந்தஸமயத்தில்,விஷ்ணுவிடத்திற்கண்டுபேசவேண்டி நாரதமுனிவர் வைகுண்டத்திற்குப்போயினரெனவும்,அப்போது வைகுண்டத்தில் விஷ்ணுவில்லாமற் போயினரெனவும், முனிபுங்கவர்விசாரித்தபோது அதிதிகர்ப்பத்திற்சென்றிருக்கின்றாரென்று தெரிந்து, உடனே திரும்பி அவ்விடத்திற்கு வந்து அம்மாதினுடையகர்ப்பத்திற் றூணுமணுப்பிரவேசஞ்செய்து, உள்ளேயிருந்த விஷ்ணுவைக்கண்டு வார்த்தை சொல்லிப்போயினரெனவும் ஆதித்தியபுராணத்திற் கூறியிருத்தலுக்கு நாம் என்ன சமாதானந் தேடலாம்? இப்படியனேக முளவற்றை விரிவஞ்சிவிடுத்தாம்.

இனி, இந்திராதிகளுடைய ஜந்மங்களைவேதம்விதந்துகூறுதபடியுருத்திரருடைய ஜந்மங்களையுங் கூறவில்லையென்று கொண்டால், மேல் (உடு) வது பக்கத்திற்காட்டிய சுவேதாசுவதர வசனத்துக்கு என்னகதிதேடுவது? அவருக்கு ஜந்மஸ்தானமும், காரணமுமில்லையெனவும், அவர் காரணங்களுக் கெல்லாம் பிரபுவானவரெனவும், அவருக்கு உற்பத்திகாரணமானவர்களொருவருமில்லையெனவும் பெறப்படுமுண்மையை யூகியாது வீண்விபரீதம் பேசுவது பயன்பெறுவதெப்படி? பாசத்திற்பிணிப்புண்ட பசுவுக்குண்டாகத்தக்க ஜந்மங்களை யெப்படிப்பசுபதிக்கும் வேதங் கூறும்? பசுபதியென்று சிவனொருவனையேயன்றி விஷ்ணுவாதிகளைமறந்தேனும் வேதங்கூறிற்றா? அவர்களைப்பசுக்களென்று ஏராளமாய்க்கூறியிருத்தல்பிரத்யட்சம். இப்படிப்பட்டவகந்தியாயங்களால் பிறந்திறந்துழலும் விஷ்ணுவனையில் சிவஞானிகள்வர்ஜிக்கவேண்டுமென்பது நிலைபெற்றது.

மேல், ஸர்வஸங்கபரித்யாகாநந்தாம் அடையத்தக்க பரம்பொருள் சிவமொன்றே யெனவும், அதுவே மோக்ஷப்பிரதாயகமெனவும், அந்தமோக்ஷம் சிவஞானவித்தியால் பிராப்தமாகத்தக்க அமிர்தபதமாகுமெனவும், அதுவே பரமசாந்திஸ்வரூபமென

வும் பெறப்படுகையால், அது ஸித்திக்கும்பொருட்டு ஈசானுதி மந்திரஸ்வரூபனும், உமாபதி, பசுபதீத்யாதி திருநாமங்களுடைய வனும், எஜ்ஞாதிபதியும், பிரம்ஹவிஷ்ணுக்களுக்கு ஸேவ்யமானனும், விஷ்ணுவுக்குப் பரமபதத்தைப் பிரஸாதித்தவனும், பிரகிருதிமாயைகளுக் கப்பாற்பட்டவனும், ஸர்வராலும் நமஸ்கார பூஜ்யனும், பிரம்ஹா-விஷ்ணு - சூரியன் - சந்திரன் - நட்சத்திரங்களிவைமுதலொன்றுமில்லாமற் போகத்தக்க தமோமாத்ராவசேஷமாயிருக்குங்காலத்திற் றனேயொண்டியா யிருப்பவனுமாகிய ஸ்ரீபரமேசுவரனையே சரணடைந்து மகிழ்வோமாக. "நாமார்க்குங்குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம், ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோ மின்பமேயெந்நாளுந்துன்பமில்லை, தாமார்க்குங் குடியல்லாத்தன்மையான சங்கரனற்சங்க வெண்குழையோர்காதிற், கோமாற்கேநாமென்று மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச்சேவடியிணையே குறுகினோமே" என்னும் வேதப்பிரமாணமே சான்றுதல் தெளிக.

இங்ஙனநிற்க, மணவாள மாமுனியென்னும்பாஞ்சராத்திரிக்கும், ஸ்ரீமத்சிவாக்ரயோகிகளுக்கும்,ஓர்காலத்தில்நடந்தஸம்வாதத்தில் அப்பாஞ்சராத்திரிதனதுபூர்விகர்கள் வாக்கைப் பிரமாணமாகக்கொண்டு வாதிக்கத் தொடங்குகையில் அவற்றை மறுத்து ஸித்தாந்தியார்கூறிய ஸமாதானங்கள் வருமாறு.

சிவதத்துவவெண்பா.

எங்கள் நாராயணர் நான்முகனைப்படைத்தார், நான்முகன் சங்கரனைப்படைத்தா னென்றதற்கு விடை.

நான்முகனுந்தான்முகமாய்ச்சங்கரனைநன்மையுடன்
றுன்படைத்தானென்னுந்தரமிலாய் - நான்முகவன்
றன்குதத்தில்வந்த விண்டுதானேமுகத்துதித்த
சங்கரனின்மேலாவான்சாற்று. (க)

விண்டுவாந்தாய்பால்வெளியாஞ்சதுமுகனர்
கண்டரனையுள்ளேகருதியதால் - பண்டையரான்
றோன்றினனென்றேன்றெழிலருளமாமுகத்தி
லென்றுகொளாய்வேதத்தினின்று. (உ)

நீரின்கண்மண்டோன்றுநீர்மைபோன்மாமலரோன்
கார்வண்ணன்பால்வந்தகாரணங்காண்—சிரமைந்த
மண்ணினெருப்புதிக்குமாண்புண்டேலன்றேமூக்
கண்ணனயன்பால்வருநீகாண். (௩)

பிரமனுருத்திரனும்பேதாய்மாலோனும்
அரனுலுண்டாக்கப்பட்டாரென் – றுரமாகச்
சொல்லுமதர்வசிகை சோதியாயென்றேநின்
புல்லுரையார்கொள்வாரிப்போது. (௪)

சமணமுதலியவற்றோடு சேரும் பெற்றிமைத்தே
சைவமென்றதற்கு விடை.

சிவப்பட்டாரினரெனச்சேர்த்தாயமண்ணே
டவப்பட்டநீயவரோடாவாய் – சிவப்பட்ட
சொன்மங்கலந்தேராய்சோம்பனேநின்மதமே
புன்மங்கலங்காணிப்போது. (௫)

ஈசனைவென்ற சிலையை யெங்களிராம
னேற்றானென்றதற்கு விடை.

ஈசனைவென்றசிலையேற்றானிராமனெனப்
பேசினையீசன்றன்பேர்ப்படைகொண் – டாசி
லிலங்கையாற்செற்றதியம்பும்பதுமம்
விலங்கேநீசொல்லாய்விதந்து. (௬)

வளையாமலையைவளைத்தமாதேவ
னிளையாநின்றான்மால்கைவில்லிற் - களையாடி
வென்றானெனல்வேதவேதாந்தவித்தகர்முன்
சென்றேறுமோவெனக்குச்செப்பு. (௭)

எங்கள் திரிவிக்கிரமமூர்த்தி பாதநீரையே சிவன்சடையிற்
கொண்டானென்றதற்கு விடை.

கறைகொண்டகண்டத்தான்சென்னிமேன்மாலோன்
நிறைகொண்டபாதநீரென்றாய் - வெறிகொண்டாய்
கங்கைதனைத்தாங்கறியாக்கண்ணன்கானீரோவெஞ்
சங்கரன்கொண்டானென்பைசாற்று. (௮)

வாமனகற்பந்தன்னில்வந்தமுகுந்தன்காணீர்
காமதகனன்வராககற்பத்தின் — மாமறைகள்
போற்றப்புனைந்தநீரொன்றேபெரும்புளுகைச்
சாற்றினாலேறுமோதான். (கூ)

மார்க்கண்டமுனிவர் பெற்றது எங்கள்விஷ்ணுப்
பிரஸாதமேயென்றதற்கு விடை.

மார்க்கண்டன்கண்டவகையேவருமென்ற
மூர்க்கனேயந்தமுனிமாற்ற — மேற்குமோ
நின்மதத்துக்கந்தோநெடுமாலிறந்துபல
சன்மமெய்தல்கேட்டிருந்துந்தான். (க0)

என்றுஞ்சிரஞ்சீவியாயிருக்கமார்க்கண்டர்க்
கன்றுசிவனாருளுமாட்சிமறை — யின்றுமெவ
ருங்காணக்கூறுமேயோகோவறியாய்நீ
சங்கைகொண்டாய்கொண்டாய்சநி. (கக)

எங்கள் பரவாசுதேவனாயே தக்ஷிணாமூர்த்தியாகிய சிவன்
ஸநகாதிகளுக்குபதேசித்தா ரென்றதற்கு விடை.

ஆலநிழற்கீழறநெறியைநால்வர்க்கு
மேலையரன்கூறினான்விண்டுவையே — மூலமெனக்
கொள்ளும்படியென்றருத்திரனேசான்றுண்டேல்
விள்ளுதிவண்டென்முன்விரைந்து. (கஉ)

வாணிக்குமெய்ஞ்ஞானவைபவகாண்டந்தனைப்
பேணியுரைத்ததற்பின்பிஞ்ஞகனார் - நாணிலாய்
மாலுக்குமன்றேவழங்கினார்சூதனுரை
கோலிக்குணப்படுவாய்கொண்டு. (கங)

இன்னுமிசைப்பேனிராமன்சிவகீதை
முன்னவன்பாற்கேட்டமுறைமைபோல் - மன்னுமுணர்
வில்லாய்புராரி யிடங்கேட்டனன்கபிலன்
சொல்லாருஞ்சாங்கியநூல்சூழ்ந்து. (கச)

எங்கள் திருமாலை நீறாடியாகிய சிவன் காண்பது
கூடாதென்றதற்கு விடை.

நீறாடிதான்காணானின்மாலடியென்றாய்
கூறாயிரவிகுவையிருளை — மாறாது
காணுமோமாலிருளாங்கண்ணுதலோனேரவியாம்
நாணுவாய்வேதத்தைநாடு. (௧௫)

எஞ்சிவனைநீறாடியென்றபடிநின்மாலை
வஞ்சனேயென்சொல்வாய்மாயோனுஞ் — செஞ்சடையான்
றன்கண்மணிநீறுதான்கொண்டமையுமெனும்
நன்கறிவாய்நான்மறையைநாடு. (௧௬)

பன்றியாய்மாலோன்பரனாரடிதேடிக்
கன்றினானுள்ளங்கலங்கியெனும் — வென்றிமறை
அந்தோநின்மால்விச்சுவாதிகனைக்காண்பெளிதோ
வந்தோதாய்மால்விச்சுவம். (௧௭)

சிவனுக்குநேரிட்ட பிரம்ஹசாபம் எங்கள் விஷ்ணுவால்
தீர்க்கப்பட்டதென்றதற்கு விடை.

மேல்நான்முகனரனையிட்டவியன்சாபந்
தான்நாரணன்றவிர்த்தானென்றாய் — மான்நோக்குங்
கையானின்றாய்ச்சீதைகாந்தன்பிரமகத்தி
கொய்யாநின்றான்கண்டுகொள். (௧௮)

பிரமன்றலையோடுபேதாயெம்பெம்மான்
கரமேவுங்காட்சியாலன்றோ — பிரமனரி
யென்போரகந்தையிரியுமிசைக்குமதின்
மன்னுமேமால்சோரியும். (௧௯)

எங்கள் திருவேங்கடத்தானைச் சிவன் இரவில்சென்று
ஆராதிக்கின்றானென்றதற்கு விடை.

திங்கள்சடையேறவைத்தான்சீர்வேங்கடத்தானைக்
கங்குல்புகுந்தணிந்தான்காப்பென்றாய் — மங்குறவழ்
வேங்கடத்தான்செஞ்சடையெம்வித்தகனார்பெற்றெடுத்த
தேங்கடப்பக்தாரனெனத்தேர். (௨௦)

மால்வேங்கடமலையாய்வாழ்குமரனைச்சுமந்து
மால்கிழான்வடிவையாண்டொருபால் - மாலகல
வர்ச்சித்தும்போற்றியகமகிழுமென்பதற்கோ
பிச்சனேவேறுரைத்தாய்பேசு. (உக)

பாணாசுரன் சண்டையில் எங்கள் கண்ணனுக்குச் சிவன்
இளைத்தானென்றதற்கு விடை.

உவரிக்கடனஞ்சமுண்டபிரான்வாணன்
றவரில்சமர்க்கொதுங்கித்தாழ்ந்தான் - உவரிவண்ணற்
கென்றுய்நின்மாலெங்களீசனருள்கொண்டன்றே
வென்றான்சமரில்விரைந்து. (உஉ)

சிவனருளால்வாணன்றிமிர்விடநின்கண்ணன்
அவனுயர்தோண்மாய்த்ததறியாய் - சிவபெருமான்
வாணனுக்குத்தந்தவரங்கண்டாய்முன்கதையைப்
பேணுதியேலுண்டோவிண்பேச்சு. (உங)

வீரன்சராசந்தன்வெம்முனையிலேபதுங்கும்
வீரனன்றோநின்கண்ணன்வீமனால் - சூரனவன்
றன்னைப்பகைமாய்த்துத்தானுயிர்வாழ்ந்துய்ந்தகதை
பின்னையறியாய்போலும்பேசு. (உச)

பரமபதமென்னும் எங்கள் விஷ்ணுபதி சிவனுக்கு
எட்டாதது என்றதற்கு விடை.

கார்செறிந்தகண்டத்தான்காணுவைகுந்தமெனுங்
கார்செறிந்தநெஞ்சத்தாய்காணுதியால் - கார்செறிந்த
வண்ணத்தான்பெற்றதுமேல்வைகுந்தவாழ்வரனை
யெண்ணித்தானென்னுமறையே. (உரு)

எங்கள்நாராயணர் ஸர்வப்பிரபஞ்சத்தையுஞ் சிவனோடுசேர்த்து
உண்டுவிட்டாரென்றதற்கு விடை.

கார்க்கண்டனேடுண்டான்கார்வண்ணன்யாவையுமென்
றார்க்குமறிவில்லாயன்றலைநீர் - மீக்கொண்டா
னென்னையவன்கொள்ளாததென்னேவக்கீரையெனக்
கென்பகர்வாய்மண்ணுண்டானென். (உகு)

மண்ணையேமாலுண்டான்மாமலரோன்முன்கெடவே
யெண்ணியேநீருண்டானிந்துதரன் - கண்ணனவன்
முன்கெடவேயின்னுமுளதத்துவமுற்றுங்கண்டா
லேன்கெடுவாய்வீணேயிரைந்து. (உஎ)

எங்கள்விஷ்ணுவையே சிவன் பூஜிக்கின்றார்
என்றதற்கு விடை.

ஆடரவத்தார்மாலையர்ச்சித்தானென்றுரைத்த
கேடனேயார்சொல்லக்கேட்டனையோ - மூடமொழிந்
தர்ச்சித்தான்சங்கரனையன்பாகமாயோனென்
றர்ச்சித்தேயோதுமறையாம். (உஅ)

எங்கள் நெடுமாலே ஈசனுக்கும், பிரமனுக்குந்
தெய்வமென்றதற்கு விடை.

ஈசர்க்குநான்முகர்க்குமேற்றபெருந்தெய்வமெனப்
பேசினையேமாலைமிகப்பேதையே - ஈசன்று
னென்றபொழுதேயவனுக்கில்லைமேலோனென்று
நின்றபொருள்கேட்டிலையோநீ. (உகூ)

ஈசன்சிவனென்னல்கேட்டிலையோநூடியெனப்
பேசுமேநூலெல்லாம்பித்தாகேள் - ஈசன்
சிவஞானபோதயன்மால்சீவர்களாங்கண்டாய்
தவமில்லாய்சற்றேனுந்தான். (௩0)

(மங்களாசரணை.)

பாசத்திலொன்றும்பசுவாகுநின்மாலை
யீசனெனுதன்னேற்குமீசனுந் - தேசரனை
யுள்ளேநினைந்துருகியுத்தமமாஞ்சைவநூல்
கொள்ளாயுண்டாகுங்குணம். (௩க)

(வாழ்த்து.)

வாழிமாமறையாகமமாபதிக்
காழிமாதவஞானியர்கட்டுரை
வாழிமாதுமையாசுமுமாபதிக்
காழிமாதாப்பூஞ்சமுற்கானமே.

ஸ்ரீஸம்பந்தகுரு
சரணாரவிந்தார்ப்பணமஸ்து.
திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பபரப்பிரம்ஹணேநம:.

சித்தாந்தரத்நாகரம்.

பாரததாற்பரியசங்கிரகம்.

இஃது,

சதுராதிகசதபிரபந்தகர்த்தரும்,

பரமபாசுபதாக்ரகண்யருமாகிய

ஸ்ரீமத்

அப்பயதீக்ஷிதேந்திரரால்

இயற்றப்பட்ட

வியாக்கியானஸஹிதமானமூலத்தின்படி,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

சூளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டது.

MADRAS.

PRINTED AT THE MEMORIAL PRESS,

No. 39, THUMBOO CHETTY STREET,

30th May 1881.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமதப்பயதீக்ஷிதேந்திரகுருவர்யாயநம:.

ஸ்ரீமதப்பயதீக்ஷிதமூர்த்திகள் ஸ்ரீபரமேசுவரனது அஷ்டதநுவிலொன்றாயுள்ளவரென மேலோர் கூறுகின்றனர். இவர் சைவஸ்தாபனம் பண்ணும்பொருட்டே யுலகின்கண் ணவதரித்தவர். இவரைச்சதாதிகசதபிரபந்தகர்த்தரெனப் பண்டிதராயுள்ளபேர் கொண்டாடிவதால், அந்தப்பிரபந்தங்களிலொன்றாகவே யிந்தப்பாரததாற்பரியசங்கிரகமுங்கொள்ளத்தக்கது. இராமாயணத்தாலும், பாகவதத்தாலும்போந்த சிவபாரம்யங்களைத்திரட்டித் தனித்தனி யவ்வப்பெயர்களால் தாற்பரியசங்கிரகங்களுஞ் செய்திருக்கின்றனர். இன்னும், ஸ்ரீபாஷ்யவியாக்யானாதியுக்கிரந்தங்களுஞ்செய்து அவருபசரித்திருக்கும் பெருநலத்தைக் கொண்டாடிக் களிக்கவறியாத மாடுகளாகச் சைவமென்னும் பேர்மாத்திரம்வகித்த சோம்பர் பலர்திரிகின்றனர். இவரைப்பாஞ்சராத்திரிகள் ஏகாத்மாவாதியாகப்புலம்புவர். இதுவபத்தம். இவர்செய்துள்ள நூல்களை முற்றும்பார்த்தபின்னரன்றோ விவரையின்னாரெனல்வேண்டும்?

அந்நூல்களையதிகமாகக் கையாண்டுவரும் அவ்வமலமூர்த்தியினது ஸத்தியாரிப்போது முள்ளவர்கள் ஸ்ரீநீலகண்டபாஷ்யத்தை ஸவ்யாக்யானத்துடன் ஸாக்ஷிசெய்து வரும் மாபுரிமையையறியாதபேதைகளிடம் ஏது சொன்னாற்றானேனும். இன்னுந்தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஸ்மார்த்தர்பெரும்பாலார் சங்கரபாஷ்யத்தின் முகத்தில்விழிக்கவுமனமிசையாது ஷை ஸ்ரீ நீலகண்டபாஷ்யத்தையே யப்பியசித்துவருதல் விசாரித்துத்தெளிக. வையச்சேரி, நல்லச்சேரி, மான்குடி முதலிய கிராமாந்தரங்களிலும் பார்த்திடுக. இன்னுந் திருநெல்வேலி சீமையிலும் ஏராளமாயிவ்வுத்தம சைவபாஷ்யம் பிரஸித்தியாயிருத்தலறிந்திடுக. இந்தமூர்த்திகள் (குருஞானவாஸிஷ்டம்) என்னும் இதிகாசத்தில் பிரம்ஹஸூத்திர விருத்திக்கு ஒருவியாக்கியானஞ் செய்திருப்பதில் ஷை ஸூத்திரத்தை ஸாரீரகசூத்திரம் என்றுகூறிய சங்கராசாரியர் ஸித்தாந்தத்தை யபாரமாயெடுத்துக் கண்டித்திருத்தலுங் கண்டறிக. இவ்வுண்மையையறியாத சிலபோலிஸ்மார்த்தரும் பாஞ்சராத்திரிகளைப்போலவே புலம்புவதுண்டு. அவர்சொல்லை விவேகிகள் மதிக்கவிடம்பெறாது.

இவ்வமலதேசிகர் தாத்தாசாரியென்பவனோடுவாதித்துக் கடைசியாய்அவன்றலையிடிவிழுந்து இறந்துபோகும்படிச்செய்து சைவமங்கலந் தழைக்கச்செய்தவர். இவருடைய பிரபந்தங்களி லொவ்வொன்றாகவினி முறையேயச்சிட்டுவருவோம். இவரிடம் அநவையாற்புலம்புவது போலவே ஸ்ரீஹரதத்தாசாரியஸ்வாமிகள்விடயத்திலும் ஷை அவிவேகர்தாங்கள் கொஞ்சிப்பேசும். அதுவும் நிஷ்பலமெனவறிக.

திருச்சிற்றம்பலம்.

రుద్రం సమాశ్రితా దేవా రుద్రో బ్రహ్మాణమాశ్రితః
బ్రహ్మా మామాశ్రితో రాజన్ నాహం కంచిదుపాశ్రితః॥

இ-ள். தேவர்களுருத்திரனை யாச்சிரயிக்கின்றனர். உருத்திரன் பிரம்ஹாவை யாச்சிரயிக்கின்றனன். பிரம்ஹா என்னை யாச்சிரயிக்கின்றனன். நானொருவனையும் ஆச்சிரயிக்கிறதில்லை. எ-று.

இந்தவசனம் தருமநந்தனனைப்பார்த்துக் கிருஷ்ணர் சொன்னதாகப் பெறப்பட்டமையால் மேற்போந்த சிவபாரம்யபங்கமுண்டாகின்றது.

బ్రహ్మాణం నీలకంఠంచ యాశ్చాన్యా దేవతాస్స్మృతాః
ప్రతిబుద్ధా న సేవంతే యస్మాత్పరిమితం ఫలం॥

இ-ள். பிரம்ஹாவையும், நீலகண்டராகிய வுருத்திரமூர்த்தியையும், வனையதேவர்களையும் விவேகிகளா யுள்ளபேர் சேவிக்கிறதில்லை. யர்தொருகாரணத்தினு லவ்வாராதனம் பரிமிதபலத்தைக் கொடுக்கின்றமையால். எ-று.

என்னுமிவ்வாக்கியமும் விரோதம் பயந்தலா லிவற்றினுண்மையை விசாரிக்கில், வைஷ்ணவ தருமங்களைச் சங்கற்பித்துக் கேட்டபேர்க்கு அபிருசியுண்டாகும்படிச்சொன்னமையே யமையும். அறிஞராயுள்ளபேர்களால் சிவனைச் சேவிக்குந் தன்மையெப்படி நிவாரணத்தைப் பெறுமெனின், நானொருவனையு மாச்சிரயிக்கிற தில்லையென்றுரைத்த கிருஷ்ணன் பலமுறை சிவனை யாச்சிரயித்த பிரசங்கமோராளமா யாண்டுப்பெறப்பட்டிருத்தல் பிரஸித்தமேனும், வைஷ்ணவர்களாலே அநுஷ்டிக்கத் தருந்த வைஷ்ணவதருமங்களைச் சொல்லும்படிக் கேட்டுக்கொண்ட தருமராஜனைக் குறித்துப் பிரவர்த்தித்து வைஷ்ணவ சாஸ்திரரீதியாய்க் கூறவந்தமையாற் போதருமென்க. இந்தப்பிரசங்கம் வைஷ்ணவதர்மப் பிரகரணத்திலன்றி வேறோரிடத்திற் செய்யப்பட்டதின் முகையா லின்னவற்பவசனங்களைக்கொண்டே பாஹுள்யமாயுள்ள சைவபாத்வ வாசகங்களைத் தள்ளுவதற்கு அறிஞராயுள்ள பேர்க்கெங்ஙன மிடமுண்டாகும்?

மேல் (பிரம்ஹாணம் நீலகண்டஞ்சேத்) இத்யாதி வசனங்கள் அஹம்பிரம்ஹோபாஸனநிஷ்டவித்வத்விஷயம். (பிரதிமாஸ்வல்பபுத்தீனும்) என்றறற்றொடக்கத்து வசனார்த்த விவேகத்தால் சேஷத்வாநுஸந்தானத்தைக் கர்ப்பத்திலுடைய ஸேவைக்கு அநுஸந்தானம் வருகையா லனேகவசனப் பிரமாண்ய புத்தியே யங்கிகரிக்கத்தக்கது.

அல்பவசனம் அப்பிரமாணமும், அநேகவசனங்கள் பிரமாணமுமாகின்றமையாலும், அநுகீதை, கீதையித்யாதிகளில் (தமேவசாத்யம்) என்றறற்றொடக்கத்து வாக்கியத்தைச் சாதிக்கப்போதுமான வகந்தபிரமாணங்கள் போதருமாகையாலும், பாரதத்திலுண்டான பர்வங்களெல்லாவற்றினும், பாரதாந்தர்க்கதமாகிய ஹரிவம்சத்தினும் விஷ்ணுவுக்குச் சிவாராதனஸித்தி யேராளமாகக் கூறப்பட்டமையாலும் அறிஞருடைய பரியாலோசனையே பிரயோசனத்தை யடையுமென்க.

இன்னுஞ் சிலவசனங்களைப் பரியாலோசிப்பாம்.

విష్ణురాత్మా భగవతో భవస్యామితతేజసః
తస్మాద్ధనుర్జ్యాసంస్పర్శం సవిషేహే మహేశ్వరః॥

இ-ள். தேஜோமூர்த்தியாயுள்ள பகவானாகிய சிவனுக்கு விஷ்ணுவானவர் ஆத்மாவாக விருக்கிறார். ஆகையால், தனுஸ்வினது நாரியின் பரிசத்தை அந்தச் சிவன் சகித்தார். எ-று.

என்று கர்ணபர்வத்தில் திரிபுர விஜயோபாக்யானத்திற் சொல்லப்பட்டது.

యస్త్వాం ద్వేష్టి సమాం ద్వేష్టి యస్త్వామను సమామను
అనయోరంతరం నాస్తి శబ్దార్థైర్జగత్పతే

నామానితవగోవింద యానిలోకేమహాన్తిచ
తాన్యేవమమనామాని నాత్రకార్యావిచారణా॥

இ-ள். யாவனொருவ னுன்னைத் துவேஷிக்கிறானோ, அவன் என்னைத் துவேஷிக்கின்றவனாவான். யாவனொருவ னுன்னை யநுசரிக்கின்றானோ, அவன் என்னை யநுசரிக்கின்றவனாவான். சத்தத்தினாலும், அர்த்தத்தினாலு முனக்குமெனக்கும் பேதமேகிடை

யாது. லோகபதியாகிய ஹேகோவிந்தா! மகிமைபொருந்திய வுன்னுடையபெயர்கள்யாவோ, அவைகளே யெனதுபெயர்களாகும். இதில் விசாரிக்கவேண்டிய தொன்றுமில்லை, எ-று.

என்று ஹரிவம்சத்தில் கிருஷ்ணனைப்பார்த்துச் சிவனருளிச்செய்ததாக வெளிப்பட்டது.

இவ்விரண்டு வசனங்களாலும் விஷ்ணுவைக் காட்டிலும் அபகர்ஷமும், அவரோடு ஸாம்யமு முடையவராக முறையே சிவபெருமா னெண்ணப்படுகையா லிவற்றி னுண்மையை யீண்டு விளக்குதும். உமக்குப் பக்தனுயிருந்து, உம்மைப்பஜிக்கிற வடியேனை யாளக்கடவீரென்று (உமேவசாத்யம்) என்றதாதி வசனங்களைக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணர் பிரபத்தி பண்ணினுரென்பதை யறிகின்ருேம். இதரமாயுள்ளபேர்க்குப் பாக்கிய மோக்ஷங்களி னிமித்தம் பிரபத்தியானது தானுகியவிஷ்ணுவுக்குச்சொல்லியது மூலமூர்த்திரூபன் சிவன் என்று கருதியாம். அவரது மகிமாதிசயத்தைப் பிரஸித்திபண்ணுகிற நிமித்தமாக வுலகங்களை யநுசரிக்கின்றவராயும், சகல தருமப் பிரவர்த்தகராயுமிருக்கிற விஷ்ணுவுக்குச் சிவனுகப் பிரதிபாதிக்குஞ் சொல்லானது அங்கீகரிக்கவேண்டியதே! அந்தப்படியே மோக்ஷதர்மத்திலும், கூர்மபுராணத்திலும் போந்த கிருஷ்ணர் வசனம் வருமாறு.

మయాప్రమాణంహికృతం లోక స్తదనువర్తతే
నహిదేయోస్తికశ్చిన్మే వరంప్రాంచేవనంచన
ఇతిసంచింత్యమనసా పురాహంవిశ్వమీశ్వరం
పుత్రార్థమారాధితవానహమాత్మానమాత్మనా॥

இ-ள். என்னுலே யெது பிரமாணமாகக் கொண்டாடப்பட்டதோ, அதை யிந்த வுலகமானது அநுசரித்துக்கொண் டிருக்கின்றது. எனக்கு ஒருவரமாவது ஒருவருங் கொடுக்கவேண்டியதாயில்லை, எ-று.

என்று பெறப்பட்ட வபிப்பிராயத்தைக்கொண்டு (மோகிதாளானபோ) என் மனசினு லாலோசித்து முன்னர் நான் விசுவரூபமாயுள்ள சிவனைப்புத்திரார்த்தமாக வாராதித்தேன் என்பதை

யென்னாத்மாவினாலே யென்னாத்மாவையே நான் பூசித்தேன் என்று பொருள்விரிப்பனெனக் கிருஷ்ணர் கூறினர்.

నైవపశ్యంతితందేవం మోహితామమమాయయా
తతోహంస్వాత్మనోమూలం జ్ఞాపయన్ పూజయామితమ్॥

இ-ள். அப்படிப்பட்ட தெய்வத்தை யெனது மாயையினாலே மோகித்திருக்கிற பாஷண்டிகள் பார்க்கவறியார்கள். ஆகையால், என்னாத்மாவுக்கு மூலகாரணமென்று சகலருக்குந் தெரியப்படுத்துகிறவனாக அந்தச்சிவனை நான்பூசிக்கிறேன். எ-று.

என்று பெறப்பட்ட கிருஷ்ணர் வசனத்தால் நான் ஒருவரையும் ஆச்சிரயிக்கிறதில்லையென்ற சுலோகத்தினபிப்பிராயம் வெளிப்பட்டது. அப்படியே, அசுவமேதபர்வத்தில், வைஷ்ணவ தருமங்களையே கேட்டுக்கொண்டிருக்குந் தருமநந்தனரைக்குறித்து அந்த வைஷ்ணவ தருமங்களையே யுபதேசம் பண்ணுகைக்குக் கிருஷ்ணராலே பிரவர்த்திக்கப்பட்ட ஸமயத்தில் வைஷ்ணவ தர்மசாஸ்திரத்தில், வைகானசாளெப்படிச் சொல்லுகிறார்களோ, பாஞ்சராத்திரிகளெப்படிச்சொல்லுகிறார்களோ, அவைகளைச்சொல்லியருளுமென்றதுமுதலிய பிரசினைகளால், கேவலம் வைஷ்ணவ தருமங்களையே யடிக்கடிக் கேட்கத்தொடங்கிய தருமநந்தனருக்கு அவைகளைச்சொல்லுமிடத்திலும், ஸ்ரீ சிவபெருமானது பூசையானது இவ்வைஷ்ணவபூசையோடு துல்ய விகல்பமென்றே பாவனாருபத்தால் ஸமானமான பலத்தைக்கொடுக்குமாற்றலுடையதாகக் காண்பிக்கப்பட்டது.

నివేశయతిమన్మాత్రాణ్య ఆత్మానంమాంనరశ్శుచిః
రుద్రంచతేనమహాత్మానా చతురాత్మ్యంతిదేవతాః
సిద్ధబ్రహ్మర్షిభిశ్చైవ దేవలోకైశ్చపూజితః
గంధర్వైరప్సరసంఘైశ్చ గీయమానోమహాతపాః
ప్రతిష్ఠేత్సమహాతేజా మాంవాశంకరమేవవా
సప్రాప్నోతిపరస్యహోరాజన్ నాత్రకార్యావిచారణా
యమువేనాసంయుక్తు మమకురార్చకస్యవా
అప్సనగవయధారణ్యం తస్యపుణ్యఫలంశృణు

దశజన్మకృతంపాపంతస్యసద్యోవినశ్యతి
దశానామశ్వమేధానా మిష్టానాం ఫలేఫలం
విమానందివ్యమారూఢః కామరూపీయథాసుఖం
దివ్యవర్షసహస్రాణాం కోటిమేకాంప్రమోదతే
తతశ్చాపిచ్యుతఃకాలా దిహలోకేద్విజోత్తమః
చతుర్ణామపివేదానాం పారగోబ్రహ్మవిద్భవేత్
చంద్రసూర్యగ్రహేధామ్ని మమవాశంకరస్యవా
గాయత్రీంమామికాంవాపి జపేద్యశ్శంకరస్యవా
శంఖతూర్యనినాదైశ్చ కాంస్యఘంటాస్వనైరపి
కారయేత్తుస్యసంభక్త్యా తస్యపుణ్యఫలంశృణు
సగచ్ఛేదక్షిణామూర్తిం సామంవాన్నాప్రవిశారదా॥

இ-ள். எவன் ஆத்மாவாகியவென்னை யென் மூர்த்தியோடே யெழுந்தருளப்பண்ணுகிறானோ, அல்லது ஸ்ரீருத்ரமூர்த்தியைச் சதுர்த்தசி புண்யகாலத்தில் தக்ஷிணாமூர்த்தியோடுசேர்த்து விசேடமாகப்பூசிக்கிறானோ, அவன்ஸித்தர்களாலும், தேவலோகவாசிகளான விருடிகளாலும், கந்தருவராலும், பூதகூட்டங்களாலும் புகழப்பட்ட மகாதபசியாயும், மகாதேஜசுள்ளவனாயும் விளங்கி யென்னிடத்திலைக்கியமாவான். அல்லது, சங்கரனிடத்திலொடுங்குவான். அவனுக்கு மறுபடியும் பிறப்பானது இல்லை. இவ்வுண்மையில் விசாரம் வேண்டியதேயில்லை. எவனானால் விஷு புண்யகாலத்தில் எனக்காவது, சிவனுக்காவது அபிஷேகத்தைச்செய்கிறானோ, விதிப்படி அர்ச்சனையைச் செய்கிறானோ, அவனுடைய புண்யபலத்தைக்கேளும். தசஜந்மங்களில் செய்த பாவங்களினின்றும் அவனப்போதேவிடுபடுகிறான். சாஸ்திரப்படியே செய்யப்பட்ட பத்து அசுவமேதயாகங்களின் பலத்தைபடைகிறான். நினைத்தவிடத்தில் சஞ்சரிக்கும்படியான திவ்யவிமானத்திலேறித் திரிந்து ஒருகுறைவுமில்லாமல் ஆயிரந்தேவவருஷஸங்கியையுடைய கோடிவருஷம் ஆநந்தப்பட்டுக்கொண்டிருப்பன். அதன் பின்னர், அந்தலோகங்களினின்றுந் திரும்பி யிந்தலோகத்தில் பிராம்ஹணகுலத்திற் பிறந்து நாலுவேதங்களையுங் கரைகண்டு கிருதார்த்தனாவன். சந்திரகிரகண சூரியகிரகண புண்ணியகாலத்தில் என்னுடைய ஆலயத்தி

லாவது, சிவனுடைய வாலயத்திலாவது காயத்திரி ஜபம்பண்ணுகிறவனும் முற்படியே பெறுவன். எ-று.

தனது பஜனத்தாலும், சிவனது பஜனத்தாலும் ஸமபலனுண்டாவதாகக் கூறிய கிருஷ்ண ரபிப்பிராயத்தை யூகித்திடின், அவர் * வாஸ்தவாபிப்பிராயமிதுவென்பது விளங்கும். இவ்வுண்மையைப் பின்வாக்கியங்களால் விசாரிப்பாம்.

విశేషతీర్థాన్సర్వేషా మశక్తానామనుగ్రహాత్
భక్తానాంతారకాధ్యాంవై వక్తుమర్హసిధర్మతః॥

இ-ள். அசக்தாளாயிருக்கின்ற சகலமான பக்தர்களுமுய்யும் பொருட்டு விசேட தீர்த்தத்தை யநுக்கிரகத்தினாலே தாமமாகச் சொல்லுகிறதற்குத் தேவரீர் யோக்கியராயிருக்கின்றீர். எ-று.

இது, பகவானிடத்திலே ஸேவைவையைச்செய்கிறதற்குச்சக்தியில்லாமலிருக்கிற பக்தர்களுக்கு அதற்கு ஸமானமாகச் சேவிக்கத்தகுந்த தீர்த்தம் யாதென்று பிரசினித்ததாயிற்று.

மேல் கிருஷ்ணர் சொல்லுகின்றார்.

సత్యస్యవచనంతీర్థ మహింసాతీర్థముచ్యతే
తపస్తీర్థందయాతీర్థంభక్తంతీర్థంయుధిష్టిర
మద్భక్తస్సతతంతీర్థంశంకరస్యవిశేషతః॥

இ-ள். சத்தியமானவசனம் உயர்ந்ததீர்த்தம். ஹிம்ஸை செய்யாதிருப்பது அஹிம்ஸாதீர்த்தமென்று சொல்லப்படுவது. தவமானது தீர்த்தம். தயையானது தீர்த்தம். என் பக்தனானவன் தீர்த்தம். இவற்றைக்காட்டிலும் விசேடமாகச் சிவபக்தன் எப்போதுந் தீர்த்த ரூபியாயிருப்பன். எ-று.

இந்த வுத்தரத்தால் தன்னுடைய பக்தனையபேட்சித்துச் சிவபக்தனுக்கு அதிக தீர்த்தத் தன்மை வெளிப்பட்டதன்றியும்,

* (தருமகர்த்தனர்கேட்டது வைஷ்ணவதருமம். அதைச்சொல்லப் புகுந்தவர் ததநிரிக்தங்களைக் களையவேண்டியது. அப்படிக்கின்றி யவ்வைஷ்ணவ தருமத்தோடு சைவதருமத்தை ஸமங்கூறினர். வைஷ்ணவத்தை யுணரவேண்டியவர்பொருட்டு ஸாம்யங்கூறினதேயன்றிக் கிருஷ்ணருடைய ஸொந்தவபிப்பிராயம் அதற்கு மேலிட்டதென்பதேயாம்.)

ஆரணியபர்வம், தீர்த்தயாத்திராவிதியில் சில சிவக்ஷேத்திரங்களிலே செய்யப்பட்ட சிவார்ச்சனைகளுக்குக் காணுபத்ய பலமும், சில க்ஷேத்திரங்களி னடக்குஞ் சிவார்ச்சனைகளுக்குப் பரமாங்கதி பலமுங்கூறிப் பரமமங்களகாரணத்தை விதந்திருப்பதே போதும். இவை மோக்ஷஹேதுவென்றுஞ் சொல்லப்பட்டபடியாயின்ன வநந்தவசன பாஹுள்யங்களின்றீர்ப்பால் (ப்ரம்ஹாணம் நீலகண்டஞ்ச) என்ற வசனுபிப்பிராயம் வெளிப்படையாயிற்று.

இவ்வுண்மையை யறியாமல் நாராயணனைக்காட்டிலும் வேருயுள்ளதேவர்க்களுடைய பஜனமானது அளவிடப்பட்டபலமுள்ளது என்று தெரிந்துகொண்டவனைப் பைத்தியக்காரனுகக்கொள்ளவேண்டியிருக்கின்றது. அப்படித்தெரிந்துகொண்டவர்கள் குரங்குகளும், நாய்களுமாக வெண்ணப்படுவர். நாராயணருடைய ஸேவையிலாசை யுண்டாகும்பொருட்டுக் கௌரவகல்பனமாத்திரத்தனவாகவே மேல்வசனங்களை மேலோர் கிரகித்திடுவ ரறிக.

வெகுவசனங்களுடைய பிரமாணங்களைவிட்டு ஏகதேச வசனத்தையே கைக்கொண்டபடி வாக்கியங்களினது ஸத்தியார்த்தத்தையு மறியாமற்போகு மொருவனைப் பசுவை வஞ்சனை செய்த பாவத்தையடைவன் என்பது சாஸ்திரநிச்சயம். இனி, இராமாயணத்தில், (கோப்ரதாரந்தராகச்சேத்) என்ற விடத்தில் கோபிரதார தீர்த்தத்தினுடைய மகிமையினல் ஸ்ரீராமசந்திருக்குச் சொர்க்க பிராப்திசொல்லியவசனத்திற் பெறப்பட்டதற்கேற்பப் பாரதம் சபாபர்வ வசன மொன்றை யீண்டுவிசாரிப்பாம்.

తస్యాం రాజర్షయః పుణ్యాస్తథా దేవర్షయో౽మలాః
యమం వైవస్వతం తాత ప్రహృష్టాః పర్యుపాసతే
యయాతిర్నహుషః పూరుర్మాంధాతా సోమకో నృగః
రామో దాశరథిశ్చైవ లక్ష్మణశ్చ ప్రతర్దనః ॥

இ-ள். அந்த எமதருமராஜன் சபையில் சுத்தராயும், புண்ணியசொருபராயு மிருக்கிற தேவரிஷிகள், ராஜரிஷிகள் முதலினோர் வைவஸ்வதனென்னும் எமதர்மராஜனைச் சந்தோஷமுடையவராயுபாசித்துக்கொண்டிருக்கின்றூர்கள். யயாதி, நகுஷன், புரூரவன், மாந்தாதா, சோமன் என்றூரம்பித்து அன்னோர் சொர்க்க

மடைந்தபின்னர் எமனுடைய சபையிலிருந்துகொண்டு அவ்விய மனையுபாசித்துக் கொண்டிருக்கிற ராஜரிஷிகளி லொருவனாகவே தசரதகுமாரனாகிய ஸ்ரீராமனு மெண்ணப்பட்டனன்.

அப்படியே யவனது தம்பியாகிய லட்சுமணனும், பிரதர்த்தன னென்பவனுமெண்ணப்பட்டனர். இதனால், அந்த ராமன் கர்மதுக்கதினமான லோகபிராப்தியை யடையப்பெற்ற வோர் சீவனென்பதே யேற்பாடாயிற்று. இப்படியே கிருஷ்ணனிடத்திலுங் கண்டுகொள்க.

తతశ్చాపగ్రాంధసఃశ్చైత్రిష్ఠంశరాగ్రాత్చాఃతంమమ
మోహాత్సన్నస్తుకౌంతేయరథోపస్థముపావిశం॥

(இ-ள்.) வாராய் அர்ஜுனா! அதற்குப்பின்னர் எனதுகையினின்றும் ஸாரங்கமென்னும் வில்லானது நழுவிவிழுந்துவிட்டது. அப்போது மூர்ச்சையடைந்தவனாகி நான் தேரினது அடித்தட்டிலேபோய் விழுந்தேன். எ -- று.

என்று கிருஷ்ணன் அர்ஜுனனிடம் சொன்னானென்று ஆரணியபர்வத்தில் சாலுவயுத்தத்தில் பெறப்பட்டதனால், இராமனைப் போலவே கிருஷ்ணனும் மோகமான வஞ்ஞானச்சேற்றிலழுந்திய ஜீவவிசேடத்தை யுடையானென்பதுசொல்லாமேயமையும். இப்படிப்பட்ட வுண்மைகளால் இந்தப்பாரதமுழுதும் கீதை, அநுகீதை, மோக்ஷதர்மம், வைஷ்ணவதர்மமுட்படத் தொனிவிர்த்தியினாலே சிவபாரம்யத்தையே சொல்லி யினைப்பாற்றிக் கொண்டதாயும், சிவனையேபிரதானமானதெய்வமாகப்படைத்ததாயும், பகவானாயிருக்கிற வியாசரால் செய்யப்பட்டதென்று இந்நூலால் நன்றாக ஸ்தாபிக்கப்பட்டிருகின்றது. இதனால், யாவும் யோக்யமாக விளங்கினமையறிக.

அவதாரிகை.

ஈண்டுச்செய்துமுடித்த ஸ்தோத்திரத்துக்குப் பிரபாவமுண்டாகும்பொருட்டு மங்களாதிகள் செய்தலவசியமென்று கூறுமாப்தர் வசனப்பிரமாணத்தால், இந்த ஸ்தோத்திர ஸமாப்தியில்

சிவபாரம்யத்தை யுபதேசம் பண்ணுகிற குருநமஸ்காரமான மங்களத்தை யாசரிக்கின்றார்.

சுலோகம்.

ఉత్కర్షం చన్ద్రేశితుర్యః ప్రబంధం వ్యఙ్గ్యార్థవ్యాసనాంభారతాఖ్యం వ్యధత్త
ధ్వన్యధ్వన్యధ్వసన్యమార్గస్య ధన్యస్తం శ్రీవిష్ణుం తత్సాక్షిణం చానతోస్మి ॥

மொழிபெயர்ப்பு.

பரசிவன்றனுயர்வைவ்ருடித்திடும்யாதொருவியாதர்பாரதத்தைச்
சிரமுறவேவியங்கியத்தாலியற்றினரோவன்னவொளிர்திருமாலுருந்
தாமுநசாட்சியுமாவார்தம்மையுயர்தொனிமார்க்கஞ்சரிப்போர்தம்மிற்
பெரியர்மதித்திடுமடியேன்றன்னியனுயெக்காளும்பேணுவேனே. (௧௧)

இ-ள். பரமசிவனுடைய வுத்கர்ஷத்தை வர்ஷித்துக்கொண்டிருக்கிற யாதொரு வியாசரானவர் வியங்கியார்த்தத்தால் பாரதமென்னும் பிரபந்தத்தைச் செய்தாரோ, அப்படிப்பட்ட விஷ்ணுவடிவமுடையவரும், அந்தப்பாரதத்துக்கு ஸாக்ஷியா யுள்ளவருமாகிய வியாசரைத் துவனிமார்க்கத்தில் ஸஞ்சரிப்பவர்களுக்குச் சிரேஷ்டராயுள்ளவர்களில் தன்யனாகிய யான் வணங்குகின்றேன். எ-று.

தீக்ஷிதஸ்வாமிகள் துதி.

தனியன்.

வேதமுபநிடமிருதிவிளம்புபாரத்துவப்பொருளை
யோதசிவாகமத்தெளியவடித்துத்தவுமொண்பொருளை
யேதமில்சீர்ப்பாரதத்தினியங்குசிவப்பழம்பொருளைத்
தீதறவெற்சருளப்பதிக்கதர்தாடினைத்தொழுவாம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமதப்பயதீக்ஷிதேந்திரர்

திருவடிவாழ்க.

முற்றிற்று.

சிவமயம்.

ஸ்ரீஹரதத்தாசாரியசுவாமிகள்

அருளிச்செய்த

ஸ்ரீசிவபஞ்சாக்ஷரீஸ்தோத்திரம்.

:o:

నాదాంతరాయనరనారదవందితాయ
నాదప్రియాయనయనత్రయసంయుతాయ
నాగేశ్వరాయనగజాత్మజసేవితాయ
తస్మైనకారాయనమశ్శివాయ. ॥౧॥

మాహేశ్వరాయమధురప్రియవాచకాయ
మారాంతకాయమమసర్వసుఖప్రదాయ
మాయామయాయమణికుండలభూషితాయ
తస్మైమకారాయనమశ్శివాయ. ॥౨॥

శివప్రదాయశిఖివాహనపూజితాయ
శ్రీనాథవందితపదాయశివాప్రియాయ
శ్రీశైలమధ్యనిలయశ్రుతిసంస్తుతాయ
తస్మైశికారాయనమశ్శివాయ. ॥౩॥

వాగీశవిష్ణుసురవందితవిగ్రహాయ
వారాణసీనగరమధ్యసుసంస్థితాయ
శ్రీశైలమధ్యనిలయశ్రుతిసంస్తుతాయ
తస్మైవకారాయనమశ్శివాయ. ॥౪॥

యోగీశ్వరాయయజయాజనవిగ్రహాయ
యోగీశ్వరాయయతిహృత్కమలాశ్రితాయ
శ్రీశైలమధ్యనిలయశ్రుతిసంస్తుతాయ
తస్మైయకారాయనమశ్శివాయ. ॥౫॥

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநமஃ.

சித்தாந்தரத்நாகரம்.

தணிகாசலஸ்தவம்.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

கூளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS.

PRINTED AT THE MEMORIAL PRESS,

No. 39, THUMBOO CHETTY STREET,

30th May 1881.

(காயத்திரிப்பொருள் கண்ணுதலென்றது.)

மறைதவழ்காயத்திரிமதுநீடு
மரண்பொருளெந்தைசங்கரனு
மறிமினென்றன்றேன்றுணைவிழியம்மை
யருள்விளையாட்டின்மூடுகையி
னிறைதருமிருள்சித்தொளிசெயக்காட்டு
நெற்றியிற்காட்டுமம்பகமே
முறையிதுவாகுமென்றனன்றணிகை
முருகவேள்கவுணியர்முதலே. (கூஅ)

(இதுவுமது.)

மாயனைக்கூறும்வஞ்சகர்பேடி
வாசகங்கேட்டலையன்மின்
பேயர்பல்லாறுபிழைபடப்பேசிப்
பிதற்றுவாரெந்தையேகாடுந்
தூயசிர்ப்பர்க்கநற்பதத்தொளியாந்
தொன்மைகண்டுணர்தியென்றிசைத்தான்
மேயநற்றணிகைமேவிவாழ்கந்த
வேண்மயிலூர்திவித்தகனே. (கூகூ)

(தெய்வஞ்சிவனெனத் தெளியவுரைத்தது.)

தெய்வமொன்றதுவேசிவமெனமறைகள்
செப்பவுமுடன்றுபற்பலவாந்
தெய்வமாயத்தாற்சமயசங்கேதஞ்
செய்துழல்பதிதர்தாமென்னே
யுய்வரோமுனிவரிட்டசாபத்தா
லுழல்பவர்காண்டியென்றுரைத்தான்
செய்வளமிகுசீர்த்தணிகையம்பதியிற்
சிவமணியெனவளர்தேவே. (சுo)

(இமையவர்செருக்கை யீசன்மாய்த்தது.)

எந்தையோரியக்கனாகியிந்திரன்மா
லெரிமுதலோர்வலிதபவன்
றுந்தியோர்துரும்பையசைத்திடக்கேட்ட
துணர்திகொன்மறையிடத்தென்முன்

வந்தவணிவனென்பதியெனக்கூறு
மாதுமைதருமுலைப்பாலுண்
டந்தாமுனிவர்போற்றுநற்றணிகை
யமர்ந்தருள்பரமசற்குருவே. (சக)

(பரனிமையோரைப் பங்கஞ்செய்தது.)

பிரமனைச்சிரங்கொய்தவற்கிளையோனைப்
பேருடன்மாய்த்தெரிகரத்தை
யுரமிறத்தறித்துமாயனைச்சூலத்
துச்சிகோர்த்தந்தகன்வீழத்
தாமுறவுதைத்துத்தண்ணருள்கொழிக்குந்
தலைவனென்றுதையென்றிசைத்தான்
வரமுறுந்தணிகைவள்ளறெய்வானை
வள்ளிநாயகிமகிழ்வோனே. (சஉ)

(அரியொப்பாவதெப் படியரற்கென்றது.)

மாயனென்றொருவன்கருநிறம்பெற்று
மன்னியேபிறவிகள்பலவிங்
காயபேருண்டிநித்திரைவிழைவுற்
றப்பிறவிகண்மலதேக
மேயசூகரமீன்கமடமாயோனி
விரும்புமேலவன்பிறப்பில்லாத்
தூயசங்கரனுக்கொப்பெவனென்றான்
றொன்மைசேர்தணிகைநாயகனே. (சங)

(தேவர்பசுக்கள் சிவன்பதியென்றது.)

பிரமனார்தலையுங்காமனருடலும்
பிஞ்ஞகனெந்தையாலழியுந்
தருமமேகண்டாய்பசுக்களென்றவரைச்
சாற்றிடுமறையெனநவின்றான்
சுரர்முனிவோராம்பசுக்களைப்பாசத்
தொடக்கினிலாட்டுவித்தருளும்
பரசிவனெங்கள்பசுபதிமகனெம்
பண்ணவன்றணிகைவிண்ணவனே. (சச)

(சங்கரன்மால்சுதர் தன்மையுரைத்தது.)

எந்தைசங்கரனுக்கிருவர்யாம்புதல்வ
ரெந்தைபோலமலமெய்துதலால்
விந்தையாயேனும்பிறந்திலம்யோனி
மேவிமாலவன்சுதரிருவர்
நொந்துபல்யோனிதொறுதுழைந்திழிவர்
நான்முகத்துணர்தியென்றிசைத்தான்
கந்தவேண்ஞானபக்தனெந்தணிகைக்
கடவுளென்கண்ணினுண்மணியே. (சரு)

(மால்சுதர்பூசை வகித்திலதென்றது.)

எந்தைபோற்புதல்வரிருவர்யாம்பூசை
யெவ்வுலகத்துமேற்றிடுதல்
தந்திடுங்காட்சிநூல்களுமுரைக்குஞ்
சம்புவைநோற்றுமால்பெற்றான்
அந்தமான்மக்கள்கதியெனிலில்லை
யாலயம்பூசையென்றுரைத்தான்
சந்தமார்தணிகைத்திருமலைமேவுஞ்
சாமியாங்குமாரசற்குருவே. (சசு)

(காரணன்சிவனெனக் காட்டப் போந்தது.)

தேவனும் பகவநாமனுமன்றித்
தேயனுமீசனுவானும்
மூவரைக்கடந்தமூர்த்தியுமுக்கண்
மூர்த்தியும்புருடனுவானும்
யாவுமாமட்டமூர்த்தியுமன்பர்
யாதனைதபுமுருத்திரனும்
சேவுகந்தேறுமெந்தையென்றுரைத்தான்
றிருத்தணிகாசலபதியே. (சஎ)

(இதுவுமது.)

பர்க்கனும்வேதகமகமேற்றூனும்
பசுபதிப்பெயருடையானும்
நக்கனும்விச்சுவாதிகக்கோனு
நகுதலைமாலைவேய்ந்தானும்

கைக்கனலானுங்கறைமிடற்றானுங்
கங்கைதாங்கியசடையானும்
முக்கணெந்தாதையென்றுரைசெய்தான்
முன்னவன்றணிகைவாழ்முதலே. (சஅ)

(இதுவுமது.)

ஓமெனும்பதத்தினுள்ளொளியானு
மொருபிறப்பேனுமெய்தானும்
சாமவேதனுமெச்சன்றலையோடு
தக்கனைத்தலையரிந்தோனும்
பூமகன்காமன்கூற்றுவன்மாலோன்
புரிதொழிற்கின்னல்செய்தானு
மீமகின்றுடுமெந்தையென்றுரைத்தா
னெம்பிரான்றணிகையெங்கோவே. (சகூ)

(இதுவுமது.)

பிரமும்பிரமக்கிழத்தியுமென்னப்
பேசிடுமறைசிவனுமையைத்
தருமியுந்தருமமென்னவுஞ்சாற்றுந்
தக்கநான்மறை யவர்தம்மைப்
பாமுறுஞ்சத்தன்சத்தியுமாகப்
பரவுசீருபநிடம்போற்றுந்
தரமுடையவவொந்தந்தைதாயென்றான்
சண்முகன்றணிகையெந்தவமே. (ருo)

(வேங்கடமலையின் விளக்கமீதென்றது.)

மலையுருவேண்டிப்பெற்றமாயவனே
மகிழ்ந்துவேங்கடமெனும்பெயர்தந்
தெலையில்பேரின்பவீடுயிர்க்கருள
வெழுந்தருள்கின்றனமதன்மேல்
இலைநிகர்மலமற்றதற்கெமக்கென்று
மேற்றசால்புடைத்தெனப்பகர்ந்தான்
கலையுரிபோர்த்தகண்ணுதன்மகனெங்
காவலன்றணிகைகாவலனே. (ருக)

(இதுவுமது.)

திருமலையாகியெந்தையைநந்தி
தினஞ்சுமந்திடுவன்மற்றதுபோல்
திருமலையாகிமாலெமைச்சுமக்குஞ்
செல்வமெய்தியுஞ்சிவன்வடிவைத்
திருமலைப்பாங்கோர்தடத்தொருசாருட்
டெளிவுறநிறுவினனென்றான்
திருமலையாகுந்தணிகைமால்வரையிற்
றிகழ்சிவஞானசுந்தரனே. (௫௨)

(தேவியுஞ்சுதருமிலான்சிவனென்றது.)

உயிர்வினைத்தொடர்பாலொன்றொடொன்றென்றி
யொளிர்தருமனைவிகாந்தனுமா
யயர்வில்சீர்மகவையின்றிடுமதுபோ
லாதியம்பகவனுமுமையுஞ்
செயிர்தவிர்யானுஞ்சேர்ந்தபேரன்றாந்
தெளியினோர்பொருளெனுமதனா
லுயர்தருமனைவிசுதரிலான்சிவனென்
றுரைத்தனன்றணிகையுத்தமனே. (௫௩)

(குருபரனருளைக் குலவிமகிழ்ந்தது.)

காழிமாதவனுய்க்கவுணியர்மகிழுங்
கண்மணியாயவதரித்தே
யாழிமாஞாலத்தருமறைநெறிதந்
தருளியமுருகவேளெம்மான்
வாழியென்றென்னைவருகவென்றழைத்தே
வண்மலர்ப்பாதங்கள்சூட்டிக்
கீழிடாதாண்டான்றணிகைமால்வரையிற்
கேடிலாப்பதம்பெறற்பொருட்டே. (௫௪)

(முருகவேணாமமுக்கியமுரைத்தது.)

சண்முகனறுமுகன்குமரேசன்
சாமிநாகாசலனமரர்
கண்மணிமுனிவர்கருத்தினுண்மணியெண்
கண்ணனைச்சிறைதவிர்த்தருள்வோன்

அண்ணலெங்கண்ணுக்கினியனென்றேத்து
மவர்க்கருள்செய்குதுமென்ருன்
விண்ணவர்வாழ்த்துந்தணிகையின்ஞான
விளக்கெனத்திகழும்வித்தகனே. (௫௫)

(மாயாவாத மாண்பொருளுரைத்தது.)

பாசமும்பசுவுமில்பொருளென்னப்
படிறுரைத்தெவ்வமில்பதியே
பாசமும்பசுவுமாகிநின்றழியும்
பச்சையாம்பொய்யுரைப்பதனல்
ஏசுவர்மாயாவாதரொன்றறிரு
ரோதமாரசத்தியம்பகரும்
பாசவிக்கத்தார்தங்களையென்ருன்
பனிமலைத்தணிகைவாழ்பரனே. (௫௬)

(தம்மைப்பரமெனல் சாலாதென்றது.)

பாமுயிர்சகமூன்றிவைகடந்தொளிரும்
பரமெனத்தம்மையேபேசிப்
பாரினைவென்றுமுயிர்நினைவென்றும்
படிற்றுரையாடுவார்ஞானந்
திரமெனமதியேல்சிற்றறிவாளர்
சேர்க்கையாற்றீமையேவருமென்
றுரமுறக்கூறியருளினன்றணிகை
யுயர்வரைமுளைத்தெழுஞ்சுடரோ. (௫௭)

(பிரமகூடத்தர் பேதமுரைத்தது.)

பிரமகூடத்தரிருவரைப்பேசிப்
பேதுருமறைதெளியாதார்
பிரமமொன்றென்பர்கூடத்தனந்தோ
பிறந்ததுண்டோவெனிற்பேசார்
பிரமகூடத்தர்நித்தியரொன்னும்
பெருமைகண்டுணர்திியென்றிசைத்தான்
பிரமமாந்தணிகைமலைவளர்ஞானம்
பிகைகரத்தேந்துமாமணியே. (௫௮)

(சித்தியர்பிரமகூடத்தரென்றது.)

சித்தொருநான்காய்ச்செப்புவரீசன்
சிவனென்றிவனையுஞ்சேர்த்தே
சித்திவைபிரமகூடத்தர்மாயை
செறிதருமவித்தைதோய்ந்திடலா
லித்திறம்பேசல்காரியங்கண்டாங்
கெப்படியானுமுன்னிரண்டு
நித்தியங்காண்டியென்றனன்றணிகை
நெடுவரைமேவுநின்மலனே. (௫௬)

(இழுக்குவமான மேலாதென்றது.)

சுத்திகாரஜிதமென்னவேயுலகைச்
சொல்லுவர்சுத்தியேபிரம
முத்தியாற்கூறவுளதுநிர்மூட
ருரைப்பதென்னேவுரைபிரம
சத்திதானழிந்துமாழ்குமேல்சுத்தி
தானன்றேமாழ்கும்வேறொருவன்
பித்துறல்காண்டியென்றனன்றணிகைப்
பெருமலைமேயபெம்மானே. (௬0)

(கனவைப்பொய்யெனல் சரிசென்றுளாத்தது.)

கனவிடைக்காணுமின்பதுன்பங்கள்
கழறுவர்பொய்யெனவறியார்
கனவொடுநனவின்பயனிருவினையின்
காட்சிசேர்தலினவைமெய்யா
மெனவுரைத்தனனெந்துரையருட்காழி
யேந்தலாய்வந்தவதரித்த
தனமெனுந்தணிகைப்பதிவளர்சுத்த
சாட்குணியப்பெருங்கடலே. (௬௧)

(இதுவுமது.)

கனவிலேகண்டதின்மையானனவிற்
கனவினைப்பொய்யெனிலந்தோ
கனவிலேகண்டதுண்டுகொல்கனவி
னவிற்றிடார்பொய்யெனவதனுல்

வினவுமோரிரண்டுமேல்வருமொன்று
　　மெய்யெனவிரித்துரைசெய்தான்
நினைவிகந்தொளிருந்தணிகைமால்வரையி
　　னிலைத்தருணிமலபூரணனே. (கூஉ)

(ஈசனேசீவ னென்றதையிடித்தது.)

பளிக்குமண்டபத்தினிழல்பலதோய்ந்து
　　பல்லுருக்காணுநாய்போலக்
களிக்குமப்பிரமமொன்றுபற்பலவாக்
　　காணுமாமாயையிலென்றே
சுளிக்கநேர்ந்துரைப்பர்மூடர்வேதாந்த
　　சூத்திரந்தெளிகிலாரொன்றுன்
அளிக்குலமென்னவன்பர்சூழ்தணிகை
　　யமர்ந்தபன்னிருகரத்தரசே. (கூ௩)

(இதுவுமது.)

நாயறியாமையாற்பல்வாக
　　நாடுறுநீழலைப்பளிங்கில்
நாயின்வேறுனபளிக்கையுங்கண்டா
　　னுடுமோபிரமநன்னிலையே
நாயதோபிரமநகுவர்காண்மேலோர்
　　ஞாயமன்றீதெனநவின்றுன்
தாயகமாகுந்தணிகைவாழ்ஞானத்
　　தலைவனுஞ்சத்திவேலோனே. (கூச)

(பொய்ப்போதத்தின் புன்மைதவிர்த்தது.)

அறிவெவனினைவிற்கூடுமந்நினைவே
　　தறிவெனும்பிரமமொன்றேயென்
றறியவேதங்களுரைக்குமேலந்தோ
　　வதுபாமுயிர்சகமாகி
நிறையுமாறுண்டோவந்நினைவதனை
　　நீங்குமாறெவனறிவென்றுன்
அறிவினுக்கறிவாய்த்தழைத்தொளிர்தணிகை
　　யங்கிரிவாழ்மற்புதனே. (கூ௫)

(சமயவாதிகள் சார்பிவையென்றது.)

தேகமேபிரமமென்பரிந்திரியந்
தெய்வமென்பார்பிராணுதி
யாகுமப்பிரமமென்பருட்கரண
மாகவுங்கூறுவார்சீவன்
சோகமில்கடவுளென்பர்மாயோனைச்
சொல்லுவர்பாசமும்பசுவு
மாகநீகாண்டியென்றனன்றணிகை
யம்பதிவாழுமெம்பதியே. (கூகூ)

(இதுவுமது.)

மந்தராய்மயங்கிப்பிராந்திஞானத்தான்
மடிந்திடுவார்சிலபேயர்
சிந்தைநொந்தயர்ந்துசேர்பரிணமஞ்
செப்புகின்றார்சிலபேயர்
பந்தமோக்கங்கள்பரமுயிருண்டோ
பார்க்கிலென்பார்சிலபேயர்
அந்தமிட்டேரப்பேய்களிற்சேரா
தருளினன்றணிகையாண்டவனே. (கூஎ)

(இதுவுமது.)

சீவனுக்குற்பத்திகண்முதலாகச்
செப்புவர்மாயையேபிரம
மாவதுங்கூறுவாரதுபொய்யா
வறைந்திடுவாரதற்கழிவு
மேவிடுமென்பராணவம்வேறாய்
விளம்பிடார் கன்மமேதென்பார்
சாவிபோஞ்சமயக்கத்திவையென்றான்
றணிகைவாழ்தமனியக்குன்றே. (கூஅ)

(சிவனிடமுலகஞ் செனித்தலீதென்றது.)

உலகமுமுயிருமுதித்தொடுங்கிடமற
றுமையொருகூறுடையானி
னிலவுமோர்கூறென்றருமறைதெரிக்கு
நிச்சயமீதெனப்பகர்ந்தான்

கலகமாமாயைக்கட்டறவென்னைக்
கலந்துபேரின்பவீடளிக்கு
மலைமகள்புதல்வன்றணிகைவாழ்முருகன்
வள்ளியைமணம்புணர்ந்தோனே. (௬௯)

(உயிர்கள்சிவனிட முதித்தலிதென்றது.)

பரனிடமுயிர்களனலிடைப்புலிங்கம்
பகிர்முகமாதல்போல்வருமென்
றுரமுறக்கூறும்வேதமென்பால்வந்
தொப்புறவிரித்துரைசெய்தான்
பரமுடனபரங்கடந்தமெய்ந்நிலையைப்
பரிவுடன்றந்தெனையாண்ட
வரன்றிருத்தணிகைவள்ளறெய்வானை
மகிழ்குமரேசமாநிதியே. (௭0)

(ஆன்மவிலக்கண மாயிஃதென்றது.)

சேர்ந்தன்வண்ணஞ்செறிதருமான்ம
சித்தைநோக்கிடினெமைச்சேருங்
கூர்ந்தசிருடைமையாலஃதெம்மிற்
கூறெனவுரைக்குமாகமங்கள்
தீர்ந்தவன்பாளரறிவர்காணிதனைத்
தேர்ந்திடார்கயவரொன்றிசைத்தான்
சார்ந்துமெய்யன்பர்போற்றுநற்றணிகைத்
தடவரைமேவுசண்முகனே. (௭௧)

(ஆன்மவிலக்கண மன்றிதென்றது.)

கேவலம்விபுவாய்க்கிளத்துவரணுவாய்க்
கிட்டியேயுரைப்பரோரிடத்தின்
மேவுமென்பார்கீழ்மேலுறச்சுழன்று
மேவிடுமென்பர்நீதின்றி
யாவதிதென்னவுயிரினையுடற்க
ணறைந்திடுவாரிரிந்தோடத்
தாவில்சிருண்மையெமக்கினிதிசைத்தான்
றணிகைவாழ்முருகனெங்குருவே. (௭௨)

(ஏகமென்பதன் பொருளிதுவென்றது.)

ஒன்றெனமறைகளுரைப்பதுபரம
னொருவனேயெனவும்வேறில்லை
யென்றதுபரன்வேறில்லையென்னவுநன்
கியம்பினன்பொருள்விரித்தடியேற்
கன்றருட்காழியமர்ந்துமெய்ஞ்ஞான
மயின்றவானவன்றலையாய
குன்றமாந்தணிகைக்கோயிலைவிரும்பிக்
குடிகொளும்பரசிவகுருவே. (௭௩)

(அத்துவிதத்தி னரும்பொருளுரைத்தது.)

அத்துவிதத்தினரும்பொருடேரி
னல்லவொன்றிரண்டவையன்றி
யொத்துளவிரண்டுமுணர்தியென்றிசைத்தா
ரென்றதன்பொருளெனமாழ்கிக்
கத்துறுவார்தமில்பொருடீதாக்
காட்டியாண்டருடிருத்தணிகை
யுத்தமன்வடிவேலொண்கரத்தேந்தி
யுயிர்த்துணையாகியுள்ளவனே. (௭௪)

(தத்துவமசியின் றத்துவமுரைத்தது.)

தத்துவமசிமாவாக்கியவுண்மை
தலைதடுமாறிநன்கறியா
துத்திகள்பேசியழிந்திடுமென்பா
லுள்ளவாறதனைவந்திசைத்தான்
சத்தியம்பழுத்துச்சகசநன்னிலையிற்
சரித்திடுமெதிவரர்வழுத்தித்
துத்தியஞ்செய்யுந்தணிகையின்மூலத்த
சோதியாங்கருணைவாரிதியே. (௭௫)

(வைதிகர்மாயா வாதரன்றென்பது.)

வைதிகமார்க்கம்பேணிவாழ்குனரில்
வைப்பிடையெவரொளிஞருங்
கைதவம்பேசியெம்மலாற்கடவுள்
பிறிதிலையெனுங்கயவரையே

கைதவின்மனத்தராயுரைத்திடுவர்
நான்மறைமிச்சையென்றெழுந்து
வைதிடும்பதகர்காண்டிநீயென்றான்
வளர்திருத்தணிகைவானவனே. (எசு)

(வைதிகர்சைவ மறையோரொன்றது.)

சைவவைதிகங்களுயிருடலென்றே
சாற்றலான்மறையுபநிடங்கள்
சைவமேவைதிகப்பெயர்தாங்குந்
தன்மையால்வைதிகராவார்
சைவராயெம்மைக்கண்டுளந்தணியுந்
தாபதர்காண்டிநீயென்றான்
சைவமாதவர்சூழ்தணிகையின்முளைத்துத்
தழைத்தொளிர்சாமியாங்குகனே. (எஎ)

(ஆகமஞான மதிகமென்றது.)

மறைவழிநிற்பார்ஞானமெஞ்ஞான்று
மாட்சிபெற்றிலதுயர்சைவ
நிறையொளிராகமத்தினல்வழியே
நேருமெய்ஞ்ஞானமென்பதனுக்
கிறைவனன்றெருநால்வரையுயக்கானு
மேற்றமேசான்றெனவுரைத்தான்
கறைதவழ்மதியந்தவழ்திருத்தணிகைக்
காரணன்ஞானபூரணனே. (எஅ)

(ஆகமங்கொண்டறிவாமறையென்றது.)

காமிகமுதலாச்சைவசித்தாந்தங்
கண்டபேர்க்கன்றிவேதாந்த
மாமதுசித்தியாகுமோமூல
ரன்றருள்செய்தமந்திரமாந்
தோமறுவழிநீகாண்டியென்றிசைத்தான்
சுருதியுமாகமத்தொகையு
நீமமாயுதவியெனக்கருடணிகை
நீடொளியாகுநிர்க்குணனே. (எகூ)

(எல்லாவித்தையுமீசனதென்றது.)

வேதமோடாகமாதியெக்கலையும்
 வித்தகனெந்தையேசொற்ற
வேதுவால்வித்தையாவுக்குமீச
 னெனமறைகூர்ந்திசைத்திடுமா
லீதறிநீயென்றெவ்வுயிர்த்திரளு
 மியங்கிடவியக்குமெந்திரம்போன்
ருதரம்பெருகுந்தணிகைமால்வரையா
 னறைந்தனனீததிசயமே. (அ0)

(வேதவாகியவாகமங்களைவிதந்தது.)

வேதவாகியமாவிளம்புமாகமங்கள்
 விண்டுவின்பாஞ்சராத்திரமும்
பேதமார்லகுளீபைரவஞ்சோமம்
 பேசுகாபாலமாதியுமாம்
வேதமெய்ப்பொருளைவிளக்குமாகமங்கள்
 விதிசிவாகமங்களென்றிசைத்தான்
வேதசிவாக மங்கணின்றேத்தும்
 வியன்றணிகாசலபதியே. (அக)

(உபயப்பிரட்ட ருண்மையுரைத்தது.)

பூசுவதொன்றுபிதற்றுவதொன்றாய்ப்
 பூரியர்சிலர்திருநீற்றைப்
பூசியேராமராமவென்றரற்றிப்
 புலம்புவாரவர்மருட்போத
மாசொழித்திடுமோமால்சிவனுமோ
 மறைத்துணிபோவிதுமாய
பாசமென்றுவகைகூர்ந்துரைத்தனனெம்
 பதிதணிகாசலபதியே. (அஉ)

(சமயவாதஞ் சாற்றுறுஞ்றென்றது.)

சமயவாதத்திற்சார்ந்துழன்மூடத்
 தம்மைநோக்கிடின்மிகுநகையா
மமையுமோஞானமடைவரோமுத்தி
 யாகமவேதசம்மதமோ

சமதமாதிகளாற்றாழ்ந்தெமைவழுத்துந்
        தன்மையோர்க்கேசிவமுண்டா
மமைதியென்றிரங்கியருளினன்றணிகை
        யாண்டவனெங்களாண்டவனே. (அ௩)

(சைவாசாரியர் நாமிவையென்றது.)

மாளிகைத்தேவராதியொன்பதின்மர்
        மன்னுபமன்னியமுனிவ
ராளுடையவரோர்நால்வர்பின்னல்வ
        ரறுபத்துமூவரோடேனைக்
கோளின்மெய்த்தொண்டர்சேக்கிழார்முதலாங்
        குருபரர்க்கன்புசெய்யென்றுன்
றுளிணைவருந்தித்தலைமிசைமேவத்
        தந்தருடணிகையெந்தனமே. (அ௪)

(சிவபாத்துவசா பகரிவரென்றது.)

போற்றுமிராமகண்டர்சீகண்டர்
        புகலுநாராயணகண்டர்
சாற்றுசீர்சுதரிசனர்சிவஞானந்
        தந்திடுமப்பதீக்கதர்நன்
கேத்துமெய்யன்பரொண்ணிலார்வேத
        மெடுத்துமாபதிக்குளவேற்றஞ்
சாற்றினனென்றுன்றணிகைவாழ்குமர
        சாமியாமுதிர்கிழவோனே. (அ௫)

(சிவபாத்தவநூ லாமிவையென்றது.)

நிகாறுசுருதிசூக்திவேதாந்த
        நின்னயஞ்சூத்திரவிருத்தி
பகருமாபாடியம்பல சைவ
        பத்ததிபலசிவோத்கர்ஷம்
புகரில்சீர்சிவதத்துவவிவேகம்பின்
        போந்ததர்க்கஸ்தவமிவைகள்
மகிமைசால்சைவநூலெனக்கூறி
        வழங்கினன்றணிகைவாழ்பரனே. (அ௬)

(சைவசித்தாந்த சாத்திரமுரைத்தது.)

போதமுஞ்சித்திசிவப்பிரகாசப்
புண்ணியநாலுமேதங்க
ளோதுமில்களிறுமுந்தியுமுதலா
வியம்புசித்தாந்தசாத்திரங்க
ளோதுவர்பதினன்கென்னவெற்கியம்பி
யுகந்தளித்தான்மயிலேறி
மாதுமைகாணவருந்திருத்தணிகை
மைந்தனுங்கந்தனென்றுணையே. (அஎ)

(அடியவர்பூசை யாற்றுகவென்றது.)

அடியவர்க்கேவலாற்றுவான்றேடி
யடைந்தனன்கிரனார்மேனிப்
பொடிகொள்சிரருணகிரியெனவருமெம்
புண்ணியர்மூகைதீர்ந்தேத்திப்
படிவருங்குமாகுருபரதேவர்
பாதபங்கயங்களேகதியென்
றடியனென்றணிகையங்கணனருள்கூர்ந்
தாதரித்தாண்டனனன்றே. (அஅ)

(அருணூலிவையென வாதரவுரைத்தது.)

கந்தரந்தாதிவகுப்பநுபூதி
காட்சிசேர்ந்திடுமலங்காரம்
சந்தமாருண்மைத்திருப்புகழ்மேலோர்
சாற்றுமாற்றுப்படைமுதலா
விந்தநூலன்றியேற்றிலம்வேறென்
றென்றுமேத்திடுதியென்றான்
கந்தனெமந்தைதணிகைமால்வரையிற்
கண்டவெங்கவுணியக்கன்றே. (அகூ)

(கண்டருட்கோலக் காட்சியுரைத்தது.)

குன்றுதோராடலுவந்தமாமணியைக்
குஞ்சரமுகத்தவனுடி
மென்றனுருயிராமிளவலைக்குறத்திக்
கேற்றகாந்தனையிபமூர்ந்து

நின்றசீரானை மஞ்ஞையூர்ந்தானை
நீண்டவேற்படை சுமந்தானை
வென்றிசேர்தணிகைமால்வரைமீது
மேவிடக்கண்டனன்யானே. (கூ0)

(உளனுண்டார்கதி தான்கண்டுரைத்தது.)

உயிர்க்கொலையிரங்காதுண்ணுவாரொன்ற
னுயிர்செகுத்தெங்ஙனேயெம்மோ
டயர்ப்பிலாதொன்றுபட்டழியாமெய்
யாகந்தமெய்துவரந்தோ
பயிர்ப்பிலாக்கொடியபாவிகளன்னோர்
பக்கல்யாமிரங்கிலமென்றான்
செயிர்த்துநீள்வினையைப்போக்குமெந்தணிகைச்
செம்மலெங்கடவுண்மாமணியே. (கூக)

(பாதகமைந்தின் பான்மையுரைத்தது.)

கொலைமுதலாகப்பாதகம்புரியுங்
கொடியரைத்திண்டிடிற்காணிற்
றலைமுழுகுவர்காண்மேலவரன்னோர்
சார்புநீத்திடுதியென்றிசைத்தான்
அலைகடற்பள்ளியானுளத்தமரு
மப்பனுமொப்பில்சங்கரனுக்
கெலையில்சீர்பிரணவப்பொருளுரைத்தங்
கெழுந்தருடணிகையெங்கோவே. (கூஉ)

(பொய்வேடத்தின் புதுமையுரைத்தது.)

வேடமும்பூசைமிகுதியுங்கொண்டு
வேடரிற்கொடியகாதகராய்
மூடர்பல்லோரிப்புவனியிற்றிரிவர்
முன்னவனடியருக்கொன்று
நாடியீங்கிலரஞ்ஞானபூரணர்கா
ணாடிடேலவரைநீயென்றான்
வேடமுந்தவமுந்தந்தெனையாள
விரும்புமெந்தணிகைவேதியனே. (கூங)

(ஈனஞானிகளிவரென விசைத்தது.)

ஞானிகள்பூதிகண்டியிலிச்சை
நாடிலார்பூசையும்புரியார்
நானிலம்புகழுமவரையென்றுன்னி
நாடொறும்போனகந்தேடி
யீனமாந்தொழில்கள்யாவுமேபுரிவா
ரென்கொலாச்சரியமீதென்றான்
ஞானசம்பந்தனருமெந்தணிகை
நாயகன்ஞானநாயகனே. (௯௪)

(இதுவுமது.)

மழித்தலுநீட்டலு்றனும்வேண்டாமெய்ம்
மார்க்கருக்கெனத்தமிழ்மறைநூல்
வழுத்தவுஞ்சடையைவளர்த்துமேசிகையை
வாங்கியுமேயொழுக்கிலா
யெழுத்துவாசனையுமெய்திலார்ஞான
மெய்தினரென்னவூரெங்கும்
பழுத்தவராகித்திரிவதென்னென்றான்
பழமலைத்தணிகைவாழ்பரனே. (௯௫)

(ஞானிகண்முதலாநால்வரையுரைத்தது.)

ஞானமேமுதனற்பணியொருநான்கில்
ஞானியாவுக்குமேயுரிய
னீனமில்யோகிமூன்றினுக்குரிய
னிரண்டுடையான்கிரியாவான்
மானமார்சரியையொன்றுமேசரியா
வானுடையானிவைதெளியா
ரூனமேபெறுவரென்றுரைத்தனனெம்
முடையவன்றணிகையோண்பதியே. (௯௬)

(சரியையேபோதுஞ் சார்ந்திடினென்றது.)

துவிதஞானத்தானுண்டெனுமேயத்
துவிதமாகமமறியென்றே
யவிருமெய்ப்போதமறைந்தனர்பெரியோ
ராதலிற்சரியையேபோது

மெவர்கொலோவழிவாரோகவாதத்தி
 லிறங்கிமாழ்குவரொனவிசைத்தான்
அவனியோர்தாழுந்தணிகைமால்வரையி
 லமர்ந்தொளிரற்புதமணியே. (௯௭)

(தணிகையில்வாழ்வு தானுண்டென்றது.)

யோகபோகங்களுயிர்களுக்கருள
 யோகியாயிருந்துமெம்மன்னை
யாகமேவுறநற்போகியாயிருந்து
 மருளுவன்காண்சிவனெந்தை
யேகனுமவனேயோகபோகங்க
 ளெய்திலானெனத்தெளியென்முன்
யோகபோகங்கடருந்திருத்தணிகை
 யூடொளிர்வான்மதிவிளக்கே. (௯அ)

(தணிகையிற்சூழ்வோர் தவம்பெரிதென்றது.)

ஆலமார்கண்டத்தப்பனைப்பாடு
 மாரமுதாயினனெங்கள்
கோலமார்தணிகைக்குமரவேள்வள்ளி
 கொழுநனுங்கழுமலத்திறையை
வாவிதாகிலைபெற்றன்பினல்வழுத்து
 மாதவமுடையரோயெம்மை
யேலவிங்கெய்தியாட்கொளும்பெரியோ
 ரொன்பதெம்வாவிதாகிலையே. (௯௯)

(வாழ்த்து.)

அழுதிருகண்ணீர்வாரமெய்பொடிப்ப
 வன்பினலுருகியென்னன்பே
பழுதிலோவியமேபாலொடுதேனும்
 பழமுமாயினிக்குமாரமுதே
விழுதையேன்கண்டாய்தணிகையின்மருந்தே
 வேற்படையாயெனவிழுந்து
தொழுமடியேனைத்தூக்கியேயாளுந்
 துணைமலர்த்தாள்கள்வாழியவே. (௧00)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஷண்முகதேவன்
திருவடிவாழ்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநம:

சித்தாந்தரத்நாகரம்.

சித்தாந்தபூஷணம்.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

சூளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS:

PRINTED BY T. GOVINDACHARIAR,

SIVANANDA NELAYAM PRESS,

No. 28, Avadanum Papier Street, Choolay.

31st October 1881.

சிவமயம்.

ஸ்ரீ மதுபயவேதாந்த பிரவர்த்தகராய் விளங்கும்

திருமலை - விளாங்குப்பம்

ஸ்ரீலட்சுமீகுமார தாத்தாசாரியாரவர்கள்

இயற்றிய சுலோகங்கள்.

జీవబ్రహ్మ నిరూపణే జడధియాం దుర్వార గర్వానల
క్షుభ్యన్మానస దూషితాఖిలమత ప్రా ప్రాజ్ఞతాశాలినాం ।
మాయావాద నిరాకృతాత్మ వపుషాం వాగ్బంధనంయాతనో
చ్ఛైవసిద్ధాంత విభూషణం రుచికరం శ్రీసుందరాఖ్యఃకవిః. ॥

సోమసుందర కవిర్మహాగుణః
సర్వశాస్త్ర పురాణసారవిత్ ।
సర్వదర్శన రసజ్ఞవత్తయా
కేనచిత్ప్రలపితం నిరాకరోత్. ॥

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஸம்பந்ததிர்த்தசரணாயநம:.

சித்தாந்தரத்நாகரம்.

சித்தாந்த பூஷணம்.

காப்பு.

சீரார் கணபதியுஞ் சிங்கார வேலருமெம்
பேரா யிரமுடைய பெம்மானும்—காரார்
குழலுமையுஞ் சைவ குரவருமெஞ் ஞான்றுந்
தொழவுரியா ரன்னோர் துணை.

(உபாஸனாமூர்த்தி வணக்கம்.)

கொடியேறுநறுங்கொன்றை முடியேறுபெருங்கருணைக் கடலின்வாமக்
கொடியேறுமமுதுண்டு படியேறுமுயர்கூடற் கோமான் மெய்யிற்
பொடியேறச்செடியேறு மமணர்குழுக்கழுவேறப் புரியும்வானின்
முடியேறுமணிமாடக் காழிவருஞ்சிவக்கொழுந்தை முன்னிவாழ்வாம்.

நூல்.

அகண்டவைச்சிதானந்த கனிபூதனாய் விளங்கும் ஸ்ரீசிவபெருமானுடைய திருவருள்பெற்றோருங்குஞ் சைவசமயாசாரியர்கள், சந்தானகுரவர் முதலினோரவதாரஞ்செய்தருளிப் புறச்சமயக்களைகளைந்து,சைவப்பயிரை வளர்த்தனரென்பது சாஸ்திரபிரஸித்தம். (இயல்பென்றுந்திரியாமல்) என்று ஸ்ரீதாயுமான சுவாமிக ளருளியபடி தைவிகத்தமைந்து (சித்தாந்தமென்னும்) பரியாய நாமத்தையுடைய சைவமாக மெத்தகையோராலு மெந்தக்காலத்திலும் பேதிக்கப்படும்பாலதறு. எல்லாமதங்களும் பூர்வபட்சமாகையாற்றானன்றோ சைவம் ஸித்ந்த மென்னும்பெயர் பெற்றது? வேறு சமயிகளாயிருப்பினும், சைலிலச்சினைகளாகிய விபூதி ருத்ராட்சங்களைப் பாரமார்த்திகம், வியாவாரிகமென்று மிரண்டுதசைகளில் விவகாரத்திலேனும் கொண்டமோர் ஸம்பந்தம்பாராட்டியேயன்றோ (தத்துவராயர்)முதலினோ

(சைவநெறியேயுய்யுநெறியது)என்றுகூறிப்பிழைத்தனர்?இங்ஙனமாக,தற்காலத்து வேதாந்திகளிலொருவர் தமது அவாந்தர வேதாந்தத்தைச்சாதிப்பான் றொடங்கிச் சிவநிந்தைபொதிந்த (உத்தமவாதநூல்) என்பதொன்றும், (சர்வமதசித்தாந்தவிளக்கவினுவிடை) என்பதொன்றுஞ் செய்து வெளியிட்டனர். இவற்றுண் முன்னையது எமது (நூலவாதூலத்தின்)முன்னர்ப் பேருரில்லாமலொழிந்து போய்விட்டமையாற் பிந்திய (வினுவிடைவிளக்கத்தையே)யீண்டு ஸங்கிரகமாக விசாரித்துத் தீர்ப்பெழுதலாயினேம். இவ்வழுத்திரட்டில் தாமே ஞாயவாதியெனவும், ஏனையசமயிகளஞ்ஞாய வாதிகளெனவுங்கூறினர். ஞாயவாதியென்பதிலுந் தஞ்சமயிகளனைவரையுங் கொண்டவரல்லர். அவருளேனையோரைப்போலிகளாக்கித் தாமேயதற்குச் சொந்தமாயினர். இப்படியுமுழுமோசம் போவாருண்டா?இதையிப்படியே திருப்பி யிவர்தலைமேலேற்றி மற்றையரோன் றாங்களே ஞாயவாதிகளென வெளிவந்து தனித்தனித் தத்தங் கொள்கையைச் சாதிக்கமாட்டார்கள்?இவரென்ன ஸர்வகலாஸம்பந்நரா? எந்தமதத்தி னொந்தமூலை யிவர்க்குத் தெரியும் ? அவாந்தரவாதம், போலி வேதாந்திவாதம், மூடவாதிமத மென்பனவாதிகளை யவாந்தரமாகத் தாமே கற்பித்துக்கொண்டு ஸமாதானங் கூறுவதாக வெளிப்பட்ட விவ்வஸகாயசூரர் வீரைவாதம், ரசவாதமென்பவற்றை யேன் மறந்துவிட்டனர் ? இன்னும், சூடாமணியில் நிகண்டவாதி, ஆசீவகன் என்னும் பிரிவினரையும், புத்தரில் வைங்கிராந்தவாதி முதலாயினரையும், பாட்ட பிரபாகர நிரீஸ்வரஸாங்கிய மதவாதிகண் முதலியவெண்ணிறந்தபேரையு மேன்மறுக்க வகையில்லாதொழிந்தனர் ? அப்போது தானன்றோ ஸர்வமதவிளக்கமென்பது பயன்பெறும்? அவைகளின் பேரே தெரியாதவர்போலும். சிவஞானஸித்தியைப் பார்த்தாயினு மெழுதித் தொலைக்கலாகாதா ? அது எட்டாவிட்டாலும் பிரபோதசந்திரோதயத்தையாவது பார்க்கலாகாதா ? பிரபோத சந்திரோதயக்காரர் எங்கண் மதத்தவரேயாக, அவர்மாத்திரம் சூடாமணி முதலியவற்றை யெப்படித் தெரிந்துகொண்டாரெனின், யாமீண்டுக் கூறவந்த ‡ வினுவிடைக்காரரையேயன்றி யிவரது முன்னோர்களு மிவரைப்பே (யம்பிரம்ஹங்களாகவே) யிருப்பார்களென்று கருதியல்லவென் சங்கராசாரியர், கௌடபாதர், இராமானந்தர், தத்துவராயர் முதல விவேகிகள் பலரம்மதத்தவரா யிருந்தாராகையால்.

(பிரபோத சந்திரோதயமென்பது) கீர்வாணத்திலுள்ளது. இத குக் கண்டகமொன்று (ஸங்கல்ப சூரியோதயம்) எனப் பாஞ்சர

ரிகள் எழுதி யிருக்கின்றனர். பின்னுஞ் சில விவாதங்க ளிதன் விடய மாக விருதிறத்தவர்க்கு நடந்துள்ளன. இந்த நூலைத் தமிழிற்செய்த வர் (மாதை - திருவேங்கட சுவாமிகள்) என்று அம்மதத்தவர் கூறு கின்றனர். அஃதுண்மையன்று. அதற்காக்கியோர் இலக்கண விளக்கஞ் செய்தருளிய ஸ்ரீவைத்யநாத தம்பிரான் சுவாமிகளெனவறிக. அவரி டம் நூல் யாசகங்கேட்டமையால், தமது ஸ்வமதத்துக்கு மொருஹா னி யுண்டாகாதபடிக் கேட்டவர்க்குந் திருப்தியுண்டாக வதைச்செய்து கொடுத்தனர். ஸ்வமதஸ்தானமேயாண்டுச் செய்திருத்தலை ஸாமான்ய பேதைகளெங்கறியப்போகிறூர்கள்? அவர் செய்தது யாதெனின், சிவ ஞானசித்தியாரின்முன்னரதைப் பூர்வபட்ச மாக்கிவிட்டதேயாம். எங் ஙனமெனின், விளக்குதும்.

(சிவஞானசித்தியார், பரபட்சம்.)

உலோகாயதன்மதம்.

"சாற்றுபெயரானவை நிலம்புனல் கனற்பின்
காற்றுமெனலாமிவை கலந்தகுணமோதி
னூற்றமிரதம்முருவ நற்பரிசமாகும்
போற்றுமிவைசித்த வியல்பாமிவைபுணர்ப்பே."

(பிரபோதசந்திரோதயம், உலோகாயதன்மதம்.)

"நிந்தபெயராமவை நிலம்புனல்கனற்கால்
கந்தமிரதம்முருவு காண்டகையவூறு
வந்தகுணசித்தமிவை வாய்ந்திடுபுணர்ப்பு
மிந்தவுலகத்தினி வியற்கையெனலாமால்."

(சித்தியார், உலகாயதமதமறுதலை.)

"பூதமானவைசித்தமென்று புகன்றதென்னையுருக்களா
யாதலோடழிவாகுமாதலி னாக்குவோரவர்வேண்டிடுங்
காதலோடுகடாதிமண்கொடியற்றுவோருளர்கண்டனம்
சேதனிலெழுந்தகொப்புணிகழ்ந்தமாருதச்செய்கையே."

(சந்திரோதயம், உலகாயதமறுதலை.)

"பூதசித்தியமென்றனை யுருவுடன்பொருந்தி
யாதலற்றிடவூறுதலாலவற்றையும்படைப்போ
ரோதல்வேண்டுமான் மண்கொடுகடாதிகளுருற்று
மியோளரைக்கண்டன நீணிலத்தன்றே."

இவற்றை முறையே நோக்குங்கால் ஸித்தியாரையே வேறு சொல்லாக வமைத்துப்பாடிய தொன்றுமெனப் பிரபோதசந்திரோதயத்தைக்கொள்ளுவதி லென்ன தடையுளது? இவ்வுண்மை யிந்த வுலகாயதமதத்தின் மாத்திரமேயன்றி க்ஷமணபௌத்தஸாங்கியாதி யெல்லாமதங்களிடத்தும் பெறப்பட்டவா றவ்விரண்டு நூல்களையு முடனிருத்தி யொத்துப்பார்த்தவழி விளங்கும்! விளங்கும்!! (சிவஞானஸித்தியாரில்) பூர்வபட்ச மதங்களிலொன்றாகவே மாயாவாதிகளுடைய வேதாந்தமுஞ்சேர்க்கப்பட்டுக் கண்டிக்கப்பட்டிருக்கின்றது. இந்தப்பாகத்தைச் சந்திரோதயக்காரர் எடுத்தாளுகையில், பூர்வபட்சத்தைமாத்திரமே யெடுத்துத் தமது ஸித்தாந்த மாக்கிக்கொண்டனர். ஷை சந்திரோதயத்தில் ஸித்தாந்தமாகின்ற மாயாவேதாந்தம் ஸித்தியாரில் பூர்வபட்சமாய்விட்டதனால், ஸித்தியாருக்குமுன் பிரபோதசந்திரோதயம் பூர்வபட்சமா யிருப்பதொன்றுமென மேல்யாம்காட்டிய வுண்மைநிலையுதல் பெறும். அவை வருமாறு.

(சித்தியார், மாயாவாதிமதம்.)

“அறிவாயகிலகாரணமாயநந்தாநந்தமாயருவாய்ச்
செறிவாயெங்குநிறைந்தமாய்த் திகழ்ந்தசத்தாய்ச் சுத்தமதாய்க்
குறிதான்குணங்களொன்றின்றிக் கூறும்வேதந்தனக்களவாய்ப்
பிறியாவநுபூதிகந்தனக்காய் நின்றதந்தப்பிரமந்தான்.”

“ஒன்றாயிரவிபலபாண்டத்துண்டா முதகத்தங்கங்கே
நின்றாற்போலவுடறோறு நிகழ்ந்துநிற்கும்பொருண்மேற்கண்
சென்றாற்போலப்புலன்களுக்குஞ் சிந்தைதனக்குந் தெரிவரிதா
மென்றாற்காட்சிமுதலாயவிருமூன்றளவைக்கெட்டாதால்.”

(சந்திரோதயம், வேதாந்தச்சருக்கம்.)

“சத்தாயகண்டபூரணமாய்த் தனியாயருவாய்த்தற்பரமாய்ச்
சித்தாயநந்தாநந்தமாய்த் திகழுமொளியாயுலகெவைக்கும்
வித்தாய்வேதவளவையதாய் விமலமாகியநுபூதி
வத்தாய்சித்தமாயெனவும் வயங்குமந்தப்பிரமந்தான்.”

“இரவியொன்றுபல்கடத்தி னிருந்தபுனலினங்கங்கே
விரவிநின்றதெனவதுவே மெய்கடோறுநின்றிடுநின்று
மாயிலொன்றும்பொறிகளினுன் மதித்தற்கரிதாய்க்காட்சிமுத
லளவைசெய்கின்றபிரமாண மோராறுமுணர்வரிதாம்.”

(சித்தியார், மாயாவாதிமத மறுதலை.)

" நீடுவேதமளவாகவேகமெனு நீதிதானிகழ்வதாகுமே
னாடிஞாதுருவுஞானஞேயமுட னானுநான்மறையுமோதலா
லோடுமாகுமுனதேகமோதுமிவை யூனமாகியுளமாறுகோள்
கூடுமாகுமநுபூதிதானுமது கூடிடாததிலிலாமையே."

" நீதியாலொளிகொள்பானுவானதக னீரிலேங்கமுமாறுபோ
லாதிதானுருவமாயகாயமதின் மேவியாவதிலையாகுமாந்
தீதிலாவுருவமாதலானிழல்கள் சேரவேறிடமிலாமையா
லோதிலோரகலினீரிலே யொருவர்காணலாவிலதனேகமே."

என்றுவருமவற்றும் கண்டுதெளிக. மாயாவாதகண்டனமாகிய விந்த வித்தாந்தவாக்கியங்களுக்குமேல் ஷை சந்திரோதயத்திற் கோட்டியுண்டாகாமையால், நூல் செய்தவருண்மை யபிப்பிராயமினைத்தென வெளிப்பட்டது. இப்படிப்பட்ட நூலைப்பார்த்துப் பெருமகிழ்ச்சிகொண்டு நம்மசாத்திரத்தி லெல்லாமதங்களுங் கண்டிக்கப்பட்டிருக்கின்றன வென்றிறுமாந்துரைத்தலைக்காட்டிலும், அம்மதத்தவர்க்கு வேறேபரியவம் வேண்டுமோ?

இங்ஙனநிற்க, ஷை விஞவிடைப்பிரபந்தக்காரர் தன்மையை யினிக் கொஞ்சம் பரியாலோசிப்பாம். பிறமதஸ்தர்கேள்விகளையு முத்தரங்களையுந் தாமே தமது சொத்தைப்புத்திக்கேற்ப வருவித்துக்கொண்டு, ஸமாதானங்கூறிவிட்டதாக மகிழ்வது எவ்வளவு பேதமை? திருவாவடுதுறை ஸ்ரீசிவஞானயோகிகள்அருளிச்செய்த(திராவிடமஹாபாஷ்யத்தின்)மேற் கோட்டியெழுதலாகாதா? பாஞ்சராத்திரிகள்செய்துள்ள(சததூஷணி) முதலியவற்றைக் கழற்றக்கூடாதா? இப்பெருநூல்களிற் பெறப்பட்டுள்ள வோரற்பபாகமு மிவர்தெரிந்துகொள்ளச் சக்தி போதாதவராக, விவருமொரு மதோத்தாரகராகப் பட்டாபிஷேகஞ்செய்துகொண்டு வெளிப்பட்டது ஆச்சரியம்! ஆச்சரியம்.!!

இனித்தமது வழூத்திரட்டில்(தத்வமஸி)என்னும் மஹாவாக்கியத்துக்குப் பொருள் கூறியிருக்கின்றனர். அதைக்கொஞ்சம் பரியாலோசிப்பாம்.

துவிதம்.

" ததிவா—துவம்—தத்வம்
தத்—பரம்—இவா—போல
துவம்—நீ—அஸி—ஆனாய்"

விசிட்டாத்துவிதம்.

"விசிட்டம்—கூடியிருக்கிற—துவிதம்
தஸ்யபாவா—தத்வம்—தஸ்யா—பரத்தின்
பாவா—தர்மமாக—அசி—ஆனாய்."

எனப் பொருள்விரித்துத் துவைத விசிஷ்டாத்வைதங்களினையதன்மையவெனக் காட்டினர். இவர் விளக்கத்தைக் கண்ணுற்றவழி யிவர்க்கு விளக்குமாறு வெளிப்பட்டவர் கம்பீரமும் வெளிப்படுகின்றது.

இவா—என்பது (போல) என்னும் பொருளைத்தருமா ?

இவ—எனக்குறிலாயிடினன்றோ வதுபோதரும் ? அது கைப்பிசகு, அல்லது அச்சுப்பிழை யென்பாரொனி னேரிடத்திலமையும். ததிவா-இவா என வீரிடங்களில் வருதலெங்ஙனம் ?

தத்-இவ=ததிவ என்னுங்கால், பின்சேருந் (துவம்) என்பதோடு(ததிவத்வம்) அதவா (தத்வத்வம்) எனவருமன்றித் (தத்வம்) எனவருதற்கு யாண்டுவிதியுளது? மதிபோல முகமென்னாது மதிமுகமென்றாற்போல (ததிவத்வம்) என்னாது (தத்வம்) என்றதெனத் தாம் காட்டியநியாயமே போதுமெனின், மதிமுகமென்று தனித்துவரின் மாத்திரமே யது பொருந்தும். (மதிமுகம் சோபித்தது) என்னுங்கால், மதிபோன்ற முகஞ்சோபித்தது என வருமாபோல் (தத்வமஸி) என்னுங்கால் அதுபோன்ற நீயானாய் எனவேயன்றோவராகிற்கும் ? அப்படிவருங்கால், (அது போன்ற நீயானாய்) என்பதற்கு அதுபோன்ற நீ எப்படியானாய் என்று பொருள்கொள்வது ? இப்படி விபரீதத்தை விளைவிக்குமபார்த்தமே துவைதிகள் கூற்றாகப்புலம்பவந்தது கேவலம் மூடத்தன்மையென்க.

இதுவேயன்றி, விசிட்டாத்துவிதம் என்பதற்குக் கூடியிருக்கிற துவிதம் எனப்பொருளுண்டாவதெப்படி ?

விசிட்டம்=கூடியிருக்கிற,துவிதம்=துவிதம் என்னுங்கால்,விசிட்டத்துவிதமென வருமேயன்றி விசிட்டாத்துவிதமெனத் தீர்க்கம் பெறாது. கூடியிருக்கிற வத்துவிதமெனிற் பொருந்தும்.

விசிட்டம்=சிரேஷ்டமாகிய, அத்துவிதம்=அத்துவிதம் என்பதே அதனுண்மைக் கருத்தாம். இவ்விசிட்டாத்துவிதச்சொல் பாஞ்சராத்திரிகட்கே யுரித்தென்பதூஉந்தவறு. சைவவிசிட்டாத்துவி

பாஷ்யமென ஸ்ரீநீலகண்ட சிவாசாரியர் பாடியத்தை வழங்குமாறு கற்றுவல்லுனர்பாற் கேட்டடங்குக. துவிதிகளென மத்துவ மதஸ்தனாயே யெல்லாப் பாஷ்யகாரருமங்கீகரித்திருப்பதறியாது சைவசமயிகளைத் துவிதிகளெனக் கூறியதும் அஸப்யமெனவறிக. மேல்,விசிட்டாத்துவித சப்த விவரணஞ்செய்தவர்,

தஸ்யபாவா=எனவும், பாவா எனவும் பிரித்தெழுதிய அழகைப்பார்த்திர்களா ? (பாவா) என்றவர் (மாமா) எனப்பொருள்கூறினன்றோ வழகுபெறும்?

தஸ்ய்பாவஃ =எனவும், பாவஃ, எனவுமமைதலன்றோ நிலையுதல்பெறும்?

தஸ்யா=பாவா எனவும்பிரித்திருக்கின்றனர்.

தஸ்யாபாவா=எனின்,தஸ்யபதத்துக்குஅபாவஞ்சொல்வதாகவுமன்றோ முடியும் ?

தஸ்யபாவஃ=என்பதே யுரிமையாத லறிந்திடுக.

தஸ்யபாவஃ =தத்வம், என்கையில் தச்சப்தவாச்யமாகிய பிரம்ஹத்வமென்பதமையுமேனும், பிற்போந்த (அஸி) என்னும் வினைமுற்றுக்கு எழுவாயெங்கே யொளித்தது ?
நீ எனத் தொக்கிநின்றதெனின்,

தத்=த்வம்=அஸி என்பற்றுட்போந்த (த்வம்) என்னு மெழுவாயை நீக்கி யிக்கவிராயர் பொருள் கூறியபடி யெந்த வைஷ்ணவநூலிலெழுதியிருக்கக்கண்டாரோ வறிந்திலம். இப்படியுள்ள பலவற்றைக் கிரந்தவிஸ்தரபீதியா லீண்டெழுதாமலிவ்வளவிலுபரதியடைந்தோம்.

மேலுண்மையைப் பின் வெண்பாக்களானுந் தெளிந்திடுக.

(தத்துவமசிவிளக்கம்.)

சர்வ மதவிளக்கஞ் சாற்றினு யந்தோநீ
சர்வ மதங்களையுஞ் சாற்றினையோ—துர்விரதம்
பூண்டாய்நிந் திக்கப் புவியிற் பெரியோரை
வேண்டாங் கெடுவாய் விடு. (க)

எம்மதத்தி னுண்மைதனை யேற்றாய் முழுதுமெவர்
சம்மதித்தார் காணுன் சமர்த்தையே—பொய்ம்மதத்தாய்
மலையிலே தானிருந்து மூடர்க்கு முன்குருவாய்
ாலுரைக்க வந்தாய் நுழைந்து. (உ)

சைவர் துவிதமெனச் சாற்றினு யந்தோநின்
பொய்யோதா னத்துவிதம் போந்துரையாய்—சையோகங்
கண்டன்றே யத்துவிதங் காட்டுவா ரெம்மவர்நீ
கண்டவர்போற் பேசுவதென் காண். (௩)

தத்துவம சிப்பொருளைச் சாற்றினாய் சைவநிலை
முற்று மறிந்தனையோ மூடமே—வத்துவிதப்
போலாகு மென்னப் புகலுவா ரென்றையோ
* வாலே முகமுடையாய் வந்து. (௪)

போலென் றதனுண்மை போற்றுபொரு ளோவன்றி
மேலொன் றிலக்கணமோ மேலுரையாய்—மூலப்
பொருளேல் பலவாங்காண் போந்திடுமோ தன்மை
யுரையாயென் முன்னே யுவந்து. (௫)

சிவா நுபவந் தானென்றே சொந்தமென மேலோ
ரவாவகலுஞ் சிவர்க் கறைந்தார்—சிவா நுபவ
மில்லாய்நின் சொற்படியே லென்செய்யா வைந்தொழிலும்
பொல்லாய்வந் திங்கே புகல். (௬)

நோயா யினையென்று நோக்கி யுரைத்தக்கா
ளேயாளி தன்னை நுவலுதியோ—நோயேதா
னாகவவன் றன்னை யதுவாகு மென்றதுவு
மாகுமிது போலென் றறி. (௭)

ஒன்றே பொருளாகு லோகோ வதுநீதா
னென்றே யிசைத்திடுத லேற்குமோ—நன்றாய்கா
னுன்மதத்தி னுண்மை யுரைத்தா யறியாம
லுன்மதங்கா ணோர்ந்தனையோ வுற்று. (௮)

“ அத்துவித வென்று மவனேனே யென்று
மதுநீயே யானின்று மென்று—மதுவானே
னென்றுந் தமையுணர்ந்தோ ரெல்லா மிரண்டாக
வொன்றாகச் சொல்லுவரோ வுற்று.” (௯)

என்றுய்ய வந்தா ரிசைத்தா ருலகுய்ய
நன்றாகவிற் றப்படியி னூடடாய்—வென்றிதருந்
தத்துவம சிப்பொருளைச் சாமவே தத்தினுள
வொத்துறவே கண்டாங் குணர்ந்து. (௧0)

* “வாலே முகமா வரவாளை யேதினர், போலேயுன் போதமோ போய் நின்டும்” என்றமொழி யிலொடுக்க வெல்லு பாவாலறிக.

அசிகாணுன் போத மறுபடவே வீழ்த்தும்
வசியென் றுணர்ந்திலேகின் மானம்—சிசியோடு
பட்டப் பகறிர் பரமசுகா நீதகிலே
யெட்டுமதி காணு திழந்து. (௧௧)

இவற்றைனேயன்றி யாஞ்செய்துள்ள(திருக்குதிரிசியவிவேக கண்டநம்) என்னு நாலானுங் கண்டறிக.

இனி யிக்கவிராயர் பாண்டித்ய பிரகடநத்தைச் சற்றேபரியாலோசிப்பாம். ஷை சுவடியில் (௯௯ - வது) பக்கத்தில் (கர்த்தத்வ சாதனக்கருவி) என்றனர். இப்படியே, மற்றோரிடத்தில் (போக்தத்வம்) என்ற பதத்தையுமாண்டனர். வடமொழிகளை யாளவேண்டுமென்னு மாசையிருந்தால், தெரிந்தவர்பா லொருதடவைக்குப் பலதடவை கேட்டன்றோ வெளிப்படுத்தல்வேண்டும் ? கர்த்ருத்வம்,போக்த்ருத்வம் என மேலோர் கூறுவதையறிந்து நாணுவாராக. வேறுபலவிடங்களில், சர்வேந்திரியாமித்வம் எனவொன்று பிரயோகித்தனர். அது சர்வாந்தரியாமித்வம் என வறிந்தடங்குக. மேல், சர்வாத்மாக்களி னுள்ளமறிவது சர்வஜ்ஞத்வம் என்று பொருள் கூறினர். (இயற்கையதாமறிவு முற்றுமுணர்தலுமுள்ளவனா யெழில் சருவக்கியனென்ப ரிவையுடையோன் சிவனும்.) எனச் சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்துட் கூறியதறியார்போலும். இன்னும், எவற்றுள்ளுஞ் சமத்துவமாயிருப்பது சர்வநியந்தாத்வமென்று பொங்கிவழிந்தனர். (தன்னுணைதப்பாம லெவருநடக்கிடவுந் தானெவர்க்கு நிக்கிரக மநுக்கிரகஞ்செயவும், எக்காரு மிவைமுன்றுந் தனக்கருள்வாரின்றி யெல்லா ஞானமுமுடையோன் சருவநியந்தாவும்) என்று ஷை தாற்பரிய சங்கிரகத்திற் றானே போந்தவாறு கண்டுதெளிக. இப்படி யநந்தமுளவற்றை விரிவஞ்சி விடுத்தாம்.

இதுநிற்க, வேறொரு விசித்திரத்தை யீண்டு விளக்கிக்காட்டுதும். தமது போலிப்பிரபந்தம் வினுவிடைரூபமாக வமைந்திருக்க வெண்ணினவர் அதைக் குழறுபடையாக்கிவிட்டனர். எங்ஙனமெனின், தமது வினுவினந்தத்தில்(எனின்)என்று முடிக்கின்றாராகலின்,அவ்வினு முற்றுப்பெறுமையைக் காட்டுகின்றது. இது ஸம்பிரதாய விருத்தமென்க. (எனின்) என்பது விடைகூறுவார்க்கே பிரயோக நலம் பெறும். (இன்றுசாயங்காலம்நான்வரலாமா?)என வினவுவோனுக்குப் பதிலுரைப்போன் (நீவருவதுண்டெனின், தீபத்துக்குமுன்வந்துவிடு)என்று கூறுவதே யன்றோ வழங்குபெறும்?இப்படிவிவகரிப்பதை விட்டு(நான்வரலாமாவெனின்?)என்

றுவினவுவதுமோர்வினுவாகுமா?இன்னும், விடைபகர்வோன் தனறுவி டையி னந்தத்தில் (என்க) என்று கூறுவது மஸப்பியமாத லறிந்திடுக. இந்தக்குழப்புஞானமுடையார் தாமெழுதிக்கண்டித்த (அவாந்தரவாதம்) என்னும் பகுதியில் பின்வரும் ஆபாஸங்களுளவற்றைக்கண்டுணர்க.

அவாந்தரவாதம்.

"ஞாயவாதிவினு—அவாந்தரமாவதென்னே?

அவாந்தரவாதிவிடை—ஆஸ்திகம், நாஸ்திகமுதலிய வாதங்களிலொன்றன்பாலு மாகாமல் கோழி கோழி என்னவிலே என்னவிலே என்றாற் போல வாதிக்கும் வாதமெனவறிக.

ஞா—வினு.........இதுபோலவாதிக்கும் விபரம்யாதெனின்?

அவா—விடை.........யாமெந்தக்கட்சியு மாகாமல் அவரவர்கட்சியை மறுப்பதே யெமதுமதமென்பர்."

எனமுழுநீளம் எழுதிவைத்திருக்கின்றனர். (அவரவர்கட்சியைமறுப் பதேயெமது மதமென்பர்) என்னும் பிரயோகம் யாரிடத்ததாகக் கொள் வது? (என்பர்) என்பது, என்று சொல்லுவாரென்று, பொருள்தரா லால் யாவர்சொல்லுவாரென்று கொள்வது? அவாந்தரவாதியே விடை பகர்வாருகையால் (அவரவர் கட்சியைமறுப்பதே யெமது மதம்) எனவன் றோ கூறுதல்வேண்டும்? படர்க்கையிடத்தேற்றி வேறுமதத்தார்தன்மை யை அவாந்தரவாதி கூறுவதுபோலன்றோ விவ்வாபாசகர் விளக்குமா ற்றல் வெளிப்படுகின்றது? இன்னும்பார்ப்போம்.

"ஞா—வினு—யாதுபயன்கருதி யிங்ஙனம் வினுவத்துணிவதோவெனின்?

அவா—விடை—கைகொட்டிப் பழிக்கவேண்டி யெனவறிக.

ஞா—வினு—இதனுல்வரும் பயனிவர்களுக்குயாதெனின்?

அவா—விடை—கொஞ்சநேரமாவது சிரித்துச் சுகமுறுவதற்கெனவுணர்க.

ஞா—வினு—வேறுகாரணத்தா லிச்சுகமடைதற் கேனரோவெனின்?

அவா—விடை—ஈனரல்லாராயினிங்ஙனம் புரிவார்களா? இவர்கள் யோக்கியப் போக்கிரிகளைப் பிறர்கம்மை யெண்ணுவார்களே யென்ற யோசனையும் நாணமுஞ் சிறிதுமில்லாதவர்களெனவறிக."

இவற்றாட்போந்த விடயவருமையினையும், கேள்வி யுத்தரங்களின் மெளிமையுங்கண்ட யாவர்தான் கைகொட்டிச் சிரிக்கமாட்டார்கள்? இ து எழுதிய அவரொருவருக்கும், படிக்காத சோம்பேறிகளுக்குமாத்திர மே சந்தோஷத்தையும், பிரமையையுந்தருமேயன்றி விவேகிகள் கழகத் துக் கௌரவம்பெறுமா? சிரிப்புண்டுபோவதன்றி. அவாந்தரவாதி தன

து விடையில் ஈனமொனவும், யோக்கிரிகமொனவும் யாவரையோ எடுத்துக்காட்டியது ? விவகாரமெல்லாம் ஞாயவாதிக்கும் அவாந்தரவாதிக்குமென்பதுண்மையாக, தன்னைததானே பலவாறு நிந்தித்துக்கொள்ளுதல் யாண்டமையும் ? அவாந்தரவாதியினது தன்மையும், ஞாயவாதியே யெடுத்துச்சொல்வதெனின், (அவா—விடை) என்றெழுதிவைத்தது யாதுசெய்ய ? இரண்டுவரியைத் தப்பில்லாமல் தன்மை முன்னிலைபடர்க்கை மயக்கங்காட்டாதவழி யெழுதத் தெரியாதவிவர்தானோ பிரமத்தை(நீயாகக்கண்ணைத்திறந்துபார்) என்று காட்டவல்லவர் ? இப்படியுள்ளவற்றை யெடுத்துக்காட்டுவது எமக்கு அதிகவேஷ்டையைத்தருகின்றது. சப்பிட்டவிஷயத்தில் வீண்காலம்போக்க நேரிடுகிறதேயென்னும் வியாகுலமே அதுவென்றறிக. காட்டவேண்டியதும் மூடர்களுடைய பிரமை நிவிர்த்தியர்த்தம் அவசியமாயிருந்தமையா லொருவாறு காட்டிமுடித்தாம்.

இனித்(துவிதவாதம்)என்னும்பேரிட்டுச் சைவத்தை அவாகண்டித்த ஸாமர்த்திய சிலத்தையுங்கொஞ்சம் பரியாலோசித்து உபரதியடைவாம்.

(துவிதவாதம். சாமான்யசம்பாஷணை.)

“ஞா—வினா—அநாதியில் வினைவருவானேன் ?
து—விடை—அங்ஙனமுன்னி னுங்கெடுவமாதலி னுண்டானடிமைத்திறம்பூண்பதே நமதுசுகப்பேறுக்குறுதியாமென்க.”

என்று கற்பித்தெழுதிய வக்கபோதிராயர் கொடுமை சாலப்பெரிது! பெரிது!! இப்படியும் விடையளிப்பவருண்டா ? மேல் வினாவுக்கு ஈண்டியாம் விடைபகர்வோம் கவனிப்பாராக.

அசைவர்—அநாதியில்வினைவருவானேன் ?
சைவர்—வினையாருக்குவருவது ?
அசை—உயிருக்கு.
சை—உயிரெப்போதுவந்தது ?
அசை—உம்முடைய சித்தாந்தப்படி உயிர் அநாதியாகையால் வந்ததென்பதுவேண்டாம்.
சை—உம்முடையசித்தாந்தப்படி உயிரெத்தன்மைத்து?
அசை—பாசகங்களோடொன்றாய்த் தன்னிடத்திற் கற்பிதமாயுள்ளது.
சை—தானென்பதுயாது?
அசை—தச்சப்தவாச்சியமாயுள்ளபிரமந்தான்.
சை—அப்பிரமம்என்றுவந்தது ?

அசை——அது அநாதிநித்தியமாயுள்ளது?

சை———அநாதியில் அதுவருவானேன் ?

அவர்கேட்டகேள்வி யவர்தலையிலேதானே விடிந்தது. அவருடையசித்தாந்தத்தால் பிரமமொன்றேஅநாதிநித்தியமும், எம்முடையசித்தாந்தத்தால் பதிபசுபாசமூன்றும் அநாதிநித்தியமுமாகையால், பிரமம் அநாதி நித்தியமென்றற்கென்னஸமாதானம் அவர்பகர்வாரோ, அதுவே பதார்த்தத்திரயங்களிடத்தும் யாங்கூறும் ஸமாதானமெனவறிக.

இனிவேறொரு ஆபாஸத்தைவிசாரிப்பாம்.

"ஞா—வினா—விதிநிஷேதம் விஸ்தார்த்தபோதகமென மூன்றாக வேதம் விதித்தமுறையெல்லாம் ஞாயமயமாயிருப்பானேன்?

ஞா——விடை—அவர்சமஸ்தத்தையு முதலிற்படைப்பதற்கேதென்னையெனவருஞ்சங்கைக்கு ஞாயமுண்டோ, ஆதலால் யுத்திக்கொவ்வாதவவசரவாக்கியமுமுண்டெனவறிக."

இவரது புத்திவிசாலத்தைப் பார்த்தீர்களா? சைவசித்தாந்தத்தையினி யிவரிடத்திற்றான் யாவரும்படிக்கவேண்டும். வேதமானது யுக்தி விரோதமாகவுமுள்ளதென்பது சைவரபிமதமாகக் காட்டிய விவரது அகங்காரத்தை நிவிர்த்திப்பாம்.

அசை—கடவுள் உலகமுதலியவற்றை முதலிற் படைப்பதற்கேதென்னை?

சை——கடவுள் உலகமுதலியவற்றைப் படைக்கவில்லையென்றது உமக்குடன்பாடோ?

அசை—எமதுகருத்தைப் பின்றெரிவிக்கிறேன், நான்கேட்டதற்குப் பதில் சொல்லும்.

சை——உலகமுதலியவென்றீரே அவையாவை?

அசை—சேதனங்களாயுள்ளவுயிர்களும், அசேதனங்களாயுள்ள தேகேந்திரியாதி பிரபஞ்சங்களுமே.

சை——ஆயின், சொல்லுகிறேன்கேளும். சேதனங்களாயுள்ள வுயிர்கள் படைக்கப்பட்டனவன்று, அசேதனங்களாகிய தேகேந்திரியாதிகண்மாத்திரமே படைக்கப்பட்டன.

அசை—உயிர்கள் ஏன்படைக்கப்பட்டனவன்றாம்?

சை——உயிர்கள் சிற்றறிவுஞ் சிறுதொழிலு முடையவாகலின், அவை காரியப்படுதற்கு அவற்றைப்போன்ற வேறுமுதலில்லாமையால்.

அசை—சேதனமாகிய பிரமமுண்டாதற் கென்சொல்வீர்?

சை——பிரமம் அறிவித்தாலறியவும், அசைவித்தாலசையவுமான வுயிர்களின்றன்மை யெய்தாமையால் அவற்றிற்குபாதானமாகாது.

அசை—பிரமத்தின் றன்மையாது?

சை——உயிர்களுக்கறிவிப்பதும், அவற்றை யசைவிப்பதுமாகிய ஞானக்கிரியை களுடையது.

அசை—அசேதனங்களாகிய தேகேந்திரியாதிகள் படைக்கப்பட்டமையா லிவற்றிற்குபாதனம் வேண்டுமல்லவா?

சை——வேண்டும்.

அசை—அது யாது?

சை——மாயை.

அசை—பிரமத்தையன்றி மாயையென்பதொன்றுண்டோ?

சை——பிரமம் மாயையாகாது, மாயை பிரமமாகாது.

அசை—இரண்டும் வேறு வேறு முதல்களோ?

சை——ஆம்.

அசை—இரண்டும் வேறு வேறு முதல்களாவதெப்படி?

சை——பிரமத்தின்றன்மை முன்னர்க்கூறினும். மாயை ஜடமாகையாற்றானன்றோ வதன்காரியமாகிய தேகேந்திரியாதிகளுமப்படியே யிருக்கக்கண்டோம்? பிரமம் சித்தும், மாயை ஜடமுமாகையா லிரண்டுமொருபொருளாகாது.

அசை—உயிர்களுக்கறிவிப்பதுபோலப் பிரமமானது மாயைக்கறிவிப்பது கூடாதோ?

சை——உயிர்களைப்போன் மாயைக்கறியுந்தன்மை யிருப்பினன்றோ வதுகூடும்?

அசை—அதற்குள்ளதன்மைதான் யாது?

சை——அசையுந்தன்மையொன்றே.

அசை—அத்தன்மையால் அதுபெறும்பயன் யாது?

சை——பிரமத்தாலசைவிக்கப்படுவதே. இதுவேயன்றோ தேகேந்திரியாதிகளாகக்காரியப்படுதலென்பது?

அசை—இனித் தேகேந்திரியாதிகள் காரியப்படுமேதுவைச் சொல்லுகின்றீரா?

சை——அப்படியேசொல்லுகிறோம்.

அசை—கொஞ்சம்சொல்லும் பார்ப்போம்.

சை——தேகேந்திரியாதிகள் ஜடமாகையால் தாமேகாரியப்படுமா?

அசை—படமாட்டா.

சை——அங்ஙனங் காரியப்படுத்தினவனையேயன்றோ பதியென்று வேதசிவாகமங்கள் கூறுவது?

அசை—அஃதுண்மையே! அதன்விவரத்தைச் சொன்னாலன்றோவிளங்கும்?

சை——பதியாயுள்ளவர் பயனில்செய்கை செய்யாரன்றோ?

அசை—ஆம்.

சை——இதனால், தேகேந்திரியாதிகளைப் பயனில்செயலாகக் கொள்ளலாமா?

அசை—அவர்செய்த பயனையேயன்றோ யாம்கேட்பது?

சை——அது உயிர்களுக்குபகாரமாதற்பொருட்டே ?
அசை—என்னவுபகாரமுண்டாச்சுது ?
சை——தேகமுதலிய மாயாபதார்த்த சையோகமாத்திரத்தானே ஆணவவிருளான் மழுங்கியிருந்த ஆன்மாவினது ஞானக்கிரியைகள் சற்றுவிளங்குவதே.
அசை—ஆணவமென்பதும், மாயையென்பதும் வேறுவேறுபொருள்களோ ?
சை——ஆணவத்துக்கு அறிவைமயக்குந்தன்மையும், மாயைக்கு அம்மயக்கத்தைச் சிறிதகற்றுந்தன்மையுமுண்மையா லிரண்டுமொருபொருளாகாது. "மாயாதனுவிளக்காய்" என்று மேலோ ரநுபவவுரையுமிருக்கின்றமையால்.
அசை—இதற்கநுபவமுண்டா ?
சை——சகலகேவலங்களே அநுபவம்.
அசை—முறையே விளங்கச்சொல்லும்.
சை——ஆணவவிருளிற் கேவலப்பட்ட சுழுத்தியும்,மாயாதநுமுதலியவற்றாற் சகலப்பட்ட சாக்கிரமுமேஅநுபவம்.
அசை—மாயாதுவந்தத்தால் ஆணவவிருள் விலகுமென்பதற்கு ஒருபமாணங் காட்டல்வேண்டும்.
சை——செம்பினிடத்துள்ளகளிம்பு அழுக்கேயன்றோ ?
அசை—ஆம்.
சை—அக்களிம்பையகற்றும் புளியும்அழுக்கேயன்றோ ?
அசை—ஆம்.
சை——இரண்டழுக்குகளுக்குந் தன்மையொன்றாகாமையை நீளைக்கலந்திருக்குஞ்சேற்றாலும்,அந்தச்சேற்றையகற்றி அதனோடுதானும் விலகிநீரைத்தெளிவிக்குந் தேற்றாங்கொட்டையாலுமறிந்திடுவீர்.
அசை—புளியினது தேய்ப்பாலகன்ற களிம்பு செம்புக்கு நைஜமாகையான் மீண்டுமுண்டாகாதோ ?
சை——களிம்புநீங்கியசெம்பு அம்மட்டேயன்றிப் பரிசவேதியாற் பொன்றுமாபோல் ஆணவநீங்கிய வுயிர் அருளாகிய பரிசவேதியான் மலஞ்சேராதுசுத்தமாயேயிருக்கும், "நின்னருளான குளிகைகொடுபரிசித்துவேதிசெய்து, பத்துமாற்றுத் தங்கமாக்கியே பணிகொண்டபட்சத்தை யென்சொல்லுகேன்" என்றவுரையும் பிரமாணம்.
அசை—இதுதானோமுத்தியென்பது ?
சை——முத்தியென்பதும்,வீடென்பதும் நீக்கத்தையே காட்டலான்ஆணவாதிமலநீக்கத்தை முத்தியென்றது வேறெதனையோகொள்வது?இதிற்க, உலகமுண்டான வேதுவைப் பின்னே சொல்லுகிறோமென்று மேலே நீர்சொன்னீராகையால், அதைக்கேட்க வபேட்சிக்கிறேன்.

அசை—நீர்தான் சொல்லிமுடித்தீரோ,நான்வேறுசொல்லவேண்டுமா?

சை—— [illegible]வதுவைக் கூறுவதிற் சைவருக்கு ஞாயங்கிடையாதெ
ன்றீராகையால், ஞாயவாதியென்று தலைநீட்டிய வுமது அகண்ட
ஞாயத்தைக் கேட்கக் கெஞ்சம்அபேட்சித்ததேயன்றிவேறில்லை.

அசை—அப்படியானுல் சொல்லுகிறேன்.

சை——மஹாபாக்யம் சொல்லுமையா.

அசை—உலகந்தன்னிடத்திற் கற்பிதமாயுள்ளது ?

சை——உலகமென்பதுயாது ? தானென்பதுயாது ? கற்பிதமென்பதுயாது ?

அசை—ஜகஜீவபரங்களேயுலகம். பிரமமேதான். தன்னிடத்தி லத்யாஸமாகத்
தோன்றினவே கற்பிதம்.

சை——ஜகஜீவபரங்களோரியல்பினவா ? தனித்தனி வேறுபட்டனவா ?

அசை—வேறுபட்டனவே.

சை——இவற்றிற்கதிஷ்டானமான பிரமம் ஒரு தன்மையுடையதா?பலதன்மை
யுடையதா ?

அசை—ஒருதன்மையுடையதே.

சை——ஒரேதன்மைத்தாகிய பிரமத்தினிடத்தில் பலதன்மையபொருள்கடோ
ன்றியவிதமெப்படி ?

அசை—ஒரேதன்மைத்தெனுமுண்மை நீர்கிரகித்ததினைத்தெனக் கொஞ்சம்சொ
ல்லுகின்றீரா ?

சை——பிரமம் நின்மலமானதன்றோ ?

அசை—ஆம்

சை——அது விகாரமில்லாததன்றோ ?

அசை—ஆம்.

சை——அது ஒன்றாயுள்ளதன்றோ ?

அசை—ஆம்.

சை——அது சித்தாயுள்ளதன்றோ ?

அசை—ஆம்.

சை——நின்மலமானது சமலமாகவும்,விகாரமில்லாதது விகாரமாகவும்,ஒன்றாயுள்
ளது பலவாகவும்,சித்தாயுள்ளது அசித்தாகவும் வேறுபடாத்தன்
மையைக் கண்டேயன்றோ பிரமமொரேதன்மைத்தன்றோவெ
ன யாம் வினவியது ?

அசை—மேலேசொல்லும்.

சை——நின்மலமாகிய பிரமத்தினிடத்தில் மலத்திரயங்களும்,அம்மலபந்தர்களா
கிய ஜீவர்களு முதித்தவாறென்னை ? விகாரிகளாகிய வெண்ணி
றந்த வுயிர்கள் நிர்விகாரமாகிய வொன்றானபிரமத்திற் காரியப்ப
ட்டவாறென்னை ? சித்தாகிய பிரமத்தினிடத்தில் அசித்தாயுள்ள
வை தோன்றுமாறென்னை ?

அசை—இவ்வளவும் பிரமத்தினிடத்தில் அத்தியாஸமென்று கூறினதறிந்திலீர் போலும்.

சை—யாமறியாததும், நீரறிவித்ததுந் தெய்வத்துக்கே வெளிச்சம்.

அசை—எம்முடைய ஸமாதானம் அங்கீகாரமில்லையோ? அப்படிக்குவேண்டாம், கேட்பனவெல்லாம் நன்றாய்க்கேளும்.

சை—அத்தியாஸமென்பது பொய்யேயன்றோ? பொய்யுலகத்திற்பட்ட நீரும், யாமும், நம்மிருவர் விவகாரமும் பொய்யேயாகுமன்றோ?

அசை—ஆம்.

சை—எல்லாம் பொய்யாகுமெனின், நீர் நூல்செய்ததும், யாம்அதற்குப்பதில் எழுதுவதும் ஏன்பொய்யாகாது?

அசை—இதுவும் பொய்யே.

சை—இப்படியல்லவோ ஸமாதானங்கூறல் வேண்டும்?

அசை—எமது ஸமாதானத்துக்கென்னவோட்டை?

சை—இரண்டுபேர் விவகரித்துவருகையில் ஒருவன்ஞாயமாயும், மற்றொருவன் ஞாயமின்மையாயும் பிரவர்த்திக்குங்கால் இரண்டும் பொய்யென்னு முமதுஸித்தாந்தத்தால் எதற்குப்பிராசுரியந்தருவது?

அசை—ஞாயவாதிக்கே.

சை—ஞாயவாதமும் பொய்யாகுகையில் உமதுவிடை யெங்கேசனம்பெறும்?

அசை—மேலுமதுகருத்தென்னை?

சை—நீர் அத்தியாஸமென்பது தவறென்பதே.

அசை—அஃதெங்ஙனம் விளக்குவீர்?

சை—பொய்யினிடத்தில் மெய்யிராதன்றோ? நியாயமாகிய மெய்யானது அத்யாஸமாகிற பொய்யில் அநியாயமாகிற பொய்யோடு தோன்றுமென்பது எங்ஙனம்? அத்தியாஸமென்று சொல்லிவிட்டபின்னர் நீரெமக்கு ஸமாதானங் கூறவந்ததே அஸப்யமாதலறிந்திலீர்.

அசை—அத்யாஸஸித்தாந்தத்தை அஸப்யமென்று நீர்கூறினதால், யாவுமெய்யாகிறதன்றோ? அங்ஙனமாகுகையில், யாம் சொல்லிய திருட்டிக்கிரமமுழுதும் அபத்தமாகிறதன்றோ? அதனால், பிரமமொன்றே நித்தியமென்னும் வாதமும் பிசகாய்முடிகிறதன்றோ?

சை—அதற்கென்ன ஸந்தேகமா?

அசை—இன்னுமேதாவதுண்டா?

சை—கோடாநுகோடியுண்டு.

அசை—கொஞ்சம் சொல்லுகின்றீரா?

சை—அத்யாஸ மென்றீரே! அது பிரமத்தினிடத்தன்றோ? அங்ஙனமேல், அத்யாஸமாகக்கண்டதெது?

அசை—பிரமந்தான்.

சை——பிரமத்துக்கத்யாஸந் தெரிந்ததன்றோ? ஆஆ என்னபுதுமை! கட்டையிலத்யாஸமாகத்தோன்றிய கள்ளனை அத்தியாஸமெனக் கண்டது அந்தக்கட்டைதானோ? வேறுபொருளோ?

அசை—வேறுபொருடான்.

சை——அங்ஙனமேல், பிரமத்துக்கத்யாஸங்கற்பித்த வுமதுவிசாரத்தையெப்படிக் கொள்வது? கட்டையிலத்யாஸமாக வெளிப்பட்ட கள்ளன் காலத்திரயத்துமில்பொருளேயன்றோ? அந்தக்கள்ளன் வேறு பொருளைக்கண்டு பிரமிப்பானோ? அவனுக்கு ஸுகதுக்கமுண்டா? இல்லாத வுபமானத்தை யேற்றுக்கொள்ளு நீர் பிரமத்தினிடத்திலத்தியாஸமாகக் கள்ளனுடைய ஸ்தானத்திற் கற்பிக்கப்பட்ட வும்மையொத்த சீவர்களுக்குச் சுகதுக்கங்க ளுண்டாயிருப்பதை யெங்ஙனங் கூறுவீர்?

அசை—என்னகாணுமிப்படி மிரட்டுகிறீர்?

சை——உம்முடைய ஸித்தாந்தலட்சணத்தைக்கண்டுதான். நீராவது பழுதையையும், கட்டையையும், கானலையும், சுத்தியையுங்கண்டு உமது கண்குற்றத்தாற் பிரமிக்கின்றீர். உமது பிரமமொன்றுமில்லாத போதே பிரமித்ததல்லவா? அதற்கே யேதாவது புரைச்சலுண்டோ? அதிஷ்டானபிரமமே பிரமித்தபோது, ஆரோப பிரமங்கள் பிரமிப்பது அதிசயமா? உமது ஸித்தாந்தமுழுதும் ப்ரமமாய்முடிதலா லும்மிடத்தில் விவகரிக்க எமக்குப்பயமாயிருக்கின்றது.

அசை—இவ்வளவுதானோ?

சை——பிரமத்திலத்தியாஸமுண்டான ஹேதுவையன்றோ யாம் முதலிற்கேட்டது? அதற்குப் பதில்சொல்லவேண்டாமா?

அசை—நான் சொல்லியழுதேன்! இதுவரையிற்சொல்லி வாரிக்கொண்டதுபோதாதோ? அதுபோலவேதானே யிஃதும் முடியப்போகிறது? நான்சொல்லியென்னபலன்?

சை——நீர்சொல்லுகையில், அஃதாபாஸமாவதையெடுத்து உமக்குக் காட்டுவேமாகையால், நீர்தெரிந்து குணப்படுவது பிரயோஜனமன்றோ?

அசை—உண்மைதான், இனிச் சொல்லுகிறேன்.

சை——பயப்படவேண்டாம், தீரமாய்ச்சொல்லும்.

அசை—அத்யாஸ ஸித்தாந்தத்தா லொன்றும் பிரமத்தினிடத்தி லுண்டாகவில்லையென்பதுதேற்றமேல், நான் சொல்லவேண்டிய ஹேது யாதுக்கு?

சை——அங்ஙனமேல், நீர் குருவாயெண்ணிக்கொண்டிருத்தலும், மாணாக்கருக்கு வேதாந்தோபதேசஞ்செய்தலும், கட்டுக்கட்டாய்ச் சுவடிகளெழுதி வெளிப்படுத்தலும் யாதுக்கு?

அசை—மேலத்யாஸஞானத்தை அவர்க்குண்டாக்குதற்பொருட்டே.

சை——பிரமத்தினிடத்தி லத்யாஸமாகக் கற்பிக்கப்பட்ட நீர், உம்மைப்போன்ற வேனைய மாணுக்கர்க்கு அவ்வத்யாஸ ஞானபோதத்தைக் கற்பித்தலுமேனத்யாஸமாகாது ?

அசை—யாவுமத்யாஸமே.

சை——நீரத்யாஸமென்று வெறுஞ்சொல்லாய்ப் பித்தர்போற் பேசுவதி லென்னபலன் ? அநுபவங்காட்டாது.

அசை—நான்சொன்னபடிக்கேட்டால் அநுபவம் விளங்கும்.

சை——இது மூக்கறையன் கதைபோலிருக்கிறதே! உம்ம ஸித்தாந்தத்தினிச்சயம் பிறந்தபின்னரன்றோ வுமது சொல்லி னம்பிக்கையுண்டாம்? யுத்திக்கொவ்வாத வுமது சொல்லா பொருளாகப்போகிறது?

அசை——யுத்தியுமுரையு மொத்தாலன்றி யநுபவமுண்டாகாதோ ?

சை——வீண்பேச்சேதுக்கு ? யாவரையும் பிரமமாக்கிவிட்டு மறுவார்த்தை பேசும். நீர் முன்னர்ப் பிரமமாய்விட்டீரா ? சான்றென்னே ? உம்மிடத்தில் வார்த்தைசொல்லிக்கொண்டிருந்தால் வேடிக்கையாயிருக்கிறது. உமது ஸித்தாந்தம் ஆஸ்யத்துக்கு மிகயோக்யமுள்ளது.

அசை—அத்யாரோபவாதத்தை யினிவிட்டுக் காரணகாரியவாதத்தைக் கொஞ்சம் சொல்லுகிறேன் கேட்கின்றீரா?

சை——உமக்கு அநேகவித்தை தெரியும்போலிருக்கிறதே ! சொல்லுங்கேட்போம்.

அசை—பிரமம் லீலாமாத்திரமாய்ச் சகசீவபரங்களென விரிந்ததென்பதே உலகமுண்டான வேதது.

சை——வண்ணானாகவும், அம்பட்டனாகவும், கழுதையாகவும், நீராகவும், நாமாகவும்,வேறுபலவாகவும் அது லீலைசெய்ய விசைந்த லட்சணமே! லட்சணம்!! அன்னமும், அமேத்யமும்அப்பிரமந்தானன்றோ? ஞானமும் அஞ்ஞானமுமப்பிரமந்தானன்றோ? மலமும் நிர்மலமுமப்பிரமந்தானன்றோ ? பிரமமாகிய மலத்தையும், பிரமமாகிய அஞ்ஞானத்தையும் அப்பிரமமாகிய நீர் விலக்க முயலுமாறென்னே? முன்னரிப்படிக் கேட்டதற்குத் தானே யத்யாஸவழியால் தப்பித்துக்கொள்ள வழிதேடினீர்? அந்தவழி யடைக்கப்பட்டமையால் மீண்டுந்திரும்பினீர்போலும்.

அசை—நான் வேறு யாதுதான் சொல்லித்தொலைப்பேன் ?

சை ——“வேண்டுதல் வேண்டாமையிலானடிசேர்ந்தார்க்-கியாண்டுமிடும்பையில்”என்ற பிரமலட்சணங் கேட்டிருக்கின்றீரா ? கேட்டிருந்தாலிப்படிப் பேசமாட்டீர்.

அசை—வேண்டுதலில்லாத கடவுள் உயிர்கண்மாட்டிரங்கி யருளுதல் தோஷமன்றோ ?

சை——தனக்கென வேண்டுதலாகிய விருப்பும், வேண்டாமையாகிய வெறுப்பு மில்லாதவனென்பதே அதன் கருத்தாகையால் ஸ்வப்பிரயோசனங் கருதாது பரப்பிரயோசனங் கருதியருளல் தோடமாவதெப்படி?

அசை——ஐயா! உம்மிடத்திற் றெரியாமல் வாய்கொடுத்துவிட்டேன். இன்னுமிருந்தாலென்கதி யென்னுமோ? பொய் பொய் யென்றுசொல்லித் திரியக்கற்ற வெனதுமாயவித்தையால் உம்மையசைக்கமுடியவில்லை. எனக்கு விடைதருகின்றீரா? என்னை மன்னித்தருளும்,

சை——ஓடிப் பிழையும்.

இந்த விசாரத்தால் ஞாயவாதியென்று வெளிப்பட்ட அவ்வாபாசகர்தன்மை வெளிப்பட்டமையால், அவரை அஞ்ஞாயவாதியென்னும்பொருளைத்தரும் மூடவாதியென அழைப்பதி லென்னதடையுளது? அவருடைய புத்தி நுட்பத்தை யின்னுங்கொஞ்சம் பரியாலோசிப்பாம். (எ0)வது பக்கத்தில் சிவர்களும், அவர்களவாவும் பாசமும், அதனைத் தரும் பகவானுமெனத் திரிபதார்த்தமுண்டாயிற்று எனச் சைவர்கொள்கையாகக்காட்டினர். பாசமுயிர்களவாவுவதன்று. உயிர்களையன்றோ பாசம்விரவிநிற்பது? செம்பை விரவிநின்ற காளிதம்போல். இருளிற்சேர்ந்த கண்ணிருளேயாய் நின்றபடிப் பாசத்திற் சேர்ந்தவுயிர் பாசமேயாயிருக்கும். இருளானது கண்ணும், கண்ணானிருளுமாகாதபடிப் பாசமானது யிரும், உயிரானது பாசமுமாகாது. இப்படிப்பட்டவிருட்பாசத்தையோ பரமனுயிர்கட்குக் கூட்டுவன்? ஆன்மாக்களுக்கு இப்பாசத்தைக் கூட்டுவதற்கேதுவும் பயனும் யாவை? பரமன் கூட்டுவது செம்புக்குக் காளிதம் போகக்கூட்டும் புளிபோன்ற மாயாபாசமெனவறியாதஅவர்வினையிருந்தவாறு கொடிது! கொடிது!! பாசம் திரிவிதமென வோர்காற் கேட்டிருப்பினு மவற்றினிலக்கணமொன்று மறியாதவராகையா லெல்லாமொன்றேயெனக் கொண்டனர். ஆண்டுப் பாசமெனப் பொதுவாற் கூறினமையா லது மாயாபாசமேயெனின், ஆணவபாசத்தைக் கருதாத போது திரிபதார்த்தமுண்டாயிற்றெனக் கூறியதெந்தவாதரவுகொண்டு? ஆணவமலஞ்சேராது பதார்த்தத்திரய பிரயோகமுண்டாகாமையால் அவர் தப்பித்துக்கொள்ள வெந்தவழிதேடினும் பயன்செய்யாதென்க. இவருடைய ஆபாசத்தை(எஉ)வது பக்கத்தில் சத்தபரிசரூபரஸகந்த முதலியவே பாசமென்று கூறியிருக்கும் வழியும் விவேகிகள்கண்டு நகையாமற்போகார். இவற்றின் விளக்கத்தை மேல்யாம் காட்டிய வினுவிடைப்பிரகாசத்தாலுங் கண்டுதெளிக.

இனித், துவிதம், விசேஷஸம்பாஷணையென்று எழுதத்தெரியாது(விசேஷண ஸம்பாஷணை)யென்று முற்றுமறிந்தவர்போல் எழுதி

க்கொண்டதில் பரனுக்கும், சீவனுக்கு முபாதியுண்டென்பது சைவர் கொள்கையாகப்பிரமித்து விவகரிக்கத்தொடங்கினர். ஈசனுக்கு மாயோபாதியும்,சீவனுக்கவித்யோபாதியுங் காரணகாரியோபாதிகளாகக் குழறி வழியும் அபஸித்தாந்தத்தையோ எங்கள் சைவநூல் கூறும்? "காயமோ மாயையன்று காண்பது சத்திதன்னால்" என்ற வுண்மையறியாதவப்பேயர் மாயோபாதியென்னுது வேறெது சொல்வார்? (சத்திதன்னால்)என்பதை மாயையாக மயங்கிப் பரிபவத்துக்காளாகாதொழிக. (மாயையன்று) என்பதே மதியைத்துலக்குகையால். மேல் (எஈ) வது பக்கத்தில் பசுக்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பித்துப் பொசிப்பித்துத் தொலைப்பிக்குங் கர்த்தாவென்றனர். பொசிப்பித்துத் தொலைப்பித்து என்கையில் பொசிக்கின்றவரும், தொலைக்கின்றவரும் பசுக்களென்பதமையும். அவர்க்குப் பொசிப்பிக்கின்றவரும்,தொலைப்பிக்கின்றவரும் பதியாதலமையும். முதலிலே பெறப்பட்ட கொடுப்பித்து என்பதற்கு என்னபொருள் சொல்வது? பசுக்களுக்கவற்றைக் கொடுப்பித்தவர் கர்த்தாவானால் கொடுத்தவர்யாவர்? பிரமன் சிவனுஜ்ஞையாற் கொடுக்கின்றானென்பது தோன்றக் கர்த்தாகொடுப்பிக்கின்றா னென்பதெனின், பிரமனும் பசுவர்க்கத்து ளெண்ணப்பட்டவனாகையால்,அவனையொழித்துப் பசுக்களுக்குக் கொடுப்பித்தாரென்பது குற்றமாம். பிரமன்முதலிய பசுக்களுக்குக் கொடுப்பித்தாரென்கையில்அவர்க்குக் கொடுத்தவர் யாவரென்னுஞ் சங்கைக்கு அவர்கூறும் ஸமாதானம்யாது?(ப்ரம்ஹாதிஸ்தம்ப பர்யந்தான்,பஶூந்பத்வாமஹேஶ்வர:) என்ற பிரமாணத்தையும் பரியாலோசிப்பாராக. பிரமனைக்கொண்டேனைய வுயிர்க்குத் தநுவாதிகளை அசுத்தமாயாகாரியமாகிய பிரகிருதியி லுண்டாக்குவித்துத் தரச்செய்யுமிடத்துங் கொடுத்து என்று கூறவேண்டியதே மேலோர்சம்மதம். எங்களெசமானன் எனக்குச் சம்பளங்கொடுப்பித்தா னென்று சொல்வதின்றி யெனக்குச் சம்பளங் கொடுத்தானென்றுகூறு மநுபவவசனத்தை யோசித்தலொன்றேபோதும். இவ்வளவு கண்டெழுதத்தெரியாம லிந்தவோரிடமேயன்றி (௬௬) வது பக்கத்திலுமிப்படியே பிசகிப்போயிருக்கின்றனர்.

இங்ஙனநிற்க, (தற்போதமென்பது தானலாதொன்றைத் தானெனக் கோடல்) எனச் சைவர்கூறினதாகப் பிரமித்தனர். சிவபோதமெழுலே தற்போதமெனவும், அது தலையெடுக்காமல் சிவபோதத்தி லமிழ்ந்து விடலே தற்போத நிவிர்த்தியெனவு மெம்மவஸித்தாந்த வுண்மையிருக்தலறிந்திடுக. (காணுமறிவுநீ காட்டறிவுநா மவற்றைக், காணக்கழலுங் கழற்றி

யிலே, நாணி-நமைத்திரும்பிப்பாராதே நான்றானென்றதே,யமிழ்த்து காகம்போ ளிற்பாய்) என்ற வுரையின் பரியாலோசனையானே யதுபோதரும். (ஊன் கெட்டுயிர்கெட் டுணர்வுகெட்டென் னுள்ளமும்போய், நான்கெட்டவாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ) என்னும் பரமாசாரியர் திருவாக்கானு மதுவிளங்கும். (நான் கெட்டடென்பது) நானென்றெழுந் தற்போதமென வறிந்தடங்குக. தானலாதொன்றைத் தானெனக்கருதுங்குற்றஞ் சைவரிடஞ்சாராது. தானல்லாத பாசத்தைத் தானென்பார் உலகாயதன்முதலினோரும், தானல்லாத பதியைத் தானென்பார் அகம்பிரமவாதிகளாகிய மாயாவாதிகளுமென்பது ஸித்தமாகையால் பாசத்தையுந் தானென்னாமல்,பதியையுந் தானென்னாமல் பசுவாகிய தன்னையே தானென்றறிந்து, அங்ஙன மறிவித்த பதியினது போதத்தின்கண்ணுமறிந்தோமென்னும் போதமுமிழந்தடங்கி யொன்றுபட்டத்துவிதநிலையராய்நிற்குஞ் சைவ சித்தாந்திகள்பால் தற்போதத்தை விபரீதமாக விவகரிப்பது என்னமதியீனம்?

இதுநிற்க, தேகத்தின்கண்ணைத்திமாமிச மலமூத்திராதி யுண்ணாட்டத்தில் வெறுப்பும்,மேலே போர்த்துள்ள சர்மநாட்டத்தில் விருப்புமுயிர்க்குண்டாவ தென்னையென்று தொடங்கி "அழிவிலாததற்பதந்தனை மைந்தனே யகமுகத்தவர்சேர்வர், வழிநடப்பவர் பராமுகமாயினார் மலர்ந்தகண்ணிருந்தாலுங்,குழியில் வீழ்வர்காணிப்படி வெளிமுகங்கொண்டு காமிகளானோர், பழிதரும் பிறவிக்கடன் மூழ்குவர் பரகதியடையாரே" என்ற பாடலையுதகரித்துக்காட்டினர்.இதைப்பார்த்துழிப் பரிமேலழகர் தாமே மீண்டும் அபராவதாரஞ் செய்தனரோவென்னுமைய மிவரிடத்தி லெமக்குண்டாகின்றது. ஐயோ கலிசுபாவமே ! தோல், நரம்பு, மாமிசம், மூத்திரம், மலமென்றற் றொடக்கத்துப் பொருள்களின் சமஷ்டியாலாகிய தேகத்தை யெடுத்துக்காட்டி (இழிவிலாத தற்பதந்தனை) என்று பரநாட்டத்தைப் பிரதிபாதிக்கும் பாடலை மேற்கோளாகச் சாதிக்கவந்தது அதிசயம்! அதிசயம்!! "முகத்துக் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காளகத்துக் கண்கொண்டு பாரப்பதே யானந்தம்" என்ற மேலோர்வாக்கு மப்படியிருந்தலறியார்போலும்.இவருடைய போதரஸத்தான் மயங்கினபே ரினிவெளிநாட்டமுமுண்ணாட்டமுந் தோலெலும்பிவைகளிடத்திற்றானே கொள்ளவேண்டிவருமன்றோ?இம்மட்டே யொழியாமல்,பாதத்தின்மேற் பழியேற்றியிவ் விருமுயற்சியும் அவருடைய திரோபவாநுக்கிரகங்களெனச் சைவர்கொள்வது தாழ்வெனவும், அவ்வாறுகூறிய "ஆக்குவாய்காப்பாயழிப்பாயருடருவாய், போக்குவாயென்னைப் புகுவிப்பாய்" என்ற வசனம் பூர்வபட்சமாயிட

"இந்தச்சீவனால் வருமறுபகையெலா மிவன்செயலல்லாம, லந்தத்தேவனால் வரு
மென்ற மூடர்களதோகதி யடைவார்கள்" என்றொரு சான்றோர் கூறியுள்ளா
ரெனவுங் குலவிக்கூறினர். திரோபவமென்பது ஆன்மாக்களைக் கடவுள்
தியவழியிற் சேர்ப்பதும்,அநுக்கிரகமென்பது அவனை நல்வழியிற்சேர்
ப்பதுமென்றெந்தச் சைவ சித்தாந்த நூலிலெழுதியிருக்கக் கண்டாரோ
வறிந்திலம். "ஆக்குவாய் காப்பாய்" என்றற்றொடக்கத்து ஸ்ரீவாசகத்தி
னு மவ்வமைதியைஅவர்கண்டுபிடித்தவருமையே ! அருமை!! சிவர
ஹஸ்யம்,ஸ்காந்தமுதலிய வுண்மைநூல்களிற் புகழப்படும் பெருஞ்சீரா
ளராகிய பரமாசாரிய மூர்த்திகள் திருவாக்கை யேரிவாய்த் தாண்ட
வராயனொருவன் பாட்டொன்றின்முன் பூர்வபட்சமாக வெடுத்தாண்டு
கொண்ட வவரேழைமதியையெண்ணுந்தோறு மவரிடமெமக்கநுதாப
மே யுண்டாகின்றது. (செக்குஞ் சிவலிங்கமுமெனவறியாமல், நக்குநாயோடி
னஞ்செய்தாராகையால்.) அன்றியும், "ஒருவன் றற்காரியங்களையே யிடைவி
டாது செய்து யானென்செய்வேன்,அவர்செய்விக்கின்றார்,என்மேற் பழியில்லை"
என்றுசொல்லி நன்மைகடைப்பிடித்த லொழிந்து கெடுவதற்குச் சைவசி
த்தாந்த மிடங்கொடுத்திருப்பதாகவு மொருவியாக்கியானஞ் செய்தனர்.
இவர் (கலியாணவீடும் போயறியார், மேளசந்தடியுங் கேட்டறியார்) என்பதை
நிரூபிப்பாம். நன்மை தீமைகள் சிவனையன்றி நிகழாவென்பதுண்மை
யே ! எங்ஙனமெனின், சுத்தமொன்றையு மசுத்தமொன்றையுங் காணப்
போந்தகண் சூரியனுதவியின்றித் தானே காணுதல்கூடுமா ? கதிரொ
ளிகாட்டக் கண்காணுமுண்மையால், அக்காட்சிகளுக்குக் கதிரொளி
யே காரணமென்பது வெளிப்பட்டது. கண்ணொளியோடு கதிரொளி
கலந்திருக்கு முண்மையால். கதிரொளிகலவாதகண் தானே யொன்றை
யுங்காணாத தன்மையால். இனி, சுத்தத்தைக்கண்ட சுகமும், அசுத்தத்
தைக்கண்ட சுகமின்மையுங் கண்ணுக்கோ - கதிரொளிக்கோவெனின்,
கண்ணுக்கேயன்றிக் கதிரொளிக்கல்லாமை வெளிப்படலால் நன்மை
தீமைகளை நாடுமுயிர்கள்பானிகழும்யாவு முயிர்கட்கேயெனவும், அந்
நிகழ்ச்சி நங்கருணாசாலியையன்றி யியங்கப்பெறாதெனவும், அவ்விய
க்கம்பற்றியே யவற்றானுண்டாகுங் குணதோடங்களவர்பாற்சாராவெ
னவும் நிச்சயிக்கப்பட்டது. தீமையை யெண்ணினவன்சாத்தன். அதை
யெண்பித்தவன் சிவன். தீமையைப்புரிந்தவன் சாத்தன். அதைப்புரிவித்
தவன் சிவன். நரகையடைந்தவன் சாத்தன். அதையடைவித்தவன் சிவ
ன். இப்படியே நன்மையிடத்துங்கொள்க. (உடுப்பானும் பாலனமுண்பானு
முய்வித்தொருவர்தம்மைக், கெடுப்பானுமேதென்று கேள்விசெய்வானுங்கெடு

யடங்கச், கொடுப்பானுந் தேகியென்றேற்பானு மேற்றுக்கொடாமனின்றே,தடு
ப்பானு நீயல்லையோதில்லை யாநந்தத்தாண்டவனே) என்னுந் திருவாக்கானே
மேலுண்மைபோதரும் "இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே" என்
ற வசனத்தையுமாய்ந்தடங்குக. இவ்வுண்மை நியாயத்தால் ஸ்ரீவாசகத்
தோடு(கைவல்ய நூல்)சிவச்செயல் சிவச்செயல் விசாரவிஷயத்தின் முர
ணியதின்றென்க. முரணெல்லா மவ்விஷயத்தைப் பரிசீலிக்கத்தொடங்
கிய அவிவேக பூரணகுருவின்பாலதென்றே தீர்மானம்.

இதுமட்டோ, "பக்திக்கது சிறந்தது.ஞானத்துக்கிது சிறந்தது"
என்று சைவன் விடைபகர்ந்ததாகக் கூறினர். அது சிறந்தது என்பது
ஸ்ரீவாசகமும், இது சிறந்தது என்பது எரிவாய்த்தாண்டவராயன் பாட்
டுமென்று அவர்கருத்தாகைபா லவராசையிருந்தவாறென்னே ஆச்சரி
யம். பக்தி சைவமும், ஞானம் தமது போலிவேதாந்தமுமென்று து
ணிவுகொண்டுரைத்தது எந்த ஆதாரவுகொண்டோ அறியேம்.பக்தியும்,
ஞானமுஞ் சைவர்க்கேயுரித்தல்லது வேறெவர்க்குஞ் சொந்தமாகாவெ
னவறிக. இங்ஙனமாக, நாத்திகசிரோஷ்டராகிய விவ்வுழைதாராயர் தமக்
கே ஞானமுரித்தெனக் களவாடியது கேவலம் பரிபவத்துக்கே* யிடஞ்
செய்தது.

இங்ஙனநிற்க, துலக்கிய செப்புக்கண்ணாடியின்கண் மீண்டுங் களி
ம்புண்டாமாபோல் ஆன்மாவுக்குப் பாசவொழிவுண்டாவது கூடாதென்
றனர். அதற்கு மேல்யுத்திசொல்லச் சைவத்திலிடமுண்டாகாமையால்,
மூடபக்தி மேற்கொண்டு ஈசுவரவாக்கியமாகிய வேதமப்படிச்சொல்லு
கின்றதெனப் போக்குக்காட்டியே சைவராயுள்ளபேர் தியங்குகின்று
ரெனவுங் குறிப்பித்தனர். இவருடைய அகங்காரமெல்லா முடைந்து
போக மேலிடங்களி லிவ்விடயத்தை யுத்தியநுபவபுரஸ்ஸரமாய் விளக்
கியிருக்கின்றேமாயினு மெமது பரமகுருநாதர் திருவாக்கொன்றையு
மீண்டுப் பிரமாணமாக வுதகரிக்கின்றேம். "செம்பிரதக் குளிகையினுற்
களிம்பற்றுப்பொன்னாய்ச் செம்பொனுடன்சேருமலஞ்சிதைந்தாற்சிவ,னம்பனுட
ன் கூடுமெனிற்பொன்போலல்ல னற்குளிகைபோலவரனனுகுமலம்போக்கி, ய
ம்பொனடிக்கீழ்வைப்பனருங்களங்கமறுக்கு மக்குளிகைதானும்பொன்னாகாதா
கு, மும்பர்பிரானும்பத்தியாதிகளுக்குரிய னுயிர்தானுஞ்சுவாநுபவமொன்றினுக்கு
முரித்தே" என்றருளியபடியறிக. சுத்தமாயிருந்த பிரமந்தானே புண்டு

---

* "இல்லானே" என்பது வைநயம். "உள்ளானே" என்பது லட்சணையா
னே போதரும்.

விழுந்து, கழுதை நாய் பன்றி முதலாகக் கேடுண் டழிந்தொழிந்தொன்றுபடுதலே முத்தியென்று முக்கி முக்கி ஸமாதானந்தேடு மப்பேய்மதத்தார், அக்கேடுண்டு சுகப்பட்ட பிரம மீண்டுமெங்ஙனங் கெடாததெங்ஙனமென்பார்க்கு யாதுவிடைபகரவல்லார்? இந்தப்பொத்தலைமூட வழிதேடாத விவர்க்கே னிந்தவீண்வாய் ?

இனி யொரு விசித்திரம் பகர்ந்தனர். அதையு மீண்டு விவகரிப்பாம். என்னெனின், சீவ அறிவுக்குப் பரவறிவுணர்த்துமானால், அப்பரவறிவுக்கு வேறெந்தவறிவுணர்த்து மென்றதேயாம். இதற்கும் பதில் சொல்லத் தெரியாது சைவர் விழித்தனராம். யாமுமொரு சைவராகையா லதைக் கொஞ்சம் யோசிப்பாம்.

விஞவிடை..

அசை——சீவனுக்குணர்த்துவது சிவமானாற் சிவத்துக்குணர்த்துவது வேறியாது?

சை——இப்படி நீர் கேட்பதனு லுமது கருத்தென்னை ?

அசை——இரண்டறிவுக ளில்லையெனவும், அறிவொன்றே யுபாதியாற் சீவவறிவு பரவறிவெனப் பேர்பெற்றதெனவும், உபாதிநீக்கத்திலொன்றேயாய்விடுமெனவுங் கூறுவதே.

சை——ஒன்றுயிருந்த வறிவை யிரண்டாகக் கத்திகொண்டு துண்டித்து உபாதியில் வைத்த தெந்தவறிவு? அவ்விருதுண்டுகளு மொரோதன்மையா யிராமல் தனித்தனி வேறுவேறு தன்மை பெற்றிருத்தல் யாது ? அறியுந்தன்மைத்தொன்று மறிவிக்குந்தன்மைத்தொன்றுமாக விரண்டுளவாகையாலறியுஞ் சித்துக்கே யறிவிக்கவேண்டுமன்றி யறிவிக்குஞ் சித்துக்குமேலே யொன்று வேண்டுமென்பதெங்ஙனம் ?

அசை——இதை யுவமானமுகத்தாற்காட்டி விளக்குகின்றீரா ?
சை——அப்படியே செய்கிறேம்.
அசை——கொஞ்சந் தயைகூர்ந்து சொல்லும்.
சை——உமக்கு வித்யாப்யாஸமுண்டா ?
அசை——என்னை அவ்வளவாகத் தீர்த்துவிட்டீரா ?
சை——ஆனால் சொல்லும், உயிரெழுத்தெத்தனை ? மெய்யெழுத்தெத்தனை ?
அசை——உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டுமாம்.
சை——உயிரெழுத்துக்க ளெத்தன்மையின ? மெய்யெழுத்துக்க ளெத்தன்மையின ?

அசை——உயிரெழுத்துக்கள் தாமே யொலிப்பன. மெய்யெழுத்துக்க ளொலிப்பித்தா லொலிப்பன.

சை——மெய்யெழுத்துக்களை யொலிப்பிப்பனயாவை?

அசை——உயிரெழுத்துக்களே.

சை——அவ்வுயிரெழுத்தையு மொலிப்பிக்க வேறு எழுத்து வேண்டுமல்லவா?

அசை—யாதுக்கு? ஒலியிருந்துந் தானே யொலிக்குமாற்றல் பெறாத வொற்றொலிக்கு மாத்திரமே யுதவி வேண்டியதன்றி யங்ஙன மொலிப்பிக்குமாற்றலுடையதாகிய வது வேறொன்றினுதவியை அபேட்சியாது.

சை——இவ்வுபமானத்தா லுபமேயம் விளங்கிற்றா?

அசை——என்பிழை பொறுத்தருளும். யானுண்மை தெரிந்து கொண்டேன். என்னுடைய மூடக்கேள்வியால் "அகரமுதல வெழுத்தெல்லாம்" என்ற மேலோர் திருவாக்குமன்றோ நிந்திக்கப் படுகின்றது? அகரத்துக்கு முதலாயிருந்து, அதையு மியங்கப் பண்ணு மெழுத்து யாது என்று கேட்க விடமுண்டாகுகையால்.

சை——இப்படித் தூபிமானமொழிந்து கேட்டாலன்றோ வுண்மைவிளங்கும்? அகரம் தானேயொலிப்பதுபோல் மற்றையுயிர்களும் தாமேயொலிப்பனவும், மெய்களை யொலிப்பிப்பனவுமாய் விளங்குகையா லவ்வுயிர்யாவு மகரத்தின் பேதமென்றே யறிந்தடங்குவீர். இவற்றின் விரிவை யாம் செய்துள்ள (சித்தாந்தசேகரம்) என்னு நூலினுங் காண்பீர்.

அசை——ஆன்றோர் பிரமாணமொன்று கேட்க வெனக்காசை யுண்டாகின்றது. சொல்லுகின்றீரா?

சை——"சிவன் சிவனென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற் - சிவனருட்சித் திவனருளைச் சேருஞ் சித்திவன்றான், பவங்கெடு புத்தி முத்தி பண்ணுஞ் சித்தவற்றிற் - படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்று, னவன்றனே யறியுஞ் சித்தாதலிரு ளிரண்டு-மனைந்தாலு மொன்றாகா தநனியமா யிருக்கு, மிவன்றனும் புத்தியுஞ் சித் திவனுமோ புத்தி- யிதுவசித்தென்றிடி லவனுக் கிவனுமசித் தாமே" என்னுந் திருவாக்கை ஸதாசாரியரிடஞ் சென்று விசாரித்துணர்வீராக.

இப்படிப்பட்ட வுண்மை விசாரத்தால், பராசத்தி, மாயைகளின் பேதந்தோன்றும விரண்டுமொன்றேயெனக் குழறுபடைவேதாந்தம் பேசித்திரியு மவ்வாபாசகர் தன்மை வெட்டவெளியானதால், (உத்தமவாத தூல வாதூலம்) என்னு நூலையுங்கண்டு அவர் விசாரமித்தகைய சிறப்புடைத்தென மேலோரறியாமற் போகார். மேல், மாயையென்பதற்கு விவரணங்கூறத்தொடங்கி (வடிவிலாமாயை) என்றும், (இல்லையெனு

மாயையிவிட்டனை) என்றும் முன்னோர் சொன்னாராக முடிவுகூறினர். (வடிவில்மாயை) யென்றது அருவமென்பது போதரலால். (இல்லையெனுமாயை) என்றது மாயாதேகமாகிய வில்லமென்றறிக. தேகமானது ஆன்மா கருவிகரணாதி பரிசனங்களோடு வாழுங் கிரகமாகையாவில்லையெனு மாயையென்ற தமையும்! அமையும்!! இல்லையென்று சொல்லு மாயையெனப் பொருள்கோடலமையாதோவெனின், "இல்லாததேதது வே மாயையெனி னில்லாத, தில்லாத தேயாகு மெம்மதமே, யில்லாவொருபொருளுண் டென்ன வுரைக்குமோ வேதம், வருபொருள் வேறாக மதிப்பீர்" என்ற சித்தாந்தசேகர வசனத்தை யூகித்தறிக. இதில், (வருபொருள்வேறாக மதிப்பீர்)என்றது மாயையினது விகாரதிருஷ்டியை நோக்கிச் சொன்னபடியாம். அன்னிய சமயநூலைக் களவாடித் தம்மதாகப் பிரமிக்கப்பண்ணுவது மோர்பிழைப்பாகுமா? "இல்லையெனு மாயையிவிட்டனை நீ, பொல்லை னறியாமை பொறுத்திலையே, மல்லைபுரி பன்னிருவாகுவிலென், சொல்லைபுனையுஞ் சுடர்வேலவனே" என்று ஸ்ரீமத், அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்தருளினர். இது மாயாவேதாந்தத்துக் கிணங்காமையை விளக்குதும். (பொல்லைனறியாமை) என்று ஆன்மாவினது சகசத்தன்மை அறியாமையோடு கூடியதென்பதையும், (மாயையிவிட்டனை நீ) என்று அவ்வறியாமை பெயர்ந்து அறிவுசிறிதுவிளங்க மாயைத் தொடக்கிற்படச்செய்தாயென்பதையும் விளங்க வுரைத்தனர். மாயாதுவந்தமுண்டானவனந்தரம் அறிவுசிறிது விளங்கப்பெற்றுப் பதியினது ஆணைவடிவமாயுள்ள வேதசிவாகமங்களாகிய கட்டளையையேற்று, அவற்றுள் விதிக்கப்பட்டவாறு சிவாராதனம்புரிந்து ஆன்மா உஜ்ஜீவனத்தைப் பெறுமென்னுஞ் சைவமுடிவையேயன்றோ (மல்லைபுரிபன்னிருவாகுவிலென், சொல்லைபுனையுஞ் சுடர்வேலவனே) என்றுபசங்காரத்தான் மேலுபக்கிரமத்திற்குப் பரிவஸானமுண்டாக வுரைத்தருளினர்? இந்தவுண்மையை யறியாமல் தமக்காதாரமாக கூறி திருவாக்கை யெடுத்துக்கொண்டது பெருந்தாழ்வு! பெருந்தாழ்வு!! அவருடைய மதத்தில், பிரமந்தானே ஸத்வரஜஸ்தமஸுகளென்னு மூலப்பிரகிருதியிற் றோய்ந்து ஈசுவரத்திரயங்களாயிற் றெனவும், கூடஸ்தன்றானே நாநாகாரமாகிய வவித்தையிற்றோய்ந்து சீவர்களாயினனெனவுங் கூறுமுண்மையையே யறிந்திலர்? பிரமத்துக்கும் பந்தமுமாயாநிற்குமவர்சித்தாந்தத்தோடு (மாயையிவிட்டனை நீ) என்று சிவனாகிய தனக்கே மாயாதுவந்தமுண்டென்பதைவிளக்கப்போந்த வெம்பெருமானார் திருவாக்குக்கு ஸம்பந்தமுண்டாவதெப்படி? உபாதியுபாதியென்று கூவி யுபாதியிற்பட்டுழ

னு மவர்கோளை நிருபாதிசமாகிய சிவாகமவசித்தாந்த ஸ்தாபகர்களாகிய
வெம்பெருமக்களங்கிகரியார்! அங்கிகரியார்!! இங்ஙனமாக, (உருவன்ற
ருவன்றுளதன்றிலதன்று) என்றற்றொடக்கத்து வாக்கியங்களுந் தமக்கா
தாரமாக வப்போலி வேதாந்தியார் பலவிடங்களிற்கொண்டு மகிழ்ந்தி
ருக்கின்றனர்.* இவற்றினுண்மைகளை (உத்தமவாத தூலவாதாலம்) என்னு
ம் பிரபந்தத்திற் செவ்வனேயெடுத்துச் சிங்காரித்திருக்கின்றோமாகை
யா லாண்டுக்கண்டுணர்க. (ஆறுறையுகீத் ததன்மேனிலையைப், பேறுவடி
யேன் பெறுமாறுளதோ) என்னுந் திருவாக்கைச் சிந்தித்தலொன்றே யெ
ம்மனோர் சித்தாந்தவுண்மையைக் காட்டும்! காட்டும்!! முப்பத்தாறு
தத்துவத்தைப் பிரதிபாதிப்பது எந்தமாயாவாதநூலோ அறியேம்.
(ஆறாறு தத்தவத்தின் மீதமகிழ்ந்திருக்கும் விண்ணவரார்)எனவும்,(ஆறாறுதத்
துவமு மானவமும் வல்வினையு, நீறாகமுத்திநிலை நிற்போர்க்குப்,பெறுகப்-பார்வி
ரித்த நூர்லெல்லாம் பார்த்தறியச்சித்தியிலே, யோர்விருத்தப் பாதிபோதும்) எ
னவும்போந்த சைவசூளாமணிக ளருள்வாக்கியங்களைச் சிந்தித்தவழி யவ்
வுண்மை விளங்கும்! விளங்கும்!! சகசிவபரங்கள் மூன்றனுள், சக
மொன்றேயுள்பொருளும், ஏனையவிரண்டுமில்பொருள்களுமாகக் கூறு
மூலகாயதனுக்கு மூத்தவனையுதித்துப் பரமொன்றேயுள்பொருளும், ஏ
னையவிரண்டுமில்பொருள்களுமாகக்கொண்டுவாழு நாத்திகசிரோமணி
யாகிய மாயாவாதியை மதித்து, அவனுக்கடிமைபூண்டொழுகு மவ்வி
னுவிடைப் பிரபந்தக்காரர் ஏனோமதிமயங்கிச் சுத்தாத்வைத சைவசி
த்தாந்த பிரவர்த்தகமணிகளாகிய ஆத்திகச்செல்வர் நூல்களிலெல்லாந்
தலையிட்டுக்கொண்டு தமது ஆபாசத்தைக் கொட்டுகின்றனர்? சைவசித்
தாந்தத்துள் பூர்வபட்சமாகவொதுக்கப்பட்ட புறப்புறச்சமயம் ஆறும்,
புறச்சமயம் ஆறும், அகப்புறச்சமயம் ஆறும், அகச்சமயம் ஆறும் ஆ
கிய விருபத்துநான்கு சமயங்களும் பேதம், அபேதம், பேதாபேதமெ
ன்னும் பகுதிகளாக விளங்கும். இவற்றுட் புறச்சமயமாறனு ளொன்
றாகி அபேதவாதத்திலடங்கு மாயாவேதாந்தத்தையே ஸ்ரீமத், அருணை
கிரியார் கொண்டுவாழ்ந்தனரென்பது என்னபாவம்! அப்படி மனத்தா
லினைப்பினு நிரையத்துன்பம் பற்றியலைக்கும்! அலைக்கும்!!

இனிச் சிற்றுயிருணர்வளவோ, உடலளவோவென்றுபக்கிரமித்து
(உணர்வளவெனி னுடலளவுநானெனற்கேதென்னை) யெனவும், (உடலளவெ
னின், அவஸ்தாத்திரியங்கண்டு மறைவதெங்கே) யெனவுந் தாம் பிரசினித்த
தற்குச் சைவர்நிலையடைந்து, அங்ஙனம்வினவிய தம்மைப்பார்த்து

(ஒன்றுந் தோன்றாதிருக்கச்செய்தனே, சந்தேகந் தெளிந்துகொள்பவன்போற் காட்டிக் கொல்லவந்த எமனானாய்) என்று சொல்லி யேங்கினாராக விறுமாந்துரைத்தனர். ஆன்மாவே பரமென்னு நம்பிக்கையும், அதற்குவேறாகப் பரமான்மா வுண்டென்னுமுண்மைப்போதத்தை யறியப்போதாத மூடமும், அதை விளக்கிக்காட்டுவார்சொல்லி லிணங்காது பிடித்தபிடி சாதிக்கு மூர்க்கமுந் தமக்கே சொந்தமாகவுடைய வக்கபோதிராயர்தன்மை சாலச்சிரிப்பாம். மேற்கூறிய வுயிரிலக்கணமிரண்டனு மொன்றேயன்றோ சைவர் சித்தாந்தமாகவேண்டும்? இரண்டையுஞ் சைவர்கோளாகக்கொண்டு மறுக்கத்தொடங்கியதென்னே? உணர்வென்றே யாமுயிரைக் கூறுகையால், உடலளவு நானெனற்கேதென்னையென்று எம்மை வினவியது அறியாமையாம். உடலளவு நானென்று யாம்சொல்லும் வழக்கின்மையால். உடல் நானென்று காலத்திரயத்துஞ் சொல்லேமாகையால், அவஸ்தாத்திரயங்கண்டு மறைவதெங்கேயென்று கேட்டதும் மூடத்தனமாம். இந்த வியவஸ்தையானது அவர் பிடரியை யிறுகப்பிடித்துவிட்டமையால் அவரே எமன்கைவசப்பட்டவராயினர். (அவஸ்தாத்திரியம்) என்றெழுதக்கற்ற வவ்வாபாசபண்டிதர் "எங்குந்தான் வ்யாபியாய்நின்றனனுமிவ்வான்மாவென்னிற், றங்கிடுமவத்தை போக்கு வரவுகள் சாற்றல்வேண்டும், பங்கமார்புலனென்றொன்றாய்ப் பார்த்திடல் பகரவேண்டு, மிங்கெலாமிறந்தானிற்ப தெங்ஙன மியம்பல்வேண்டும்." என்னுந் திருவாக்கைச் சிந்தித்துத் தமது வசித்தாந்த நிலையுமாறு (அவஸ்தாத்திரய லட்சணம்) கொஞ்சங்கூறி மகிழ்வாராக.

இவருடைய கல்விவளமும், போதகுகர்ச்சியும், புண்ணியத் தெளிவும், புத்திநுட்பமு மிதுகாறுநடந்த விசாரத்தால் விவேகிகளறிவார்களாகையா லிவரைப்பற்றி யிங்கே யாமதிகமாக வெடுத்துச்சொல்வதவசியமன்று. இப்படிப்பட்ட புத்தியான் சைவபாஷ்யகாரரைப் பிரஸ்தாபித்து (தத்வமஸியென்னும் வாக்கியத்துக்குத் துவிதஞ்சாதிக்கப் பாஷியஞ்செய்தது என்ன அதிசயம். என்ன அதிசயம்.) என்று பொங்கிவழிந்தனர். துவைதபாஷ்யஞ்செய்தவர் ஆநந்ததீர்த்தாசாரிய ரென்பதறியார்! அறியார்!! அதுதானன்றோ மத்துவபாஷ்யமென்று வழங்கப்படுவது? துவைதமினத்தெனவறியாமல் விசிஷ்டாத்வைத பாஷ்யமாகிய ஸ்ரீசைவபாஷ்யத்தை நிந்திக்கத்தலைப்பட்ட வப்பசுபிராயரினியாவது கூர்மபுராணத்தாற் சிரஞ்சீவித்வமுடையராகப் பிரதிபாதிக்கப்படுஞ் சுவேதமுனிவரது திருவருள்பெற்றுச் சைவபாஷ்யஞ்செய்தருளிய ஸ்ரீநீலகண்ட சிவாசாரிய

சுவாமிகள் திருவடிகளைச் சிந்தித்துத் தாமிதுகாறுஞ்செய்துவந்த சிவநிந்தைகளுக்குப் பரிகாரந்தேடிச் சிவனடியார் குழுவிற்சேர்ந்து சிவாநந்தவாழ்வெய்திச்சுகிக்குமாறு அருட்பெருஞ் செல்வமாகிய நங்குமாரக்கடவுளைவாழ்த்தாநிற்பாம். சுபம்! சுபம்!!

திருத்தணிகைப்பதிகம்.

(அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.)

உலகமெலாந் தொழுந்தணிகை யுயர்வரையூ டெந்நாளு முவந்துதேவர்
திலகமென வமர்ந்தமணிக் குன்றேபன் னிருகரத்துத் தேவமாயைக்
கலகமொழித் தருள்வானே கற்பகமே யெனவாழ்த்திக் கருதுமென்னு
டிலகவருண் ஞானமணி விளக்கேற்றி வைப்பதென்றோ வெம்பிரானே. (௧.)

அன்பர்மனங் கலந்தினிக்கு மாரமுதே யரசேயுன் னன்பிலாவென்
றுன்பகலுந் தரமோவென் றலையிடுந் தமியேனைத் துரிசுமாற்றி
யின்பநிலை மேவுமிடங் காட்டியருள் பழுத்தொழுகு மெந்தையேநின்
முன்புவர நாணுகின்றேன் முதுமறைசேர் தணிகைவளர் முருகவேளே. (௨.)

பொன்மருவு மிடத்தாலுந் தியிற்போது போதனுளப் போதநீங்க
வன்மருவு மருஞ்சிறையில் வைத்துவிடுத் தருண்ஞான வைப்பேநின்னை
யின்மருவு முளக்குகையில் வைத்துவிடுத் திலன்கண்டா யேழையேனைக்
கன்மருவு நெஞ்சனெனக் கைவிடே றிருத்தணிகைக் கடவுளானே. (௩.)

மஞ்சிவரு மதில்புடைசூழ் திருத்தணிகை வளர்ஞான மணியேநாளு
மஞ்சுகின்றே னின்செயலை யன்றமரர் வேண்டவிட மயின்றதாதை
யஞ்சிடவே நீதகப்பன் சாமியென வுபதேச மறைந்தாயன்றே
நெஞ்சுடைத் தாய்வலிதே நீதியோ முருகாநின் னீர்மைதானே. (௪.)

ஆரணங்க டேடியரி யயன்றேடி யயர்த்தின்னு மறிதற்காணாப்
பூரணனார் மடித்தலத்திற் போந்துவிளை யாடியிடம் போந்ததெய்வ
நாரணியென் கண்மணியே வாவாவென் றழைக்கநயந் தோடியாடுங்
காரணனே தணிகையடைந் தேன்விளையாட் டயரவுனைக் கருதித்தானே. (௫.)

காழியிலே சம்பந்தப் பிள்ளையெனத் தோன்றியுமை கருதியூட்டு
மேழிசையின் றமிழ்ஞானத் திருமுலைப்பா லுண்டரினை யேற்கின்றேனுக்
கூழிமுதல் வன்மகிழுஞ் சிறுவாவோர் திவலையதி லுதவுவாயோ
வாழியுயர் தணிகையமர்த் தருண்மணியே மெய்யருளை வழங்குவாயே. (௬.)

நக்கீர ரருணகிரி நாதர்முத லடியார்க ளாடியென்றுஞ்
சொக்கின்ற வுனைப்பாடி னாரன்றே யாறுமுகத் தோன்றவென்னுட்
புக்கிந்து நல்லருளைப் புண்ணியவா றெழுத்தோதும் பொருவின்ஞான
மிக்கேற வருள்கண்டாய் தணிகையிடங் கொண்டருளும் வேதவாழ்வே. (௭.)

அருள்பழுத்த பழச்சுவையே யெனவோலிட் டழைத்தழுமெய் யன்பர்போதம்
பொருளெனக்கண் டன்புவழிப் பொங்குகின்றேன் மெய்ஞ்ஞான போதர்சூழ்ந்து
தெருளுறநின் றேத்துமுயர் திருத்தணிகை மலைமேவுந் தேவேயென்னை
யிருளில்விடா தேன்றுகொளற் கெவர்காணின் றனைத்தடுப்பா ரெம்பிரானே. ( )

பொய்ப்போத விருளிரியப் புக்கெனுடல் பொருளாவி பொருந்தவாங்கி
மெய்ப்போதங் காட்டிமுடி மேனீட்டி யடிநாளு மேவச்சூட்டி
யெய்ப்பேது மறவோட்டி யின்பநிலை கூட்டியரு ளெந்தாயுன்னைக்
கைப்போது கொண்டுதிருத் தணிகையடைந் தேனின்று காணுமாறே. (௯.)

பாசநிலை தெரியாது பசுநிலையிற் பிரியாது பதியேதாமாப்
பேசுமுழு மூடர்சிவ நேசரென வீசிவலை பிடிப்பாந்தே
காசுபெறு மன்னுயிரை யாபாசப் படுகுழியிற் கவிழ்க்கநாளுந்
தேசுபழுத் தருடணிகை மணிக்குன்றே மஞ்ஞையிவர் தேவதேவே. (௰.)

வாழ்த்து.

வாழி சிவனுமையோ டவர்மைந்தர்கள்
வாழி சிவசமய மதில்வாழ்பவர்
வாழி சிவமறையோ ரவர்மாட்சிகள்
வாழி சிவனடை யாளங்கள்வாழியே.

முற்றிற்று.

ஸ்ரீ ஸம்பந்த தீர்த்த சரணார விந்தார்ப்பண மஸ்து.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசாம்பாயபரப்பிரம்ஹணேநம:.

சித்தாந்தரத்நாகரம்.

உத்தமவாததூலவாதூலம்.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

குளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS:

PRINTED BY T. GOVINDACHARIAR,

SIVANANDA NILAYUM PRESS,

No, 28, AVADANUM PAPIER STREET, CHOOLAY.

30th November 1881.

உ

சிவமயம்.

உத்தமவாதநூலவாதூலம்.

அதிகாரவட்டவணை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஸம்பந்ததீர்த்தசரணாயநம:

சித்தாந்தரத்நாகரம்.

உத்தமவாதநூலவாதூலம்.

காப்பு.

உத்தமவா தம்புகனூ லோடுமே யுத்தமர்தம்
பத்திமையுங் கூடிப் பலிக்குமே—சித்திமுத்தி
யெல்லாஞ்சி வோகநிலை யெய்துமே யிப்போதே
பொல்லா ரிணைமலரைப் போற்று. (க)

சண்பையர்கோன் வாகீசர் தம்பிரான் றோழர்சிவ
னுண்மைதரும் வாதவூ ருத்தமரும்—அண்மைசெறி
சந்தான மெய்க்குரவர் சாரவே பாடியத்தைத்
தந்தாரு மெங்க டலை. (உ)

பாயிரம்.

சீர்மல்கு காழிவளர் செம்மலார் பொன்னருளுக்
கார்வம் பெருகிடவே யன்புசெயு—மோர்சைவர்
தம்மை யடைந்தொருவன் றர்க்கத்தால் வெல்லுவனுஞ்
சம்மதமே தென்றான் றகைந்து. (க)

இவ்வுரைகேட் டார்காணி யேதுகொலோ நின்சமயஞ்
செவ்விதினிச் சொன்னானே செப்புவாய்—தெவ்வுரையா
யென்றபொழு தென்னிற் பிறிதில்லை யான்பிரம
மென்மதம்வே தாந்தமென்று னேய்ந்து. (உ)

அம்மொழியாற் புன்னகையுற் றானு னுனக்கேது நா
லெம்முனுரை யென்றானை யெள்ளியே—சம்மதமாம்

உத்தமவா தம்புகனா லென்று னுரையென்று
ருத்திகொளச் சொன்னு னுவந்து. (௩)

இந்தநூற் காசிரிய ரெவ்விடத்தா ரேதுமுதல்
வந்தநூல் சொல்ல வழக்கென்று—ரிந்தநூல்
தானுகு மேட்டிற் றனைக்கண்ட தாதலினு
லேண்முதனா லென்று னிசைந்து. (௪)

அன்னியவேட் டைப்பழிப்பை யாதலினு லுன்னோட்டை
நன்னிதியாக் கொண்டிடுவ நாடியே—சொன்னமுறை
நன்றுனுற் சற்றே நவில்கண்டா யென்றிடலு
நின்றோதி னுன்முன்னே நேர்ந்து. (௫)

முறையேயா வுங்கேட்டு முன்னிற்போய் நீதான்
முறையேயெஞ் சைவமுதன் முற்றும்—அறைகூவி
யெல்லா மதமுமழிந் தேகச்செய் தேனென்ற
சொல்லேது காணென்றார் சூழ்ந்து. (௬)

சைவசித்தாந் தப்பெருநா ளுன்பார்த்த துண்டோநீ
சைவனெவ னோடு சயம்பெற்றாய்—சைவரவைக்
கண்ணே யடைவாயோ கண்கலங்கா தந்தோநின்
கண்ணே யிரங்குவம்யாங் காண். (௭)

நின்கூற் றிரிய நிகமாக மப்படியே
யென்கூற் றிசைக்கின்றே னேற்றிடா—யென்கூற்றின்
மேலில்லை யென்றெழுவாய் மேல்வருமே கூற்றுன்பால்
சீலமிது வென்றார் செறிந்து. (௮)

கூற்றுனக்குத் தெய்வங் குடிகொண்ட தோர்ந்திலையக்
கூற்றுக்குக் கூற்றெங்கள் கோமான்காண்—கூற்றெங்கள்
குற்றேவல் செய்திடவே கும்பிட் டிறைஞ்சிநிற்கு
மெற்றோமேல் கூற்றென்றா ரேய்ந்து. (௯)

உத்தமவா தந்தன்னை யோட்டெடுக்கச் செய்குவிரோ
வுத்தமமா னம்போத மொப்புண்டோ—வுத்தமமே
யாகுங் கருணையினு லாட்கொள்ள வந்தவனொன்
றாகிப்பே னென்று னுவந்து. (௰)

என்றலுமன் னோனை யிருவென் றமர்த்தியரு
கொன்று மதினு ருவந்தேத்த—நன்றிதுவென்
றங்கே யெடுத்தநுவா தஞ்செய் தகற்றினரால்
தீங்காரு மந்நா றெற. (௰௧)

நூல்.

(சிறப்புப்பாயிரஞ் சேர்ந்தொழிந்தது.)

சத்த னுடன்சத்தி சார்ந்ததனு லானந்த
வத்திமுகன் றன்மை யறைந்திடுதல்—சத்தியமே
யாயி னுனக்கென்று மாபாசப் பெட்டகமே
பேயனே வாழ்த்திலையேற் பின். (௧)

அறிவின் ஸ்புரிப்பதுவே யாக மதங்க
ளறிவிலா தென்றே வறைந்தா—யறிவா
மதுவேன் ஸ்புரித்த தழித்தா யறிவை
மதியாய்கன் மத்தான் மதம். (௨)

நின்மதமுங் கன்மத்தா னோர்ந்த தறியவிலாத்
தன்மதியே சொல்விடாய் சுத்தவறி—வென்ன
வறியாமை துக்கத் தலமருமென் றோதல்
வெறியோகே ளாயுன் விதி. (௩)

நானென் றிடமில்லை னுன்கும் பிடலெங்கே
தானென் றுரைக்குந் தாயிலா—யூனென்றி
யென்றே புலம்ப லெவர்கேட்க வேறின்றேல்
பின்னோர் பொருளுண்டாய்ப் பேசு. (௪)

ஒன்று பலவானு லொன்றுமோ வொன்றென்ன
லன்றி யவையொன்று மாகுமோ—வொன்றென்ன
லொன்றே பலவாகா தொன்றுகா வப்பலவு
மொன்றுபல வாதலறிந் தோது. (௫)

ஒன்றே யிரண்டா யுடைந்து குருசீட
ரொன்றே யுணர்த்தியுமேற் றிட்டுமே—நின்றவகை
சொல்லியவர் நின்குருவு நீயுமெனச் சொன்னுயே
சில்விமதி யாய்மாறென் செப்பு. (௬)

ஒருபொருளே தோருயிரே தோறுவதென் மற்றை
யொருவர்முறை யேகோ னென்றற்—றொருபொருளின்
வேறோ வவரின்றே லென்னே விவிதமுறல்
கூறு தடக்குதியின் கோள். (௭)

கற்றவர்கல் லாராக் கலங்கல் பிரமத்தக்
குற்றுரைத்தாய் பேதையே யுண்மைதனைக்—கற்றுணரா

தென்னே பிதற்றுகின்று யென்றும் பணிசெய்வோ
முன்னோர் பலர்க்கு முணேந்து. (௮)

ஒன்றே ஸமஸ்தமுமென் றோதும் பெரியோர்க
ணன்றே யுரைத்திடுவர் நாடியே—நின்றே
கலந்தா டுயிருலகிற் காணுபதி நாட்டத்
துலந்தாய்கா ணுயுண்மை யே. (௯)

ஞான மெனுஞ்சொல்லை நாடுகின்றாய் சொந்தமதாய்
ஞானமிலா வஞ்ஞான நாதனே—ஞானம்
சரியை முதன்மூன்றுந் தாண்டியன்றோ நிற்கேன்
பெரியர்சொலு மேதக்க பேச்சு. (௰)

எம்மதத்தி னெருு மிசைப்பரோ ஞானியெனத்
தம்மையவர் போலன்றோ தம்மறியாக்—கைம்மைசெறி
மூட மதத்தின் முடங்கிக் கிடந்துழலும்
பாடன்றோ நீசொல்லும் பண்பு. (௰௧)

ஆத்தி மிகவைத்தா னன்றடிமை கொண்டகுரு
ஏத்த வெனக்கூறு மேழையே—ஆத்தியுளோ
ரெம்மதத்து முண்டென்னே வேற்றந்தா னின்னுரையில்
பொய்ம்மதத்தாய் சிசின் பொங்கு. (௰௨)

உத்தமத்தை வாதமென லொக்குமோ கற்றறியாப்
பித்தவுனக் காரிதனைப் பேசினர்—முற்று
மதமர் தமக்கதிக மாமென் றறிந்தே
மதியிலா யென்னேநின் மாண்பு. (௰௩)

பேதையே நின்றனக்குப் பேதங் கழற்றவரும்
போதகுரு சொன்ன புதுமையிதோ—மாதவஞ்சேர்
நல்லார்பொல் லாரோடு நாய்போல் விழுந்தாற்றி
மல்லாடி நிற்ப மதத்து. (௰௪)

நிவசுவமா யாபாச நல்கிடுமே நின்று
லவமேவக் கூறி யழுநூல்—தவமேது
மில்லா யநுபவநூ லென்று யிழவுநூ
லல்லான்மற் றில்லை யறி. (௰௫)

நின்னேட்டிற் கண்டதனுற் றன்னெப்பி லில்லையெனப்
பின்னேட்டிற் பேதம் பிரித்தனையே—தன்னேட்டி
லன்னியமா வேட்டி லமர்ந்த பரிபாஷை
யுன்னுவையின் கென்னே வுரை. (௰௬)

அன்னியரு நீயன்றி யாவதெவ னின்மதத்தி
லன்னியவேட் டைக்கட்டிக் கொண்டலைவா—யன்னியனை
வைதா யறியாமல் வையப்பட் டாய்நீயே
செய்தாயென் னோவீண் செயல். (௰எ)

வத்துவின்சித் தாந்த வகைதெரியாத் தன்மதநீ
கத்துமா யாவாதக் கட்டென்றார்—வத்துநிலை
யாய்ந்து பருகி யநுபவத்தி னின்றுபவ
மாய்ந்தபெரி யோருண் மதித்து. (௰அ)

வேதாந்த சித்தாந்த வேற்றுமையின் றாதலினால்
வேதாந்த மேயுண்மை மேவிடுமால்—வேதாந்தங்
கண்டறியாய் சித்தாந்தக் கண்பெற்ற பேர்க்கன்றோ
வுண்டெனுநன் முத்திமறை யோர். (௰௯)

சிவோக மெனல்சைவ சித்தாந்தர்க் கேயாஞ்
சிவோகமெனச் செப்பினாய் சீசீ—சிவோகமதைப்
பாவிக்க வேதம் பகருங் கருடோகம்
பாவிக்கச் சொன்ன படி. (௨௰)

பசுபதிபா சத்தின் பகுப்பென்றோ கொண்டா
யிசையுமோ நின்மதத்தி லென்றும்—பசையறுதுர்ப்
புத்தியினாய் நாளும் புகல்வர் பரிபாஷை
சத்தியமாய்ச் சைவரவர் தாம். (௨௧)

பொய்யென்று முன்னே புகன்றவற்றை மெய்யென்று
பைய வுரைத்துப்பின் பாரறிய—மெய்யேநா
னென்றாற் பரியாச மேனுண்டா காதையோ
நன்றாம்வே தாந்த நக. (௨௨)

பொய்யேமெய் யாகுங்காற் பொய்யனா நீயுமுனை
மெய்யென்னக் கூறலிவண் மேவலால்—பொய்யுரையே
பேசுவதா லன்றோ பெரியோர் புகன்றிடுவா
ரேசிமா யாவாதி யென்று. (௨௩)

ஞாயமய நின்மதமா நாடினா யஞ்ஞாயந்
தோயுமத மென்னத் தொகுப்பரோ—ஞாயமயஞ்
சைவ மெனக்கொண்டே சார்ந்தென்று ஞேயத்தி
லுய்வகைதேர்ந் துற்றபெரி யோர். (௨௪)

பண்டு வியாதன் பகர்வேத சூத்திரத்தைக்
கண்டறியாய் சீகண்டர் கண்டுரைத்தா—ரண்டர்தொழும்

பாடியமா வன்னதனைப் பாராதே நூவலைவாய்
கேடிரியுஞ் சார்ந்ததனைக் கேள். (உரு)

தேவமிர்தை யல்லவெனச் செப்பினய் நின்னூலைத்
தேவமிக்தை யிற்பழுத்த தீயோனே—தேவமிர்தை
யல்லவென்று நீயோ வறைவாய் பலபேருஞ்
சொல்லுவர்கா ணிப்படியே சோர்ந்து. (உசு)

அன்னிய மதத்துண்மை யாய்ந்துதெளிந் தார்போன்று
பன்னுதியே தோடம் பலவாக—வின்னுமுணக்
கேனோநற் பாகம்வா வில்லை மலவுறைப்பிங்
காணுலென் செய்வா யடர்ந்து. (உஎ)

சமதமங்க ளொன்ஞான்றுஞ் சாராது வைகுந்
திமிரம்விடாப் புல்லரோ சேர்வ—ரமையவுன்ற
னூத்தைவா யாற்பொங்கு முத்தமவா தத்தையினி
யேத்துவரார் தூற்ருதெரிந்து. (உஅ)

இனத்தை யினம்போற்று மென்னுமா போலுன்
னினத்தவரா யேத்தவுனக் கேற்கு—மினத்தவரா
மன்னோரொஞ் சைவ வடிகண்முன் னென்னுவர்
சொன்னேனுற் போதந் தொடர்ந்து. (உகூ)

(புலமைவிளக்கம் போந்துரைசெய்தது.)

மதங்களெலா மாய்த்திடவே மாவிரதம்பூண்டு
மதங்கொண்ட நின்னையே மாய்ப்பேஞ்—சிதம்பரத்தி
லையன் திருவருளா லண்மையுண்டேல் வாவாநின்
பொய்யுரைக்க முன்னே புகுந்து. (க)

புலமையிலா நீயோ புலமைத் தலைமை
யலகைபோன் றென்முன் னறைவாய்—நிலமையிலாக்
கைம்மையாய் தன்னை யறிதல் கருதென்ருய்
மெய்ம்மையொன்றுங் காணுது மேல். (உ)

நின்னை யறித றகுமா மறைப்படியே
யுன்னை யழைத்தவரா ரோதவே—தன்னையுயர்
*தேகமா யிந்தியமாய்த் தேர்வார் பிராணனுமா
யூகமிலார் வேதத்தை யோர்ந்து. (ங)

* ஈண்டுக் காணமே பொருளென்பாரையுங் கூட்டிக்கொள்க.

நீயோ மலமறைப்பி னின்றறியு மான்மாவை
வாயோவா தென்றும் வதறியே—பேய்போலக்
கத்துவைமே லொன்றில்லாக் காரணமென் றென்னேநின்
பித்துரையிங் கார்கொள்வார் பேசு. (௪)

ஆன்மாவை யுண்டென்றே யங்கீ கரித்தோமா
லான்மா மலத்தினதென் றாய்ந்திட்டே—யான்மாவைப்
பற்று மலங்கழியப் பார்த்தருளும் பண்ணவனைப்
பற்றுவங்காண் மாய்ந்திடவெம் பற்று. (௫)

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கென்றே—சொற்றார்க்
கெழுமன்பி லாயுன்ற னேழைமையைச் சுட்டே
கழுவுவா யுள்ள களம். (௬)

ஏனோ விபரீத முற்றெழுவா யெந்துணையா
மானேறும் பாகனார்க் கன்பற்றே—யூனேறுஞ்
சொன்னேன் சுருதிபல சொன்முறைதேர்ந் துன்றோடு
பன்னேன்வீண் பாடம் படித்து. (௭)

பாசத்தைக் கண்டும் பசுவையே தான்கண்டும்
பேசுவதை யாங்கொள்ளோம் பேதையே—ஈசன்
உடையா னெனக்கண் டுருகிப் பணிவோம்
கடையனைப்போற் கண்கலங்கா மல். (௮)

எல்லா மவனடிமை யென்றிசைத்து மெல்லாமும்
வல்லா னவனுடைமை வந்தித்து—மெல்லா
மவன்செயலே யென்றுரைத்து மான்றோ ரனைத்தார்
சிவன்செயலென் றெல்லாந் தெளி. (௯)

தன்னைச் சிவமென்னத் தானறித றீதாமால்
தன்னைச் சிவனடிமை தானென்றே—தன்னை
யறிவா ரறிவ ரறியாதாய் வேண்டாம்
பிறிதுரைகாட் டாதடக்குன் பிச்சு. (௰)

முறையேனா னங்கண் முடித்திடுவோ மூன்று
விறையேனும் புத்தியிலா யேற்பாய்—சிறைமேவும்
பாசமா ஞானம் பகரும் பசுஞான
மீசஞா னத்தோ டிசைந்து. (௰௧)

தம்மை யுணர்ந்து தமையுடையான் றன்னுணர்வா
ரெம்மை யுடைமை யெமையிகழார்—செம்மையிலு

ரென்றவுரை கேளா விருகாற் பசுவேநீ
வென்றனையோ வெம்மவரை மேல். (௰௨)

ஆட்சேப மில்லா மதமில்லை யென்றறைந்தா
யாட்சேபஞ் செய்திடுவா ரன்னியரென்—றாட்சேபங்
கொண்டா யறிந்திலையுன் கோதார் சமயத்தைக்
கண்டார் நகைத்திடுவர் காண். (௰௩)

தன்னை மலமறைத்த ரூனன்றோ பந்தமது
தன்னை யருள்கொண்டு தானொழித்தல்—பின்னையுயர்
முத்தி யிவையறியாய் முன்பின்னிங் கேன்முரணுஞ்
சத்தியிலாய் கண்டிடவே தான். (௰௪)

உன்சித்தாந் தப்படியே யொன்றே பொருளானுன்
மன்னுவதென் பந்தமுத்தி வாய்த்திலதே—னின்னுரையிங்
காருக் கெதன்பொருட்டா வாய்ந்துரைசெய் வாயந்தோ
பாருக்குண் ஞானியெனப் பாழ்த்து. (௰௫)

உம்மைவிட வேறில்லை யுத்தமர்கா ளென்றுரைத்தாங்
கெம்மையிக ழாதுணர்மி னென்றதெவன்—செம்மைகொளு
மெல்லா மவரானு லேனிகழ்வா ருன்னையவர்
பல்லாராய் நின்றதென்ன பண்பு. (௰௬)

விடயந் தெரிந்தவர்போன் மெல்லசில கற்று
விடையளிக்க மாட்டாது வெம்பி—விடையளிக்க
வல்லே னெனச்சொல் வளர்த்தாய் பயனொன்றுஞ்
செல்லாதெம் மாட்டுன் செருக்கு. (௰௭)

பதிசோ தனையிற் பறக்குமே நின்பாழ்
மதிமோன ஞானத்தின் மாண்பே—துதிமேவுஞ்
சைவநிலை யேனோ சரிந்திடுநின் னற்பநிலை
கைவருமேல் வந்தென்முன் காட்டு. (௰௮)

பிரமமெங்கே ஞானமாம் பீத்தெங்கே நின்சொல்
லுரமெங்கே வந்திவணெற் கோதாய்—பிரமத்
தொருமுதலா நீசெத் தொழியுங்கா லன்றித்
தெருமர் சுழுத்தியிலுஞ் செப்பு. (௰௯)

ஏனோ பிரம மிறக்கும் பிறந்தழலு
மேனோ வவத்தைபல வெய்தியிடு—மேனோதான்
வீண்சாலம் பேசியே வெம்பினாய் மேலுண்மை
காணாதுன் வீண்கடையைக் கட்டு. (௨௰)

மதிதோன்றி யேமாயு மாணிடத்தைக் கேட்டாய்
மதியாவ தேதெதற்கு மாண்ட—மதியில்லாய்
நீயன்றி யில்லையென்றாய் நேடுவதென் பின்மதியைப்
பேயுளாயாய் போயிற்றன் பேச்சு. (உக)

பேதமபேதமுடன் பேதாபே தங்கூறும்
வாதமல வெங்கள் வளர்சைவம்—பேதையே
"அத்துவித மாத லருமறைக ளொன்றென்று
தத்துவித மென்றறையு மாங்கு." (உஉ)

சச்சிதா நந்தமதேன் சாரும் பலவுடலைச்
சச்சிதா நந்தமெனிற் சார்ந்திடுமோ—பிச்சுடையாய்
துக்கஞ் சுகமிரண்டுந் தொந்தனையிற் பட்டுழலு
மிக்கபசு வென்றறிவாய் மேல். (உங)

தானே பொருளானாற் றன்னுண்மை யென்கெடுநீ
யேனோ பெருந்துக்க மெய்துவாய்—தானேன்
நழுவுங்கண் டாய்வேறு நாடவய லுண்டோ
பழுதுரைத்தாய் நேரும் பவம். (உச)

சீவே சனையறிதல் சிவனே யாயிடினுஞ்
சிவன்று ணையறியான் சேர்தன்றி—சேவேறி
பாத மறியாப் பசுவே யறிவிப்பான்
மாதுமையாள் பாகன் மகிழ்ந்து. (உரு)

உபாதியல வீச னுடலருளா மேனி
யுபாதிமல மாயையுனக் கொன்று—முபாதி
கழிப்பா னவன்மோக்க காணுதியால் வேறு
பழிப்பா முரைத்திடினீ பார். (உசா)

ஞேப்தி யெல்லாமென்னி லேஞேதா னஞ்ஞேப்தி
ஞேப்தியலா தொழியு ஞேயமாஞ்—சப்தமிலை
மேவுஞ் சுகப்பொருளே மேவியன்றே ஞேப்திவருந்
தாவின் ஞாதாவுக்குத் தான். (உஎ)

ஞாதாவு ஞானமுடன் ஞேயமுமெய்ந் நாட்டமுறு
போதோர் பொருளாமேர் போந்துரையாய்—நீதாரு
ஞானம்பே சித்திரிவாய் ஞாதா நழுவியதால்
மோனம் பிறங்கு முடிந்து. (உஅ)

சித்துச் சடவழக்கைச் சிக்கறுத்த லென்றதெவன்
சித்துச் சித்தேயாகுஞ் சேர்ந்திடுமோ—சித்தே

ஜடமா யதுதானுஞ் சாருமோ சித்தாக்
கடஞாய பண்டிதனே காட்டு. (உக)

யாமா ருடலா ரிருண்மையுமிங் கொத்துறவே
தாமாச் சமையுந் தரமுளதோ—கோமானே
நாடா தொன்றாக நவில்வாய் நகைகண்டாய்
கோடா துரைத்தருளைக் கூடு. (௩௰)

அசத்தா முடலெங்கே யாச்சுதெவர் செய்தா
ரசத்தா மத்தையேனிங் காக்கல்—அசத்தேபின்
ஞரோ விசாரிப்பா ராரோ தெரிவிப்பார்
பாரோர் மதிக்கப் பரிந்து. (௩க)

நரகிற் படிந்திடுத னன்றோவென் றாயந்
நரகுநீ யன்றியிலை நாடில்—நரகத்திற்
றோயுமதாற் சொன்னேன் சுகமுண்டோ நின்மதத்திற்
காயுமதா லென்வருநீ காண். (௩உ)

நரகி லுறைவாரு மந்நரகு நீயே
விரகமேற் கொண்டிடுவாய் வீணே—நரகில்லை
யீங்கென் றனக்கென்னி லெனில்லா மற்போகும்
பாங்கார் வியாபகத்தைப் பார். (௩௩)

சுத்த மசுத்தஞ் சுகாசுகங்க ளுள்ளதில
தத்தனையுஞ் சத்தாலு லங்தோநற்—சுத்த
மசுத்த மெனலாதி யாபாச மென்றே
வசுத்தனே கூறுவதிங் கார்ந்து. (௩௪)

சிந்தைசக மொன்றல்ல வென்றுநீ செப்பியபின்
சிந்தைசக மானபடிச் செப்புவதேன்—சிந்தை
சகமாலு லாகுஞ் சுயஞ்சோதி தேர்வாய்
அகமேவி யொன்றா யடைந்து. (௩௫).

நினைப்புமறப் பென்னு நிலையின்மை கண்டோ
வினைத்துலகு மென்னென் றறிந்தோ—னைப்புலமை
கண்டபடிப் பேசுங் கவியே புலம்புதனி
கண்டனையோ வுன்னைமலங் கான்று. (௩௬)

தின்னையே தான்காணச் சாற்றிநுய் பேதமைகாண்
டன்னையெவன் றான்காணுஞ் சாராதே—தன்னையே
தன்னிற்றான் காணுங்காற் றானேன்கா ணுதன்கண்
டன்னிற்றா னென்றுந் தனித்து. (௩௭)

அறிவேயெல் லாமாகு மாயினீ யேனோ
வறிவிப்ப தெல்லா மதுவாக்—குறியாக
வேறானோர்க் கந்தோ விளம்புவாய் பித்தனக்கு
மாறாதோ வீதன் மலம். (௩௮)

மதங்களிலே யொன்றாக வாய்த்திலதோ நின்புன்
மதமாத் திரமென்னே மாட்சி—மதங்களிலே
கேடுண்ட துன்மதமாக் கேட்டதில யோநீதா
னோடுமா யாவாத நன்கு. (௩௯)

எம்மண் டலத்தோரு மீனமென வேதள்ளிக்
கைம்மைசெறி நின்மதத்தைக் கைவிட்டார்—பொய்ம்மைசெறி
யம்மதத்தி லந்தோ வழிநின்று யாகெடுவாய்
சம்மதமோ வேதத் தவர்க்கு. (௪௰)

அறிவை யறிவளக்க லாகுமோ பித்தா
வெறிகொண்ட சொல்லை யெவர்மேலாக்—குறிகொள்வர்
தீபமோ தீபத்தைத் தேடுந் தியங்குமுனைச்
சாபத்நாற் காய்ந்தவாரர் தான். (௪௧)

அகமென்ப தெந்தவக மென்றே யகங்கொண்
டகம்பிரமங் கூறினை யந்தோ—சுகமில்லா
வெந்தவக மென்றாலென் னேற்குமோ மாய்ந்தகமே
யெந்தை யடிக்கீழடங்க வேத்து. (௪௨)

பாசமக மல்ல பசுவே யகங்கண்டா
யீச னகமல்ல வென்றறிந்தே—யீச
னகத்தையே பாவித் தகற்றாய் சிவோக
மகம்பாவ மாமதுவு மற்று. (௪௩)

பொருளல்ல வற்றைப் பொருளென்று கோடல்
மருளனே நின்றனக்கே வாய்க்கும்—தெருளின்றி
யந்தோ தமிழ்வேத மாயாய் விபரீதஞ்
சிந்தா துரைத்திடுவாய் சேர்ந்து. (௪௪)

எல்லா மெமக்குவரு மென்றே மதம்பேசிச்
சல்லாபங் கொண்டாய் தவமில்லாய்—நில்லாயென்
முன்னே யொருசொல்லை முன்னிட்டு மூலையிலேன்
பன்னாய் கம்பீரம் படித்து. (௪௫)

தீன்வளவுந் தன்னிமிர்ப்புந் தாம்வந் ததைச்சொல்லா
யன்னியத்தை யுங்கூட வாண்டிடுவாய்—சின்னமதி

யாயுன்போ தத்தையிவ ளோ மதித்திடுவர்
சியுன் செருக்கடங்கித் தேர். (௪௬)

உடணமக்கிங் கன்னியமென் றோர்ந்த படியே
படர்க்கை யெனக்கண்டே பானை—யுடற்குயிர்க்குத்
தாரக மென்றுள்ளே தரித்து வியாபகத்தாற்
காரகத்தை நீக்குண்மை கண்டு. (௪௭)

தலைவ னருளன்றித் தன்னை யறியு
நிலையுண்டோ வந்தென்முன் னின்றே—யலையாமல்
சொல்லுவையோ வேட்டைச் சுமந்தே பலநாளுந்
சொல்லுவையே பாடந் தொடர்ந்து. (௪௮)

தேகி மலந்தன்னிற் சிக்குண்டு தேகமா
யேகன் சிவனை யிழந்ததனால்—சோகமுறுங்
கண்டாய் சிவனன்றிக் கட்டவிழா தென்மதியோ
கண்டாய்போற் பேசுவைநீ காண் (௪௯)

இலக்கணமுந் தர்க்கமுங்கற் றென்னுதவியென்று
யிலக்கியமாஞ் சம்புவையென் றென்றுங்—கலக்கமறக்
கண்டுதருக் கத்தாற் கடிதேகச் செய்வோங்காண்
பண்டைவினை யாவும் பறந்து. (௫௰)

சொன்னதையே சொல்லித் தடிக்கின்றாய் நின்புலமை
யென்ன வதிசயங்கா ணிப்படிமுன்—சொன்னவரைக்
கண்டறியே னின்மடமை கண்டே யிதுவென்னே
மண்டிவருந் தற்கலியின் மாண்பு. (௫௧)

அலைநீர்போ லேயறிவி லாமெல்லா மென்று
யலைநீரு மொன்றே யறிவா—மிலையேதா
னப்படிநீ சொல்லு மறிவும் பிறவுமிதற்
கெப்படியோ வந்திங் கிசை. (௫௨)

சான்றென்ற நீதான் றளையிற் படுவானேன்
மூன்றவத்தை யேறேதான் முந்தியிடுந்—தான்றோன்றித்
தம்பிரா னென்னத் தலைப்பட்டாய் நின்னகந்தை
யெம்பிரான் றன்னை யிகழ்ந்து. (௫௩)

சிறையுடலிற் பட்டநீ தீர்க்கும்வகை யெண்ணி
னிறைஞானத் தாலென்றாய் நீதான்—சிறையுடலிற்
பட்டுன் றனைமறந்த பாழிலே ஞானமெவன்
கிட்டும்வந் திங்கே கிளத்து. (௫௪)

நினைவோ வுலகமிது நின்போதங் காணின்
னினைவும் பிறவுமரு ளோருக்—தனைநிகரின்
மாயையென வன்றோ மதிப்பர் மதிவல்லோ
ராயுமறை யாகமத்தை யாய்ந்து. (௫௫)

நினைவென் றொருமுதலா னிற்குமோ வான்மா
தனைவிட் டதுவுமான் றனே—கனவிருளைப்
போக்குவான் றந்த புதுமையெனக் காணகிலாய்
சூக்குமமீ துள்ளே துணி. (௫௬)

அறிவற்ப மென்றுரைத்த லாகாதென் றாய்ந்தி
தறியாமை யேலிங் கறைந்தா---யறிவற்ப
மாகுங்கான் பேரறிவா மற்புதனைச் சேராக்கால்
போகுங்கா ணுற்ற புகழ். (௫௭)

ஆண்டா னடிமையிலை யாழத்தை நீயறிதல்
வேண்டா மிதுஜால வித்தைகாண்—காண்டோறு
மென்னே நகைக்கின்றா ரெம்மனோர் நின்மருளைக்
கொன்னே யழிதெனக் கொண்டு. (௫௮)

வாயில்காப் போன்சென்று மன்னன் றனிச்செங்கோ
லாயுமா போலன்றோ வாழுன் றன்—பேய்ச்செய்கை
கொள்ளற் குரித்தோ குணமென்னே நின்சொல்லாற்
றெள்ளுமதி யில்லாய் தெளி. (௫௯)

ஆண்டானு மில்லை யடிமையுமிங் கில்லையுன் றன்
றீண்டா மதத்திற் சிலுகுடையா—யாண்டா
னிலையாத லாற்றெய்வ மில்லை யடிமை
யிலையாத லானீயு மில். (௬௰)

இல்லாமை யாலென்று மெய்துங்கா ணுத்திகளின்
பொல்லா மதந்தன்னிற் புந்தியிலாய்—நில்லாயென்
முன்வாதஞ் செய்ய முடியுமோ வுன்றனக்கிங்
கென்வாதம் வீண்பிரளி யேன். (௬௧)

மதம்பற்றி யேநாளும் வாய்மதங்கள் பேசி
மதமில்லை யென்றாய்நின் மாயம்—மதமின்றே
லேனோவீண் வாத மெவர்பா லெதைநாட்டற்
கேனோவிம் மூட மியம்பு. (௬௨)

நின்பொய்ம் மதத்தை நிறுவுவர்காண் மெய்யறிஞர்
துன்மார்க்க மென்னத் துணிந்தேதான்—சன்மார்க்க

மல்லா வதனை யதிதமென்று யாகெடுவாய்
நில்லாதுன் போத நிலைத்து. (௬௩)

ஆன்மா வளவை யளக்குங்கா லன்னதுதா
ஞானதி யாகுமோ வுற்றுணரின்—ஞானதி
சத்தி யபின்னமதாய்ச் சார்ந்து மலமறைப்பிற்
பித்துடையாய் தோய்ந்துநீ பேண். (௬௪)

உடலல்ல வான்மா வுறுமிந் திரிய
மடர்பிரா ணன்கரண மல்ல—ஜடமல்ல
சித்தல்ல கேவலமாச் செப்புவதுந் தானல்ல
சித்தசித்தென் றுள்ளே தெளி. (௬௫)

அவனன்றி யேது மசையாதென் றுனின்
னவதிகாண் கொண்டாய்வீ ணர்த்த—மவனென்று
மேதுமசை யாதென்று மேன்பிரித்தா ருண்மைநிலை
மாதவத்தோர் நன்கு மகிழ்ந்து. (௬௬)

இரண்டிற்ற தாலேநீ யேகமாம் பூசை
யுரம்பெற்ற தென்றுரைத்தா யோகா—விரண்டற்ற
வத்துவித மாம்பூசை யாருக்காண் யாஞ்செய்த
லத்துவிதத் துண்மையறி யாய். (௬௭)

பெருவாய் திறந்தாற் பிணநாற்ற முன்பால்
குருவேடத் தாரைக் குரைப்பாய்—குருவேடம்
பூண்டனையே மூடர் புகழ்ந்துரைக்க வந்தோநீ
வேண்டிப் பொருளை விழைந்து. (௬௮)

அறிவித்தா லன்றி யறியா வுளங்க
ளறியென் றுரைத்ததனை யாயா—வெறிமிக்க
பேயாநின் றேடிங்கே பேசினும்வீ ணாங்கண்டா
யோயாது பொய்யுரைப்பா யுற்று. (௬௯)

அன்னியர்சித் தத்தை யழிப்பே மலமாயத்
தன்னியரா மன்றோர் தவங்கண்டா—யன்னியரா
மூடர் தமக்கே முதற்குருவாய்த் தோன்றியநின்
பாடவதி சொன்னேன் படு. (௭௰)

தற்கண்டார் தற்கண்டா ரென்று சலிப்பில்லா
தற்பவுரை யேன்றோ வறைகின்றாய்—தற்கண்டோர்
தம்மை யுடையான்றன் றுணிழற்கீழ் வைகுவர்காண்
தம்முணர்ந்து பெற்றருளைத் தான். (௭௧)

திர்ந்தநிலை நின்னதாச் செப்பி யெவ்வாறும்
கூர்ந்தென்று மேவெல்லக் கூடாதென்—றோர்ந்துரைத்தாய்
சிசியுன் போதமிது சென்ம சுபாவங்கா
ணூசி வகற்கன்பு ளாய். (௭௨)

உருவென்போ மன்றி யருவென்போ மோது
முருவருவ மென்போம்யா மொன்றை—யுருவமுதன்
மூன்றுமதற் கில்லென்போ முன்பின் முரணுமல்
சான்றுமறை யாகமங்கள் சாற்று. (௭௩)

எல்லா மசத்தென் றிசைத்தா யதுதானும்
பொல்லாய் பரனிடத்திற் போக்கிடுமோ—கில்லாப்
பொருள்கா ணசத்தெங்கள் பூரணன்காண் சத்தே
யொருநீ சதசத்தென் றோர். (௭௪)

சிவேசர் பொய்யாகச் செப்புவா யுன்மதத்திற்
சிவேச ரென்பொய்யாந் தேர்ந்திடினிங்—காவேசங்
கொண்டாரைப் போன்றேநீ கூறுவதா லென்கண்டாய்
கண்டாயேல் வந்தென்முன் காட்டு. (௭௫)

(நிந்தாஸ்துதி.)

எல்லாஞ் சிவமென்ன வேத்துகின்றோங் காணும
லெல்லாநா னென்னக்கண் டின்புற்றே—நல்லாய்நீ
போகிப்பா யொன்றினையும் போகவிடா துன்ஞான
மோகிப்பாங் கண்டாய் முதிர்ந்து. (௧)

உன்வாழ்வுக் கொப்புண்டோ வோகோ வருகரகின்
மன்னுவாய் நீயன்றே மாமோக்கந்—தன்னிலுமே
பூரணத்தா லந்தோ புகுகின்று யாரேநின்
சீரறிந்து கூறவல்லார் செப்பு. (௨)

தன்னரசு நாடு தருங்கண்டாய் நின்பெருமை
துன்னு மயமில்லாத் தொன்மையா—னின்னருமை
யாரேகாண் கிற்பார்தான் யாதோ வரசுரிமை
சீர்தன் றேவந்து செப்பு. (௩)

எல்லாஞ் சமங்கூறு மேற்றமெய்ஞ் ஞானமெமக்
கெல்லாம் வருமோ விசைகண்டாய்—நல்லார்வெம்
பொல்லா ரெனன்மாய்ந்து புத்திவிசா ரந்தீர்ந்து
கல்லா மடம்பேணல் காண். (௪)

நானே மலந்தின்றே ஞானே யழுதுண்டே
ஞானேயேய் நாய்நரியா நண்ணினே—ஞானே
கழுதை முதலானேன் கண்ணனுமா யென்றாய்
பழுதாயா யென்றோநின் பண்பு. (௫)

உன்னையே போகித் தளைசெய்வா யஞ்ஞான
மென்னையே கொள்ளொன்று மெப்படிகாண்—டுன்னுமது
நின்போற் றவமில்லை நிச்சயமுந் தானில்லை
யன்பேற்றி நிற்ப னாற்கு. (௬)

உலகா யதன்பூத மொன்றே யிசைத்தான்
வலநீ யான்மாவொன்றை வாயாற்—பலகாலுங்
கூசா துரைப்பைமனங் கோணாய் துணைபெற்றாய்
பேசாநிற் பேமறிந்துன் பீடு. (௭)

மூன்றுரைப்பே மொன்றென்பாய் முத்தியென்பே மேதென்பாய்
சான்றுரைப்பே நானென்பாய் சத்துரையா—மூன்றயங்கு
நின்மாட்சி யெப்படியோ நேருமெமக் கையையோ
தன்மாட்சி யென்பேந் துணிந்து. (௮)

வேறு.

ஆத்திகமு நாத்திகமு மற்றவன்போ ளீபேசல்
சாத்திரமோ கண்டாய் சழக்கென்பே—மாத்திகமும்
பொய்யென்றால் யாரோ புகல்வர்நினை மன்பதையில்
வைவர்விலங் கென்றே மதித்து. (௯)

(மாட்சிநிருபயமதமசத்தென்றது.)

உபயமத சித்தாந்த முண்டென்னக் கூறு
முபயோக மில்லாதா யுன்னைச்—சபைநடுவே
தாம்பூலம் வைத்தழைத்தார் தாமுண்டோ தன்னிகரில்
வேம்புரையாய் வந்து விளம்பு. (௧)

இல்லையெனுஞ் சொல்லுக்கு மேழையே மேலோர்கொ
ளல்லவெனுஞ் சொல்லுக்கு மான்றபொரு—டில்லைநடஞ்
செய்வா னருள்போற்றித் தேராதொன் றென்பதெவன்
பொய்புரைகா ணென்றோநின் பொங்கு. (௨)

உலகமே பொய்யானு லுண்டோ பிறவி
நிலையுமோ மெய்யாக நேருஞ்—சலமுறுநீ

யென்றே புலகின்று யோதுவாய் பொய்யென்பே
மன்றே விகாரங்கண் டாய்ந்து. (௩)

ஏசும்தன் தன்னை யிசைத்தா யுபயமெனப்
பேச வறிந்திலையே பேதையே—காசுபெறு
நின்மூடு மம்மதமு நேர்ந்திடுமோ வொன்றாக
வெம்மதத்தின் முன்னே யெதிர்ந்து. (௪)

ஒன்றே பொருளுண்டா யோதினாய் நீயவனு
மொன்றே பொருளுண்டா யோதின—னென்றே
பலவான தன்மை பகர்ந்தா யவனோ
பலவாக்கல் சொன்னான் பரிந்து. (௫)

இப்படியே முற்று மிசைக்குங்கா லொன்றாகுந்
தப்புடையா யிவ்வுண்மை தானறியா—திப்படியி
னீயே சமர்த்தனென நிற்பா யெதிர்த்திடின்யாம்
போயொளிப்பா யென்னின் புகழ். (௬)

வள்ளுவனார் தங்கருத்தின் வாய்மை யறிந்தனைபோற்
கள்ளவுரை பேசவெங்கே கற்றனையோ—தெள்ளுமறி
வில்லா யகம்பிரம மெங்கே யவர்கூற்றிற்
சொல்லாய்முன் னேவந்து சூழ்ந்து. (௭)

சொல்லுங் கடவுளிலை தோன்ற நினைவளவாப்
புல்லனே சொன்னாய் பொருந்துமோ—நல்லா
னிழலா னினைவிகந்து நின்ற னறியாய்
பழுதேகாண் சொன்னாய் பளா. (௮)

தன்னைச் சிவமாகத் தான்பா வனைசெய்யப்
பன்னுமே வேதம் படித்தறியாய்—தன்னைமே
பாவனையாக் காணாத பாழா யிரைந்தனையே
சிவனையே மெய்ப்பொருளாத் தேர்ந்து. (௯)

நினைவு நினைவென்று நீபடித்த பாடங்
கனவிலே தானுண்டோ காட்டாய்—கனவின்கண்
ணேரு மவைநனவி னில்லாமை யாற்பொய்யோ
சாரும் வினைப்படியே தான். (௰)

வினையாற் சுகதுக்க மேவுங்காண் வீணே
நினைவின் விகாரமென்பாய் நின்போ—தனையென்னே
யங்கினைவி னைத்தானு மாரே யமைத்திட்டார்
தன்னிலைமை குன்றமிகத் தான். (௧௧)

நினைவிலுகின் பாலுமர னிற்பதனு லன்றே
நினைவுமெழு நீயுநினைக் கின்றாய்—நினைவோ
ஜடநினையா தன்றியுநீ தானேநினையாய்
படஞான பண்டிதனே பார். (௰௨)

பூரணமென் றக்காணின் புத்துரையொன் றேயென்பை
பூரணமோ தன்னிறைவே பூரணங்காண்—பூரணத்தை
யாயா துரைக்கின்று யந்தோ வியாப்பியமு
மாயாய் வியாத்தியுட னோர்ந்து. (௰௩)

ஏகம் பலவாதல் பூரணமன் றேகமே
யாகமெனக் கொண்டிங் கனைத்துயிரு—மோகமற
வெவ்வுலகு மேவி யிருத்தல்காண் பூரணமென்
றெவ்வமறப் போற்றுமறை யே. (௰௪)

ஒன்றே பலவாதல் பூரணமென் றோதிடுவாய்
நன்றாகா ணப்பலவு நாடுங்கா—னின்றநிலை
தன்னிற் பெருகிவருந் தன்மையுள வேலென்னே
பின்னமுறும் பூரணத்தின் பெட்பு. (௰௫)

ஐந்தவத்தை யாவுமறி வன்றியிலை யென்றவுரை
மந்தவுரை யென்ன மதிப்பேங்கா—ணைந்தவத்தை
யேனோ வறிவினிடத் தெய்து மகண்டமிரிந்
தேனோ வொடுங்கு மிழிந்து. (௰௬)

எல்லாம் பிராந்தியென வேத்துவாய் நின்போத
மல்லாற் பிராந்தியிலை யாகெடுவா—யெல்லாம்
பிராந்தியெனிற் பேசுவாய் பேதாயுன் சொல்லைப்
பிராந்தியென மோகமிலை பேர்ந்து. (௰௭)

மலடிமகன் வந்தானிவ் வைகறையி லன்னோற்
கலகில் பொருளளித்தே னென்றாற்—சலமுறுவாய்
கொள்ளுவையோ வுண்மையெனக் கொள்ளுவமே நின்சொல்லை
யெள்ளுமதற் கொப்பா வெடுத்து. (௰௮)

அறிவோநின் றெய்வமதற் காகுமோ மோக
மறிவுக் கறிவா மரனே—நிறைவுறுமெந்
தெய்வ மிதுசைவ சித்தாந்த மென்பார்கா
ணுய்வகைநீ யங்கே யொடுங்கு. (௰௯)

நானேபரமன்றி நாடுங்கா லில்லையென
வேறோ கதைபடிப்பா யேற்பவரார்—நீநானென்

ஞேதிப் பழங்கதையே யுற்றுரைப்பா யுன்னைமலம்
வாதிப்ப தாலிங்கே வந்து. (௨௰)

குணிக்கே குணமால் குறையுரைப்பா யென்னே
குணிக்கோ ரளவுண்டோ கூறாய்—குணமுள்ள
வெவ்வெப் பொருளுமிவ ணோளுகா வக்குணியாச்
செவ்விதினிங் காய்ந்திலேகின் சீர். (௨௧)

அத்துவிதங் கண்டிக்க வாகாது காணீதா
ளைத்துவிதி போற்பேச லாவதெவ—னத்துவிதி
சைவசித் தாந்தியென ளுனறியாய் பொய்ம்மதத்தாய்
செய்வதுதான் மேலிதற்குச் செப்பு. (௨௨)

ஏகமோ வத்துவித மோன்ம வாதமெனு
மோகமதந் தன்னின் முடங்கிடுவா—யாகெடுவா
யொன்றே டிரண்டற்ற வுண்மையே யத்துவித
மென்றார் பெரியோ ரிசைந்து. (௨௩)

அத்துவிதப் போலியென வன்றே யறைந்திடுவர்
முத்தருனை யென்று முகம்பார்த்தே—சத்தசத்தின்
பேதந் தெளிந்தறியாய் பேசுவர்கா ணின்னுவர்
வேதாந்தப் போலியென்று மேல். (௨௪)

ஏசுவர்மா யாவாதி யென்றுன்னை மாப்புலவோர்
பேசுவதா லில்லையெனப் பேருலகை—யீசன்
றனையுமே மிச்சையெனத் தானுரைத்த லாதூழ்
வினையிருந்த வாறென் விருப்பு. (௨௫)

வாதிலே வெல்லவெளி வந்தவுனை யேன்மிச்சா
வாதியெனக் கூறுவர்காண் மாப்புலவோர்—வேதநெறி
நில்லாய்மா யாவாத கிச்சயத்தி னுற்கண்டாய்
சொல்லிரண்டு மொன்றாந் தொடர்ந்து. (௨௬)

மாயை முதற்பொருள்கண் மாணவே யாங்கொளிறு
மேயவவை யொன்று விளம்பிலங்காண்—பேயுடனே
யாடும்பரஞ்சோதிக் கன்பொன்றே யாங்கொள்ளன்
மூடவுரை செய்யேலென் முன். (௨௭)

என்னைநான் கண்டின்புற் றேனென் றிடுவைய்தற்
கென்னகாண் சான்றுரைப்பா யென்முன்னே—முன்னவனை
விட்டுநீ யுன்னிலறு போகம் விளம்பிடுவா
யொட்டியே மூக்கறைய னொத்து. (௨௮)

காணலினீ ரைப்போலக் காணுமுல கென்றாய்க்
கான லெதனிடத்துக் காண்பதெவர்—மானமுறுங்
காரணமே திம்மூன்றுங் காட்டுவா யுன்மதத்திற்
கோரணிகா ணுன்றூர்க் குணம். (உக)

உன்னுதலு மோர்பொருளை யுன்னுமை யுங்கன்ம
மென்னவறி யாதந்தோ வேத்துகின்றாய்—யுன்னுதலு
முன்னுமை யும்போகு முத்தமர்கட் காட்டிடினிங்
கென்னும் பிதற்றுவதா லின்று. (௩௰)

உன்னுமுன்ன ரோர்பொருளை யுண்டாவ தில்லையெனப்
பன்னுதலன் றோகுற்றம் பார்த்தறியா—யுன்னுமவன்
றன்னில்வே றாய்முன்னே தானுண்டா மெய்ப்பொருளைப்
பின்னமுறக் கூறலெவன் பேசு. (௩க)

உன்னுவது மோர்பொருளை யுண்டாயி னன்றோநீ
யுன்னுவது வேறென்னே யுள்பொருளா—யன்னியம்வே
றில்லாமை யுன்மதத்தி லேற்பாய் மறந்தனைகொல்
சொல்லுவதென் மாறுபடுஞ் சொல். (௩உ)

உன்னுவா னன்றியிலை யுன்னலெனி லெப்போது
முன்னுதலே செய்வ தொழியான்கா—ணன்னவற்றின்
வேறா முலகத்தின் மெய்யுணர்ந்தாய் போன்றேநீ
கூறுவதா லுண்டோ குணம். (௩௩)

எம்மதத்தும் பாவனையென் றேசுகின்றாய் கின்மடமை
சம்மதித்தா ராரோதான் சற்றுனையாய்—செம்மையிலாய்
தேகாதி யைச்சிவமாப் பாவிக்கச் செப்புமறை
பாகம்வரு விக்கப் பரிந்து. (௩௪)

இப்படியே பாவனையா லேத்தலுஞ் சிவமாக
வொப்பவே யான்மாவை யூகமிலாய்—செப்புமுள
வோராம லுள்ளபடி யோங்குசிவ னாமெனன்பாய்
றிராயுன் பாவத் திரள். (௩௫)

மாயோன் முதலாக வாஞோனைப் பாவனையா
லோயா துரைக்கு முயர்மறைகள்—வீயாத
தென்னப் பரம்பொருளா யென்கெடுவா யெம்பெருமான்
றன்னைப் பணியாமை யான். (௩௬)

எங்கள்பெரு மான்றன்னை யாராகப் பாவித்த
லங்கவலின் மேலில்லை யாதலினாற்—சங்காரு

மன்னோனைப் பாவனைகட் கப்பாலா னென்றுமறை
யெந்நாளு மேத்து மிசைந்து. (௩௭)

உள்ளஞ் சுயஞ்சோதி யென்றா யெவர்க்குமுனக்
குள்ளஞ் சுயஞ்சோதி யோவுரையா—யுள்ளஞ்
சுயஞ்சோதி யாயிடினீ தொல்வினையிற் பட்டே
மயங்குவதென் கூறாய் மகிழ்ந்து. (௩௮)

எட்டுஞா னம்பேசி யேசுகின்றா யாவரையு
நாட்டஞா னம்வந்த ஞானியைப்போற்—கேட்டறியா
யுண்டோ சிவஞான முன்மதத்தி றானுமுனக்
குண்டாவ தெப்படியிங் கோது. (௩௯)

வேதமுனக் கேதுரையாய் வேதாந்தப் போலியெனப்
பேதப்பட் டாயனைத்தும் பேசிடினிங்—கேதெனவே
கூறிப்பின் மிச்சையெனக் கொண்டதனால் வேதமுமேன்
கூறுகிலாய் மிச்சையெனக் கூர்ந்து. (௪௰)

வேதந்தா னும்பொய்யாம் வேதாந்த மும்பொய்யாம்
பேதமிலா யுன்மதத்திற் பேசுங்கால்—வேதந்தான்
பொய்யானா லெப்படியோ போந்திடுகின் பொய்யுரைதான்
மெய்யாகச் சற்றே விளம்பு. (௪௧)

இந்துவே தப்பேரை யெங்கேநீ கற்றதுவே
றெந்தவே தங்கண்டா யீண்டுரையாய்—சிந்துமுரை
பேசு மிலேச்சமதப் பேயர்க்கும் வேதமெனும்
வாசகந்தா னுண்டோ வழுத்து. (௪௨)

எல்லா மதங்கட்கு மேற்குமோ வேதமெனல்
பல்லோர் கருமத்தாற் பாழ்த்திடவே—சொல்லாரு
நாதன் மொழியா நவின்றெழுதி வைத்தவெலாம்
வேதமெனல் கொள்ளேம் வியந்து. (௪௩)

வேத விரோதமென வேறோர் மதத்தையுவந்
தோதுவையே நீதானு முண்மையே—மாதுமையாள்
காந்த னுரைத்தமொழி யொன்றே மறைகண்டாய்
போந்துரைப்பாய் வேறாப் புகழ்ந்து. (௪௪)

மிலேச்சமதத் தார்க்குமறை மேவுமெனி னந்தோ
மிலேச்சருனை வைதிலரோ வேண்டி—மிலேச்சர்தமில்
வேறாறு யுண்மைசெறி வேத விரோதியெனக்
கூறாய்வந் தென்முன் குறித்து. (௪௫)

ஆன்மாத் தனைமறந்து பின்னே தனையறித
முன்பந்த முத்தியென்றாய் தானேயிங்—கேன்மறந்த
தென்றால் வெறுந்தோற்ற மென்பா யெவர்க்கோ தா
னன்றாமுன் போத நகைப்பு. (சசு)

சாதனமேன் பந்தமறத் தன்னுருவாய்ப் பார்த்ததனை
யோதுதலே போதுமென்ற யோகோகோ—வேதமுத
லெக்கலையும் வீணாமுன் னேழைமதிப் போதங்கேட்
டொக்குமெனு மூடர்தமக் கோர். (சஎ)

சரியைகிரி யாயோகஞ் சாற்றுசிவ ஞான
வுரிமையுரை செய்திடுமா லோத்து—மருமலறயோர்
போற்றுஞ் சிவாகமமும் போக்கே பசுஞானஞ்
சாற்றுவைநீ கண்டாய் சதி. (சஅ)

இத்தமுடி வெங்குமிலை யென்று யுனக்கறஜ
சொந்தவுல கத்தினுமுண் டேனறியாய்—பந்தமிலை
நானில்லை முத்தியிலை நாடுமொரு தெய்வமிலை
வானில்லை யென்பாரை வாழ்த்து. (சக)

திரக்குறியைக் காட்டினன் றேசிகன்கா லம்பார்த்
திருங்கருணை யாலென் றிசைத்தாய்—சிரங்கவிழா
தென்னே குறியேதிங் கேற்றவனார் சொன்னவனார்
பின்னேது காலமெனல் பேசு. (ருய)

காலமது பார்த்திருந்து காட்டின னென்றிடுநீ
சாலப் பழிப்பா * முன் சாற்றியதில்—கேலவொரு
சாதனமும் பந்தமறத் தான்வேண்டா மென்றென்னே
யேதமொழி சொன்ன யெழு. (ருக)

என்றேவுன் னசை யெதிர்வீழ்ந் திறைஞ்சியுனை
மன்னேயென் மாணிக்க மாமலையே—பொன்னேயென்
றேத்தி யொருவாதி யெய்தினன் மெய்ப்பொருளென்
றேத்துவாய் வெட்கமிலை யே. (ருஉ)

(வைணவமினைத்தெனும் வண்மையுரைத்தது.)

சைவ மதக்கழற்றி சாற்றின யாகெடுவாய்
சைவமோ தான்கழலுஞ் சைவலமே—சைவமெனுஞ்
சொன்மங் கலந்தோராய் சோம்பனே நின்மதமே
புன்மங் கலங்காணிப் போது. (க)

* மேல் (சஎ) வது வெண்பாவாலறிக.

சைவத்தை நீகழற்றுந் தன்மையினைப் பின்காண்பேஞ்
சைவத்தின் வேறுஞ் சமயங்கள்—சைவத்தை
நோக்க விழிந்திடுமா றெய்தாகு நின்சமய
நோக்கத்தின் மேலா றவல். (உ)

வைணவத்தை வாதிக்க வந்தாயென் பேதாய்
வைணவத்தி லுன்சமய மாண்போ—வைணவத்தில்
விண்டுவா மோர்பசுவை மெய்ப்பொருளென் பார்நீதான்
கண்டுரைப்பாய் நின்றனையே காண். (ங)

வைணவசித் தாந்தம் வகையா யுரைத்தே
வைணவத்தைக் கண்டித்தல் வாய்க்கும்—வைணவத்தின்
றெற்குமேற் குங்காணுய் தென்று விராமனெனச்
சொற்பதருய்ப் போக்குவைவீண் சொல். (ச)

கருங்கற் பெருமாளைக் காட்டியோ மொத்தைப்
பெரும்பொங்கற் சோற்றைப் பிசைந்தோ— விரும்பி
வைணவத்தை நாட்ட வருவார் புகழ்சேர்
வைணவத்தில் வல்லார் மகிழ்ந்து. (ரு)

முருகன் சடகோபன் முன்னுரைத்தா ரென்றாய்
முருகனென லாரோ மொழியாய்—முருகனெனக்
கந்தரநு பூதியினைக் கட்டுரைத்தா ரைச்சொன்னாய்
மந்தமதி யாய்நீ மகிழ்ந்து. (சு)

முருகன் றிருவருளை முன்பெற்ற றெங்க
ளருணகிரி யாரவரோ டந்தோ—கருநிறமா
றன்னைப் பரமாகச் சாதித் தவன்றனையே
சொன்னாயுன் பேதமைகாண் சூழ்ந்து. (எ)

என்ன வவனு மிதுநா னுடலென்று
னென்னவுரைத் தாயறியா தேழையே—சொன்னபடி
யெங்கேகண் டாயெந்த வைணவனோ வாங்கிசைத்தான்
சங்கைகொண்டாய் கொண்டாய் சரி. (அ)

முன்னே யொருஜீயர் முன்னிற்க மாட்டாம
லென்னையோட் டம்பிடித்தா ரென்றுரைத்தாய்—பின்னேதான்
சீராரும் வேங்கடத்துச் சியருந்தோற் றாரென்றாய்
பேராருஞ் சொப்பனமோ பேசு. (கூ)

இம்மதத்தை நீகண்டித் திட்டதொன் றும் யாங்காணே
மம்மர்கொண்டாய் சொன்னதையே செல்லிமதத்—தெம்மதமுங்

கண்டித்தே நாமென்று கண்மூடி வாழ்கின்றாய்
கண்டித்தே முன்னையினிக் காண். (௭)

(சத்திமார்க்கஞ் சைவமேயென்றது.)

மேலேநீ சத்திமதந் தன்னைவிளங் கக்காட்டி
மாலேபூண் டாய்மறுக்க மாண்பாமோ—நூலோரா
தாருமிலா வூரி லசுவமே தஞ்செய்யப்
பாரின்மிக வல்லாய்நின் பண்பு. (௧)

சத்திமதம் வேறோதான் சைவத்தை விட்டறியாப்
பித்தர்சில ருன்போல்வார் பேசுவதாற்—சத்திமதம்
வேறென்னக் கொண்டே விரும்பினாய் கண்டிக்க
மாறில்லை கண்டாய் மதி. (௨)

சாத்தேய மென்பதுதான் சௌபாக்ய மேமுதலாச்
சாத்தேய தந்திரத்தைச் சாருமால்—சாத்தேய
மென்ன வொருமுதலா வேற்பர்பரி பாகமிலார்
முன்னவனைப் போற்ற முணர்ந்து. (௩)

சாத்தேய னென்று சாற்றுவான் வாமியவன்
மூத்தோன்கா ணின்றனக்கு முன்னறியாய்—மூத்தோனு
முன்றனக்குத் தம்பி யுலகா யதன்கண்டா
யென்றனக்குண் டோவாழ் விது. (௪)

பிரமவித்தை நின்றன்தாப் பேசுவதென் காணீ
பிரமஞ் சிவனுமால் பேதாய்—பிரமமெனுஞ்
சொல்லைத் திருடியதாற் சொந்தமென லாமோநின்
புல்லுரைவெல் லாதென்முன் போந்து. (௫)

(பிரமஸமாஜப் பேரோதென்றது.)

பிரம ஸமாஜமெனப் பேசுமத மெங்கே
யுராமுறக்கண் டிங்கேநீ யோத—லருளில்லா
யாரோ சிலபேய ரணைவத்தாற் கத்தியழிக்
தாரோதி னுயவனை யார்ந்து. (௧)

எங்கே யவர்மதநூ லெக்காலந் தோன்றியது
பங்காரு முன்னோரார் பார்த்தறியாய்—கொங்காரு
நன்மாலை வேய்ந்திட்ட நல்லை சிரியரெவ
ருன்மாலைப் போக்கும்வழி யோர். (௨)

(காலமினைத்தெனக் கழறப்போந்தது.)

காலப் பிரமமதங் கண்டிக்க வந்தாய்போங்
காலமுனக் கோதானீ கண்டறியாய்—காலந்தா
னேனில்லா மற்போகு மெத்தனைபே ருண்போல்வா
ருனிற்றுப் போனு ரொழிந்து. (௧)

எத்தனையோ தான்பிரம மீடழிந்து போகவது
சத்தியமாய்த் தானிற்குந் தானறியாய்—செத்தொழிந்து
போனபிர மங்களிலே போய்ச்சேர்வாய் நீபிரம
மானபடிக் காலத்தை யாய்ந்து. (௨)

காலந் துணையாகக் கண்ணுதலோ னேவலினுன்
மூலத் தொழின்முடிக்க முன்னுங்காண்—கால
முடிக்குங்கா னுன்னை முடிப்பையோ நீதான்
றுடிக்கின்ருய் வீணே தொடர்ந்து. (௩)

(சூனியவாத சொருபமுரைத்தது.)

சூனியம்வே றுண்டாகச் சொல்வதெவ னின்மதமே
சூனியங்கண் டாயுண்மை சொல்லறியாய்—சூனியமாச்
சொல்வா யுலகமுயிர் தொல்பரனிம் மூன்றுமிது
சொல்வார்நீ யன்றியெவர் சொல். (௧)

மாயாவா தத்தலைவன் மற்றொருவன் சூனிய
நீயோதல் காணிக் நெடும்புவியிற்—பேயாமுன்
கண்ணே புதுமையிது கண்டே முனைப்பொருளா
யெண்ணுநிற் பார்தா மெவர். (௨)

(மாயாவாத மாண்பொருளுரைத்தது.)

உன்றலைமேற் காக்கைமல முண்டென்முன் மாய்க்கறியா
துன்றலைமேற் றானுண்டென் றோதுவான்—றன்கதைபோற்
சோப் பிதற்றுகின்ருய் நீயோ யயலோனா
யோர்கொண்மா யாவாதி யென்று. (௧)

மாயையிலே பட்டுழலு மாணறிவி லாப்பசுவை
மேயசிவ மென்றுரைப்பாய் மேதையோ—மாயையிலே
யாழ்ந்துழலு மோசிவமு மந்தோமா யாவாதத்
தாழ்ந்துழல்வை கண்டா யறி. (௨)

பிரமத்தின் வேறாக மாயைதனைப் பேசாய்
பிரமமாக் கொண்டதனும் பேதாய்—பிரமங்காண்
மாயையினக் காதலினான் மாயாவா தப்பேயை
யேயவுரைப் பேம்யா மிசைந்து. (௩)

மாயையசத் தென்போமெம் மாதேவன் பக்கலடைந்
தாயபசு பாச மறுமென்றே—நீயொருசற்
றேனும் விலக்கறியா யென்பதுகண் டன்றோநீ
தான்மாயா வாதியென னான். (௪)

சொன்மாத் திரங்கண்டாய் சூழ்ந்திலது மாயையெனல்
பொன்மாத் திரங்கண்டாய் பொய்ப்பொருளன்—றுன்மாயா
வாதத்தில் வீடுமனை வாசலிவை மெய்யாங்காண்
வாதிப்பாய் விட்டனைபோல் வந்து. (௫)

ஓயாது பொய்சொல்லி யுள்ளதையிங் கில்லதுவாய்
வாயோவா தென்றும் வதறுவதால்—மாயாவா
தப்பெயரின் பொய்ம்மதத்துக் காகுங்கா ணிவ்வுண்மை
*யிப்பொழுதோ சொன்னோ மெடுத்து. (௬)

ஒன்றுநீ யன்றென்று முன்னையலா தின்றென்ன
வன்றுரைத்த வாத்த ரருமொழியை—இன்றனதாக்
கொண்டுரைத்தா யந்தோயாங் கூறுவமா லுண்மையரு
ளுண்டானும் கேட்டினிதி னோர். §(௭)

நீயென் றுரைத்திடலா லின்மலனைக் காட்டிடுமா
னியன் றெனவொன்று நீடுலகு—மேயவுயிர்
தாமொன் றினுஞ்சேராத் தன்மையா லென்றறிவாய்
மாமறையை வாழ்த்தி மகிழ்ந்து. §(௮)

உன்னையலா தொன்றுமிலை யோதிடினிங் கென்றதுசேர்
மன்னுயிர்தா னேயியங்கு மாண்பிலதாற்—பின்னுலகக்
தானுந்தா னேயியங்காத் தன்மையா லாங்கவற்றைத்
தானியக்குஞ் சார்ந்ததனாற் றான். §(௯)

---

* "பிண்டியமாயா வாதமென்னுஞ் - சண்டமாருதஞ் சுழித்தடித்தாஅர்த்து" என்று ஸ்ரீவாசகத்தினும், "மாயாவாதப் பேயாவுனக்கு" என்று சங்கற்ப நிராகரணத்தினும் போந்தவாறறிக.

§ (௭-௮-௯) வது பாடல்கள் (ஒன்றுநீயல்லை யன்றியொன்றில்லை) என்று ஸ்ரீவாசகத்திற்போந்ததனை விளக்கியவாறு கண்டுணர்க.

ஓட்டுவான் வண்டியல வோட்டுறுமவ் வண்டியிலே
யோட்டுவா னன்றி யுணருங்காற்—கேட்டறியா
யென்றதிருட் டாந்தத்தை யேற்றிடுவா யாகெடுவாய்
குன்றுங்காண் மாயைக் குடி. (ம)

(நாத்திகமிதுவென நாட்டப்போந்தது.)

நாத்திகனின் சோதரன்கா ணுடறியா தென்னேகின்
வாத்திமையைக் காட்டி வடிக்கின்றாய்—நாத்திகனுக்
கண்டுரைத்தோ னுன்பொய் கடவுளும்பொய் யென்பானல்
கண்டுலகொண் றேமெய்யாக் காண். (௧)

நீயோ வுலகில்லை நீதிபரன் றானில்லை
யேயாகிற் பேறுன்று னென்னவே—வாயோவா
தந்தோ பிதற்றுகின்றா யாதலினு னாத்திகன்கா
ணெந்தோழர் சொற்படிநீ யீங்கு. (௨)

(ஆத்திகஞ்சைவ மாமெனவுரைத்தது.)

ஆத்திகருக் கந்தோ வறிவுறுத்த வந்தாய்நீ
நாத்திகர்தம் மிற்சேர்த்து நன்றோதான்—நாத்திகா
நீவிருநுஞ் சோதரரு நேர்படினென் னுவீர்முன்
போவிரன்றோ வுள்ளம் புலர்ந்து. (௧)

ஆத்திகத்தி னுண்மை யறிவையோ நாத்திகனீ
யாத்திகத்தைக் குற்றமென்றா யாகெடுவா—யாத்திகர்யாங்
கொள்வேஞ் சிவப்பொருளைக் கோதில் பழம்பொருளாய்க்
கொள்வேம் பசுபாசங் கூர்ந்து. (௨)

†உள்ளதுமன் றில்லதுமன் றோன்றுமுய ரொண்பொருளொன்
றுள்ளதிலை யோவா துரைத்தனரா—லொள்ளியபே
ரன்பா லருணகிரி யாரெம்மை யாளுடையா
ரன்பேது மில்லா யறி. (௩)

†உள்ளதல வென்றதுநீ யொன்றுவதா லணவத்தி
லுள்ளமலம் போகுமெனி னுற்றிடுங்கா—லுள்ளபடி
யென்னு முயிரனையா ரெம்மனோர்க் கில்லதல
வென்னுமதன் மெய்ப்பொருடா னேத்து. (௪)

† "உளதன் றிலதன்று" எனக்கந்தாநுபூதியிற்போந்ததனை விளக்கியவாறறிக.

புண்ணியமுண் டாளுற் பொருந்துங்கா ணிவ்வுண்மை
மண்ணிற் பிறந்திறக்கு மாண்புடையாய்—புண்ணியமே
கேட்கப்பெற் ருயுண்மை கிட்டிலையே யுன்பாவ
மாட்படுவாய் காலனிடத் தால். (ரு)

சொல்லாற் றுடிக்கின்ருய் சொற்பொருடேர்ந் தாய்போன்று
பொல்லாதாய் நிந்தை புரிவதெவன்—வெல்லாம
லாத்திகரா மெம்மவரை யாகெடுவாய் நாத்திகனீ
நாத்திகரோ டொக்க நவின்று. (சு)

(போலிஞானத் தன்மைபுகன்றது.)

போலிஞானம்பேசிப் பொங்குகின்ருய் நீயுமொரு
போலிஞா னந்தூற்றப் போந்தனையே—போலியெனுஞ்
சொல்லுனக்கே சொந்தங்காண் சொல்லுவதென் மற்றவர்பாற்
கல்வியறி வில்லாய் கனிந்து. (க)

அறிவுநீ மெய்யே லறியாமை யேனிற்
கறிவிப்பான் றன்னை யகன்ரு—யறியாமை
போகாது காணுன்னைப் பொங்குநர கக்குழிவிட்
டேகாது காணிங் கிதென். (உ)

வேதாந்த சித்தாந்த மெய்ந்நிலைமை கண்டனையோ
வேதாந்த சித்தாந்த வேற்றுமைக—ளுதாந்த
போதங் கழலுங்காற் போந்திடுமோ பொய்ச்சமய
வாதம் புரிந்துழல்வாய் வந்து. (ங)

ஞானியென யார்சொன்ருர் ஞாயமா யுன்னையுயர்
ஞானியென நீயே நவில்கின்ருய்—ஞானியர்தங்
குற்றேவல் செய்யக் குணமுண்டாங் குண்டுணிபோ
லெற்ருேகின் வீண்பிதற்ற லிங்கு. (ச)

அஞ்ஞான தேவதையா மப்பாநீ யுன்பெருமை
யஞ்ஞான பூரணர்தா மேயறிவா—ரஞ்ஞான
மில்லாச் சிறியேங்க ளெப்படியோ காண்பதுநின்
வல்லாண்மை கூறுவையே வந்து. (ரு)

பக்குவம்வந் தாற்றெரியும் பாரென்பார் ஞானிகளென்
றிக்குமொழிப் பேதையர்போ லேசினுய்—பக்குவம்பார்த்

தன்றோ வொருநால்வர்க் காலின்கீ ழன்றுரைத்தான்
பின்றாழுஞ் செஞ்சடையான் பேசு. (சு

பக்குவம்வேண் டாமென்ற பண்பனீ காலம்பார்த்
தொக்கவுரைத் தான்குருவென் றோதியதென்—சிக்குடையாய்
¶முன்னே முரணறுத்தே முன்றூழு முன்னடியார்
தன்மையினைப் பேசகண்டாய் தாழ்ந்து. (எ)

உனக்கே பரிபாக மொத்திலதே லெங்கே
யுனக்கடியர் பாக முணர்வாய்—மனக்கோ
ளறும்வித்தை யாய்ந்தறியா யப்படியே காண்பே
முறுமடியர் சின்னவர்பா லுற்று. (அ)

உபாதி யுபாதியென்பா யோகோ வறியா
துபாதியெனுஞ் சொல்லே யுபாதி—யுபாதி
யெதற்கோமற் றேதோதா னெங்குதிக்கக் கண்டாய்
மதங்காணிம் மாசுரைக்கு மாண்பு. (கூ)

நீசொல்லும் வாசகத்தை நேர்ந்தாய்ந் திடினெல்லா
மாசுகண்டா யுண்மை வழக்கிலையே—பேசுவைரீ
ஞாயமென வொன்றிலும்யா நாடிலமே ஞாயத்தை
ஞாயமெங்க ணன்மதத்தி னூடு. (ய)

(அடாஞானத்தின் றன்மையறைந்தது.)

அன்னியர்தம் பெண்டை யணைவாரை வைதனையுன்
றன்னுடைய ஞானத்தாற் றக்கதே—யன்னியர்தங்
கையிற் பொருள்பறித்துக் காரணஞ்சொல் வேமென்பார்
ஐய! வுரைத்திலையென் னூடு. (க)

மட்டிகளைச் சேர்த்தேதான் மாவாக் கியஞ்சொல்லித்
தட்டிப் பொருள்பறித்துத் தான்வாங்கிப்—பெட்டியிலே
போட்டெடுக்க வஞ்சுகின்ற பூரணமெய்ஞ் ஞானிகளைக்
கேட்டறியா யென்னோ விளத்து. (உ)

வட்டிக்குத் தான்கொடுத்து வர்த்தகமா வேதாந்தங்
கட்டியே விற்பனைசெய் கள்ளர்தமை—விட்டதெவன்
பேசா திகழ்ந்தந்தோ பேசுவையே தற்காணப்
பேசாது ஞாயமிவண் பேசு. (ங)

¶ (உஉ) வது பக்கம், (இக) வது பாடலாற் கண்டுணர்க.

பசியால் வருந்தினர்க்குப் பட்சமா யன்ன
முசியாம விட்டறியா மூடர்க்—கசிமேவு
மந்திரத்தைச் சொல்லி மகிழ்கின்ற மாமூடர்
நைந்திடவென் செய்யகிலாய் நாடு. (௪)

ஊனுண்ண லீக்கி னுடம்புக்கா காதென்றே
யூனுண்டு வாழ்ந்தங் குயர்ஞானக்—கோனென்
றிருப்போரை யெள்ளலேின் னெண்ணமறி யேமால்
விருப்போ வன்னோர்தங்கண் மேல். (௫)

கள்ளாதி யுண்போரைக் காட்டிப் பல்பாவா
லெள்ளாகின் றுயூனி விச்சையினோர்க்—குள்ளே
யொளிக்கும் பதமாக வோரிடமே சொன்னாய்
சளித்ததோ வுன்மனமே சுட்டு. (௬)

(கல்வியாதார விளக்கங்கண்டது.)

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழுதிலரே னன்மையிலென்—றொற்றுமையாக்
கண்டதிரு வள்ளுவரைக் காட்டிலுநீ கண்டனையோ
கண்டவர்போற் பேசவதென் காண். (௧)

கற்றன்றோ நீபாடக் கற்றாய் வெறும்பாட்டை
வெற்ற வெறுஞ்சொல்லை வேண்டியே—முற்று
மறிவுக் கறிவா யறிவிப்பான் றன்னைக்
குறியாமற் கற்றதெவன் கூறு. (௨)

கல்வியோ கல்வியினைக் கற்குங் கசடகலாக்
கல்வியாய் தன்னையே தான்கற்குஞ்—சொல்விதித்தாய்
தன்னையுமெய்த் தேசிகனுந் தன்னையுமே கற்பிப்பான்
றன்னையே கற்றிடுவேந் தான். (௩)

(வத்துநிலைமை வகுத்துரைசெய்தது.)

இல்லையுள தல்லவா மென்றவழக் கோர்நான்கிற்
சொல்லும் பொருள்விரித்துச் சொல்லுவையேல்—வெல்லுவையென்
றன்னையவா ஞானத்தாய் தானேதா னுமென்று
சொன்னதனா லென்னபயன் சொல். (௧)

இல்லையெனற் கெப்பொருடா னேற்கும்பின் னுண்டென்ற
சொல்லி லெதுபொருடான் றோன்றுமா—லல்லவா
மென்பதற்கு மென்னபொரு ளேற்கின்று யாகெடுவாய்
துன்பறவே யீங்கவற்றைச் சொல். (௨)

பொன்னே பணியாம் புதுமையினு லென்கண்டாய்
கொன்னே பணியாகக் கொண்டிடினும்—பொன்னேகாண்
மாறிற்றோ காரியந்தான் மாட்சிகொளுங் காரணத்தி
லேறிற்றோ தோட மிணைந்து. (௩)

பொன்னே பணியாகப் போந்திடுமோ கண்டறியா
யென்னேதா னின்பிரம மெய்த்திடுத—றன்னேரில்
பாசம் பசுமுதலாம் பல்விதமாய் வேறுபடற்
காசறுநா யங்கண் டறை. (௪)

தெரிவன்றி யெங்கே செகத்தென்றாய் நீதான்
றெருவந்தா லன்றோ தெரியுந்—தெரிவின்றி
யெங்கோ முங்கூசா தேசவதா லென்கண்டா
யென்னேநின் வீண்மயறு னீங்கு. (௫)

தெரிவே செகத்தென்றாய் சேர்ந்ததனு லாச்சோ
திரிவன்றே னுண்மையோ செப்பாய்—தெரிவேயெல்
லாமென்ற சொல்லுண்மை யாய்த்திடுவாய் நின்போல்வா
ராமாமென் னும்மவைக்க ணோர்ந்து. (௬)

‡உன்றெரிவுக் கெட்டா னொருவன் கடன்கார
னுன்றெருவில் வந்தா லுதைப்பாயோ—வென்றெரிவிற்
பட்டிலைநீ யாதலினாற் பாழானு யென்றிருந்தேன்
பட்டதெவன் மீண்டுமெனப் பாழ்த்து. (௭)

நானே யெமன்வருவா னற்றெரிவோ டென்றுமிருத்
தானேயிடா தன்னேத்கண் டோதுவாய்—பானேவிர்
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
பங்கடைந்து †வேதம் படித்து. (௮)

*மரத்தானே யன்றி மரமில்லை மேவு
மரத்தானு மல்ல மரமு—மரத்தோது

‡ நீ கடன்பட்டிருந்தும், உன்ஞாபகத்தில் வராதவன் என்பது.
† தமிழ்வேதம்=திருவாசகம்.
* (௨௧) வது, பக்கம் (௭) வது, பாடலிற்போந்ததனைப் (பூர்வபட்சியார்) உபமானமுகத்தால் விளக்கிக்காட்டியது.

வேஷினன் றெழுவாயுன் வேதாந்த நன்ருங்கா
ஞானென்ற வேபிரம முற்று. (௯)

மரத்தான் மரமென்ற மாண்பறியா யெங்கே
மரத்தன்மை விட்டதுகாண் மன்னு—மரத்தானுந்
தானேயுண் டாகுந் தகைமைத்தோ கண்டறியா
தேனோ கெடுவா யினி. (௰)

மரத்தாளோ மீண்டு மரமாகுங் காட்டாய்
மரத்தானை விட்டுவெறு மண்டே—ஞுருத்தோற்ற
மன்றிமர மில்லையென லாகுங்கா ணின்பிரம
மன்றியிலை யிவ்வுலக மால். (௰௧)

அபேதவா தங்கா ணறைந்தாய்வே தாந்த
முபாதியிலை யென்றீங் குறுமோ—சுபாவமதாய்
முத்தி நிலையறியாய் மூன்னுவாய் வேதாந்த
மத்துவித மென்றினிதி ருய்ந்து. (௰௨)

நானறிவன் றென்கைக்கு ஞாயமிலை யென்றதெவ
னோனறிவி லாதென்முன் னேத்துவாய்—வானறிய
மண்ணறிய நீயறிய மாமுனிவோர் தாமறியக்
கண்ணறிவிங் காயினைநீ காண். (௰௩)

கண்டானே காணுங் கணக்குளதோ காட்டாக்கால்
விண்டோ யிரவி விளம்பறியாய்—கண்டானே
கண்டாலன் றோதனையு மற்றதையுங் காணலா
முண்டாக நீயறிவா யோர்ந்து. (௰௪)

தெளிவதாம் புத்தியினைச் சித்தாகச் சொல்வார்
தெளிவுடைய சிவன்முன் சித்தோ—தெளியுங்காற்
சித்தாகுஞ் சிவன் சிவன்முன்னர்ச் சித்தோதா
னெத்தாலுஞ் சொல்வே யிசைந்து. (௰௫)

கண்ணறிவு நீயாகக் காணலா மீசன்முன்
கண்ணுக்குக் காட்டறிவாக் காணுமா—லெண்ணுங்காற்
பானுவறி வென்னப் பகுத்தறியா யாணவத்தி
னேணமூங்கு மின்று யெழு. (௰௬)

சிவஞானத் தண்மை செறிந்திடுமோ தானே
யவனருளா லன்றி யறிவாய்—சிவஞான
மெய்தத் தவஞ்சற்று மில்லாய் பசுஞான
மெய்தினாய் சீசீ யிகழ். (௰௭)

(தத்துவவிளக்கஞ் சாற்றப்போந்தது.)

தத்துவவி ளக்கமெனச் சாற்றினு முன்னளவா
யத்தையே சொல்வித்தா னுலகிழல்—வித்தகனு
மெந்தை யவனருளா லேத்துகின்றோ மன்றேனைச்
சிந்தமலஞ் சேருஞ் சிவம். (௧)

பொன்னிற்றோன் றும்பணிகள் பொன்னன்றி மண்ணுமோ
பொன்னும் பணியுருக்கிற் பொன்னன்றி—யென்னுமோ
வந்தோ வதையுருக்கி லாமோதான் மண்ணென்றாய்
விக்கைதகா ணேனும் விளம்பு. (௨)

சித்திற்றோன் றும்பொருள்கள் சித்தே யசித்தாமோ
சித்தாம் பொருட்டிரள்கள் சித்தன்றி—மற்றாமோ
வந்தோசித் தாமவைக ளாகுமோ தான்சடமாய்
சிந்தாதென் முன்வந்து செப்பு. (௩)

சுத்தவழி வாயிடினீ சும்மா விராமலிவண்
கத்துவதென் சார்போதன் காணீதா—னத்துவிதங்
கண்டாலன் றிச்சிவனைக் காணும்வழி யின்றாமால்
தொண்டாய்த் திரிந்தருளிற் றோய்ந்து. (௪)

(அத்துவிதத்தி னரும்பொரு ளுரைத்தது.)

அத்துவிதத் துண்மை யறியா யறிவொன்றே
வத்துவெனல் விட்டிங்கே மாறாக—வத்துவிதங்
காட்டுவே னென்றெழுவாய் கண்மூடி யானாய்கா
னாட்டுவாய் நின்மதத்தை நன்கு. (௧)

ஏகான்ம வாதியென வேற்றார் பெரியோர்நின்
மோகாந்த காரத்தின் மூலந்தேர்ந்—தேகமாம்
வத்துவே யுள்பொருளாய் வாதிப்பா யாதலினா
லத்துவித மேதுக் கறை. (௨)

ஒன்றே பொருளாகு மொன்றென்னல் விட்டுமரு
ளன்றேநீ யத்துவித மாய்ந்திடுத—லொன்றோ
டிரண்டல்ல வத்துவித மென்பார்காண் மேலோர்
முரண்டெறவே யென்று முனைந்து. (௩)

ஒன்றிரண்டா காம லுபயமுமின் றாகாம
லொன்றுங்கா ணத்துவித மோர்நிலா—யொன்றென்று

நீயேஞே வத்துவித நேர்வா யகம்பிரமப்
பேயேவந் திங்கேதான் பேசு. (௪)

திவிதியோ வத்துவிதஞ் சொல்லானின் போலக்
குவியவே யுள்ளமருள் கூடாய்—புவியின்க
ணத்துவிதஞ் சொன்னு யழிந்துபோ மூன்னேக
முத்தியிலா யென்னே வுணா. (௫)

அறிவுதனி லாநந்த மாநந்தந் தன்னி
லறிவிலதென் முய்பேதை யானு—யறிவின்க
ணுநந்த மில்லையெனி லார்க்கோ வதுமற்றிங்
காநந்த மில்லா யறை. (௬)

ஆநந்தந் தன்னி லறிவில்லை யென்னிலுனக்
கூனந்த மாவதிலை யோர்ந்திடுவா—யாநந்தந்
தானே தனிக்குமென முனெப் படிகண்டா
யேனிந்த வீண்மாய மீங்கு. (௭)

பாலிற் றயிருண்டோ பாலுண்டோ தான்றயிரி
லேலுங்கா ணுத்திவற்றை யென்றிடினீ—பாலேய்ந்
தறிவுதா னுநந்த மாகிப்பின் னுங்கே
செறியுந் தயிர்நிலையைச் சேர்ந்து. (௮)

பாலே தயிராய்ப் பரிணமிக்கு மோதானே
யேலாய் பிரைக்குற்ற மென்னவே—மேலா
வுரைக்குமுய ராநந்த மொத்திடுமோ காணீ
யுரைக்குந் தயிர்முன் னுரை. (௯)

ஒன்றுநிலைதந் தொன்முண தொவ்வா தறிவினிடத்
தொன்றுமா நந்த முணாசெய்வார்க்—கொன்றுங்காண்
பண்ணையு மோசையும் போலப் பழமறைநேர்ந்
தெண்ணுவா யத்துவித மீங்கு. (௧௦)

பேரறிவுஞ் சிற்றறிவும் பேதமிலை யென்றனையுன்
கூரறிவோ வீதறியாக் கொள்கையினு—யீரறிவு
மொன்றே வறிவிக்கு மொன்றறியு மற்றதுதா
னின்முய்ந் நிலைமடமை சேர்ந்து. (௧௧)

எல்லாமா யல்லவுமா யென்றுரைத்தார் தம்வாய்மை
கல்லாய் மினதாகக் கள்ளிணையால்—பொல்லாயென்
முன்னே யொருஞானி யென்ன மொழிந்திட்டா
யென்னேநின் னேழைமதி யே. (௧௨)

"கட்டு முறுப்புங் காணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னென்றுங்—கொட்டி
யவனுளமா கில்லா னுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மாக்கு." (௧௩)

என்ற திருப்பாட்டி னேற்றக்கண் * டெல்லாமா
யன்றுமா யென்ன வறைந்தனரா—லன்றுபெரி
யோரவ் வுயருண்மை யோகோ வறிக்கிலைவீண்
காரியங்கண் டாயதனைக் கட்டு. (௧௪)

அத்துவித மோகா ணபேத மறியாயெம்
மத்துவிதம் பேத மபேதமுட—னித்துவித
மொன்றும்பே தாபேத மொன்றினிலுஞ் சேர்த்திலதா
னன்றறிவாய் சொன்னே னயத்து. (௧௫)

சாயையுரு விற்காணுந் தன்மைபோ லெப்பொருளு
நீயுரைத்தாய் மெய்ப்பொருளி னேர்ந்திடுமென்—றுய்ந்தறியாய்
சாயையுஞ் சாரிடமுந் தாமுளவே லொன்றென்னல்
பேய்மதிகா னுண்டோ பிற. (௧௬)

உருவிருந்தா லன்றோதா னென்றிடுமோர் சாயை
யுருவோ பிரம முரையா—யுருவினிலாஞ்
சாயைதனைக் காண்பவரார் சார்ந்திடுமோ தான்சாயை
மேயபல பேதம் விளம்பு. (௧௭)

(நாட்டபேத விளக்க நவின்றது.)

மனிதாதி ரூபங்கண் மண்ணனவாக் காணு
இனிதவற்றைச் சித்தென்று லேற்பா—ருனைப்போல்வா
ரன்றியிலை காணசித்தா மன்னவைசித் தாமோதா
னென்றவுரை மூட மொழிக்து. (௧)

எப்பொருளு முண்டாங்கா ணைனில்லை யென்றிடுவா
யொப்பின்மதங் கொண்டதனு லோர்போது—மெய்ப்பில்சிவந்
தன்னைநீ கண்டறியாத் தன்மையா லின்றோதா
னன்னையத்த னுமவன்று னுக்கு. (௨)

அஞ்ஞானிக் கேதுசிவ மப்படியே யாருங்காண்
மெய்ஞ்ஞானிக் கிவ்வுலக மெய்யுணரா—யஞ்ஞானிக்

* "எல்லாமா யல்லவுமாய்" என்று திருவிளையாடற்புராணத்திலும், "உல
கெலாமாகி வேறா யுடனுமாய்" என்று சிவஞானசித்தியாரிலும் போந்தவாறறிக.

இல்லாத தாற்சிவயின் இல்லாமற் போயிற்றே
கல்லாயவ் வாறுலகைக் காண். (௩)

நானுமொன் னுள்ளமார் ஞானங்க ளாமென்னை
வானோர் பிரானுள வந்திலனேற்—றுனெனவே
சிவேசர் தந்நிலையைச் செப்பினார்க் கென்பகர்வாய்
நாவேறு நன்மையிலாய் நாடு. (௪)

ஞானத்தை யோர்போது நாமேன்கண் டித்திடுவ
மூனத்தை யேதில்லா தோட்டுவமால்—சேனத்தை
யூர்ந்தோனு மாமலரி லுற்றோனுங் கண்டறியார்க்
கார்ந்தன்பு நாடி யடைந்து. (௫)

நீயேகா ணஞ்ஞான நீந்தகிலா தெஞ்ஞான்று
மோயாது வைகின்று யுத்தமரை—யாயாது
மெய்ஞ்ஞான மீதென்ன மேவியே யஞ்ஞான
மெய்ஞ்ஞாய நாடறியாய் மேல். (௬)

வேதாந்த சித்தாந்த மெய்யாய சில்லாய்நான்
வேதாந்தி யென்றெழுவாய் வெய்யுரையாய்—வேதாந்தம்
வேறோசித் தாந்தத்தில் வேறென்பா யுன்கயமை
நீறுங்காண் சற்றேமுன் னில். (௭)

(சுகநிலை.)

பதியாலுண் டாமின்பம் பார்த்ததுண்டோ வென்ற
பதிதனை யான்மாவைப் பார்த்தோ—வெதிருரைத்தாய்
சொன்னாய் வெறுஞ்சொல்லே சொல்லுவமால் கண்டேதான்
முன்றோன்றாட் கன்பு முதிர்ந்து. (௧)

கண்டனையோ நீயுன்னைக் காட்டுவையோ வுன்னையெனக்
கண்டப் புரட்டனென லாயினைகாண்—கண்டேதா
னுன்னைச் சிரிக்க வுடம்படுத்தா யாகெடுவாய்
முன்னைச் சிலுகறுப்பாய் முன். (௨)

அறிவி னினைவுகள வன்றிவெறும் பாழு
மறிவே மெனவறைந்தா யச்சோ—வறிவுதனைப்
பூரணமென் பாயன்றே போக்கிடுமோ நன்னுதலிற்
சேரணவு கண்டமுதற் சேர்ந்து. (௩)

அறிவென் றெழுமுன்பா லாணவங்கண் டன்றோ
செறிவித் துடலளவாச் செய்தே—மறியேறுங்

கையான் வினைப்போகங் காட்டிநுகர் வித்திடுமா
லையோ வறியா யகம். (௪)

விசாரணையி லெங்கே வியனுலக மென்றாய்
விசாரணையில் லாயென்முன் வேண்டி—விசாரணைசெய்
தாலன்றோ தோன்றுமுனை தாபாஸ சித்தாந்த
மூலங்காண் சொன்னாய் முனிந்து. (௫)

நினைவுஜட மாகுங்கா ணின்னிலைமை யேனோ
நினைவே யனைத்துமென நேரும்—நினைவு
ஜடத்திரளி லொன்றாச் சமையுமேற் றானே
ஜடசித்தா மாறெவனீ சாற்று. (௬)

(இந்துவேத மேதென மறுத்தது.)

இந்துவே தம்போல வில்லைவே றோர்மறையென்
றந்துமுனைக் காய்ந்தே யுரைத்தேமால்—சந்தமுற
* முன்னோ ரிடந்தன்னின் முற்றறிவி லாயீண்டு
மன்னமுறை யேசொல்வ மால். (௧)

வேதமுத லக்கலையும் வேண்டியுரை செய்திடுமால்
பூதமுதல் யாவும் பொருளென்றே—நீதில்
பரிபாக நோக்கியே பல்லுயிர்க்கு மேன்மே
லருணலமுண் டாக வமர்ந்து. (௨)

பூத வுடல்கண்டு போகிப்பா ளிப்புவன
சாதனமேற் றென்னாளுஞ் சாற்றுமால்—நீதி
லுடலே பரமென்ன வுன்போன்றே யின்று
முடனுவர் வேறுசில ரோது. (௩)

அன்னோர் கருணந்த மாக்கூறி யோராண்மாப்
பின்னே தெனலறியாய் பேசுவைநீ—பின்னேநிங்
காண்மாவன் றிச்சிவமு மாயுங்கா லென்றுணக்கேன்
றான்கன்ம ஞானங்க டாம். (௪)

ஆணவத்தி லாழ்ந்துழலு மான்மாவுக் கேகன்ம
மாணுமுயர் பத்திமுதல் வாய்க்குமால்—கோணுறுமந்
ஞானத்தா யுன்ஞான ஞானமோ நான்மறைசேர்
ஞானஞ் சிவஞான நாடு. (௫)

கன்மமுதன் மூன்றுமரன் கண்ணே யியற்றவுணா
நன்மறைகண் ஞானத்தை நாட்டுமோ—முன்னவனே

* (௨௧) வது பக்கம், (௪௨) முதல் (௪௫) வது பாடலீறாகக் கண்டுணர்க.

விட்டுப் பசுவிடத்தில் வேதாந்தப் போலியெனப்
பட்டாய்நீ யேயுன்னிப் பார். (௬)

ஞானமுத லான்குமெங்க ளாதன் பணிகண்டாய்
ஞானியோ நான்கினையு நாடுவன—வூனமிலா
யோகி முதன்மூவ ரொவ்வொன்றை விட்டடைவார்
தேகிக்கு மேலறியாய் தேர். (௭)

சிறைப்பட்ட தேகிபரஞ் செல்லாமை யாலுன்
கறைப்பட்ட சித்தாந்தங் காணு—நிறைப்பட்ட
ஞானமுத லான்குமினி நாடாது விட்டகல்வா
யானபடி லோகா யதன். (௮)

தேவகுரு சொன்னான் றியங்கலோ காயதமே
லாவதெனச் சொன்ன னசுரகுரு—மேவிடவே
மாயாவா தந்தன்னை மாண்டவறி வில்லாயுன்
மாயாவா தத்தை மற. (௯)

எல்லாச் சமயத் தியல்புமிருந் தங்கங்கே
பொல்லா யறிந்தேயின் போற்றுவா—ரெல்லாமா
யல்லவுமா மெங்க ளதிதசித் தாந்தமதை
நல்லவர்மெய்ஞ் ஞான நயந்து. (௧௦)

புறச்சமயி நீயோ புகல்வாய் நிஷேத
முறக்கன்ம மாதிகளை யோகோ—மறப்பில்லா
ஞானி யெனப்பேசி நற்சரியையுஞ் செய்யா
யேனிருந்தாய் வீண்சுமையா யிங்கு. (௧௧)

வேதத்திற் கன்மமுதல் வேண்டியுளா செய்திடினும்
* பேதங்காண் சைவப் பெருநூலில்—வேதந்தான்
கன்மா திகளைக் கழறுமால் காரியமா
யுன்மா லகன்றிடவே யோர். (௧௨)

சைவத்திற் கூறுஞ் சரிதாதி நான்குமுயர்
தெய்வத்தை யேமெய்யாச் சேர்தராலான்—மைவைத்த
கண்டத்தா னேற்றருளுங் காமியமன் றாகவுவந்
தண்டத் தவர்போற்ற வார்ந்து. (௧௩)

* "சுருதிவழி யொழுகினர்கள் சுவர்க்கத்தார்" என்று உமாபதிசிவம் அருளிச்செய்தமையானும், "திகழ்தவள நீறுமரன் கண்மணியு மைந்தெழுத்துந் தேவர்போற்ற - மிகுபரம சிவலிங்கோ பாசனையும் வைதிகத்தில் விதித்தற்றால - மகமகிழு மாகமத்தின் படிமேலாக் தீக்கையடைந் தார்கட்கன்றிப்-புகலருமா னதக்கிரியா பாவனையுஞ் சிவனருளும் பொருந்திடாதே" என்று ஸ்ரீஹரதத்தாசாரியசுவாமிகள் விளக்கினமையானுங் கண்டறிக.

தெய்வமிலா நின்றனக்குத் தேரும் விழாப்பொலிவு
மெய்வழங்கி னுயில்லை மேவிடவென் — றுய்வழியு
மில்லைகா ணின்றனக்கிங் கேனோ கெடுகின்றாய்
சொல்விரயஞ் செய்தே சுழன்று. (௧௪)

தேருந் திருநாளுந் தேடியொரு போதேனு
மீரமிலாய் போக விசைந்திலையால் — பாரமெனச்
செய்யாய் சிவபூசை சேர்வாய் பணந்தேடப்
பொய்யா விதென்னபிழைப் பு. (௧௫)

ஒன்றுமிலா ஞான முறைப்பா யுனதுமுகத்
தொன்றவே பூசவதென் னெண்பொடியே — நன்றுமதை
யின்றுமுதற் பூசா திருப்பையே லென்றூங்காண்
வென்றியிலாய் சொன்னேன் விடு. (௧௬)

உன்பால்வே தாந்த முணர்வாரு நீயுமொரு
தன்மையா நீற்றெழிலைத் தாங்காம — லன்போடு
சேர்ந்தேகா லக்ஷேபஞ் செய்தாலன் றோகிலைக்குங்
கூர்ந்தேநீ கூறிவருங் கோள். (௧௭)

ஊன்விட்டார் தம்மை யுரைத்திடுவார் சைவரென
வானதினு னும்விடுவ தாகாதென் — றேதினைந்தோ
வூனதி யுண்ண லுரையா யுனைச்சேர்ந்தோர்க்
கீனமென நாளு மெடுத்து. (௧௮)

சரிதாதி நிந்தையிவண் சாற்றினு யென்னே
யொருபோது நீராடா யோகாண் — குருதானு
மில்லையோ வாங்கவனு மீதோ வறைந்திட்டான்
சொல்லையோ வந்திங்கே சூழ்ந்து. (௧௯)

பசவா னினைவிற் படரான்கா ணன்றோ
ணகமாதி விட்ட விடத் தன்றே — சுகமாக
நிற்பா னறிவின்முன் னீங்கலா லாணவந்தான்
பிற்பா டறிக்கினிநீ பேசு. (௨௦)

நினைவு பலவற்றி னோர்ந்திடுமா லொன்று
தனையே பொருளென்ன லுறு — நினைவோதா
னீங்காது தானேபின் னீக்கறியாய் நீதானு
நீங்கலெவன் முன்னே நிறுத்து. (௨௧)

சரியைக் கழற்றிமுதற் சாற்றியே பின்னுஞ்
சரிதாதி நான்குஞ்சா தித்தார் — பெரியோர்கா

ஊங்தோ வவர்கருத்து மாகமத்தின் றன்கருத்தும்
வந்தோ திலையருடான் வாய்ந்து. (உஉ)

சரிதாதி நான்கினுக்குஞ் சாலோக மாதி
வருமா றெமக்களித்த வள்ளல்—குருராய
னென்றுரைத்தார் போதத்தி லென்னோ வெதிராளுய்
நன்றறியாய் வந்திங்கே நாடு. (உ௩)

சன்மார்க்க மேமுதலாத் தாதமார்க் கத்தளவுந்
தன்மார்க்க மானவெங்கள் சம்பந்தன்—றன்னைத்
துறவிமுத லாவுரைப்பே மென்றுசொற்ற ருண்மை
யறியவிலா யென்னோநின் னன்பு. (உ௪)

(சைவசித்தாந்தஞ் சாற்றிமகிழ்ந்தது.)

சைவமத சித்தாந்தஞ் சாற்றின யுன்மயல்காண்
சைவமத மென்றதெவன் சாற்றிப்பின்—சைவமென
வீதென் றறியா யிசைத்தாய் சித்தாந்தமென
வோதும் பொருடெரியா துற்று. (க)

பசுபதிபா சத்தின் பகுப்புண்மை யாமால்
சிவடிவா நாட்டுவமுன் னின்றே—பசுவாம்
அறிவென்ற நீதானே யாகுங்காண் பாச
மறியாமை யாகு மது. (உ)

அறிவுக்கெப் போது மறியாமை யின்று
ஸறியாமை கொண்டதனு லந்தோ—வறிவோநீ
சுத்தவறி வாகுமான் சூழா தகற்றிடுமால்
பத்திசெய்வா யன்னோன் பதி. (௩)

அறியாமை யேதென்பா யங்கீ கரிப்பம்
வெறியோநின் போதமிது வேண்டி—யறியாமை
நீங்கவே போதிப்பாய் நேடியே யார்யார்க்குந்
தீங்குரைப்பாய் கண்டாய் தெளி. (௪)

பிராந்தியென வேற்பாய் பிராந்தியென லார்க்கோ
பிராந்தி யெதனிடத்துப் பேதாய்—பிராந்தியஃ
தெப்படிமா றுயோதா னேதகா ணப்பிராந்தி
யெப்படிமா றும்வந் திசை. (௫)

இல்லாப் பசுவாதி யெய்ந்தவா றெப்படிகா
ணில்லாமை கூறலெவ னேருமவை—யில்லா

கிலையா மவைமுன்னே நேர்வதெவ்வன் சற்றே
யலையாம லிங்கே யறை. (௬)

கண்டிலன்யா னேனுமுனக் கண்டவரின் றேவென்னச்
சண்டனே சைவரெவர் சாற்றினர்—கண்டனையோ
நீதானு முன்னை நிறுத்துவையோ காட்டுவன்காண்
மாதாளும் பாகன் மகிழ்ந்து. (௭)

அறியும் பொருளு மறிவானு மொன்றே
வறிவிப்பான் றன்னை யகன்று—யறிபொருடா
னல்லவெனல் போல வறியாப் பொருளுந்தா
னல்லவெனற் கையமிலை யால். (௮)

எல்லாமா யல்லவுமா யென்னுமதன் வாய்மையுமக்
கெல்லாம் விளங்கிடுமோ வென்முன்னே—வல்லாய்போன்
றாத்தைவா லயத்திறந்தா யோகோ வறிவித்தேம்
* பார்த்திலையோ மேலே படித்து. (௯)

ஏகமெனுஞ் சொற்பொருளை யெங்கே படித்தாய்காண்
மோகவிருண் மூழ்கி முதலில்லா—யேகமெனுஞ்
சொல்லின் பொருளதனைச் சொல்லுவேன் கண்டறிவாய்
நல்லோ ருரையை நவின்று. (௧௦)

" ஒன்றென்ற தொன்றேகா ணென்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளேகா—ணென்றின்று
லக்கரங்க ளின்று மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு." (௧௧)

என்னுந் திருவாக்கை யேறு வுணர்ந்திலைசீர்
மன்னுஞ் சிவனடியார் மாட்டடைக்தே—துன்னு
மவர்தங்குற் றேவ லருளிருந்தா லங்காண்
சுவரானு யென்முன்னே சூழ்ந்து. (௧௨)

ஒன்றல்ல வென்பதுதா னென்றலா லத்துவித
மன்றுபல வென்பதுதா னுண்மாவன்—றென்று
முலகமுந் தானன்றென் றோர்கிலா யுன்னே
கலைமென் வந்ததுநீ காண். (௧௩)

* " உள்ளிருப்பை யெடுத்திசைத்தேன் காண்முன் †
யதஸ்த்தே ‡ யுன்னிலைமை கண்டே—யறிவில்லா

† (௨௭) பாட்டானும் ௫ பக்கம், (௧௩) வது பாடலாற் காண்க.

‡ காரைக்க பாடல்களாற் காண்க.

னுன்போ லொருவ னுரைப்பா னிலையென்றே
யன்போ லவன்மே லறை. (௧௪)

மாயையா லிவ்வுலகம் வந்ததெனு மாமறைநீ
யாயகிலா தென்றோ வறைகின்றாய்—மேய
வணுவசையோ கத்தா லகண்டமா மென்றே
யணுவறிவு மில்லா யகல். (௧௫)

ஆயுங்கா னுட்ப நுட்ப மாவதா லென்கண்டாய்
பேயனே நீயணுவைப் பேசுங்கா—னீயொருநல்
வித்தையே கற்றாய்காண் வேறெங்கே போகுமது
சத்தாகு மாயையன்றித் தான். (௧௬)

மாயையென றுணரியாய் மாயா விகாரங்காண்
மேயவுட லாதியிவை வேறுமா—னீயறியா
வாணவமாம் பேரிருளின் காரறிவா ரெம்பெருமான்
காணவருள் செய்யானேல் கண்டு. (௧௭)

மாயையே சத்தியென்பாய் வல்லிருளிற் பட்டதனு
லாயவது மூலந்தா னாயிடுமால்—வேயுமைதோள்
பங்கனுல கத்தைப் படைக்குங்கான் * மண்போன்றே
பங்குடையா ளேசத்தி பார். (௧௮)

பங்குடையாள் சித்தாம் பரனில்வே றின்மையினு
லங்கதனுற் சிற்சத்தி யாயிடுமால்—சங்கரனில்
வேறாகு மாயை விளம்பாய் ஜடமென்றே
கூறுவர்காண் கண்டே குணம். (௧௯)

தாதான் மியமொன்று சாற்றுவார் சிற்சத்தி
மீதாம்பரிக்கிரக மேலொன்று—வேதாந்த
வித்தையிலே வல்லவர்கள் வேண்டியுரை செய்வார்கா
ணத்தைமா யாசத்தி யாய். (௨௦)

" நங்கையினு னுமனைத்துஞ் செய்வதுபோ னுடனைத்து
நங்கையினுற் செய்விக்கு நாயகனை"—யிங்கறிவீ
ரென்றவுரை கேட்டா யிலைமாயை யென்பதுதா
னென்றுங் காப்பொருளா யோர். (௨௧)

எல்லாஞ் சிவமயமே யென்றிடினு மீதறியா
யெல்லாம் பிரமமய மென்றாலும்—வல்லாய்போ னு (௨௨)
றேசுவா யொன்றேகா † னைற்கும் பொருளொன்றோ
மாசுடையாய் வேறாய் மதி.

* கடாதி காரியங்களுக்கு. † மாயாவாதத்துக்கும், சைவ

பிரமஞ் சிவமென்னும் பேர்மாத் திரமோ
வருமுருத்தி ரப்பேரு மன்னும்—பரியாய
நாமங்க ளாயிடவே நாட்டுவமா லெம்பரனுக்
கோமுதலா யுள்ளபல வோர். (உ௩)

* ஒன்றே பிரமமுள தோருங்கா லில்லையிரண்
டென்றே யுரைத்தபடி யேத்திடுமா—னன்றே
யுருத்திரப்பே ராலு முயர்மறைக ளெல்லா
மருத்தமறி யாயினிதி னுய்ந்து. (உ௪)

அவண்மயமே தானாக வாயினு மென்னத்
தவமில்லா யுன்றனையே சாற்றிற்—புவனியிலை
யாயினையோ தானி யவனுக்கு வேறின்றாய்
பேய்மதியாய் வந்திங்கே பேசு. (உ௫)

† உள்ளதுமன் றில்லதுமன் றென்றும் பலவுந்தா
முள்ளும் படியன்றென் றோதினு—முள்ளசிவந்
தன்னைப் பெரியோரத் தன்மைவிரித் தோதினமால்
முன்னே யெடுத்து முடித்து. (உ௬)

உருவாதி மூன்றுமிவ னுண்டாங்கா னன்மா
வொருமூ வகைப்படியே யோது—மருள்விளைவே
யாக வவர்நோக்கி னல்லாது கூறவதற்
காகுமோ வம்மூன்று மால். (உ௭)

‡ " அன்றுந் திருவுருவங் காணாதே யாட்பட்டே
னின்றுந் திருவுருவங் காண்கிலே—னென்றுந்தா
னெவ்வுருவோ னும்பிரா னென்பார்கட் கென்னுரைக்கே
னெவ்வுருவோ நின்னுருவ மேது." (உ௮)

அருள்வடிவ தாமூன்று மல்லாமல் வேறே
பொருளுண்டோ தானிப் புவியி—லிருள்வடிவா
மாயையெனக் கொள்ளற்க மாயா விளக்குடையாய்
மேயபரன் றன்மை விளம்பு. (உ௯)

எல்லாம் பரனுக்கிங் கேற்குமா லின்னருளே
யல்லாமல் வேறுளதோ வாயுங்கால்—சொல்வதெல

* "ஏகமேவாத்விதியம்ப்ரம்ஹா" என்பதும், "ஏகயேவ ருத்ரோ நத்விதியா யதஸ்த்தே" என்பதுமாம்.

† (உ௭) வது பக்கம் (௪) வது பாடலாலும், (௪௧) வது பக்கம் (௩௬) வது பாடலாலும் முறையே காண்க.

‡ காரைக்காலம்மையா ரருளிச்செய்தது.

னிப்படிய னிக்கிறத்த னிவ்வுருவ னென்றவனே
யொப்பவுயிர் தானே யுணர்ந்து. (௩0)

* எம்மனோர் வாக்கியத்தை யேன்றிருடி னய்காணுன்
சம்மதமெல் லாம்போச்சே தானவமாய்—பொய்ம்மதத்தாற்
சைவந் தனையிகழ்ந்தாய் சண்முகனு மெங்கள்குல
தெய்வந் தனைப்பணியாய் சேர்ந்து. (௩௧)

உபாதியெனும் சோதனையிற் றேடுங்கா ணெங்கள்
சபாபதிமுன் வீணே சலிப்பா—யுபாதியென
வெப்போதுங் கூறுகின்ற யேற்போங்காண் சித்கனமே
யொப்போதான் மாயா வுரு. (௩௨)

கண்ணனுங் கண்ணுதலுங் காண்டப னுமவனோ
டெண்ணுமொரு நால்வர்க்கு மெய்தவே—நண்ணியுரை
செய்தார் மாயாவாத சித்தியென்று யுன்னுசை
பொய்தான்பொய் தான்சுத்த பொய். (௩௩)

கண்ணனுப மன்னியர்பாற் கண்டான் சிவகீலையை
நண்ணுமவர் போதத்தை நாடியே—யெண்ணுமுயர்
கீதையிலே கண்ணன் கிளத்தியது ஸோஹந்தா
லோதுங் கருடோஹ மொத்து. (௩௪)

கண்ணன் சிவனடியான் கண்டா யறிவித்தேன்
கண்ணுதலோன் றன்னுண்மை காட்டினன்—நண்ணு
மொருநால்வர்க் கன்றுலி னுற்றகிழற் கீழ்தா
னருநான் மறையந்த மார்ந்து. (௩௫)

வேதாந்தத் தாலே விளங்கிற்றோ வுண்மையிலை
வேதாந்த மூலம் விபரீதம்—போதாகின்
றையம் பெருகியதா லாய்ந்துரைத்தான் சித்தாந்த
மெய்யொன்ற வக்கணமே மேல். (௩௬)

சங்கரனர் சங்கிதையிற் சாற்றுங்கா ணிவ்வுண்மை
யெங்கறிவாய் நீதா னிருந்தவிட—மங்ககலாய்
மேலோ ரவைக்கண்ணே வேண்டியடைந் தாலன்றோ
நூலோர் மதத்தெரியு நோற்று. (௩௭)

வேதாந்த மென்றதுகின் வேதாந்த மன்றுங்காண்
கீதா முபநிடத மேவுமால்—நாதாந்தங்
காட்டுஞ்சித் தாந்தமெனல் கண்டாய் சிவாகமமே
யோட்டுங்காண் மாயா வுரு. (௩௮)

* அருணகிரிநாதர் திருவாக்கு.

ஆகமாந் தத்தை யறைவதாற் சித்தாந்த
மாகவே தாந்தமினி யாயிடுமா—லூகம்
பகரவே தான்பூர்வ பக்கமாய்ப் பாராய்
அகாமுந் தானறிகி லாய். (௩௯)

பண்டிதன்யா னென்றறிது போலப் பகர்ந்தாரோ
கண்டனைபோற் பேசவதென் காட்டறியாய்—பண்டிதன்யா
னென்பாயுன் சித்தாந்த மெற்குமா லெப்பொருளு
முன்பாலே யோதுவதா லுற்று. (௪௰)

தேகவா தந்தன்னைச் செப்பினாய் சைவரிட
மோகமோ வான்மா முதலாங்காண்—ஆகெடுவாய்
* சத்தாஞ் சிவமல்ல தானசத்தாம் பாசமல
சத்தசத்தா மென்றறிநீ தான். (௪௧)

சத்தசத்தின் றம்முண்மை தானீ தெனவறியா
தத்தைக் குணமென்று யார்கொள்வார்—பித்தா
அவியறிவு நீயென்று னென்றுரைத்தா ரண்டோர்
வலியுண்டே லின்றென்முன் வா. (௪௨)

சரியைகிரி யாயோக சாதனங்க ளின்றி
யுரியசிவ ஞானந்தா னுண்டோ—சரியைமுத
லெல்லா முபகார மேற்பார் பெரியோர்தாம்
பொல்லாய்சிந் திப்பாய் புலர்ந்து. (௪௩)

ஞானியென வுன்னை நவில்கின்றாய் மற்றையரஞ்
ஞானிகளா மென்ன நகையாங்காண்—ஞானிலத்தி
லேசுவர்கா ணஞ்ஞானி யென்றே யனைவரையு
மேசுமதத் தோரங் கிரு. (௪௪)

புத்தா புலையேனைக் காவென்று போங்கினர்காண்
தத்துவரா யப்பெயரார் தாமென்னே—பித்தோ
வருகா வடியேனைக் காவென் றறைந்தார்
முருகா வெனல்விட்டு முன். (௪௫)

ஏசுவெனுஞ் சொல்லு மெழிலுன் மறைமேவு
மீசனெனுஞ் சொல்லு மினிதொன்றாய்ப்—பேசவுனக்
கென்றோ கெடுமதிதா னென்செய்தாற் றீருமினி
யன்றோ சகிப்பவர்தா மார். (௪௬)

* இவ்வுண்மை (௧௪) வது பக்கம், (௮௫) வது பாடலானும் போந்தவா
றறிக.

ஏகான்ம வாதியுனக் கேனோதா னத்துவிதந்
தேகான்ம வாதிமகிழ் தேசிகனே—மோகாதி
கொண்டா யனைத்தையுநீ கொண்டதனு னீயேயாக்
கண்டா ரிகழ்ந்திடவே காண். (௪எ)

அத்துவிதத் தின்மேலு மாய்ந்தனைபோற் பேசமருள்
வித்தை படித்தனைகாண் வெவ்விடமே—யொத்தனையுன்
கத்தாம் பெருஞ்சத்தங் கண்டே யிகழுவரால்
சித்தாந்தச் செல்வர் சினந்து. (௪அ)

பூசையா லொன்றும் பொருளில்லை யென்றாயுன்
னாசையா லன்றே யதற்கழுவாய்—பூசையைவிட்
டென்னே பழிக்கின்றா யெங்கள்சிவ நாமத்தைத்
தன்னே ரிலாமடமை தான். (௪௯)

மாதேவா சம்போகந் தாவென்ன மாட்டாயென்
மாதேவா சம்போகந் தாவென்பாய்—மூதேவி
யாயினைகா னுன்னை யகலாள்கா ணுங்கவனுஞ்
சேயெனவே நாளுஞ் செறிந்து. (௫௦)

கண்மூடிக் கொண்டதனாற் காணுமிங் காலாயுமென்
றெண்ணுமால் பூசையதை யெய்ந்தனைகாண்—மண்மாரி
யென்னவே போத மிசைத்திடலா வில்லையுல
கென்னவே பேரிருளி லேய்ந்து. (௫௧)

நினைப்பு மறப்பேது நீண்மனமுந் தானே
தனைத்தெனலும் யாவோ வறையாய்—கனத்தவிரு
டன்னி லழுந்திடுவாய் தானும் பிரமத்தி
லென்னிதுகாண் மூட மியம்பு. (௫௨)

சைவனாயோ நீவென்றாய் தானுரு மேட்டிலழுந்
தெய்வமிலாய் சீசீ சிரிப்பாங்காண்—செய்வதினி
யென்னே புகன்றிடுவா யேத்தினுன் சைவனெனச்
சொன்னாலிங் கார்கொள்வார் சொல். (௫௩)

ஒழுவிலொடுக் கங்கண்டு முன்வாய் திறக்க
விழிவில்லையோ நாணின் கிசையாய்—பழிபாவ
மஞ்சாய்வே தாந்த மறைந்தாய்சித் தாந்தத்தின்
விஞ்சுமென நெஞ்சில் விழைந்து. (௫௪)

மேலே விளம்பினமால் வேதாந்த சித்தாந்த
நாலாய்ந் தறிந்திடவே நண்ணுணர்வோர்—மாலாரும்

பேயாகேள் வேதாந்தம் பேசுமுடல் சித்தாந்த
மாயா யுயிரொன் றகம். (௫௫)

வேதாந்த மாங்கனியின் வேறாகாச் சித்தாந்த
போதமாஞ் சாரத்தைப் போகவிடா—தாதரவு
பட்டே நுகர்ந்திடுவார் பாரிற் பெரியோர்நீ
விட்டே யலைவதென்ன வீண். (௫௬)

இவ்வா றெடுத்தநுவா தஞ்செய் தகற்றினரா
லவ்வாத நூறு னகன்றிடவே—செவ்வேதன்
சித்தாந்த மாஞ்சைவ சித்தாந்தங் காட்டியுயர்
சித்தாந்தி யார்தாஞ் சிரித்து. (௫௭)

சித்தாந்தத் தின்மேலோர் சித்தாந்த முண்டானுற்
சித்தாந்த மென்றிதனைச் செப்பலெவன்—சித்தாந்தங்
கண்டேன் கருணையினுற் காருமென வீழ்ந்தடியிற்
றெண்டானு னன்றேன் றுணிந்து. (௫௮)

போலிவே தாந்தத்தைப் போக்கினேன் புண்ணியநின்
னூலியான் சேர்ந்த லாயினேன்—வேலியென
நின்று யெனைத்தடுத்து நீணிலத்தி லிப்படியார்
வென்று ரெனைமறுத்து மேல். (௫௯)

செய்வதெவன் கண்டாய் சிறியேன் பிழையனைத்து
மையனே நீயன்றி யார்தானே—வையகத்திற்
குற்றம்பா ராமற் குணமாகக் கொள்ளவல்லார்
மற்றிதற்குண் டோதான்சைம் மாறு. (௬௦)

என்றே பலதரமு மேத்துவா னன்புநிலை
நன்றிருக்கு மேலா நலமோர்க்கே—யன்றே
திருநோக்க மேமுதலாந் தீக்கையா லன்னேன்
கருவே றறுத்தனரால் கண்டு. (௬௧)

வாழ்த்து.

சித்தாந்தம் வாழி சிவனு ரருள்வாழி
சித்தாந்தச் செல்வர் திறம்வாழி—சித்தாந்த
சாத்திரங்கள் வாழியெங்கள் சம்பந்த ரம்மைதிரி
நேத்திரரும் வாழி நிலத்து. (௬௨)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஸம்பந்ததீர்த்த சரணாரவிந்தார்ப்பணமஸ்து.

உ

சிவமயம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௪	௧	௩	காணு	கண்டு
௬	௨	௨	நிலமை	நிலைமை
௮	௧௪	௪	சத்தி	சத்தி
௯	௨௭	௧	யெல்லா	யெலா
௧௰	௩௧	௨	மத்தை	மதை
௧௧	௪௧	௪	காய்ந்தவார	காய்ந்தவரா
௧௪	௬௭	௨	யோகா	யோகோ
௧௫	௩	௨	மயபில்	மயலில்
௧௯	௨	௩	றோரா	தோரா
௧௯	௨௪	௩	ணின்னுவர்	ணின்னுமவர்
௧௯	௨௭	௪	சேய்	செய்
௨௩	௩௰	௨	செல்	சொல்
௨௧	௧	௪	௬	௬
௩௧	௬	௪	௬	௬

இனி அச்சிடும் புத்தகங்கள்.

பெரியபுராணம் (மூலமும், உரையும்.)
திருவிளையாடற்புராணம் ,,
பிரபுலிங்கலீலை விருத்தியுரை.
திருக்குறிச்சியவிவேக கண்டநம்.
ஸ்ரீநீலகண்ட விஜயம்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஸாம்பாயபரப்பிரம்ஹணே நம:.

சித்தாந்தரத்நாகரம்.

ஆபாசஞானநிரோதம்.

இஃது,

சித்தாந்தத்தலைவர்க்குத்

தொண்டுபூண்டொழுகும்

சூளை,

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE MEMORIAL PRESS,

No. 39, THUMBOO CHETTY STREET.

15th October 1882.

ணைவேண்டாது. சதசத்தாகியபசுவுக்கே பாசம்விலகவேண்டியபடியா லிந்தவிசாரம் அவசியமாதல்பெறும். தன்னிலக்கணமும், தலைவனிலக்கணமும், தனக்குந் தலைவனுக்கு மிடையாகநின்ற பாசவிலக்கணமும் அறிந்து மலத்தினின்றுங்கழன்று சிவனையணைந்து இன்பநுகரவேண்டிய சீர்ப்பாடு பசுவுக்குண்டாவதாகச் சைவநூல்கள் கூறுவதமையும். ஏகமாகிய பிரமம் தன்னை யேகமென்று விசாரிப்பதெற்றுக்கு? பிரமத்துக்குவேறுபொருளிருந்தாலன்றோ விரண்டென்னு மெண்ணுக்கேனு மிடமுண்டாகும்? இரண்டாவது பொருளே யில்லாதபோது ஏகமென்னுஞ்சொல்லெங்கிருந்து பிறந்தது? ஏகமென்னுஞ் சொல்லொன்று பிரமத்துக்கிரண்டாவதாக முளைத்ததே புதுமையாம். இப்படியே பிரமம்-சத்து என்பனவாதி பேர்களமைந்தமையும் புதுமையே! இவை விவகாரத்தால் வந்தபேரென்பார்கள். விவகாரத்துக்கு மதுவே நியாயமாகி யலக்கணுண்டாயழியும். அன்றியும், காலத்திரயத்துமுள்ளது சத்தென்பது கேவலம் ஆபாசமாம். சத்தேயன்றோ வுள்ளது? அதனோடு காலத்திரயமுளதாகப் பெற்றதென்னை? சத்தொருமுதலும், காலமொரு முதலுமாகின்றமையால் ஏகமெடுபட்டுப்போம். என்றுஞ் சத்தாகியசிவமொருபடித்தாயிருக்குந் தன்மைத்தென்னுஞ் சைவமுடிபோவெனிற் காலம் பாசத்தில்வேறானதன்றென்னுந்துணிவா லிழுக்கடையாது. இன்னமுரண்கொண் டிழிவுற்ற மாயாவாதம் சைவசித்தாந்தத்தி லொப்பமுடிந்த சமசரமாதல்சாலாது. இன்னும் விரிக்கிற் பெருகும்.

சைவர்,—பசு - சதசத்து. இஃது ஜகசமரணப்பட்டு வருந்துந் தன்மைத்து.

மாயாவாதி,—சதசத்து-ஒரோவொருகாலத்துளதும், ஒரோவொருகாலத்திலதுமாவது.

இவ்விருகூற்று மொன்றெனச் சாதிக்கவேண்டி ஆன்மா ஜகசப்பட்டபோது தோற்றமா யுளதாகலின் ஒரோவொருகாலத்துளதெனவும், அது மரணப்பட்டபோது தோற்றமா யிலதாகலின் ஒரோவொருகாலத்திலதெனவும் அறிவுகெட்டோர்க்கு மாயாவாதியை மதமடங்கச் செய்வாம்.

சைவநூல்கள் ஆன்மா ஜநநப்பட்டதை யோர்தேகத்தை யெடுத்ததெனவும், மரணப்பட்டதை யோர்தேகத்தை விடுத்ததெனவுங் கூறும். எடுக்கப்பட்டதும், விடப்பட்டதுமாகிய தேகத்துக்கு வேறாக வதையெடுத்ததும், விடுத்ததுமாகிய வான்மா ஸதோதயமாயுளதென்பது தீர்மானமாகையால், ஒரோவொருகாலத்துளதும், ஒரோவொருகாலத்திலது மாவது என்று ஆன்மவிலக்கணங்கூறு மாயாவாதத்தோடு எங்ஙனேசைவம் ஸமானம்பெறும்? உள்ளது இல்லதாவதும், இல்லது உள்ளதாவதுங் கூடாமையாலுள்பொருளெக்காலத்து முள்ளதும், இல்பொருளெக்காலத்துமில்லதுமாகவேமுடியும். ஜநநப்பட்டபோது தேகத்திற் கூடியுள்ளதும், மரணப்பட்டபோது தேகத்தை நீங்கியுள்ளதுமாகிய விருப்பு மாறாமையா லுள்பொருளாகிய வான்மாவெப்போது முள்ளதென்பதே தீர்மானம். ஒருதேகத்தைவிட்டுப் பிரிந்தவான்மா வேறுதேகத்தை யுடனே விணக்கிடாக வெடுத்துக்கொள்வ துண்டாகையாலும், எடுத்தெடுத்தும், விட்டுவிட்டு முழன்று திருவருளான் மலங்கழன்றபோது சிவனோடு வேறறக்கலந்து சிவாநுபவம் பண்ணிக்கொண்டு நித்தியமாக நிற்பதொன்றாகையாலும் ஆன்மாவென்று முள்ளதென்பது சாதிக்கப்பட்டது. பரமார்த்தத்தி லில்லதும், விவகாரத்திலுள்ளது மென்று ஜீவலட்சணத்தைப் பிரதிபாதிக்கு மாயாவாதமும், சத்தோடு சேர்ந்து சத்தாயும், அசத்தோடுசேர்ந்து அசத்தாயுஞ் சத்துமசத்துமாகாமல் சதசத்தாயுள்ளதென்று ஜீவலட்சணத்தைப் பிரிதிபாதிக்குஞ் சைவசித்தாந்தமு மொன்றாவது எங்ஙனங் கூடும்? அசத்தோ டொருகாலத்துஞ் சத்தோடொருகாலத்துஞ் சேர்ந்திடு முண்மையா லிரண்டுகாலத்து மான்மா நித்தியமென்பது பெறப்படுதலால் ஒரோவொருகாலத் துள்ளது மில்லது மென்று பிதற்று மஸப்யத்தோ டொன்றாது! ஒன்றாது!! அசத்தோடுசேர்ந்தது பெத்தமும், சத்தோடு சேர்ந்தது முத்தியுமாகையால் இவ்விரண்டையு முடைய தொருபொருளே யோர்காலத்துள்ளது, ஓர்காலத்தில்லது என்றுகூறுவது சர்வாஸங்கதம். ஜீவனது மலத்தையே விவகாரமெனவும், மலநிவிர்த்தியையே பரமார்த்தமெனவுங்கொண்டு புலம்புமம்மதத்தைப் பசுமார்க்கமென்று மேலோர்நிச்சயித்தலால், அநாதிமுத்தசித்துருவாகிய பதிஞானங் கைகூடப்பெறாத பதிதமார்க்கமென்பதே தீர்மானம்.

சைவர்,—பாசம்-அசத்து. இஃது பொய்யாகித் தோன்றி நின்றழியுந் தன்மைத்து.

மாயாவாதி,—அசத்து, சொன்மாத்திரையாயுந் தோற்றன் மாத்திரையாயுந் தனக்கெனப் பொருளொன்றின்றித் தோற்றுவது.

இவ்விருகொள்கையுமொன்றேயெனச்சாதிக்கவெழுவர். அதுகூடாது. பொய்யாகியென்றது உருத்திரியுங் காரியப்பாட்டை யென்றறிக. கடகமாயிருந்த பொன் சரப்பளியாகுங் கால் முன்னிருந்த தோற்றம் மறைந்தாலும், மீண்டுமது கடகமாகுங்காற் சரப்பளித்தோற்ற மறைந்ததாலுங் காரியத்திரிவையே பொய்யென்றல் சாலும். அதுபோலுவமித்தறிக. அன்றியும், ஒளிக்கு முன்னிருண்முனைத்துத் தோன்றாதவாறுபோற் சத்தாகிய சிவத்துக்கு முன்னர் அசத்தாகிய பாசமுனைத்துத் தோன்றாமையாலு மதனைப் பொய்யென்றல் பொருந்தும். கதிரொளியினது சத்திக்குமுன்ன ரிருட்சத்தி யடங்கிக் கிடந்ததன்றி யவ்விருளாகியமுதல் அறவே நசித்ததின்றெனவறிக. இப்படியேயன்றோ விருட்சத்திக்கு முன்னர் நேத்திரப்பிரகாசசத்தி யடங்கிக் கிடக்கும்? நேத்திரப்பிரகாச சத்தி யிருட்சத்திக்கு முன்னர் தலையெடுக்காததுகொண்டு அதற்கபாவஞ் சொல்ல முடியாதாற் போலவே யன்றோ சத்தின்பிரகாசத்துக்கு முன்ன ரப்பிரகாசத்தை யடைந்திருப்பதுகொண்டு அசத்தென்னுமோர் முதல்கிடையாதென்று சொல்லப் பண்டிதராயுள்ளபேர்க்கு நாவெழமாட்டாது? சத்துக்கு முன்னரசத்தும், அசத்துக்கு முன்னர் சதசத்துந் தலையெடுக்காமையா லவற்றை யில்பொருளென்றல் கூடாது! கூடாது!! அவ்வவற்றின் சத்திகளேயன்றி முதல்கெடாதிருக்கு முண்மையால். காரணத்தா லுண்மையுங் காரியத்தா லின்மையுமாகு மிலக்கணங் கண்டபின்ன ரவ்வசத்துக் கபாவஞ்சொல்லுதல் யாண்டு மிசையாதென வறிக. மேலிடத்திற் கம்பளம்-மயிர் முதலிய வுபமானங்

களைக் காரியகாரணங்களாக விளக்கி யுண்மையை நிறுத்தியபடியாலு மீண்டுணர்த்தப் புகுந்த அசத்தினது தன்மை வெளிப்படும். இந்தவிசாரத்தாற் பொய்யாகியென்று அசத்தைப் பிரஸ்தாபித்த வுண்மை வெளிப்படலா லினித்தோன்றி நின்றழியுந் தன்மைத்து என்பதையு முறையே விளங்க வுரைப்பாம்.

அசத்தென்னும்பாசம் உபாதானமாயிருந்து அதினின்றும் பிரபஞ்சகாரியமுண்டாவதனையே தோற்றமெனவும், அந்தக்காரியம் தனது வியாபகத்திலியங்க விடங்கொடுத்திருப்பதனையே திதியெனவும், அது தன்னி லொன்றுபட்டொடுங்கி மறைவதனையே லயமெனவுஞ் சைவநூல்கள் கூறுகையால், தோன்றுதல், நிலைபெறுதல், அழிதல் என்னு முத்திறப்பாகு பாடுகளு மினைத்தென வெளிப்பட்டன. காரியமுண்டானபோதும், காரியம் நிலைதிரிந்தபோதும், காரியம் அழிந்தபோதும் உபாதானமாகிய காரணமழிந்ததின்றாகலின், அவ்வுபாதானமாகிய அசத்தை யபாவப்பொருளென்றல் சாலாது. அஃதபாவப்பொருளாகுமேற் புனருற்பவமொடுங்கினவிடத்தினின்று மீளவுண்டாமென்னுந் தருக்கமழியாநிற்கும். காரியமுங் காரணமு மழிந்து அபாவமாகுகையில், எண்ணிறந்த கற்பங்களையிசைக்கும் வேதாகமங்களுக்குஅப்பிராமாணியத்வமுண்டாம். பிரமம்நித்தமாகையா லதனிடத்திலத்யாஸமாகத்தோன்றிநின்று மறைந்துவரு முலகத்தையே கற்பபேதங்களால் வேதாதிகள் கழறுவதெனின், மேலிடத்தி லத்யாஸவாதத்தையும், காரணகாரியவாதத்தையு மினிது விளக்கிச் சகசிவ பரங்களினது விஜாதித்தன்மையை விரித்துள்ளே மாகையால் அது கூடாது. பிரமத்தையே யுலகஸ்ருஷ்டிக்குப் பரமகாரணமாக வேதாதிகள் கூறுவதின்றேவெனின், அதனுண்மையை விரிப்பாம். நிலங்குளிர்ந்தவழி யதனிடத்திட்ட வித்தினிடத்திருந்து அங்குரமுண்டாயினமையால் பிரமமே ஜகத்காரணமென்றலமையும். நிலம், வித்து, அங்குரம் என்னும் பாகுபாடுகளை விசாரிக்குங்கால், நிலத்திலிருந்துவித்தில்வழி அங்குரந்தோன்றுமாறெங்ஙனம்.? நிலமில்வழியும் வித்தினின்று மங்குரந்தோன்றுமாறெங்ஙனம்? அங்குரமாகியகாரியம் வித்திலுண்டானதா? அல்லது நிலத்திலுண்டானதாவென்று யோசிக்கையில் வித்தினிடத்ததேயாகி யெப்படி நிலத்திலுண்டானதென்றுகூற லமையாதோ, வப்படியேயன்றே வுலகமாகியகாரி

யம் மாயையிலுண்டானதேயாகிப் பிரமத்தினிடத்ததென்று கூறுதல்பேதிக்கப்பட்டழியும்? பிரமம், மாயை, உலகம் என்னும் பாகுபாடுகளை விசாரித்து உபமேயமாகிய விவற்றினுண்மையைமேற்காட்டியவுபமானவாயிலாகத்தெளிந்திடுக. அங்குரம் வித்திலுண்டாயிற்றென்றாலும், அல்லது நிலத்தி லுண்டாயிற் றென்றாலும் எப்படிப்பொருந்தி யுண்மைக்குக் கெடுதி நேர்ந்திலதோ, அப்படியேயன்றோ வுலகம் மாயையி லுண்டாயிற்றென்றாலும், பிரமத்திலுண்டாயிற்றென்றாலும் பொருந்தி யுண்மைக்கொரு கெடுதியுமுண்டாகாது நிலையுதல்பெறும்? இப்படி விசாரித்தறிவதொழிந்து சைவநலத்தோ டொப்புடையதாக வவ்வாபாசகர் கூறுமவல சித்தாந்தத்தை யினிக்கொஞ்சம் விசாரித்து ஒழிப்பாம்.

அசத்து - சொன்மாத்திரையாயுள்ளதென்பர். இது சொன்மாத்திரையாயுள்ள சசவிஷாணத்தோடன்றோ ஒக்கும்? சசவிஷாணம் என்பது முயற்கொம்பாகையால், அது தனுகரணபுவனபோகங்களாய் விரிந்த பிரபஞ்சத்தோடெங்ஙனே யொப்பிட வுரித்தாம்? அநுபவ வேத்யமாகிய வோர்பொருளைச் சொன்மாத்திரையாகக்கூறுத லெங்ஙனே பொருந்தும்.? சசவிஷாணம் அநுபவத்துக்கு வாராமலும், தனக்கென வோர் முதலில்லாமலு மிருப்பது கொண்டே யன்றோ சொன்மாத்திரையா யுள்ளதென்று யாவருமங்கீகரிப்பர்? அங்ஙனமல்லாத பிரபஞ்சமாகியவசத்தைச் சொன்மாத்திரத்தது என்று கூறுவது சோம்பேறி வாதமாகவே முடிக்தது. இனித் தோற்றன்மாத்திரையாயுள்ளதென்பதனையும் விசாரிப்பாம். இது மருமரீசிகை யென்னுங் கானற்சலத்தோடுவமிக்கப்படும். கானலிற்சலம் தோற்றன்மாத்திரமாயுள்ளதன்றி அதுவும் அநுபவத்துக்கு வாராது. இவ்வுபமானதிருஷ்டமாகிய பிரபஞ்சம் அநுபவவேத்யமாவதொன்றாகையால், விரோதம் பெற்றழியும். இன்னுங் கானலிற் சலமுண்டாவது சூரியனது உஷ்ணசையோகத்தாற் கண்ணினது குற்றமாம். இங்கே போந்த கானற்சலத்தில் கானல் ஒன்று, சலம் ஒன்று, கண்டகண்ணொன்று, கண்குற்றமொன்று, காரணமாய்நின்ற கதிரொளியொன்று, அதனுஷ்ணமொன்றுஎன்னும் விவிதமுண்டாகையால் அசத்துக்கபாவங்கூறிப் பிரமமொன்றேயெனச்சாதிக்கு முபமேயமெங்ஙனேநிலைக்கும்.? அன்றியும், ஒருபமேயத்தைச் சாதித்தற்கு ஒன்றிலொன்று முரணிய

விரண்டுவமானங்களைக் காட்டிய அறியாமையும் வெளிப்பட்டது. முயற்கொம்பு சொன்மாத்திரையாயுள்ளதும், கானற்சலம் தோற்றன்மாத்திரையாயுள்ளது மாகின்றமையால். சொன்மாத்திரையாயுள்ளது தோற்றன்மாத்திரத்ததாவதும், தோற்றன் மாத்திரையாயுள்ளது சொன்மாத்திரத்ததாவதுங் கூடாமையா லிவ்விரண்டுபமானங்களையும் அசத்தாகிய பிரபஞ்ச நிருபணத்தி லவமொடுத்துக்கொண்டது கேவலம் அஸங்கதமாகவே முடிந்தது. இன்னபேரவதியின் முடிந்த வஸ்து நிருபணம் சைவஸித்தாந்தத்தோடொப்பமுடிந்ததாகக்கூற வெழு மவலஞானமுமடியோடே சாய்ந்ததெனவறிக.

சைவர்,—தோற்றிநின்றழிவதாகிய அசத்து காரியமும், அநாதிநித்தியமாகிய மாயை காரணமும் ஆம்.

மாயாவாதி,—காரணமெத்தன்மைத்தோ அத்தன்மைத்தாகவேயன்றோ காரியமிருக்கவேண்டும்? அநாதி நித்தியமாகியமாயையில், தோன்றிநின்றழிவதாகிய அசத்து காரியப்படுமாறெங்ஙனம்? அதாவது=அநாதிநித்தியமல்லாத பிரபஞ்சங் காரியப்படுமாறெங்ஙனம்?

அநாதியி லாதிபிறப்பது கூடாதெனவும், அநாதியிலநாதியே பிறக்கவேண்டு மெனவும் விபரீதமாக வினவு வதன்முன்னர், காரணத்திற் காரியமுண்டாவது கூடாதெனவுங் காரணமே பிறக்கவேண்டுமெனவுமன்றோ அவர் கடாவுதல்வேண்டும்? ஒவ்வொருபொருளுந் தொழிலுங் குணமுங்கொண்டியங்குகையில், தொழிலியக்கத்தாலுண்டாகும் விகாரத்தையேயன்றோ காரியமென்ற லமையும்? அங்ஙன மியங்குகையில் அவ்வவற்றின் குணங்கெடாமலிருப்பதையே யன்றோ வுரியவிலக்கணமென்று கூறுதல் கூடும்? காரணமாகிய மாயை ஜடமாயுள்ளது. அப்படியே யன்றோ வதன் காரியமாகிய பிரபஞ்ச பேதங்களும் ஜடமாயிருக்கின்றன? இரண்டிடங்களிலுந் தன்மை குன்றாமையாற் காரணமெத்தன்மைத்தோ காரியமு மத்தன்மைத்து என்னுஞ் சித்தாந்தியார்கூற்று நிலைபெயர்ந்திலது. அநாதியிலநாதியே பிறக்கவேண்டுமெனின், ஓர்பொருள் தோற்றமின்றி யிருந்த

காலத்தை யநாதியெனவும், அந்தப்பொருள் காரியப்பாட்டை யடைந்த காலத்தை ஆதியெனவுங் கூறுவதால் அநாதியிலாதி பிறந்ததாகக் கொண்டு குளைப்பது மதியீனமாம். இங்கே விசாரிக்கத் தொடங்கியது அநாதி, ஆதியென்னுங்காலங்களி னிகழுமோர்பொருளையே யாகையா லஃதிரண்டிடத்துந் தன்மை குன்றாம லிருக்கக் கண்டு ஏன் அடங்கிலர்? அநாதியென்பதும், ஆதியென்பதும் அஸத்தாகிய பாசத்தி னிலக்கணமன்றென வெளிப்பட்டமையால், அநாதிஆதியாகுமாவென்றுகடாவியமதங்காலேவாரிக்கொண்டது.

இனி நித்தியமாகிய மாயையினின்றும் அநித்திய மாகிய பிரபஞ்சந்தோன்றுமா வென வினவியதையும் விசாரித்தொழிப்பாம். நித்தியாநித்தியங்களி னிலக்கண மினைத்தென விசாரியாமையே யன்றோ விம்மூடவினாவுக் கிடஞ்செய்தது? சொர்ணம் நித்தியம். பூஷணம் அநித்தியம். கடகம், பதக்கம், குண்டலமாதி வேறுபாடுகளாற் சொர்ணமொன்றுதானே பூஷணமென்று பேர் பெற்றமையால் அவ்வேறுபாடுகளுக்கே யன்றி அவற்றைக்கொண்டியங்கிய பொருளாகியசொர்ணத்துக்கு எங்கே முன்னும் பின்னும் அநித்தியஞ் சித்தித்தது? இதனால், நித்தியத்தில் அநித்தியம் பிறந்ததில்லை யென்பது சாதிக்கப்பட்டது. வேறுபாடுகளாகிய விகாரத்துக் கேனும் அநித்தமுண்டே யெனின், அந்தவேறுபாடுகளு மடங்கியிருப்பதன்றி யறவே யொழிந்தனவன்றாம். அறவே நசித்தனவென்னின், மீண்டு மந்த ஸொர்ணத்திலிருந்து வரமாட்டா. விகாரித்துவருந் திரிவால் அதை யநித்தமென்றல் சொன்மாத்திரமாம். விகாரித்தபோதும், அதற்கு முன்னுமிருந்த சுபாவ வேறுபாட்டை விளக்கவேண்டியே அநித்தம், நித்தம் என்னும் வழக்குகளுண்டாயினமை யறிக. நித்தப்பொருள்களே யன்றி அநித்தப்பொருள் கிடையவே கிடையாவென்பது சைவநூற்றுணிவாகையால். இந்தவுபமானத்தாலுபமேயம் வெளிப்படலால், அஸத்திலக்கணமறியாது அரற்று மஞ்ஞானிகள் கூற்றழிந்தது! அழிந்தது !!

சைவர்,—கதிர்முன் இருள் முனைத்துத் தோன்றாதவாறுபோலச் சத்தினெதிர் அசத்து விளங்கி நில்லாது.

மாயாவாதி,—அசத்து இருள்போல அபாவபதார்த்தமே யன்றித் திரவியமல்லவென்பது ஸ்வதஸித்தம்.

இருளை அபாவமென நாட்டற்கு அம்மாயாவாதி பின்னுங் கூறுவான். (யாதொரு வஸ்துவையும் ஒளியைக்கொண்டு பார்த்த பின்னரோ நன்குதெளிகின்றதாதலானும், அவ்வொளியைக் கொண்டு இருளைக்காண வென்றால், இஃது காணப்படவில்லை யாதலானும் பேரொளியுடைய தேயுப்பொதுமையின் அபாவமே யிருளென்று தெள்ளிதிற்றுணிதற்பாற்று) என்று அவன்பிதற்றும் பேதமையைக் கொஞ்சம் பரியாலோசிப்பாம். ஒளியினது சத்தி வியாபகத்தில் வியாப்பியமுற்று இருட்சத்தியடங்கிக் கிடக்கு முறைமையை மேலிடத்தில் யாம்விரித்துள்ளே மாகையால் ஒளியைக்கொண்டு இருளைக் காண்பது கூடாது. சூரியனொளியைக் கொண்டு நட்சத்திர வொளியைக் காணக்கூடாதவாறுபோல. பானுவொளியைக்கொண்டு தாரகையொளியைக் காணக்கூடாமையா லத்தாரகையொளிக்கு அபாவஞ்சொல்வதெப்படி? பானுவொளியினது அபாவமே தாரகையொளியென்றுஞ் சொல்லுமாறெங்ஙனம்? ஒளியைக்கொண்டு பார்க்கத்தக்கவை அந்தத்தேயுப்பொதுமையினொளிக்குக் கீழிட்ட அப்புப்பிருதிவிகளின் காரியகோடிகளேயன்றி அதற்குமேலிட்ட வாயுவாகாயங்களாகா. காற்று, ஆகாயம், திக்கு, மனம், ஆன்மா, சிவம் இத்யாதிபதார்த்தங்கள் ஒளிக்கு விஷயமாகாமையால் அவற்றை யொளியினது அபாவப்பொருள்களென்றல் யாண்டமையும்? இவ்வுண்மைகண்டபின்னர் ஒளியினது அபாவமே யிருளென்று கூறுதலெங்கே நிலைக்கும்? தேயுப்பொதுமையினொளிக்கு இருள் அபாவப்பொருளென்றபடி யேனைய நான்குபூதங்களி னபாவப்பொருள்க ளெவையாகவவர் கூறுவாரோ தெரியவில்லை. பெயரும், உருவும், நிறமுங் கொண்டு கண்ணுக்கு விஷயமாகு மோர்பொருளையில் பொருளாகச் சாதிக்க வவர்மனம் நாணிலைபோலும். அன்றியும், தாமெடுத்துக்கொண்ட வுபமானவாயிலாக வுபமேயத்தை யெப்படிச் சாதிப்பா ரென்பதுந் தெரியவில்லை. தேயுப்பொதுமையினொளி கண்டப்பொருளாகையால் அதனபாவப்பொருளிருளென்று அவர்கோடல் ஒருவாறிசையும். அகண்டமாகிய சத்தொளியினிடத்துப் பாசமாகிய விருளுண்டாமாறு எங்ஙனம்? ஒளியானது ஓரிடத்துள்ளதும், ஓரிடத்தில்லதுமாயினன்றி இருள் சிவிக்க விடமின்றாகையால், அங்ஙனமேயன்றோ சத்தசத்துக்களிட

த்துங் கொள்ளவேண்டியிருக்கின்றது? அசத்தாகிய வபாவப்பொருளுண்டாதற்குச் சத்தாகிய வதிட்டானப்பொருள் கண்டிதமாகுங்கால் அது சச்சிதானந்தாதி நிரதிசய லட்சணமுடைய பரதத்வப்பொருளாதல் கூடாது! கூடாது!! இன்னும் விரிக்கிற் பெருகும்.

சைவர்,—சத்து, அசத்து, சதசத்து என்பவற்றுள் சதசத்தாற் சத்தானது அநந்யமா யறியத்தக்கதும், அசத்தானது சுட்டியறியத்தக்கதுமாம்.

மாயாவாதி,—அறிபவனுகிய சதசத்து சத்தை அநந்யமாகக்கண்டபோது, அறிவானும் அறியப்படுபொருளும் வேறல்லவாம்.

மேலிடத்தில் அசத்து ஜடமாகையா லஃதொன்றினையுமறியாது. சத்துநின்மலமுடையதாகையா லதுவுமொன்றை யறிவது வேண்டாது. சதசத்து அசத்தை விரவிய குற்றத்தா லவ்வசத்தைச் சுட்டியறிந்தும், அவ்வசத்தின் ஞெருந்தநீக்கத்தின்பொருட்டாகச்சத்தையறிந்தும், அங்ஙன மறிகையில் அச்சத்தநந்யமாயிருந் தறிவிக்கவறிந்து முபகாரத்தைப்பெறுமென்று யாம் கூறியிருக்கின்றோமாகையால் அநந்யமாயறிவதும், அநந்யமாயிருந்தறிவிப்பதுமாகிய விரண்டுபொருள்களை யொன்றேயெனச்சாதித்தல் கூடாது. இவ்வுண்மைபற்றியன்றேவேதாகிக ளவ்விரண்டினநந்யத்தை யேகமென்னுது அத்துவிதமெனக் கூறிற்று? அவ்வநந்யத்தை (ஒன்றுகாம லிரண்டாகாம - லொன்று மிரண்டு மின்றுசாமல்) என்று இலக்கணங்கண்டு பெரியோர் கூறிய வகையானுங்காண்க. கதிரொளியுங் கண்ணொளியுந் தம்முள் விரவியறிவித்தும், அறிந்தும்வருகையால் அவை யேகமாகாது அத்துவிதமாகிய வநந்ய விலக்கணத்தைப் பெற்றிருக்குமுண்மையே யெடுத்துக்கொண்ட வுபமேயத்தைச் சாதிக்கு முபமானமாக முடியும். இவ்வுண்மை ஒற்றொளியுயிரொளிகளின் வியாப்பிய வியாபக தருமங்களாலும் விஸ்தரிக்கப்படும். இப்படியறிவதொழிந்து அறிபொரு

ளே யறியப்படுபொருளுமாகுமென்று பிதற்றியது பேதமையாய் முடிந்தது. இன்னும் விரிக்கிற்பெருகும்.

சைவர்,—உலகம் பிரளயகாலத்திற் றனக்குக்காரணமாகிய மாயையி லொடுங்கி நின்று மீண்டுஞ்சிருட்டிகாலத்திற்றோன்றும்.

மாயாவாதி,—மாயைதூலமா? சூக்குமமா? சூக்குமமாயின், அதிற் சூக்குமமே யன்றித் தூலமெங்ஙனந் தோன்றும்? நெல்கமுகாய் நீளுமாறெங்ஙன்? அல்லது அது தூலமாயின், அது இருத்தற்கு இடமெங்கே? மாயை அநாதியானபடி அதற்கிடமாகத்தேடப்படுவதொன்றும் அநாதியாகுமன்றோ? காலமும், இடமும் அநாதியாகவே, அதிற்சலிக்கும் வாயுவும், ஏனையபூதங்களும் அநாதிநித்தியமாகுமன்றோ? அப்போது திரிபதார்த்தங்களே அநாதிநித்தியமென்ற லெங்ஙனங்கூடும்?

மாயாவாத மதங்கொண்டரற்று மம்மதிகேடர்கூற்றை யினிமாற்றுவாம். மாயையைத்தூலம், அல்லது சூக்குமம் என வொருவிதமாகவே யாவர் சொன்னாலுஞ் சொல்வரன்றி யிரண்டு விதமாகவுஞ் சொல்லாரன்றோ? அங்ஙனமாகுகையில் இருதிறக்கொள்கையையும் வருவித்துச் சைவராமுன்னிலையாக்கி மறுத்து விவகரித்ததென்னை? இதனால் சைவர்கொள்கை இன்னதென்றுதெரியாமல்விவகரித்ததாகவேயன்றோமுடியும்? மாயையைச்சூக்குமமெனவாவது,தூலமெனவாவதுசைவர்கூறார்! கூறார்!! அது வியாபகப்பொருளாகையால். மாயையையுபாதானமாகக்கொண்டு பிரபஞ்சகாரியத்தைக்கூறுஞ் சைவசித்தாந்தப்படியேபிரமத்தையுபாதானமாகக்கொண்டு மாயாவாத சித்தாந்தமும் பிரபஞ்ச காரியத்தைக் கூறுகையால் அம்மாயாவாதி கேட்ட கேள்விகள் அவர் தலையிலேதானே விழுந்தனவென்றறிக. பிரமம் சூக்குமமா? தூலமா? சூக்குமமெனி லதிற் றூலப் பிரபஞ்சந் தோன்றுமாறெங்ஙனம்? தூலமெனி லதற்கிடமெங்கே? அப்பிரமமுள்ளவன்றே அது தங்குமிடமு முண்டாகு

கையால் பலமுதல்களுக் கிடஞ்செய்யுமோர் மதமாகியேகவாதஞ் சாதித்த லெடுபட்டுப்போமன்றே? மாயைஜடம். அதிற்காரியப் பட்டு மீண்டு மதிலடங்கும் பிரபஞ்சமுஞ்சடம். சடத்திற்சட முண்டாவதைக்கூறுஞ் சைவசித்தாந்தம்போலாது சித்தாகிய பிரமத்தில், அசித்தாகிய பிரபஞ்சத்தோற்றங்கூறு மாயாவாதமேயன்றே வலக்கணுற்றழியும்? நூலருக்குமங்கள் மாயை, பிரமமென்பவைகட் கிலக்கணமன்றாகையா லவற்றை வீணேவருவித்துக் கட்டாவுவது கூடாது! கூடாது!!

சைவர்,—ஆன்மாவினதுஅறிவு மலத்தான் மறைப்புண்டு மயங்காநிற்கும்.

மாயாவாதி,—பாசம் ஜடம், அதன் ஸம்பந்தமாகிய மலமுஞ்சடம். ஜடமாகிய பாசம் அறிவை யெங்ஙனம் மறைத்தல் கூடும்? அநாதியே அறிவைமறைத்த பாசமு மநாதியாகுங்கா லந்தப்பாசம் அந்தத்தைப் பெறுமாறெங்ஙனம்? அந்தத்தைப்பெறின், அது ஆதியாவதன்றி அநாதியாமாறெங்ஙனம்?

பாசம் ஜடம் என்பது திண்ணமே! அதனால் அது அறிவை மறைக்காதென்பதுகூடாது. ஜடம் என்பதற் கிலக்கணந்தா னென்னை? அறிவில்லாமையே யன்றோ? பாசத்துக்கு அறிவில்லாமையயன்றிஅசைவில்லாமை யிலக்கணமன்றாகையால், அவ்வசைவாகிய கிரியையோடு கூடியதென்பது நிர்மானம். ஜடமாகிய பாசம் கிரியையோடு கூடியதும், சித்தாகிய ஆன்மா கிரியையுடன் ஞானத்தோடு கூடியதுமாகையால் ஜடத்தன்மையால் பாசமியங்காதென்று பிதற்றியது நிரஸ்தம். விஷமென்பது ஜடம்; அது சித்தாகிய வுயிரைச் சம்பந்தித்து வெதுப்புந் தன்மையயன்றோ பாசபக்ஷக்க ளிடத்திலுங் கொள்ளத்தக்கது? இனிப் பாசநிவிர்த்தியைக் கொஞ்சம் விசாரிப்பாம். பாசம் சிவசீவர்க்களைப்போலவே அநாதிநித்தியமென்பது சித்தம். அந்தப்பாசம் யாண்டும் அந்தத்தைப் பெறாது. (முத்தியிலுமூன்று முதலமொழியக் கேள்) எனவும், (பாசங்கெடாமல்) எனவுங் கூறிய பெரி

யோர் திருவாக்குகளுஞ்சான்றும். ஸ்ரீ சிவபெருமானது திருமிடற்றிலடங்கிய விஷமானது முதல்கெடாமலும், சத்தியடங்கியு மிருக்குந் தன்மையேயன்றோ பாசவிச்சேதமாகிய முத்திக்கெடுத்துக்கொண்ட நிதரிசனமாம்? இன்னுங் கதிரொளிக்குமுன்னர் முனைந்துத்தோன்று தடங்கிக்கிடக்கு மிருளுமன்றோ மோட்ச நலமாகிய பாசவொழிவை யினிதுவிளக்கும்? இவ்வுண்மைதேராது விபரீதம் பேசியது வீண்பிரஸங்கமாய் முடிந்தது. சைவ நூல்களின் முடிபுணராது சழக்குரைபேசுஞ் சண்டிகளோடு விவகரிப்பது கஷ்டம்! கஷ்டம்!!

சைவர்,—இல்லாத ஜகஜீவபரங்கள் கற்பிக்கப்பட்டவா றென்னை? அங்ஙனங் கற்பிக்கப்பட்டவை மீண்டுங் கழலுமென்பதென்னை? பின்னர் கழலத்தக்கவை முன்னர் கற்பனையானவா றென்னை?

மாயாவாதி,—பிணியினது ஆரோக்யம் வெய்யபிணியிருந்தவனுக்கன்றோ தெரியும்? அங்ஙனமிராதவனுக்கு அதனது அருமை புலப்படுமோ? இருளில்லாவிட்டால் ஒளியினது விசேடம் நன்குபுலப்படுமா? விவகாரத்திலேனுஞ் சகசிவர்கள் கற்பிக்கப்படாவிட்டால் அவற்றின் பிரதியோகியாகிய பிரமலட்சியம்அறிவிலிகட்கு நன்குபுலப்படுமா? இங்ஙனம் பிரமலட்சியம் வரைப்படுத்துணர்த்துவான் கற்பிக்கப்பட்ட அபாவமாகிய ஜகஜீவர்கள் பின் விசாரணைசெய்தவழி நிலைநிற்குமா?

பிரமம் ஒன்றேயுள்ளதும், அதற்கிரண்டாவது கிடையாதென்பதும் மாயாவாதிகள் துணிபன்றோ? ஜகஜீவபரங்கண் மூன்றும் ஏகமாகிய பிரமமாகாவன்றோ? இரண்டு என்னுஞ் சொல்லுக்கே யிடங்கொடாத பிரமத்துக்கு முன்னர் ஜகம், ஜீவன், பரம் என்னும் விவிதங்கள் முளைத்தவாறென்னை? என்று பல வினாக்களை யெம்மனோர் வினவியது யுக்தமே! இங்ஙனமாக, பிணியினது ஆரோக்யம் வெய்யபிணியிருந்தவனுக்கன்றோ தெரியும் எனவும், இருளில்லாவிட்டால் ஒளியினது விசேடம் புலப்படுமா எனவும் பிரஸ்தாபித்துச் சமாதானங் கூறி

க்கொண்ட அவர் தடிப்புத்திக்கு நாமென்ன செய்யலாம்? அவர் கூற்றின்படியே வெய்யலினது அபாவம் நிழலும், ஒளியினது அபாவம் இருளுமாகின்றனவன்றோ? இவ்விரண்டுங் கண்டப் பொருள்களாகையால் அதுபொருந்தும். பிரமம் அகண்டிதமாகையால் அதனபாவமே ஜகஜீவபரங்களென்ற திமுக்காம். வெய்யல், நிழல் என்கையில் அந்த நிழல் ஓர்மரம் - அல்லது வேறுபொருளை யாச்சிரயித்துண்டாவதன்றித் தானே யுண்டாகாது. வெய்யல்-மரம் - இடம் - நிழல் இவற்றிற்கு வேறாயுள்ள வொருவனே ஆரோக்யத்தை யனுபவிக்கவுரியவன். இவ்வுபமான த்ருஷ்டமாகிய பிரமத்தினிடத்தில் அவ்வாபாசகர் கூற்று எங்ஙனேயிலக்கும்? மரத்தினது நிழல் வெய்யலிருந்தபோது பூமியினிடத்துண்டாகையால் பிரமத்தினது நிழல் எது இருந்தபோது எதனிடத்திலுண்டாயிற்று? மரத்தினது நிழல் மரமிருந்தபடியே தழைந்து கிளைமுதலியவற்றோ டுண்டாகின்றமையால், அப்படியேயன்றோ பிரமசுபாவத்துக்கு வேறாகாமல் பிரமத்தினிழ லுண்டாகவேண்டும்? பிரமத்தினிழலென்று ஈண்டுமாயாவாதி யுரைத்தது ஜகஜீவபரங்களே யாகையால், இந்த நிழல் பிரமசுபாவத்துக்கு வேறானதன்றாகவேண்டும். அன்றியும், ஜகம் என்பது கேவலஜடப்பொருளும், ஜீவன் என்பது கிஞ்சிஜ்ஞத்வாதி யுபாதியுடையதும், பரம்என்பது ஸர்வஜ்ஞத்வாதி யுபாதியுடையதுமாகு மிலக்கணங்களை அன்னோர் கூறுவதுண்டாகையால், இம்மூன்றையுமுடைய சுபாவசிலத்ததாகவே அதிஷ்டானமாகிய பிரமமும் நிச்சயிக்கப்படும். ஜகஜீவபரங்கண் மூன்றும் அபாவமாகிய நிழலாகுங்கால் அந்தநிழலினிடத்துண்டாகும் ஆரோக்யத்தை யெந்தப்புருஷனே அனுபவிக்கத்தக்கவன்? ஏகமாகிய பிரமமொன்றையே சாதிக்கவெழுந்து அது விகாரமில்லாதது, உருவமில்லாதது, குணமில்லாதது, மலமில்லாதது என்பனவாதி யிலக்கணங்களைக் கூறிவிட்டுப், பின்னர் ஜகஜீவபரங்களாகிய விகாரங்களையும், நிழலுண்டாதற்கேதுவான வுருவத்தையும், ஜடத்வம்-கிஞ்சிஜ்ஞத்வம்-சர்வஜ்ஞத்வம்என்னுங் குணங்களையும், உபாதிவசப்பட்டு வருந்துதற்கிடமான மலத்தையும் அவர் கடைப்பிடித் தொழுகுங் கூற்று அந்தோ கொடிது! கொடிது!! இது என்போலுமெனின், பஞ்சபாண்டவரை நான் அறியேனா கட்டில்கால்போல என்று வாயாற்கூறி, மூன்று விரலை

க்காட்டி, இரண்டுவிரலைக் கீழே தாழ்த்தி, ஒருவிரலாற் பூமியிற் சோடிழுத்த அவிவேகி யொருவன் செய்கைபோல்வதேயாம். இப்படியே அவர் காட்டிய ஒளியிருள்களின் திட்டாந்தமும் விசாரமுகத்து அவலப்பட்டழியும்! அழியும்!!

இது நிற்க, நிழலினது ஆரோக்யம் வெய்யலி லிருந்தவனுக்கன்றோ தெரியும் என்று அவர்கூறிய நியாயம் வாயாற் சிரிக்கத் தக்கதன்றும். ஒருவன் பூர்வஜந்ம விசேடத்தால் சகல சௌக்யங்களையுங் குறைவின்றி யனுபவிக்கத்தக்க பாக்யவானாகுகையில் அவனுக்கு அந்த ஸௌக்யத்தினருமை புலப்படுமாறு இடையில் தரித்திர முண்டாகவேண்டுமென்று இழவெடுக்கவந்த அம்மாயாவாதியை யென்ன செய்தாற்றான்றீரும்? கன்மங் காரணமாகவே ஸௌக்யாஸௌக்யங்கண் முதலிய போகங்களுண்டாகுமென்று வேதாதிகள் கூறுமுண்மையையறியாத கொடுமையால் அவர்பிதற்றியது பெரும்பேதமைத்தே! ஒருவன் செல்வவானாகவும், ஒருவன்தரித்திரவானாகவும், ஒருவன் எசமானனாகவும், ஒருவன்அடிமையாளாகவும், ஒருவன் தண்டிகை ஏறுபவனாகவும், ஒருவன் அதைச்சுமப்பவனாகவு முண்டாயிருக்கும் விசித்திரம் யாதென்றெழும் வினாக்களுக்கு இப்படிக் கடவுள் சிருட்டியாவிட்டால் உலகம் நடக்குமா என்று சமாதானங் கூறும் ஊணர் மகமதியர் செய்கையோடொப்ப மாயாவாதி யுரைப்பது ஆச்சரியம்! ஆச்சரியம்!! கன்ம மென்பதொரு பொருளை யங்கீகரியாமையால் ஊணர் முதலினோர் அங்ஙனம் பிதற்றுத லொக்கும். (*அறத்தாறிதுவென வேண்டா சிவிகை - பொறுத்தானோ டூர்ந்தானிடை*) என்னும் பிரமாணத்திற் கட்டுண்டு விவகாரத்திலேனும் யாம் வைதிகர் என்று கூறித்திரியும் மாயாவாதிகள் அங்ஙனம் பிதற்றுத லெங்ஙனங் கூடும்? அன்றியும், பிரமலட்சியம் அறிவிலிகட்குப் புலப்படுமா என்று வினவினாராகலின், அவ்வறிவிலிகள் யாவர்? ஜகஜீவபரங்கள் நிழலாய் முடிந்தமையால் அவற்றை யனுபவிக்கும் புருஷர் வேறுவேண்டும். அவர் ஜகஜீவபரங்களிற் சிவரோ யெனின், நிழல் வேறுதேடவேண்டும். ஜகம், பரம் என்பவைகட்குங் கதிதேடவேண்டும். ஒன்றுமில்லாத பிரமத்திற் கற்பிக்கப்பட்ட ஜகஜீவபரங்களைப் பின்னர் விசாரித்துழியில்லாமற் போய்

விடுமென்றுரையாடிய அவரோமைமதியையுங் கொஞ்சம் விசாரிப்பாம். அவற்றை விசாரிப்பவர் யாவர்? ஜசமா? ஜீவனா? பரமா? அதிட்டானபிரமமா? அனுபவத்திற் சிவர்களே விசாரிக்கையால் ஜீவன் தன்னை விசாரித்துத் தன்னையும், தன்னோடு விசாரிக்கப்படும் பரம் - ஜகம் என்பவைகளையும் அபாவமாக்கிக்கொள்ளும் பெருமை சாலவழகுடைத்தே! அதிட்டானபிரமம் விசாரிக்கின்றதெனின், விகாரியென்பது பெறும். அல்லாமலும் மரமே தன்னிழலை யடைந்தனுபவிக்கும் புருஷர்களை விசாரித்து அபாவமாக்குதல் கூடும். இப்படி விரோதம் பெற்றழியுமுபமானங்களா லவர்காட்டப்போந்த வுபமேயமாகிய பிரமத்தன்மை நிலைக்காமையால், கேவலம் பசுப்பிராயர்களென்றே அவரைத் தீர்மானிக்கவேண்டியது. மரம், மரத்தினிழல், அதையடைந்தனுபவிப்பவர் என்னும் பகுதிகள் விசாரித்துழி நிலைபெறுதல்போலவேயன்றோ பிரமமுதலிய பதார்த்தங்களும் விசாரணையிற் கெடாது நிற்கும்? மரம் அழிந்தபோதன்றி நிழல் அழியாதாகையால், பிரமம் அபாவமான காலத்தன்றி அதனாலுண்டாகும் ஜகஜீவபரங்களும் அபாவமாகாவெனவறிக. வெய்யல் மிகுந்த வோரிடத்தில் நிழலில்லாதபோது அங்கு மரமில்லையென்று தீர்மானிக்கிறபடியேயன்றோ ஜகஜீவபரங்கள் அபாவமாகிற காலத்திலவற்றினதிட்டானமாகிய பிரமமும் அபாவமாயிற்றென்று தீர்மானிக்கவேண்டியது? ஒன்றுமேயில்லாமற் போய்விடுகிற சூனியவாதமாக முடிந்த அம்மாயாவாதம் எங்ஙனே நிலைக்கும்? இன்னும் விரிக்கிற்பெருகும்.

சைவர்,—பால் தயிரானதுபோல் பிரமம் பிரபஞ்சமாகப் பரிணமித்ததுண்டெனின், மீண்டுந் தயிர் பாலாயிடினன்றோ பரிணமித்த பிரபஞ்சம் பிரமமாயிடும்?

மாயாவாதி,—தயிரைப் பசுவுக்கு ஊட்டினால் மீண்டும் அது பாலாகும்.

தயிர்மாத்திரந்தானோ பசுவுக்கு ஊட்டினால் பாலாகும்? எந்த வசுத்தநீரேனும், பண்டமேனும் பசுவுக்குணவாகுங்காலவையும் பாலாகுமாகையால் தயிரைமாத்திர முரைத்தது தவறாகும். பால்மாத்திரமேயன்றி வேறுபொருள்கள் தயிராகாமையால் விருத்தோபமானங்

கொண்டதும் விரோதித்தது. இன்னும், தயிரைப்பசுவுக்கு ஊட்டி அதை மாத்திரம் பிரித்துப் பாலாகவெடுத்தல் கூடுமோ? ஓரிடையன் தயிருண்டிறந்தபோது அவன் வயிற்றைக்கீறிச் சோதித்த பண்டிதர்கள் எருமைப்பால் இவ்வளவென்றும், பசுவின்பால் இவ்வளவென்றும் பிரித்துரைத்தனரென்று அம்மாயாவாதி யோரிடத்திற் கூறியிருக்கிறபடியே ஓர் பசுவினிடங் கறக்கும் பாலில் தயிரினுண்டாகிய பால் இவ்வளவென்றும், மற்றையுணவுகளா லுண்டாகிய பால் இவ்வளவென்றும் பிரித்துக்காட்டுதல் கூடுமோ கூடாதோ தெரியவில்லை. இடையன் வயிற்றில் தயிரைக்கண்டு இன்னின்னபாலின் சம்பந்தமுடையது இத்தயிரெனக் கூறினதொழிந்து அந்தந்தக் கூறுகளைத் தயிரிலிருந்து பாலாக்கிக் காட்டினதுண்டா? இவராவது தயிரைப் பாலாக்குவாரா? வேறு நல்லபால் எளிதிற்கிடைக்கையால் தயிரை மீண்டும் பாலாக்குவதவசிய மன்றெனின், அநுபவத்துக்கு வந்திராத விஷயத்தை யாசரிப்பது கூடாது. இங்கே யெடுத்துக்கொண்ட வுபமானம் பிரமம், பிரபஞ்சம் என்பவற்றை விளக்குவ தொன்றாகையாலின்னுங் கொஞ்சம் அதை விசாரிப்பாம். பிரமம் பிரபஞ்சமாயிற்று. பால் தயிராயிற்று. பாலானது பிரைக்குற்றத்தா லன்றோ தயிராயிற்று? தனக்கிரண்டாவதில்லாத பிரமம் எந்தக்குற்றத்தாற் பிரபஞ்சமாயிற்று? தயிரைப் பசுவுக்கூட்டினா லன்றோ மீண்டும் பாலாகும்? பிரபஞ்சத்தை யெவ்வாறுசெய்தா லதுமீண்டும் பிரமமாகும்? பிரபஞ்சந் தானகவிசாரித்தாற் பிரமமாகு மென்பார்போலும். பால், தயிர்களுக்கு அவற்றைப் பரிணமிக்கச் செய்பவன் வேறானாற்போலப் பிரமம், பிரபஞ்சமென்பவைகளுக்கும் அங்ஙனஞ் செய்பவன் வேறாகவேண்டும். அஃதின்மையின், அவரெடுத்துக்கொண்ட வுபமானம் அவரைத் தெருவில்விட்டது.

சைவர்,—மாயையிலுண்டாகும் பிரபஞ்சம்மாயையிற்றானேயொடுங்கி மீண்டுங் காரியப்படும்.

மாயாவாதி,—மரத்திலுதிர்ந்த விலைகள் அம்மரத்திற்றானே யொடுங்கி மீண்டும் வருவதுண்டோ? இங்ஙனங்கேட்ட உலகாயதனைநோக்கி அம்மரத்திற்குக் காரணமாகிய பிருதிவியிலொடுங்குமென்று சைவநூல்கள் கூறுவதென்னை?

இந்த வினுவிடைகளால் அம்மாயாவாதிக்கு ஆதாவுண்டானதாகப் பொங்கி யெழுந்தனர். எங்ஙனமெனின், மாத்திலுதிர்ந்த விலை மாத்திலொடுங்காமல் மண்ணிலொடுங்கலால், அப்படியே மாயையிலுண்டான பிரபஞ்சம் அம்மாயையிலொடுங்காமல் அதற்குக் காரணமான பிரமத்திலொடுங்குமென்று கூறவிடமுண்டாகையால். இன்னும், பாலிலுண்டான தயிர் அந்தப்பாலிலே தானே யொடுங்காமல் அதற்குக் காரணமாகிய பசுவினிடத்தே யொடுங்குமென்று கூற விடமுண்டாகையால். மேலுண்மையை விசாரிப்பாம். சிவஞானசித்தியார் - சுபட்சம், மூதற்சூத்திரம் (மாயையிலுள்ளவஞ்சம் வருவதுபோவதாகு - நீயதிங்கில்லையென்னி னிகழ்த்திடுமுயலிற்கோடு, பொயுருமிலைகளெல்லா மரங்களிற்புக்குப்போதி, ஞயிடுமதுவுமென்னிற் காரணங்கிடக்கவாமே.) என்னும் வாக்கியமே அவரெடுத்துக்கொண்ட வாதரவாயுள்ளது. இந்தவாக்கியத்தில் (மாயையிலுள்ளவஞ்சம் வருவதுபோவதாகு, நீயதிங்கில்லையென்னி னிகழ்த்திடுமுயலிற்கோடு) என்பது சித்தாந்தியார் கொள்கை. (பொயுருமிலைகளெல்லா மரங்களிற்புக்குப்போதி,ஞயிடுமதுவும்)என்பது உலகாயதன்கொள்கை. (என்னிற் - காரணங்கிடக்கவாமே.) என்பது சித்தாந்தியார் துணிவு. இவற்றுள், (காரணங்கிடக்கவாமே) என்பதற்கு மாத்திற்குக் காரணமாகிய மண்ணில் அம்மாத்திலிருக் துதிர்ந்த விலைகள் ஒடுங்குமென்று கூறுவதும், அப்படியே மாயைக்குக் காரணமாகிய பிரமத்தில் அம்மாயையிலிருந்துண்டான பிரபஞ்ச மொடுங்குமென்று கூறுவதுஞ் சைவசித்தாந்திகள் கூற்றாக வம்மாயாவாதி கண்டுபிடித்தது அதிசயம்! அதிசயம்!! (காரணங்கிடக்கவாமே) என்பதற்கு (அங்ஙன முதிர்ந்த விலைகள் சத்திருபகாரணமாய் நிலைபெறுவுடைமையினது மீளத்தோன்றுதற்குரிய பிறகாரணங்களெல்லா மசேறுடொருங்கு கூடிய வழியல்லாதே தோன்றும், அல்லுழித்தோன்றுதாகலினது பற்றிக் கடாவென்னே?) என்று திராவிட பாஷ்யகாரர் தமது பொழிப்புரையிற் கூறியிருக்கு முண்மையை யறிந்தடங்குக. இதனால், பிரபஞ்சம் அதற்குக் காரணமாகிய மாயையிலொடுங்காமல் அம்மாயைக்குக்காரணமாகிய பிரமத்திலொடுங்குமென்று சைவர்கூறுவரெனப் பிரமித்தாடிய சழக்குரை சரிந்துபோயிற்று. இனி (காரணங்கிடக்கவாமே) என்பதற்கு மாத்திலுதிர்ந்த விலை அதற்குக் காரணமாகிய மண்ணிலொடுங்குமென்று மாயாவாதி பொருள்கொண்ட வஸங்சதத்தைக் கொஞ்சம் விசாரிப்பாம். பிரபஞ்சம் அதற்குக்கா

ரணமாகிய மாயையி லொடுங்கி மீண்டுங் காரியப்பட்டு வரும் என்பதை காட்டவேயன்றோ (காரணங்கிடக்கவாமே) என்று ஆசாரியர் கூறினர்? காரணங்கிடக்க வென்கையா லுபதானமும், ஆமே யென்கையா லதிற்காரியந் தோன்றி வருகையும் பெறப்படுதலறியாது காரியங்களொடுங்குதலையே யாண்டுரைத்ததாகப் பிதற்றியது என்னபேதமை? அதவா அவர்கொண்ட பொருளின்படி நோக்கினும், மரம் இலையைத் தந்ததுபோல் மாயை யுலகத்தைத்தரலும், இலை மண்ணிலொடுங்குமாபோல் உலகம் பிரமத்திலொடுங்கலும் பெறப்பட்டு ஒடுங்கினமண்ணிலே நின்று மிலைகள் மீளத் தோன்றாமைபோலவே யன்றோ யொடுங்கின பிரமத்திலே நின்றும் பிரபஞ்சம் மீளத்தோன்றமாட்டாது? இந்த வுபமானத்தாற் பிரபஞ்சம் பிரமத்தி லடங்குவதொழியத் தோன்றுவதொன்றல்ல வென்றேற்படுகையால் உலகம் பிரமத்திலுண்டாகின்ற தென்னும் அம்மாயாவாதக்கோள் மாட்சி யிழந்தொழிந்தது. ஒடுங்கின விடத்தினின்றுமே மீளவுண்டாமென்னுந் தருக்கத்தால் பிரபஞ்சம் மாயையி லொடுங்கியும், மாயை பிரமத்தி லடங்கியும் வருதலா லப்படியே யன்றோ மீண்டும் அடங்கிய மாயையும், ஒடுங்கிய பிரபஞ்சமும் முறையே யவற்றிற்கதிஷ்டானங்களாகிய பிரமம், மாயை யென்பவைக ளிடத்திருந்து வெளிப்பட்டுங் காரியப்பட்டும் வருமென்று சைவசித்தாந்தநூல்கள் கூறும்? இன்னும், மரத்துக்குக் காரணம் மண்ணென்று அவர் கொண்டதுந் தவறுடைத்தே! வித்தில்வழி மண்ணினிடத்து மரந் தோன்றாதாகையால். இந்த வுபமானத்தால் மரங்காரியமும், வித்து காரணமு மாகின்றமையால், வித்தினிடத்தன்றோ மர மொடுங்கவேண்டு மெனின், வித்தினது ஸ்தானத்திலுபமேயமாய் நின்ற மாயை யவ்வித்தைப் போற் சூட்சுமப் பொருளாகாது கடலைப்போல் வியாபகப்பொருளாய் நிற்றலி னஃதொருங்கே முழுதும் வித்தைப்போற் பரிணமித்து விடமாட்டாது. ஒரு வித்தி லோர் மரமே பரிணமிக்கும். ஏகமாகிய மாயையி லெண்ணிறந்த வண்டங்க ளுண்டாவதன்றி மேலுமேலு மளவிறந்த வண்டப்பகுதிக ளுண்டாவதற் கியைந்த காரணத்தன்மையு மெஞ்சிக் கிடத்தலால், அத்தகைய மாயையிலுண்டாகு மண்டங்க ளம்மாயையிலே தானே யொடுங்க விடமுண்டாகும். கடலினிடத்துண்டாகு மளவிறந்த வலைகள் அந்தக்

கடலினிடத்தே தானே யொடுங்குமாபோல். அலைகளாகிய காரியங்க டோன்றி யொடுங்கு மிடத்தை நோக்க வெஞ்சி யுள்ள விடமநேக மடங்கதிகமாக வந்தக்கடலி னிடத்துக் காண்கையா லத்தகைய கடலினிடத்திற்றோன்றிய வலைக ளதிற்றானே யொடுங்குமென்பதற் கிழுக்கென்னை? இவ்வாறான வரும்பொருள் கிடப்பவேயன்றோ காரணங் கிடக்கவாமே யென்று சைவத்தலைவருங் கூறினர்? காரணமாகிய கடல் கிடக்க, அதிற் காரியமாகிய வலைகடோன்றி யொடுங்கி மீண்டுங்காரியப்படுதல் ஆம் என்று பொருள் விரவிக்கிடத்தலு மொன்று. மேலிடத்திற் காட்டிய விவித்தியார் வாக்கியத்தில் மரத்தி லுதிர்ந்த விலையைப்போல் மாயையிற்பிரபஞ்ச முண்டாமென்றது உலகாயதன் காட்டிய விபரீதவுபமானமேயன்றிச் சைவசித்தாந்தியார் கொண்டவுபமானமன்று. அவன் மதத்தை யநுவதித்துச் சமாதானங் கூறிய பகுதியே யதுவாம். அதனால், சைவநலம் கெடமாட்டாது. சைவர் கூறு முபமானநிலைபெறுவிடின்மாத்திரமேயாம் யோசிக்கவேண்டியது. புறச்சமயிகள் புலம்பலுக் கெல்லாம் யாமேனை மாரடித்துக்கொள்ளவேண்டும்? அதுபற்றியே யன்றோ (அல்லுழித்தோனறுதாகலி னதுபற்றிக்கடாவென்னை?) என்று நஞ்சைவ பாஷ்யகாரரும் பிரஸ்தாபித்தருளினர்? கடலையும், காற்றையும், அலையையும், உவமித்துக் கடலிற் காற்றா லலையுண்டாகி யொடுங்குவதுபோல் மாயையிற் சிவனாலுலகமுண்டாகி யொடுங்குமென்று சைவர் கூறுவதை விரோதித்துச் சிலம்பி திட்டாந்தங்கூறி அபின்ன நிமித்தோபாதானங் கூறும் அம்மாயாவாதிமதத்தை யோசித்த லொன்றே மேலுண்மையை விளக்கும். உபாதானமும், நிமித்தமுஞ் சிலம்பியே யாகிநின்று, காரியமாகிய நூலைத்தருதல் அவர் மதமாகலி னது பேதிக்குமாறு யாம் கடாவுவே மன்றோ? சிலம்பியினது தேகம் ஜடமும், அதிற்போந்த தேகி சித்துமாகையால் நூல் காரியப்பட்டது தேகத்திலா? அல்லது தேகியினிடத்திலா? என்றபோது தேகத்திலென்றே வெளிப்பட்டு அவர் சாதிக்கவந்த அபின்ன நிமித்தோபாதானம் அடியோடே சாய்ந்துவிடுகிறதன்றோ? அதுபோல் சைவர் கூறு முபமானமு மறுக்கப்பட்டாலன்றோ சைவநலந் தாழ்வுபெறும்? எதிரியினது மதாநுசாரமான வுபமானங்களை மறுக்கவேண்டியதே யன்றி வேற்று மதத்தினர் குத்ஸிதம் பேசி விளைக்

கும் அவலதிட்டாந்தங்களை யொருபொருளாக மதித்து எந்த மதவாதியாயினும் பதிலுரைப்பது அவசியமன்று. அங்ஙனம் பதிலுரையாமையால் அவன் மதந் தாழமாட்டாது. பிரமத்தில் மாயைக்கு உற்பத்தி கூறு மாயாவாதியையும் சைவசித்தாந்தியைக் கேட்டபடியே வினவுதல் கூடுமன்றோ? எங்ஙனமெனின், மரத்தி லுதிர்ந்த விலை மரத்திலொடுங்காது அம்மரத்துக்குக் காரணமாகிய மண்ணிலொடுங்குதல்போல் பிரமத்திற் றோன்றிய மாயை பிரமத்தி லொடுங்காமல் அந்தப் பிரமத்துக்குக் காரணமாகிய வேறெதி லொடுங்குகின்றது என்றுகடாவுதலேயாம். இப்படி யொருவன் வினவுவது எமக்கபிமதமன்று. மரத்தையும், இலையையும் அவர்மதத்திலுபமானங்களாகக் கொள்ளாமையால். அவர் கொண்டிருக்குமோ ருபமானத்தையேயன்றோ மறுத்தல்வேண்டும்? அப்படியேயன்றோ சைவரிடமுங் கொள்ளத்தக்கது? தன்மதத்துக்குப் பின் வரப்போகிற கதியை அம்மாயாவாதி நோக்காமல் எதிரி மதத்தை மாத்திர மெடுத்துப் பேசியது என்ன பேதமை? இப்படிப்பட்ட பல நியாயங்களால் மாயையிலேதானே பிரபஞ்சமுண்டாகி யொடுங்கி மீண்டுங் காரியப்பட்டுவருமென்னுஞ் சைவமுடிவு சாதிக்கப்பட்டது.

ஆயின், வித்திலொடுங்காது அதிக்கிரமிக்கும் மரத்தையும், அந்த வித்தையும் பிரபஞ்சத்துக்கும், மாயைக்குஞ் சைவநூலக ளுவமை கூறியதென்னையெனின், வித்திலே நின்றுந் தோன்றுமரம் பூமி யாதாரவி லன்றித் தானே தோன்றமாட்டாதாற்போல மாயையிலே நின்றுந் தோன்று முலகம் சிவனுதாரவி லன்றித் தோன்றமாட்டாதென்பதை விளக்குதற் பொருட்டே. யன்றி, எதிலே நின்றுந் தோன்றிற்றோ வதிலேதானே யோர் பொருளொடுங்கு மென்பதை விளக்குதற் பொருட்டன்றாம். இவ்வுண்மை கண்டபின்னர் வீண் விவாதத்துக் கிட முண்டாகாமையால், அவரது அறியாமையை யின்னுங் கொஞ்சமெடுத் திசைப்பாம். அவர்பாலினுண்டான தயிர்அந்தப்பாலிலேதானே யொடுங்காமல் அந்தப் பாலுக்குக் காரணமாகிய பசுவினிடத்தே யொடுங்குமென்று கூறிக்கொண்டன ரன்றோ? தயிரைப் பசுவுக் குணவாக வூட்டுவது ஸம்பிரதாயமன்று. கதாசித்தாக வூட்டுவ துண்டாகையால். பசுவுக்கு மாத்திரமே யன்றி அந்தப்பசுவின் றயிரை யெரு

மைக்கும், பன்றி முதலாகிய தாழ்ந்த மிருகங்களுக்கு முணவாக் குங்கா லது மீண்டும் பாலாகுமெனக்கூற வருமன்றோ? எருமைக் கும், பன்றிக்கு முணவான பசுவின்றயிர் எருமைப்பால், பன்றிப் பாலாகவே யன்றோ திரிந்துண்டாகும்? பசுவின்பா லாதலின் றாகையால்,பிரபஞ்சம் பிரமமாயிடுமென்றது பெரும்பேதமையே! அந்தப் பசுவின்றயிர் மானிடர்க்கே யன்றோ முக்கியமாக வுண வாகின்றது? அவரிடத்தி லது எப்படியாகின்றது? இந்தப் பிர ஸங்கத்தால் தயிரானது பசுவினிடத்தொடங்கி மீண்டும் பாலாகு மென்பதை மறுத்தோ மாகையால், அவர் விபரீதமித்தோடே மாய்ந்தது.

மேல், பால் தயிராகப் பரிணமித்தது பிரமம் பிரபஞ்சமாகிய தென்பதற்கு மாத்திரமே யுபமான மாகுமன்றி அந்தப்பிரபஞ்சம் மீண்டும் பிரமமாயிடு மென்பதற் குபமானமாக மாட்டாதெனின், அதற்குள்ள வுபமானந்தான் யாது? அங்ஙனங் காட்டியவிடத்துப் பூஜ்யமாகவே யாம் கொள்வேம். பிரமம் பிரபஞ்சமாக விரிந்த தென்பதற்குப் பால் தயிர்களைக்கொண்டதே தவறு. பாலுந் தயி ரும் பரிணாம ஸம்பந்தம் பெற்றமையால், அப்படியே யுபமேயத் தையுங் கொள்வது அவசியம். அங்ஙனங்கொண்டு மறுத்ததை அவருமொப்புக்கொண்டே ஸமாதானஞ்சொல்லவந்து தடுமாறிப் போயின ராகையால், அது அஸங்கதமுற்றழியு மென்பதேஸித் தம். பொன்னானது பூஷணமாகுங்கால் அந்தப்பூஷணம் மீண்டும் பொன்னாய் விடுவதுண்மை யாகையால், அதுவே பிரமத்தின் விகாரமாகிய பிரபஞ்சம் மீண்டும் பிரமமாய் விடுமென்பதற்கு யாமெடுத்துக்கொண்ட வுபமானமெனின், அதுவுந் தவறுடைத் தாம். பொன்னும், அதன் விகாரமாகிய பூஷணமும் ஒரு தன்மை பெற்று விளங்கலால் அது கூடும். பூஷணத்திரிவில் பொன்னுரு வங் கெடாமை ஸித்தம். பிரபஞ்சத்திரிவில் பிரமசுபாவங் காணு மையாற் பிரபஞ்சம் பிரமமாகமாட்டாது. பால் தயிரானபோது பாலின்றன்மை தயிரிவில்லாமற் போனதுபோல் பிரமம் பிரபஞ்ச மானபோது பிரமத்தன்மை பிரபஞ்சத்தி லில்லாமற்போயிற்று. பாலைக்காட்டிலும் தயிர் கௌரவங் குறையப் பெற்றதுபோலவே பிரமத்தை நோக்கப் பிரபஞ்சம் இழிவெய்தாகின்றது. உயர்ந்த பொருளும், இழிந்த பொருளுமாகிய பிரமம், பிரபஞ்சமென்ப

வைகட்குப் பொன்னையும், பூஷணத்தையு முவமைகொண்டு பூஷணம் மீண்டும் பொன்னாய் விடுமாபோல் பிரபஞ்சம் மீண்டும் பிரமமாய் விடுமென்று சாதிக்கத் தலைப்பட்டது அஸாமஞ்சஸமாய் முடிந்தது. இப்படியே அவர்காட்டு மொவ்வோ ருபமானமும் பேதிக்கப்பட்டு ஏகவாதத்தின்றலையி லிடிவிழுந்தழியு மாகையா லினியேனு மவர் மதமடங்கிக்கிடப்பாராக. இன்னும் விரிக்கிற் பெருகும்.

சைவர்,—ஒன்றேயாகிய பிரமம் பலயோனிகளிற்புகுந்து பல பிரமங்களாயுடைந்த தென்னை? அது நின்மல முடையது என்று நீவிர்கூறுமாற்றம் தான் யோனிவாய்ப்பட்டழிதலால் பொய்ப்பட்டதென்னை?

மாயாவாதி,—சிவாகமங்கள் பதார்த்தங்கள் மூன்றேயென்றும், அவை பதிபசு பாசங்களே யென்றும் பிரதிபாதித்தற்குப் பொருளென்னை? பசுக்கள் பலவுளவென நீவிர் கூறுவதென்னை? பசுக்கள் பலவாயின், திரிபதார்த்தங்களென வரையறுத்த லெற்றுக்கு? பரமார்த்தத்தில் ஒற்றுமை நோக்கி ஒன்றென்றும், விவகாரத்தில் பலவாய் விஜ்ரும்பித்துக் காணப்படுகின்றமையால் பலவென்றுங் கூறியதெனின், இதுவே பிரமவிசாரத்திலுங் கொள்ளாததென்னை? அக்னி ஒன்றா? பலவா? அக்னி பற்பலவாக விஜ்ரும்பித்தக்கால் அதனது அபின்னத்வமேனும் பரிசுத்தமேனுங் கெடுமா?

இந்த ஸமாதானத்தைப் பரியாலோசிக்குங்கால் பெருநகைப்பையே விளைக்கின்றது. பதியேகமும், பசுக்கள் பலவும், பாசங்கண் மூன்றுமாகப் பிரதிபாதிக்கப்படுஞ் சைவசித்தாந்தத்தில் இம்மூவித விஜாதிகளையும் பதார்த்தத்திரயங்களென்று கூறுதலமையும். தமிழ்ப்பாஷையி னெழுத்துக்கள் உயிரெழுத்தும், மெய்யெழுத்துமென விரண்டுவகைப்படுமென்று கூறி, அவற்றுள் உயிரெழுத்து பன்னிரண்டும், மெய்யெழுத்து பதினெட்டுமாகும் என விரித்தோதுவதா லுண்டாகிய குற்றம்

யாது? இப்படியேயன்றோ சைவசித்தாந்த விவரணத்தைக் கொள்வர் மேலோர்? திரிபதார்த்தங்களில் பசுவென்பது அந்த ஜாதியினது சமஷ்டி வாசகமாகக் கொள்ளப்பட்டதனால் வியஷ்டியாக விசாரிக்கையில் எண்ணிறந்தனவாகவெளிப்படும். இஃதொழிந்து பசுவென்பது ஏகமேயெனவும், அஃது விவகாரத்திற் பலவாகிப் பரமார்த்தத்தி லொன்றேயாக விருக்குமெனவுஞ் சைவநூல்கள் கூறுமையால், பிரமம் ஒன்றே யுள்ளதெனவும்,விவகாரத்தில் அஃதொன்றே பல சிவர்க்க ளாகுமெனவும், அவை மீண்டும் பரமார்த்தத்தி லொன்றே யாய்விடுமெனவுங்கூறு மாயாவாதத்தோடு எங்ஙனே யொற்றுமை பெறும்? இருவர் பிரசங்கமும் வேறு வேறு அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கின்றமையால்,அநேகம்பொருள்களை மூன்றென்று சைவர் கூறியபடியே அநேகம் பொருள்களை ஒன்றென்று யாம் கூறினேமென்று அவர் தொடுத்த வீண்வழக்கு அபஜயத்தை யடைந்தது. ஒன்றாயுள்ளது ஏன் பலவாயுடைந்தது என்பதற்கு என்ன ஸமாதான முண்டாயிற்று? ஒருபொருடானே பலவாயுடைந்து காரியப்பட்டனவென்று சைவநூல்கள் பசுவைக் கூறியதுண்டா? பெத்தமுத்திக ளிரண்டுகாலங்களிலும் பசுக்கள் பலவுள்ளனவெனவும்; அவை திரிபதார்த்தங்களென்னுஞ் சமட்டிகளி லொன்றி லடங்குமெனவுஞ் சைவநூல்கள் கூறுகையால், விவகாரபரமார்த்தங்களை யேகமாகிய பிரமத்துக்குக்கூறி யிஷ்டம்போல்விவகரித்துவரு மாயாவாதி மதந்தானேமாட்சிபெறுதொழிந்தது. இனி யொன்றாயுள்ள அக்னி பலவாக விஜ்ரும்பித்தபோது அபின்னத்வமும், பரிசுத்தத்வமுங் கெட்டனவாவென்று சமாதானந் தேடிக்கொண்டதையுஞ் சற்றே யோசிப்பாம். ஒன்றாயுள்ள வக்னி பலவாக விஜ்ரும்பித்ததென்கையி லவ்வொன்றினிடத்தும், பலவற்றினிடத்தும் உஷ்ணசக்தி, தக்தசக்தி, பிரகாசசக்தி முதலியன வொருபடித்தாகவே யிருக்கக்கண்டோம். ஏகமாகிய பிரமமேயப்படிப் பலவாகுமெனி னவ்வேகத்தினிடத்தும், பலவற்றினிடத்தும் பிரமசுபாவம் நீங்காதிருக்கவேண்டும். பிரமத்தின் விகாரமென்று அவர் கூறும் உயிர்கள் சுகதுக்க ரூபிகளாய் வினைவயப்பட்டு மொத்துண்டு வருந்துகின்றவர்களும், உலகம் கேவல ஜடப்பொருளுமாகி விளங்கலால் பிரமத்தின் அபின்னத்வமும், பரிசுத்தத்வமும் அவற்றினிடத்துண்டோ வில்லையோ வென்

பதை விவேகளே யோசிக்கவேண்டியது. இதனால் ஜகஜீவர்கள் ஏகமாகிய பிரமமன்றெனவும், பிரமத்தைப்போலவே யவ்விரண்டு பொருள்களும் விஜாதித்வமெய்திய நித்தப்பொருள்களெனவுஞ் சாதிக்கப்பட்டது. இது காறும் விவகரித்து முடிவு செய்த பரிஷ்காரத்தால் சைவநிந்தையிற் றலைப்பட்டழிந்த ஜண்டி யொருவனால் வெளிப்பட்ட (பேதவாததிமிரபாநு) என்னும் ஆபாசத்திரட்டு அடியோடே மாய்ந்துவிட்டது. பேதவாதமென்பது மத்வமதமாகிய துவைதஸித்தாந்தமென லறியாது பேதம், அபேதம், பேதாபேதங்களாகிய முடிவுகளைக்கடந்து அத்வைதமென்னுஞ் சிறப்புரிமை பூண்டு விளங்குஞ் சைவசித்தாந்தத்தையே பேதவாதமெனக்கொண்டெதிர்க்கவந்த பாஸ்கரனுக்குப் பலபலவென்று பல்லுடைந்து, குப்புறவீழ்ந்து குலைகுலைந்தோட நேரிட்ட புதுமையை நாடி அங்ஙனஞ் செய்தருளிய (ஆபாசஞானநிரோதம்) என்னு மிந்தச் சிவசூரியனையேயன்றோ வீரபத்திரமூர்த்தியெனத் துதித்து விரும்பாநிற்பர் மேலோர்? மேலே கூறப்பட்ட மூவிதவாதங்களும் புறப்புறச்சமயம் ஆறாகவும், புறச்சமயம் ஆறாகவும், அகப்புறச்சமயம் ஆறாகவும், அகச்சமயம் ஆறாகவும் விளங்கும். இவற்றுள் உலோகாயதம், சமணம், நால்வகைப் பௌத்தம் ஆகிய ஆறுசமயங்களும் புறப்புறச் சமயங்களாம். மாயாவாதம், பாஞ்சராத்திரம், ஸாங்கியம், மீமாம்ஸம், தார்க்கிகம், யோகம் ஆகிய ஆறுசமயங்களும் புறச்சமயங்களாம். சைவம், பாசுபதம், காளாமுகம், பைரவம், வாமம், மஹாவிரதம் ஆகிய ஆறுசமயங்களும் அகப்புறச்சமயங்களாம். சிவாத்வைதம் — அல்லது சிவைக்யவாதம், சிவஸங்கிராந்தவாதம், சிவஸமவாதம், பாஷாணமோக்ஷவாதம், அவிகாரவாதம், பேதவாதம் ஆகிய ஆறுசமயங்களும் அகச்சமயங்களாம். இவ்விருபத்துநாலுசமயங்களுக்கும் அதீதப்பட்டது சைவசித்தாந்தமென்னு முண்மை சிற்றம்பலநாடிகள் செய்தருளிய தத்வப்பிரகாசம் என்னு நூலின்வழி யினிது விளங்கும். இங்ஙனமாக, புறப்புறச்சமயியாகிய உலகாயதன் முதலினோரும், புறச்சமயியாகிய மாயாவாதி முதலினோருஞ் சைவசித்தாந்தத்தை யெதிர்ப்பது பேராச்சரியத்தையே யன்றோ வுண்டுபண்ணுகின்றது? சரபத்துக்கு முன்னர் சிங்கமே தலைநீட்டாதென்றால் மூடு, கொசுகு முதலியன தலையெடுத்து வெ

ளிப்படுவது எவ்வளவுபேதமை? தீபத்தை யணைக்கவெழுந்து அதில் விழுந்து சாகும் விட்டிற்பூச்சிகள் கதியே ஸம்பவிக்கையால் ஐயோபாவம்! என்று அவர்கள் விஷயத்தில் அநுதாபமே யுண்டாகின்றது. ஆனாலுஞ் சிறிய பாம்பாயினும் பெரியதடிகொண்டடிக்கவேண்டுமென்னும் பழமொழிப்படியே ஷை மதஸ்தர்களிலிப்போது கொஞ்சந் தலைவிரித்தாடுங் கலிகண்பர்களாகிய உலகாயதன், மாயாவாதி முதலியோரைப் போதுமானவரையில் விசாரித்துக்கொண்டோம். இவருள்ளும் ஏகாத்மவாதியாகிய மாயாவாதியை அதிகமாக விசாரித்துக்கொண்டோம். உலகாயதன் இளையவனும், மாயாவாதி மூத்தவனுமாகையால். இம்மாயாவாதியினது மதங்கிளைத்து வேர்விட்டதென்ன வெளிப்பட்ட உத்தமவாதம், சர்வமதசித்தாந்த விளக்கவினாவிடை, திருக்குதிரிசிய விவேகம் என்னும் ஆபாசத்திரட்டுகளை முறையே உத்தமவாத தூலவாதூலம், சித்தாந்த பூஷணம், திருக்குதிரிசிய விவேக கண்டநம் என்னுங் கோடரிகளால் வெட்டியெறிந்துவிட்டோம்.

இன்னு மிம்மாயாவாதம் பலவிதமானபரியாசத்துக்குள்ளாகியலக்கணுண்டழியும்! அழியும்!! எங்ஙனமெனின்? அம்பட்டனொருவன் எலுமிச்சங்காயளவு பொன்னை யெப்படியோ சம்பாதித்து அதைத் தன்னுடைய அடப்பத்தில் வைத்திருந்தான். ஓர்நாள் அவன் அரசனுக்கு க்ஷவரஞ் செய்துகொண்டிருக்கையில் அரசன் அவனைப்பார்த்து ஊர்க்ஷேமம் எப்படியிருக்கிறதென்று வினவினன். அதற்கு எவ்வளவு ஏழையாயிருந்தாலும் எலுமிச்சங்காயளவு பொன்னுக்குத் தரித்திரமா? என்று அம்பட்டன் பதில் கூறினன். அதைக்கேட்ட வரசன் புன்சிரிப்படைந்து மறுநாள் அவன் க்ஷவரஞ்செய்ய வருகையில் அவனுக்கோர் வேலையிட்டு வெளியே போகச்செய்து அவனடப்பத்தைச் சோதிக்கையில் அதில் எலுமிச்சங்காயளவு பொன்னிருக்கக்கண்டு அதையெடுத்துக்கொண்டனன். பின்புவந்த அம்பட்டன் விடை பெற்றுக்கொண்டு அடப்பத்தையு மெடுத்துக்கொண்டுபோய் மறுநாள் க்ஷவரத்துக்குவந்தனன். அப்போதும் க்ஷேமவிசாரஞ்செய்தனன். அதற்கு உலகமுழுதுங் கஞ்சிக்கு அலைகிறதென்றனன். இதை யறிந்த வரசன் அற்பர்களுடைய செல்வத்தின் பெருமை யினைத்தென்று அறிந்து வியந்தனன். இதுநிற்க, வேறொரு விசித்திரமு

முண்டு. பூனையானது ஏதாவதொன்றைத் திருடியுண்கையில் அதற்குக் கண்ணைமூடிக்கொள்வது சுபாவம். அங்ஙனமூடிக்கொள்ளுகையில் தன் கண்ணுக்கு ஒருவரும் புலப்படாமையால் இவ்விடத்தி லாருமில்லையென்று பயமற்றுத் திருடியுண்ணும். அங்குள்ளவர்கள் பார்த்து உதையாமற் போகார்களாகையால், அப்போது திடீரென்று விழித்து இதுதானோ வுலகம் என்று மருண்டு ஓடும். இவ்விரண்டு விருந்தாத்தங்களாலும் அறியாமை மேலிட்ட ஜந்மங்களுடைய தன்மையே வெளிப்பட்டது. அம்பட்டனுக்குத் தன்னனுபவமே யுலகமெங்கு மிருப்பதாக வுண்டாகிய வுணர்ச்சியும், பூனையானது தனக்கு யாருந் தோன்றாமையால் யாருமே கிடையாதென்றுண்டாகிய வுணர்ச்சியும் நம்மாயாவாதப்பெருஞ் செல்வர்களுக்கே யன்றோ பொருந்து முபமானங்களாயின? மாயாவாதியாவான் உலகம் தானினைத்தபோதே யுண்டென்றும், நினையாத போது இல்லையென்றுங் கூறுகின்றமையாலும், சுழுத்தியில் பிரபஞ்சம் உண்டானாற்காட்டு என்று கேட்கின்றமையாலும் அவன்கூறு ஞானத்தை அம்பட்ட ஞானமென்றும், மார்ஜால ஞானமென்றும் விவேகிகள் கூறுவர். தன்னிடம் பொன்னிருந்தபோது உலகமெங்கும்பொன்னிருந்ததெனவும், தான்கண்ணைமூடிக்கொண்டமாத்திரத்தானேயாருமில்லையென்றும் அம்பட்டனும், பூனையுங்கொண்டபடியேயன்றோ தானினைத்தபோதே யுலகமுண்டென்றும், தான் கண்ணைமூடித்தூங்குவது கொண்டே யுலகங் கிடையாதென்றும் அம்மாயாவாதி மயங்கிக்கூறுகின்றான்? இத்தகைய மாயாவாதியின் சிறப்பை யின்னுங் கொஞ்சங் கூறுவாம். ஓரிடையன் மாடுமேய்த்துக்கொண்டிருந்து ஓர் ஏரிக்கரையின்கீழ் நல்ல நித்திரை வந்து தூங்கிவிட்டனன். அப்போது பெருமழையுண்டாகி வெள்ளம் பெருகியோடிற்று. அந்த வெள்ளத்தில் அவ்விடையன் றலைமயிரவிழ்ந்து அலைந்துகொண்டிருந்தது. இடியும், மின்னலும், காற்றும் அதிகரித்து வருஷிக்கு மந்த மழையை அவனது பெருந்தூக்கஞ் சட்டை செய்யவில்லை. இந்த நிலையில் அவன்றூங்குகையில் அந்தவழியேபோன அம்பட்ட னொருவன் அவ்விடையனது தன்மையைக்கண்டு அருகணைந்து அவனைப் புரட்டிப்பார்த்தனன். அவன் செத்த பிணமல்ல வென்றும், தூக்கத்தின் பெருமை அதுவென்றும் அம்பட்டன் றெளிந்து அவ்விடை

றன்றலையிலும், முகத்திலும் வளர்ந்து காடுபற்றி யிருந்த ரோமராசிகளைக் களைந்து அவனைப் புரட்டிப்புரட்டிச் சர்வாங்கமும் க்ஷவரஞ்செய்துவிட்டுப்போயினன். அன்று கழித்து மறுநாள் விழித்துக்கொண்ட அவ்விடையன் விழித்தவுடன் தன்னுடைய முகத்திற் கையையிட்டுத் தாடியை யுருவப்போனான். தாடியில்லை. மீசையைப்பார்த்தான். அதுவு மில்லை. குடுமியைப் பார்த்தான். அதுவுமில்லை. இப்படி யெங்குங்காணாமையால் அவன் தன்னிற் சந்தேகங்கொண்டு அழத்தொடங்கினான். (நான்றான் நானல்லவோ? இது—நல்லூரிலே யேரிக்கரையல்லவோ? கோனன்றான் கோனனல்லவோ? என்னைக்—கொண்டழித்து வேறு யாரைக்கொண்டணைந்தாரோ? நான்றான் நானல்லவோ?) என்று புலம்பிய விசேடத்தைக் கொஞ்சம் விரித்துரைப்பாம். அவ்விடையன் தாடி குடுமி முதலிய வடையாளங்களில்லாமற்போகவே தன்னிடத்திற் றனக்குச் சந்தேகமுண்டாயிற்று. நானாயிருந்தால் எனக்குக் குடுமி, தாடி முதலியன விருக்கவேண்டுமே! அவையில்லாமையால் நான் – நானல்லபோலிருக்கிறது. நான் படுத்திருந்தவிடம் நல்லூர் ஏரிக்கரையாச்சுதே! அது தண்ணீரில்லாத ஏரியன்றோ? இதோ விருக்கிற ஏரி தண்ணீர் கொண்டிருக்கிறதாகையால் அந்த ஏரிதானோ இது வேறு ஏரிதானோ? தாடி முதலியவற்றோடு கூடிய என்பேர் கோனனாச்சுதே! அவையில்லாமல் இப்போது காணப்படுகின்றவன் கோனன்றானோ அல்லவோ? தெரியவில்லை. தாடிமுதலிவற்றோடு தண்ணீரில்லாத ஏரிக்கரையின்கீழ்ப் படுத்துக்கொண்டிருந்த கோனன் என்னும் பேயரையுடைய என்னைக்கொண்டழித்து அவ்வடையாளங்களில்லாத வேறு யாரையோ தண்ணீர் நிரம்பிய விந்த ஏரியின் கீழ் யாரோ கொண்டுவந்து போட்டுவிட்டார்கள்! என்று தேம்பித்தேம்பி யழுதுகொண்டிருந்தான் என்னும் விசேடம் நம்மாயாவாதஞானிகளுக்கே யன்றோ பொருந்தும்? பிரமம் தன்னை மறந்துவிட்டதனாலன்றோ தான் பிரமந்தானோ அல்லவோ என்று சந்தேகமுண்டாகிச் சிவத்தன்மை யெய்தி முன்னிருந்த வடையாளமாகிய பிரமநிலை பெயர்ந்து அழுதுகொண்டிருக்கின்றது? இப்படியும் பிரமத்துக்கு அவதிகளுண்டாகுமா? இவைகளேயன்றி ஆற்றிலிறங்கிக் கரையேறித் தங்களை யெண்ணிப் பார்த்துக்கொண்ட பதின்மர்களில் அங்ஙனம் எண்ணிவந்தவொவ்வொருவருந்தனித்

தனித் தங்களை விட்டு எண்ணிய வறியாமையால் தம்மி லொருவனை ஆறுவிழுங்கிவிட்டதென்று மருண்டு ஒருவரையொருவர் கட்டிக்கொண்டழுத கதையுமேயன்றோ நமது பிரமத்தின்குஞ்சுகளாகியமாயாவாதிகள் பெருமையை யினிது விளக்கும்? மூடர்பதின்மருடைய கதையாகிய விந்தவுபமானத்தைப் பிரமத்தினிடத்தேற்றி அப்பெருந்தகையாளரே கூறிக்கொள்ளுவதுண்டாகையால் யாம் விசேடித்துரைப்பது அவசியமன்று. இவரை மார்ஜாலஞானிகளென்பது வேறுவிதத்தாலுஞ் சாதிக்கப்படும். "ఈశస్యైశ్వర్యమాత్రేణ బిడాల ప్రమాణనరాః। రుద్రేణ సామ్యమన్యేషాం వదంతి ప్రకృతిమోహితాః" என்னும் சூதஸம்ஹிதாவசனத்தால்சிலபேர்அத்வைதமென்னும்அபேதவாதத்தை யநுசரித்து மார்ஜாலச்சிரேஷ்டர்களாகி ஸ்ரீருத்ரமூர்த்தியோடு ஏனையதேவர்க்களையுஞ் சமானமாகப் பிரமித்துப் பிதற்றுகின்றார்கள்என்று வெளிப்பட்டது. இதனால், அத்வைதமென்னும் ஏகாத்மவாதத்தை யநுசரிப்பது கொண்டே ஸ்ரீசிவபெருமானோடு ஹீனதெய்வங்களையெல்லாம் சமானங்கூறத்தக்க வவதிஞானமுண்டாகிறதெனவும், அந்த ஞானசித்தியநந்தரமே அவர்கள் பிரமித்துப் பிதற்றுகின்றார்களெனவும் ஏற்படுகின்றது. இவ்வத்துவிதம் இன்மைப்பொருளைக் கொண்டதென்றறிக. சைவபரமாக வதை விவகரிக்குங்கால் அன்மைப்பொருள் விரவிநிற்கும். அசைவம்பழுத்து விளங்கு மவ்வத்துவிதத்தை யநுசரிப்போர் மார்ஜாலசிரேஷ்டரென்றதென்னையெனின், பூனையானது சுவர்முதலிய விடங்களிலிருந்து தாவும்போது இந்தப்புறந்தாவுமோ, அந்தப்புறந்தாவுமோ! என்று சந்தேகத்தை யுண்டுபண்ணுவதுபோலவே அவர் பாதத்வ நிர்ணயம் பண்ணுகையில் அது சிவனோ, விஷ்ணுவோ என்று மயக்கத்திலே தானே முடியும். பூனைக்கு எந்தப்புறங் குதித்தாலும் சகசமாவதுபோல் இவர்களுக்கும் எந்தத் தெய்வத்தைச்சொன்னாலும் சகசமாய் முடிந்திடுவதால். இவர்கள் சைவருமன்று, வைஷ்ணவருமன்று உபயபிரஷ்டர்களென்பதே தீர்மானம். சிவநிந்தையைச் சகிக்காமல் வியவஸ்தைப்படுத்திப் போலியத்துவிதமாகிய ஏகாத்மவாதத்தைக் கண்டிக்கும் சூதஸம்ஹிதையை மாயாவாதநூலென்று மருண்டு கையாண்டுவரும் அவ்வவிவேகிகள் வினையிருந்தவாறு ஆச்சரியம்! ஆச்சரியம்!! அத்துவிதம் என்னுஞ்சொல்லானது அவருக்கெப்படி வுரிமையெனக்கொ

ண்டு குழப்பிவருகின்றார்களோ அப்படியே சூதஸம்ஹிதையையுந்
தம்மதாக அவர் குழப்பிப் பெருங்கூச்சலிட்டுவருகின்றனர். இன்
னோர் விஷயத்தில் யாமெடுத்துக்கொண்ட பிரயாஸத்துக்களவின்
றாகையா லிம்மட்டிலுபாதியடைந்தாம். இவரினுமுத்தவனாகிய பா
ஞ்சராத்திரிக்குப் போதும்போதுமென்றுசொல்லும்படி சிவபா
ரம்யபிரதரிசினி, சிவதத்வசிந்தாமணி, சிவாதிக்யரத்நாவளி, சைவ
சூளாமணி என்னு நூல்களின்வழி அதிகமான ஸந்மானங்கள்செய்
துதிருப்தியடைந்திருக்கின்றோமாகையாலிங்கேயொன்றும்அவன்
விஷயத்தில் யோசிக்க விடமுண்டாகவில்லை. ஏனைய சமயிகள்
பிரபாவங்களைச் சிவஞான சித்தியார் பரபட்சமுதலியவற்றாற் செ
வ்வியிதினறியலாமென்க. இது காறும் பிரஸ்தாபித்துக்கடிந்த ஆ
பாசஞானங்களேயன்றி வேறு ஆபாசஞானமு முண்டாகையால்,
அதையுங்கொஞ்சம் விசாரித்துப் பரிஷ்காரப்படுத்துவாம்.

திரிபதார்த்த பிரதிபாதக போதமாகிய சைவசித்தாந்த வுண
ர்ச்சி கைவர முயலும் அதிகாரிகளைப்பற்றியே மீண்டு விசாரிப்ப
தாம். இந்தச் சைவசித்தாந்தம் சரியை-கிரியை-யோக - ஞானங்க
ளென்னு நாலு விதமான சிவபணிகளைக் கொண்ட தொன்றாம்.
இந்த நால்வகை யநுட்டானமுடையவருஞ் சைவரோயாவர். சிவ
னடியா ரென்னப்படு மிவர்கள் ஒருவரை யொருவர் சிவமாகவே
கொண்டு வழிபடுவது இவருக்கின்றியமையாத முக்கிய கடமை
யாம். நால்வகை யநுட்டாதாக்களும் வேடத்திலுஞ் செய்கையிலு
மொத்திருப்பராகையால் ஒவ்வொருவருந் தாரதம்யம் விசாரி
யாது சைவ வேடம்பூண்ட யாவரையுஞ் சிவ பாவனையாகவே
வழிபடல்வேண்டும். சிவஸாந்நித்யமுண்டாகுமிடங்கள் தாவரமா
கிய சிவலிங்கப்பெருமானிடத்தும், ஜங்கமமாகிய சிவனடியாரிட
த்துமே யென்று சைவநூல்கள் கூறுகையால் இரண்டிடங்களுஞ்
சிவபாவனையே யதிகரித்தல் வேண்டும். சிவனடியார்க ளிடத்தில்
யோக்யதை யில்லாதவழி அவரை வழிபடுதல் கூடாமையால்
அதையே யன்றோ யாம் விசாரிப்பதெனின், சிவலிங்கப்பெருமா
னிடத்தும் யோக்யதை யுண்டோ வில்லையோ வென்று உடைத்
தன்றோ பின்னர் பார்க்கவேண்டி வரும்? உடைபட்டுக் கல்லாக
வெளிப்படுஞ் சிவபிரானிடத்தில் அன்புசெய்ய யோக்யமுண்டா

காமையால் சிவாலய சேவை வேதாகமங்களில் விதித்தது அவலமாக வன்றோ முடியும்? இப்படிப்பட்ட வீண் விசாரஞ் செய்யத் தலைப்படு மொருவனைக்காட்டிலும் அயோக்யர்கள் வேறுகிடைக்க மாட்டார்க ளாகையால் தன்னுடைய தோஷத்தையே முதலிலொழித்துக்கொள்ளவேண்டியது. தன்னிடமுள்ள குற்றமொழிந்தால் தான் நிர்த்தோஷியாய்விடுகிறானாகையால் வேற்றிடத்து மலினங்கள் தனதுள்ளத்திற் பதியவிடமிராது. துரியோதனன் தன்னைப்போலவே யுலகமுழுதும் பாவிகளே அதிகரித்திருக்கின்றார்களெனவும், தருமநந்தனர் தம்மைப்போலவே யுலகமுழுதும் நல்லவர்களே அதிகரித்திருக்கின்றார்களெனவும் பிரஸ்தாபித்தவுண்மைஸ்ரீமகாபாரதத்திற்கூறப்பட்டிருக்கும்விசேடத்தானுமறிக. அன்றியும், ஏகலவனென்னும் வேடன் துரோணாசாரியைப்போலொரு மரப்பாவை செய்துவைத்துக்கொண்டு அதனது அயோக்யதையை விசாரியாது அதையே துரோணராகப்பாவித்து வழிபட்டு வந்த விசேடத்தால் ஆசாரியராகிய துரோணரிடங் கற்க வேண்டிய வரிய வித்தைகளை யெல்லாங் கற்று அதிக ஸம்பன்னனானதன்றியும், மூலபுருஷராகிய துரோணாசரியனை யோர் காலத்தில் காணநேரிட்டு அவர் விரும்பியபடியே குருதட்சணையாகத் தனது கட்டை விரலைத் துண்டித்து அவருக்குத் தத்தம் பண்ணினானென்பது முதலிய இதிகாசவிருத்தாந்தங்க ளநந்தமுண்டாகையால் சிவனடியா ரிலக்கணத்தைப் பரிட்சிக்கவேண்டுமென்பது கேவலம் அஸங்கதமாய்விட்டது. சேரமான் பெருமாணாயனார் உழமண் சுமந்துவந்த வண்ணானைச் சிவனடியாராகக் கண்டு வழிபட்டமையாலும், கலிக்கம்பநாயனார் - ஏனாதிநாயனார்- மெய்ப்பொருணாயனார் முதலிய பரமஞானிகளெல்லாங் கேவலம் வேடங்களையே மெய்ப்பொருளென வழிபட்டமையாலும், இயற்பகைநாயனார் - மானக்கஞ்சாறநாயனார் முதலினோர் மனைவியைக் கேட்டவர்க்கும், மகளாரது கூந்தலைக்கேட்டவர்க்கும் வேடமாத்திரத்தானே மகிழ்ந்து அங்ஙனங்கேட்ட வயோக்யதையை நாடாமல் கேட்டபடியே கொடுத்தருளினமையாலும் சிவனடியாரைப் பரிட்சித்துப் பார்த்தே வழிபட வேண்டுமென்பது செல்லாது. ஒருவரையொருவர் பரிட்சிக்க முயலுங்கால் பரிட்சிக்கத் தொடங்குபவன் தன்னைப் பரமயோக்யனாகவும், தன்னிடத்திலெல்லாச்

சைவநலங்களு நிரம்பி யிருப்பதாகவு மதித்தே வெளிப்படுவதால், தன்னிடத்திற் றன்னை யறியாமலே குடிகொண்டிருக்கும் அமங்கலங்களை யெல்லாம் யோசிக்கமாட்டான். அப்படியே பரிட்சிக்கப்படுபவனுங் கொண்டிருப்பானாகையால் அவனுக்கு இவன் குற்ற முடையவனும், இவனுக்கு அவன் குற்றமுடையவனுமாக முடிந்து ஒருவரை யொருவர் துவேஷிப்பதே பயனாக முடியுமன்றிக் குணமுண்டாவது கஷ்டம்! கஷ்டம்!! சிவனடியா ரிலக்கணம் விசாரிக்கத்தொடங்கிய பலஹித்தி யுடனே கைகூடி விடுவதால், நிர்விசாரமுடைய சாதுக்களே யன்றோ வேடமாத்திரத்திற் குழைந்து அன்பு வழியிலொழுஞ் சிவனடியாராக வங்கீகரிக்கத் தக்கவராவர்? அன்பு என்னும் அரியபேறு கிடைக்கப் பெறுமையே பலதீமைகளி லொருவன் செறிந்தழியவிடஞ் செய்கின்றது. சைவவேடம்பூண்டு சிவநேசமிருந்தவனாக வெளிப்பட்டு யாவராலு நன்கு மதிக்கப்பட்டவனாகிய வோர் சைவன் தனது பெண்டு பிள்ளைகள், தாய்தந்தைகள், பிராத்ரு பந்துவர்க்கங்கள் முதலிய தேகஸம்பந்திகளிடத்தில் எந்தச் சைவ நலங்களைப் பரிட்சித்தோ அவர்களை யுயிர்க்குயிராயிருந்து ஓம்புதல் செய்கிறான்? எவ்வவவு ரோதனங்க ளவரா லுண்டான விடத்தும் அவற்றை யோர் பொருளாகப் பாராட்டாமல் அவரிடந் தான் வைத்திருக்கும் அன்பு அல்லது பாசம் காரணமாகவே யன்றோ அவர்களைத் தன்னிலு மினியவராகக்கொண்டு உபசரித்தும், பாதுகாத்தும் வருகிறான்? உண்மையான சிவனடியார் வந்து தன்னை யொன்று கேட்பினுந் தனது மைந்தர் மனைவிகளுக்குக் கொடுத்துச் சேடித்தா லன்றோ அன்னோர்க்கு ஏதாவ தியன்றதை யுதவுகின்றவனாகிறான்? பாசங் காரணமாகவே யன்றோ மைந்தர் முதலினோரைச் சிவனடியாரினு மேலாகப்பார்க்க நேரிடுகின்றது? இந்த நியாயத்தால் சிவவேடத்தாரைப் பரிட்சிக்க முயல்வ தெல்லாம் அன்பில்லாத குறைவென்றே ஏற்படுகின்றது. துட்டு விரயமில்லாமல் விபூதியும், உருத்திராக்கவடமும், பில்வ முதலிய பத்திரங்களுங் கிடைப்பது கொண்டு சைவவேடம்பூண்டு சிவபூஜையின் முதிர்ந்து சைவப் பழமெனத்திரிவது கொண்டே தன்னைச் சிவனடியாராக வொருவன் மதிப்பது கூடாது! கூடாது!! தன்னை மதிப்பது மாத்திரங் கூடாதன்றி யேனையவிடங்களை மதிப்பது

யுக்தந்தான். இப்படியே யொவ்வொருவருந் தம்மை மதியாமலும், ஏனையவிடங்களை மதித்தும் வழிபட்டு வருவதுண்டெனின், யாவரும் நிரகங்காரிகளாகிக் குணப்படுவார்களன்றோ? சாத்தன் தன்னையிழித்துக்கொண்டு கொற்றனை மேலாகமதித்து வழிபட்டு அன்பு பாராட்டுகிறபடியே கொற்றனுந் தன்னை யிழித்துக்கொண்டு சாத்தனை மேலாக மதித்து வழிபட்டு அன்பு பாராட்டிக் குணப்படுவதிலென்ன தடையுளது? முடிவாக வன்பே சிவவேடத்தை வழிபடுதலுக்குக் காரணமென் றேற்படுகையால் சிவவேடத்தாரைத் தாரதம்யமாகக் காண்பவர் அன்பில்லாத பாவிகளென்றே நிச்சயிக்கவேண்டியது. அன்பில்லாமல் எவ்வளவு நூல்களைக் கற்றாலும், எத்தனை தரம் சிவ சிவ வென்று கதறினாலும், நாளெல்லாமிருந்து சிவபூஜை செய்தாலும் என்னபலனுண்டு? இத்தனையும் பெருமைக்கும், பேருக்குஞ் செய்வதாக முடியுமன்றி வேறில்லை. சிவவேடம் பூண்ட வொருவரை அவரைப்போற் சிவவேடம்பூண்ட மற்றொருவர் வந்தனம் புரிந்த காலத்தில் அதையேற்றுக்கொண்டவர் பிரதிவந்தனஞ் செய்வது அவசியம். ஒருவர் அன்பு பாராட்டியபடியே மற்றொருவரும் அன்பு பாராட்டவேண்டிய வுரிமையால். ஒருவேளை பிரதிவந்தனஞ் செய்யாதொழியின், அது அங்ஙனஞ் செய்யாதவரது அன்பின் குறைவேயாமன்றி முதலிற்செய்தவருக்கு உண்டாகுந் தாழ்வு யாது? இவர் அவரை வழிபட்டது சிவவேடம் பாராட்டியே யாகையால் அங்ஙனம் பாராட்டி வழிபட்ட நலங்கைகூடிச் சிவப்பிரஸாத முண்டாவதிலு மென்ன தடை? இவ்வுண்மை தேராது தான் செய்த வந்தனத்துக்குப் பிரதிவந்தனங் கிடையாதபோது பெருந்துக்கமுற்று முன்வந்தனம் பண்ணியதாமே பின்னர் பலவாறு நிந்தித்துழல்வாரெனின், அவரை நாம் என்னென் றழைக்கலாம்? அன்பு காரணமாகாமல் பெருமை காரணமாக வேடம்போட்டுக்கொண்டதனாலன்றோ வீண் துக்கத்துக் கிடஞ் செய்தது? கேவலம் வேடமாத்திரத்தானும், அத்துடன் செயல்குணங்களானும், அவற்றோடுநிச்சயம்-அநுபவம்என்னும் ஞானவிசேடங்களானுஞ் சிவனடியார் தன்மை வெளிப்படும். இவை யொன்றின்மேலொன்றேறிய படிகளாக வேற்பட்டமையால் ஒன்றின் பின்னொன்று பரிபாகவிசேடத்தா லொருவனுக்குச் சித்திக்குமென்பது முண்மை.

இவ்வரிய நியாயங்களால் சிவவேடத்தைக் கண்டமாத்திரத்தில் ஒருயோசனையுஞ் செய்யாமல் ஒருவரையொருவர் சிவமாகக்கொண்டுவழிபடவேண்டுமென்பது சாதிக்கப்பட்டது. (சங்கநிதிபதுமநிதி யிரண்டுந்தந்து தரணியொடுவானாளத் தருவரேனு, மங்குவாரவர் செல்வ மதிப்பேமல்லே மாதேவர்க் கேகாந்தரல்லராகில், அங்கமெலாங் குறைந்தழுகித் தொழுநோயாரா யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங், கங்கைவார் சடைக்கரந்தார்க்கன்பராகி லவர்கண்டீர் யாம்வணங்குங் கடவுளாரே) என்னும் பரமாசாரியர் திருவாக்கின் விசேடத்தைக் கண்டபின்னரும் அடியார் வேடம்பூண்டொழுகும் பெரியோரிடத்து எங்ஙனே தாரதம்யங் காண்பது கூடும்? இழிந்த குலத்தவரிடத்திலுந் தாரதம்யங் காணாது வழிபடவேண்டுமென்று வெளிப்பட்ட பிரமாணத்தை யநுசந்தித்த பின்னர் தானே யுயர்ந்தஜாதி யெனவும், என்னிற் றாழ்ந்தவரே யேனையஜாதியினரெனவுங்கூறித் தன்னினத்தவரை மாத்திரமே தழுவி யுபசரித்தும், ஏனையவருணத்தில் வந்தவர் எவ்வளவு சுத்தர்களாயிருப்பினும் அவர்களைப்பொருளாகமதியாமல் ஜாதியையே முக்கியமாகப்பாராட்டியும் அவலமார்க்கத்திலுழன்று தன்னையும், தன்ஜாதியில் வேடம்போட்டுத்திரிகின்றவரையுமே யுயர்ந்த வடியார்களெனவும், சைவரெனவுங் கூறிக்கொண்டு திரிகின்றவர்கள் சைவர்ஆகார்! ஆகார்!! திருவிளையாடற் புராணத்தில் அந்தணர்வீதி, அரசர்வீதி, வணிகர்வீதி, வேளாளர்வீதி என்னும் பிரிவால் நால்வருணத்தவர் சிறப்புங்கூறப்பட்ட பின்னர் சைவர் வீதி என்று வேறுபிரித்து யாவர் சிறப்புத்தோன்றவோ கூறப்பட்டுள்ளது? அவர்க்குச் சாதியென்னை? சிவதீக்ஷையடைந்து சம்ஸ்காரிகளாய் விளங்கும் எல்லாச்சாதியி னருமென்பதே துணிவாகையால் சிவனடியார்களிடத்திற் சாதிநலம் பாராட்டுவது கூடாதெனவேயன்றோ ஏற்படுகின்றது? ஏனையஜாதிகளை நோக்க வேளாளஜாதியிற்றானே சைவநலமதிகரித்திருப்பதனால் அவரையே சைவர்என்று மிகுதிபற்றி யுலகம் வழங்கிவருகின்றது. வேளாளராவார் சுத்தகுலத்தவர் நால்வரு ளொருவராகையால் அவர்பால் அன்னியஜாதி நிந்தை விசேடிப்பதின்று. அன்னோர் பேரை யிரவலாகக்கொண்டு உயரவேண்டி முயல்கின்றவர்களே நிந்தித்துழலா நிற்பர். இவ்வுண்மைகளாலுஞ் சாதி யெம்மட்டில் நிலைபெறுமென்பதை யோசிக்கவேண்டியது. இன்னும் விசாரிக்கிற் "சாதியென்பது தேகத்தை யபிமானித்ததொன்று. சமயமெ

ன்பது ஆன்மலாபத்தைப் பயப்பதொன்று. நான் ஜாதியி லுயர்ந் தவன் என வொருவன் வெளிவரினு மவன் றன்னிலுயர்ந்தஜாதி வேறுகிடையாது என்றுசொல்ல விடமில்லை. சுத்தகுலஸ்தராகிய முதல் நால் வருணத்தவரு மொருவரிலொருவர் தாழ்ந்தவரென் பது யாவரு மொத்துக்கொண்ட விஷயமாகையால். எவ்வளவு மேலாகத் தன்னைப் பிரஸ்தாபித்துக் கொண்டபோதிலுஞ் சூத் திரன் வைசியனுக்குக் கீழாகவே தானடங்குவதல்லது அதிக்கிர மிப்பதில்லை. எவ்வளவுமேலாகத் தன்னைப் பிரஸ்தாபித்துக்கொ ண்டபோதிலும் வைசியன் க்ஷத்திரியனுக்குக் கீழாகவே தானடங் குவதல்லது அதிக்கிரமிப்பதில்லை. எவ்வளவுமேலாகத் தன்னைப் பிரஸ்தாபித்துக்கொண்டபோதிலும் க்ஷத்திரியன் பிராமணனுக் குக் கீழாகவே தானடங்குவதல்லது அதிக்கிரமிப்பதில்லை. எவ்வ ளவுமேலாகத் தன்னைப் பிரஸ்தாபித்துக்கொண்டபோதிலும் பிரா மணன் ஞானிக்குக் கீழாகவே தானடங்குவதல்லது அதிக்கிரமிப் பதில்லை. மேல்வருணத்தவர் சிறப்பே நிலையாதபோது இவரிற்குறு ந்தவனுலோமர், பிரதிலோமர் முதலியவர்களுடைய சிறப்பு எங் கே நிலைக்கும்? சமயமோவெனின், ஒவ்வொன்றும் விசேடமே பெறும். சைவசித்தாந்திமுத லுலகாயதனீறாக வொருவருந் தங் கள் சமயத்தை மற்றொரு சமயத்துக்குத் தாழ்ந்ததாக வொப்புக் கொள்ளார்களாகையால். ஒவ்வொருவருந் தங்கள்தங்கள் சமய மே யுயர்ந்தசமயம் எனக்கொண்டிருத்தலால் சமயத்தை யபிமா னித்தல் ஒருவாறு பொருந்தும். தனக்கு மேலிட்டசமயம் கிடை யாது என்று துணிவுகோடலால். இங்ஙனமன்றி, தனக்குமே லொருஜாதியுண்டென்று கொண்டபின்னர் ஒருவன் ஜாதி யகங்கா ரங்கொள்ளலா லென்னபயன்? உயர்ந்தஜாதியுடைய வொருவனை நோக்கத் தானேதன்னைத் தாழ்ந்தஜாதியுடையவனாக வங்கீகரித் தடங்குவதால். தேகத்தை யிடமாகக்கொண்ட ஜாதிநல மத்தே கத்தோடுதானே யழியும். ஆன்மாவை யிடமாகக்கொண்ட சமய நலம் மேலுக்குமே லபிவிர்த்தியே பெறும். சமயம் என்பது, காலம் - பருவம், என்று பொருள் தரலால் அதை யபிமானித் தல் உசிதமென்று அப்பதத்தினடியாகவே சித்திக்கின்றது. புறப் புறச்சமயத்தி னின்றும் புறச்சமயத்தினும், புறச்சமயத்தி னி ன்றும் அகப்புறச்சமயத்தினும், அகப்புறச்சமயத்தி னின்றும்

அகச்சமயத்தினும், அதினின்றும் அதீதசமயத்தினும் புகுந்து ஒன்றுக்கொன்று சாதகமாகமுடிந்த சமயங்களைப் பருவபேதத்தா லொருவ னபிமானித்தல் பெரும்பயனாகவே முடிந்தது. கறுப்புநாயை வெள்ளைநாயாக்க முடியாதாற்போல விழிந்தஜாதியிற் பிறந்தவ னுயர்ந்தஜாதியாக விடமில்லை. கேவலங்கடையனாகிய வுலகாயதன் புத்தனாகவும், சமணனாகவும், வைணவனாகவும், சைவனாகவுந்திரித லொரு பிறப்பிலேதானே கூடுமாகையா லுபகாரவடிவமாகிய சமயங்களை யபிமானித்தல் ஸாமஞ்சஸமே பெறும். உலகாயதனுக்கே யோகமுண்டாகிறபோது, ஏனையவுயர்ந்த சமயிகள் பிரயோசனமடைவாரொன்பது சொல்லவும் வேண்டுமோ? (அறுவகைச்சமயத்தோர்க்கு மவ்வவர்பொருளாய்) என்ற வசனத்தாலுஞ் சாதியைநோக்கச் சமயத்தினேற்றம் வெளிப்பட்டது. (விரிவிலாவறிவினார்கள் வேறொருசமயஞ்செய்தே - யெரிவினாற்சொன்னாரேனு மெம்பிராற் கேற்றதாகும்) என்ற பிரமாணத்தானும் அது விளங்கும். எல்லாச்சமயிகளும் ஜாதியினுஞ் சமயமே யதிகமென்று கொண்டிருப்பதாலும், அங்ஙனஞ்செய்தலால் முடிவில் சைவஸித்தியுண்டாவதாலும் ஜாதியைவிட்டுச் சமயத்தை யபிமானித்தலே சால்புடைத்து. சைவராயுள்ள பலஜாதிமாக்கள் கூடி வாழ்கையில், அவர் பிரிந்து ஒருவர் ஜாதியை மற்றொருவ ரிகழ்ந்துபேசத் தொடங்குவ ரெனி னெங்ஙனே சமயம் விர்த்தி யடையும்? சமய விர்த்திக்கு ஹானியுண்டு பண்ணுவதாகிய ஜாதியகங்காரம் அவசியம் உத்தமனுக்கு ஒழியத் தக்கதே! சமயக் கேட்டுக்குக் காரணமாய்முடிந்த ஜாதியேற்றம் பகர்ந்திடுவாரைச் சமயாபி மானிகளென்று கூறுவ தெங்ஙன்? இவற்றைச் சிர்தூக்கின், ஜாதியை யபிமானித்தொருவன் றருக்குறல் குணமோ, அல்லவோ வென்பது விளங்கும்! விளங்கும்!! இதுகாறும் யாம் கூறிவந்த நியாய விளக்கத்தால், ஜாதியாசாரங்களை விட்டுவிடவேண்டு மெனவாவது, எல்லாம் ஓரே ஜாதியெனவாவது, ஜாதிபேதங் கிடையாதெனவாவது காலத்திரயத்தும் அமையாது. அந்தந்தஜாதியாரும், தங்கடங்க ளாசாரங்களிற் றழாது ஒழுகவேண்டுமென்பதும், தத்தஞ்சாதியுயர்வைத் தங்கண்மட்டிலே பாராட்டுவதன்றி யேனையஜாதிகளை யிழிவுகூறி மகிழ்தல் கூடாதென்பதும் எமது முக்கியகருத்து. ஜாதிகுலம் பிறப்புகளோ டொப்பவே கல்வி, செல்வமுதலியவற்றால் அகங்க

ரித்தலுஞ் சமயவிர்த்திக்கு ஹானிதேடுவதாக முடிதலால் அத் தொடக்குகளிலும் பற்றெழிந்து சுத்தராகவேண்டியது.

கல்வி, செல்வம், விவேகம் என்பவை தனித்தனி வேறுவேறு பொருள்களாம். இவைமூன்றும் பூர்வகன்மவிசேடங்களாலொருவனுக்குண்டாகுமன்றி வேறில்லை. அவரவர் வினைக்கீடாக விவற்றுளொன்றேனும், இரண்டேனும், இவைமூன்றுமேனுங் கைகூடும். இவைமூன்றுந் தீமைநன்மையென்னு மிரண்டிடங்களிலு முதவியாகநிற்கும். தீமையிலுதவியாகுங்கால் அந்தக்கல்வியுஞ் செல்வமும் புத்தியும் அவலமாகவே முடியும். நன்மையி லுதவியாகுங்காலவைமுழுதுஞ் சபலமாகவே முடியும். இதனு லிம்மூன்றுமொருவனுக்குக் கைகூடப் பெற்றகாலத்து மிவற்றின் மேலாயதொரு சிவப்பிரஸாதமன்றோ சித்திக்கவேண்டி யிருக்கின்றது? அச்சிவப்பிரஸாதமுடையார்க்கு இவைவேண்டுமென்பது முசிதமன்று. நாத்திகனுக்குக் கல்வி, செல்வம், புத்தி இம்மூன்று மிருந்தால் அவன் என்ன செய்யமாட்டான்? சிவநிந்தையிற் பழுத்து உலகங்கெடச்செய்வானன்றோ? அப்படியே யூணமகமதியருஞ்செய்வாரன்றோ? கல்வி விவேகங்க ளிருந்தும் அவை யன்னோர் மாட்டுத் தீமையே விளைத்தலால் கற்றவனென்று பிறரைப்புகழ்தலும், நான் கற்றவனென்று தற்புகழ்ச்சி செய்தலும் அவலமேயாம். (கற்க கசடறக் கற்பவை கற்றபின் - னிற்கவதற்குத்தக.) என்ற வுண்மை நிலையிற்பெயராது சிவநேசம் விடாது பற்றியொழுகுமேலோரையே கற்றவரென்றும், அறிஞரென்றுங்கொண்டு வழிபடுவர் மேலோர். (சாத்திரம்பல பேசுஞ் சழக்கர்காள், கோத்திரமுங்கு லமுங்கொண் டென்செய்வீர், பாத்திரஞ்சிவ மென்று பணிதிரேன், மாத்திரையில ருளுமாற்பேறரே.) எனவும், (வேதமோதிலென் சாத்திரங் கேட்கிலென், நீதிநூல் பல நித்தல்பயிற்றிலென்.) எனவும், (காலைசென்று கலந்துநீர் மூழ்கிலென், வேலைதோறும் விதிவழி நிற்பிலென்) எனவும் போந்த வருள்வாக்கியங்களால் ஜாதிநலம், விருதாகல்வி, வாசாஞானம், வெளியாசாரமுதலிய வாபாசங்கள் கடியப்பட்டிருத்தலுங் கண்டுணர்க." ஆதிசைவம், மஹாசைவம், அநுசைவம், அவாந்தரசைவம், பிரவரசைவம், அந்யசைவம் என்னும் பிரிவுகடோன்றச் சைவநலத்துக் குரியாரைச் சாதிஸம்பந்தம் பாராட்டிச் சைவநூல்கள் கூறுகின்றனவன்றோ? இவர் சம்ஸ்காரத்தா லுத்தமோத்தமத்தன்மை யடைந்தவரென்பது முண்மையன்றோ? இவருள் ஆதிசைவர், மஹாசை

வராதி மேல்வருணத்தவர் தங்களிற் கீழிட்ட வேனைய வசவர்பால் அபகர்ஷத்வமே யன்றி ஸமத்வம் பாராட்டி வருவதின்று. அப்படியே அவாந்தர சைவராகிய வேளாளருந் தம்மிற் கீழிட்ட சைவர்பால் ஸமத்வம் பாராட்டா தொழிவர். இங்ஙனமாக, இவ்வவாந்தர சைவராகிய வேளாளர் தம்மின் மேலிட்ட வேனைய சைவரைநோக்கி அவர் ஜாதி நலம்பாராட்டுதல் கூடாதெனவும்,ஸம்ஸ்காரிகளாய்விட்டபின்னர் தம்மிற் றூரதம்யங்கிடையாதெனவும் நிந்தித்துழல்வர். தம்மின்மேலிட்டவரைத் தங்களுக்கு ஸமமாக்கிக் கொண்டு தாமுயரவெண்ணுவது போலவே தம்மிற் கீழிட்டவரையும் ஸம்ஸ்காரதிருஷ்டியால் தங்களுக்கு ஸமமாக்கிக்கொண்டு அவரோடொத்துவாழவெண்ணும லவரையவமதித்தும்,நிந்தித்தும் வருவது எவ்வளவு பெருந்தாழ்வு? அந்தணர் முதலியோரும், வேளாளரும், அவரிற் கீழிட்ட பேர்களும் ஜாதிகிரந்தியொழியாமல் தாங்கள் அடைந்திருக்கும் ஸம்ஸ்காரங்களையுஞ் சாதியுயர்வுக்கே துணையெனக்கொண்டு ஒருவரோ டொருவரிகலிவருவதால், அன்னோர் தாங்களடைந்த ஸம்ஸ்காரத்தா லெய்தற்பாலதாகிய ஸமானத்தன்மை யடையார்! அடையார்!! அந்தணர் முதலியவரோடொன்றுகூட வேளாளராதியோர் எண்ணுமாபோலவே வேளாளரிற்றூழ்ந்தபேரு மெண்ணி யேறப்பார்ப்பதால், எங்ஙனே விவரைச் சுத்தர்களென்று கூற விசையும்? அந்தணர் முதலியோரே தமது ஜாதி கிரந்தியை விடவேண்டுமென்பதுண்மையாக வேளாளர் முதலியோர் அங்ஙனஞ்செய்தலின்றி மேலு முயர்ந்திடவெண்ணுத லெங்ஙனே வமையும்? அந்தணராயினும், ஏனைய வருணத்தவராயினும் எதுகாறுஞ் சாதிகிரந்தி யொழியாம லியங்கிவர்த்திப்பாரோ, அதுகாறு மன்னோர் ஸம்ஸ்காரத்தா லெய்தற்பாலதாகிய சமயகலம்பெற்றவ ராகார்! ஆகார்!!* இதுமாத்திரமேயன்றிச் சிவனடியாரிலக்கணம் உபதேசகாண்ட முதலியவற்றிற் கூறியபடியே யமையாத பொழுது அவரைச் சாதகரொன்றன்மாத்திரமேயன்றிச் சாத்தியரொன்றல் கூடாது. சாத்தியர்க்கு மாத்திரமே ஜாதிகிரந்தி முதலிய தோஷங்கள் விலகிச் சுத்தத்தன்மை யுண்டாவதால், அவருடைய தர்மத்தைச் சாதகராயுள்ளபே ராரோபணஞ்செய்துகொண்டு தாங்கடாங்களு முயர்ந்துவிடப் பார்ப்பது அவலமென்க. இதனால் சாதகராவார் தங்கடங்கள் சாதியாசாரங்களிற் பெயராது நல்லொழுக்க மெய்தித் தவங்கிடந்து, ஒருவரோ

டொருவரிகறீர்ந்து வாழவேண்டுமென்பதே நல்லோர் துணிவு. சாத்யதிசைவருமாயின் அவர்க்கு ஒருவரு முபதேசிக்கவேண்டுவதின்று. அவரவரன்பே யவரைத்தலைப்படுத்து மாகையால். இந்தவிசாரத்தால் ஜாதிநலங்களெல்லாம் ஸாதகவடிவங்களெனவும், அன்பினதுநலங்களெல்லாம் ஸாத்யவடிவங்களெனவும் பெரியோர் துணிந்துகூறுவர். விதிவத்தாகவும், வித்வத்தாகவுஞ் சிவனைவழிபட்ட சிவகோசரியாரிடத்தும், திருக்கண்ணப்பதேவ ரிடத்துமே யிவ்வுண்மை விளங்கும்! விளங்கும்!! ஸ்ரீமத் - அப்பர்சுவாமிகளிடத்தில் அப்பூதி யடிகளார்க்கும், திருநீலகண்ட யாழ்ப்பாணரிடத்தில் திருநீலநக்க வடிகளுக்கு முண்டாயிருந்த வன்புகளுமே யன்றோ வீண்டு நிதரிசனமாதல் பெறும்? இவ்வுண்மைகளைச் சீர்தூக்கித் தாவரசங்கமங்களாகிய விரண்டிடத்துஞ் சிவபாவனை மேவிட்டு வழிபடுவதே சிவஸாம்பிராஜ்ய விர்த்தியைப் பயக்கும்! பயக்கும்!! "தாவரசங்கமங்க ளென்றிரண்டுருவினின்று, மாபரன்பூசை கொண்டு மன்னுயிர்க்கருளைவைப்பன்" என்னும் பிரமாணத்தானு மதுவிளங்கும். சங்கமங்கணிற்க, தாவரமாகிய சிவலிங்கோபாஸனை விக்கிராராதனமாய் முடிகின்றதெனவும், அது செய்தல் கூடாதெனவும் புலம்பித்திரியு மாபாசங்களுஞ் சிலவுண்டாகையா லன்னவை (அர்ச்சாதீபம்) என்னும் பேரால் யாம் செய்திருக்கும் ஸத்கிரந்த வாயிலாக நிரசனம்பெற்றிருத்தல் கண்டு குணப்பட்டு உலகம் நீடு வாழ்க. சுபம்! சுபம்!!

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஸம்பந்ததீர்த்த

சரணாரவிந்தார்ப்பணமஸ்து.

முற்றிற்று.

சமயகுரவர்களைத் தம்மோடு சமானர்களெனவாவது, குறைந்தவர்களெனவாவது திருநீற்றுப் பெருஞ்செல்வத்துக்குரிய பூர்விகர்தம்மு ளொருவருங் கனவிலேனுஞ் சிந்தித்தவராகப் புலப்படாமையால், சங்கராசாரியர் முதலினோ ரவ்வெம்பெருமக்களை மேலோர்களெனக் கொண்டு பாடினதில்லையென்று வெறிகொண்டு பிதற்றுவார்கோள் மேன்மையடையா தொழிந்தது. அவ்வருளாளர்களை அன்னோர் சைவகுரவரென்று கொள்ளாவிடினுந் தத்தஞ் சமயகுரவராகக் கொண்டார்களெனவாவதன்றோ கூறித்தொலைக்கவேண்டும்? இந்த வியவஸ்தையால் பெருங்கருணைசாலிகளாகிய வவ்வமலமூர்த்திகண்மாட்டு யாம் பிரவசனித்த கல்யாணகுணங்க ளத்தனையும் நிர்விவாத கிரஸ்தமாயினமை யறிக. இதுகாறும் விசாரித்து முடிவுசெய்தவுண்மையால், மேல் யாம் ஸமர்த்தித்த ஞானஸம்பந்த வள்ளலாரது வைபவம் பசுமாத்தாணியறைந்தாற்போல நாட்டப்பட்டது.

இந்த வுண்மைகளால், அம்மையளித்த பாலமுதருந்திச் சிவஞான ஸம்பந்தராயினரென்னும் பாலருவாயர் தன்மை பிரகாசமாயிற்று. மேல் (௪௱) வது பக்கத்தில் (சிவனடியே சிந்திக்கும்) என்ற பாடலை யாமுதகரித்திருக்கின்றோமாகையால், அதனை வியாக்கியை முகத்து ஈண்டு விசாரித்தலே அப்பெருந்தகையினது ஞானத்தின் பிராசுரியத்தை யினிது பிரகாசப்படுத்தும். (சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம், பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞான,முவமையிலாக்கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்,தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்) என்பதில் ஞானத்தினது அவஸரபேதங்கள் வெளியாயின. அவை சிவனடியைச் சிந்திக்கு ஞானமும், பவத்தை யொழிக்கு ஞானமும், கலைஞானமும், மெய்ஞ்ஞானமும் எனப் பிரித்தோதப்பட்டமையால், அவற்றன்; கலைஞான நிற்க ஏனையஞானங்களி னுண்மையை யோசிப்பாம். சிவனடியைச் சிந்திக்கு ஞானத்தைச் சிவஞானமென்றனர். பவத்தைமாற்று ஞானத்தைப் பாங்கினிலோங்கிய ஞானமென்றனர். உணர்தற்கரிய ஞானத்தை மெய்ஞ்ஞானமென்றனர். இந்த மூன்று ஞானங்களும் ஒன்றிலொன்று முரணுகின்றன. எங்ஙனமெனின், சிவஞானம் என வொன்றைக் கூறியபின்னர், பவத்தைமாற்று ஞானமென வேறொன்றைக் கூறுகையால், சிவஞானம் பவத்தை யொ

ழிக்கு ஞானமும், பவத்தையொழிக்கு ஞானம் சிவஞானமுமா கா. அநந்தரம், மெய்ஞ்ஞான மென வொன்றைக்கூறுகையால், முன்கூறிய விரண்டு ஞானங்களும் அந்த மெய்ஞ்ஞானமாகா. அப்படியே மெய்ஞ்ஞானமானது சிவஞானமும், பிறவியைமாற் று ஞானமுமாகமாட்டாது. ஆகையால், இந்த மூன்றுந் தம்முள் விரோதியாதநலம் இத்திறத்ததென அறிந்திடுவதே பிரகிருதோப யுக்தமாகும்.

மேலிடத்திற் பெறப்பட்ட நாலுவிதஞானங்களில், மூன்றா வது சொன்ன (கலைஞானம்) சிரவண்மெனவும், முதலிற்சொன்ன (சிவஞானம்) மநநமெனவும், இரண்டாவது சொன்ன (பாங்கினி லோங்கியஞானம்)நிதித்யாஸநமெனவும், நாலாவது சொன்ன (மெய்ஞ் ஞானம்) ஸமாதியெனவுங்கொண்டு, கேட்டல் - சிந்தித்தல் - தெ ளிதல் - நிட்டை என்னும் பரியாய நாமங்களாற் பெரியோர் பிரகா சப் படுத்தாநிற்பர்.

வேதமுதலிய கலைகளிலொருவன் பயின்றுவருங்கால், அவற் றாற்பெறப்படு முண்மை அவனது பரிபாகத்துக்கேற்பத் தேகான் மவாதமுதல், சைவசித்தாந்த மீறாயுள்ள முடிவுகள் யாதானு மொன்றிற் பரிவஸானமுறலால்,பொதுவானே கலைஞானமென்று முதன்ஞானத்தைக் கூறினர்.அங்ஙனம் பயின்று வருகையில்,அவ ற்றுட்டெளியவடித் தெடுக்கும் பொருள் சிவமொன்றே யாகையா லும், அதைச்சிந்திப்பதே அவற்றின் றுணிபொருளாகையாலும் இரண்டாவது சிந்தநநிலையைச் சிவஞானமென்று கூறினர். அங் ஙனஞ் சிந்திக்குங்கால் பாவனையாதிகளி லொழிந்து, சிவம் வேறு தான் வேறாகாமல் அத்துவிதப்பட்டு நிற்குநிலையைக் ஈடைப்பிடித் துணர்த்து மவசரத்தையே பாங்கினி லோங்கிய ஞானமென்று கூறினர். அங்ஙன மிரண்டறக்கலந்து சிவனோடு பிரிபடாது சிவ போகத்தி லிடையிடுபட்டுக்கிடத்தலின் மேலிட்டவநுபவம் வேறு கேட்கப்படாமையால் அந்தமுடிந்த வநுபூதியையே மெய்ஞ்ஞா னமென்று கூறினர். வேதமுதலிய கலைகளில் சிவஞானமே கேட் கப்படுகையாலும், அதனையே சிவயோகிகள் கேட்டுஞ் சிந்தித்துந் தெளிந்தும் அநுபவித்தும் வருகின்றமையாலுங் கற்றுணர்ந்த மே லோர் சிவஞானம் - மெய்ஞ்ஞானம் இத்யாதி பிரயோகங்களிற் கலங்காரென்க. கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என

யாம் காட்டிய அவஸரங்களை அத்திருவாக்கிற்போந்த சொல்லமைதிகளைக் கொண்டே அறிவிப்பாம். கேட்கப்படுந் தன்மையாலன்றோ (சுருதி) என்னும் பேரை வேதம்பெற்றது? அதுவே கலைஞானமென்பது ஸர்வஸித்தம். இதனால், அங்கேபோந்த (கலைஞானம்) அமைவு பெற்றது. சிந்திக்கு ஞானம் இரண்டாவ தென்பது (சிவனடியே சிந்திக்கும்) என்று சூசிப்பித்தலால் விளங்கும். தன்னில்வேறாகாமல் அநந்யமாய்ச் சிவம் பிரகாசிக்குநிலையையே(* பாங்கினிலோங்கிய) என்னுஞ் சொற்கள் வெளியாக்கின. நிட்டையை (மெய்ஞ்ஞானம்) என்றது நிராக்ஷேபம். இவ்வுண்மையால், அருண்மொழித்தேவர் கூறிய ஞானபேதங்க ளிவையென வெளிப்பட்டன. ஆயின், அந்த ஞானங்களை முறையேவைத்துக் கூறாமல் மாற்றிக்கூறிய தென்னையெனின், அதனை விளக்குவாம். இந்தஞானங்களுக்கு விஷயமாகுஞ் சிவமாகிய ஞேயப்பொருள் மநநமாகிய இரண்டாவது ஞானத்திலேதானே வெளிப்படலால், அதனை முன் வைத்துக் கூறினார். ஞேயமாகியசிவம் அநந்யமாய்த்தோன்றுமிடமாகிய ஞாதுருவை விளக்கலால் (பாங்கினிலோங்கிய) என்று நிதித்யாஸநத்தை அதன் பின்னே வைத்தருளினார். ஞாதாவாகிய தன்பக்கனிகழு ஞேயமாகியசிவத்தை ஞானத்தாலன்றி அறியக்கூடாமையால், அந்தஞானபீடமாகிய சிரவணத்தை அதன் பின்னே அமைத்தருளினார். இவை திரிபுடியாகவிளங்கலால், திரிபுடியதீதத்தைக் காட்டுவதென ஸமாதியை முடிவாகச்சாதித்தருளினார். இன்னும், ஞேயமுஞாதுருவு நீங்கலாக ஞானமானது அபரமும், பரமுமென விளங்கலால், சிரவணமாகிய அபரஞாநாநந்தரம் ஸமாதியாகிய பரஞானத்தை நிறுவினரெனினுமமையும். அன்றியும், நம் பேரருளாளரந்தஞானங்களை ஸாதனவழியிலொன்றன்பின்னொன்றாக வெய்தாம லோரவஸரத்திற்றானே யெய்தினரென்னுஞ் சுதந்தரத்தைக்காட்ட அவைகளை மாற்றிக்கூறினரென்பது மொன்று. இந்தஞானங்களைத் தாயுமானசுவாமிகள் இரண்டிலடக்கிக்கூறியிருக்கின்றனர். அது (வேதமுதலாகமபுராண விதிகாசமுதல் வேறுமுள கலைகளெல்லா - மிக்காகவத்துவித துவிதஞானத்தையே விரிவா யெடுத்துரைக்கு- மோதரிய துவிதமே யத்துவிதஞானத்தை யுண்டுபண்ணுஞானமாகு - மூகமதுபவ வசனமூன்றுக்குமொவ்வுமீ தபயவாதிகள் சம்மதம்) என்றதேயாம். துவி

* தன்பக்கலில்.

தம், அத்துவிதமென்பவைகளில் கேட்டல் - சிந்தித்தலென்னு மிரண்டுந் துவிதத்திலும், தெளிதல் – நிட்டையென்னு மிரண்டும் அத்துவிதத்திலுமடங்கும். துவிதஞானத்தைப் பரோக்ஷமென்றும், அத்துவிதஞானத்தை அபரோக்ஷமென்றும் விவேகிக்க வேண்டியது. இவ்வுண்மை ஊகம் = அநுமாநம், அநுபவம்= காட்சி, வசனம்=ஆகமம் என்னுமளவைகளால் நிரூபிக்கப் படுதலுமாம். எங்ஙனமெனின், (கலைஞானம்) ஆகமமும், (சிவஞானம்) அநுமானமும், (பாங்கினிலோங்கியஞானம்) அநுபவமும், (மெய்ஞ்ஞானம்) அநுபவாதீதமு மென வறிவதேயாம். இவற்றுள், கலைஞானம் வேதசிவாகமங்கள். இவை ஒன்றிலடங்காமலும், இவற்றுள் யாவுமடங்கியு முள்ள தன்மைகண்டே (உவமையிலாக் கலைஞானம்) என்று விசேடிக்கப்பட்டது. (யாது சமயம் பொருணூல் யாதிங்கென்னி லிதுவாகமதுவல்ல வெனும்பிணக்கதின்றி - நீதியினுலிவை யெல்லாமோரிடத்தே காண நிற்பதுயா தொருசமயமதுசமயம்பொருணூ - லாதலினுலிவை யெல்லா மருமறையா கமத்தே யடங்கியிடும்) என்ற பிரமாணத்தாலு மறிக. ஏனைய மூன்று ஞானங்களையும் (சுசு) வது பக்கத்தில் விதந்திருப்பதே போதும். அல்லதூஉம், ஞானமானது பாசஞானம்-பசுஞானம்-ஈசஞானம் எனப் பதிநூல்களின் முழங்கப்படுவதும் ஷை ஞான சதுஷ்டயங்களி லந்தர்ப்பவமாம். எங்ஙனமெனின், கேட்டல் பாசஞானமும், சிந்தித்தலுந் தெளிதலும் பசுஞானமும், நிட்டை பதிஞானமு மெனவறிக. சிந்தித்தல் - தெளிதல் என்னு மிவைகளில் திரிபுடிநீக்கமின்று. அதனால், சிவத்திலதீதப்படும் அருட்கேவலமுண்டாகாது. ஆகையால், அவைகளைப் பசுஞானமென்றது அமையும். வாதவூரடிகள் புராணத்தில் (நின்ற சிவம் ஒன்று) எனவும், (அதனைத் தேர்தல் ஞானம்) எனவும், (தேர்ந்ததனைத் தெளிதல் போதம்) எனவும் வெளிப்பட்ட பகுதியும் அந்தஞானங்களிலடங்கும். எங்ஙனமெனின், முதலாவது கலைஞானமாகும். இரண்டாவது சிவஞானமாகும். மூன்றாவது பாங்கினிலோங்கிய ஞானமாகும். இவை முடிந்த சொல்லிறந்தவிடம் மெய்ஞ்ஞானமாகும். (மோனமென்பது ஞானவரம்பு) என்றது ஒத்து. கேட்டல்- சிந்தித்தல் - தெளிதல் - நிட்டை என்னும் பாகுபாடுகளே யாண்டும் விதித்தன.

இப்படி யநந்தவிதமாகப் பிரவசனித்தற் கேதுவாகிய ஞானங்களை நங்காழிவிரகரடைந்ததுகொண்டே அவருக்குத் (திருஞான

சம்பந்தர்) என்னுந் திருநாமமுண்டாகிய தென்னுங்கால், மந்தமதிகளாலுண்டாகும் மேலாசங்கைகளைக் கொஞ்சம் பேசியொழிப்பாம்.

அவ்வெம்பிரான்பாலவைநேர்தல் அவரது மூன்றும்பிராயத்திலென்பது விதித்தம். ஆகவே, அதன்முன்னர் ஞானமின்மையே அவர்பாலோதப்படும். அதனால், அவருக்கோர்காலத்தின் ஞானமின்மையும், மற்றோர்காலத்தின் ஞானமுண்மையுங் கூறப்படுமெனின், அற்றன்று. முன்னிருந்தஞானம் வெளிப்பட்ட அவஸரமே அதுவென்றறிக. ஆன்மாக்கள் பலர்க்கும் பாசக்ஷயத்தின் முன்னிருந்த ஞானமேயன்றோ வெளிப்படுவதெனின், ஆன்மாக்கடன்மை யீண்டமையாது. ஆன்மாக்களிடம் ஸ்வப்பிரயோஜனார்த்தமும், நம்பேருளாளரிடம் பரப்பிரயோஜனார்த்தமும் அவைநிகழ்ந்திடும். அவரொருவருக்கே ஞானஸம்பந்தங் கூறப்பட்டமையால், ஏனையோரிடத்து அதற்கு ஸ்வாதந்திரியங் கூறுதல் கூடாது. அங்ஙனமேல், வாகீசவடிகள் - தம்பிரான்றோழர் - வாதவூர்வள்ளல் என்னும் பரமாசாரியர்களிடத்தும் அஸ்வதந்திரங் கூறப்படுமெனின், அதுகூடாது. அவர்களுங் காழிப்பிரானைப் போலவே சிவவிபூதிகளாகப் படிக்கப்பட்டமையால். பரமாசாரியர்கள் நால்வருக்குமுள்ள ஸம்பந்தம் சிவபெருமான் - கணநாதர் - ஸ்கந்தர் - நந்திபகவான் என்னு நால்வருக்குமுள்ள ஸம்பந்தம் போல்வதொன்றாக அறியவேண்டியது. இதை விரிக்கிற்பெருகும். இதுகாறும் வியவஸ்தையுண்டாக யாம்பிரவசனித்த விசேடங்களால், நந்தமிழ் விரகர் திருமுலைப்பாலுண்டருளியபரிசும், அவரெய்திய ஞானவிசேடங்களும் அநுபாஷிக்கப்பட்டன.

பிள்ளையார் பிரபாவம்.

22-வது பக்கத்தொடர்ச்சி.

அப்போது சிவபாதஹ்ருதயர் தமது நித்தியகடனைமுடித்துக்கொண்டு திருக்குளத்தினின்றுங் கரையையடைந்து பாலொழுக்காற் சாரல்படிந்திருக்கும் அதிசயகோலத்தைக்கண்டு வெகுண்டு உனக்கு இப்பாலூட்டினவர்யாரென்று ஸ்வாமியைவினவி, ஓர் சிறியகோல்கொண்டோச்சப்போயினர். அதற்கு எம்பெருந்தகை அவரைப்பார்த்து ஆகாயத்தின்கண் இடபாருடராய் உமாதேவியாரு

டனெழுந்தருளியிருந்த ஸ்ரீசிவபெருமானைச்சுட்டி (தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக், காடுடைய சுடலைப்பொடி பூசியென்னுள்ளங் கவர்கள்வ - னேடுடையமலரான் முனைநாட்பணிந்தேத்த வருள்செய்த - பீடுடையபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே) என்னுந் திருப்பதிகமோதி, தமக்குப் பாலளித்தா ரிவரெனத் தெரிவித்தருளினர். அதுகண்டு வியப்பெய்திச் சிவனருளைவாழ்த்திநின்ற காலையில், சிவபெருமான் திருத்தோணியின்கண்ணெழுந்தருளினர். ஞானஸம்பந்தவள்ளலாரும் உடன்சென்றனர். சிவபாதஹ்ருதயர் தம்முடைய தவத்தைச்சிந்தித்துத் தாமுமங்குப்போயினர். அங்குநங்குருராயர் திருப்பதிகம்பாடியருளித் திரும்புகையில் சீர்காழியிலுள்ளார்யாவரு மிவ்வற்புதத்தை யறிந்து மகிழ்ந்து கோபுரவாயிலின்கண் வந்து ஆளுடைய பிள்ளையாரைத்தரிசித்து பிறவிக்கடலைக் கடந்தார்கள். அவர்களுக்குப் பேரருள்புரிந்து தமது சிறிய திருவடிகள் பூமியிற்பொருந்த எம்பெருவாழ்வாயுள்ளவர் நடந்தருளுகையில் சிவபாதஹ்ருதயர்கண்டு மனம்பொறாது அச்சிறிய பெருந்தகையாரையெடுத்துத் தமது தோள்ன்மேல்வைத்துக்கொண்டு அந்தணர்கள் வேதமோதிப்பின்வரவும், அநேகவாச்சியங் கண்முழங்கவும், அடியார்கள் சூழ்ந்து ஹரஹரவென்று கடலொலிபோன்முழங்கித் துதித்துவரவுஞ் சீர்காழியை வலங்கொண்டு தம்முடைய திருமாளிகையையடைந்தார்.

சூசனை.

பால்வடிந்திருக்கும் அற்புதத்திருமேனியுடையராந் தன்மை (பாலறுவாயர்) என்னுந் திருநாமத்தாலும் விளங்கும். அத்திருமுலைப்பால் பிராட்டியிடத்ததாகலின், அதனை அருளொழுக்கென்பதேயமையும். அருளானது வழிந்திருப்பதைத் தரிசித்தகாரணந்தானே பிள்ளையார்காட்டச் சிவத்தை அச்செல்வத்தந்தையார் தரிசிக்குமாறு கூட்டியது. ஈண்டுப் பயனெய்துந் தன்மை சிவபாதஹ்ருதயர்மாட்டே செறிந்தது. மேகமானது மழையை யோர் மலையினிடம் பெய்துழி அம்மழை மலையினுள்ளும்வெளியு நிரம்பியுந் ததும்பியுநிற்கும். அன்றியும், அருவிப்பெருக்காற் பன்முகங் களிலோடி யுலகுக்குபகரிக்கும். அம்மலைக்கதனாலோர்பயனுமின்று. இதையிப்படியே பிள்ளையாரிடமுவமித்தறிக. பாலொழுகியிருக்குஞ் சாலைத்தரிசித்தவநந்தரம் சிவப்பேறு சிவபாதஹ்ருதயர்

க்கே வித்தித்தது. பிள்ளையார் திருமுலைப்பாலருந்துவதன் முன்னரே சிவனைக்கண்டும், அம்மையப்பர்களாலெடுத்தணைத்து உபசரிக்கப்பட்டும் விளங்கினராகையால், அவர்பாலுண்ட பரிசும், அவர் ஞானமெய்திய பரிசும் ஸ்வப்பிரயோஜனமன்றென மேல்யாம் காட்டிய வுண்மை நிதரிசனமாயிற்று. அவருடைய செயல் யாவும் பரப்பிரயோஜனார்த்தமே யென்பது (வேதநெறிதழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்கப் - பூதபரம்பரைபொலியப் புனிதவாய்மலர்ந்தழுத - சீதவளவயற்புகலித்திருஞானசம்பந்தர் - பாதமலர்தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.) என்னும் ஸ்வாமியினது புராணத்தின் ஆரம்பவாக்கியத்திற்றானே விளங்கும். வேதமார்க்கந் தழைத்தோங்கவும், சைவத்துறை இனிது விளங்கவும்.பூதபரம்பரை பொலிவெய்தவுமே பிள்ளையார் அழுதாரென்கையால், ஸ்வப்பிரயோஜனார்த்தம் அவர்பாலொன்றுநிகழ்ந்த தில்லையென்பது சாதிக்கப்பட்டது.

வேதமார்க்கந் தழைத்தோங்குவதும், சைவத்துறை இனிது விளங்குவதும், பூதபரம்பரை பொலிவெய்தற்பொருட்டே யாகையால், அவர்பானிகழ்ந்த பரப்பிரயோஜனம் அடியார்கள் பொலிந்துவாழ்வதாகவே முடிந்தது. இவர்கள் பொலிந்து வாழவேண்டின், வேதமார்க்கந் தழைத்தோங்குதன்மாத்திரமே கூடாது. சைவத்துறை இனிது விளங்குவதும் வேண்டுமாகையால், தொண்டர்சீர்பரவுவார் இரண்டையுங் கடைப்பிடித் துரைத்தனர். (வேதமார்க்கம்)எனவும் (சைவத்துறை) எனவு முரைத்தமைகொண்டே அவற்றின்பிரயோஜனம் வெளிப்பட்டது. எங்ஙனமெனின், மார்க்கம்=ஓர் குறித்த விடத்திற்குப்போகும்வழி. துறை=அவ்வழியே நடந்துபோய்ப்படியுங் குறித்தவிடம். வழி செம்மையாயிருந்தாலன்றிக் குறித்தவிடத்திற்குப் போகமுடியா தாகையாலும், வழி செம்மையாயிருந்தும் நாடிச்சென்றதுறை செம்மையா யிராதபோது அத்துறையிற்படிந்து செய்கடனை முடித்துக்கொள்வது கூடாமையாலும், வழியுந் துறையுஞ் சீர்ப்பட்டிருக்க வேண்டும். இவை கெட்டிருக்கக்கண்டேயன்றோ (வழிதுறையில்லாமலிருக்கின்றது) என வொவ்வோர் காரியஸந்தர்ப்பங்களில் உலகத்தவர் வாடிக் கொள்ளுகின்றனர்? இதனால், வழியென்பதற்கும், துறையென்பதற்கும் பேதம் பிரகாசமாயிற்று. இவ்விரண்டில், துறையானது வழியினும் அதிகமேன்மை பெற்றிருக்கின்றது. வழியேற்பட்டதுந் துறை

யை யுத்தேசித்தேயாகையாலும், துறையை யடையாமல் வழியிலேதானே நின்றுவிட்டாலோர்பயனுமெய்த முடியாதாகையாலும், அவற்றினுயர்வு தாழ்வுகள் வியக்தமாயின. இப்படியறிந்த பின்னர் வேதத்தை நெறியென்றும், சைவத்தைத் துறையென்றும் அவற்றின் பேதந்தோன்றக்கூறியநயம் இனைத்தெனவறிவது எளிதாயிற்று. வழியாகிய வேதத்தினுந் துறையாகிய சைவம் சிறப்புடையதென்பது தொனிக்கவேயன்றோ (மிகுசைவத்துறை) என்றுஞ் சூசிப்பித்தனர்? வேதமாகிய மார்க்கத்தில் நடந்து, சைவமாகிய துறையிற்படிந்து சிவமாகிய மகோததியின் மூழ்குதலேயன்றோ மெய்யன்பர் துணிவு? (అంగాన్యయాద్యనం శమాంగళ్యగుణాగణమమలజలధేః పరమశివస్య) என்று ஸ்ரீபாஷ்யத்தில் அந்தச் சிவமஹோததியை வர்ணித்திருத்தலு மறிந்திடுக. மகோததியின் மூழ்கியபின்னர் (நமைத்திரும்பிப்பாராதே நான்றனென்றதே - யமிழ்த்து கரகம் போனிற்பாய்) என்ற அநுபூதியே அமைவுடைத்து.

வேதமாகிய வழியில் நடக்கிறபோது இளைப்புண்டாகி மேல்நடக்கமுடியாமல் இளைப்பாறு மிடங்களாக அதன் மத்தியிற் பல சமய மண்டபங்களுண்டாகையால், அவைகளே உலகாயத முதலாயுள்ளனவென் றறியவேண்டியது. தேகான்மவாதமாகிய உலகாயதமும் வேதத்தி லுண்டென்பது (பூதத்தேயன்னமாகி யன்னத்தாலுடம்புபுந்தி - பேதித்தேமனமுமாகிப் பிரிந்தமைதிருந்தவின்று - வேதத்தேகிடக்க) என்னும் வாக்கியத்தால் விளங்கும். இப்படியே யாவுங்கொள்க. வேதமார்க்கத்தில் நடக்கிறபோது, நடக்கமுடியாமலிளைப்புண்டாமென்பது பரிபாகம் போதாமையேயாம். வழிநடக்க வலிவுகுன்றியபோதே இடையிலொருவன் றங்குவன். அப்படியே வேதமார்க்கப் பிரவர்த்தகத்தில் ஒருவன் றன்னுடைய புண்ணியங் குறைந்தவிடத்திலேதானே அது உள்ளவரையில் நடந்து, மேல் புண்ணியமில்லாமையா லந்தவிடத்திலேதானே தடைபடாநிற்பன். பிருதிவிமுதலுதமீறாயுள்ள தத்துவங்களையெல்லாங் கடந்து நின்ற சிவனைக் கூடுவதற்கு ஒருவன் முயன்று வேதவழியினடக்கிறபோது இடையிற்போந்த தத்துவ ஸமூஹங்களாகிற ஸோபானமாத்திரமாயுள்ள பலசமயங்களுண்டாகையால், அந்தந்தத் தத்துவங்களி னிலைபெறடைதலேயன்றோ இடையிற்றங்குதலென்பதும், சமயங்களிற் றளைபட்டழுங்கலென்பது மாகும்? அவற்றை

யெல்லாங் கடந்தபோதுண்டாகுஞ் சைவஸித்தியநந்தரமே யொருவனுக்குச் சரியை கிரியை யோக ஞானங்கள் பிராப்தமாகின்றமையால், இவைகளே சைவத்துறையிற் படிந்து செய்கடன்களாக முடியும். (புறச்சமய நெறிநின்று மகச்சமயம்புக்கும் புசன்மிருதிவழியுழன்றும் புகலுமாச்சிரம - வறத்துறைகளவையடைந்து மருந்கலங்கள்புரிந்த மருங்கலைகளவைடயின்று மாரணநூல்படித்துஞ் - சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதச் சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றுற்சைவத் - திறத்தடைவரிதிற்சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின்ஞானத்தாற் சிவனடியைச்சேர்வர்) என்ற பிரமாணத்தாலு மறிக. புறச்சமயமுதல் வேதச்சிரப்பொருளிறுதியாகப் பூர்வபக்ஷஞ் செய்யப்பட்டமையால், சைவத்திறத்தடைவ தொன்பதே ஸித்தாந்தமாக முடிந்தது. இவற்றால், வேதம் வேதாந்தமும், வேதாந்தம் ஆகமாந்தமுமென்னு மிரண்டுபகுதிகளே வெளியாயின. வேதம் பூர்வபக்ஷம், வேதாந்தம் ஸித்தாந்தமும்; வேதாந்தம் பூர்வபக்ஷம், ஆகமாந்தம் ஸித்தாந்தமுமாக வறிவதே மேலோர்துணிவு. (மோனம்வேதாந்தமுடிவு) என்றவாக்கியத்தால் வேதமுடிவுக்குமுடிவு வெளியானதால், அதுவே ஸித்தாந்தமுடிவென்பது ஸித்தம். இதனால், வேதமார்க்கவழியில் அநேகசமயமண்டபடிகளும், அதனந்தத்தில் வேதாந்தநிலையும், அதனுச்சியில் ஸித்தாந்தமாகிய சைவத்துறையும் பிரகாசிப்பது வெளியாகி, யாவும் ஒன்றுக்கொன்று ஸாதகங்களும், ஸாத்யங்களுமாகிய வுண்மையும் வெளிப்பட்டது.

ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் "ஞானசம்பந்தஞானதேசிக - வேதமென்னும் பாதவம் வளர்த்தனை - பாதவமதனிற் படுபயன்பலவே - அவற்று - ளிலைகொண்டுவந்தனர்பலரோ யிலையோரீஇத் - தளிர்கொண்டுவந்தனர் பலரோ தளிரோரீஇ - யரும்பொடு மலர்பிஞ்சருங்காயென்றிவை - விரும்பினர் கொண்டு கொண்டுவந்தனர் பலரே - யவ்வாறுதப்பு மிவ்வாறு பயப்ப - வோரும் வேதாந்தமென் றுச்சியிற்பழுத்த - வாராவின்ப வருங்கனிபிழிந்து - சாரங்கொண்டசைவஸித்தாந்தத் - தேனமுதருந்தினர் சிலரே) என்று திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர். இதில் வேதமும், அதனாலுண்டாகும் பயனும், அந்தப்பயனிலொன்றும் பேதமும், அதுமுடிந்த விடமும், அவைகளைப்பெறுதற்குரியாரும் வெளிப்பட்டமைகாண்க. இலைமுதல்காயீறானவை பல்வேறு சமயங்களுக்கும், கனி வேதாந்தத்துக்கும், அதனது சாரம் ஸித்தாந்தத்துக்கும் உவமையாயினமையால் மேல்யாம்காட்டிய வேதம், வேதாந்தம்; வேதாந்தம், ஸித்தாந்தம்;

என்னும் விவிதமே நிலைத்தது. இவ்வுண்மை (வேதாந்த சித்தாந்தமே பிறவாவீடென்ரு-ஞேதாமல் வேதமுணர்ந்தோன்) என்று அருளிச்செய்த கண்ணுடைய வள்ளலார் திருவாக்குக்கும் விடயமாய் நின்றது. வேதத்தினுடைய அந்தம் வேதாந்தமும், வேதாந்தத்தினுடைய அந்தம் சித்தாந்தமும் என்று இனிது போதரவே (வேதாந்தசித்தாந்தம்) என்று விளக்கினர். இவ்வுண்மையுணர்த்தினர் ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தரென்பது தோன்ற (ஓதாமல்வேதமுணர்ந்தோன்) எனவுந் தெரிவித்தனர். வியாஸர்முதலினோர் ஓதாமலுணரினும் அவர்க்கு விட்டுணுபரம் என்றும், அகம்பிரமமென்றும் பின்னர்மலைவு பிறந்ததாகலின், அவர் இவரைப்போலுஞ் சுதந்தரவறிவின ராகாரென்று மேலோர்கூறினமையாலும் நங்காழிவிரகர் நாட்டிய சித்தாந்தம் பிராசுரியம்பெற்றது. வள்ளலார் என்னுங் கம்பீரந் தோன்ற நம்பாலருவாயரிடம் அருட்பரிசெய்தினர் ஸ்ரீகண்ணுடையாரென்பதே வித்தம். வள்ளலார் சாத்திரம் என ஓராபாசத்திரட்டு உலகில் வழங்கிவரலால், அதில் யாருமயங்காவழி அது நந்தமிழ் விரகரருட்பரிசெய்தினாருளியதன்றென வீண்டறிவித்தாம். ஒழிவிலொடுக்கம் - சிவாநந்தமாலை - பஞ்சமலக்கொத்து - மாயாப்பிரலாபம் இத்யாதிகளே நங்கண்ணுடையவள்ள லருளிச்செய்தனவாம். இந்தவுண்மைநூல்களாலும் வேத வேதாந்த விவிதங்கள் வெளியாகும்: (அத்துவிதமாகுஞ் - சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்) என்று உமாபதிசிவம் கட்டளை யிட்டிருப்பதுங் கண்டறிக. ஈண்டு யாம் பலபடியாலுரைத்த வசனங்களும், வியாக்கியானங்களும், தெளிபொருள்களுமாகிய யாவும் முதலி லெடுத்துக் கொண்ட (வேதநெறிதழைத்தோங்க மிகு சைவத்துறைவிளங்க) என்னுந் திருவாக்குண்மையையே வெளிப்படுத்தின. இந்த நலங்கள் யாவரும்பெற்றுய்யவே புனிதவாய்மலர்ந்தழுதனர் எம்பெருந்தகையாரென்பதனை முன்னே விரித்தாமாகையா லீண்டிவ்வளவி லுபரதியடைந்தாம்.

இதுகாறுஞ்செய்த பிரவசனத்தால் காழிவிரகர்பால் ஸ்வப்பிரயோஜநவிசித்தியெய்தாமை கடித்தலால், அவர் வேண்டுதலும் வேண்டாமையு மிலரென்பதுநாட்டப்பட்டது. அவர் (ஓதாமல்வேதமுணர்ந்தோன்) என்று துதிக்கப்பட்டதனுலு மது கடிக்கும். அறிவிக்கவறிதலும், ஓதுவிக்கவோதுதலும் பசுவறிவிற்கண்டாம். தா

னே யறிதலும், தானேயோதுதலும் பதியறிவாமாகையால், நம்
பெருவாழ்வைப் பரமபதியென்றறிவதே ஸித்தம். பசுவுக்கு அறி
யுந்தன்மையேயன்றி அறிவிக்குந்தன்மையின்று. அறிவிக்குந்தன்
மையுண்மையாலன்றோ வப்பெருந்தகையைப் பரமபதி யென்று
யாம் கூறினும்? இவ்வுண்மைகடைப்பிடித்தே (சமயாசாரியமுதன்
மை) அவர்பால் யாவருங்கண்டனர். அறிவிக்கப்புகுவோன் பிறருக்
கு அறிவித்தலேயன்றிப் பிறர்பாற்றானறிவது கூடாது. அறிவிப்ப
துடன் அறியவுஞ்செய்வனாகில், அவனுக்கு அறிகின்றவனென்ப
தொழிய அறிவிப்பவனென்னும்பேர் நிலைக்காது. தன்னின்மேலோர்
தனக்கு அறிவித்ததையே தான் பிறர்க்கு அறிவித்தலால், அவ்வ
றிவிக்குந்தன்மை தனக்கு ஸ்வதந்திரமாகமாட்டாது. நஞ்செல்வ
க்குருராயருக்கு அறிவிக்குந்தன்மையேயன்றித் தமக்கு வேறாயுள்
ளவர்பால் அறியுந்தன்மைகேட்கப்படாமையால், அவரோ அறிவிக்கி
ன்ற பதியும், ஆசாரியருமாயினர். இப்படியே ஏனைச் சமயகுரவர்
மூவரிடத்துங்கண்டு தெளிக. வாகீசவடிகள் சமணர்பா லறிந்தா
ரெனின், சமணர்க்கு அறிவித்ததேயன்றி அவர்பாலறிந்ததில்லை.
தர்மஸேநரென்னும் பட்டந்தாங்கி அச்சமயாசாரிய முதன்மை
யெய்தினமையால், அவரறிந்தாரென்பது அழிந்தது. அவரப்புறச்
சமயத்திற்புக்கருளியது அதனேற்றந்தாழ்க்கவேயாம். அங்கு ஆசா
ரியப்பிரவர்த்தகம் பூண்டெழுந்தருளியகாலத்துந் தமது ஸ்வாத்
மாநுபவத்தில் வேறானதில்லை யென்பது (சலம்பூவொடுதூப மறந்தறி
யேன் - தமிழோடிசைபாடன் மறந்தறியே - னலந்தீங்கிலு முன்னை மறந்தறி
யே னுன்னாமமென்னாவின் மறந்தறியேன்) என்று சூலைநீங்கப் பாடியருளி
ய திருவாக்கே நிறுத்தும். எமதருளாளர் சமணாசிரியமுதல்வரா
னகாலத்துஞ் சைவநிலையிற் பெயர்ந்திடாமையால், சமணர்பால
வர் கற்றதும், கற்றவாறு கடைப்பிடித்து நின்றதும் பொய்யாயின.
அவர்செயல்யாவும் அச்சமணத்தில் நாடகமாத்திரமாக வறியவே
ண்டியது. தேவியார் தக்கனுக்குத் திருமகளாகியும், சிவபெருமான்
அவனுக்கு மருகனாகியு நாடகம்புரிந்து அவன் குடியை வாழவை
த்ததுபோல், சமணசமயாசாரிய முதன்மைபூண்டு அப்பொய்ச்சம
யம் புலர்ந்துபோகச் செய்தனரென்பதே முடிவு. இதனால், அவர்
பிறர்பாலறிந்தாரென லொழிந்து பிறர்க்குத்தாமே அவரவர் பக்
குவத்துக் கிடாக ஆசிரியராகி யறிவித்தாரென்று வெளிப்பட்ட
மையால், அவர்பாற்கொண்டசந்தேகம் தொலைந்தது. பிறரறிவிக்க

வறியாமல் தாமேயறிந்தும், பிறருக்குத் தாமறிவித்தும், பிறர்பாற் றுமறியுந் தன்மையொழிந்து அவர்க்கு அறிவிக்குந்தன்மையே சிறந்தும் விளங்குவாராக யாம் நால்வர்பரமாசாரியரையன்றி வேறுயாரையுங் கண்டிலமாகையால், இவர்களிடத்திலேதானே அறிவிக்குந்தன்மையாலெய்தும் ஆசிரியத்தலைமை கண்டாம். பரமாசிரியத்தன்மை ஸ்ரீதக்ஷிணாமூர்த்தம் - நால்வராசாரிய மூர்த்தம் இவ்விடங்களிலன்றி அன்யத்ராஸித்தியாது. அநேகம் ஆசாரியர்கள் புராணப்பிரஸித்தர்களெனின், சமயாசாரியமுதன்மைகடிக்காது. அறிவிக்க வறிந்ததைப் பிறருக்கு அறிவிக்கின்றவர் அவரெனவறிக. யாண்டு ஆசாரியத்தலைமைகடிக்கினும் அவையுஞ் சமயாசாரிய முதல்வரதிஷ்டிப்பே யாம். ஆகையால், இவர்களே சைவ சமயத்தலைவராவர். இன்னோர் நால்வரெனத்துதிக்கப்பட்டகாலத்தும் இவர்களைத் தனிமுதல்களாக வேறு பிரிப்பதுங் கூடாது. நால்வரும் ஒருவரேயாவர். ஒரு தீபமே நாலாகியொளிவிட்டு நாலு தீபங்களென்று துதிக்கப்பட்டகாலத்தும் அவையொரேதீபமென்று அறிவதே மேலுண்மையை நிறுத்தும். இவ்விதஸூக்ஷ்மநயங்களை யுணருங்கால், ஜ.தாசாரிய மூர்த்தியாயெழுந்தருளிய குருநாதர் ஸ்ரீஜ்ஞாநஸம்பந்த வள்ளலொருவரே யென்பது பக்ஷமாத்தாணி யறைந்தாற்போல நாட்டப்பட்டது. இந்தவுண்மைகளால் பிறருக்கு அறிவிக்குந்தன்மையொழிந்து அவரறிவிக்கத் தாம்அறியும் பசுத்வமெம்பிரான்மார் எய்தாமையால், அவர்பணிகளும் யாவும் பரப்பிரயோசனார்த்தமேயென்று தொடுத்த விஷயம் நிலைபெயராது நின்றது. இவ்வுண்மையைத் தாயுமானசுவாமிகள் (ஆரண மார்க்கத்தாகமவாசி யேற்றமாய் நடந்தருளுங்காரணம்)என்றுரைத்தமையாலுங் கண்டறிக. ஆரணம் = மார்க்கம், ஆகமம் = வாசி. அதாவது குதிரை. வேதத்தை வழியென்றும், ஆகமத்தைக் குதிரையென்றுங் கூறினமையால், வேதமாகிற மார்க்கத்தில் ஆகமமாகிற குதிரைமேற்சவாரிகொண்டு பரமகாரணமாய் விளங்குஞ் சிவம் உலவாநிற்குமென்னும் ஸத்தியமே வெளிப்பட்டது. இதனாலும் வேதத்தின் முடிவில் ஆகமமும், ஆகமத்தின் முடிவில் சிவமும் விளங்குமென்னுஞ் சித்தாந்தபக்ஷம் சிறப்படைந்தது. இதை விரிக்கிற் பெருகும்.

மேல் வியவஸ்தையால் காழிவிரகர்செயல்யாவும் பரப்பிரயோஜனார்த்தமேயென்று வெளிப்பட்டமையால், இனிப்பின்விஷய

த்தையோசிப்பாம். பிதாவாகிய சிவபாதஹ்ருதயர் அவரைக்கோல்கொண்டோச்சக் கைதூக்கினர். பிள்ளையார் சிவத்தை அவருக்குக் காட்டக் கைதூக்கினர். இதனால், சிவபாதஹ்ருதயர்பால் மருளும், பிள்ளையார்பால் அருளும் நைஜமாயின. மருட்டன்மையால் பசுவென்றும், அருட்டன்மையால் பதியென்றும் அன்னோர்வெளியாயினர். பசுவுக்கு மருளைமாற்றியருள வெழுந்த பதியெனத் தம்மையறிந்துலகம்பிழைக்கவே தம்மில்வேறாகாத சிவத்தைச் சுட்டிக்காட்டினர். சுட்டற்ற சுகாதீத நிலையிலநுபவிக்கத்தக்க சிவத்தைச் சுட்டிக்காட்டுதல் பசுவுக்கியலுமாறெங்ஙனம்? சுட்டியதும், சுட்டப்பட்டதுஞ் சிவமே யாகையால் அது பொருந்தும். இப்படியேயன்றோ வாதவூர் வள்ளலாருஞ் சுட்டிக்காட்டினர்? இவருள் பிள்ளையார்முதலிற் சுட்டிக்காட்டினர். வள்ளலார் முடிவிற் சுட்டிக்காட்டினர். ஏனையிருவராசாரியர்களுந் திருமுறைவாயிலாகச் சுட்டிக்காட்டினர். (பாலைநெய்தல்பாடியதும் பாம்பொழியப் பாடியதும், காலனையன்றேவிக் கராக்கொண்ட, பாலன்-மரணந்தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தக்-கரணம்போ லல்லாமைகாண்.) என்றதிருவெண்பாவால் அன்னோர் தன்மையும், அவர் சிவப்பேறுலகிலருளியபரிசும் வெளியாயின.

திருவிரலாற் சுட்டிக்காட்டினவர் அவ்வளவிலமையாது திருப்பதிகமுங் கட்டளையிட்டமையால், ஏனையோர் மாட்டு முபகரித்ததாயிற்று. அது (தோ) என்னு முபக்கிரமத்தைப் பெற்றமையால் பிரணவத்தைமுதற்கொண்டதாயிற்று. வேதமானது பிரணவத்தை முதலாக வுடையதாகையால், அப்படியே தமிழ்வேதத்திலுங்கண்டாம். கேவலம் பிரணவமன்றித் தகாரமதனோடு சேர்ந்தமையால், அந்தப் பிரணவமானது தகரவித்யா ஸ்வரூபமென்பதும் வியக்தமாயிற்று. சாந்தோக்கிய உபநிஷத்தில் (பிரமபுரமாகிய இச்சரீரத்தில் உள்ள தகரமாகிய புண்டரீகவீட்டினுள்ளே யிருக்கும் ஆகாசம்)என்பதுமுதலாகத் தகரவித்தை கூறப்பட்டது. இங்கே ஆகாசம் என்றது பிரமமாகிய சிவத்தை. புறத்து மிவ்வாறே இப்பிரமாண்டம் பிரமபுரமெனவும், இப்பிரமாண்டத்தினுள்ளே யிருக்குந்தில்லைவனம்புண்டரீகவீடுஎனவும், இத்தில்லைவனத்தில் நிருத்தஞ் செய்யுஞ் சிவம் ஆகாசம் எனவுங் கூறப்படும். இந்தத் தகரோபாஸ்தியைக் கைவல்யோபநிஷத்திற் கண்டுகொள்க. வேதத்தின் ஆதியந்தங்களை முறையே தொடங்கும்போதும், முடிக்கும்போதும் பிரணவோ

ச்சாரணே அவ்வேதத்திற்றுனே கேட்கப்படு முண்மையு மித்த மிழ்வேதத்திற் கண்டாம். தொடக்கத்தில் (ஓ) என்றுதொனிப்பது போல் முடிவில் எங்கேகண்டாமெனின், (பெம்மானிவனன்றே) என் பதிற்றுனே கண்டாம். (அன்றே) என்பது அன்ரூ எனப்பொருட ந்து நிற்றலே அமைவுடைத்து. (ஓ) என்னும் வெளிப்படை (ஏ) எனமறைந்து நின்றமை அது குப்தமாயறியத்தக்க மறையென் பதையே வெளிப்படுத்தியது. இவ்வுண்மை ஆராய்ச்சியால் கீர்வா ணவேதத்தைப்போலவேதிரவிடவேதத்துக்கும் உபக்கிரமோபஸ ஹ்மாரங்களில் பிரணவோச்சாரணே தீர்மானிக்கப்பட்டிருப்பது வியக்தமாயிற்று. தமிழ்வேதமாகிய தேவார திருவாசகங்களே உப க்ரமோபஸஹ்மாரங்களிற் பிரணவ ஸஹிதமாக அநுட்டிப்பாரின் றெனின், யாவரும் பிரணவஸஹிதமாகவே அநுட்டித்து வருகின் றனர். எங்ஙனமெனின், (திருச்சிற்றம்பலம்) என்று படித்து வருவதே அதுவாம். திரு என்பது முதலில் மங்கலத்தைக் காட்டியது. சிற் றம்பலம் என்பது சிறு அம்பலமெனப் பொருடந்து ஸூக்ஷ்மாகா சம் என்னும் உண்மையையே விளக்கியது. இந்தச் சிற்றம்பலமே பேரம்பலமுமாகும். இதனே மஹாகாசமென் றறியவேண்டியது. எட்டக்கூடாமையால் ஸூக்ஷ்மாகாசமும், அகண்டமாயிருப்பதா ல் மஹாகாசமுமாம். இரண்டுவிதமும் விவகாரங்களே யன்றி ஆகாசம் ஒன்றே யாகையால், இந்த ஆகாசத்தையே (ஞானவெளி) என்று பொருளுண்டாகுஞ் (சிதாகாசம்) அல்லது (சிதம்பரம்) என் றும் பெரியோர் கூறுகின்றனர். எவ்வகையாற் கூறுவதும் ஒரு ஆகாசத்தையே யென்பது வித்தித்தமையால், (திருச்சிற்றம்பலம்) என்னுமவ்வாகாசமே பிரணவமாக முடிந்திருக்கின்றது. (ஶம்பு ராகாஶமத்யே) என்ற சுருதியால் சம்புவானவர் ஆகாசமத்தியவர்த்தியா யிருக்கின்ருரென்று போந்தமையாலும், திருச்சிற்றம்பலமென்னு ம்பெயர்த்தாகிய தானமே ஆகாசமென்று வேதங் கூறுதலாலும், அது ஓங்காரமாகிய பிரணவமே யென்பதை அவ்வாகாசத்துக்குப் பதியாகிய நடேசவள்ளல் பிரணவபீடத்திற் பிரியாதமர்ந்திருப்ப தேசான்றுகூறுதலாலும் (ஶிவேமோங்காரம்) என்று சிவனே பிர ணவப்பொருளென்று தொனிக்கின்றமையாலும், திருச்சிற்றம்பல நீங்கலான வேனேத்தானங்களிற் பெருமானுக்குப் பிரணவ பீடம் நைஜமன்றென்பதைப் பிரத்யக்ஷமாக யாவருங்காணலாமாகையா

னும் பிரணவமே திருச்சிற்றம்பலமும், திருச்சிற்றம்பலமே பிரண
வமுமாக முடிந்திருக்கு முண்மைவெளிப்பட்டது. ஓங்காரம் பதி
யினுடைய தானம். திருச்சிற்றம்பலம் பதியினுடைய தானம். மு
ன்னையது ஸூக்ஷமம் பின்னையது தூலம். ஆகவே, இரண்டும் பிர
ணவமேயாகி மூலமும், அதன் பொருளுமாயின. இதனை வெளிப்
படையாக விவகரிக்குங்கால், சிதம்பர நீங்கலானவேனைப்பதிகளில்
(பிரபை-அல்லது திருவாசி) என்னும் ஓங்காரபீடம் ஸ்வாமிக்கு வேறா
கப்பிரிக்கவும், வேண்டும்போது சேர்க்கவும் மரத்தால் அமைக்க
ப்பட்டிருத்தலும், அச்சிதம்பரத்தின்மாத்திரம் அந்தப்பிரணவ
பீடம் ஸ்வாமிக்குவேறாகாமல் தாம்பிரத்திற்றானே அமைக்கப்ப
ட்டிருத்தலும் பிரத்யக்ஷகடிதமென்பதைஅறிவிப்பதேஅமைவுடை
த்து. இன்னும் விரிக்கிற்பெருகும்.

பிரணவத்தைமூலமாகத் தொடுத்துப்பாடியசெய்யுளில் (திரு
ச்செவியையே) முதலிற் சிறப்பித்தமையால் தம்முடையபாடல்
சிவபெருமானுடைய காதுகளிலேறும்பொருட்டே காழிவிரகர்
கருதினரென்பது மேலோர்துணிவு. அன்றியும், தமது திருவாக்கு
வேதமென்பதை விளக்கவே அவர் செவியைச் சிறப்பித்தாரென
லுமொன்று. எங்ஙனமெனின், வேதமானது சுரோத்திரத்துக்கு
விஷயமாவது கொண்டே அதனைச் சுருதி என்று விதப்பர். அப்ப
டியே நம்பாலறுவாயர்திருமுறையுஞ் சுரோத்திரவிஷயமாகத்தக்க
சுருதியென்பது தொனிக்கவே பெருமானதுதிருச்செவியைத்துதி
த்தவாறாயிற்று. அது வேதமென்னு முண்மையைத் (தமிழ்வேதம்
பாடினார் தாளம் பெற்றார்) எனவும், (பொருவிறப்பவோதினார் புகலிவந்த
புண்ணியனறெண்ணிறந்த புனிதவேதம்) எனவும், (விருப்புடன் பாடலிசை
த்தார் வேதந்தமிழால் விரித்தார்) எனவும், (எழுதுமாமறையாம்பதிகத்தி
சை முழுதும்பாடி) எனவும், (மிக்கசொற்றமிழினால் வேதமும் பாடினார்)
எனவும், (தூக்கின்றமிழ்விரகர் சொல்லிறந்த ஞானமறை - தேக்குந் திருவா
யாற் செப்பியருள்செய்தார்) எனவும்போந்த பிரமாணங்களாலுமறிக.
இவ்வாறமைந்த வேதத்தில் முடிவாகத்தேர்ந்தபயனை அறிவிக்கு
மாறு (அ-கூ-க0) வதுசெய்யுள்களில் சிவபெருமான்தமக்குப்பிழை
செய்த ஆன்மாக்களும் பின்றம்மைவந்தடையின் அவர்களுக்கநு
க்ரகஞ் செய்வாரென்பதையும், எவ்வகைப்பட்டசிறப்பினரும் சிவ
பெருமானை அன்போடு வழிபடினன்றி அவரையடையார்க ளென்

பதையும், வேதகாரணராகிய சிவபெருமானைக் காட்டுஞ் சைவநெறியைச் சாராதவர்கள் பிழைக்கமாட்டார்களென்பதையும் முறையே இனிது கூறினர். இவைகளுக்குச் சான்றாக இராவணனையும், பிரமவிஷ்ணுக்களையும், புத்தர் சமணரையும் எடுத்துக் காட்டினர். (கக)வது செய்யுளில் தமது திவ்யநாமமந்திரத்தையும், தமது திருவாக்கினேற்றத்தையும், அதனைக்கடைப்பிடித்தார் உய்வாரென்பதையும் பொருளாகக்கொண்ட திருக்கடைக்காப்புங்கூறியருளினார். பெருமானுக்குந் தமக்கும் பேதமின்மையை விளக்கவே தமது மஹாமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஈற்றிலமைத்தனர். ஞா-ந-ஸ0-ப0-த—(ஞாநஸம்பந்த) என்பதே அதுவாம். பஞ்சாக்ஷரமென்றும், சிவமந்திரமென்றும், தாரகமந்திர மென்றும், மூலமந்திரமென்றும், முக்திமந்திரமென்றும் பலநாமங்கள் பெருமானுடைய மந்திரத்துக்கு வருவனபோலவே நம்பாலருவாயர் மந்திரத்துக்கும் பலபரியாயவமைதிகள்பதிகங்கடோறும்வரக்கூறினர். இத்தகையவமைதிகள் பதிகங்கடோறுங் கொள்ளக்கிடக்கும். இந்நூலில்(ங௩) வது பக்கத்தில் (நெஞ்சமே! உலகத்தார் நரகமெய்தாம லின்பத்தையடையவும், ஆண்பனை பெண்பனையாகிப் பழத்தைக்கொடுக்கவும், சம்பந்தராயவதரித்துத் தேவாரத்தை யருளிச்செய்த முருகக்கடவுளைத் துதியாமலும், அவரது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யநுட்டியாமலும், தவத்தின் முயலாமலும் தீவினைத்தொடர்பால் மும்மலப்பிணிப்புண்டு யாம் அவத்தின் முயன்று அஞ்சுகின்றோம்.) என்னுங் கருத்தமைந்த ஸ்ரீமத் அருணகிரிநாதர் திருவாக்கைக் காட்டியிருக்கின்றோமாகையால், ஆண்டும் ஸ்ரீஞானஸம்பந்தாது பஞ்சாக்ஷரம் இனிது விளங்கியது. இம்மஹாமந்திராதிஷ்டான மூர்த்தியினது திருவாக்கு வேதமாதலை (ங௪) வது பக்கத்தில் (ருக்கு ஐயம்போகவுரைத்தோன்.) என அப்பெரியாரோகூறியதை இனிது யாம் காட்டியிருக்கின்றோமாகையாலுங் கண்டுதெளிக. ஏனையாசாரியர்கள் பிள்ளையாரில் வேறாகாதவர்களாகையால், அன்னோர் திருவாக்குகளுக்கும் இதுவேவஷித்தமானமகிமையாய்ச் சிறந்தது. இன்னும் விரிக்கிற்பெருகும். வேதங்களில் சிவபெருமான் தம்மைத்துதித்திருப்பதுபோலவே, திரமிடவேதத்திலுந் தம்மை ஞானஸம்பந்த வள்ளல் புகழ்ந்திருக்கின்றனர். அவை (ஒருநெறியமனம்வைத்துணர் ஞானஸம்பந்தனுரைசெய்த - திருநெறியதமிழ்.) எனவும், (கொச்சைக்கிறைவன் சிவஞானஸம்பந்தன்.) எனவும், (மறைஞானஞானமுனிவன்.) எனவும், (பதியானஞானமுனிவன்.) எனவும், (தணிகொ

...யவர்காழி ஞானமிகுபந்தன்.) எனவும், (ஞாலத்துயர்காழி ஞானஸம்பந்தன்.) எனவும் (நான்மறைவல்ல ஞானஸம்பந்தன்.) எனவும், (திருவார்ஸம்பந்தன்.) எனவும், (கழுமலத்திறை தமிழ்க்கிழமைஞானன்.) எனவும் (புல்லிலைசகேளா நற்றமிழ் ஞானஸம்பந்தன்.)எனவும், (முத்தமிழ் நான்மறை ஞானஸம்பந்தன்.) எனவும்,(பழூதில்ஸம்பந்தன்.)எனவும்,(பாரின்மலிகின்ற புகழ்நின்ற தமிழ் ஞானஸம்பந்தன்.) எனவும், (தமிழ்விரகன்.) எனவும்,(தண்ணார்சீர் ஞானஸம்பந்தன்.) எனவும், (திருஞானஸம்பந்தன்.) எனவும், (மிக்கஞானஸம்பந்தன்.) எனவும்,(தலைமகனாகிநின்ற தமிழ்ஞானஸம்பந்தன்.) எனவும், (நல்வித்தகத்தாலுணரு ஞானஸம்பந்தன்) எனவும், (செல்வன் ஞானஸம்பந்தன்) எனவும், (நலந்திகழ் ஞானஸம்பந்தன்) எனவும், (தலைஞானஸம்பந்தன்) எனவும், (காழிநாதன் வேதியன் ஞானஸம்பந்தன்) எனவும், (சுற்றுமுற்றுமாயின னவன்பகர்ந்தசொற்கள்) எனவும், (சீரூர்ஸம்பந்தன்) எனவும், (நல்லார்பரவப்படுவான் காழிஞானஸம்பந்தன்) எனவும், (பூசுரன் ஞானஸம்பந்தன்) எனவும், (நாவினலம் புகழ்சீர் நான்மறையான் ஞானஸம்பந்தன்) எனவும், (மெய்ஞ்ஞானஸம்பந்தன்)எனவும், (எண்ணமர்பல்கலையா னிசைஞானஸம்பந்தன்) எனவும், (நண்ணிடகீர்த்தி நலங்கொள்கேள்வி நான்மறைஞானஸம்பந்தன்) எனவும் வருவனவேயாம். இவ்வாறு தம்மைப்புகழ்ந்து துதிக்குநலத்தை (தன்னைத் துதிக்குஞ் சொன்னலந்தானு — மத்துறையறிவாணர்க் கறைவதொன்று) என்ற சந்தானகுரவர் திருவாக்கானே யறிந்திடுக. ஆயின், ஞானஸம்பந்தவள்ளல் கீர்வாணத்தன்றி அவைகளைத் தமிழிலருளிச்செய்த தென்னையெனின், கீர்வாணமுந் தமிழும் ஸமமரியாதை யுடையனவாகையால் இரண்டும் ஒன்றேயாகும். கீர்வாணமே சிறந்ததெனவும், அது மாத்ருபாஷையெனவும், அதிற்றானே மூலமாகிய வேதமுளதெனவும், அது முதல்வருணத்தவராற் கொள்ளத்தக்க மேம்பாடுடையதெனவும், தமிழானது அன்னசிறப்பினதன்றெனவும், சூத்திரராற் கவரத்தக்கதெனவும் உலகிற் சிலர் வழங்குவ தென்னையெனின், இவ்வாறு அறியாதார் கூறுவராகையால் இதனை மேலோர் மதித்திடார். இது ஸர்வோத்தம மென்பதைப் பிரமாணவாயிலாகவும், யுக்தியநுபவ ஸித்தமாகவும் விளக்குகின்றும்.

தமிழ் என்பது இனிமையென்று பொருள்தரலால் தமிழ்ப்பாஷை என்றது இனிமையான பாஷையாம். அன்றியும், "தமிழ் என்னுஞ்சொல் தனிமைப்பொருள்குறித்த தமியென்னும்வினையடியாற்

பிறந்து வினைமுதற்பொருண்மை யுணர்த்திய விகுதிகுன [illegible] டுஞ் சைவநெ க்கிணையில்லாப்பாஷையென்றும் பொருள்பயப்பது.'' இத்தமிழ்ப் பாஷையைத் தென்மொழியெனவும், தென்பாஷை யெனவும், தென்கலையெனவும் யாவரும் வழங்கலால் இது வடமொழி- வடபாஷை - வடகலை என்னும் பெயர்களைப் பெறமாட்டாது. இப்படியே கீர்வாணமானது வடமொழி - வடபாஷை-வடகலை என்னும் பெயர்களைப் பெறுவதன்றித் தென்மொழி-தென்பாஷை-தென்கலையென்னும் பெயர்களைப் பெறமாட்டாது. இதனால், வடக்குக் கொரு பாஷையும், தெற்குக் கொருபாஷையும் அநாதிஸித்தமாகவே அமைந்திருக்குநலம் வெளிப்பட்டது. இவ்விரண்டுமன்றி வடக்கினுந் தெற்கினும் பாஷைகள் பலவுள. அவை தனித்தனி முதல்களாகா. வடக்கிலுள்ள பாஷைகள் கீர்வாணத்திலும், தெற்கிலுள்ள பாஷைகள் தமிழினும் அந்தர்ப்பவமாம். கீர்வாணம்-தமிழ் என்னு மிரண்டுபாஷைகளே ஒன்றையொன்று விரோதியாத மூலபாஷைகளாம். இவ்விரண்டுக்கும் வக்தா சிவபெருமானாகையால், ஏனையபாஷைகள் சிவபெருமானை வக்தாவாக வுடையனவன்று. இவ்வுண்மையால், கீர்வாணம்-தமிழென்னுமிரண்டும் பதியாற் செய்யப்பட்டனவும், ஏனையபாஷைகள் பசுக்களாற் செய்யப் பட்டனவுமென்று மேலோர் துணிவர். (ஆரியமுந் தமிழுமுடனேசொலிக் - காரிகையார்க்குங் கருணைசெய்தானே) எனவும், (தமிழ்ச்சொல்வடசொல் லெனுமிவ்விரண்டும் - உணர்த்துமவனை யுணரலுமாமே) எனவுந் திருமந்திரத்திற் கூறியவாறறிக. அன்றியும், (வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளியதற்கிணையாத் - தொடர்புடையதென்மொழியை யுலகமெலாந்தொழுதேத்துங்-குடமுனிக்குவலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகரெனிற்-கடல்வரைப்பினிதன்பெருமை யாவரேகணித்தறிவார்) எனவும், (இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவரியல்வாய்ப்ப - விருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தரிசைபரப்பு-மிருமொழியுமான்றவரோ தழீஇயினரென்றாலிவ்-விருமொழியுநிகரென்னு மிதற்கையமுளதேயோ) எனவும் (ஆதியிற்றமிழ்நூலகத்தியற்குணர்த்திய-மாதொருபாகனைவழுத்துதும்) எனவும் போந்தபிரமாணங்களும் எமது உண்மையை நிறுத்தும். இதனை யறியாதார் அகத்தியமுனிவரே தமிழ்ப்பாஷையை யுண்டுபண்ணினரென்று கூறுவர். பாணினிக்கு வடமொழியையும், அகத்தியருக்குத் தென்மொழியையுஞ் சிவபெருமான் கற்பித்தருளினமையால், அவரருட்பரிசால் அம்முனிவ ரிருவரும் அவ்விருபாஷைகளையும் உலகிற்பிர

காசப்படுத்தினாரென வறிக. இதனால், அந்தப்பாஷைகளுக்குச் சிவ பெருமானே வக்தாவும், பாணினி அகத்திய ரிருவரும் பிரவக்தாக் களு மாயினர். இம்மரபறியாமல் தமிழ்ப்பாஷையைச் சூத்திரபா ஷையென்பது சூத்திரப்பிராயர்கட்கே சிறக்கும். அகத்தியமுனிவ ரோ அது செய்தாரென்றவிடத்தும் அவர் சூத்திராயிடினன்றோ அவர் பாஷைக்குஞ் சூத்திரத்வம் ஸம்பவிக்கும்? அவரைப்போ லவே முனிவராகிய பாணினியார் செய்தது சூத்திரபாஷையா காதபோது அகத்தியர்செய்தது மாத்திரம் என் சூத்திரபாஷையா கும்? அம்முனிவர்தம்முள் அகத்தியர் பெருமையைத் தேவியே பெருமானுக்கு எடுத்திசைத்தமையானும், அதனுள், அகத்தியர் சிவனாரிடந் தமிழுபதேசத்தைப் பெறுவதன்முன்னரோ தமிழ்ப் பாஷையுண்டெனவும், அதுவழங்கியிருந்தநாடு தமிழ்நாடென்று பெயர்கொண்டிருந்ததெனவும் பெறப்பட்டமையானும், அகத்தி யர்பெருமை வேறு எந்தமுனிவருக்குமுண்டாகாமையானும், (வட மொழியினும் ஆசிரியர் பாணினியார் தொல்லாசிரியர் சூத்திரங்களுட் சிலவற் றைத் தம்முடைய சூத்திரங்களாலெடுத்தோதி மறுத்து வேறு விதி கூறுவர். அவர் சூத்திரங்களுட் சிலவற்றை ஆசிரியர் வாருசியாரெடுத்தோதி மறுத்து வேறு விதி கூறுவர். அவ்விருவருரையு மோரோரிடங்களி லாசிரியர் பதஞ்சலி யாரெடுத்தோதி மறுத்து வேறுவிதிகூறுவர். ஆசிரியரகத்தியனார் தொல்காப்பி யனார் பதஞ்சலியார் முதலாயினாரு மோரோவழியவ்வாறு மயங்கிக் கூறுபவா லோவெனின், அவர் தவத்தான் மனந்தூயராய் முக்குணங்களையுங் கடந்து இறைவனருள்பெற்றுடையராகலி னன்னரல்லரெனவுணர்க.) எனமேலோர் அகத்தியரேற்றம் புலப்படுத்துமாற்றானும் அவர்முகமாகப்பிரகாச த்தை யடைந்த தமிழ்ப்பாஷை பாணினிமுகமாகப் பிரகாசத்தை யடைந்த கீர்வாணத்தினுஞ் சிறந்ததாகவே யாவருங் கொண்டிடு வர். (தாழ்ந்தது வடதிசையெல்லை யுயர்ந்தது தென்மேற்கெல்லை-சூழ்ந்தருகண்டு வானோர் தொழுதனைப்பாவிசைய - ஆழ்ந்திடுமாவம் பூண்டோ யொருவனின் னைப்பானங்கே - வாழ்ந்திட விடுத்தாவிந்த வையநேர்நிற்குமென்றார்.) என வும், (பைத்தலைபுரட்டுமுன்னீர்ப் பௌவமுண்டவனேயெம்மை - யொத்தவ னையான்வாழ்க்கைக்குரியனாகியவுலோபா - முத்திரையிமவான்பெற்ற முதி ழ்முலைக்கொடியொப்பாளென் - றத்திருமுனியைநோக்கி யாயிடைவிடுத்தா யன்றே) எனவும், (விடைகொடுபோவாரென்றை வேண்டினனேருர்தேயத் தொடைபெறுதமிழ்நாடென்று சொல்லுபவந்தநாட்டி - னிடைபயின்மனித்த ரெல்லா மின்றமிழாய்ந்தகேள்வி- யுடையவரென்பகேட்டார்க் குத்தரமுரைத் தல்வேண்டும்) எனவும், (சித்தமாசகலவந்தச்செந்தமிழியனூறன்னை - யத்த

னேயருளிச்செய்தி யென்றனனையான்றேற - வைத்தனைமுதனூறன்னை மற்றதுதெளிந்தபின்னு - நித்தனேயடியேனென்று நின்னடிகாண்ப தென்ருன்) எனவுந் திருவிளையாடற்புராணத்திற்போந்த வுண்மையானுமறிக. இவ்வர்த்தத்தைக்கொண்டிருக்குமூலமாகியஸ்ரீ ஹாலாஸ்யமாஹாத்மியத்தில் "శ్రీకంఠనాథభగవన్ శ్రీమత్కైలాసనాయక। త్వదాజ్ఞయాగమిష్యామి మహాంతంమలయాచలం। మయితత్రగతేసర్వే తత్రత్యా ద్రామిడాజనాః। జ్ఞాతుంద్రావిడశాస్త్రాంశ్చ భవిష్యంతిసముత్సుకాః। తేషామప్యుపదేశాయ మమజ్ఞానహేతవే। మహ్యంద్రావిడసూత్రాణి సహసోపదిశప్రభో। ఇత్యగస్త్యప్రార్థితేన తేన సర్వజ్ఞేనత్వయాతథా। ఉపదిష్టానిసూత్రాణి తస్మైకలశజన్మనే। పునర్విజ్ఞప్తిమకరోద్భవంతంప్రతికుంభజః। భవద్దర్శనమస్మాకం భవిష్యతికదాపునః" என்று பெறப்பட்டவசனங்களையும் பரியாலோசித்திடுக. இவற்ருல், திராவிடத்தை அகத்தியர் உண்டுபண்ணினுரென்பது அடிபட்டுப்போய்விட்டது. வேதத்தைப் பிரகாசப்படுத்தியவியாஸபகவானை வேதத்தைச்செய்தவரென்று கூறுதல் கூடாவாறுபோலத் திராவிடத்தைப் பிரகாசப்படுத்திய அகஸ்தியபகவானைத் திராவிடத்தைச் செய்தவரென்று கூறுதல்கூடாது. வேதத்தைப்பிரகாசப்படுத்தியதுகொண்டு வியாஸமுனிவரைவேதவியாஸர் என்றபடியே தமிழைப் பிரகாசப்படுத்தியதுகொண்டு அகத்தியமுனிவரைத் தமிழ்முனி என்று மேலோர் துதித்திடுவர். இதுவே பாணினியாரிடத்துஞ் சிறக்கும்.

இத்துணைச்சிறப்பினதாய் விளங்குந் திராவிடம் ஏனைப்பாஷைகள் போலாது அநாதிஸித்தமாயுளதென்பதற்கும், அதன் மூலவிலக்கணமேயன்றி வழிநூல் சார்புநூல்களாக வந்த தொல்காப்பியமுதலியனவுங் கேவலம் அநாதியென்பதற்கும் (நான்கு கூறுமாய் மறைந்தபொருளுமுடைமையா னான்மறை யென்ருர். அவை தைத்திரியமும், பௌடிகமும், தல்வகாரமும், சாமவேதமுமாம். இனி இருக்கும் - யசுவும் - சாமமும், அதர்வணமும் என்பாருமுளர். அது பொருந்தாது. இவரினூல்செய்தபின்னர் வேதவியாதர் சில்வாழ்நாட் சிற்றறிவினோருணர்தற்கு நான்கு கூருகச் செய்தாராதலின்) என்று தொல்காப்பியவுரைச்சிறப்புப்பாயிரத்தில் நச்சினுர்க்கினியார் கூறியதே நிதரிசனமாகும். வியாஸர் வேதத்தைப் பிரகாசப்படுத்துவதன்முன்னரே திரணதூமாக்னி யென்னும் அகத்தியமாணக்கர் தொல்காப்பியஞ் செய்தாராயின், அவருக்கு மூலமாகிய அகத்தியர்செய்த முதனூல் எக்காலத்ததாகவேண்டும்? அகத்தியருக்கு அதனைச் சிவபெருமான் உபதே

சித்தருளியகாலம் பார்வதியாரது திருமணஸந்தர்ப்பமே யாகையால் அதிக பிராசீனத்வமும், மங்களத்வமும் அதற்கு விளக்கின்றன. அதற்கு முன்னுந் தமிழ்நாட்டின் பிரஸம்ஸை அகத்தியராற் செய்யப்பட்டமையானும், சிவாகமங்களில் சிவபூஜாகாலத்தில் திராவிடஸ்தோத்திர பாராயணங் கேட்கப்படுகின்றமையானும் அருள்வடிவமாகிய தமிழ்ப்பாஷையினது தன்மைக்கு எவராலும் மஹிமைசொல்ல முடியாது. கீர்வாணமுந் திராவிடமுஞ் சிவபெருமான் அருளிச்செய்தனவே யாயினும், அவ்விரண்டும் அப்பரமபதியருளிச்செய்த வேதசிவாகமங்களேயே முறையே ஒத்திருக்கின்றன. வேதத்தினுஞ் சிவாகமந் தெளிவா யிருத்தல் போலவே கீர்வாணத்தினுந் திராவிடம் தெளிவாயிருக்கின்றது. இந்தத்தெளிபாஷையைப் புண்ணியக்குறைவுடையாரோ குறைந்த பாஷையென்று குறைப்பர். சிவாகமங்களை நிந்திக்கும் பாஷண்டிகளுமுளராகையால், அப்படியே திராவிடநிந்தை செய்வாருமுளர். சிவாகமத்தில்அன்புபாராட்டத்தக்கவரோ திரமிடத்தினும் அன்புபாராட்டத் தகுதியினராவர். ஆகையால், திராவிடநிந்தை செய்வாரை மேலோர் ஓர்பொருளாக மதியார்! மதியார்!!

வேதத்தில் அறம் - பொருள் - இன்பம்-வீடு என்னும் புருஷார்த்தங்களைச் சொல்லினும், முடிவாகியவீடு அதிகமாகச்சொல்லிய முதன்மூன்றைக்காட்டிலு மற்பமாகி அவற்றின் மறைந்து கிடக்கும். சிவாகமம் வீடொன்றினையே அதிகமாகவிரித்துச்சொல்லும். முதன் மூன்று தருமங்களுந் தாமஸராஜஸங்களதிகரித்துஸத்வங்குறைந்து வெளியாகும். வீடு ஒன்றுங் கேவலம் ஸத்வமாயிருக்கும். இதனால், முதன் மூன்று தருமங்களைச்சொல்லிய வேதத்தில் தாமஸராஜஸங்களோடு அற்பஸத்துவமும், முடிந்த வீட்டையுணர்த்துஞ் சிவாகமங் கேவலம் ஸத்வமயமுமாக விளங்கும். இவ்வாறே கீர்வாணம் - திராவிட மிவ்விரண்டிடங்களிலுங் கொள்க. திராவிடம் ஸத்வபாஷையாதல் கொண்டே ஞானஸம்பந்த வள்ளல் கீர்வாணத்தைவிட்டுத் திராவிடத்திற் றிருவாய்மலர்ந்தருளினர். இந்த விசாரத்தால் வேதசிவாகமங்களிரண்டும் ஸமப்பிரமாணங்களானவிடத்தும் வேதத்தினுஞ் சிவாகமம் சிறந்திருப்பதுபோலக் கீர்வாணந் திராவிட மிரண்டும் ஸமமரியாதை யுடையனவேனும், கீர்வாணத்தினுந் திராவிடம் அதிகமரியாதை பெற்றிரு

ப்பதெனவும், அப்படியே கீர்வாணவேதம் திரவிடவேதமிரண்டும் ஸமமரியாதை யெய்தினவேனுங் கீர்வாண வேதத்தினுந் திரவிடவேதமே சிறந்திருப்பதெனவுந் தீர்மானிக்கப்பட்டது.

இன்னும், "త్వదంగసంభవాపన్నా ఆదిహాంతాశ్చవాఙ్మయాః । జనిష్యంతిమిథోభిన్నై రాకారైస్సుధియోభువి। అకారరూపీభగవాన్ సర్వవ్యాపీసదాశివః । తేషాం చసుధియాంమధ్యే భవత్యేకఃకవీశ్వరః। అహంత్వేకోనపంచాశత్సంఖ్యాస్సంత్యకవీశ్వరాః। సంతస్త్వదంగసంభూతా స్తేద్రావిడకవీశ్వరాః" என்று ஸ்ரீஹாலாஸ்யமாஹாத்மியத்திற்போந்த வசனங்களைக் கொஞ்சம் யோசிப்பாம். இவற்றுள், பிரஹ்மாவினது சாபத்தையடைந்து ஸரஸ்வதி யானவள் தனது கீர்வாணபாஷாரூபத்தை மாற்றிக்கொண்டு தமிழ்ப்புலவர் நாற்பத்தெண்மராகப் பிறந்து தமிழ்ப்பாஷையைக் கற்றுச்சிறந்த மான்மியம் வெளிப்படுகின்றமையானும், அப்புலவருட்டலைமை யெய்திய கீரன் தமிழிலக்கணங் கற்குமாற்றல் போதாது மயங்கி அகங்கரித்தவழி அவனுக்குஅகத்தியரவ்விலக்கணமுபதேசித்தது வேறோரிடத்திற் கேட்கப்படுகின்றமையானுங் கீர்வாணபாஷையைக் காட்டினுந் திரவிடபாஷைக்கே கௌரவஞ் சிறந்திருக்கின்றது. சாபம் ஸரஸ்வதிக்கே வந்தமையால், அதைக் கீர்வாணத்துக்குமாத்திர மேற்றுவது கூடாது. அவளுடைய அம்சமாகிய திராவிடத்துக்கு மேற்றுவது உசிதமெனின், திராவிடத்துக்கு எழுத்தெல்லாம் முப்பதே யாகையாலும், சாபத்தாற் பிறந்த வெழுத்துக்கள் நாற்பத்தெட்டாகையாலும் சாபமெய்தியது கீர்வாணமென்பதே ஸித்தம். நாற்பத்தெட்டில் முப்பதும்அடங்கலால், ஆண்டமையுமெனின், எ-ஒ-ழ-ற-ன இவை அடங்காமையானும், நாற்பத்தெட்டும் முப்பதையுமேகற்றுக் காலங்கழித்தமையானும் அதுகூடாது. என்னை, கீர்வாணம் உயர்ந்த பாஷையாகையால் சாபத்தாலிழிந்து இழிந்தபாஷையைக் கற்றதெனின், சாபமடைந்த பாஷையை இழிவற்றதெனவும், சாபம் அடையாதபாஷையை இழிந்ததெனவுங் கூறுவது எங்ஙனம்? தமிழ்ப்பாஷையைக்கற்றதனுனே கீர்வாணத்துக்குச் சாபம் நிவாரணமாயினமையால், கீர்வாணத்தினுந் திராவிடம் சிறந்ததென்பதே ஸித்தமாயிற்று. என்னை, திருவிளையாடற் புராணத்தில் "தொக்க வாரியமுமேனைச் சொற்பதி னெட்டுமாய்ந்து" என்றதெனின், அது கலைமகள் ஸர்வபாஷாரூபிணி யென்பதைக் காட்டியது. ஆண்டு, "தக்கதென்கலை தண்டேர்ச்சிப் புலமையிற்

லமை சார்ந்தார்" என்றதே முக்கியம். இதனை வலியுறுத்துமாறு, "శ్రీహాలాస్యమహాస్థానే సుందరేశ్వరసన్నిధౌ। సంభూయద్రావిడాః సర్వే శైవశాస్త్రాణి తేనచ" எனவும், "శివార్చనపరానిత్యం శివధర్మపరాయణాః। దత్వాద్రావిడభాషా యామత్యంతంనిర్మలాశయః" எனவும், ஷை ஹாலாஸ்யமாஹாத்மியத்தில் அடுத்தடுத்துவரும் பிரயோகங்களையுங் கண்டுதெளிக.

இத்துணைச்சிறப்பு வடபாஷைக்கின்று; தமிழ்ப்பாஷைக்கு ஸ்ரீசிவபெருமானே முதலாசிரியராயினாரன்றி முருகக் கடவுளு மாசிரியத்தலைமைதோன்ற வகத்தியனார்க்கோர்காலத்திற் றமிழுறிவுறுத்தினானென்பது ஆன்றோர் மதமாதலால். (தமிழ்நாட்டிற்கு வடக்கட்பிறவெல்லையு முளவாக வேங்கடத்தை யெல்லையாகக் கூறினார். அகத்தியனார்க்குத் தமிழைச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப்பரமாசாரியராகிய அறுமுகக்கடவுள் வரைப்பென்னு மியைபுபற்றியென்பது.) எனச் சிவஞான முனிவர் கூறினர். அன்றியும், தமிழ்ச்சங்கபரிபாலனம் உலகினடைபெற்றதன்றிக் கீர்வாணஸங்கம் நடைபெற்றதின்று. முதற்சங்கம்- இடைச்சங்கம் - கடைச்சங்கங்களில் அச்சங்கத் தலைவர்களாயெழுந்தருளி யிருந்தவர்கள் ஸ்ரீ சிவபெருமான் - முருகக்கடவுள் முதலினோரே யாகையா லின்ன சிறப்பெய்திலாக் கீர்வாணத்தைத் திராவிடபாஷையி னிழிந்ததெனக்கோடல் யாண்டிசையும்? இத்தகையதமிழ் கீர்வாணத்தை மூலமாகக் கொண்டு பிறந்ததெனக் குழறலும் யாண்டுப் பொருந்தும்? இதனால், திராவிடத்துக்குங் கீர்வாணம் மாத்ருபாஷையென்றது தவறாயிற்று. (தமிழ்மொழிப்புணர்ச்சிக்கட்படுஞ் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சிலசொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலியசொற்பாகுபாடுகளும், அகம்புறமென்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சிவெட் முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின்பகுதிகளும், வெண்பாமுத யுளிலக்கணமும், இன்னோரன்னபிறவும் வடமொழியிற்பெறப்படாமை எனத் தொல்காப்பியச்சூத்திரவிருத்தியிற் கீர்வாணத்திற் ங்காமையை விளக்கியவாற்றானுந் திராவிடத்தினது யம் வெளியாயிற்று. கீர்வாணமுந்தமிழுந் தம்மிலெ த்தனிவிளங்கு முதல்களும், பெருக்கமுடையன விருத்தியிற்றானே (இந்திரனுக்குப்பிருகற்பதி இவைவ லனவென வடமொழிகளைத் தனித்தனித்தனி யெடுத்தோ வயாண்டி லாயிரம்யாண்டுசென்றது. சென்றுஞ் செ ன மாபாடியத்து ளாசிரியர் பதஞ்சலியா ரெடுத்தே

மவ்வாறு பெருகிக்கிடத்தலின், அவற்றை இவைவழு இவைவழுவில்ல வெனத் தனித்தனியெடுத்தோதப்புகின் முடிவுபெறாது.) என விளக்கியிருக்கின்றமையானுந் தெளிந்திடுவர் மேலோர்.

சிலகீர்வாணவெழுத்துக்களும்,சிலகீர்வாணமொழிகளுந் தமிழில்வந்துகூடும்.அவ்வாறு கீர்வாணத்தில் தமிழெழுத்துக்களும், தமிழ்மொழிகளுஞ்சென்றுகூடுவதின்றெனின். இதற்குவிடைகூறுதும். அகரத்தின்முன்னர் இகரமும்,யகரமெய்யுந் தம்முளொத்துப்பொருந்தினல் ஐ என்னும் எழுத்துண்டாமெனவும், அகரத்தின்முன்னர்உகரமும்,வகரமெய்யுந் தம்முளொத்துப்பொருந்தினல் ஔ என்னும்எழுத்துண்டாமெனவும் வடநூலார்ஸந்தியக்கர விலக்கணங்கூறுதலானும்,(மொழிந்தபொருளோடொன்றவவ்வயின்மொழியாததனை முட்டின்று முடித்தலென்னு முத்தியான் அகரக்கூறும் இகரக்கூறுந் தம்முளொத்து எகரமொலிக்கும். அகரக்கூறும், உகரக்கூறுந் தம்முளொத்து ஒகரமொலிக்கும் எனவுங்கொள்க.) என நன்னூல் விருத்தியுரையிற் காண்டலானும், (எ-ஒ) என்னு மொலிகள் கீர்வாணத்தனவன்றாகலாகலானும், இவ்விரண்டனுள் (ஒ) என்பது அகர உகரங்களாகிய பிரணவத்தின் கூறாகின்றமையானும், இந்த வியவஸ்தையால் பிரணவமானது திராவிட மாகின்றமையானும், கீர்வாண வேதமானது தமிழையே மூலமாகக்கொண்டதென யாம் சாதிக்கப்பின்னிடேம். என்னை, (ஓ) என்னு நெடில் கீர்வாணமாதலால் அதுவே அங்கமையுமெனின், அற்றேல் அகர உகர மகரங்களாலாகியது பிரணவமாகிய ஓம் என்றது பொய்யாம்.(అకారం బ్రహ్మణం నాభౌ ఉకారం విష్ణుం హృదయే మకారం రుద్రం భ్రూమధ్యే। ఓంకారం సర్వేశ్వరం ద్వాదశాంతే) எனப்போந்த ...ஷத்துக்கும் விரோதமாம். இதனல், ஒகரம் தமிழாதல் சாதி...டது. (ஓ)என நீண்டதும் இந்த ஒகரமேயாகும். (ஒ)என் ...மெழுத்தினது நெடிலைவிட்டு (ஓ) என்னும் வடவெழுத் ...ண்டு ஸமர்த்திக்கமுடியாது. முடியுமெனின், பிரணவத் ...ஷமுண்டாகாமல் சாதிக்கக்கடவர்.

...அ-இ) என்பவும், (அ-உ) என்பவும் வடவெழுத் ... அவற்றின் ஸந்தியக்கரங்களாகிய(எ-ஒ)என்பவு ...களேயாம்.அதனல் அவை தமிழிலுள்ள(எ-ஒ) ...மனின், கீர்வாணந் தமிழொலியாகத்திரிதலால்

விபசரிக்கும். விபசரியாமையைவிரும்பின், அ - இ - உ என்பவை
களைப்போல எ - ஒ - என்பவைகளையும் அந்தப் பாஷையினது
மூலாட்சரங்களாகக்காட்டி நாட்டவேண்டும். அங்ஙன மின்மை
யின், அது விபசரித்தது ஸத்தியம். இந்த விபசாரதோஷத்தை
மாற்ற யாமிங்கே வோர் பரிகாரங்கூறுகின்றோம். என்னெனின்,
(எ-ஒ) என்பன திராவிடத்தின் சிறப்பெழுத்துக்க ளாகலானும்,
எகரத்தில் அகரமும் இகரமும், ஒகரத்தில் அகரமும் உகரமும்
நிலைபெறுகலானும், (எ-ஒ) என்னுந் தமிழெழுத்துக்களைப் போல
வே அவற்றின் அந்தர்க்கதங்களாகிய (அ - இ - உ) என்பனவுந்
தமிழெழுத்துக்களே யாகும் என்று கூறுவதேயாம். இதனால்,
(அ-இ-உ-எ-ஒ) என்னுங்குறில்களும் இவற்றினெடில்களுங் கேவ
லந்தமிழேயாகி, இதினின்றுந்தானே கீர்வாணம் பிறந்து விர்த்தி
யடைந்தது என்று கூறுவதிலுங் குற்றமுண்டாகாது. சிவனுடைய
அமிசமே சக்தியானாற்போலத் தமிழினுடைய அமிசமே கீர்வா
ணம் ஆயினமையறிக. இவ்வுண்மையால், கீர்வாணதிராவிடங்களை
முறையே மாத்ருபாஷை பித்ருபாஷைகளென்று கூறுவதுஞ்சிறக்
கும். கீர்வாணத்தை மாத்ருபாஷையென்றுயாவருங்கோடலானும்,
அங்ஙனங்கோடல் பித்ருபாஷை இல்வழி அமையாமையானும்,
அது மேல்வியவஸ்தையால் திராவிடமேயெனச் சிறந்தமையா
வுங் கீர்வாணத்தை மாத்ருபாஷையென்று புகழ்வதும், கீர்வாணம்
ராவிடத்தினுபகாரத்தை வேண்டாது என விதப்பதும், கீர்வா
திராவிடத்துக்கு உபகரியாநிற்குமென வியப்பதும் அவல
கீர்வாணமானது தமிழுக்குபகரித்தல் நாயகன்மாட்டமை
ாது துணைவியினுபகாரத்தையே மானும். அவன் றுணைவி
ினும், அவளை நீங்கியிருப்பினுங் குறைகூறப்படான்.
ீர்வாணத்தினுதவி இல்வழியும், உள்வழியுந் திராவிட
வும் உயர்வும் உண்டாகா. நாயகனது பிரிவையடை
ர் நலனுஞ் சிறவாமைபோல, திராவிடத்தினது
கீர்வாணமும் அதனாலாய வேதமும் பயனில

ிவாகமங்களைச் சிவபெருமான் திராவிடத்
ற் கூறியதென்னையெனின், இதுமயக்கவி
ுதத்துக்குப்பிஜமாகிய பிரணவத்தைத்

திராவிடமென்று காட்டினும். ஆரம்பத்திற்றானே திராவிடம் கர
தலாமலகமெனக் காண்டலால், இஃதறியாது கூடாவுவாரை மயச்
சுவினுவுடையரொன்றும். வேதமானது (அநந்தா வை வேதா:) என்ற வச
னபரியாலோசனையால் அநந்தமாயுளதென்பது ஸித்தம். அவ்வநந்
தம் கீர்வாணம் - திராவிடமென்னு மிருபகுதியிலடங்கிவிரியும். கீர்
வாணவேதங்களைப்போலத்திராவிடவேதங்களுஞ்சிவனுடைய திரு
வாக்குகளே! கீர்வாணவேதமானதுபின்னர் விஷ்ணுவாயிலாகவும்,
பிரமன் வாயிலாகவும், வியாதன் வாயிலாகவும்வெளிப்பட்டு, அன்
னோரை ஆக்கியோர்களெனக்கொண்டபடியே திராவிடவேதமானது
நால்வராசாரியர்களை ஆக்கியோர்க ளெனக்கொண்டு விளங்கிய
து. இதனால், திராவிடவேதம் சிவனாற்செய்யப்பட்டதின்று எனக்
குறைகூறியது தீர்ந்துவிட்டது. வேதாரண்யத்தில் வேதங்கள்
சிவார்ச்சனைசெய்து மூடிப்போனகதவை அப்பர்சுவாமிகளதுதே
வாரம்திறந்ததும், அதனைமீண்டும் பிள்ளையாரது தேவாரம் மூடி
யதுமாகியவுண்மையே திராவிடவேதம்கீர்வாணவேதத்திற்குவே
றல்லாததை விளக்கியது. வேதங்கள் யாமடைத்தகதவை யாமே
மீண்டடைந்து திறக்கக்கடவேமென்றபடி மீண்டுமாண்டெய்தி
முன்செய்த ஸங்கேதங் கெடாவழித் தாமேதிறந்தன வென்பதேய
மையும். இதனால், வேதமே மூடியது வேதமேதிறந்தது என வே
தத்தினிதிக்கத் தோன்றக் கூறுவர் மேலோர். முன்மூடியது கீ
வாணவேதமும், பின்திறந்தது திராவிடவேதமுமெனலமைவு
த்து, வேதமானது கதவைப்பிணித்து ஸங்கேதஞ்செய்து
தெல்லாந் திரமிடபாகத்தாலாய தனது வியாபகத்தைப்
விளக்கற் பொருட்டே யென மேலோர் கருதாநிற்பர். அ
திரவிடவேதமே மூடியது, அதுவே திறந்தது எனவுங்
நிற்பர். திரவிடவேதம் பூசித்தகாரணம் பற்றியே
பெயர் வியக்தமாயிற்றெனவும் விதவாநிற்பர். இவ்வ
கின், ஏன் வேதங்களைச் சிவபெருமான் திராவிட
லை யென்றெழுங்கடாக்க ளிறைபெற்றொழியும்
ருமக்கனால்வராசாரியர் திருவாக்குகளின்
யகூடமாயினவென்றாற்போலத் தமிழ்ச்சங்
டுபோனவழி, அளவிறந்த திராவிட நூல்
வெனலும்ஸித்தமாகலான், திராவிடத்

மந்மாணிக்கவாசகசுவாமிகள் - ஸ்ரீசுந்தரமூ
றும் மூவரும் பிராஹ்மணகுலத்தவரும், ஸ்ரீப
சூத்திரகுலத்தவருமாகையால் ஜாதியுயர்வுதா
வர்வாக்குகளுக்கும் உயர்வுதாழ்வுண்டாமெனி
ததமாம். என்னெனின், அப்பர்சுவாமிகளைச் சூ
வர்கூறினர்? எங்கேகூறப்பட்டுள்ளது? திருஞாந
ளை அயோநிஜரென்று மேலேயாம்விளக்கியிருக்கின்
றே வாகீசவடிகளிடத்துங் கண்டுதெளிக. பெரியபு
(திலதவதியார்பிறந்து சிலமுறையாண்டகன்றதற்பின் - அலகி
மைப்ப வருந்தவத்தோர் நெறிவாழ- உலகின்வருமிருணீக்கியா
திர்போல- மலருமருணீக்கியார் வந்தவதாரஞ்செய்தார்.) என்று
ழ்வினது அவதாரங்குறித்தபாடலில் அவருக்கு மாதரு
பந்தங்கூறியிருக்கின்றதா? இதற்குமுன்பாடலில் (புகழனு
மாதினியார் மணிவயற்றில்- திலதவதியார் பிறந்தார்.) என்று தில
ரைக் கூறியிருப்பதுபோற் கூறாமையாலும், திலதவதியா
பிறந்தாரெனவும், ஸ்வாமிகளை அவதாரஞ்செய்தா ரெனவுங்
மையாலும் இருவருக்குமுள்ள தாரதம்யம் வியக்தமாயிற்
இவ்வுண்மைதேராது அப்பர்சுவாமிகளிடத்துச் சூத்திரத்வங்
த்தது நிரஸ்தமாயிற்று. ஞாநஸம்பந்தவள்ளலும், வாகீசவடிக
கர்ப்பவிஹீனர்களானபடியேஜனையிருவராசாரியர்மாட்டுமெய்
மகிமையையு மீண்டுப்பிரகாசப்படுத்துவாம். திருவாதவூரடி
புராணத்தில் (அந்நகரின் மறையோரி லருள்புரிமாத்தியர் குலத்திற்-
ளிகரில்சைவநெறித் தலைவனவன்றனித்தேவி - மின்னனையாடிருவயிற்றின்
ன்கொடிபங்கினனருளாற்- றென்னவன் செங்கோன்முதல்வர் திருவவதா
செய்தார்.) என்னும் பாடலில் (மின்னனையாடிருவயிற்றில்- திருவவதா
செய்தார்.) என்று கூறியிருப்பதால், மந்தமதிகள் பிரமியாவண்
ம் அதனுண்மையைக் கூறுதும். திருஞாநஸம்பந்தசுவாமிகளுக்
சிவபாதஹ்ருதயர்பிதாவும், பகவதியார்மாதாவும், ஸ்ரீமத் அப்
சுவாமிகளுக்குப் புகழனார்பிதாவும், மாதினியார்மாதாவும், ஸ்ரீ
தரமூர்த்திசுவாமிகளுக்குச்சடையனார்பிதாவும், இசைஞானியா
மாதாவுமாயினமை அவ்வப்புராணங்களிற் கூறப்பட்டவாறு
... புராணத்தில் அவருடையபிதா
வூரடிகளுக்குமாத்திரம் அவ்வ... மல் விட்டவாறென்னை?
தாக்களை இவரெனப்பேர்குறித்துக்கூறாமல்விட்டனர்? அந்நனமே
வுண்மாமுனிவருக்குத் தெரியாமல்விட்டனர்

டங்கொள்ளுநிலைபெருக.) என விதந்து பி
கூறினமையானுந் தெளிக. தென்கலைக்கு வ
முடைமை வெளிப்பட்டதனால், நங்குருநாத
யில் வேதம்விரித்திலர் என்று கடாவியது நலம்
தன்கலை தென்பாலதாகிய பொதிகையிற் பொதி
முன்னே கூறினும். அவ்வாறே திருக்கயிலையினும்
இனிக்கொஞ்சம் விரிப்பாம். ஸ்ரீசுந்தரமூர்த்திசுவா
த்தான்மலைத் திருப்பதிகத்தை ஸ்ரீகைலாஸத்திலேதா
ப்பித்தமையானும், அவருடைய தோழராகிய சேரர்
ஆதியுலாவென்னும் பிரபந்தத்தை அவரோடுசென்று
னேபிரகாசிப்பித்தமையானும், திருவாசகம் என்னுந் த
தை அக்கயிலையிற்றானே பரமசிவன் பிரஹ்மவிஷ்ணு
டுய்யப் பிரகாசிப்பித்தமையானும் ஸ்ரீகைலாஸத்தில் த
ஷை ஸஹஜமாயிற்று. அன்றியும், ஸ்ரீசிவபெருமான் பா
பொருட்டுத் திருமுகப்பாசுரம் சேரர்கோனுக்கு வரைந்தமைய
ம், தருமியென்னும் அந்தணச்சிறுவனுக்குக் (கொங்குதேர்வாழ்
என்னும் பாசுரம் வரைந்துகொடுத்தமையானும், பெற்றான்
பனுக்கு முத்திகொடுக்கும்பொருட்டு உமாபதிசிவத்துக்குச்
டெழுதியனுப்பினமையானும், (தில்லைவாழந்தணர்) என்று ஸ்ரீசு
மூர்த்திசுவாமிகளுக்கும், (உலகெலாம்) என்று ஸ்ரீசேக்கிழார் சுவ
களுக்கும் முதலெடுத்துக்கொடுத்தமையானும், அகப்பொருள்
னுமோரிலக்கணஞ்செய்துபகரித்தமையானும் அவருடைய
தபாஷையாகவுந் திராவிடம் சிறந்திருக்கின்றது. ஸ்ரீகைலா
ஷையாகவும், சிவனுடைய பாஷையாகவுந் தமிழ் சிறக்குமா
இதற்குமுன்னர் கீர்வாணத்தைத் தேவபாஷையென்று நாம் வி
பதிலென்னவிசேடம்? இவ்வரியபாஷையில் நம்பாலன்றிவா
யன்றி ஏனையாசாரியர்களும் உபநிஷத்துக்களை வெளியிட்டா
பதும், அதுவே சிறப்புண்டமையென்பதும் ஸர்வஸம்பிரதிப
மாயிற்று. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இதுகாறுஞ்செய்துவந்தவிசாரத்தால்திராவிடவேதத்தின் ம
மைவெளிப்பட்டது. கீர்வாணவேதஞ் சிறந்தது, திராவிடவே
தாழ்ந்தது என்னும் அஸங்கதமும் நீங்கியது. இவ்வேதங்
யருளிச்செய்த நால்வராசாரியர்தம்முள் திருஞானஸம்பந்த